Saivism, The Eternal

என்றுமுள சைவம்


இரா. இராஜசேகரன்

நர்மதா

உறவுகள் மேம்பட...

குடும்பத்திலும் சரி, அலுவலகத்திலும் சரி, மனித உறவுகளில் விரிசல்கள் ஏற்படாமல் இருக்கவும், ஏற்பட்ட விரிசல்கள் மேலும் பெரிதாகாமலும் இருக்க:

- நானே பெரியவன், நானே சிறந்தவன் என்ற அகந்தையை (Ego) விடுங்கள்.
- அர்த்தமில்லாமலும் பின்விளைவு அறியாமலும் பேசிக் கொண்டேயிருப்பதை விடுங்கள். (Loose Talk)
- எந்த விஷயத்தையும், பிரச்சனையையும் நாசுக்காக கையாளுங்கள். (Diplomacy) விட்டுக் கொடுங்கள். (Compromise)
- சில நேரங்களில் சில சங்கடங்களைச் சகித்துத்தான் ஆக வேண்டும் என்பதை உணருங்கள். (Tolerance)
- எல்லோரிடத்திலும் எல்லா விஷயங்களையும், அவர்களுக்கு சம்பந்தம் உண்டோ, இல்லையோ சொல்லிக் கொண்டிருக்காதீர்கள்.
- உங்கள் கருத்துகளில் உடும்புப் பிடியாய் இல்லாமல்,கொஞ்சம் தளர்த்திக் கொள்ளுங்கள். (Flexibility)
- மற்றவர்களுக்குரிய மரியாதையை காட்டவும், இனிய, இதமான சொற்களைப் பயன்படுத்தவும் தவறாதீர்கள். (Courtesy)
- புன்முறுவல் காட்டவும், சிற்சில அன்புச் சொற்களை சொல்லவும்கூட நேரமில்லாதது போல் நடந்து கொள்ளாதீர்கள்.
- பிரச்சனைகள் ஏற்படும் போது அடுத்தவர் முதலில் இறங்கி வர வேண்டும் என்று காத்திருக்காமல் நீங்களே பேச்சைத் துவக்க முன் வாருங்கள்.


இந்த இனிய
என்றும் பயன் தரும்
நூலை பரிசாக
வழங்குவதில்
பெரு மகிழ்வு கொள்ளும்
தாங்கள் அன்புள்ள....



என்றுமுள சைவம்

சைவம் வளர்த்த தமிழறிஞர்கள், ஆதீனங்கள், அமைப்புக்களின் வரலாறும், வளர்ச்சியும்

செந்தமிழ்ப் புரவலர், ஞானபாஸ்கரன்

இரா. இராஜசேகரன்

பி.எஸ்சி., பி.எல்., பூம்புகார்

நர்மதா

நர்மதா பதிப்பகம்

நல்ல நூல் வெளியீட்டாளர்கள்
10, நானா தெரு, (தி.நகர் தலைமை
அஞ்சலகத்தை ஒட்டிய தெரு), பாண்டிபஜார்,
தி. நகர், சென்னை – 600 017. தொலைபேசி : 24334397

அப்பாலுக்கு அப்பாலாய் பார்த்தது திருத்தொண்டத் தொகை;
இப்பாலுக்கு இப்பாலாய்ப் பார்ப்பது இந்த உரைத்தொண்டத் தொகை

– 'என்றுமுள சைவம்'

Pages : 316
Price : Rs. 250.00
ISBN No. : 81-8201-054-3
Paper Used : 13.6 Kg. SPB N.S.

❑ Endrumula Saivam – Saivism, the Eternal – A compilation on activities and organisations – in Tamil by R. Rajasekaran B.Sc., B.L., ❑ First Edition : April 2006
❑ Published by T.S. Raamalingam, Narmadha Pathipagam, Chennai – 600 017
❑ D.T.P. Execution by : M. Xavier Raj, P.S. Muthu Graphics, Chennai – 600 015.
❑ Printed at : M/s Malar Printers, Chennai - 600 034 ❑

5-4

உட்பொதிவு

- கையில் தவழும் ஒரு சைவ கங்கை 6
- முன்னுரை 8
- அணிந்துரை – டாக்டர் ஔவை நடராசன் 13
- அணிந்துரை – புலவர் மு. கணபதி 14
- அணிந்துரை – எழில் முதல்வன் 16

முதற்பகுதி

1. சைவ ஆதீனங்கள் 20
2. தருமபுர ஆதீனம் 26
3. ஸ்ரீ காசித் திருமடம், திருப்பனந்தாள் 32
4. சூரியனார் கோயில் ஆதீனம் 37
5. தொண்டை மண்டல ஆதீனம் காஞ்சிபுரம் 39
6. திருஞானசம்பந்தர் ஆதீனம், மதுரை 40
7. குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் 41
8. செங்கோல் ஆதீனம் பெருங்குளம் 44
9. துலாவூர் ஆதீனம் 45
10. வேளாக்குறிச்சி ஆதீனம் 46
11. நாச்சியார் கோயில் ஆதீனம் நாச்சியார் கோயில் 46
12. வரணி ஆதீனம் வேதாரண்யம் 46
13. வள்ளலார் ஆதீனம் சீர்காழி 48
14. சொர்க்கபுர ஆதீனம் அம்பர் மாகாளம் 48
15. ஆகம சிவப்பிரகாசர் ஆதீனம் சிதம்பரம் 48
16. தாயுமான சுவாமிகள் ஆதீனம் அன்னப்பன் பேட்டை 48
17. நீலப்பாடி ஆதீனம் 49
18. இராமேச்வர ஆதீனம் 49

இரண்டாம் பகுதி

- தலங்கள் தோறும் சைவம் 51

1. சிதம்பரம் 51
2. குறிஞ்சிப்பாடி 82
3. காட்டுமன்னார் கோயில் 83
4. பண்ணுருட்டி 83
5. நெய்வேலி 85
6. பெண்ணாகடம் 88
7. விருத்தாசலம் 90
8. கடலூர் 92
9. மயிலம் 95
10. புதுச்சேரி 97
11. சீர்காழி 101
12. திருவெண்காடு 103
13. பூம்புகார் 104
14. ஆக்கூர் 110
15. செம்பனார் கோயில் 111
16. பொறையாறு 115
17. காரைக்கால் 115
18. திருவேட்டக்குடி 117
19. நாகப்பட்டினம் 117
20. மஞ்சக் கொல்லை 123
21. கீழ்வேளூர் 129
22. தேவூர் 129
23. திருவாரூர் 131

24. நன்னிலம் 133
25. மயிலாடுதுறை 133
26. கஞ்சனூர் 163
27. மேல மருத்துவக்குடி ஆடுதுறை 164
28. குத்தாலம் 164
29. ஆடுதுறை 164
30. திருநாகேசுவரம் 164
31. கும்பகோணம் 165
32. குடவாசல் 171
33. திருவீழிமலை 171
34. சுந்தரப் பெருமாள் கோயில் 171
35. தஞ்சாவூர் 172
36. திருவையாறு 180
37. களிமேடு 181
38. தென்னங்குடி 187
40. திருநெடுங்களம் 189
41. திருவெறும்பியூர் 190
42. திருச்சிராப்பள்ளி 190
43. உறையூர் 201
44. திருக்கற்குடி (உய்யக்கொண்டான்) 203
45. திரு ஆனைக்கா 204
46. திருவரங்கம் 207
47. லால்குடி 209
48. பூவாளூர் 211
49. திருமழபாடி 213
50. அரியலூர் 216
51. குளித்தலை 216
52. புதுக்கோட்டை 218
53. செட்டிநாடு 223
54. மதுரை 243
55. திருப்பூவணம் 255
56. சின்னமனூர் 255
57. சில்வார்பட்டி 258
58. பெரியகுளம் 259
59. கோயில்பட்டி 260
60. திருநெல்வேலி 262
61. தூத்துக்குடி 284
62. ஸ்ரீவைகுண்டம் 286
63. நாகர்கோயில் 287
65. விக்கிரமசிங்கபுரம் 290
64. தென்காசி 292
66. சங்கரன் கோயில் 293
67. கழுகுமலை 300
68. சிவகாசி 301
69. ஸ்ரீ வில்லிபுத்தூர் 302
● சைவ மன்றங்களின் முகவரிகள் 303

5 - 1

எந்தத் தொழிலில் இறங்கினாலும் அதன் முழு நுணுக்கங்களையும்
அறிந்து செயல்படுத்தியும், யான் ஆற்றிவரும் பணிகளுக்கெல்லாம்
நல்ல கருத்துரை வழங்கி வரும்
என் தலைமகன்
இராம சொக்கலிங்கம்

கல்வியில் – நிதி நிர்வாகத்தில் சில சிகரங்களைத் தொட்டு
பெரும் முன்னேற்றம் அடைந்தும், கடல் கடந்து சென்றாலும்
வேரினை மறக்காமல் யான் செய்யும் பணிகளுக்கெல்லாம்
நீரூற்றிவரும் என் இளைய மகன்
சீனிவாசன்

அக்கரைச்சீமையில் இருந்தாலும் தாயினும் சாலப் பரிந்து அன்பு
காட்டியும், யான் ஆற்றிவரும் சமய சமூக நலப்பணிகளுக்கெல்லாம்
பேருதவி புரிந்துவரும் புதல்வியர்
கௌரிப்பிரியா - தேவிபாரதி

சொந்த பிள்ளைகளுக்கு இணையாக
அன்பும் பாசமும் கொண்ட மாப்பிள்ளைகள்
மணிகண்டன் - பிரதீஷ்

ராஜீ தாத்தா என்ற வார்த்தைக்கே புது ஜீவன் கொடுத்து
தாத்தா – பேரன் உறவை நிலைநாட்டும்
ஷ்ரவண் பிரதீஷ்

எங்களிலும் பாசமாயிருக்கும் பெற்றோரைக் காட்டிலும்
எங்களையே பெற்றோராக ஒவ்வொரு சொல்லாலும், செயலாலும்
பாவித்து வாழ்ந்து வரும் பெயர்த்தி
சரயு மணிகண்டன்

இவர்களுக்கு என்னுடைய எல்லையற்ற
அன்பின் அடையாளம் இந்நூல்!



கையில் தவழும் ஒரு சைவ கங்கை

திரு. இரா. இராஜசேகரன் அவர்களைச் சைவ உலகத்தின் தருமைக் குருமணி 'செந்தமிழ்ப் புரவலர்' என்று வாழ்த்தியருளினார்கள். வைணவ உலகின் ஜீயர் சுவாமிகள் 'ஞான பாஸ்கரன்' என்று வாழ்த்திச் சிறப்பித்தார்கள். கோவை இளங்கோ மன்றம் அவர்களைச் 'சிலம்பின் காவலர்' என்று சிறப்பித்தது. இவரால் இந்த விருதுகளுக்கே கூட ஒரு விழுப்பம் கிடைத்தது! பூக்களோடு மணம்; தமிழோடு இவர்! தாசில்பண்ணையின் இந்த 'இராஜசேகரம்' தமிழின் சேகரம்! இலக்கியச் சாகரம்!

'இன்பமே எந்நாளும் துன்பமில்லை'; இன்ப காவியம்; சிவஞான போதம் உரை; ஆசாரிய ஹிருதயம் தமிழ்வடிவம்; விஷ்ணுபுரம் ஒரு பார்வை; இவை இவர் எழுதிய இனிய நூல்கள்.

அப்பர் அருட்செய்தி; தத்துவமும் பக்தியும்; திருமந்திர நெறி, சிந்தனைச் சிலம்பு; தமிழ் நாவல் – ஐம்பது பார்வை; அறிவின் அறிவு; சிலம்பு என்று இவை இவர் பதிப்பித்த நூல்கள்!

சிலருக்கு ஒரூர்; சிலர் கேளிர், புரவலர்க்கு, ஒரூர் இல்லை; ஒரு பிரதேசம் இல்லை; அவர் ஊர் தமிழூர். அவர் உறவு தமிழ் உறவு; சுற்றும் முற்றும் அவர்க்குத் தெய்வத் தமிழ் மன்றம்; உழவாரம்; பத்தினிக் கோட்டம்; விழித்திரு; கல்வி நிலையங்கள்... என்று இப்படிப் பல அமைப்புகளோடு பன்முகச் சிறப்புகளோடு நிரந்தினிது வாழ்பவர்! இனிய இந்த மனிதரின் உள்ளே படைப்பாளி; விமர்சகன்; சாதனையாளி... என்று பலப்பலர் உலா வருவர்!

இவரது ''சைவப் பெருவெளி''.... எனும் இந்நூல் இவரது ஒப்பற்ற படைப்பு! சைவம்... அஃது அண்ட சராசரங்களை விடப் பெரியது; ஆகாயத்தை விட உயர்ந்தது... சமுத்திரங்களைக் கூடச்

சைவம் திவலைகளாய் ஆக்கிவிடும்! திரு. இராஜசேகரன் சைவத்தை – சைவ வரலாற்றை எழுத முனைந்தபோது அதற்குச் 'சைவப் பெருவெளி'... என்று பெயர் சூட்டியது அவர் கண்ட சைவ தரிசனத்தின் சுட்டாகும்! கயிலைத் தரிசனத்தை... அடடா! இவர் காலத்தின் தரிசனமாகச் 'சைவப் பெருவெளி' ஆகக் கண்டிருப்பது... அதில் இராஜசேகரத்தையும் காண வைத்திருப்பது... அரிய முயற்சி!

'இறப்பு... நிகழ்வு... எதிர்வு... காலத்தின் இந்த நேற்று... இன்று... நாளைகளை... ஒரே நேரத்தில் காட்டுவது... புலப்படுத்துவது ஒரு சித்து வேலை மாதிரி... செந்தமிழ்ப் புரவலர் சைவத்தின் அட்ட மூர்த்தங்களை யும் இந்தச் சைவப் பெருவெளியில்.. ஒரே நூலில் காட்டியிருப்பது வியப்புக்குரியது... சிவன் ''தோத்திரமும் சாத்திரமும் ஆனார் தாமே'' என்பர். இந்நூல் அதுபோலத் தோத்திர – சாத்திர நூல்களாகி அவற்றின் விழுதுகளாகி... அவை பற்றிய எத்த னையோ நூல்களாகி அவற்றின் மாட்சி களைக்... காட்சிகளைக் காட்டுவதாகி.. விளங்குகிறது.

நம்மாழ்வாரின் நெஞ்சினை... ஆசார்ய ஹிருதயத்தை தமிழ் வடிவில் தந்தபோது வைணவ உலகுக்குச் சேவை செய்தவராய்ப் புரவலர் உயர்ந்தார்! 'காலப் பெருவெளி' யைச் சைவப் பெருவெளியாய்த் தருகிற போது சைவத்துக்குத் தன் கடன் பணிசெய்து கிடப்பதே' என்று உயர்கிறார்.

'திருத் தொண்டத் தொகையால்' சுந்தரமூர்த்தி நாயனார் அன்று சைவப் பேரியக்கத்தில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தினார். இன்று 'சைவப் பெரு வெளி' மூலமும்... உழவாரங்களின் மூலமும்... சைவத்தின் எழுச்சிக்கும்... இயக்கத்துக்கும் செந்தமிழ்ப் புரவலர் ஒரு மறுமலர்ச்சித் தென்றலாகியுள்ளார்! புத்தக வடிவில் சைவப் பெருவெளி... ஒரு சைவத்திருப்பள்ளி எழுச்சி! புதிய நோக்கில் 'கையில் தவழும்' ஒரு சைவ கங்கை!

அப்பாலுக்கு அப்பாலாய் பார்த்தது திருத்தொண்டத் தொகை; இப்பாலுக்கு இப்பாலாய்ப் பார்ப்பது இந்த உரைத் தொண்டத் தொகை – ''என்றுமுள சைவம்''. ''சென்ற காலத்தின் பழுதிலாத் திறனும், இனி எதிர்காலத்தின் சிறப்பும்'' எனக் கனவு கண்டார் சேக்கிழார். அவர் இயற்றிய பிறகு பல தொண்டர்கள் பற்றி உதிரி, உதிரியாகப் பாடப் பெற்றுள்ளன. எச்சங்கள் நிரம்ப உள்ளன. அவற்றை நிறைவு செய்கிறது இந்த உரைத் தொண்டத் தொகை.

நிஜமான கங்கைக்குக் கூட ஒரு சங்கமத்தில் நிறைவுண்டு; ஆனால் சைவ கங்கைக்குச் சங்கமங்கள் தொடர்கின்றன.

முன்னுரை

"இருபதாம் நூற்றாண்டு சைவ சமய வரலாறு" என்ற வரிசையிலே பத்தொன்பதாம், இருபதாம் நூற்றாண்டில் தமிழ்நாடு, ஈழத்தில் வாழ்ந்த சைவ சமய அறிஞர்களின் வாழ்க்கைக் குறிப்பும், அவர்கள் சைவச் சமயத்திற்கு ஆற்றிய பணியும் பற்றி "சைவப் பெருவெளியில் காலம்" என்ற நூலில் தரப்பட்டுள்ளது. இருபதாம் நூற்றாண்டில் சைவ அமைப்புகள், தொண்டர்கள், புரவலர்கள் சைவ சமயத்திற்கு ஆற்றிய பணிகள் கணிசமானவை ஆகும். அவற்றைப் பற்றி விரிவாக ஆராய்வதே இந்நூலின் நோக்கம் ஆகும்.

சைவ அறிஞர்களைப் பற்றி எழுதுகின்றபொழுது அவர்களைப் பற்றிய நூல்கள், கட்டுரைகள், அவர்கள் எழுதிய நூல்கள் ஆகியன துணைநின்றன. தொண்டர்களைப் பற்றி எந்த நூலும் கிடையாது. முக்கியமான சைவ அமைப்புகள் மட்டும் வெள்ளிவிழா, பொன்விழா, ஆண்டுவிழா (நகரத்தார்கள் எல்லாவற்றையும் பதிவு செய்யக் கூடியவர்கள். நகரத்தார் திருப்பணிகள், களஞ்சியம் என்றெல்லாம் வெளியிட்டுள்ளார்கள்) மலர்கள் வெளியிட்டுள்ளன. அவைகள் எளிதாகக் கிடைப்பதில்லை. இவற்றிற்கெல்லாம் கள ஆய்வு ஒன்றே வழி.

2004 ஜூன் மாதம் 12, 13-ஆம் தேதிகளில் மயிலாடுதுறையில் கள ஆய்வு மேற்கொண்டேன். ஆகஸ்ட் மாதம் 2-ம் தேதி முதல் ஆகஸ்டு 22-ம் தேதி வரை மதுரை, நெல்லை, தூத்துக்குடி, நாகர்கோயில் பகுதிகளில் கள ஆய்வு செய்தேன். ஆகஸ்டு 3-ம் தேதியில் கோயில்பட்டியில் திரு. சூர்ய பிரகாஷ் முன்கூட்டியே அனைத்து ஏற்பாடுகளையும் செய்திருந்தமையால் மூன்று மணிநேர அளவில் மன்றப் பொறுப்பாளர்கள், தொண்டர்களை நேர்காணல் செய்ய முடிந்தது. நெல்லையில் திருவாசகம் ஆங்கிலப் பதிப்பு வெளியிட்ட பெரியவர் ஆறுமுகனார் தனது இல்லத்திலேயே தங்கச் சொன்னார். தங்கியிருந்த அவர்களது இல்லத்திலேயே உணவு ஏற்கவும் ஏற்பாடு செய்துவிட்டார்கள். ஆகஸ்டு மாதம் 5-ம் தேதி அன்று தூத்துக்குடியில் "சைவ நெறி" காந்தி அவர்கள் முன்கூட்டியே ஏற்பாடு செய்து வைத்திருந்தமையால் அங்கும் பணி எளிதாக முடிந்தது. ஸ்ரீவைகுண்டம் வரை தூத்துக்குடி பிச்சையா வழிநடத்தினார். நாகர்கோயிலில் எந்தத் தொடர்பும் இல்லை. முனைவர் ப.அருணாசலம் அவர்களைப் பற்றிக்கூட யாருக்கும் தெரியவில்லை. சுசீந்தரம் போகும் வழியில் ஒரு இல்லத்தின் வாயிலில் "சிவ சிவ" என்று எழுதியிருந்தது. உள்ளே சென்றால் நன்னெறிக் கழகக் கூட்டம் நடந்து கொண்டிருந்தது. கழக மலரும், செய்திகளும் நிரம்ப கிடைத்தன. இது எதிர்பாராமல் கிடைத்த விருந்து. நெல்லையில் யாருடைய உதவியும் பெற முடியாத நிலையில் தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஒவ்வொரு அமைப்பாகச் சென்று பார்த்தேன். சென்ற இடங்களில் அடுத்தடுத்து வழிகாட்டினார்கள். தென்காசியிலும் ஏதும் கிடைக்காத நிலையில் திருக்கோயிலில் திருவாசகம் பாடிக் கொண்டிருந்த திருநாவுக்கரசு என்பவரிடம் நானாக வலியச் சென்று கேட்க அவர் சில பெரியவர்களிடம் அழைத்துச் சென்றார். சங்கரன் கோயில் அமைப்புகள் பற்றி நெல்லையில் குறிப்பிட்டுச் சொன்னார்கள். சிவகாசி டாக்டர் ஜெயராஜ் பற்றி முன்பே தெரியும். ஸ்ரீவில்லிபுத்தூரில் கோதா பிரஸ் முனியப்பன் தங்க ஏற்பாடு செய்திருந்தார். கழுகு மலையிலும் ஒரு எதிர்பாரா அனுபவம். திருக்கோயில் வழிபாடு செய்து கொண்டிருந்தபோது கோயிலில் அறுபத்து மூவர் வழிபாட்டுக்குழு என்று பெரிய பலகை தொங்கவிடப்பட்டிருந்தது.

அதனைக் கண்ணுற்ற நான் விசாரித்துக் கொண்டு பொறுப்பாளர்கள் இல்லம் சென்று நேர்காணல் செய்தேன்.

மதுரையில் நண்பர் சொ.சொ.மீ. சுந்தரம் அவர்கள் தனது இல்லத்திலேயே தங்கச் சொன்னார். சமையலறைப் பொறுப்பையும் என் துணைவியாரிடம் கொடுத்து விட்டார். அங்கு தங்கியிருந்த ஐந்து நாட்களும் வீட்டுச் சாப்பாடு அமைந்து விட்டது. சொ.சொ.மீ. அவர்கள் பல அமைப்புகளுக்கு அழைத்துச் சென்றும், தொலைபேசியில் பேசி தகவல்கள் சேகரித்தும் உதவினார். இந்தச் சுற்றுப் பயணத்தில் 52 சைவ அன்பர்களை நேர்காணல் செய்தேன்.

2004-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 1-ம் தேதி முதல் அக்டோபர் 17-ம் தேதி வரை திருச்சி மாவட்டச் சுற்றுப் பயணம் மேற்கொண்டேன். என் சகோதரியின் கணவர் திரு. இளங்கோ அவர்கள் திருவரங்கத்தில் உள்ள தனது இல்லத்தில் தங்கச் சொல்லிவிட்டார். பதினேழு நாட்களும் துணைவியார் கைபாகம்தான்! குளித்தலையில் கோயில் வழிபாட்டின்போது உரையாடிக் கொண்டிருந்த இரு சிவனடியார்களின் தொண்டராற்றுப்படைதான் உதவியது. இரண்டு பேரும் சைவ மன்றங்களின் பொறுப்பாளர்களிடம் அழைத்துச் சென்றார்கள். திருச்சியில் என் மனைவியின் சகோதரி கணவர் அரசுவும் அவரது நண்பர் முத்துவும் வழிகாட்டி உதவினார்கள். தாயுமானவர் திருக்கோயிலில் திரு. மு. வைத்யநாதன் பெரிதும் வழிகாட்டினார். திருச்சியிலும் தொடரோட்டம்தான்! ஒரு மன்றத்தில் நேர்காணல் செய்யும்பொழுது அடுத்தமன்றம் பற்றிய தகவல் கிடைக்கும். அங்காளம்மன் பொறியியல் கல்லூரி தாளாளர் மேஜர் க. சீனிவாசன் பேருபகாரம் செய்திருக்கிறார். தமிழ்நாட்டில் உள்ள ஆன்மிக அமைப்புகளின் முகவரிகளைச் சேகரித்து அச்சிட்டு இலவசமாக வழங்கி வருகிறார். தனக்கு வந்த மன்றங்கள் அனுப்பிய படிவங்களை நகல் எடுத்து அவ்வப்பொழுது அனுப்பிக் கொண்டேயிருந்தார். இந்தப் பயணத்தில் 33 சைவ அன்பர்களை நேர்காணல் செய்தேன்.

2005-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 2-இல் சிதம்பரம் (3 பேர்), மார்ச் 6-இல் விருத்தாசலம் (4 பேர்), மார்ச் 7-இல் காரைக்கால் (4 பேர்) பகுதிகளில் நேர்காணல் செய்தேன். ஏப்ரல் 2 முதல் ஏப்ரல் 12 வரை கரூர் முதல் சேலம் வரை கொங்கு மண்டலம் முழுமையும் சுற்றுப்பயணம் செய்தேன். அவைபற்றிய செய்திகள் அடுத்த தொகுதியில் வெளியாகும். ஏப்ரல் 3-இல் ஆடுதுறை (1), மே 2-இல் திருமழபாடி (3), திருவையாறு (1), தஞ்சை (9), மே 4-இல் குடந்தை (3), திருநாகேஸ்வரம் ஆகிய ஊர்களில் நேர்காணல் செய்தேன். விருத்தாசலத்தில் வழக்கறிஞர் ரமேசன் அவர்களும், தஞ்சையில் ராஜ. கைலாசம், திரு. டி.ஆர். கிருஷ்ணமூர்த்தி அவர்களும் உடன் வந்தார்கள். தஞ்சையில் ராஜராஜன் சமய சங்கத்தில் தங்க வசதி செய்திருந்தார்கள். ஆகஸ்டு 14-இல் பாண்டிச்சேரியில் சிவ. மாதவன் வீட்டிற்குச் சென்றேன். காபி கொடுத்தார். பாண்டிச்சேரியில் உள்ள மன்றங்களைப் பற்றிய குறிப்புகள் கொண்ட உறை கொடுத்தார். 15 நிமிடத்தில் பாண்டிச்சேரி சைவம் கைக்கு வந்துவிட்டது. கடலூரிலும் ஞானப்பிரகாசனார் விவரங்கள் தெரிவித்தார். அக்டோபர் 21 முதல் அக்டோபர் 29 வரை திருவோத்தூர், காஞ்சிபுரம், வேலூர், திருவண்ணாமலை சுற்றுப்பயணம் செய்தேன். அவையும் அடுத்த தொகுதியில் இடம் பெறுகின்றன. அக்டோபர் 8-இல் பண்ருட்டி, நெய்வேலி (4), அக்டோபர் 9-இல் குறிஞ்சிப்பாடி (2)யில் நேர்காணல் செய்தேன். நெய்வேலியில் மண்ணிப்பள்ளம் முத்து உடன் வந்தார். மண்ணிப்பள்ளம் சுகுமாரன் வீட்டில் தங்கினேன். அக்டோபர் 22-இல் தேவூர் (3), கீழ்வேளூர், மஞ்சக்கொல்லை (1), நாகை (3) சுற்றுப்பயணம் செய்தேன். வரிச்சிகுடி கணபதி சுப்பிரமணியன் 2, 3 முறை பயணம் செய்து ஏற்பாடு செய்திருந்தார். அக்டோபர் 23-இல் காரைக்குடி (2), தேவகோட்டை (1), குன்றக்குடி (2) பயணம் மேற்கொண்டேன். அரு. சோமசுந்தரனார் உடன் வந்ததோடு நிரம்ப செய்திகளும் கொடுத்தார். அவரது இல்லத்திலேயே தங்கிவிட்டேன்.

''சைவப் பெருவெளியில் காலம்''

வெளியிட்ட அனுபவத்தில் புகைப்படங்கள் சேகரிக்கக் கற்றுக் கொண்டேன். புகைப்படங்கள் சேகரித்தது தனியனுபவம். மிகவும் சிரமப்பட்டது களிமேடு சிவகுருநாதன்பிள்ளை படத்திற்குத்தான். தஞ்சை ஜெயபால் அவர்கள் புகைப்படக்காரரைக் களிமேட்டிற்கு அழைத்துச் சென்று அங்குள்ள புகைப்படத்தைப் படம் பிடித்தார். மிகவும் எளிதாகக் கிடைத்தது சின்னமனூர் அண்ணாமலைப் பிள்ளையவர்கள் புகைப்படம். சின்னமனூர் பாண்டி அவர்கள் புகைப்படம், செய்திகள் அனுப்பினார். அதுபோல பெரியகுளம் இராசரத்தினம் அவர்களும் செய்திகள் அனுப்பினார்கள். திருவாரூரைப் பொறுத்தவரை மேலப்பெரும்பள்ளம் ஈஸ்வரன் திருவாரூர் சென்றே செய்திகள் சேகரித்தார். சிதம்பரம் R.K. சிவகுமார், பத்மினிகபாலிமூர்த்தி, மயிலாடுதுறை சம்பந்தமூர்த்தி, ஞானசேகரன், திருவெண்காடு சீனிவாசன் ஆகியோர் பல நிலைகளில் உதவி செய்தார்கள்.

இது ஒரு தொண்டர் தரிசனமே! ''சைவப் பெருவெளியில் காலம்'' வெளியிட்டபோது ''இத்தகைய அறிஞர்கள் எல்லாம் இப்பொழுது இல்லையே. சைவத்தின் நிலை என்னாகுமோ?'' என்று கவலையுற்றிருந்தேன். தமிழ்நாடு முழுமையும் சுற்றி வந்தபிறகு கவலை தீர்ந்து உற்சாகம் வந்துவிட்டது. பெரிதும் வளர்ச்சியுறாத களிமேடு, சின்னமனூர் போன்ற வெளியுலகம் தெரியாத கிராமங்களில்கூட திருமுறை போற்றப்படுகின்றது என்பது உன்னதமான செய்தி! சைவத் தொண்டர்கள் பெயர், புகழ், வருமானம் எதனையும் பொருட்படுத்தாது ''கூடும் அன்பினில் கும்பிடலே'' செய்துவரும் அற்புதக் காட்சியைத் தரிசிக்க முடிந்தது. குளித்தலையில் இருக்கும் பேருந்து நடத்துனர்க்கு உள்ள தெளிவு - உள்ளேன் பிற தெய்வம் - பிரமிக்க வைத்தது. குறிஞ்சிப்பாடி இளைஞர்கள் நவக்கிரக வழிபாட்டை வீரத்தோடு ''கடாசி'' எறியும் மனப்பாங்கு பலவகையில் மனதைச் சிதறவிடும் உயர் சைவக் குடும்பத்தாருக்கு ஒரு கலங்கரை விளக்கம் ஆகும். உழவாரத் தொண்டில் எத்தனை வகை! திருமுறை முற்றோதலில் எத்தனை விதம்! வழிபாட்டு முறையில் எத்தனை மேன்மை! திருவானைக்கா இராகவன் குழுவினர் திருத்தொண்டத்தொகை பாடும்பொழுது ''அடியேன்'' என வரும்பொழுதெல்லாம் குழுவில் உள்ள அத்துணை பேரும் அறுபத்து மூவரைத் தரையில் வீழ்ந்து வழிபடும் அழகு; எந்தெந்தக் காலத்தில் என்னென்ன பழங்கள் கிடைக்கின்றனவோ அந்த அந்தப் பழங்களில் இறைவனார்க்கு அபிடேகம் செய்யும் திருவரங்கம் ஸ்ரீதரனின் அன்பு நெஞ்சம் (அமெரிக்காவிற்கு ஸ்ரீதரன் சென்றால் சிவனார்க்குச் செர்ரிப்பழ அபிடேகம் கூட நடக்கும். சிவனார்க்குத்தான் கொடுத்து வைக்கவில்லை); இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம்.

அறுபது ஆண்டுகளில் கிடைக்காத அனுபவம் இந்த இரண்டு ஆண்டுகளில் கிடைத்தது. சைவ சமயம் எந்தெந்த ஊரில் எவ்வாறு வளர்ச்சியுற்று இருக்கிறது? சைவத் தொண்டர்களின் உற்சாகம், மன நிலை, கொள்கை எப்படி அமைந்துள்ளன? இவையெல்லாம் எனக்கு (மெய்கண்டார் மன்னிப்பாராக!) இப்பொழுது அத்துபடியாகியுள்ளன. மூர்க்கநாயனார் தலைமையில் சைவ அமைச்சரவை உருவானால் அவருக்குத் தனி அலுவலராக நான் மனு போடலாம்.

இந்த நூலை எழுதும்பொழுது என் நெஞ்சமெலாம் நிறைந்து இருந்தது. பலமுறை பரவசத்தில் மூழ்கி இருந்தேன். இன்று கண்முன் நடமாடும் அருளாளர்களோடு நெருங்கிப் பழகவில்லையே என்ற மனக்குறை எனக்கு இருந்து வந்தது. இந்த நூல் எழுதும்பொழுது அது நீங்கி விட்டது.

இன்னின்னார்க்கு இன்னபணி என்று அன்றே
இட்டுவிட்டான் இறைவன்!

சைவ ஆதீனங்கள் பற்றி நான் தனியாகச் செய்திகள் சேகரிக்கவில்லை. தவத்திரு ஊரன் அடிகள் அவர்களின் ''சைவ ஆதீனங்களை'' அப்படியே பின்பற்றியுள்

ளேன். நிகழ்கால வரலாறு, நிகழ்வு பற்றி அந்தந்த ஊர்களுக்கு நேரில் சென்றபோது தகவல்கள் சேகரிக்க முடிந்தது. முந்தைய தலைமுறை வரலாறு, அக்காலகட்ட புகைப்படங்கள் சில இடங்களில் கிடைத் தமை குறிப்பிடத்தக்கது. மிக நெருக்கமான வராக இருந்தும் கடலூர் பெரும்புலவர் அ.நடேச முதலியார் அவர்களின் புகைப் படமோ, அவர்களைப் பற்றிய செய்தி களோ முதல் தொகுதியில் சேகரிக்க முடிய வில்லை. அதனையே ஒரு சவாலாக எடுத்துக் கொண்டு விரட்டிப்பிடித்து அவரது மகனாரின் முகவரி பெற்று இந்தத் தொகுதியில் சேர்க்க முடிந்தது. பூம்புகார் சின்மயானந்த சுவாமிகள், மாணிக்கவாக சுவாமிகளைப் பற்றிய செய்திகளை மேலப் பெரும்பள்ளம் திரு. நா.தியாகராஜன் அவர்கள் வழங்கினார்கள். நாகையில் சைவம் வளர்ந்த வரலாறு பற்றி பெரியவர் ஆதிகேசவனார் விரிவாகக் கூறினார். ''நாகை வெளிப்பாளையம் சைவ சித்தாந்த சபையின் வரலாறு'' என்ற நூலும் பெரிதும் உதவியது. மஞ்சக்கொல்லை பற்றி அந்த ஊராருக்கே ஒன்றும் தெரியவில்ல. நல்ல வேளை! மஞ்சக்கொல்லை சம்பந்தமூர்த்தி முதலியார் அவர்கள் தன் குறிப்பேட்டில் 1982-ஆம் ஆண்டு வரையிலான செய்தி களைக் குறித்து வைத்திருந்தார்.

மஞ்சக்கொல்லை பெரியவர்களின் புகைப்படங்களைச் சம்பந்தமூர்த்தி முதலி யார் அவர்களின் மகனார் தந்துதவினார். கொறுக்கை சுந்தரம்பிள்ளையைப் பற்றித் தேவூர் க. கோவிந்தராசனார் தெரிவிக்க வில்லையானால் தெரியாமலே போயிருக் கும். அவர் விவரித்த காட்சிகள் தத்ரூபமாக இருந்தன. ''சம்பந்தன் என்னடா பாடி னான்? பாலைக் குடிச்சான் பாடினான்?'' என்ற வார்த்தைகள் இரவும் பகலும் என்னைச் சுற்றி வருகின்றன. மயிலாடு துறை ஜி. கல்யாணம் பிள்ளையவர்களின் புகைப்படத்தை அவர்களது உறவினர் கொடுத்தார். கும்பகோணம் உத்தண்டிச் செட்டியார் பற்றி அழகான கட்டுரையே மா. வைத்தியலிங்கம் அவர்கள் தட்டச்சு செய்து அனுப்பிவிட்டார். தஞ்சை டி.என். அருணாசலம் பிள்ளையவர்களுடன் அவர்கள் வாழ்ந்த காலத்தில் நெருங்கிப் பழகி இருந்தேன். ஆனால், அவர் இறுதிக் காலத்தில் எங்கு வாழ்ந்தார், எப்பொழுது மறைந்தார் என்ற செய்திகளே எனக்குத் தெரியாமல் போய்விட்டது. தஞ்சை திரு. சாரங்கன் அவர்களும், திரு. இராஜகைலா சம் அவர்களும் அவர்களைப் பற்றிய செய்திகள், புகைப்படங்களும், முன்னாள் ஆணையர் யு. சுப்பிரமணியன் அவர் களைப் பற்றிய செய்திகளும், புகைப்படங் களும் வழங்கினார்கள். களிமேடு சிவ குருநாதபிள்ளை பற்றிய செய்திகளும், களிமேடு அப்பாராசனாரின் குருநாதர் ஷண்முகநாதபிள்ளை பற்றிய செய்திகளும் களிமேட்டில் பெற்றேன். சிவகுருநாத பிள்ளையின் புகைப்படம் கிடைத்த வரலாறு முன்னர்க் குறிப்பிட்டுள்ளேன். தஞ்சை ஜெயபால் அவர்கள் நூல் அச்சுக்குப் போகும்வரை செய்திகள் அனுப்பிக் கொண்டேயிருந்தார். எவை யெல்லாம் விடுபட்டனவோ என்றுகூட எனக்கு அச்சமாக இருக்கிறது. திருமழபாடி திருக்கோயிலில் நடைபெறும் திருவூடல் நிகழ்ச்சி பற்றிய நூலினைத் திருமழபாடி திரு. எஸ். ஆர். கிருஷ்ணமூர்த்தி பிள்ளை யவர்கள் வழங்கினார். புதுக்கோட்டை சாயிமாதா சிவபிருந்தா தேவியவர்களின் வாழ்க்கை வரலாற்று நூலினைத் தயானந்த சந்திரசேகரன் அனுப்பி வைத்தார். செட்டி நாடு பகுதிகளைப்பற்றி எழுத நிரம்பச் செய்திகள் வீட்டில் இருந்தபடியே சேர்க்க முடிந்தது. நகரத்தார் கலைக்களஞ்சியம், வ. தேனப்பன் அவர்களின் ''ஒன்பது நகரக் கோயில்கள்'', வயிநாகரம் அ. ராமநாதன் செட்டியாரின் ''நாட்டுக்கோட்டை நகரத் தார் வரலாறு'' ஆகிய நூல்கள் பெரிதும் துணைபுரிந்தன. பொற்கிழிக் கவிஞர் அரு. சோமசுந்தரனார் அவர்களும் தேவ கோட்டை சிவஸ்ரீ ஈசானதேசிகர் அவர் களும் நிரம்பத் தகவல்கள் தந்தனர். அரு. சோ. அவர்கள் கதை கதையாய்ச் சொன்னார் கள். தமிழ்வள்ளல் மெய்யப்பனார், ஈசான சிவாசார்ய சுவாமிகள், பாலகவி வயிநாக ரம் இராமநாதஞ் செட்டியார் ஆகியோர் சேர்ந்து இருக்கும் அரிய புகைப்படத்தை ஈசான தேசிகர் அனுப்பி உதவினார்கள். ஸ்ரீவைகுண்டத்தில் பொ. முத்தரசு

அவர்களின் வாழ்க்கை வரலாற்று நூல் அரிதில் கிடைத்த ஒன்றாகும். குடந்தை சிவனடியார் திருக்கூட்டப் பொன்விழா மலர், திருச்சி சைவ சித்தாந்த சபை பொன் விழா மலர், பூவாளூர் சைவசித்தாந்த சபை மலர், மூக்கப்பிள்ளை மணிவிழா மலர், அரியலூர் மணிவாசகர் மன்ற வெள்ளி விழா மலர், காரைக்குடி இந்து மனிதாபி மான சங்கமலர், மதுரை பன்னிரு திரு முறைமன்ற வெள்ளிவிழா, பொன்விழா மலர்கள், பொருநை இலக்கிய வட்டமலர், தூத்துக்குடி பாகம்பிரியாள் மாதர் சங்க மலர், நாகர்கோயில் நன்னெறிக்கழக வெள்ளிவிழா மலர், சங்கரன்கோயில் சைவ சித்தாந்த சபை பொன்விழா மலர், ஆகிய வற்றிலிருந்து பல செய்திகள் திரட்ட முடிந் தது. ஒவ்வொரு முறையும் நான் பயணம் செய்யும்பொழுது காரின் முன் இருக்கை புத்தகங்களால் நிரம்பி வழிந்துவிடும். வழிகாட்ட உடன் வருவோர் முன் இருக் கையில் சிரமப்பட்டுதான் அமர வேண் டும். அந்த அளவுக்கு மன்றங்களும், தனி யார்களும் தாங்கள் வெளியிட்ட புத்தகங் களை வழங்கிக் குவித்துவிட்டார்கள்.

ஜூன் 2004-ஆம் ஆண்டு முதல் அக் டோபர் 2005-ஆம் ஆண்டு வரை 69 ஊர்களில் கள ஆய்வு செய்திருந்தாலும் விடுபட்ட ஊர்கள் - மன்றங்கள் - தொண் டர்கள் - செய்திகள் - பலவாகும். இந்த நூலைக் கண்ணுறும் அன்பர்கள் தகவல்கள் அனுப்பினால் அடுத்த தொகுதியில் சேர்க்க ஏதுவாகும். கொங்கு மண்டலம், தொண் டைமண்டலம், சென்னை நகரம் பற்றிய செய்திகள் அடுத்த தொகுதியில் இடம் பெறுகின்றன. அடுத்த தொகுதிக்கு அனை வரும் உதவினால் என் பணி முழுமை அடையும்.

மேற்கூறிய தகவல்கள் சேகரிக்க உதவியவர்கள், வழிகாட்டியவர்கள், தங்க இடம் தந்தவர்கள், விருந்தோம்பியவர்கள் அத்துணை பேருக்கும் எனது நன்றி உரியதாகும். நூல் உருவாகும்பொழுது திருத்தங்கள் செய்த பூம்புகார்க் கல்லூரி தமிழ்ப்பேராசிரியர் முனைவர் திரு. த. தியாகராஜன், மேலையூர் சீனிவாசா மேனி லைப்பள்ளித் தமிழ் ஆசிரியர்கள் திரு. அ. முத்துக்குமாரசாமி, திரு. கோ. தட்சிணா மூர்த்தி, திரு. எம்.ஜி.முத்தையன், தட்டச்சு செய்த திரு. ஜி. ராஜேந்திரன், பல்வேறு வகையாலும் உதவிய திரு. பி. மாசிலா மணி, அத்துணைப் பெறுப்புகளையும் மேற்பார்வையிட்டு இயக்கிய தலைமை யாசிரியர் திரு. தி. ஜெயபாலன், மெய்ப் பினைப் பார்த்து திருத்திய என் ஆசிரியர் திரு.மு. கணபதி, சென்னை இரத்தின சபாபதி பிள்ளை, சென்னை கணபதி சுப்பிர மணியன், பனசைமூர்த்தி அத்துணைபேருக் கும் என் நன்றி உரியதாகும்.

நூலுக்கு அணிந்துரைகள் வழங்கிய தமிழ்ப் பல்கலைக்கழக மேனாள் துணைத் வேந்தர் முனைவர் ஔவை து. நடராஜன் அவர்கள், என் ஆசிரியர்பிரான் திரு. மு. கணபதி அவர்கள், முனைவர் திரு. மா. இராமலிங்கம் அவர்கள் (எழில் முதல்வன்) ஆகியோருக்கும் – நூலினை அழகுடன் அச்சிட்டு வெளியிட்டுள்ள நர்மதா பதிப் பகத்தின் உரிமையாளர் திரு. இராமலிங்கம் அவர்களுக்கும் என் நன்றி உரியதாகும்.

தாசில்பண்ணை
மேலத் தெரு, மேலையூர்,
பூம்புகார் – 609 107.

அன்புடன்
இரா. இராஜசேகரன்
13-04-2006

அணிந்துரை

டாக்டர் ஔவை நடராசன்
முன்னாள் துணைவேந்தர்

சந்ததம் வளரும் சைவ நெறி

சிவநெறிச் செம்மல் இராஜசேகரன் பழுதில்லாத பத்திமை வாய்ந்த பரம்பரைச் சைவ வேளாண் மரபினில் வந்த பெருந் தகையாளர். புகழ் பூத்த தந்தையார் திரு. வரதராசபிள்ளை திருக்குறள் வேள், திருமந்திரத் திலகம் சித்தாந்தச் சான்றோ ராவார். சிறிய தந்தையார் திரு. கனகசபை தமிழ் முழுதறிந்த தகையாளர். இவ்வாறு தமிழும் சைவமும் விளைந்த நிலத்தின் மேதகவெல்லாம் பயிரில் வெளிப்படும் பான்மை பாராட்டுக்குரியது. சட்டத்துறை யில் புலமை பெற்ற நண்பர் இராசசேகரன் தமிழ் நன்கறிந்தவர். சைவம் பயின்றவர், வைணவம் ஓதினார், மையறு புலமையி னால் மாண்பு மிளிரும் நூல்கள் படைத் துள்ளார்.

சைவப் பெருவெளியில் (முதல் தொகுதி) காலம் என்னும் அரிய களஞ் சியத்தை மூன்று ஆண்டுக்கு முன்னர் வெளி யிட்டார். தொடக்கம் முதலாக பதினெட் டாம் நூற்றாண்டு வரை சிவநெறி உலகில் நிலவிய வரலாற்றை அரிதின் ஆய்ந்து அழகுறத் தொகுத்தார். அதன் தொடர்ச்சி யாகவே இந்நூல் வெளி வருகிறது. சைவப் புலவர்கள் துறவியர், ஞானியர், திருமடத் துத் தலைவர்கள், மெய்யன்பர்கள், ஆலயப் பணியாளர்கள், சைவப் புரவலர்களாகிய சிற்றரசர்கள், செல்வர்கள், சைவநூல் இயற்றிய அருளாளர்கள், சான்றோர்கள், ஆராய்ச்சிப் பேரறிஞர்கள், திருமுறை இசைவாணர்கள் முதலிய எண்ணிறந்த பெரியோர் பற்றிய குறிப்புகளோடு என்றும் நிலவும் சைவ மன்றங்கள், நிறுவனங்கள், கழகங்கள், அரங்குகள் பற்றிய விளக்கமான வரலாற்றுச் சுவடுகள் இந்நூலில் செறிந் துள்ளன.

அறிஞர்கள்பால் கேட்டுத் தெளிந்த வரலாற்றுச் செய்திகளும், ஆங்காங்கே தாமே சென்று கண்டறிந்த காட்சிகளும் பழைய நூல்களில் புதையுண்டு கிடந்த நுட்பங்களும், கல்லெழுத்துக்காட்டும் கவினுறு வரலாறுகளும் மதிநலம் அளா விய இந்நூலெனும் மாளிகை எழுப்ப இயைந்த கற்களாகும். நல்லோர் இணக்கத் தால், நலம்பல பெற்ற திருவினால் வாழ்வில் கனியக் கனியத் தொண்டாற்றும் ஆர்வத்தில் இன்று ஆசிரியர் நின்று நிலை பெறுகிறார். இத்தகைய நூலை இதுகாறும் எவரும் எண்ணியதில்லை. இனியவர் திரு. இராசசேகரன் உள்ளத்தில் இவ்வண்ணம் உதித்தது சைவத் தமிழுலகம் செய்த தவம் என்றால் மிகையில்லை.

■■■

அணிந்துரை

திருமுறைச் செல்வர் - சேக்கிழார் சீர்பரவுவார்

புலவர் மு. கணபதி

மேன்மை கொள் சைவநீதிக்கும், தெய்வ நற்றமிழுக்கும் பாடுபட்ட, பாடு படுகின்ற சைவ ஆதீனங்களையும், சைவ மன்றங்களையும், திருத்தொண்டர்களை யும், நம் நெஞ்சகத்தே கோயில் கொள்ளச் செய்யும் அரும்பெரும் நூலே ''என்றுமுள சைவம்'' ஆகும்.

ஆதீனங்களையும், மன்றங்களையும், தொண்டர்களையும் திசைநோக்கி, உச்சிக் கரங்கூப்பி, அங்கம் ஐந்தினும் எட்டினும் பாரில் வீழ்ந்து வழிபடும் ஒருவர்தான் ''திருமுறை மாமணி'' இரா. இராஜசேகரன் அவர்கள். என் குலம் செய்த மாதவம் அவருடைய நூலுக்கு அணிந்துரை வழங்கு வது. அமிழ்தினைச் சுவை செய்தன்ன அழகினுக்கு அழகு செய்கின்றேன். என்னே என் அறியாமை!

இராசசேகரன் என்பான் சிவபாத இரு தயன்; சிவபாத சேகரன்; சிவபாத சேவகன். இனி என் சொல்ல!

''நற்றமிழ்'' என்றால் ''பிறவிப் பிணிக்கு மருந்தாகுந் தமிழ்'' என்று பொருள். பரிமேலழகரின் உரை இதற்குச் சான்று. சிவக்கவிமணி சி.கே.சுப்பிரமணிய முதலியார் அவர்கள் ''நற்றமிழ்'' என்ப தற்குத் ''திருவடிக்கு ஆளாக்குந் தமிழ்'' என்று உரை கண்டார். இத்தகைய உரை களின் உணர்வோடு இந்நூலை அணுக வேண்டும். பொன்னுக்கும், பொருளுக் கும், பதவிக்கும், புகழுக்கும் ஆசைப்பட்டு இந்நூல் ஆக்கப்படவில்லை. எடுத்த ஆக் கையின் ஈடேற்றம் நோக்கியே ஆக்கப் பட்டது.

பட்டி தொட்டி எல்லாம் அயராது பயணித்து, தெருத் தெருவாக அலைந்து திரிந்து, தலந்தோறும் வலம் வந்து, அன்பரொடு மருவி, நேயம் மலிந்தவர் வேடத்தில் திளைத்து, முந்தையோர் வரலாற்றைச் செவியுறக் கேட்டு, தேடித் திரட்டிய அரிய பதிவுகள்தான் ''என்றுமுள சைவம்'' எனும் நூல். இந்நூலைப் ''புதிய திருத்தொண்டத் தொகை'' எனல் சாலும்.

1970-ஆம் ஆண்டில் தான் தொடங்கிய ''தெய்வத் தமிழ் மன்றமே'' தன்னுடைய தேடலின் முதல் வடிகால் என்கின்றார் ஆசிரியர். எனவே 35 ஆண்டுகளின் தேட லின் பிழிவே, பயனே, இந்த நூல் என லாம்.

21-08-2005-ஆம் ஆண்டில் மாணவ உலகிற்காக நல்லதொரு பயிற்சித் திட்டம் வகுத்து ''பெரிய புராணம் வாழ்க்கை இலக்கியம்'' என்ற பாடநூல் வெளியிடப் பட்டது. 300 பள்ளி மாணவர்களுக்கும் 300 கல்லூரி மாணவர்களுக்கும் இந்நூலில் தேர்வு. இதைத் தொடர்ந்து தமிழகம் முழுமையும் இப்பணி பரவினால் என்னு டைய நெடிய தேடல் ஒருவேளை முடிவு பெறும்'' என்று பெருமூச்சு விடுகின்றார் ஆசிரியர். காலம் கனியும் கவலற்க.

நாயன்மார் அவதரித்த திருத்தலங் களில் குருபூசைத் திருநாளை நடத்தும் ஆயுள் தொண்டர்களை அமைத்த ''உழ வாரம்'' எனும் அமைப்புக்கு இணை யில்லை. இந்த நூலில் அதன் மணம் யாண்டும் கமழ்கிறது.

''ஒவ்வொருவரும் தத்தம் தொழிலுக் கேற்ற திருத்தொண்டினைச் செய்தால் தமிழ்நாடு உச்சத்திற்கு வந்துவிடும்'' இது ஆசிரியரின் இதயத் துடிப்பு. முனைவர் மு. சிவச்சந்திரன் அவர்கள் தாமே முன்

வந்து எப்பயனும் கருதாது ''உழவார'' இயக்கத்திற்குத் தோள் கொடுக்க இசைந் தது, ஆசிரியரின் இதயத்துக்கு இதம் அளிக் கிறதாம். உண்மைதானே. இதற்கு நாம் நன்றி நவிலும் தரமோ!

''மேலையூர் சீனிவாசா மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் நான் செய்யும் சைவப் பணிகள் யாவினுக்கும் கை கொடுக்கும் பெருமக்கள். (அவர்களுள் ஒரு ஆசிரியரின் பெயரைச் சொல்லப் பெரு விருப்பம். ஆனால், அனைத்து ஆசிரியர்களின் பங் களிப்பும் இருப்பதால் தயக்கம்)'' எனப் பிறைக்குறியில் குறிப்பிடுகின்றார். ஏன் இந்த மயக்கம்! தொட்டிலையும் ஆட்டி விட்டுப் பிள்ளைகளையும் கிள்ளிவிடும் சிறு குறும்பு என்னைப் பெரிதும் மகிழ்விக் கின்றது. பாவம் வெள்ளை உள்ளம் இங்கே பளிச்சிடுகின்றது. பூசு நீறு போல் உள்ளும் புனிதமுடையவர் அல்லவா அவர்.

தஞ்சையை அடுத்த களிமேட்டில் அப்பர் விழா. அவ்வூர் மண்ணை எடுத்து நெற்றியில் பூசி மகிழ்கிறார்.

கும்பகோணம் சிவனடியார் கூட்டம் வலஞ்சுழி முதல் வாரணாசி முடிய வழி பட்டமை அறிந்து விம்மிதம் கொள்கிறார்.

மன்றங்களின் சங்கமம் தஞ்சாவூர். இது சைவத்தின் புனிதத் தன்மையாம்.

ஆலும், அரசும் திருச்சியில் ஆட்சி செய்கிறதாம் (விளக்கம் நூலில் காண்க.)

உடலும் உயிரும் என இரண்டு இரத்தினங்கள் தில்லைக் கூத்தனின் பெருங்கோயிலுக்கு அரும்பணி ஆற்றிய தாம்.

''சூடாமல் கொடுக்கும் சுடர்க்கொடி'' நெஞ்சக்கன கல்லையும் நெகிழ்விக்கிற தாம்.

இனி இப்படி தனித்தனி விளம்பல் ஆற்றேன் நூலைப் பயில்க.

திருவாசகம், திருமந்திரம், திருக்குறள் முதலிய நூல்களுக்கு நல்லுரை வகுத்த சிவத்திரு குரு. வரதராஜம்பிள்ளை அவர் களின் பிள்ளையைப் போன்ற பிள்ளை யைப் பார்த்துத்தான் திருவள்ளுவனார் ''இவன் தந்தை என்னோற்றான் கொல்!'' என்று வியந்திருப்பேர் போலும்!

இஃதே போல், பெரியகுளம் சிவக் கொழுந்து தேசிகரின் திருமகனார் அம்பல வாணரையும் இப்போது நினைக்கின்றேன்.

பாரம் ஈசன் பணியல்லது வேறு ஒன்றும் இல்லாத ஈரநெஞ்சுடைய நூலாசிரியர் யாதும் குறைவிலாது வாழ ஆனைக்கா அண்ணலின் அடிமலர்களை வந்திக்கின்றேன்.

இப்போது இளங்கோவடிகள் இருந் தால் ''பூம்புகார் போற்றுதும் பூம்புகார் போற்றுதும் ஓங்குசீர் ராசசேகரன் சிவன்அளிபோல் தாங்கித் தமிழ்மறை ஒழுகலான்'' எனப் போற்றிப் பூரிப்பார். வணக்கம்.

மீளா ஆளாய
மு. கணபதி

■■■

அணிந்துரை

எழில் முதல்வன்

''சைவப் பெருவெளியில் காலம்'' என்னும் நூலின் தொடர்ச்சியாக ''என்றுமுள சைவம்'' என்னும் நூல் இப்போது வெளி வருகிறது. இந்நூல் சைவ உலகிற்குக் கிடைத்திருக்கும் கலைக்களஞ்சியம்; காலமெல்லாம் போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டிய கருத்துக் கருவூலம்; நாம் அடுத்த தலைமுறையினர்க்குத் தந்துவிட்டுப் போக வேண்டிய பெரும் சொத்து; சைவ மெய்யன்பர்கள் தங்கள் முகத்தைத் தாமே பார்த்துக் கொள்ள உதவும் நிலைக் கண்ணாடி.

நூலாசிரியர் மேலையூர் தாசில் பண்ணை இரா. இராசசேகரன் அவர்கள் புகழ் வாய்ந்த பெற்றோருக்கு மகனாகப் பிறந்து, இலக்கியச் சூழலிலேயே வளர்ந்து, பொது வாழ்வில் புகுந்தவர். இலக்கியத் தொண்டிற்கும், சமயத் தொண்டிற்கும், சமுதாயத் தொண்டிற்கும் தம்மைத் தாமே ஆட்படுத்திக் கொண்டவர். ''என்றுமுள சைவம்'' என்னும் இந்நூல் சைவ ஆதீனங்கள் பற்றியும், தமிழ் மண்ணில் ஆங்காங்கே துடிப்போடு இயங்கிய - இயங்கி வருகின்ற சைவ அமைப்புகள் பற்றியும், சைவ இயக்கங்கள் பற்றியும், சில தனி மனிதர்களைப் பற்றியும் எடுத்துக் கூறும் ஓர் அற்புதமான வரலாற்று நூல் இது.

இந்த நூலை அடிநிலை முதலா முடிநிலைகாறும் ஆராவேட்கையோடு ஆழ்ந்து படித்தபோது எனக்குத் தோன்றிய முழு மொத்தமான கருத்துப் பதிவு இதுவே: ''இந்நூல் சைவ உலகிற்குக் கிடைத்திருக்கும் 'புதிய திருத்தொண்டர் புராணம்' இந்நூலாசிரியர் நம் காலத்துப் புதிய சேக்கிழார்.'' தொண்டர்தம் பெருமை சொல்லவும் கூடுமோ?

பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவலவர் சேக்கிழார் தாமே கற்றும், கற்றோர் வாய்க்கேட்டும், தமிழகத்தின் பல பகுதிகட்கும் நேரடியாகச் சென்று தரவுகளைத் திரட்டியும் தம் பெரிய புராணத்தைப் பாடி முடித்தார் என்பர். நம் இருபத்தோராம் நூற்றாண்டு சேக்கிழாராம் இராசசேகரனாரும் அதே நெறியை மேற்கொண்டு, வேறு யாராலும் செய்ய முடியாத இப்பணியைச் செவ்வனே செய்து முடித்துள்ளார்.

இந்த நூலை எழுதி முடிக்க அவர் எத்தனை நூல்களைக் கற்றிருக்க வேண்டும்? எந்தெந்த ஊர்களுக்குச் சென்றிருக்க வேண்டும்? எத்தனை பெருமக்களைச் சந்தித்திருக்க வேண்டும்? எவ்வளவு பெரிய பேருழைப்பு இது!

இராகேரர் எழுதியிருப்பது, புதிய திருத்தொண்டர் புராணம் என்று குறிப்பிட்டேன். சொல்லப்போனால், இவரே ஒரு திருத்தொண்டர். மயிலாடுதுறையும் அதைச் சார்ந்துள்ள சிற்றூர்களிலும், பேரூர்களிலும் சைவமும் தமிழும் மணம் பரப்பிவரக் காரணமாக இருப்பவர் இவரே. இவரால் தோற்றுவிக்கப்பட்ட 'தெய்வத் தமிழ் மன்றமும்', 'உழவாரம்' என்னும் அமைப்புமே இதற்குச் சான்றுகள். இவர் முன்நின்று நடத்திய சைவ மாநில மாநாடுகளும், கொண்டாடி வரும் 'அவதாரத் தலங்களில் நாயன்மார் திருநாள்' போன்ற நிகழ்ச்சிகளும் பலராலும் பாராட்டப்பட்ட பெருமை உடையவை. எல்லாவற்றிற்கும் மேலாக இவர் ஓர் ஒப்பற்ற நூலாசிரியர். கற்றல் கேட்டல் உடையராய்த் தமிழில் ஊறி சைவத்திலே திளைத்து, சான்றோர்களைப் போற்றி வாழும் பண்பாடு கொண்ட இவர், இப்படியோர் நூலை எழுத முனைந் ததில் வியப்பென்ன இருக்க முடியும்? தொண்டர் ஒருவர் தொண்டர்களைப் பற்றி எழுதுவதன்றோ சிறப்பு!

இங்கே நாம் பார்க்கின்ற தொண்டர்கள் பல்திறத்தினர்; பல தரத்தினர்; வெவ்

வேறு தொழிலினர்; வாழ்வின் பல்வேறு படிநிலை களில் நிற்பவர்கள். அகவை யானும் அனுபவத்தானும் வேறுபட்டவர் கள். ஆனால், சைவ நெறி நிற்றல் / சைவ நெறி போற்றல் என்னும் அடிப்படையில் எல்லாரும் ஒருவரேயாகி திருக்காட்சி நல்குகின்றனர். ''ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க!''

செய்தொழிலால் அறத்தொடு பட்ட பெரும் பொருள் திரட்டி ஆலயத் திருப் பணிகட்கே செலவிடும் பெரும் பெரும் செல்வர்கள், சைவப் பணிகளில் தமக்கேற்ற ஒன்றைத் தேர்வு செய்து / தெரிவு செய்து அதன்கண் உறுதிபட நிற்போர், பக்குவப் பட்ட அடியவர்கட்கு தீட்சை நல்கும் ஆசாரியர்கள், தாம் மட்டும் ஈடேற்றம் கண்டால் போதாது, தம்மைச் சார்ந்தோரும் அந்நிலை பெற வேண்டும் என்னும் நோக்கில் அனைவரையும் அணைத்துக் கொண்டு இயக்கமாகச் செயல்படுவோர், சைவ நெறி அறியார்க்கு அதை அறிவுறுத் துவதையே தம் பெருநோக்கமாகக் கொண்டு ஆங்காங்கே பல ஆண்டுகள் தொடர்ந்து சைவ நூல்களைப் பாடம் சொல்லி வரும் ஆசிரியப் பெருந்தகைகள், சமய மேடைகளில் நாவீறு தோன்ற தம் சொல்லாற்றலால் முழங்கி வரும் சொல் லேருழவர்கள், சின்னஞ்சிறிய அளவில் சாத்திர தோத்திர நூல்களைத் தம் செலவில் வெளியிட்டு இலவசமாக வழங்கி சைவ நெறி வளர்க்கும் மன்ற அமைப் பாளர்கள், ஒரு பேரியக்கத்துக்கு வித்திட்டு தகுதி வாய்ந்த தம் சீடர்களால் அது தொடர்ந்து நடைபெறக் கிரியா ஊக்கியாக இருக்கும் செயலாண்மையர் - அப்பப்பா! இத்திருத் தொண்டர்களில்தான் எத்தனை வகையினர்! இவர்களில் யாரைப் பெரியர் என்று கூற முடியும்? யாரைச் சிறியர் என்று ஒதுக்க முடியும்? கொண்டிருக்கும் கொள்கையா லும், நடைபோடும் நெறியாலும் அனைவர் சரிநிகர் சமானம் அல்லரோ? இத்தொண்டர் கூட்டம் சைவம் என்னும் பேரியாறு இடையறாது தவழ்ந்தோடி வரும் தெய் விகக் காட்சியை அன்றோ காட்டுகிறது?

இந்நூலைப் படிக்கும்போது சில இடங்களில் செய்திகளை மட்டும் பதிவு செய்யும் ஆவணப்போக்கு (Documentary Method) வெளிப்படுகிறது. சில இடங்களில் எடுக்கப்பட்ட வண்ண வீடியோ படம் நம்முன் சின்னத்திரையில் காட்டப்படுவது போன்ற உணர்வு எழுகிறது. சில இடங் களில் சுவையான கதையைப் படிக்கும் ஆர்வம் மேலிடுகிறது. சில இடங்களில் அடுத்தடுத்து காட்சிகள் விரிய, ஓர் ஓரங்க நாடகத்தைக் காண்பது போன்ற எண்ணம் தோன்றுகிறது. எல்லா வகையான உத்தி களையும் இடத்திற்கும் பொருண் மைக்கும் ஏற்பப் புகுத்தி இத்தகவல் களஞ்சியத்தைச் சுவை ததும்பும் இலக்கிய மாக்கிவிட்டார் ஆசிரியர். தகவல்களைக் கூறுவது கையே டாகவே (Hand Book) கருதப்படும். கையேட்டையும், இலக்கியமாக மாற்றி விடும் இரசவாத வித்தை இவருக்கு எவ்வாறு கிட்டியது? இது அவர் செய்த தவமா? சைவம் செய்த தவமா?

இந்த நூலைப் பற்றிச் சிந்திக்கும் போது தமிழ்நாட்டுச் சைவ ஆதீனங்களை யெல்லாம் நம் வாழ்வில் ஒரு முறையாவது வலம்வர வேண்டும் என்னும் பேரார்வம் பெருக்கெடுக்கிறது. தில்லைத் திருத்தலத் தில் ஆண்டுதோறும் நடைபெறும் நாட்டி யாஞ்சலியைக் கண்ணாரக் காணும் ஆசை தோன்றுகிறது. 'பிறை சூடி' என்னும் தேவாரத் தொடருக்கு அறிவியல் நெறியில் விளக்கம் தரும் அ.சொ. சுப்பையா அவர் களையும், 'கொட்கப் பெயரும்' என்னும் திருவாசகத் தொடருக்குப் புதுப் பொருள் கூறும் கொறுக்கை சுந்தரம் பிள்ளையை யும், தேவாரப் பண்களை முன்னோர் வழிநின்று விளக்கம் கொடுக்கும் களிமேடு அப்பாராசனையும், வெண்ணீறு சண்ணித்த மேனியராய் - உச்சிக் கூப்பிய கையினராய் - அவ்வப்போது அடியர்கள் ஆகாரம் செய்யப் பெரியபுராணத்தை விரித் தோதும் சிவராகவனையும் சந்திக்க வேண்டும் என்னும் விருப்பம் அரும்புகிறது.

அன்பர் பணி செய்வதற்கே தம்மை ஆளாக்கிக் சொண்ட திருவரங்கப் பெருங் கோயில் யானைப்பாகர் ஸ்ரீதரனையும், தம் வீட்டில் நடந்துவிட்ட துக்க நிகழ்ச்சியைத் தற்காலிகமாகச் சில மணி நேரம் மூடி மறைத்து, சைவக் கூட்டம் முட்டுப்படாது

முடிய வழிசெய்த தமிழ்நேசச் செல்வர் தளவாய் இராமசாமியையும், சைவ நூல்களைப் பிறமொழியினருக்கு அறிமுகம் செய்வதற்காகவே 'சமய சமூகச் சங்கம்' கண்டு மொழிபெயர்ப்புகளை வெளியிட்டு வரும் பெரியவர் ஆறுமுகம் பிள்ளையையும் தம் வீட்டு வாசலில் இடபக் கொடியை ஏற்றி வைத்து சைவம் பரப்பும் பண்ருட்டிப் பெரியவரையும் காண வேண்டும் என்னும் துடிப்பு மிகுகிறது.

நம் காலத்தில் மண்டி நின்ற மாயாவாதத்தினைத் தன் அறச்சீற்றத்தால் அடக்கி வைத்த கயிலைச் செல்வர் ப. மூக்கப் பிள்ளையையும், கும்பாபிஷேகம் என்று கேள்விப்பட்டால் போதும், எந்த அழைப்பையும் எதிர்நோக்கி நிற்காமல், தம் உருத்திராக்க விதானத்தோடு கோயிலுக்கு விரைந்தோடும் ஆடுதுறை கலியபெருமாளையும், லால்குடியில் அறநெறிக் கழகத்தைத் தோற்றுவித்து, ஒல்லும் வகையெல்லாம் ஓயாத பணிபுரியும் கனகசபைப் பிள்ளை அவர்களையும் தரிசிக்க வேண்டும் என்னும் ஆரா அவா நெஞ்சில் கனன்று எழுகிறது.

இந்நூல் வாயிலாக நாம் அறிய நேரும் செய்திகள் மிகப் பல. ஒன்றா, இரண்டா சொல்லி முடிக்க. சான்றாகச் சில :

1. திருமுறைத் தனிச்சிறப்பு ''திருவூடல்'' என்னும் பகுதியாகும். இறைவனுக்கும் இறைவிக்கும் நடந்த ஊடல் விளையாட்டினைத் தேவாரத் திருப்பதிகங்கள் கொண்டே திருவாதிரை விழாவில் நிகழ்ச்சி களை நடத்துவர்.

2. வன்றொண்டர் நாராயணன் செட்டியார் தேவக்கோட்டையில் சேக்கிழார்க்குத் திருக்கோயில் கட்டினார். அக்கோயிலில் அமைந்துள்ள திருவுருவம் குன்றத்தூர் மலையிலிருந்து கொண்டு வரப்பட்டது.

3. ''தமிழ்ச் சிவஞான போதம் மொழிபெயர்ப்பு நூலே : மூல நூலல்ல'' என்பதும், ''சைவத் திருக்கோயில்களில் சமஸ்கிருத மந்திரங்களே வேண்டும்'' என்னும் இரு கருத்துக்களும் சங்கரன்கோயில் சைவப் பெரு மக்களிடத்தில் இன்றளவும் ஆழமாகப் பதிந்திருக்கின்றன.

படிப்போர்க்கு இத்தனை அனுபவங்களையும், அறிவார்ந்த செய்திகளையும் தரவல்ல இந்த நூலை எழுதி அளித்திருக்கும் நூலாசிரியரை எப்படிப் பாராட்டாமல் இருக்க முடியும்?

நான் சோழ நாட்டின் மன்னனாக இருந்திருந்தால் பொன்னையும் பொருளையும் அவருக்கு அள்ளி வழங்கி இருப்பேன்!

நான் மிகப் பெரும் செல்வனாக இருந்திருந்தால் சைவ மெய்யன்பர்களை ஒருங்கே கூட்டி அவருக்குக் கனகாபிஷேகம் செய்திருப்பேன்!

நான் ஆட்சி பீடத்தில் இருக்கும் அரசியல் தலைவராக இருந்திருந்தால் அவருக்குப் பட்டமும் பதவியும் வழங்கி இருப்பேன்!

குறைந்தபட்சம் ஒரு பல்கலைக் கழகத்தில் துணைவேந்தராக இருந்திருந்தால் இந்நூலுக்காக அவருக்கு முனைவர் பட்டம் வழங்கி மகிழ்ந்திருப்பேன்!

சொல்லப் போனால் இவையெல்லாம் ஒரு பாராட்டேயல்ல. ஒரு நூலைப் படிக்கும்போது படிப்போர் அவ்வாசிரியரை மிக்க நன்றியோடு நினைக்கிறார்களே - அதுதான் உண்மையான பாராட்டு. அந்தப் பாராட்டே என்றென்றும் இருப்பது.

அது இராஜசேகரனார்க்கு உண்டு. அவர் வாழ்க! அவர் தம் திருத்தொண்டு வெல்க!

''தமிழ்க்குடில்''
4, கங்கைத் தெரு
பவானி நகர்
தஞ்சாவூர் – 613 004

அன்புடன்
மா. இராமலிங்கம்

■■■

முதற்பகுதி

சைவ ஆதீனங்கள்

சைவ ஆதீனங்கள் பற்றி வடலூர் ஊரன் அடிகள் அவர்கள் 2002-இல் ஓர் அரிய நூலினை வெளியிட்டுள்ளார். அந்நூல் முழுமையாக ஆய்வு செய்யப் பட்டிருப்பதால், நான் எந்த ஆய்வும் மேற்கொள்ளவில்லை. அதனை அடி யொற்றி சுருக்கி இங்கே தந்துள்ளேன்.

''சைவ சமய வளர்ச்சியில் அரசர்களின் பங்களிப்புக்குப் பிறகு சைவத் திருமடங் களின் பங்கு கணிசமானது. முகமதியர், ஆங்கிலேயர் ஆட்சிக் காலங்களில் சமய உணர்வு குன்றிய நிலையில் சைவத் திருமடங்கள் சைவ சமயத்தைக் கண்ணும் கருத்துமாகக் காத்தன எனல் மிகையாகாது. சைவ ஆதீனங்கள் பதினெட்டு என்பர்.''

பதினெண் மடங்கள்

''சைவ மடங்களின் பட்டியலொன்று'' சுத்த சைவ பதினெண் ஆதீனங்கள் என்ற தலைப்பில் அபிதான சிந்தாமணியில் காணப் பெறுகிறது. இலக்கண விளக்க ஆசிரியர் பரம்பரை ச. சோமசுந்தர தேசிகர் எழுதிய ''தமிழ்ப்புலவர்கள் வரலாறு - பதினேழாம் நூற்றாண்டு'' என்ற நூலில் பதினெட்டு மடங்களின் பட்டியலொன்று காணப்பெறுகிறது. உலா நூல்களில் சிலவற்றில் பதினெண் மடங்கள் பற்றிய குறிப்பு காணப்படு கிறது.''

''தமிழ்ச் சைவ மடங்கள் வேறு. வடமொழி பத்ததிகள் வேறு. அபிதான சிந்தாமணி ஆசிரியரும் சோமசுந்தர தேசிகரும் தமிழ்ச் சைவ மடங்களை குறிக்கின்றனர். உலா நூல்கள் மூன்றும் வடமொழிப் பத்ததிகள் செய்த சிவாசாரியர் பதினெண்மர் வழி வந்த மடங்களைக் குறிக்கின்றன.

''பதினெண்புராணங்கள், பதினெண் கீழ்க்கணக்கு, பதினெண் சித்தர்கள் என்பன போன்று பதினெண் மடங்கள், பதினெண் பத்ததிகள் என்ற வழக்குத் தோன்றி அவை இன்னதென அறியாத பிற்கால நிலையில் சுத்த சைவ பதினெண் ஆதீனங்கள் என்ற பொருந்தாப் புது வழக்கு ஏற்பட்டு விட்டது.

''தமிழ்ச் சைவ மடங்கள் இத்தனை என்ற கணக்கு இல்லை; வேண்டுவது மில்லை. உலா நூல்களில் குறிப்பிடப் பெற்ற அந்நாளிலிருந்த பதினெண் மடங்கள் இன்னவை எனத் தெரியாத பின்னாளில் இருக்கும் மடங்களில் பதினெட்டின் பெயர்கள் பட்டியலிடப் பெற்று விட்டன என்பதே உண்மை.''

''மேலும் சிவன், சிவர், சிவம் என்ற பெயர் பிராமண குருவினர்க்கும் தேவர் என்பது பிராமணரல்லாத ஏனைய குருவினர்க்கும் வழங்குவது அக்காலப் பத்ததி முறை. இதனாலும் அவை வடமொழிச் சிவப் பிராமண மடங்கள், இவை சைவ வேளாளத் தமிழ் மடங்கள் என்பதை அறியலாம். பத்ததி ஆசிரியர் வழி வந்த மடங்களிலிருந்து வேறு படுத்திக் காட்டவும், வீர சைவ மடங்களிலிருந்து வேறுபடுத்திக் காட்ட வும் சுத்த சைவ என்று குறிப்பிட்டிருக்க லாம்.'' என்று தவத்திரு ஊரன் அடிகள் தெளிவுபடுத்துகிறார்.

1. திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீ நமச்சிவாய மூர்த்திகள்





ஆதீனக் குரு முதல்வர்

திருவாவடுதுறை ஆதீனத்தின் நிறுவனரும் முதற் குரவருமாகிய நமச்சிவாய மூர்த்திகள் பிறந்த ஊர் திருவாவடுதுறைக்கு அருகில் உள்ள மூவலூர். சிறுவர் வைத்தியநாதனுக்கு (நமச்சிவாய மூர்த்திகள் பூர்வாசிரமப் பெயர்) ஏழு வயது இருக்கும் பொழுது சித்தர் சிவப்பிரகாசர் மூவலூருக்கு வந்தார். வைத்தியநாதர் சிவப் பிரகாசரைத் தொடர்ந்தார். இருவரும் திருவாவடு துறைக் கோயிலுக்கு வருகிறார்கள். தாம் மரபு வழி பெற்ற சிவஞானத்தைச் சிறுவர்க்கு உபதேசித்தார். நமச்சிவாய ராகிய வைத்தியநாதன் சிவஞானபோதம் முதலான சித்தாந்த சாத்திரங்களிலும் திருமுறைகளிலும் சிறந்த தேர்ச்சி பெற்றார். சித்தர் சிவப்பிரகாசர் திருவாவடுதுறையில் திருமாளிகைத் தேவர் சமாதிக் கோயிலை ஒட்டி ஓர் அறை கீறி ''இதில் மடம் அமைத்து நமது ஆசாரிய பரம்பரையை வளர்த்து வருவாயாக'' எனக் கூறி வாழ்த்தி வேதாரண்யம் சென்றார். ஆசாரியர் கீறிய இடமே இன்றைய திருவாவடுதுறை ஆதீனமாக

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்
பரம்பரை விளக்கம்
ஸ்ரீ கண்ட பரமசிவன்
திருநந்திதேவர்

சனகர் சனந்தனர் சனாதனர் சனற்குமாரர்

சத்தியஞானதரிசனிகள்
பரஞ்சோதி மாமுனிவர்
மெய்கண்ட தேவநாயனார்
அருணந்தி சிவாசாரியார்
மறைஞான சம்பந்த சிவாசாரியர்
உமாபதி சிவாசாரியார்
அருணமச்சிவாயர் (மச்சுச் செட்டியார்)
சித்தர் சிவப்பிரகாசர்
ஸ்ரீ நமசிவாய மூர்த்திகள்
(திருஆவடுதுறை ஆதீன நிறுவனர் - குருமுதல்வர்)

வளர்ந்தது. நமசிவாய மூர்த்திகளின் சீடர்கள் நால்வர் 1) குடந்தை சிவப்பிரகாசர், 2) மறை ஞான தேசிகர், 3) அம்பலவாண தேசிகர், 4) மூர்த்தி தேசிகர். நமச்சிவாய மூர்த்திகள் நெடுங் காலம் குரு முதல்வராக எழுந்தருளி யிருந்து அருள்பாலித்தார்கள். ''நமச் சிவாய மூர்த்திகள் 16-ஆம் நூற்றாண்டில் திருவாவடுதுறை ஆதீனத்தை நிறுவினார் என்பது உண்மை'' என்கிறார் ஆய்வுப் பேரறிஞர் மு. அருணாசலம் அவர்கள். நமச்சிவாய மூர்த்திகள் ஒரு தைத்திங்கள் அசுபதி நாளில் முத்தி பெற்றருளி னார்கள்.

இரண்டாம் குரு மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மறைஞான தேசிகர்

திருவாவடுதுறையில் தோன்றிய மறைஞான தேசிகர் இடையறாது நிட்டையில் அமர்ந்து உலகியல் செயல்களில் செயலற்றிருப்பவரானார். சில காலத்துக்குப் பின் ஒரு தை மாதத்துச் சுவாதி நாளில் சிவப்பேறு பெற்றார்கள்.

மூன்றாம் குரு மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிகர்

அம்பலவாணர் அதிகமான நூல்கள் செய்துள்ளார். திருவாவடுதுறை ஆதீன பண்டார சாத்திரம் பதினான்கில் 10 நூல்கள் இவரால் செய்யப்பெற்றவை. 1) அம்பலவாணர் தசகாரியம், 2) சன்மார்க்க சித்தியார், 3) சிவாச்சிரமத் தெளிவு,4) சித்தாந்தப் பஃறொடை, 5) சித்தாந்த சிகாமணி, 6) உபாய நிட்டை வெண்பா, 8) நிட்டை விளக்கம், 9) அதிசய மாலை நமச்சிவாயமாலை.

இவையல்லாமல் உயிரட்டவணை என்ற உரைநடை நூலும் இவர் எழுதி உள்ளார். சின்னப்பட்டம் தட்சிணா மூர்த்தி தேசிகர். 1) தட்சிணாமூர்த்தி தசகாரியம், 2) உபதேசப் பஃறொடை என்ற இருநூல்களைச் செய்தார். அம்பல வாண தேசிகர் செய்த நூல்கள் பத்துடன் இவ்விரண்டும் பண்டார சாத்திரம் பதினான்கில் சேர்ந்தன. நூற்றிறத்தால் ஆதீனத்தை ஒளிரச் செய்தவர் அம்பல வாண தேசிகர்.

நான்காம் குரு மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ உருத்திர கோடி தேசிகர்

''இவர்களது ஆட்சிக்காலம் ஆதீனத் தின் பொற்காலங்களில் ஒன்று'' என் கிறார், ஊரன் அடிகள். இன்றைய தென் மாவட்டங்களில் கிளை மடங்கள் பலவும், கிராமங்கள் பலவும் இவர்களது காலத்தில் தான் உண்டாயின. இவர்கள் காலத்தில் மதுரை மாவட்டத்தில் கிறிஸ்துவ மதம் பரப்பலும், மதமாற்ற லும் மிகுந்திருந்தன. மன்னர் முத்து வீரப்ப நாயக்கரின் ஆதரவுடன் ஈசானத் தம்பிரானைக் கொண்டு கிறிஸ்துவ மதப் பரப்பலையும் மதமாற்றத்தையும் தடுத்து நிறுத்துவதற்கான பணிகள் செய்யப் பெற்றன.

ஐந்தாம் குரு மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ வேலப்ப தேசிகர்

ஸ்ரீலஸ்ரீ வேலப்ப தேசிகர் சிவஞான சித்தியார் பரபக்கத்திற்கு உரை எழுதி உள்ளார். இவரது அடியார் திருக் கூட்டத்தில் ஒருவராகிய நமச்சிவாயத் தம்பிரான் திருவருட்பயன், வினா வெண்பா ஆகிய இரண்டு சாத்திரங் களுக்கு உரை எழுதியுள்ளார்.

ஆறாம் குரு மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ குமாரசாமி தேசிகர் ஏழாம் குரு மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ (பின்) குமாரசாமி தேசிகர்

முதல் ஏழு குரு மகாசந்நிதானங்களின் காலம் 1360 முதல் 1625 வரையிலாகும்.

எட்டாம் குரு மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிகர் (1625 - 1658)

திருவெண்காட்டிலே பிறந்து மாகேசு வர பூசைச் சிறப்பைத் திருவெண்

காட்டிலே நிருபித்து விளக்கி நரிகள் கடிப்பதையும் கவனியாது திருவெண் காட்டில் நிட்டை கூடியிருந்து திருவெண் காட்டிலேயே சிவப்பேறு எய்தினார்கள்.

ஒன்பதாம் குரு மகா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ இராமலிங்க தேசிகர்
(1658 - 1678)

இவர்கள் திருமுறைப்பயிற்சியும் இசையறிவும் மிக்கவர்கள்.

பத்தாம் குரு மகா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ வேலப்ப தேசிகர்
(1678 - 1700)

இவர்கள் காலத்தில்தான் சாஸ்திரம் சாமிநாத முனிவர் என்பவர் திருவாவடு துறைப் புராணம், திருப்பெருந்துறைப் புராணம் ஆகிய இரண்டையும் இயற்றி னார்.

பதினொன்றாவது குருமகா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ பின் வேலப்ப தேசிகர்

இவர்களது ஆட்சிக்காலத்தில்தான் சிவஞான முனிவரின் சிவஞானமா பாடியம் அரங்கேற்றம் செய்யப்பட்டது.

பன்னிரண்டாம் குரு மகா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ திருச்சிற்றம்பல தேசிகர்

நான்காம் பட்டம் உருத்திர தேசிகர் காலத்திற்குப் பின் இவர்கள் காலத்தில் தான் ஆதீனத்திற்குத் தென்னாட்டில் மிகுதியான ஊர்கள் கிடைத்தன. நாலாம் பட்டத்திற்குப் பின் இவர்களது காலம் ஒரு பொற்காலம் என்கிறார் ஊரன் அடிகள். சேதுபதி மன்னர்கள் திருவாவடு துறை ஆதீனத்திற்கு ஏராளமான நிலங் களைத் தாராளமாக வழங்கினர். காசியில் கண்ணப்பசாமி என்னும் கிளைமடம் இவர்கள் காலத்தில் உண்டாயிற்று. ஆதீன மடாலயத்தில் எழுந்தருளி இருக்கும் நடராஜப் பெருமானுக்கு வெள்ளித் தேர் இவர்கள் காலத்தில்தான் செய்யப்பெற்றது.

பதின்மூன்றாம் குரு மகா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிகர்
(1770 - 1789)

பதினான்காம் குரு மகா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ வேலூர் சுப்பிரமணிய தேசிகர்
(1789 - 1845)

திருக்கழுகுன்றம் கிளை மடம் இவர் கள் காலத்தில் கட்டப்பட்டது.

பதினைந்தாம் குரு மகா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிகர்
(1845 - 1869)

இவர்களது காலம் ஆதீன வரலாற்றில் தமிழ் இலக்கியப் பொற்காலம். இவர்கள் பன்னிரண்டு திருமுறைகளிலும் மெய் கண்ட நூல்களிலும், பண்டார சாத்திரங் களிலும் நல்ல பயிற்சி உடையவர்கள். இடைவிடாமல் படிப்பதும், படித்த வற்றைச் சிந்திப்பதும், ஆராய்ந்து பேசுதலுமே இவர்கள் பொழுதுபோக்கு, இவர்கள் காலத்தில் ஆதீனத்திலிருந்த முனிவர்கள் அனைவரும் நல்ல படிப் பாளர்கள். இவர்கள் காலத்தில் ஆறுமுக நாவலருக்கு நாவலர் பட்டம் வழங்கப் பெற்றது. திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் ஆதீன வித்துவானாக அமர்த்தப்பெற்றார். பிள்ளையவர்கள் அம்பலவாண தேசிகரின் மீது ஒரு கலம் பகமும் பிள்ளைத்தமிழும் பாடினார். ஸ்ரீ அம்பலவாண தேசிகர் பிள்ளையவர் களுக்கு மகாவித்துவான் பட்டத்தை அளித்து சிறப்பித்தார்கள்.

பதினாறாம் குரு மகா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ மேலகரம் சுப்பிரமணிய தேசிகர்
(1869 - 7.1.1888)

''மேலகரம் சுப்பிரமணிய தேசிகரின் காலம் தமிழ் இலக்கியப் பொற் காலத்திலும் பொற்காலம்'' என்கிறார் ஊரன் அடிகள். டாக்டர் உ. வே. சாமி

நாதய்யரவர்கள் இவர்கள் காலத்திலே தான் ஆதீனத்திலிருந்த மகாவித்துவான் பிள்ளையவர்களிடமும் மகாசந்நிதானத்திடமும் பாடம் கேட்டார்கள். பாடம் சொல்லுவதில் ஆற்றல் மிக்க இத்தேசிகர் சிவஞான சித்தியார் சுபக்கத்திற்குப் பதவுரை ஒன்றும் எழுதியுள்ளார்.

''மடத்தின் விஷயம் ஒன்றும் தெரியாத அயல் நாட்டார் ஒருவர் வந்து பார்த்தால் அவ்விடம் ஒரு சர்வகலா சாலையே என்று எண்ணும்படி இருந்தது. அங்கே பொருள் இருந்தது; அதைத் தக்க வழியில் உபயோகிக்கும் தாதா இருந்தார்; அவர் உள்ளத்தில் அன்பு நிறைந்திருந்தது; எல்லோரிடமும் ஒற்றுமை இருந்தது; கல்வி நிறைந்திருந்தது; வயிற்றுப் ப்சியையும் அறிவுப் பசியையும் போக்கி வாயுணவும் செவியுணவும் அளிக்கும் நித்தியோத்சவம் அங்கே நடந்து வந்தது. கலைமகள் களிநடம் புரியும் திருக்கோயிலாகவே அது விளங்கியது'' என்கிறார் உ.வே. சாமிநாதய்யர். திருவாவடுதுறை ஆதீனம் தமிழுக்குத் தந்த கொடை டாக்டர் உ.வே. சாமிநாதையர்.

தமிழ்க் கொடையைப் போன்றே இவர்களது சைவக் கொடையும் குறிப்பிடத்தக்கது. மூன்று ஆதீனங்களுக்கு மடாதிபதிகளைக் கொடுத்தவர் மேலகரம் சுப்பிரமணிய தேசிகர்.

பதினேழாம் குரு மகா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிகர்
(7.1.1888 - 15.4.1920)

''தமிழ், வடமொழி ஆகிய இரு மொழிப்புலமையும் உடைய இவர்கள் இசைப் புலமையிலும் சிறந்து விளங்கினார்கள். திருமுறைக் குறிப்புகளையும் இசைக் குறிப்புகளையும் எண்ணற்ற அளவில் எழுதி வைத்திருக்கிறார்கள். ஆதீன நூல் நிலையத்தில் உள்ள ஏட்டுச் சுவடிகளில் பலவற்றைத் தமது திருக்கரத்தாலேயே காகிதப் படிகளாகப் பெயர்த்தெழுதி உயர்ந்த பட்டுக்கட்டடம் கட்டி அழகாகப் பொன்முலாம் பூசி நன்கு பாதுகாத்து வைத்தார்கள். ''சிவஞான மாபாடியத்தை இவர்கள் காகிதப் படிகளாக மூன்று படிகள் தம் கரத்தாலேயே எழுதி வைத்திருக்கிறார்கள் என்றால் இவர்களது ஆர்வத்தை என்ன என்பது?'' என்று வியக்கிறார் ஊரன் அடிகள்.

கொடைத்திறத்தில் இவர்களைப் போஜ மகாராஜர் என்று பாராட்டுவார்கள். முதியவர் ஒருவர் தன் பெண் திருமணத்திற்குச் சந்நிதானம் அவர்களிடம் விண்ணப்பித்து நூறுரூபாய் பெற்றுப் போகலாம் என்று வந்தார். சந்நிதானமவர்கள் இரண்டாயிரம் ரூபாய் வழங்கினார்கள். இரண்டாயிரம் ரூபாய் அதிகம் நூறுரூபாய் போதும் என்றார் முதியவர். சந்நிதானமவர்கள் மேலும் ஓர் ஆயிரம் ரூபாய் வழங்கினார்கள்.

பதினெட்டாம் குரு மகா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர்
(15-04-1920 - 5-2-1922)

இவர்கள் தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிப் புலமையும், உலகியல் அறிவும் நிர்வாகத்திறனும் நிரம்பியவர்கள்.

பத்தொன்பதாம் குரு மகா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ வைத்தியலிங்க தேசிகர்
(5-2-1922 - 1937)

இருபதாம் குரு மகா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிகர்
(1937 - 13-4-1951)

இவர்கள் திருமந்திர உபதேசம் பெற்றவர்கள். இலக்கண இலக்கிய பாடம் கேட்டவர்கள். சைவ ஆதீனங்கள் ஒன்றுபட்டுச் செயற்படவேண்டுமென்ற சிந்தனை படைத்தவர்கள். இவர்கள் காலத்தில் 15-8-1947 விடுதலைத் திருநாள்

அன்று நாட்டின் பிரதமர் ஜவகர்லால் நேருவிடம் ஆதீனக் காறுபாறு தம்பிரான் சுவாமிகள் தங்கச் செங்கோல் வழங்கினார். முன்னிருந்த கடன்கள் இவர்களது திறமையான ஆட்சியால் தீர்க்கப் பெற்றன.

இருபத்து ஒன்றாவது குரு மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியதேசிகர் (13.4.1951 - 23.9.1967)

நமச்சிவாய மூர்த்தி அச்சகம் என்ற பெயரில் அச்சகம் நிறுவப் பெற்றது. திருவெண்ணெய்நல்லூரில் சித்தாந்த சைவ மாநாடு, ஆவுடையார் கோயிலில் திருவாசக மாநாடு. திருவாவடுதுறையில் திருமந்திர மாநாடு ஆகியவை தொடங்கி ஆண்டுதோறும் தொடர்ந்து நடத்தப் பெற்றன.

இருபத்து இரண்டாவது குரு மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாணர் தேசிகர் (23.9.1967 - 7.4.1984)

இவர்கள் காலத்தில் 15-10-1970-இல் திருவிடைமருதூர் கோயில் குட நீராட்டும், 27-8-1972-இல் திருவாவடுதுறை கோயில் குடநீராட்டும் சிறப்பாக நிகழ்ந்தன.

திருவிடைமருதூரில் ஆண்டு தோறும் மூன்று நாள்கள் திருமுறை கருத்தரங்கம் நடத்தப் பெற்றது. 1971 பிப்ரவரி 12,13,14 மூன்று நாளும் நிகழ்ந்த கருத்தரங்கத்தின் உரைகள் 1973-இல் நூலாக வெளியிடப் பட்டது.

18-1-1979- இல் நிகழ்ந்த கருத்தரங்கில் இந்திய பிரதம அமைச்சர் மொரார்ஜி தேசாய் தமிழக முதலமைச்சர் எம்.ஜி. இராமச்சந்திரன் இருவரும் கலந்து கொண்டனர்.

ஆதீனத் திங்களிதழ் ''மெய்கண்டார்'' இவர்கள் காலத்தில் 12-12-1982-இல் தொடங்கப்பெற்றது.

இருபத்துமூன்றாம் குரு மகா சந்நிதானம் சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் (7-4-1983 முதல் இப்போது அருளாட்சி செய்து வருபவர்கள்)

இவர்கள் இளவரசுப் பட்டத்துக்கு வந்தவுடன் 12-12-1982-இல் மெய்கண்டார் இதழைத் தொடங்கினார்கள். 1992-இல் சைவ சித்தாந்த நேர்முகப் பயிற்சி மையம் தொடங்கி இப்போது நான்காம் தொகுதி நடந்து கொண்டு இருக்கிறது. இதுவரை 5050 பேர் சேர்ந்துள்ளனர் (2002), 35 ஆண்டுகளாக ஆதீனகர்த்தரின்றி அழிந்த நிலையில் இருந்த பெருங்குளம் செங்கோல் ஆதீனத்திற்குத் தகுந்த ஒருவரை ஆதீன கர்த்தராக ஏற்படுத்திச் செம்மை செய்து அருளினார்கள். இவர்களின் அருளாட்சிக் காலத்தில் மட்டும் 205 நூல்கள் வெளி வந்துள்ளன. இவற்றில் ஆகமம் மற்றும் சிற்பம் சார்ந்த நுண்கலை நூல்கள் (தெட்சிணாமூர்த்தி, சோமாஸ்கந்தர் போன்ற 12 நூல்கள்) தனிச்சிறப்பு உடையன.

திருவாவடுதுறை ஆதீனப்பண்டார சாத்திரங்கள் பதினான்கு ஆகும். திருவாவடுதுறை ஆதீனக் கோயில்கள் இருபது ஆகும். இவற்றில் ஒன்பது கோயில்கள் பாடல் பெற்ற தலங்கள் ஆகும். ஒன்று திருவாசகத் தலம். திருவாவடுதுறை ஆதீனக் கிளை மடங்கள் காசி முதல் கன்னியாகுமரி வரை நாடெங்கும் 130க்கு மேற்பட்டவை உள்ளன. இப்பொழுது நல்ல நிலைமையில் பணியாற்றிக் கொண்டிருக்கும் மடங்கள் 69 தான்.

ஆதீனப் பணிகள்

ஆதீன நிர்வாகம் - 69 கிளை மடங்களின் நிர்வாகம் - ஆதீனக் கோயில்கள் பெரிதும் சிறிதுமாக 50இன் நிர்வாகம் - நாடெங்கும் பரவியுள்ள

50000க்கு மேற்பட்ட ஏக்கர் நில நிர்வாகம் - பல இடங்களில் தேவாரப் பாட சாலைகள் - திருவிடைமருதூரில் மேல் நிலைப் பள்ளி – திருவாவடுதுறையில் மெட்ரிக்குலேஷன் பள்ளி - பல ஊர்களில் பல்வேறு நிலைகளில் பல பள்ளிகள் - பல்வேறு ஊர்களில் நூல் நிலையங்கள் - தட்டச்சுப் பயிற்சி நிலை யங்கள் - சுருக்கெழுத்துப் பயிற்சி நிலை யங்கள் - அன்னப்பன்பேட்டை தாயு மான சுவாமிகள் ஆதீனம், சொர்க்கபுர ஆதீனம், இருளஞ்சேரி போன்ற நலி வடைந்த மடங்களுக்கு உதவி - கீழக் கொட்டையூர் வள்ளலார் குருகுலம் - கும்பகோணம் அன்னை கருணை இல்லம் - முதலிய பல நிறுவனங்களுக்கு ஆண்டுதோறும் உதவித் தொகை - நூல் வெளியீடு (இதுவரை 525 நூல்கள்) இப்படிப் பல்வேறு வகையில் நூற்றுக் கணக்கான சமய சமுதாயப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

2. தருமபுர ஆதீனம்





“தமிழ்நாட்டில் உள்ள சைவ ஆதீனங் களில் திருவாவடுதுறை ஆதீனமும் தரும புர ஆதீனமும் பெரிய ஆதீனங்கள். ஆதீனங்களின் வரிசையில் முதலில் இடம் பெறுபவை. திருவாவடுதுறை ஆதீனம் முதலில் தோன்றியது. சில காலத்திற்குப் பின் அடுத்து இரண்டா வதாகத் தோன்றியது தருமபுர ஆதீனம்.

திருவாவடுதுறை ஆதீனம் புலமை யாற் சிறந்தது. தருமபுர ஆதீனம்



தவத்தால் சிறந்தது. பதினொறொடுக்கம் தருமபுர ஆதீனத்தின் தவச் சிறப்பைக் காட்டும். திருவாவடுதுறை ஆதீனம் பாடஞ்சொல்லும் இடமாக விளங்கியது. தருமபுர ஆதீனம் பயிற்சியளிக்கும் இடமாக விளங்கியது. அதனால்தான் பதினொறொடுக்கம் அமைந்தது'' என அழகுற விளக்குகிறார் ஊரன் அடிகள்.

கயிலாய பரம்பரை மெய்கண்ட சந்தானத்தில் சந்தானக் குரவர்களில் நான்காமவரான உமாபதி சிவம் வரை எல்லா ஆதீனங்களுக்கும் பொது, உமாபதி சிவத்துப் பின் வரும் குருமரபு பல்வேறு ஆதீனங்களாகப் பரவுகிறது.

உமாபதி சிவத்தின் மாணாக்கர் மச்சுச் செட்டியார் என்னும் அருள் நமச்சிவாயர். அவர் மாணாக்கர் சித்தர் சிவப்பிரகாசர். அவர் மாணாக்கர் நமச்சிவாய மூர்த்தி களே திருவாவடு துறை ஆதீன முதல்வர்.

மச்சுச் செட்டியாரின் மற்றொரு மாணாக்கர் காழிக் கங்கை மெய் கண்டார். இவரது மாணாக்கர் பரம் பரையில் வரும் குருஞான சம்பந்தரால் தருமபுர ஆதீனம் நிறுவப் பெற்றது.

உமாபதி சிவத்தின் மாணாக்கர் பரம் பரையில் மூன்றாம் தலை முறையில் நமச்சிவாய மூர்த்திகளால் நிறுவப் பெற்றது திருவாவடுதுறை ஆதீனம்.

எட்டாம் தலைமுறையில் குரு ஞான சம்பந்தரால் நிறுவப்பெற்றது தருமபுர ஆதீனம். 16-ஆம் நூற்றாண்டின் இடைக் காலத்தில் சுமார் 1560-இல் தருமபுர ஆதீனம் நிறுவப்பெற்றது.

மச்சுச் செட்டியாருக்கும் குரு ஞான சம்பந்தருக்கும் இடையே எழுவர் உளர். சீகாழியில் தோன்றிய சீகாழிக்கங்கை மெய்கண்டார் மச்சுச் செட்டியாரின் சீடர் ஆவார். இவருக்குப் பின் வருபவர் சிற்றம்பல நாடிகள் ஆவார். இவர் மிகப்பெரிய சித்தர். இவருக்கு 63 சீடர்கள். 64 பேரும் ஒரே சமயத்தில் முத்தி அடைந்தார்கள். இவர்கள் துகளறு போதம், திருப்புன்முறுவல், செல்காலத் திரங்கல், நிகழ்காலத்திரங்கல், வருங் காலத்திரங்கல் ஆகிய ஐந்து நூல்களை வெளியிட்டருளினர்.

சிற்றம்பல நாடிகளின் மாணாக்கர் காழிப் பழுதை கட்டிய சம்பந்த முனிவர் ஆவார். இவர் பாடியருளிய நூல்கள் சிவானந்த மாலை, சிற்றம்பல நாடிகள் வெண்பா, சிற்றம்பல நாடிகள் தாலாட்டு என மூன்று. சிவானந்த மாலையில் சுவையான ஒரு பாடல், மெய்த்தேசிகன் (உண்மைக்குரு) பொய்த்தேசிகன் யார் என்பதற்கு இலக்கணம் வகுப்பது. ''மந்திரப் பேய் புத்தகப் பேய் வாசனைப் பேய் பூசனைப் பேய் தந்திரப் பேய் பாவகப் பேய் தர்க்கப் பேய் - சிந்தையின்னாறு ஆர்த்த விரதப்பேய் அனைத்துமொரு வார்த்தையிலே தீர்த்தவனே மெய்த்தேசிகன்''.

இவரது மாணாக்கர் சிவபுரம் ஞானப்பிரகாசர்.

சிவபுரம் தத்துவப் பிரகாசர்.

திருவாரூர் செட்டித்தெரு பழுதை கட்டி ஞானப்பிரகாசர்.

கமலைஞானப்பிரகாசர் (மகனார் மாணாக்கர்)

கமலை ஞானப்பிரகாசர் மாணாக்கர் பலருள் சிறந்தோர் இருவர். ஒருவர் குரு ஞானசம்பந்தர், தருமபுர ஆதீனத்தை நிறுவியவர்.

இன்னொருவர் நிரம்ப அழகிய தேசிகர். துழாவூர் ஆதீனத்தை நிறுவி யவர். கமலை ஞானப்பிரகாசர் சிறப் பான சாத்திரச் சிறு நூல்கள் பல வற்றையும் சிறந்த தலபுராணங்கள் இரண்டையும் செய்திருக்கிறார். சைவானுட்டான அகவல், புட்ப விதி பூமாலை, சிவபூசை அகவல், பிரசாத மாலை, அத்துவித சாரம் என்பன சாத்திர நூல்கள். தியாகராயர் கழிநெடில் என்பது தோத்திர நூல். சாதி நூல் என்பது சாதிகளைப் பற்றிக் கூறுவது. இவர் இயற்றிய சிறப்பான தலபுராணங்கள் திருமழுவாடிப்புராணம், தந்திவனப் புராணம் என்பனவாம்.

மெய்கண்டார்
|
அருணந்திசிவம்
|
மறைஞான சம்பந்தர்
|
அருள் நமச்சிவாயர்
[மச்சுச்செட்டியார்]
|
உமாபதி சிவம்
|
காழிக்கங்கை மெய்கண்டார்
|
காழிப்பழுதை கட்டிச்சிற்றம்பல
நாடி பண்டாரம் முதலியோர்
|
சிவபுரம் தத்துவப்பிரகாச பண்டாரம்
|
திருவாரூர் செட்டித்தெரு
பழுதைக்கட்டி ஞானப் பிரகாசம்
|
சிதம்பரநாத மாசிலாமணிக் கமலை
ஞானப்பிரகாச பண்டாரம்
|
குரு ஞானசம்பந்தர்

தருமபுர ஆதீன நிறுவனர் முதல் குரு மகா சந்நிதானம் குரு ஞான சம்பந்தர் (1550 - 75)

கமலை ஞானப்பிரகாசரின் சீடர் குரு ஞான சம்பந்தர் தருமபுர ஆதீனத்தை நிறுவினார். குருஞான சம்பந்தர் எட்டு அருள் நூல்களை அருளினார். அவை: சொக்கநாதக் கலித்துறை, சொக்கநாத வெண்பா, சிவபோகசாரம், பண்டாரக் கலித்துறை என்னும் ஞானப் பிரகாச மாலை, நவரத்தினமாலை, சோடசகலாப் பிரசாத சட்கம், திரிபதார்த்த ரூபாதி தசகாரிய அகவல், முத்தி நிச்சயம் - இவ்வெட்டும் குருஞானசம்பந்தர் அட்டகம் என வழங்கப்பெறும். பரபரக்க வேண்டாம் என்ற பாடலும் ஆசை அறாய் பாசம் விடாய் என்ற பாடலும் கருத்து வளம் மிக்க சுவையான பாடல்கள்.

''பரபரக்க வேண்டாம் பலகாலுஞ் சொன்னேன்
வரவரக் கண்டாராய் மனமே - ஒருவருக்கும்
தீங்கு நினையாதே செய்ந்நன்றி குன்றாதே
ஏங்கி இளையாதிரு''
(சிவபோக சாரம் - 132)

''ஆசை அறாய் பாசம் விடாய் ஆன சிவபூசை பண்ணாய்
நேசமுடன் ஐந்தெழுத்தை நீ நினையாய் சீசீ
சினமே தவிராய் திருமுறைகள் ஓதாய்
மனமே உனக்கென்ன வாய்''
(சிவபோக - 138)

இரண்டாம் குரு மகா சந்நிதானம் ஸ்ரீல்ஸ்ரீ ஆனந்த பரவச தேசிகர்

மிகவும் அதி தீவிர பக்குவியாகத் திகழ்ந்த ஆனந்த பரவசர் குரு மகா சந்நிதானமாக ஞானபீடம் ஏறிய அன்றே திருவருள் ஞானமேலீட்டால் இருவினை யொப்பும் மலபரிபாகமும், சத்தி நிபாதமும் வாய்க்கப் பெற்றவராகி நிட்டை கூடி முத்திப்பேறு அடைந்தார்.

மூன்றாம் குரு மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சச்சிதானந்த தேசிகர்

சச்சிதானந்த தேசிகருக்குப் போதிய பக்குவம் வரவில்லை - குரு ஞான சம்பந்தர் ஜீவசமாதியினின்று வெளிப் போந்து சச்சிதானந்தருக்கு அருள் செய்து ஞான நோக்கை உருத்துச் செலுத்த சச்சிதானந்தருக்குப் போதிய பக்குவம் விளைந்தது. குரு மரபு வளர்ந்தது.

நான்காம் குரு மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிகர்

தமிழ் இலக்கிய உலகிலும், சைவ உலகிலும் புகழ்பெற்ற குமரகுருபர சுவாமிகளை ஆட்கொண்டவர்கள். குமர குருபரர் இவர்களிடம் வந்து மாணாக்க ராகி இவர்களது கட்டளைப்படி காசிக்குச் சென்று குமாரசாமி மடத்தை நிறுவினார். பின்னாளில் அதன் கிளை யாகத் திருப்பனந்தாளில் காசிமடம் நிறுவப்பெற்றது. அது தருமபுரத்தின் சீட மடமாக விளங்கி வருகிறது.

ஐந்தாம் குரு மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஞான சம்பந்த தேசிகர்

இவர்கள் விரிவாகத் தென்னாட்டு யாத்திரை செய்தார்கள். அவ்வமயம் குற்றால அருவியில் அளவுக்குமீறி மிக அதிகமாக நீர்வீழ்ச்சியும் நீரோட்டமும் ஏற்படவே மக்களின் வேண்டுகோளுக் கிணங்க நீர்வீழ்ச்சியைத் தம் தவ ஆற்ற லால் கட்டுப்படுத்தியருளினார்கள். இவர்கள் காலத்தில் மாளவ குமாரசாமி முதலியார் பாபநாசம், சிவசைலம் முதலிய இடங்களில் 96 மடங்களைக் கட்டித் தருமபுர ஆதீனத்திற்கு அளித்த தாகக் கல்வெட்டு ஒன்று உள்ளது.

ஆறாம் குரு மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ திருஞானசம்பந்த தேசிகர்

இவர்கள் காலத்தில் பதினா றொடுக்கம் சிறந்து விளங்கியது.

வேள்விமலையில் முருகனை வழிபட்ட போது வள்ளியம்மையின் திருவுரு கண்ணுக்கு இலக்காகாமையில் ''இங்கு வள்ளித்தாய் இல்லையோ'' என்றாராக. வள்ளியம்மை ''இதோ இருக்கிறேன்'' என்று திருமேனி வளைந்து காட்சி அருளினார்.

ஏழாம் குரு மகா சந்நிதானம்

இவர்கள் காலத்தில் தஞ்சாவூரை ஆண்ட மன்னன் தருமபுரம் ஞானபுரீசு வரர் கோயிலை அமைச்சர் ஒருவரின் துர்ப்போதனையால் இடிக்கச் சொல்லி விட்டான். இதனையறிந்த திருவம்பல தேசிகர்.

''தேசம் சிவாலயங்கள் சேர வலைய ஒரு
மோசம் வந்ததையோ முதல்வனே தேசத்து
மன்னை வெறுப்பேனோ வருவினையை
ஊட்டுவிக்கும்
உன்னை வெறுப்பேனோ உரை''

என்ற சிவபோகசாரப் பாடலைப் பாடி னார். கடப்பாரை பட்ட இடமெல்லாம் கல்லிலிருந்து இரத்தம் பீறிட்டது. ஏவலாளர்கள் மூர்ச்சையடைந்தனர். மன்னன் குருமூர்த்திகளிடம் ஓடிச் சென்று மன்னிப்பு கேட்டான். குருமூர்த்திகள் திருநீற்றைத் தெளிக்க இரத்தம் பீறிடுவது நின்றது. ஏவலாளர்கள் மூர்ச்சை தெளிந்து எழுந்தனர். இந்நிகழ்ச்சிகள் இன்றும் பொருந்தும் அல்லவா?

எட்டாம் குரு மகா சந்நிதானம்
அழகிய திருச்சிற்றம்பல தேசிகர்

ஒன்பதாம் குரு மகா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ திருநாவுக்கரசு தேசிகர்

இவர் சித்தாந்த நிச்சயம் என்றொரு நூல் செய்தருளினார்.

தருமையாதீனப் பூம்பொழிலில் பூனைகளும் கிளிகளும் பாம்புகளும் எலிகளும் குயில்களும் செம்போத்து களும் ஒன்றோடொன்று சண்டையிட்டுக் கொண்டிருப்பதை கண்ட இவர் அவற்றின் மீது திருக்கடைக்கண் சாத்த அவை ஞானம் பெற்றுப் பகைமை நீங்கி உறவாடின.

பத்தாம் குரு மகா சந்நிதானம்

ஒருநாள் சித்தர் ஒருவர் வான்வழியே செல்ல ஆதீனத்திற்கு நேர்மேலே வரும் பொழுது தடைப்பட கீழ்நோக்கினார். ஆதீன முற்றத்தில் நிலா விழுவதைக் கண்ட குருமூர்த்திகள் சுட்டு விரலால் வாவென்று அழைத்தார்கள். சித்தர் இறங்கி வணங்கினார். இவர்கள் 1) காசி துண்டிராஜ கணபதி திருவருட்பா, 2) காசிவிசுவநாதர் திருவருட்பா, 3) காசி கேதார நாதர் திருவருட்பா, 4) காசி விருத்த காளேச்சுரர் திருவருட்பா, 5) காசி கால வைரவர் திருவருட்பா, 6) காசி கேதார கௌரி திருவருட்பா, 7) காசி அன்னபூரணி திருவருட்பா, 8) காசி கேதார கௌரி திருவருட்பா, 9) காசி பாகீரதியம்மை திருவருட்பா, 10) காசி கதிர்காமவேலர் திருவருட்பா எனப் பத்து தோத்திர சிறுநூல்களைப் பாடியுள்ளார்.

பதினொன்றாம் குரு மகா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சச்சிதானந்த தேசிகர்

சில வஞ்சகர்கள் நஞ்சு கலந்த பாலை இவருக்கு அளிக்க அதனையுண்டு இவர் ஊறு ஏதும் இல்லாமல் நலத்துடன் இருக்க அவர்களையும் திருத்தியருளி னார்கள்.

பனிரண்டாம் குரு மகா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமார தேசிகர்

பதின்மூன்றாம் குரு மகா சந்நி தானம்
ஸ்ரீலஸ்ரீ ஞான சம்பந்த தேசிகர்

பதினான்காம் குரு மகா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ கந்தப்ப தேசிகர்

பதினைந்தாம் குரு மகா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிகர்

பதினாறாம் குரு மகா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சச்சிதானந்த தேசிகர்

**பதினேழாம் குரு மகா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ மாணிக்கவாசக தேசிகர்**

**இருபதாம் குரு மகா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சிவஞானதேசிகர்**

**இருபத்தொன்றாம் குரு மகா சந்நி தானம்
ஸ்ரீலஸ்ரீ சச்சிதானந்த தேசிகர்**

**இருபத்திரண்டாம் குரு மகா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ மாணிக்கவாசக தேசிகர்**

இவர்கள் காலத்தில் திருப்பணிகளும் குடநீராட்டு விழாவும் பல செய்யப் பெற்றன.

**இருபத்துமூன்றாம் குரு மகா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர்
(30.10.1923 - 26.6.1933)**

இவர்கள் நாடு முழுவதும் விரிவாக யாத்திரை செய்தார்கள். கும்பகோணம் மகாமகம் காலத்தில் சைவ சித்தாந்த மாநாடு ஒன்று கூட்டப்பெற்றது. ஆதீன வித்துவான்களாக ப. அ.முத்துத்தாண்டவராய பிள்ளை, அவர் மகனார் ப.மு. சோமசுந்தரம் பிள்ளை, காழி சிவ கண்ணுசாமி பிள்ளை ஆகியோர் நியமிக்கப் பெற்றுச் சிறந்த நூற் பணிகளைச் செய்தனர்.

**இருபத்து நான்காம் குரு மகா சந்நிதானம்
சண்முக தேசிகர்
(26.6.1933 - 20.5.1945)**

இவர்களது ஆட்சிக்காலம் ஆதீன வரலாற்றில் குறிப்பிடத்தக்க பெருஞ் சிறப்புடையது. வளர்ச்சி மிகுதி. *1940*-இல் இருபது மொழிகளில் பத்தாயிரம் அரிய நூல்களைக் கொண்ட பெரிய நூல் நிலையம் இவர்களால் நிறுவப்பெற்றது. *1941*-ஆம் ஆண்டு ஒரு பொன்னான ஆண்டு, அவ்வாண்டில் வேத சிவாகம பாடசாலை, தேவார பாட சாலை, குரு ஞானசம்பந்தர் தொடக்கப் பள்ளி, ஞான சம்பந்தம் பதிப்பகம் (அச்சகம்) ஞான சம்பந்தம் திங்களிதழ் ஆகியவை தொடங்கப் பெற்றன. இத் தொடக்கங்களுக்குபின் ஆதீனப் பணிகள் மிகவும் விரியலாயின. அதே ஆண்டில் மெய்கண்டான் சித்தாந்த மாநாடு நான்கு நாள் மாநாடாக மிகச் சிறப்பாக நடத்தப்பெற்றது. அப்படி ஒரு மாநாடு அதற்கு முன்னும் நடந்ததில்லை. அதற்குப் பின்னும் நடந்ததில்லை.

**இருபத்துஐந்தாம் குரு மகா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி
சுப்பிரமணிய தேசிக
ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
(20.5.1945 - 10.11.1971)**

*24*ஆம் சந்நிதானத்தின் ஆட்சிக் காலமும் இவர்களது ஆட்சிக்காலமும் ஆதீன வரலாற்றில் பொற்காலம் என்றால் இவர்களது ஆட்சிக்காலம் பொற் காலத்திலும் பொற்காலம். இவர்கள் காலத்தில் ஆதீனக் கோயில்கள் 27க்கும் பல கோடி ரூபாய் செலவில் திருப்பணி செய்து குடநீராட்டுக் கண்டுள்ளார்கள். ஆதீனத்தில் தமிழ்க் கல்லூரி ஒன்றை *2-8-1946*-இல் நிறுவியருளினார்கள். பன்னிரு திருமுறைகளுக்கும் உரை வரைந்து வெளியிடும் திட்டத்தைத் தொடங்கி ஒன்பது திருமுறைகளுக்கு அறிஞர்களைக் கொண்டு உரை வரைந்து வெளியிட்டார்கள். *(1953 - 1969)* ஆண்டு தோறும் குரு பூசையின் போது திரு நெறிய தெய்வத்தமிழ் மாநாடுகளைக் கூட்டினார்கள். சென்னையில் கிளை மடம் இல்லாத குறையைப் போக்க சமயப் பிரச்சார நிலையம் எனப் பெரிய கட்டிடத்தைப் புதிதாகக் கட்டி அமைத்தார்கள். நூல் வெளியீட்டுத் திறத்தில் இவர்கள் காலத்தில் மட்டும் 562 நூல்கள் அச்சிட்டு வெளியாயின.

பாடல் பெற்ற தலங்கள், வடநாட்டுத் திருத்தலங்கள் என பலமுறை சென்று தரிசித்தார்கள். காசிக்கு ஒன்பது முறை சென்று தரிசித்தார்கள். எல்லா யாத்திரை

யிலும் பெரிய யாத்திரையாக அமைந்தது திருக்கயிலாய யாத்திரை.

இருபத்து ஆறாவது குரு மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பராமாசாரிய சுவாமிகள் (10-11-1971- தற்பொழுது அருளாட்சி செய்து வரல்)

ஆதீன நிர்வாகப்பணிகள், கோயில் திருப்பணிகள், குடநீராட்டுகள் இவற்றைப் போன்ற வழக்கமான பணிகளோடு புதிய பெரும் பணிகள் பலவற்றையும் தொடங்கிச் செய்து வருகிறார்கள்.

ஸ்ரீலஸ்ரீ குரு மகா சந்நிதானமவர்கள், 1963-இல் தம்பிரான் சுவாமிகளாக இருக்கும் காலத்தில் திருவாமூரில் அப்பர் பெருமானுக்குத் திருக்கோயில் கட்டினார்கள். 1968-இல் அப்பர் குருபூசை விழாவிற்காக சென்னையிலிருந்து 81 கார்களில் ஊர்வலமாகத் திருவாமூர் சென்றார்கள்.1969-இல் பாத யாத்திரை, மீண்டும் 1970-இல் 81 பேர் யாத்திரை, ஆண்டுதோறும் அப்பர் குரு பூசைவிழா தொடர்ந்து நடைபெற்று வருகிறது. மாதந்தோறும் சதய நாளில் மாத விழாவும் திருமுறைத் தொடர் சொற்பொழிவும் பல ஆண்டுகளாக விடாமல் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. திருவாமூரில் அப்பர் குரு பூசை விழாவில் சிறந்த ஓதுவார் ஒருவருக்குத் திருமுறைக் கலாநிதி பட்டமும், பொற்கிழியும் வழங்கப்படுகிறது. இதுவரை 40 ஓதுவாமூர்த்திகள் திருமுறைக் கலாநிதி பட்டம் பெற்றிருக்கிறார்கள். 2000 ஆம் ஆண்டில் திருவாமூரில் அப்பர் சுவாமிகள் தேவார பாடசாலை தொடங்கப்பட்டது.

உலகளாவிய நிலையில் சைவ சித்தாந்தத்தைப் பரப்பும் பணிக்காக அனைத்துலக சைவ சித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம் 1984-இல் தருமபுர ஆதீனத்தில் தொடங்கப் பெற்றது. தொடக்க மூலதனம் இருபது இலட்சம் ரூபாய். முதலாம் அனைத்துலக சைவ சித்தாந்தக் கருத்தரங்கம் பாரதிதாசன் பல்கலைக் கழகத்துடன் இணைந்து 1984 மே 11, 12, 13 தேதிகளில் தருமபுர ஆதீனத்தில் நடத்தப் பெற்றது. இரண்டாம் அனைத்துலக சைவ சித்தாந்தக் கருத்தரங்கு மலேசியா கோலாலம்பூரில் 1986-இல் நவம்பர் 14, 15, 16 தேதிகளில் நடைபெற்றது. அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனமும் தமிழ்நாடு தத்துவக் கழகமும் இணைந்து 1987-இல் டிசம்பர் 19.20 தேதிகளில் பல்வகைச் சமயம் என்றதொரு கருத்தரங்கைத் தருமபுர ஆதீனத்திலேயே நடத்தின. இவ்வாறு பல்வேறு கருத்தரங்குகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. ஆங்கிலத் திலும் தமிழிலும் சைவசித்தாந்த நூல்கள் பல ஆய்வுமுறையில் எழுதப்பெற்று வெளிவருகின்றன.

அனைத்துலக சைவ சித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம் சைவ சித்தாந்த மாலை நேரக் கல்லூரியை 1987 - 88-கல்வியாண்டில் தொடங்கிற்று. மயிலாடுதுறை, திருச்சிராப்பள்ளி, சிதம்பரம், மதுரை, சென்னை ஆகிய ஏழு இடங்களில் ஆதீனம் கிளை மடங்களிலும் காரைக்காலில் ஒரு பள்ளியிலும் பாளையங்கோட்டையில் சைவ சபையிலும் வகுப்புகள் நடைபெற்றன.

பன்னிரு திருமுறைகளையும் உரையுடன் பதினாறு பகுதிகளாக (புத்தகங்களாக) பதினேழாயிரம் பக்கங்களுக்கு மேலாக வெளியிடும் திட்டம் தொடங்கி நிறைவு பெற்று வருகிறது. பன்னிரண்டாம் திருமுறை வெளிவரவேண்டும்.

ஆதீனப்பணிகள்

மிகப்பெரிய ஆதீனத்தின் நிர்வாகம், கிளைமடங்களின் நிர்வாகம், 27 பெருங் கோயில்களின் நிர்வாகம், திருப்பணிகள்,

வேதசிவாகம பாடசாலை, தேவார பாடசாலை, கல்லூரி, உயர்நிலைப்பள்ளி முதலிய கல்வி நிலையங்கள் அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம். சைவ சித்தாந்தக் கோடை கால வகுப்புகள், நூல் வெளியீடு, இதழ் வெளியீடு என்று ஆதீனப்பணிகள் சிறப்புற நிகழ்ந்து வருகின்றன. கோயில் திருப்பணிகள் பல நடந்து கொண்டு உள்ளன. ஆதீன நுழைவாயிலுக்கு எதிரே கல்லூரிக்கு மிகப்பெரிய கட்டிடம் கட்டப்பட்டு நிறைவு பெற்றுள்ளது. பணிகள் வளர்ந்தோங்கி வருகின்றன.





3. ஸ்ரீ காசித் திருமடம், திருப்பனந்தாள்

பிரபந்த வேந்தர் குமரகுருபர சுவாமிகளால் காசியில் குமாரசாமி மடம் நிறுவப் பெற்றது. நேபாளத்திலும் கிளை மடம் இருந்தது. குமர குருபரர்க்குப் பின் அவரது சீட பரம்பரையில் திருப்பனந் தாளில் காசி மடம் நிறுவப் பெற்றது.

குமர குருபரரின் காலம் பதினேழாம் நூற்றாண்டு. *24.06.1625*-இல் பிறந்தார் என்றும் 8.5.1688-இல் முத்திப் பெற்றார் என்றும் காசி மடத்தார் கணித்துள்ளனர். குமர குருபரரின் தனிச்சிறப்பு, அவர் சைவ உலகில் மட்டுமின்றித் தமிழ் இலக்கிய உலகிலும் பெரியதோர் இடத்தைப் பெற்றுப் பேரோடும் பெரும் புகழோடும் விளங்குவதே. தமிழ்



இலக்கிய உலகில், இவ்வளவு பேரும் புகழும் பெற்ற சைவத் துறவி, சைவ மடாதிபதி, இவரைத் தவிர வேறு யாரும் இல்லை. ஆத்திகர் காந்தியடிகள் குமர குருபரரின் தத்துவத்தில் கட்டுண்டார் எனின் நாத்திகர் பாரதி தாசன் குமரகுரு பரரின் தமிழில் கட்டுண்டார்.

குமர குருபரர் பிறந்த ஊர் திருநெல்வேலி மாவட்டத்தில் ஸ்ரீவை குண்டம் நகரத்தின் ஒரு பகுதியாகிய கயிலாசபுரம். பிறந்ததிலிருந்து வாய் பேசாது இருந்த குமரகுருபரர்க்குச் செந்திலாண்டவன் காட்சி கொடுத்து ''பாடுக'' என்று அருள் புரிந்தார். மௌனம் கலைந்த குமரகுருபரர் ''பூமேவு செங்கமலப் புத்தேளும்'' என்று கந்தர் கலிவெண்பா பாடத் தொடங்கி னார். மதுரையில் திருமலை நாயக்கர் அரசவையில் மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழை அரங்கேற்றம் செய்கையில் மீனாட்சியம்மையே மன்னரின் கழுத்தில் இருந்து முத்துமாலையைக் கழற்றி குமரகுருபரரின் கழுத்தில் அணிவித்தார். குமர குருபரர் மதுரையிலேயே தங்கி நீதிநெறி விளக்கம் பாடியருளினார்.

அதன்பின் குமரகுருபரர் தலயாத்திரை செய்யலானார். தருமையாதீனத்தில் நான்

காம் பட்டம் குரு மகா சந்நிதானமாக ஸ்ரீலஸ்ரீ மாசிலமாணி தேசிக ஞான சம்பந்த சுவாமிகள் எழுந்தருளியிருந் தார்கள். ஸ்ரீ சுவாமிகளைத் தரிசித்த குமர குருபரரிடம் சுவாமிகள் ''ஐந்து பேரறி வும் கண்களே கொள்ள'' என்ற பாட லுக்கு விளக்கம் கேட்க குமர குருபரர் பேச்சற்று நிற்க அன்று முதல் அவர் தம் சீடர் ஆனார். வைத்தீஸ்வரன் கோயிலில் முத்துக்குமாரசாமிப் பிள்ளைத்தமிழும், சிதம்பரத்தில் சிதம்பர மும்மணிக் கோவை, சிதம்பரச் செய்யுட்கோவையும் பாடியருளினார். மீண்டும் தருமை வந்து பண்டாரமும் மணிக்கோவை பாடினார்.

பின்னர் குமரகுருபரர் காசி சென்றார். டில்லி அரசன் கூட்டிய சர்வ சமய மாநாட்டிற்குச் சிங்கம் ஒன்றின் மேல் ஏறிச் சென்றார். மாநாட்டில் குமரகுருபரர் இந்தியில் பேசினார். குமரகுருபரரின் அலை வடநாடெங்கும் வீசிற்று. மன்ன னும் மகிழ்ந்து குமர குருபரர் காசியில் மடம் கட்ட இடமும், பொருளும் கொடுத்தான். அங்கேயே குமரகுருபரர் அருளாட்சி செய்து 8.5.1688 அன்று சிவத்துடன் கலந்தார். இவர் எழுதிய பிறநூல்கள்; கயிலைக் கலம்பகம், திருவாரூர் நான்மணிமாலை, சகலகலா வல்லிமாலை, காசிக்கலம்பகம்.

2. சொக்கநாத சுவாமிகள்

3. அருணாசல சுவாமிகள்

4. அம்பலவாண சுவாமிகள்

5. சடையப்ப சுவாமிகள்

6. தில்லை நாயக சுவாமிகள்

காசியில் குமாரசாமி மடம் மிகப் பெரிய வளர்ச்சியை பெற்றிருந்தது. காசி யாத்திரை செய்யும் தமிழர்களுக்குக் காசியில் குமாரசாமி மடமே தாயகமாக இருந்தது. சாதாரணப் பொதுமக்களன்றி மிராசுதார்களும் ஜமீன்தார்களும் சுதேச சமஸ்தான மன்னர்களும் கூடக் காசிக்குச் சென்றபோது குமாரசாமி மடத்திலேயே தங்கினார்கள். குமாரசாமி மடம் அன்ன தானத்தில் சிறந்து விளங்கியது.

6-ஆம் பட்டம் தில்லை நாயக சுவாமி கள் காலத்தில் தஞ்சாவூர் சரபோஜி மன்னர் காசியில் அன்னதானம் செய் வதற்காகச் சில கிராமங்களை மானிய மாக அளித்தார். மன்னர் அளித்த இரு கிராமங்களுக்கிடையில் திருப்பனந்தாள் அமைந்திருப்பதைச் சுவாமிகள் கண்டார். 1720 -இல் திருப்பனந்தாளில் காசி மடத்தை நிறுவினார்.

7. குமரகுருபர சுவாமிகள்

8. சிதம்பரநாத சுவாமிகள்

9. சடையப்ப சுவாமிகள்

10. கணபதி சுவாமிகள்

11. இராமலிங்க சுவாமிகள்

12. சொக்கலிங்க சுவாமிகள்

13. கணபதி சுவாமிகள்

14. இராமலிங்க சுவாமிகள் (1853 - 1880)

15. பொன்னம்பலத்தம்பிரான் சுவாமி கள் (1894 - 1898)

16. சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் (1898 - 1944)

17. சொக்கலிங்க சுவாமிகள் (1914 - 1918)

18. சொக்கலிங்க சுவாமிகள் (1918 - 1930)

நாள்தோறும் சமய போதனை வகுப்புகள் நடத்தி வந்தார்கள். 1924-இல் கொள்ளிடத்தில் வெள்ளம் வந்த பொழுது அணைக்கரைப் பகுதி மக்கள் அனைவர்க்கும் அன்னதானம் செய் தார்கள்.

குமரகுருபர சுவாமிகள் காசியில் குமாரசாமி மடத்தை நிறுவிய காலம் முதல் பொற்காலம் ஆகும். அதிபர்

தில்லைநாயக சுவாமிகள் திருப்பனந் தாளில் காசி மடத்தை நிறுவிய காலம் இரண்டாம் பொற்காலம். 14ஆம் அதிபர் இராமலிங்க சுவாமிகள் இப்போதுள்ள பிரதான கட்டடத்தைக் கட்டப் பல்வேறு அபிவிருத்திகளைச் செய்த காலம் மூன்றாம் பொற்காலம். 19-ஆம் அதிபர் சாமிநாத சுவாமிகள் காலமும் 20-ஆம் அதிபர் அருள் நந்தி சுவாமிகள் காலமும் நான்காம் பொற்காலம். 21-ஆம் அதிபர் கயிலை மாமுனிவர் காசிவாசி முத்துக்குமார சாமித் தம்பிரான் சுவாமிகளின் தற்கால ஆட்சி இன்றைய பொற்காலம் என்கிறார் ஊரன் அடிகள்.

சாமிநாத சுவாமிகளின் முதற்சிறப்பு, அவர் கொட்டையூர் சிவக் கொழுந்து தேசிகர் பரம்பரையில் பிறந்தவர் என்பது. 19-ஆம் நூற்றாண்டில் பிறந்த கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் கோடீச்சுரக் கோவை, தஞ்சைப் பெரு வுடையார் உலா, சரபேந்திர பூபாலக் குறவஞ்சி, திருப்பெருமண நல்லூருக்கு ஒரு புராணம், திருவிடை மருதூருக்கு ஒரு புராணம் ஆகிய நூல்களை இயற்றினார். 1834-இல் திருவாசகம் முதற்பதிப்பை அச்சிட்டு வெளி யிட்டவர்.

இவரது பரம்பரையில் வந்தவர் காசி வாசி சுவாமிநாத சுவாமிகள். சுவாமிகள் 6. 7. 1893 அன்று தோன்றியருளினார்கள்.

திருப்பனந்தாள் காசி மடத்தின் அதிபர்கள் அறக்கட்டளை நிறுவுவதில் மன்னர்கள். அறக்கட்டளைப் பத்திரங் களின் அமைப்பும் வாசகங்களுமே ஓர் இலக்கியம். இவ்வளவு அறக்கட்டளை களை, இப்பேர்ப்பட்ட அறக்கட்டளை களை வேறு எந்த ஓர் அறநிலையமும் நிறுவவில்லை.

சென்னைப் பல்கலைக் கழகத் தனித் தமிழ் வித்துவான் தேர்வில் ஆண்டு தோறும் முதல் வகுப்பில் முதல்வராகத் தேர்ச்சி பெறுபவருக்கு ஆயிரம் ரூபாய் பரிசளிக்க ஓர் அறக்கட்டளையை நிறுவி னார்கள். ரூ. 40,000க்கு ஆயுள் காப்பீடு மூலம் 1928-இல் நிறுவினார்கள். அக் காலத்தில் ஆயிரம் இன்று இலட்சத் திற்குச் சமம். இன்றளவும் ஆயிரம் ரூபாய் பரிசளிப்பு நிகழ்ந்து வருகிறது.

சிதம்பரம் அண்ணாமலைப் பல் கலைக்கழகத்திற்கு 118 ஏக்கர் நிலம் எழுதி வைத்து தமிழ்நூல் வெளியீட்டுக்கு ஓர் அறக்கட்டளையைச் சாமிநாத சுவாமிகள் 1940 இல் நிறுவினார்கள். அறக்கட்டளை விதிகளின்படி நூலை அடக்க விலையில் நான்கில் ஒரு பங்குக்கு, எட்டில் ஒரு பங்கு விலைக்கு விற்க வேண்டும். லைப்ரரி எடிஷன் களாக, நல்ல உயர்ந்த காகிதத்தில் ராயல் சைஸில் வால்யூம் ஒன்றுக்கு 750 பக்கங்களுக்குக் குறையாமல் நல்ல உயர்ந்த பைண்டு செய்து வெளியிட வேண்டும். இப்படி ஓர் அறக்கட்டளை இதற்கு முன்பு தோன்றியதில்லை. இதற்குப் பின்னும் தோன்றியதில்லை. இவ்வறக்கட்டளைப் பத்திரம் தமிழ் வரலாற்றில் பொன்னேட்டில் வைர வரிகளில் பதிக்கத் தக்கது.

இன்னின்ன நூல்கள் வெளியிடப்பட வேண்டும் என்ற பட்டியலில் 249 நூல்கள் இடம் பெற்றுள்ளன. சைவ நூல்கள் மட்டுமன்று. கம்பராமாயணமும், பாரத மும் சேர்ந்துள்ளன. சீறாப் புராணமும் தேம்பாவணியும் சேர்ந்து உள்ளன. இராமலிங்க சுவாமிகள் பாடநூல் சேர்ந்துள்ளது. இலக்கிய நூல்களே யன்றிக் கலை நூல்களும் சேர்க்கப் பட்டுள்ளன. ஆராய்ச்சித் தொகுதிகள், அகராதிகள், என்சைக்ளோ பீடியா என்ற அளவுக்கு நூற்பட்டியல் செல்கிறது. வேதாந்த நூல்களும் இடம் பெறு கின்றன.

சிவஞானபோதம் மூலமும் சிவஞான சுவாமிகள் சிற்றுரையும் ஔவை சு.

துரைசாமிப்பிள்ளை (1953), ஞானாமிர்தம் மூலமும் பழைய உரையும் (1954), பன்னிரு திருமுறை வரலாறு - முதற் பகுதி, க. வெள்ளைவாரணனார் (1969), திருவாசகம் - மூலம், நீ. கந்தசாமி பிள்ளைப் பதிப்பு (1964) போன்ற நூல்கள் இத்திட்டத்தின் கீழ் வெளி வந்தன. சிவஞானபோதச் சிற்றுரை 1 ரூபாய் 70 காசுக்கும், பன்னிரு திருமுறை வரலாறு (1135/60 பக்கங்கள்) 3 ரூபாய் 75 காசுக்கும் விற்கப்பட்டன. இவற்றை இன்று நினைத்தால் மலைப்பாக இருக்கிறது.

ஐயரவர்களின் நூற்பதிப்புகள் பல இவர்கள் கொடையால் வெளிவந்தன. எம்.ஆர். ஜம்புநாதனின் சாமவேதம், அதர்வண வேதம் சுவாமிகளின் பொருளுதவியால் வெளிவந்தன.

திருவரங்கத்தில் உயர்நிலைப் பள்ளிக்காக பங்களா உட்பட தோட்டம், அங்கிருந்த சொத்து முழுவதையும் சுவாமிகள் கொடுத்து விட்டார்.

சாமிநாத சுவாமிகள் அன்னதானத்திலும் சிறந்து விளங்கினார். குருபூஜை, மாகேஸ்வர பூஜையில் இன்ன இன்ன உணவு வகைகள், கறி வகைகள் , பழ வகைகள், இனிப்புகள் ஆகியவை படைக்கப்பட வேண்டும் என்பதைத் திட்டமிட்டுப் படைத்ததோடன்றி அவற்றைக் கல்வெட்டாகவும் பொறித்து வைத்துள்ளார்கள்.

20. ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள் நந்தித் தம்பிரான் சுவாமிகள்

3.09.1900 -இல் அம்பாசமுத்திரத்தில் பிறந்தார்கள். 26.03.1944-இல் அதிபராகப் பதவி ஏற்றார்கள். தமது 28 ஆண்டு அருளாட்சியில் 526 அறக்கட்டளைகளை ஒன்றரைக் கோடி ரூபாய் மதிப்பிற்கு நிறுவியுள்ளார்கள். காசி முதல் கன்னியாகுமரி வரை பல தலங்களில் அன்னதானம் செய்ய, காசிப் பல்கலைக் கழகத்தில் சைவ சித்தாந்தப் பேராசிரியரை நியமிக்க, கல்கத்தா, டில்லி, அலகாபாத், லக்னோ, ஆக்ரா, அலிகார் பல்கலைக்கழகங்களில் பரிசளிப்பு, பழுத்த தமிழ்ப்புலவர் காசியாத்திரை நிதி, ஓதுவார்கள், சிவாசார்யார்கள் காசிக்குச் சென்று சில காலம் தங்கி வர, சிதம்பரம், திருவண்ணாமலை, காஞ்சிபுரம், மதுரை, திருக்குற்றாலம், சுசீந்திரம், பாபநாசம், ஸ்ரீவைகுண்டம், இராமேஸ்வரம், திருக்காளத்தி, திருநாரையூர், கும்பகோணம், திருவதிகை, திருவெண்ணெய் நல்லூர், டில்லி ஆகிய தலங்களில் ஓதுவார்கள் நியமித்துத் திருமுறை ஓத, பல தலங்களில் 'சிவ சிவ' ஒளி வளர் விளக்குகள், பன்னிரு திருமுறை, சைவ சித்தாந்த நூல்கள், திருக்குறள், கந்தபுராணம், திருவிளையாடற்புராணம், நீதி நூல்கள் பதிப்பிக்க - இவ்வாறு பல்வேறு நிரந்தர அறக்கட்டளைகள் ஏற்படுத்தினார்கள்.

காசிவாசி அருணந்தி சுவாமிகள் காசியில் காசி இந்துப் பல்கலைக் கழகத்தில் சைவ சித்தாந்த பாடம் நடத்தவும் சொற்பொழிவாற்றவும் நிரந்தர அறக்கட்டளை நிறுவினார். கே. சிவராமன், டி. பி. சித்தலிங்கையா ஆகிய இரு பேறறிஞர்களும் காசிப் பல்கலைக் கழகத்தில் சைவ சித்தாந்தப் பேராசிரியர்களாக விளங்கினர்.

ஜி. சுப்பிரமணிய பிள்ளை, ஆர். இராமானுசாச்சாரி, ம. பாலசுப்பிரமணிய முதலியார், எஸ். சச்சிதானந்தம் பிள்ளை, கே. வச்சிரவேல் முதலியார், டி.எம்.பி. மகாதேவன், வ.ஆ. தேவசேனாபதி, என். முருகேச முதலியார், திருவாசகமணி கே. எம். பாலசுப்பிரமணியம் முதலிய பேறறிஞர்கள் காசி, அலகாபாத் பல்கலைக் கழகங்களில் ஆங்கிலத்தில் சைவசித்தாந்தச் சொற்பொழிவுகளாற்றினர். அவையெல்லாம் நூல்களாக வெளி வந்தன.

சிவஞான சித்தியார் சுபக்கம், கந்தர் கலிவெண்பா ஆகியவை தமிழ், இந்தி, ஆங்கிலம் என மும்மொழிப் பதிப்பாகக் காசி மடம் வெளியீடாக வெளி வந்துள்ளன. காசி மடம் அகில இந்திய மடம்; மும்மொழி மடம்; தேசிய ஒருமைப்பாட்டு மடம்.

பன்னிரு திருமுறைப் பதிப்பு நிதி என்றும் திருக்குறள் பதிப்பு நிதி என்றும் தனித்தனியாக நிதி வைப்பு வைத் திருக்கிறார்கள். பன்னிரு திருமுறை களும் பல பதிப்புகள் வெளிவந்துள்ளன. மூவர் தேவாரம் அடங்கன் முறை (தலைமுறை)ப் பதிப்பு ஒன்றும் ஓதுவார்களுக்கென வெளியிட்டுள்ளனர். திருக்குறள் உரைக் கொத்து, கிடைத் துள்ள அனைத்து உரைகளுடனும் ஆங்கில மொழி பெயர்ப்புடனும் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப் பால் என மூன்று தனித்தனி நூல்களாக வெளிவந்தன. கந்தபுராணம் மூலம், கந்தபுராண உரை நடை, திருவிளை யாடற்புராண உரைநடை வெளிவந்தன.

1945-இல் தமிழ்க் கல்லூரி தொடங்கி னார்கள். ஸ்ரீவைகுண்டத்தில் குமரகுரு பரன் சங்கம், குமரகுருபரன் கலைக் கல்லூரி (1960) முதலியன தோற்றுவிக்கப் பெற்றன. 1961-இல் திருப்பனந்தாளில் உயர்நிலைப்பள்ளி தொடங்கினார்கள்.

சுவாமிநாத சுவாமிகள் அறக்கட்டளை மன்னர் என்றால் அருணந்தி சுவாமிகள் அறக்கட்டளை மாமன்னர். 1972 மே 16-ஆம் நாள் அருணந்தி சுவாமிகள் காசி குமாரசாமி மடத்திலேயே சிவப்பேறு பெற்றார்கள்.

21. கயிலை மாமுனிவர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள்

இவர்கள் 22.3.1931-இல் கடலூர் மாவட்டம் திருக்கழிப்பாலைக்கு அருகில் உள்ள காரைமேடு என்னும் ஊரில் பிறந்தார்கள்.

அருள்நந்தி சுவாமிகள் நிறுவிய அறக்கட்டளைகளின் எண்ணிக்கை 526. அதன்பின் கயிலைமாமுனிவர் நாளது வரை நிறுவியுள்ள அறக்கட்டளை களையும் சேர்த்தால் 810.

நடுவில் நின்று போன ''குமர குருபரன்'' இதழை இவர்கள் 18.10.1978 -இல் ''குமரகுருபரர்'' என்ற பெயரில் மீண்டும் வெளியிட்டருளி னார்கள். பாடல் பெற்ற தலங்கள் 272-உம் தரிசித்து வந்துள்ளார்கள். 15.07.1982-இல் கயிலைக்காட்சியைக் கண்டார்கள். குமர குருபரர் 300-ஆம் நிறைவு விழாவை ஓராண்டுக்காலம் சிறப்பாகக் கொண்டாடினார்கள்.

கயிலை மாமுனிவர் மணிவிழா நாளில் (18, 19, 20, மார்ச் 1991) திருமுறைகள் 12, சித்தாந்த சாத்திரங்கள் 14, பெரிய புராணம், கந்த புராணம், திருவிளையாடற் புராணம் ஆகிய முப்பெரும் புராணங்கள், திருக்குறள் உரைக்கொத்து மூன்று புத்தகங்கள் ஆக 32-உம் இன்னும் இவற்றோடு சிலவும் சேர்த்து 263 ரூபாய் 50 காசுக்கு வழங்கினார்கள். இப்படி எல்லா நூல் களும் ஒன்றாகக் கிடைத்தது என்றுமே இல்லை.

1999-இல் காசியில் குமரகுருபரர் ஆய்வு மாநாடு (குமரகுருபரர் ஆய்வு மாலை 3 தொகுதிகள்) 2000-இல் பெரிய புராண ஆய்வு மாநாடு (2 தொகுதிகள் - 765 பக்கங்கள்) நடை பெற்றன. குமர குருபரர் ஆய்வுமாலை 2114 பக்கங்கள் கொண்டது. ஆண்டு தோறும் காசியில் திருமுறை மாநாடுகள் நடக்கின்றன. 2002 - திருஞானசம்பந்தர் (198 ஆய்வுக் கட்டுரைகள்); 2003 - திருநாவுக்கரசர் (24 கட்டுரைகள்); 2005 தமிழ் பக்தி மாநாடு - ரிஷிகேசம் (235 கட்டுரைகள்; சுந்தரர் (205 கட்டுரைகள்)

4. சூரியனார் கோயில் ஆதீனம்

சூரியனார் கோயில் என்ற ஊரில் உள்ளதால் சூரியனார் கோயில் ஆதீனம் எனப்பெயர் பெற்றது. ஏனைய ஆதீனங் களைப் போல இதுவும் திருக்கயிலாய பரம்பரைதான். சிவபெருமானிடம் நந்தியெம்பெருமான் உபதேசம் பெற்றதைப் போன்றே கந்தப் பெரு மானும் உபதேசம் பெற்றார். கந்தப் பெருமானின் உபதேச மரபில் ஸ்கந்த பரம்பரை என்று வழங்கப்பெறும். கந்தப்பெருமானிடம் வாமதேவ மகரிஷி உபதேசம் பெற்றார். அதனால் வாமதேவ சந்தானம் என்றும் வழங்கப் பெறும்.

திருவாவடுதுறை, தருமை முதலிய மற்ற ஆதீனங்கள் எல்லாம் திருக்கயிலாய பரம்பரையில் நந்திமரபு மெய்கண்ட சந்தானம். சூரியனார் கோயில் ஆதீனம் ஒன்று மட்டும் திருக்கயிலாய பரம் பரையில் ஸ்கந்த பரம்பரை, வாமதேவ சந்தானம்.

- ஸ்ரீ ஸ்கந்த ஸ்வாமி
- ஸ்ரீ வாமதேவ மகரிஷி
- நீலகண்ட சிவாசார்யர்
- விசுவேசுவர சிவாசார்யர்
- சதாசிவ சிவாசார்யர்
- சிவமார்க்கப் பிரகாச சிவாசார்யர்
- சிவாக்கிரயோகிகள்

1) ஸ்ரீ சிவாக்கிர யோகிகள் (ஸ்ரீ சிவக்கொழுந்து சிவாசார்யர்)

சூரியனார் கோயில் ஆதீன நிறுவனர்

சூரியனார் கோயில் தெற்கு வீதியில் சிறிய அளவில் ஒரு திருமடம் அமைத்துக் கொண்டு மாணவர்களுக்குப் பாடம் சொல்லுதல் முதலிய சைவப் பணிகளைச் செய்து வந்தார். இதுவே சூரியனார் கோயில் ஆதீனத்தின் தொடக்கம்.

2. ஸ்ரீ வீழிச் சிவாக்கிர யோகிகள்

இக்காலம் சூரியனார் கோயில் ஆதீனத்தின் பொற்காலம். வீழியார் சைவர் வீடுகளில் அன்னபிட்சை ஏற்றே வாழ்ந்தார். திருவீழிமிழலை தெற்கு வீதியில் ஒரு மடம் உருவாக்கி திருவீழி மிழலையிலும், சூரியனார் கோயிலிலு மாக இருந்து வந்தார்.

இவர்கள் செய்த வடமொழி நூல்கள் – 1) கிரியா தீபிகை, 2) சைவ சந்நியாச பத்ததி, 3) சிவஞானபோத சிவாக்கிர பாஷ்யம், 5) சைவபரிபாஷை, வட மொழி உரைகள் – 1) சர்வஞ் ஞானோத்தரம் – தமிழ் உரை 2) தேவி காலோத்தரம் – தமிழ் உரை – (3) சுருதி சூக்திமாலை, தமிழ் உரை, தமிழ் மூலநூல் – (1) சிவநெறிப்பிரகாசம். தமிழ் நூல் உரைகள் – (1) சிவஞானசித்தியார் – சுபக்க உரை, பரபக்க உரை.

சிவநெறிப் பிரகாசம் சைவசித்தாந்த நூல் ஆகும். 215 திரு விருத்தங்களைக் கொண்டது ஆகும்.

3. ஸ்ரீ நந்தி சிவாக்கிர யோகிகள்

சிவநெறிப்பிரகாசத்திற்கு விரிவுரை எழுதினார்.

4. ஸ்ரீ சிவக்கொழுந்து தேசிகர்

5. ஸ்ரீ சொக்கலிங்க தேசிகர்

இது இரண்டாம் பொற்காலம் ஆகும். இவர்கள் காலத்துக்கு முன் மடத்துக்குச் சொத்து இல்லை. எனவே, இவர்கள் பூர்வாசிரம குடும்ப சொத்தில் இவருக்குரிய பாகமான 16 வேலி நிலங்களை இவர்களது சகோதரர்கள் மடத்திற்கு எழுதிக் கொடுத்தனர். மேலும் மூன்று வேலி நன்செய் நிலமும் வாங்கி வைத்தனர்.

6. ஸ்ரீ சிதம்பரநாத தேசிகர்

7. ஸ்ரீ வைத்தியலிங்க தேசிகர்

8. ஸ்ரீ வைத்தியலிங்க தேசிகர்

9. ஸ்ரீ நமசிவாய தேசிகர்

பெரிதும் ஞான நாட்டமே உடையவர். தொல்லைகள் நிரம்பிய மன்னன் ஒருவன் வந்து கொண்டிருக்கையில் பூனை ஒன்று வழி மறித்து அவனைத் திருமடத்துக்கு அழைத்து வந்ததாம். மன்னன் தொல்லைகள் எல்லாம் நீங்கியதாம். அதனால் மன்னன் மடத்துக்குச் சொத்து எழுதி வைக்க விரும்பினான். சுவாமிகள் மறுத்துவிட, பூனைக்குட்டிகளுக்காவது ஆகட்டும் என்று சில நிலங்கள் எழுதி வைத்தானாம். அதற்குப் பூனைக்குட்டி மானியம் என்றே பெயர் ஏற்பட்டு விட்டது. பூனைக்குட்டிகளுக்கு இலை போட்டு நிவேதனம் நடைபெறுகின்ற அளவுக்கு வந்து விட்டது.

10. ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர்

11. ஸ்ரீ அம்பலவாண தேசிகர்

12. ஸ்ரீ மாணிக்க வாசக தேசிகர்

13. ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி தேசிகர்

சிவஞான மாபாடியம் உட்பட பல சைவ நூல்கள் கற்று ஆழ்ந்த புலமை மிக்கு இருந்தார். 1921-ஆம் ஆண்டில் இவர்கள் காலத்தில் சிவஞான மாபாடியம் முதன் முதலாக இலக்கணம் முத்துக் குமாரத் தம்பிரான் சுவாமிகளால் அச்சிட்டு வெளியிடப்பெற்றது. இவர்களாலும், தம்பிரானாலும், நூல் வெளியீடுகளாலும் சூரியனார் கோயில் ஆதீனத்தின் புகழ் நாடெங்கும் பரவியது.

யாழ்ப்பாணத்தில் பிறந்த இலக்கணம் முத்துக்குமாரத் தம்பிரான் சுவாமிகள் கிடைத்தற்கரிய நூல்கள் பல சேகரித்து வைத்திருந்தார். அவற்றையெல்லாம் சேகரித்து நூல் நிலையம் ஒன்று உருவாக்கி அதனைப் பேணப் பொருளும் வழங்கினார். இவர்கள் மாபாடியம் அச்சிட்டதே தனி வரலாறு ஆகும். ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரிடம் பெற்ற ஒரு மாபாடியப் பிரதியை நெருக்கடியான நிலையில் ஓர் அறையின் மறைவில் பழைய கால விளக்கின் உதவி கொண்டு அரிதின் முயன்று காகிதப்படி எடுத்து அதன் பின் அச்சிட்டு வெளியிட்டார். ஞானாவரணம் நூலை அச்சிட ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தார். அப்பணி முற்றுப் பெறுவதற்கு முன் தமது எழுபதாம் வயதில் 22.4.1949-இல் சிதம்பரத்தில் இறைவனடி சேர்ந்தார்.

14) ஸ்ரீ மீனாட்சி சுந்தர தேசிகர்
(பீடமேறிய ஆண்டு - 1918.
நீங்கிய ஆண்டு - 1947)

1896-இல் நெல்லை மாவட்டம் சேற்றூரில் பிறந்தார். கிரியாதிபீகை, சைவசந்நியாச பத்ததி, சிவநெறிப் பிரகாசம் ஆகிய மூன்றும் உரையுடன் இவர்களுக்கு மனப்பாடம். இவர்களது புகழ் கண்டு பொறுக்காத தியாகராசத் தம்பிரான் பெரும் கலகம் விளைவித்து இவர்களை வெளியேற்றி விட்டார். ஆதீனத்திற்குக் கெட்ட காலமான இந்நிகழ்வு நாட்டுக்கு நல்லகால மாயிற்று. தமிழ்நாடெங்கும் சென்று பல இடங்களில் தங்கி பன்னூற்றுக்கணக்கானவர்களுக்குச் சமய விசேட தீக்கைகள் செய்வித்தும், சிவபூசை எழுந்தருள் வித்தும் அருள்வதையே தம் வாழ்நாட் பணியாகக் கொண்டிருந்தார்கள். பழநி ஈசான சிவாசாரியரிடம் தீக்கை பெற்றதாகச் சொல்லிக் கொள்வதும், சூரியனார் கோயில் ஆதீனத்திடம் (இவர்களிடம்) தீக்கை பெற்றதாகச் சொல்லிக் கொள்வதும் ஒரு பெருமையாகவே விளங்கிற்று. இறைஞான போதம், ஆன்மார்த்த பூஜை விளக்கம், ஆன்ம லாபதீபிகை என்ற மூன்று நூல்களை இயற்றி அருளிய இவர்கள் அன்னப்பன் பேட்டையில் 7.7.1983-இல் சிவப்பேறு எய்தினார்கள்.

15) ஸ்ரீ சிவக் கொழுந்து தேசிகர் - (1947 - 1959)

16) ஸ்ரீ முத்துகுமார தேசிகர் - (1959 - 1967)

17) ஸ்ரீ வேலாயுத தேசிகர் - (1967 - 1973)

18) சிவகுருநாத தேசிகர் - (1973 - 1974)

19) ஸ்ரீ தெய்வசிகாமணி தேசிகர் - (1974 - 1990)

20. ஸ்ரீலஸ்ரீ சங்கரலிங்க தேசிக பரமாசாரிய சுவாமிகள்

நெல்லை மாவட்டம் கோடரங்குளம் கிராமத்தில் பிறந்தவர்கள். 13.9.1990 ஞான பீடத்தில் ஏறி தற்போது அருளாட்சி செய்து வருகிறார்கள். 1999 முதல் ''சிவ சிவ'' என்ற இதழ் இவரது முயற்சியால் வெளி வந்து கொண்டிருக்கிறது.

5. தொண்டை மண்டல ஆதீனம் காஞ்சிபுரம்

சைவ வேளாளர்களில் ஒரு பிரிவினராகிய தொண்டை மண்டல வேளாளர் (சைவ முதலியார்கள்) அனைவருக்கும் உரிய குரு பீடம் இது.

சீர்காழிச் சிற்றம்பல நாடிகளின் பரம்பரையில் ஒருவராகிய கச்சி ஞானப்பிரகாசரே காஞ்சிபுரத்தில் தொண்டை மண்டல ஆதீனத்தை நிறுவியவர். காலம் 14-ஆம் நூற்றாண்டு. மூல குருமூர்த்திகளாகச் சிற்றம்பல நாடிகளையே கொள்கிறார்கள்.

இவ்வாதீனம் ஒரு காலத்தில் சிறப்பாக விளங்கியபோது 24 கிளை மடங்கள் இருந்தனவாம். 228 பட்டங்கள் வரை வரலாறு தெரியவில்லை. பழங் காலத்தில் குலகுரு மரபாகக் காஞ்சிபுரம் கோயிலை ஒட்டி அமைந்திருந்தது. பின்பு கச்சி ஞானப்பிரகாசரால் இப்போது உள்ள இடத்தில் மடமாக அமைக்கப் பெற்றது. ஞானப் பிரகாசருக்கு முன்பு ஆதி முதல் குல குரு மரபாகத் தொடர்ந்து இருந்து வந்தவர்களையும் கணக்கிட்டு இப்போது 232 ஆம் பட்டம் என்று கொள்கிறார்கள்.

229 ஆம் குரு மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் (1963 - 1977)

1963-ஆம் ஆண்டு முதல் ஆதீனத்தின் புதிய சகாப்தம் தொடங்குகிறது. மா பெரும் சைவத் தமிழறிஞர் வித்துவான் முத்து சு. மாணிக்கவாசக முதலியாரவர்கள் ஆதீனகர்த்தராகப் பொறுப் பேற்றார்கள். இவர்கள் பட்டம் ஏற்பதற்கு முன் சீர் குலைந்திருந்த நிர்வாகம் சிறிது சிறிதாகவே செம்மையுறச் செய்ய வேண்டியதாய் இருந்தது. ஆதலில் இவர்களது பெரும்பொழுது பாடம் சொல்வதிலேயே கழிந்தது. வெளியே பல இடங்களுக்கும் சென்று பாடம் சொன்னார்கள். 14 ஆண்டுக்காலம் மடாதிபதிகளாக நிர்வாகம் செய்தும், பல இடங்களில் மிகப் பலருக்குப் பாடம் சொல்லியும், தீட்சையளித்தும் சிவமேயாகத் திகழ்ந்த சந்நிதானம் 28.7.1977 அன்று சிவமானார்கள்.

230 ஆம் குரு மகா சந்நிதானம் கயிலைப்புனிதர் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச சுவாமிகள் (1978 - 1995)

பெரியபுராண உரையாசிரியர் சி.கே.எஸ். அவர்களின் உறவினர். ஆதீன நிர்வாகத்தைச் செம்மை செய்தார்கள். கயிலை தரிசனம் கண்டவர்கள். 1995-இல் சிவப்பேறு பெற்றார்கள்.

231 -ஆம் குரு மகா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் - (1995 - 1999)

232 ஆம் குருமகா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ திருவம்பல தேசிக ஞானப்பிரகாச பரமாசாரிய சுவாமிகள்

இவர்கள் 21.2.2000 முதல் குரு மகா சந்நிதானமாக எழுந்தருளி விளங்கி வருபவர்கள். ஆங்கிலம் தெரிந்தவர்கள், இமயம் முதல் குமரி வரை விரிவாக யாத்திரை செய்துள்ளார்கள்.



6. திருஞானசம்பந்தர் ஆதீனம், மதுரை

ஏனைய ஆதீனங்கள் எல்லாம் சந்தான குரவர் வழியில் தோன்றியவை. மதுரை ஆதீனம் ஒன்று மட்டும் சமய குரவர் காலத்தில் தோன்றியது.

திருஞான சம்பந்தப் பெருமான் காலத்தில் பாண்டிய நாட்டை ஆண்ட மன்னன் நின்றசீர் நெடுமாற பாண்டியன் சமண சமயத்தைச் சார்ந்து இருந்தான். அவனைத் திருத்திச் சைவ சமயத்தில் ஆட்படுத்த அவனது மனைவியார் மங்கையர்க்கரசியார் திருஞானசம்பந்தப் பெருமானை மதுரைக்கு எழுந்தருளு மாறு வேண்டுகிறார். மதுரைக்கு எழுந் தருளிய ஞான சம்பந்தப் பெருந்தகையை தெற்கு ஆவணி மூலவீதியில் இருந்த ஒரு சைவ மடத்தில் தங்க வைத்தனர். திருஞானசம்பந்தர் தங்கிய அன்றிலிருந்து அம்மடம் திருஞானசம்பந்தர் மடம் எனப் பெயர் பெற்றது.

திருஞானசம்பந்தர் மதுரைக்கு எழுந் தருளும் போது அம்மடத்தில் இருந்தவர் ஒரு சிவ முனிவர். சம்பந்தப் பெரு மானின் அருளுக்கு முழுவதும் பாத்திர ரானார். திருஞானசம்பந்தப் பெருமானது திருவருளைப் பெற்ற சிவ முனிவர், சிவானந்த சிவஞான சம்பந்தராய், ஸ்ரீலஸ்ரீ சிவானந்த யோகீந்திர ஸ்ரீ சிவ ஞான தேசிக பரமாசாரிய சுவாமிகள் என்ற திருப்பெயருடன் திருஞான சம்பந்தராதீனத்தில் குரு முதல்வர் ஆனார். அவர் முதலாக இன்றுவரை குரு மரபு தொடர்ந்து வளர்ந்து வருகிறது. 291 குரு மகா சந்நிதானங்கள் இப்பீடத்திற்கு அணி செய்திருக்கிறார்கள்.

292-ஆம் பட்டம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஸ்ரீஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்

இவர்கள் நெல்லை மாவட்டம் குலசேகரன் பட்டினத்தில் தோன்றி யவர்கள். சுவாமிகள் இரண்டு விஷயங் களில் மிகவும் அழுந்திக் கிடந்தார்கள். 1) ஆவி உலகம், 2) ஏட்டு சோதிடம். எட்டு நூல்கள் எழுதி வெளியிட்டுள்ளார்கள்.

293-ஆம் பட்டம்
ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்

1980-இல் குருமகா சந்நிதானமாக எழுந்தருளினார்கள். பேச்சாற்றல் மிக்க வர்கள். உலகம் முழுவதும் சுற்றுப் பயணம் செய்திருக்கிறார்கள். குன்றக்குடி அடிகளாருக்குப் பின் பொது வாழ்க்கை யில் உள்ள தலைவர்களுடன் நெருங்கிப் பழகும் நிலையில் உள்ளவர்கள்.

திருப்புறம்பயம், கஞ்சனூர், கைச் சினம், திருமுகத்தலை ஆகிய நான்கு

கோயில்களும் மதுரை ஆதீனக் கோயில்கள் ஆகும்.





7. குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம்

குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் திருவண்ணாமலையில் தோன்றியது. பின்னர் திருவண்ணாமலையிலிருந்து பிரான்மலைக்குச் சென்றது. அதன் பின்னர் பிரான் மலையிலிருந்து குன்றக்குடிக்கு வந்து நிலைத்து விட்டது.

குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனத்தைத் தோற்றுவித்தவர் திருவண்ணாமலை தெய்வசிகாமணி சிவாசாரியார். இவர் சந்தான குரவரில் இரண்டாமவராகிய அருணந்தி சிவாசாரியாரின் நேர் மாணாக்கர்.

1) ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி தேசிகர்

இவர்தம் பதினாறாம் வயதில் திருவண்ணாமலை திருக்கோயிலில் இறைவன் அந்தணச் சிறுவன் வடிவில் வந்து ''அன்பனே! நீ திருத்துறையூரில் உள்ள அருள்நந்தியிடம் சேர்வாயாக'' என்று கட்டளையிட, இவரும் அருள் நந்தி சிவாசாரியரை அணுகி உபதேசம் பெற்றார்.

திருவண்ணாமலைப் பகுதியை ஆட்சி செய்து வந்த மூன்றாம் வீரவல்லாள தேவன் பவனி வரும்பொழுது பட்டக் குதிரை பதறி விழுந்து உயிரிழந்தது. அப்பொழுது அங்கு வந்த குருநாதர் தெய்வசிகாமணி, இறந்து கிடந்த குதிரை மீது திருநீற்றைத் தெளித்தார். குதிரை உயிர் பெற்றெழுந்தது. மனம் மகிழ்ந்த வல்லாள தேவன் குருநாதர் மடம் அமைப்பதற்கு பெரும் பொருட் செல்வத்தைக் காணிக்கையாக அளித்தான். குருநாதர் தெய்வசிகாமணி தமது 60-ஆம் வயதில் கி.பி. 1310-இல் திருவண்ணாமலையில் ஆதீனத் திரு மடத்தை நிறுவியருளினார்.

17-ஆம் பட்டம் குரு மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ நாகலிங்க தேசிகர் (1660 - 1700)

இராமநாதபுரம் அரசர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க குருமூர்த்திகள் பிரான் மலையைத் தலைமைப் பீடமாகக் கொண்டு அருளாட்சி புரியலானார்கள். பிரான்மலை, திருப்பத்தூர், திருக்கோளக்குடி, குன்றக்குடி, தேனாட்சியம்மன் கோயில் ஆகிய ஐந்து கோயில்களுக்கும் பரம்பரை அறங்காவலர்களாக இருந்து அருளாட்சி புரிந்து வந்தார்கள்.

31-ஆம் பட்டம் குரு மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மருதநாயக தேசிகர்

இவர்கள் காலத்தில் குன்றக்குடியைத் தலைமையிடமாகக் கொள்ளலானார்கள்.

38-ஆம் பட்டம் குரு மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ பெரிய ஆறுமுக தேசிகர் (1860 - 1889)

ஆறுமுக நாவலரை வரவேற்று புதிய சிவிகை ஒன்றைச் செய்வித்து அதில் ஆறுமுக நாவலரை அமர்த்திக் குன்றக்குடி திருவீதிகளில் ஊர்வலம் செய்யும் சிறப்பைச் செய்வித்தருளினார்கள். திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களை தங்க வைத்து உபசரித்து தக்க சன்மானம் கொடுத்து அனுப்பி வைத்து அருளினார்கள்.

43-ஆம் பட்டம் குரு மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ பொன்னம்பல தேசிகர் (1926 - 1946)

குன்றக்குடி சண்முகநாதப் பெருமான் கோயிலுக்குத் திருப்பணி செய்து குடநீராட்டு விழாச் செய்து மகிழ்ந் தார்கள். சைவத் திருமுறைகளில் நன்கு திளைத்தவர்கள். கீழ்வேளூர் சொக்க லிங்க ஐயா அவர்களிடம் தேவாரத் திருமுறைகளை நன்கு பயின்றவர்கள். சொக்கலிங்க ஐயா அவர்களைக் குன்றக்குடியிலேயே தங்கச் செய்து அவர்களது இறுதிக்காலம் வரை ஆதரித்தார்கள். மடாலயத்து மேன் மாடியில் அமர்ந்தவாறே முருகன் சந்நிதியை நோக்கித் தேவாரப் பாக்களை வீணையில் வாசித்து மகிழ்வார்கள். தெய்வங்கள் இவர்களிடம் கனவில் பேசின.

45-ஆம் பட்டம் குரு மகா சந்நிதானம் திருவருள் திரு தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாசாரிய சுவாமிகள்

(தவத்திரு குன்றக்குடி அடிகளார்)

1925 -இல் தோன்றினார்கள் 26.05.1952- இல் குரு மகா சந்நிதானமாக எழுந்தருளி னார்கள்.

அடிகளார் பட்டத்திற்கு வந்த காலத் தில் நாத்திகம் தலைவிரித்தாடிற்று. 2.8.1952-இல் ஈ.வெ.ரா. பிள்ளையார் உடைப்புப் போராட்டத்தை அறிவித்தார். 11.8.1952-இல் அடிகளார் அருள்நெறித் திருக்கூட்டத்தைத் தொடங்கினார்கள். தமிழகமெங்கும் சூறாவளி சுற்றுப் பயணம் சென்று அருள் நெறிக் கூட்டத்தை வளர்த்தார்கள்.

பக்தர்களுக்குப் பகுத்தறிவு வினாக்கள் என்ற 30 கேள்விகளை 'விடுதலை' நாளிதழில் பெரியார் வெளியிட்டார். அடிகளார் இக்கேள்விகளுக்குப் பதில் அளித்தும் ''நாங்களும் கேட்கிறோம்'' என்ற 20 கேள்விகளை முன் வைத்தும் ஒரு சிறு நூலாகவே வெளியிட்டார்.

அறிஞர்கள், ஆன்றோர்கள் அடிகளார் பின் திரண்டனர். 23.1.1955-இல் அடி களார் மலேசியாவிலும் அருள்நெறிக் கூட்டத்தை நிறுவினார்கள்.

கல்விப்பணிகளுக்காக என்றே 1955- இல் அருள் நெறித்திருப்பணி மன்றம் தொடங்கி அதன் சார்பில் 16 கல்வி நிறுவனங்கள் தொடங்கினார்கள்.

சமஸ்கிருதத்தோடு தமிழிலும் அர்ச் சனை செய்ய வேண்டும் என்ற கருத்து உடைய அடிகளார் குன்றக்குடியில் ஓர் ஆடிக்கிருத்திகையன்று தமிழ் அருச்சனை தொடங்கினார்கள். 1953-இல் பேரூரில் தமிழ் அருச்சனை தொடங்கப் பெற்றது. தமிழ் அர்ச்சனை கோருபவர்கள் பண்பாடில்லாதவர்கள் என்று முதல் அமைச்சர் பக்தவத்சலம் அவர்கள் கூறி விட்டார்கள். எங்கும் ஒரே பரபரப்பு. அடிகளார் அனைவரையும் அமைதிப் படுத்தி, தமிழருச்சனைக்கு ஆதாரமாகத் திருமுறைகளிலும், சைவ நூல்களிலும் காணப்படும் இடங்களில் அடையாளம் வைத்து 52 நூல்களையும் முதலமைச் சருக்கு அனுப்பிவிட்டார்கள். ஒரு குறிப்பிட்ட நாளில் 12 கார்களில் 63 சைவ ஆன்றோர்களை அழைத்துக் கொண்டு ஒரு தூதுக்குழுவாக முதலமைச்சரிடம் சென்றார்கள். முதலமைச்சர் அவர்கள் ''திருமுறைத் தமிழ் அர்ச்சனை தனக்கு உடன்பாடே'' என்று தெரிவித்தார். 4.10.1961-இல் மதுரை மீனாட்சி சுந்தரேசு வரர் திருக்கோயிலில் முதலமைச்சர் பக்தவத்சலம் அவர்களே தமிழர்ச் சனையைத் தொடங்கி வைத்தார்கள்.

திருப்புத்தூர்க் கோயிலில் ஒரு தமிழ்ச் சங்கம் நிறுவி 63 தமிழறிஞர்களை அதில் உறுப்பினராக்கியருளினார். ஆண்டு தோறும் இலக்கியம், தத்துவம், சமயம், இசை, நாடகம் முதலிய பல துறை களிலும் சூடான விவாதங்கள் நிகழும்.

தமிழகத்தில் உள்ள அனைத்து மடங்களுக்கும் இணைப்பாக ஓர் அமைப்பு இருந்தால் நலம் எனத் தமிழக அரசின் ஆதரவில் 13.6.1966 அன்று ''தெய்விகப் பேரவை'' தொடங்கப் பெற்றது. 20.12.1969-இல் அடிகளார் தலைமை பொறுப்பேற்றார்கள். இது ஒரு பொற்காலம். அருளோசை, செய்திக்கதிர் என இரண்டு இதழ்கள் தொடங்கப் பெற்றன. இலட்சக்கணக்கான துண்டுப் பிரசுரங்கள் வெளியிடப் பெற்றன. சமய நூல்கள், அறநூல்கள் அச்சிடப்பட்டன. 200க்கு மேற்பட்ட சமயப்பரப்புனர்கள் நியமிக்கப்பட்டனர். 1973-இல் திருச்சியில் இரண்டாம் மாநாடு, 1975-இல் நாகர்கோயிலில் மூன்றாம் மாநாடு; வரலாறு கண்டிராத மாநாடு; அதற்குமுன் இப்படி ஒரு மாநாடு நடந்ததில்லை. பின்பும் நடக்கவில்லை. அடிகளார் தலைவராக இருந்த 1975-இல் தெய்விகப் பேரவைக்கு 2606 கிளைகளும் 92,669 உறுப்பினர்களும் இருந்தனர். மிகச் சிலரைத் தவிரச் சைவ உலகம், ஆத்திக உலகம் முழுவதும் அடிகளாரின் பின் நின்றது.

11.6.1973-இல் அடிகளார் திருக்குறள் பேரவையைத் துவங்கினார்கள். 200 கிளைகளுடன் இன்றும் நன்கு இயங்கி வருகிறது.

1982-இல் சமயநல்லிணக்கம் காண இந்து, கிறிஸ்துவம், இஸ்லாமியம் ஆகிய மூன்று சமயங்களின் தலைவர்களையும் கொண்டு திருவருட் பேரவை என்ற அமைப்பு தொடங்கப்பெற்றது. தமிழகத்தில் ஒன்பது பெரு நகரங்களில் இப் பேரவை இயங்கி வருகிறது.

முதன்முதலில் கடல்கடந்து அயல் நாடுகளுக்கும் சுற்றுப்பயணம் செய்யத் தொடங்கிய ஆதீனகர்த்தர் அடிகளார் தான். அடிகளார் பயணம் செய்யாத நாடுகள் ஆப்பிரிக்க நாடுகளும் ஆஸ்திரேலியாவும்தான். ஏனைய எல்லா நாடுகளையும் அடிகளார் கண்டிருக்கிறார். பலமுறை இலங்கைக்குச் சென்றார். 1954 - 55-இல் மூன்று மாதங்கள் மலேசியா, சிங்கப்பூர், தாய்லாந்து, இந்தோனேஷியா நாடுகளில் சுற்றுப் பயணம் செய்தார். 1971-இல் சோவியத் யூனியனில் (ரஷ்யா) 22 நாள் சுற்றுப் பயணம், காவி வேட்டிக்காரர் ரஷ்யாவுக்குச் சென்று வந்தது வியப்பாகவும், விவாதத்திற்குரியதாகவும் இருந்தது. 1982-இல் மலேசியா, கொரியா, ஜப்பான், சீனா நாடுகளுக்குச் சென்று வந்தார். 1991-இல் இலண்டனுக்கும் அமெரிக்காவுக்குச் சென்று வந்தார். அதே ஆண்டில் அரபு நாடுகளுக்கும் சென்று வந்தார்.

1969 முதல் 1976 வரை சட்ட மேலவை உறுப்பினராகப் பதவி வகித்தார். குன்றக்குடி ஊராட்சி மன்றத் தலைவராகவும் பணியாற்றினார்.

1976-இல் தெய்விகப் பேரவை முடக்கப் பெற்றுவிட்டபின் அடிகளார் தன் முழுக் கவனத்தையும் குன்றக்குடியையும் அதன் சுற்று வட்டார ஊர்களையும் அபிவிருத்தி செய்வதில் திருப்பினார். 2.10.1977 அன்று குன்றக்குடி திட்டக்குழு உருவாயிற்று. கூட்டுறவு முறையில் தொழிற்சாலைகள் பல ஏற்படுத்தப் பெற்றன. குன்றக்குடி கிராமத்தில் கூட்டுறவில் உறுப்பினராகாத குடும்பமே இல்லை. வேலை வாய்ப்பில்லாத குடும்பமே இல்லை என்ற நிலை ஏற்படுத்தப் பெற்றது. குன்றக்குடி ஒரு முன் மாதிரி (மாடல்) கிராமமாக ஆயிற்று.

அடிகளார் சுதேசி அறிவியல் இயக்கத்தைத் தொடங்கினார். 'அறிக அறிவியல்' என்றொரு திங்களிதழைத் தொடங்கினார். அறிவியல் கருத்தரங்குகளை நடத்தினார். கண்காட்சிகளை நடத்தினார். பல்கலைக் கழக அளவிலும் அறிவியற் கருத்தரங்குகள் நடத்தப் பெற்றன.

''அடிகளார் ஒரு சகாப்தம்'' என்று ஊரன் அடிகள் தம் கட்டுரையில் முடிக்கிறார்.

15.4.1995-இல் *70*-ஆம் அகவையில் அடிகளார் சிவப்பேறு பெற்றார்கள்.

46-ஆம் பட்டம் குரு மகா சந்நிதானம் திருவருள் திரு தெய்வசிகாமணி பொன்னம்பல தேசிக பராமாசாரிய சுவாமிகள்

9.7.1964-இல் பிறந்தார். *15.4.1995*-இல் பீடம் ஏறினார்கள்.

தோற்றம், நடை, உடை, பாவனை, சொல், செயல், பேச்சு, எழுத்து என்று எல்லாவற்றிலும் அப்படியே அடிகளாரைப் பின்பற்றி வருகிறார்கள். அடிகளாருக்குச் சரியான வாரிசு என்பதை நிரூபித்து வருகிறார்கள். அடிகளார் வழங்கிய அருட்கொடைகளில் தலையாயது அவரது வாரிசாக பொன்னம்பல அடிகளார் நியமனம் பெற்றது. அடிகளாரின் பல்வேறு பணிகளையும் அடிகளார் காட்டிய வழியில் அப்படியே தொடர்கிறார் பொன்னம்பல அடிகளார். ஆதீனத்தின் நவீன கால வரலாற்றில் இவர் இரண்டாம் குன்றக்குடி அடிகளார்.

8. செங்கோல் ஆதீனம் பெருங்குளம்

பெருங்குளம் தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீவைகுண்டத்தில் உள்ளது.

அகச் சந்தானக்குரவருள் ஒருவராகிய சத்திய ஞான தரிசினிகள் சிதம்பரம் வருகை தந்து நடராஜப் பெருமானை வழிபடுகிறார். அவர் கூப்பிய கரங்களுள் திருவருட் செயலால் ஒரு சிவலிங்கம் எழுந்தருளிவிடுகிறது. சத்தியஞான தரிசினிகள் தில்லையில் ஒரு திருமடம் நிறுவி சிவலிங்கத்தை எழுந்தருளச் செய்து வழிபட்டு வரலானார். அவருக்குப் பின் வழிவழியாகப் பதினேழு மடாதிபதிகள் வருகின்றனர். பதினெட்டாம் பட்டம் திகம்பர சித்தர் ஆவார். கொற்கையைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்த பாண்டிய மன்னன் சிதம்பர தரிசனத்திற்கு வருகை தந்தான். சித்தரைச் சந்தித்துத் தன்னோடு வருமாறு கேட்டுக் கொண்டான். சித்தரும் உடன்பட்டு வர, கல்லூர் என்னும் சிற்றூரில் திருமடம் அமைத்து சைவப் பணியாற்றி வந்தார்.

சில காலத்திற்குப் பிறகு சோழ மன்னன் பாண்டியநாடு மீது படையெடுத்து கொற்கையைக் கைப்பற்றினான். பாண்டிய மன்னன் திகம்பர சித்தரிடம் சரண் புகுந்தான். கல்லூர்ச் சித்தர் செங்கற்களைத் தங்கக் கட்டிகளாக்கி அவனிடம் கொடுத்தார். அவற்றைக் கொண்டு மன்னன் தன் படைபலத்தைப் பெருக்கிச் சோழ மன்னனை வென்றான். சித்தர் பெருமானின் திருக்கரங்களால் செங்கோலைப் பெற்றுக் கொண்டான். அதிலிருந்து பாண்டியர்கள் முடி சூடும் பொழுது பெருங்குளம் மடாதிபதிகளிடமிருந்து செங்கோலைப் பெற்றுக் கொள்ளும் வழக்கம் உண்டாயிற்று. ஆதீனத்திற்கும் ''செங்கோல் ஆதீனம்'' என்று பெயர் உண்டாயிற்று.

சித்தருக்கு முன்பகுதி வரலாற்றை வேறுவிதமாகவும் சொல்வார்கள். *18*-ஆம் பட்டத்திற்குப் பின் *100*-ஆம் பட்டம் வரை வரலாறு தெரியவில்லை. உ.வே.சா. அவர்களின் காலத்தில் ஆதீன கர்த்தராக விளங்கியவர்கள் *100*-ஆம் பட்டம் ஸ்ரீலஸ்ரீ கல்யாண சுந்தர சத்திய ஞான பண்டார சந்நிதிகள். அடுத்து *101*ஆம் பட்டம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக சத்தியஞான பண்டார சந்நிதிகள். நடுவில் *35* ஆண்டுகள் அரசு தலையீட்டால் ஆதீனகர்த்தர் பதவி துறந்து ஆதீனம் நிலை குலைந்தது.

1925-இல் நெல்லை மாவட்டம் தாமரைச் செல்வி என்ற ஊரில் பிறந்த

பேச்சியப்பனாரைச் சைவ மெய் யன்பர்கள் தேர்ந்தெடுத்தனர். திருவாவடு துறை ஸ்ரீலஸ்ரீ 23ஆம் குரு மகா சந்நிதானம் சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் சுவாமி களுக்கு யாத்திரை காஷாயம், மந்திரம் காஷாயம், திருவடி தீக்கை அருளி னார்கள். 15.9.1996 அன்று செங்கோல் ஆதீன மடத்தில் ஆசாரிய அபிடேகமும், பீடாரோகணமும் செய்வித்தருளி னார்கள்.

செங்கோலாதீனம் கயிலாய பரம் பரையே எனினும் மெய்கண்ட சந்தான மன்று. மெய்கண்டாருக்குக் காலத்தால் மிகவும் முற்பட்ட அகச் சந்தான குரவர் சத்தியஞான தரிசினிகளின் நேர்வழியில் இது வருகிறது.

9. துலாவூர் ஆதீனம்

துலாவூர் குன்றக்குடிக்கு அருகில் உள்ளது. 16-ஆம் நூற்றாண்டில் நிரம்ப அழகிய தேசிகரால் நிறுவப்பெற்றது.

கமலை ஞானப்பிரகாசரின் மாணாக்கர் பலரில் இருவர் முக்கியமானவர்கள். ஒருவர் குரு ஞானசம்பந்தர். இன்னொரு வர் நிரம்ப அழகிய தேசிகர். குரு ஞான சம்பந்தரால் தருமபுர ஆதீனம் நிறுவப் பெற்றது. நிரம்ப அழகிய தேசிகரால் துலாவூர் ஆதீனம் நிறுவப்பெற்றது. துலாவூர் ஆதீனம் இல்லறத்தார் ஆதீனம். வெள்ளைவேட்டி மடம், தந்தைக்குப் பின் மூத்தமகன் ஆதீன கர்த்தராகப் பட்டத்துக்கு வருகிறார்.

நாட்டுக்கோட்டை நகரத்தார்களில் பெண்மக்களுக்குத் துலாவூர் ஆதீனம் குருபீடம்; ஆண்மக்களுக்குப் பாதரக்குடி மடம் குருபீடம்.

முன்னொரு காலத்தில் காவிரிப் பூம் பட்டினத்தில் இருந்த சோழ மன்ன னுக்கும் நகரத்தார்களுக்கும் கடுமை யான கருத்து வேற்றுமை ஏற்பட்டது. நகரத்தார் அனைவரும் உயிர் துறந்தனர். பள்ளிக்குச் சென்ற சிறுவர்கள் மட்டுமே உயிர் தப்பினர். சிறுமிகள் யாரும் தப்பவில்லை. இந்தச் சிறுவர்கள் மணப்பருவ நிலைக்கு வந்த போது அவர்கள் மணம் செய்து கொள்ள நகரத் தார் பெண்களே இல்லை. வேளாளப் பெண்களை மணக்க வேண்டியதாயிற்று. ''திருமணத்திற்குப் பின்னரும் எங்கள் குலகுருவே எங்களுக்குக் குரு ஸ்தான மாக தொடர்ந்து இருக்கவேண்டும்'' என்று நிபந்தனை விதித்தனர். இந்த நிபந்தனையின்படி இன்றும் நகரத்தாரில் பெண்களுக்குத் துலாவூர் ஆதீனமே குருபீடமாகத் திகழ்ந்து வருகிறது.

துலாவூர் ஆதீனத்தைத் தோற்று வித்தவர் நிரம்ப அழகிய தேசிகர். அவருடைய ஊர் வேதாரண்யம் என்றும் ஸ்ரீ வாஞ்சியம் என்றும் இருவகையாகக் கூறுகின்றனர்.

துலாவூர் ஆதீனம் கி.பி. 913-இல் நிறுவப் பெற்றது என்கிறார்கள். இதுவரை 28 தேசிகர்கள் பட்டத்தில் இருந்திருக்கிறார்கள். 29-ஆம் பட்டம் ஸ்ரீலஸ்ரீ நிரம்ப அழகிய ஞானப்பிரகாச தேசிகர் அருளாட்சி செய்து வரு கிறார்கள். 16-ஆம் நூற்றாண்டில் நிரம்ப அழகிய தேசிகரால் இது ஆதீனமாக அமைந்தது. அதற்குமுன் குலகுரு பரம்பரை என்றளவில் இருந்திருக்க லாம்.

வருவாய் போதாத நிலையில் சுவாமி களைத் தலைவராகவும் தேவகோட்டை ஜமீன்தார் நாராயணன் செட்டியார் அவர் களைச் செயலராகவும் கொண்டு துலாவூர் நகரத்தார் டிரஸ்டு நிறுவப் பெற்று குருபூஜை, மாகேசுவர பூஜை, சைவசித்தாந்த வகுப்பு ஆகியவை நடைபெற்று வருகின்றன. 2001-இல் நிகழ்ந்த ஒரு வார சைவசித்தாந்த பயிற்சி வகுப்பு 10-ஆம் ஆண்டாக நிகழ்ந்த ஒன்றாகும்.

10. வேளாக்குறிச்சி ஆதீனம்

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள கல்லிடைக்குறிச்சியின் ஒரு பகுதியே வேளாக்குறிச்சி ஆகும். இங்கு தோன்றியதே வேளாக்குறிச்சி ஆதீனம். இவ்வாதீனத்தைத் தோற்றுவித்து அருளியவர் திருக்கயிலாய பரம்பரையில் ஸ்ரீ கண்ட பரமசிவத்திடம் உபதேசம் பெற்ற வழிவந்த சத்திய ஞானதேசிக தீர்க்க தரிசினிகள்.

திருக்கயிலாய பரம்பரையில் மெய் கண்டாருக்கு முன்னர் விளங்கிய அகச் சந்தான குரவர்களில் ஒருவர் சத்திய ஞான தரிசினிகள். அவர் பெயரை இவர் (வேளாக்குறிச்சி ஆதீன நிறுவனர்) வைத்துக் கொண்டுள்ளார். அவர் வேறு; இவர் வேறு, ஸ்ரீலஸ்ரீ சத்தியஞான தேசிக தீர்க்க தரிசினிகள் ஆதீன நிறுவனர். இரண்டாம் குரு மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மகாதேவ பண்டார சந்நிதி (1575 - 1611). அதன்பிறகு இதுவரை பதினேழு குரு மகா சந்நிதானங்கள் இவ்வழி வந்திருக் கின்றனர்.

பதினேழாம் குரு மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அஜபாநடேஸ்வர பண்டார சந்நிதி 1953 -இல் பீடம் ஏறி அருளாட்சி செய்து வருகிறார்கள். இதுவும் இல்லறத் தார் ஆதீனமே. தந்தைக்குப்பின் மகன், அவருக்குப்பின் அவருடைய மூத்த குமாரர் என்று வழிவழியாக இதன் ஆதீனகர்த்தர்கள் வருவர். பிரதான மடம் வேளாக்குறிச்சியில் உள்ளது. பாபநாசம், திருக்குற்றாலம், சுசீந்தரம், திருச்சிராப் பள்ளி, திருவாரூர், திருப்புகலூர் ஆகிய இடங்களில் கிளை மடங்கள் உள்ளன. திருமீயச்சூர், திருச்செங்காட்டாங்குடி, திருப்புகலூர் ஆகிய கோயில்கள் இவர்கள் நிர்வாகத்தில் உள்ளன. திருவாரூர் அபிஷேக கட்டளைக்கும், அன்னதான கட்டளைக்கும் இவர்களே பரம்பரை அறங்காவலர்கள். அபிஷேகக் கட்டளைக்கு மட்டும் 4,500 ஏக்கர் நன்செய் நிலங்கள் உள்ளன. திருச் செங்காட்டாங்குடி கோயில் 1975இலும், திருமீயச்சூர் கோயில் 2000இலும், திருப்புகலூர் கோயில் 2005இலும் குட நீராட்டு விழாக்கள் நிகழ்ந்தன.

11. நாச்சியார் கோயில் ஆதீனம்
நாச்சியார் கோயில்

கும்பகோணம் - திருவாரூர் சாலையில் 9ஆவது கிலோ மீட்டரில் நாச்சியார் கோயில் உள்ளது. இங்கு இருப்பதே நாச்சியார் கோயில் ஆதீனம். இவ்வாதீனத்திற்கு வள்ளல் சந்தான மடம் என்றும், மருதவாண சுவாமிகள் மடம் என்றும் பெயருண்டு. இதன் ஆதீனகர்த்தர்கள் இல்லறத்தார். ஆதீன நிறுவனர் குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ மருதப்ப தேசிகர். இப்போது 6-ஆம் பட்டம் குரு மகா சந்நிதானமாக எழுந்தருளி விளங்கு பவர்கள் மருதவாண தேசிகர் ஆவார். மடத்தின் நடுவில் கோயில் உள்ளது. 5 ஏக்கர் நிலம் ஆதீனத்தின் சொத்தாக உள்ளது.

12. வரணி ஆதீனம்
வேதாரண்யம்

வேதாரண்யம் கோயிலுக்கு 49 கிராமங்களில் 13,051 ஏக்கர் 7 செண்டு நஞ்சை, புஞ்சை நிலங்கள் உள்ளன. தமிழ்நாட்டிலேயே மிகவும் அதிகமான நிலப்பரப்புள்ள ஆலயம் இதுதான்.

இலங்கை யாழ்ப்பாணத்தில் உள்ள வரணி ஆதீனத்தார் வேதாரண்யம் கோயிலுக்குப் பரம்பரை அறங்காவலர் களாக இருக்கிறார்கள் என்பது மட்டுமே இதுவரை தெரிந்த செய்தி. இதற்கு முன் ஏகப்பட்ட வழக்கு இருந்திருக்கின்றது. இப்போதைக்கு இதுதான் நடைமுறை. வரணி ஆதீனத்தைச் சேர்ந்த திருகுமரேச மூர்த்தியின் எம்.ஏ. ஆய்வேட்டை ஒட்டி தவத்திரு ஊரன் அடிகள் அவர்கள் தகவல் சேகரித்துள்ளார்கள்.

16-ஆம் நூற்றாண்டின் இறுதியில் போர்த்துகீசியர் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த சைவ மக்களுக்கு இழைத்த கொடுமைகளைச் சகிக்க முடியாமல் வரணியில் வாழ்ந்த தில்லை நாதத் தம்பிரான் என்பவர் கோடிக்கரை வந்தடைந்து வேதாரண்யேசுவரர் ஆலயத் தின் அருகில் வாழ்ந்தார். தஞ்சையை ஆண்ட மன்னன் சுவாமிகளின் பக்தி நெறியையும் அவரது சிறப்பையும் அறிந்து 16 கிராமங்களையும் அவற்றில் உள்ளடங்கிய 2500 ஏக்கர் நிலத்தையும் மானியமாக்கி இவ் வாலயத்தைத் தன் சார்பில் கவனித்துக் கொள்ளுமாறு ஒப்படைத்தான். தில்லை நாதத் தம்பி ரான் சுவாமிகள் யாழ்ப்பாணம் கரண வாய், வரணி ஆதீனத்தை நிறுவித் திறம் படப் பரிபாலனம் செய்து வந்தார்கள். இவர்கள் காலம் சைவ சமய வளர்ச்சியின் தொடக்க காலம் என்பது அறியலா கின்றது.

சுவாமிகள் 80 ஆண்டுகள் ஆதீனத்தைச் செம்மையாக நடத்திப் பின் தமது குருமார்கள் குடும்பத்தாரிடம் ஒப் படைத்தார். அந்த குருமார்கள் குடும்பம் இருபத்தைந்தும் ஒன்றாக இணைந்து தங்களுக்குள் ஒருவரை ஐந்து ஆண்டுக்கு ஒருவராகப் பரிபாலனம் செய்து வரவேண்டியது என்று வரையறுத்து அதன்படி செயல்பட்டு வருகின்றனர். இதன் இடையில் தில்லை நாதத் தம்பிரான் சுவாமிகள் தமது 100 வயது கடந்த நிலையில் சித்தியடைந்தார்கள்.

1913-இல் வரணி ஆதீனத்தாருக்கும் வடபாதிமங்கலம் சாமியப்ப முதலி யாருக்கும் வழக்கு ஏற்பட்டு ஆதீனத் திற்குச் சார்பாக உத்தரவு பெறப்பட்டு உள்ளது. இது இந்து சமய அறநிலையத் துறை ஆணையரின் கீழ் செயல்பட்டு வருகிறது. இவ்வாதீனத்தின் திருக் கோயில் முதன்மை தர கோயில்களுள் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாதீனம் தனது நேரடிக் கண்காணிப்பில் உள்ள 3,000 வேலி நிலங்களையும் 27 கோயில்களையும் செம்மையாகக் காலங்காலமாகப் பரி பாலனம் செய்தும், கோயில்கள் கும்பாபி ஷேகம் செய்தும், திருவிழா நடத்தியும் வருகின்றது. மேலும் ஆகம பாட சாலையும், தேவார பாடசாலையும் நடத்தி வந்தது.

இவ்வாதீனத்தார்கள் இந்தியாவில் தங்கள் கைச் செலவுக்குக் கோயில் பணத்தை எடுப்பது முறையன்று என்ப தால் அவர்கள் தங்களது சொந்த நாடாகிய இலங்கையில் உள்ள சொத்தை விற்று இந்தியாவில் நிலங்களை வாங்கி ஒரு மடத்தை நிறுவினர். ஆண் வாரிசு, பெண் வாரிசு என்ற இரு பிரிவினராக தனித் தனியே 1) ஸ்ரீ மாணிக்கவாசகர் மடம் 2) ஸ்ரீ ஆதீவார மடம் என்று பெயர்கள் ஏற்படுத்தி இன்று வரை செம்மையாகச் செயல்படுத்தி வருகிறார்கள்.

1) ஸ்ரீ மாணிக்க வாசகர் மடம் 5 வேலி நிலம் உள்ளது. வேதாரண்யேஸ்வரர்க்கு இரவு அபிஷேகமும், ஏறுபடியும், மாணிக்கவாசகர் குருபூஜையும் நடத்து கின்றனர். இம்மடம் தோன்றி 108 ஆண்டுகள் ஆகின்றது. ஆண் வாரிசு மடம். இதுவரை பதினைந்து பண்டார சந்நிதிகள் நிர்வாகம் செய்து வந்து உள்ளார்கள்.

2) ஸ்ரீ ஆதிவார மடம் 100 வேலி நிலம் உள்ளது. இந்த மடம் தோன்றி 119 ஆண்டுகள் ஆகின்றன. இதுவரை 8 பண்டார சந்நிதிகள் நிர்வாகம் செய்து உள்ளார்கள்.

யாழ்ப்பாணம் வரணி ஆதீனகர்த்தர் பரம்பரை ஸ்ரீலஸ்ரீ தில்லை நாயகத் தம்பிரான் சுவாமிகள் நிறுவனர் ஆவார். தற்பொழுது 21-ஆம் குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ செவ்வந்திநாத பண்டார சந்நிதி நிர்வாகம் செய்து வருகிறார்கள். இதன்

தலைமை மடம் யாழ்ப்பாணம் கரண வாயிலிலும், கிளை மடம் வேதாரண்யத் திலும் இயங்குகிறது. தேவாரப்பாட சாலை, ஆகமப் பாடசாலை மூலமாகத் திருமுறைகள் ஆகமங்கள் கற்பிக்கப் படுகின்றன. ஆண்டுதோறும் புராணச் சொற்பொழிவுகள் தொடர்ந்து நடத்தப் படுகின்றன.

13. வள்ளலார் ஆதீனம் சீர்காழி

சீர்காழியில் வள்ளலார் ஆதீனம் என்று ஓர் ஆதீனம் இருந்தது. அது இன்று இல்லை. அழிந்து போய் விட்டது. இல்லறத்தார் ஆதீனம்; வெள்ளை வேட்டி ஆதீனம்.

இவ்வாதீனத்தை நிறுவியவர் காழி கண்ணுடைய வள்ளல் ஆவார். ஒழிவி லொடுக்கம் என்ற நூலை இயற்றியவர். மற்றும் சில செய்யுள்களையும் உரை நடை நூல்களையும், உரைகளையும் செய்தவர். இவரது காலம் 14 ஆம் நூற்றாண்டு.

இரண்டாவதாக வந்தவர் சுயம்பிரகாச வள்ளல்.

மூன்றாவதாகப் பீடமேறியவர் சிவ ஞான வள்ளல். இவர் 20 சிறு நூல்கள் செய்துள்ளார். இது வள்ளலார் சாத்திரம் என ஒரு தொகுதியாக வழங்கப் பெறு கிறது. நான்காவதாக அருளாட்சி செய் தவர்கள் சட்டை நாத வள்ளல்.

இவ்வள்ளல் ஆதீனமானது 1960 வரை பெயரளவில் இருந்தது. இன்று அடியோடு அழிந்துவிட்டது.

14. சொர்க்கபுர ஆதீனம் அம்பர் மாகாளம்

திருமபுரம் ஆதீனம் எட்டாம் குரு மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அழகிய திருச்சிற்றம்பல தேசிகர் காலத்தில் அவர்களுடன் இருந்த தம்பிரான் சுவாமி கள் ஒருவர் தனியே பிரிந்து சென்று அம்பர் மாகாளத்தில் சொர்க்கபுர ஆதீனம் நிறுவி தமது பெயரையும் அழகிய திருச்சிற்றம்பல தேசிகர் என்று வைத்துக் கொண்டார். தஞ்சாவூர் மன்னர் இரண்டாம் சரபோஜியும் ராணி கஜானா பாயும் ஏராள நிலங்கள் கொடுத்தார்கள். இவர்கள் கிளி விடு தூது, அறிவானந்த சமுத்திரம், அருட்பா மாலை, திரு உசாத்தானத் தோத்திரம், வினாவுரை, திரிபதார்த்த தீபம், சித்தாந்த நிச்சயம், அனுட்டான விதி ஆகிய நூல்களை இயற்றினார்கள். 1748-இல் சிவப்பேறு பெற்றார்கள். இவர்களுக்குப் பின் பன்னிருவர் பட்டத்திற்கு வந்தனர். இந்நூற்றாண்டின் (20-ஆம் நூற்றாண்டு) தொடக்கத்தில் அழிநிலைக்கு வந்து விட்டது. இப்பொழுது பெயரளவில் மட்டுமே உள்ளது.

15. ஆகம சிவப்பிரகாசர் ஆதீனம் சிதம்பரம்

ஆகம ஞானத்தில் சிறந்து விளங்கிய தால் ஆகம சிவப்பிரகாசர் என்றே பெயர் பெற்ற சான்றோரால் சிதம்பரத்தில் நிறுவப்பெற்ற இவ்வாதீனம் இன்று இருக்குமிடம் கூடச் சரியாகத் தெரிய வில்லை.

16. தாயுமான சுவாமிகள் ஆதீனம் அன்னப்பன் பேட்டை

தாயுமானவரின் பரம்பரையில் வந்த துறவிகள் அன்னப்பன் பேட்டையில் மடம் அமைத்துக் கொண்டு தொண்டு செய்து வந்தனர். சூரியனார் கோயில் ஆதீனத்திலிருந்து நிர்ப்பந்தச் சூழ்நிலை யில் வெளியேற நேர்ந்த ஸ்ரீலஸ்ரீ மீனாட்சி சுந்தர தேசிக பரமாசாரிய சுவாமிகள் அன்னப்பன் பேட்டைக்குச் சென்று தாயுமான சுவாமிகள் மடத்தில் 10-ஆம் குரு நாதராகச் சில காலம் இருந்தார்கள். ஆதலின் இவர்களுக்கு முன் குருமார்கள் ஒன்பதின்மர் வழிவழியாக அங்கிருந்திருக்கின்றனர்.

இப்பொழுது பெயரளவில் விளங்கி வருகிறது.

17. நீலப்பாடி ஆதீனம்

திருவாரூர் நாகப்பட்டினம் சாலையில் திருவாரூரிலிருந்து 5 கிலோ மீட்டரில் நீலப்பாடி என்ற ஊர் உள்ளது. ஸ்ரீ நமச்சிவாய சுவாமிகள் என்பவர் 1820-ஆம் ஆண்டளவில் நீலப்பாடியில் ஒரு மடத்தை நிறுவித் தொண்டு புரிந்து வந்தார். அவருக்குப்பின் நடராச முதலியார் நிர்வாகம் செய்தார். இவர்களது பரம்பரையினர் இன்றும் இருக்கின்றனர். சொத்துக்கள் பராதீனம் செய்யப்பட்டு மடமும் இடிபாட்டிற்கு வந்து விட்டது.

18. இராமேச்வர ஆதீனம்

இவ்வாதீனம் இன்று இருக்குமிடமும் தெரியவில்லை.

(குறிப்பு : ''சைவ ஆதீனங்கள்'' பற்றிய இப்பகுதி முழுமையும் தவத்திரு ஊரன் அடிகள் எழுதிய ''சைவ ஆதீனங்கள்'' என்ற நூலிலிருந்து எடுக்கப் பட்டது.)

நன்றி : சைவ ஆதீனங்கள் - ஊரன் அடிகள்

■■■

இரண்டாம் பகுதி

தலங்கள் தோறும் சைவம்

1. சிதம்பரம்

நாட்டியாஞ்சலி

சிதம்பரம் = சித் + அம்பலம் (சிற்றம் பலம்)

அம்பலத்தில் (சபையில்) சித் அல்லது பூரண அறிவு நடராஜர் வடிவத்தில் உலகுயிர்க்கெல்லாம் வீடுபேறளிக்க (முத்தியளிக்க) பேரின்ப நிலையில் ஆனந்த நடனம் ஆடிக்கொண்டேயிருக் கிறது. சிதம்பரத்தில் மட்டுமல்ல பிரபஞ்சம் முழுமையுமே நடப்பது அவன் கூத்தே. எங்கும் சிதம்பரம்; எங்கும் திருநட்டம்.

ஆடல்வல்லானைப் பக்தர்கள் மலர் தூவி வழிபடுகிறார்கள். ஓதுவா மூர்த்தி கள் பண்ணிசைத்து வணங்குகின்றார்கள். ஆடல்வல்லானை ஆடல் மூலமாகவே வழிபடுவது பன்மடங்கு சிறப்புடையது தானே! அத்தகைய ஆடல் வழிபாடு 25 ஆண்டுகளாகச் சிதம்பரம் திருக்கோயி லில் நடைபெற்று வருகிறது.

திருக்கோயில்களில் ஆடல் என்பது அண்மைக் காலத்தில்தான் அருகிப் போனது. சுமார் 60 ஆண்டுகளுக்கு முன்பு வரை ஆடல் இறைவழிபாட்டின் ஓர் அங்கமாகவே இருந்து வந்தது. பின்பு ஏற்பட்ட சமுதாய மாற்றங்களினால் சிற்றூர்களிலும், சிறு நகரங்களிலும்



மோகினியாட்டம்


மணிப்புரி

பராமரிக்கப்பட்டு வந்த ஆடற்கலை பெருநகரங்களுக்குக் குடிபெயர்ந்து அங்கு அரங்குகளில் ஆடப்பெற்ற போது சூழ்நிலை காரணமாக அதன் தெய்விக நோக்கம் குறைந்து போனதோ என்ற ஓர் ஐயமும் எழத் தோன்றியது. இந்த நிலையில்தான் ஆடல் கலைக்கே உரிய உயிரோட்டம் திரும்பக் கிடைக்கக் கோயில்களிலே ஆடல் நிகழ்ச்சிகள் நிகழ்த்தப் பெறவேண்டும் என்ற எண்ணத்தோடு ஆடல் கலைஞர்கள் தாங்கள் நாட்டியம் மூலம் இறைவனுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி அமைத்திடும் எண்ணம் தோன்றியது. இதை நிகழ்த்திட ஆடலரசனான அருள்மிகு நடராஜர் குடி கொண்டிருக்கும் சிதம்பரம் ஆலயமே பொருத்தம் என எண்ணி அறிஞர்களான கபிலா வாத்ஸயாயனா, டாக்டர் ஆர். நாகசாமி ஆகியோர் நினைத்து அச்சமயம் தென்னாற்காடு மாவட்ட ஆட்சித்தலைவராக இருந்த திருமதி சி.கே. கரியாலியின் ஒத்துழைப்புடன் அமரர் ஜி. வாகீசம்பிள்ளை அவர்களைத் தலைவராகவும், அமரர் டாக்டர் கே. அரங்கசாமிப்பிள்ளை அவர்களைத் துணைத் தலைவராகவும் இதர சிதம்பர நகரப் பிரமுகர்கள் துணையோடும் நாட்டியாஞ்சலி விழாவினைத் தொடங்கினர்.

தொடக்கத்தில் மூன்று நாட்களுக்கு நாட்டியாஞ்சலி நடைபெற்றது. இதற்குக் கிடைத்த வரவேற்பினைக் கருத்தில் கொண்டு ஆண்டுதோறும் மகாசிவ ராத்திரியன்று தொடங்கி ஐந்து நாட்கள் நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டு ஆற்காடு நாட்டியாஞ்சலி அறக்கட்டளையும் அமைக்கப்பட்டது. அதிலிருந்து ஆண்டுதோறும் பாரதத்தில் பல்வேறு மாநிலங்களிலிருந்து குஜராத் முதல் இம்பால்வரை காஷ்மீரம் முதல் குமரி வரை உள்ள அனைத்து மாநில, அனைத்துவகை ஆடல் கலைஞர்களும் (ஒடிசி, குச்சிப்புடி, பரதநாட்டியம் போன்றவை) சிதம்பரம் வரவேண்டும், அஞ்சலி செலுத்த வேண்டும் என்ற ஆவலைத் தூண்டும் விழாவாக வளர்ச்சி அடைந்துள்ளது. இன்று வெளிநாடுகளிலிருந்து கலைஞர்கள் பங்கேற்கும் மிகப்பெரிய திருவிழாவாக, பாரத நாட்டிலேயே அதிக அளவில் ஆடல் கலைஞர்கள் ஒரே இடத்தில் கூடி அஞ்சலி செலுத்தும் விழா இதுதான் என்கிற அளவில் சிறப்பு நிலையை எட்டியுள்ளது. ஆண்டுதோறும் 300க்கும் மேற்பட்ட ஆடல் கலைஞர்கள் 200க்கும் மேற்பட்ட பக்கவாத்திய கலைஞர்கள் பங்கேற்கின்ற விழாவாக உள்ளது. இங்கு பங்குபெறும் கலைஞர்கள் ஒலிநாடா இசையைப் பயன்படுத்துவதில்லை. ஊதியம் வேண்டும் என்று கேட்பதுமில்லை. இறைவன் ஆலயத்துள் தரிசனமும் ஆடல் அஞ்சலியுமே எங்களுக்கு மனநிறைவு என்று கூறுகிறார்கள்.

இந்தியாவில் நாட்டியாஞ்சலி சிதம்பரத்தில் மட்டும் நடப்பதில்லை. கஜீராஹோ போன்ற இடங்களிலும் உலகச் சுற்றுலா பயணிகளைக் கவர நாட்டியாஞ்சலி ஆண்டுதோறும் நடைபெறுகிறது. ஆனால் அங்கு பங்குபெறும் கலைஞர்கள் சன்மானம் பெறுகிறார்கள். பொருள் நோக்கி செய்யப்படும் அஞ்சலி அது. இது அருள் நோக்கி செலுத்தப்படும் புனித அஞ்சலி. இங்கு வரும் கலைஞர்கள் பணம் எதிர்பார்ப்பது இல்லை.

இன்று ஐந்து நட்சத்திர ஓட்டல்களில் கூட நாட்டிய நிகழ்ச்சி நடைபெறுகிறது. அந்தச் சூழலை நினைத்துப் பாருங்கள். மேசையிலே அசைவ உணவு, மது; கையில் சிகரெட். ''எந்நேரமும் உன் சந்நிதியில் இருக்க வேண்டுமய்யா'' என்ற பாடலுக்கு இந்த சூழலில் பதம்பிடித்து ஆடினால் எப்படி இருக்கும்? நடராஜர் சந்நிதியில் ஆடல்வல்லான் திருமுன் இந்தப்

பாடலுக்குப் பதம்பிடித்து ஆடுவது தானே பொருத்தமாக இருக்கும்!

அதுதானே உண்மையான அஞ்சலி!

மகாசிவராத்திரி நாள்...?

சிதம்பரம் கிழக்கு கோபுரம்...

பரந்து விரிந்த மணற்பரப்பு...

ஐயாயிரத்துக்கு மேற்பட்டவர்கள்... ஏழை பணக்காரார் வேறுபாடின்றி... அதிகாரிகள், வணிகர்கள், தொழிலதிபர்கள், வழக்கறிஞர்கள், ஆண்கள், பெண்கள், முதியவர்கள், இளைஞர்கள், குழந்தைகள், மணல் தரையில் சம்மணமிட்டு அமர்ந்து நிகழ்ச்சி தொடங்குவதற்காகக் காத்திருக்கிறார்கள். என்ன ஓர் அரிய காட்சி! தஞ்சாவூர் பி. ஆர் திலகம் அவர்களின் தியாகேசர் குறவஞ்சி - பக்தி ரசம் தோய்ந்து உருவாக்கப்பட்ட அற்புதக் காவியம். யாமினி கிருட்டிண மூர்த்தி, சித்ரா விஸ்வேஸ்வரன், அலர்மேல்வள்ளி, லட்சுமிவிசுவநாதன், தனஞ்சயன், சாந்தா தனஞ்சயன் என இந்தியாவின் முக்கிய நடனமணிகள் ஆறுபேர் ஒரு சேர இணைந்து ஆடிய அற்புத நாட்டிய நாடகம்!

1983-இல் ஏப்ரல் 24, 25, 26...

36 நடன மணிகள் அரங்கேறினர்.

பத்மா சுப்பிரமணியம் பதஞ்சலி நடம் என அபிநயம் பிடிக்கிறார். தனஞ்சயன் குழுவினர் லலிதா சமஸ்ரநாமத்தில் ஒரு பகுதியை ஆடிக் காட்டுகின்றனர். சித்ரா விஸ்வேஸ்வரன் திருநீலகண்ட நாயனார் வரலாற்றையே கண் முன்னே கொண்டு வருகிறார். பத்மா அனந்தராமன், ராணி சுகந்தா, அனிதா ராமச்சந்திரன் ஆகியோர் ஒடிசியின் பன்முகத்தன்மையைச் சித்திரிக்கின்றனர். மாலா கணபதி மோகினி ஆட்டம் ஆடுகிறார். நிறைவு நாளன்று சித்ரா விஸ்வேஸ்வரனும் அவரது மாணவியரும் ஆடிக்கொண்டே பிராகாரத்தை வலம் வந்து ஆடல் வல்லான் முன்னும் ஆடி முழு அஞ்சலி செலுத்துகின்றனர்.

1984 மே 13 முதல் 16 வரை...

40 நடன மாதர்கள்

திருவாரூர் தியாகேசப் பெருமானின் மேல் தஞ்சாவூர் பொன்னையாப் பிள்ளை இயற்றி ''மோகமான என் மீதில் நீ மோடி செய்யலாமா?'' என்ற பாடலுக்கு (வர்ணம்) அலர்மேல்வள்ளி பிடித்த பதம் இந்த ஆண்டு நாட்டியாஞ்சலியின் மகுடத்தில் வைத்த வைரக்கல் ஆகும்.'' "with perfect foot-work, the rhythmic jati and flowing into movements blending naturally with suggestive bhava, Valli personified elegant grace" என்கிறார் இரா. நாகசாமி. அலர்மேல் வள்ளி ஒடிசி நடனத்திலும் தேர்ந்தவர். ஆனால் இரு வகைப் பாணிகளும் ஒன்றுடன் ஒன்று எந்த சமயத்திலும் கலக்காமல் தன் கட்டுக்குள் வைத்திருந்தார்.

சித்ரா விஸ்வேஸ்வரன் கோபால கிருஷ்ண பாரதியின் நந்தன் சரித்திரத்திலிருந்து ''வருகலாமோ ஐயா'' என்ற பாடலுக்குப் பதம் பிடித்து ஆடியதற்கு இணையேதுமில்லை. அபிநயத்தின் நெளிவு சுளிவுக்குள் நிருத்தத்தை அடக்கி நந்தன் பக்தியை அற்புதமாகப் படம் பிடித்துக் காட்டினார்.

1985-க்குப் பிறகு தான் நாட்டியாஞ்சலி சிவராத்திரியன்று நடைபெறுவதாயிற்று. ''மாயே மாயன் சோதரியே'' என்று இராஜேஸ்வரி இசைக்க சுதாராணி ரகுபதி பிடித்த அபிநயம் சிவகாமியையே ரசிகர்கள் முன் கொண்டு வந்து நிறுத்தி விட்டது. பொன்னையாப் பிள்ளையின் ''சுவாமி நீ'' என்ற பாடலுக்குப் பதம் பிடித்த அலர்மேல்வள்ளி அவையோரை வியக்க வைத்து விட்டார். ''எந்நேரமும் உந்தன் சந்நிதியில் இருக்க வேண்டும் ஐயா'' என்ற கோபாலகிருஷ்ண பாரதியின் பக்திப் பனுவலை அலர்

மேல் வள்ளி ஆடிய பொழுது அவரின் தொண்டைக் குழியுள் ஓர் உருண்டை மேலெழும்புவதனைக் காண முடிந்தது. அப்படி ஒரு பக்தி பரவச நிலை!

பத்மா சுப்பிரமணியம் அவர்கள் தேவாரப் பாடல்களைத் தொகுத்து ''பண்ணும் பரதமும்'' என்ற நாட்டிய நாடகத்தை வழங்கினார். ''சிறையாரும் மடக்கிளியே நீ வா'' என்று ஆடிய பொழுது கிளியே பறந்து வந்து கையில் உட்கார்ந்து விட்டது. நித்தமும் உண்ணப் பால் தருவேன் என்று கெஞ்சி கிளிக்கு பால் ஊட்டியபோது அவையோர் தாங் களே அந்த சம்பந்தக் காதலியாக மாறி விட்டனர். ''சிவபெருமான் பெயரை எனக்கொருகால் சொல்லாயோ?'' என்ற நிலையில் கழிவிரக்கம் மீதூர்ந்து நாயக நாயகி பாவத்தின் உச்சக்கட்டப் பேரின்பமே கிட்டிவிட்டது.

இரா. நாகசாமி அவர்களின் இராஜ ராஜேஸ்வர விஜயம் நாட்டிய நாடகம் நாட்டியாஞ்சலிக்காகவே புதிதாக தயாரிக்கப்பட்டது.

மறைதிரு ஃபிரான்சிஸ் பர்போசா என்ற கிறிஸ்துவப் பாதிரியார் ஆடியது நாட்டியமும் துறவும் கலந்த அரிய கலவையாக இருந்தது. அண்ணாமலை பல்கலைக்கழக பதிவாளர் அரு. இலக்குவன் இந்த வயதிலும் அப்படி ஒரு நடனமாடினார்.

துர்காலாலின் கதக் இந்த ஆண்டின் புது வரவு. அவர் கண்கள் பேசின. இசைக்கேற்ப துர்காலாலின் பாதச் சலங்கையொலி ஒலிக்குமாறு ஆடியது அற்புத அனுபவம். துர்காலால் அரங்கில் மட்டும் ஆடவில்லை. ஆலயத்திலும் ஆடினார். பள்ளியறைக்குப் பெருமானை எடுத்துச் செல்லுகையில் துர்காலால் ஆடிய நடனம் ஓர் தெய்விக அனுபவம். இதற்கு இணையான ஒரு காட்சியைக் கூறவே முடியாது. துர்காலால் நாட்டி யானுபவத்தில் தன்னை இழந்தார். தலைப்பட்டார் தலைவன் தாளே!

அதே போல பேராசிரியர் சந்திர சேகரன் அவர்கள் இறைவன் சந்நிதியில் ஆடிய ''நடனமாடினார்'' என்ற ஆடலும் மறக்கமுடியாத ஒன்று. பேராசிரியர் சந்திரசேகரன் பரோடாவிலிருந்து தனது மாணவ மாணவியரை அழைத்து வந்திருந்தார். ''ஆடும் அழகைப் பாரடி'' என்று சந்திரசேகரனார் பாட அவரது மகள் சித்ரா அற்புதமாக ஆடினார். எட்டு வயதே நிரம்பிய பிறவி சர்க்கரை நோயாளியான லட்சுமி சுந்தரம் இன்சுலின் ஊசி போட்டு விட்டு வந்து ஆடியது அனைவரையும் உருக்கியது.

1985க்குப் பிறகு ஆண்டுதோறும் நாட்டியாஞ்சலி சிவராத்திரி தொடங்கி ஐந்து நாட்கள் நடக்கலாயிற்று.

1988-இல் கலாக்ஷேத்ரா நாட்டியக் குழுவினரின் கண்ணப்பர் குறவஞ்சி, கதக்களி, தக்ஷயக்ஞம் - ராதாவின் நௌகா சரித்திரம் உள்பட பல நடன நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

1990 இல் சித்ரா விஸ்வேஸ்வரன், ஷெரான் லோவென் (அமெரிக்கா ஒடிசி) வசந்த லட்சுமி - நரசிம்மாச்சாரி, பம்பாய் இராஜேஸ்வரி, கலாமந்திர் (குற்றாலக் குறவஞ்சி) ஆகியோரின் நடனங்கள் இடம் பெற்றன. இரா. நாகசாமி அவர்கள் நாட்டியாஞ்சலிக்காகவே சுந்தரர் சரித் திரம் நாட்டிய நாடகத்தைத் தயாரித்து அரங்கேற்றினார். சூரிய நாராயண மூர்த்தியின் நாவுக்கரசர் சரித்திரம் அற்புதப் படைப்பாகும். ''கூற்றாயின வாறு'' என்ற பாடலுக்கு துடக்கி முடக்கி என்ற வரிகளுக்குச் சூலை நோயின் கொடுமையை அற்புத மாகப் படம் பிடித்துக் காட்டினார். அப்பர் பெருமான் பாடலில் கண்ணப்பர் பற்றிய செய்தியைக் கொண்ட ஒரு வரிக்கு கண்ணப்பர் வரலாறு முழுமையும் கொண்டு வந்து விட்டார்.

1997 இன் சிறப்பு நிகழ்ச்சிகள்:

குச்சிப்புடி, ஒடிசி, கதக், மோகினி ஆட்டம், ஊர்மிளா சத்தியநாராயணன், பத்மா சுப்பிரமணியம், சூரியநாராயண மூர்த்தி, சித்ரா விஸ்வேஸ்வரன் ஆகியோரின் நடனங்கள்; கற்பகம் செல்வக் கணபதியின் தேவார நாட்டியம்; சுரவந்திதா குருவின் நந்தனார் சரித்திரம் ஆகியவை குறிப்பிடத்தக்கவை. சுதா ராணி ரகுபதி, அனிதா ரத்தினம், ப்ரீதா ரத்தினம், லக்ஷ்மண் ஆகியோர் இணைந்து ஆடிய சக்தி பிரபாவம் நாட்டிய நாடகம் இந்த ஆண்டின் முக்கிய நிகழ்ச்சியாகும்.

1998 - ஒடிசி, கதக், குச்சுப்புடி, என பத்மா சுப்பிரமணியம், சுதாராணி ரகுபதி நடனங்கள்.

2000.

200 நடனக் கலைஞர்கள்

300 உடன் வாசிப்போர்...

ஒடிசி, குச்சுப்புடி, கதக், பரத நாட்டியம்...

அண்ணாமலைப் பல்கலைக்கழக மாணவ மாணவியரின் ''தோடுடைய செவியன்'' என்ற பாடலுக்கான ஆடலுடன் தொடங்கியது, இவ்வாண்டு நாட்டியாஞ்சலி. குரு காரத் சரண் கிரியின் மாணவர்களின் ஒடிசி நடனம் இவ்வாண்டின் சிறப்பு நிகழ்ச்சியாகும். சிவபெருமானின் பல்வேறு வடிவங்களைத் தங்கள் நடனம் மூலம் அவையோர் முன் கொண்டு வந்து நிறுத்தினர். பத்மா சுப்பிரமணியம் திருஞான சம்பந்தப் பெருமானின் திருக்கேதாரப் பாசுரத்திற்குப் பதம் பிடிக்கையில் இயற்கையின் பல்வேறு காட்சிகளைப் படம் பிடித்துக் காட்டினார். சங்கீதா கபிலன் - கயல்விழி கபிலன் சகோதரிகள் இருவரும் திருமந்திரம் காட்டும் சக்தி தாண்டவம், திருக்கூத்து தாண்டவம் மற்றும் முடிந்த முடிபான நாதாந்த நடனத்தை ஆடி மெய்சிலிர்க்க வைத்தனர். பிரியதர்சினி அவர்கள். ''ஆடும் சிதம்பர மோ'' என்ற பாடலுக்குத் தன்னுடைய அற்புத ந்ருத்தத்தாலும், அபிநயத்தாலும் சதானந்த தாண்டவ மூர்த்தியின் சீர்மிகு ஆடலை ஆடிப் பரவசப்படுத்தினார். ''ஆரார் ஆசைப் படார்'' என்ற முத்துத் தாண்டவரின் பாடலுக்குப் பக்திரசம் சொட்ட சொட்டப் பதம் பிடித்தார்.

ராணி கர்ணாவின் ''கதக்கில் செய்ப்பூர், இலக்னெள கரானாக்கு இரண்டும் அழகுடன் கலந்திருந்தது. சிவபெருமானின் பல்வேறு வடிவங்கள், சிவதாண்டவம், தக்ஷயக்ஞம் விறுவிறுப்புடனும் திறமையுடனும் ஆடப்பட்டவை. கிருஷ்ணகுமாரி நரேந்திரனின் மாணவியர் தங்கள் பஞ்சபூத கிரனாவளியில் (முத்துசாமி தீட்சதர்) பஞ்ச பூதங்களையும் பஞ்சபூதத் தலங்களையும் அரங்கிற்கே கொண்டு வந்து விட்டனர். இந்த நாட்டிய நாடகம் உற்சாகத்துடனும், உணர்வு பூர்வமாகவும், முழு ஆற்றலுடனும் அரங்கேறியது. நீனா பிரசாத்தின் மோகினி ஆட்டம் அழகு, திறமை, மேன்மைக்கு எடுத்துக்காட்டாக விளங்கியது. திருச்சூர் ஜனார்த்தனனின் எங்கும் பரந்திருக்கும் சிவபெருமானைப் பற்றி வருணிக்கும் பாடலுக்கு வரிக்கு வரி விரிவாக ஆடியது மறக்க முடியா ஒன்றாகும். கருணா ஜலதே, சகஸ்ர கோடி ஞான பாலா என்ற வரிகளை விரித்து ஆடியது நெஞ்சைக் கவர்ந்தது.''

இது தவிர மற்றுமோர் அருமையான படைப்பு ரோஜா கண்ணனுடையது ஆகும். விறுவிறுப்பான ''நந்தி சொல்'', சிவ தியானம், வர்ணம் என்று அவர் ஆடிய பாங்கை'' "The Hindu" இவ்வாறு விவரிக்கிறது. "Roja presented with crisp execution of the nrita aspects and gentle handling of the interpretive areas"

சிவபெருமானைப் போற்றும் பாசுரத்துடன் தன் நடனத்தை ரோஜா முடித்தார்.

2002...

ஒடிசி, குச்சிபுடி, கதக், மோகினி ஆட்டம், பரத நாட்டியம்... பத்மா சுப்பிரமணியம், ஷோபனா, சித்ரா விஸ்வேஸ்வரன், ஊர்மிளா சத்ய நாராயணன்...

ஷோபனா நரேனின் கதக், பாரதி சிவாஜியின் மோகினி ஆட்டம், கிரண் ஸெகலின் ஒடிசி மூன்றும் கலந்த ஜுகல்பந்தி இவ்வாண்டின் சிறப்பு நிகழ்ச்சி ஆகும்.

2003...

மோகினி ஆட்டம், குச்சிப்புடி, ஒடிசி, கதக், யக்ஷகானம், ஊர்மிளா சத்ய நாராயணன், லக்ஷ்மணன், ஜாகிர் உசேன்....

சித்ரா விஸ்வேஸ்வரன் குழுவினரின் ''கோளறு பதிகம்'' நாட்டிய நாடகம் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும்.

2004


ஒடிசி, கதக், மோகினி ஆட்டம், குச்சிபுடி, கௌடிய நிருத்தம்... சோனால் மான்சிங், ஜாகிர் உசேன், சித்ரா விஸ்வேஸ்வரன்...

சைலஜா சீடர்களின் ''சத்யம் சிவம் சுந்தரம்'' (குச்சிபுடி) அனிதா குஹாவின் ''மகாதேவம் மகாசேனம் பஜே'' என இரு நாட்டிய நாடகங்கள் அரங்கேறின.

2005

ஒடிசி, குச்சிபுடி, கதக், மோகினி ஆட்டம், பரதநாட்டியம்....

பார்வதி ரவி கண்டசாலாவின் ''அருளாடல்'' மீனாட்சி சித்தரஞ்சனின் ''சுந்தரர்'', ஜப்பானைச் சேர்ந்த ஜுன்



யக்ஷ கானம்



நாட்டிய நாடகம்




நாட்டியாஞ்சலி விழாக் குழுவினர்

ஓபியின் பரதநாட்டியம் இவ்வாண்டின் குறிப்பிடத்தக்க நடன நிகழ்ச்சிகள் ஆகும்.

இரத்தினக் குடும்பம்

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் சிதம்பரத்தில் சைவம் செழிக்கப்



இரத்தினசாமி செட்டியார்

பணிபுரிந்தவர்கள் இரண்டு இரத்தினங்கள் ஆவர். ஓர் இரத்தினம் தரும பூஷணம் செ. இரத்தினசாமி செட்டியார் அவர்கள். மற்றோர் இரத்தினம் ஆடூர் எம். இரத்தின சபாபதிப் பிள்ளை அவர்கள். இரு இரத்தினங்களும் இணைந்து தில்லை ஆடல்வல்லான் திருக்கோயிலுக்கு ஆற்றிய பணிகள் அளப்பரியன. இரத்தினசாமிச் செட்டியார் ஆற்றிய பணிகள் வருமாறு (1) 1936-இல் ஸ்ரீ நடராஜர் கோயில் கனக சபைக்கு மேல் முகப்பில் தங்கரேக்கினால் ஆன சிற்சபை; சுவாமி, அம்பாள் அம்மையப்பன் திருவுருவங்களைக் கருவறையுள் இருப்பது போலவே செய்து கண்ணாடிப் பேழையுள் வைத்து கனகசபை முகப்பின் அருகே அமைத்தல் (2) 17.7.1955-இல் நடைபெற்ற சபா நாயகர் கும்பாபிஷேகக் குழுவில் பொருளாளராக இருந்து ஏராள நிதி வழங்கல் (3) 11.6.1967-இல் பாண்டி நாயகம் கோயில், ஆயிரங்கால் மண்டபம், முருகன் கோயில் கும்பாபிஷேகத்திற்குப் பெரும்பான்மையளவு நிதி தருதல் (4) 15.5.1951-இல் ஸ்ரீ மூலநாதர் கும்பாபிஷேகத்திற்கு பெரும்பான்மையளவு நிதி தருதல் (4) 15.5.1951-இல் ஸ்ரீ மூலநாதர் கும்பாபிஷேகத்திற்கு உதவுதல் (5) 17.5.1953 நடராஜர் பள்ளியறைக்குப் போகும் பாதுகை கும்பாபிஷேகச் செலவு, இழைப்பு வேலைக்குரிய தங்கம், வெள்ளி (6) 25.8.1965-இல் நடந்த கற்பக விநாயகர் கும்பாபிஷேகத்தில் பெரும் பங்கு (7) தேர்த்தரிசன மஞ்சம் புதுப்பித்த போதும், சாமி அம்பாள் வெள்ளி மஞ்சம் செய்தபோதும், குஞ்சிதபாதம் நவரத்தினங்களால் இழைத்தபோதும் கூடுதலாக ஆன பல ஆயிரங்களை வழங்குதல், திருப்பணிக்கு உதவுதல் தவிர ஞானதானமாக செட்டியார் அவர்கள் செய்த பணிகள் பலவாகும் (1) 1953-இல் தில்லைத் திருப்புகழ் சபை அமைத்துத் திங்கள்தோறும் தக்க அறிஞர்களை அழைத்து விரிவுரை செய்வித்தல் 2) ஒவ்வொரு மாதமும் திருவாதிரை நட்சத்திரத்தில் சமயச் சொற்பொழிவு நடத்துதல், அதில் ஆண்டு விழா நடத்தித் தொடர்ந்து 20 நாட்களுக்கு கந்தபுராணம், திருவிளையாடற் புராணம் சொல்ல வைத்தல், 3) சுமார் கால் நூற்றாண்டுக் காலமாக இளமையாக்கினார் கோயிலில் வழிபாடு தொடங்கி ஒவ்வொரு ஞாயிறும் பெரிய புராணம், திருவிளை யாடற் புராணம் நடத்துதல், ஆவி பிரியும் போதும், சிவகாமசுந்தரி அம்பாள் குடமுழுக்குப் பணி நினைவாகவே இருந்து அம்பிகையின் நாமம் நவின்று இறைவனடி சேர்ந்தார்.

(பிறப்பு - 9.12.1907; மறைவு - 7.11.1971; பிறந்த ஊர் - சிதம்பரம்; பெற்றோர் - செல்லஞ் செட்டியார், காமாட்சி அம்மாள்)

தந்தையார் விட்டுச் சென்ற பணியினை - சிவகாமியம்மன் குடநீராட்டு விழா - மூத்த மகனார் பாலசுப்பிர மணியனார் (16.5.1951) குழுவின் செயலர், பொருளராய் இருந்து குடமுழுக்கினை நடத்தி முடித்தார். திருப்புகழ் சபையினையும் வார வழிபாட்டு மன்றத்தையும் தொடர்ந்து நடத்தி வருகிறார்.

செட்டியார் அவர்களின் இரண்டாவது மகனார் இரத்தின. இராமநாதன் செட்டியார் அவர்களும் (2.5.1954) தமையனாரைப் போலவே தந்தையார் விட்டுச் சென்ற பணிகளைத் தொடர்கிறார் (1) 1987-இல் வாகீசம் பிள்ளை அவர்களுடன் இணைந்து சிதம்பரம் நடராஜர் கோயில் குடமுழுக்குப் பெருவிழா எடுத்தல் (2) சிவகாமி அம்மன், பாண்டிய நாயகர் கோயில் திருப்பணிகளைச் செய்தல், சிதம்பரத்தில் நடக்கும் சேக்கிழார் அறக்கட்டளை, நாட்டியாஞ்சலி, சேக்கிழார் விழா என எந்தச் சமய விழாவாயினும் ராமநாதன் செட்டியார் ஈடுபடாமல் இருப்பது இல்லை. திருக்கயிலாயம் தரிசனம் செய்து வந்த புண்ணியர். ஸ்ரீ தருமையா தீனம் வெளியிட்ட பன்னிரு திருமுறை வெளியீட்டுக்கு ஒரு திருமுறைக்கான தொகை ஒரு லட்ச ரூபாய் கொடுத்தார்.

சிதம்பரத்தில் இரு தருமபூஷணங்கள், இருபெரும் சுடர்களாக இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் ஒளிர்ந்தனர். இருவரும் இரத்தினங்கள், மனிதர்களில் இரத்தினங்கள். ஒருவர் இரத்தினசபாபதி; மற்றொருவர் இரத்தினசாமி. ஒருவர் பிள்ளை; இன்னொருவர் செட்டியார். இருவரும் இரட்டையர்கள் என இணைந்தனர்; இயங்கினர். சிதம்பரம் கோயில் திருப்பணியின் இருதூண்கள். ஊனும் உயிரும் ஒன்றினர். ஓங்கினர். தமிழுலகின் இருமணிகள்; சைவ உலகின் திருச்சுடர்கள் என்கிறார் மயில்வாகனனார்.



எம். இரத்தினசபாபதி பிள்ளை

7.7.1955-இல் நடைபெற்ற நடராசர் கோயில் மகாகும்பாபிஷேகக் குழுவின் தலைவராகப் பிள்ளையவர்களும், பொருளாளராகச் செட்டியார் அவர்களும் பணியாற்றினர். கும்பாபிடேகச் செலவு ஏழு லட்சம் ரூபாயில் முதலில் ஒரு லட்சம் உவந்தளித்தவர் பிள்ளையவர்களே. 60,000 ரூபாயில் வைரப் பதக்கம் செய்தளித்தார். இவர்களது துணைவியார் சிவகாமியம்மனுக்கு 50,000 ரூபாய் பெறுமானமுள்ள வைரத்திருமாங்கல்ய மாலை அளித்தார். உற்சவர் வீதிவலம் வரப்பெரும் செலவில் ஊர்தி ஒன்றும் அளித்தார்கள். நடராசர் கோயில் ஆயிரக்கால் மண்டபத் திருப்பணிக்கான ரூபாய் 3 லட்சம் செலவிட்டுள்ளார்.

''நடராஜா'' என விளித்து இரு கரங்களால் வணங்கி அம்பலவன் நினைவுடனே ஆவிபிரிந்தது.

(பிறப்பு - 30.3.1881; மறைவு - 5.2.1959; பிறந்த ஊர் - ஆடூர்; பெற்றோர் - மங்களம்பிள்ளை, மீனாட்சியம்மாள்)

இவரது மகனார் திரு. ஆர். இராமலிங்கம் பிள்ளை (6.7.1925) 1983 முதல் திருக்கோயில் திருப்பணிகளில் தலைமையேற்றுச் செயல்பட்டு வந்தார். 1992-இல் நடைபெற்ற ஓமாம்புலியூர் திருக்கோயில் குடமுழுக்கிற்குப் பெரிதும் துணைபுரிந்தார்.

ஜி. வாகீசம் பிள்ளை

சிதம்பரம் கோயில் திருப்பணிக்கு உதவிய சைவப் புரவலர்களைப் பற்றியே தனிநூல் வெளியிடலாம். இந்தப்




புனிதப் பட்டியலில் இடம்பெறும் மற்றுமொரு பெரியவர் அமரர் ஜி. வாகீசம் பிள்ளையவர்கள். சிதம்பரம் திருக்கோயில் திருப்பணியே தனது வாழ்நாள் குறிக்கோளாகக் கொண்டிருந் தார்கள். அலுவலக வேலை போல காலை 10.00 மணிக்குக் கோயில் அலுவலகத்திற்குச் சென்றுவிடுவார்கள். அன்றைய பணி முடிந்தபின்தான் வீடு திரும்புவார்கள். கணக்கிலும் முழு ஒழுங்கு. நடுவில் சற்று உடல் நலம் குன்றினாலும் விடாது சென்று பணி முடித்தார்கள். 11.2.1987-இல் குட முழுக்கு நடைபெற்றது. 21.2.1987-இல் இறை வனடி சேர்ந்தார்கள்.

1955,1974 ஆண்டுகளில் நடைபெற்ற நடராஜர் கோயில் திருப்பணிகளிலும் பிள்ளையவர்கள் பெரும் தொண்டு ஆற்றியுள்ளார்கள். 1984-இல் திருநாரை யூர் திருக்கோயில் கும்பாபிஷேகத் தையும் நடத்தினார்கள். திருக்கோயில் களில் வில்வமரம் வளர்க்க வேண்டும் என்ற அடிப்படையில் 6000 வில்வக் கன்றுகளை தமிழ்நாட்டுக் கோயில் களுக்கு வழங்கினார்கள். திருவாமூரில் ஆண்டுதோறும் சித்திரைச் சதயத்தன்று இவர்களும் திரு. எஸ். திருநாவுக்கரசு பிள்ளையவர்களும் குடும்பத்துடன் சென்று ''அப்பர் விழா'' நடத்தி வந்தது வரலாற்றில் இடம் பெற வேண்டிய ஒன்று. அக்காலத்தில் கழிப்பறை வசதி கூட இல்லாத கிராமம். சிதம்பரத்தி லிருந்து மூன்று நாட்களுக்குத் தேவை யான மளிகைச் சாமான்கள், காய்கறிகள் எடுத்துக் கொண்டு தங்கும் வசதி இல்லாத அவ்வூரிலேயே குடும்பத்துடன் இரவிலும் தங்கி விழா நடத்தியது சைவ வரலாற்றில் ஒரு பொன்னேடாகும்.

(பிறப்பு : 15.8.1915; மறைவு - 21.2.1987; ஊர் - பின்னலூர், சிதம்பரம் வட்டம்; பெற்றோர் - கணபதிப் பிள்ளை - கனகாம்பாள்)

எஸ். திருநாவுக்கரசுபிள்ளை



அமரர் வாகீசம்பிள்ளையவர்களின் வரலாற்றோடு பின்னிப் பிணைந்திருப் பது இவர்கள் வாழ்க்கை. இருபெரு மக்களும் திருவாமூர் அப்பர் திருவிழா வினை நாற்பது ஆண்டுகளாக நடத்தி வருவது மாபெரும் சாதனையாகும். அதே போல சிதம்பரம் திருக்கோயில் திருப்பணி, திருநாரையூர் கோயில் திருப்பணி ஆகிய இரண்டினுக்கும் இவர்கள் உறுதுணையாக இருந்திருக் கிறார்கள். இவர்கள் குடும்பக் கோயிலான சோமசுந்தரேசுவரர் திருக் கோயிலுக்கு இருமுறை குடநீராட்டு செய்திருக்கிறார்கள். திருநாரையூரில் தொடர்ந்து நம்பியாண்டார் நம்பி குரு பூசை விழாவை நடத்தி வருகிறார்கள். 1971-இல் திருமுறை மன்றம் தொடங்கி அதன் செயலாளராக இருந்து திருமுறை

வகுப்புகள், சைவ சித்தாந்த வகுப்புகள் நடத்துதல் தற்பொழுது திருவாசக விரிவுரை நடத்துதல் ஆகிய நிகழ்ச்சி களைச் செய்து வருகிறார்கள்.

சேக்கிழார் குரு பூசையின்போது அன்னம் பாலிப்பு செய்து வருகின் றார்கள். 1980-ஆம் ஆண்டில் அண்ணா மலைப் பல்கலைக் கழகத்தில் 25000 ரூபாய் செலவில் அறக்கட்டளை நிறுவி திருமுறை, சைவசித்தாந்த சொற் பொழிவுகள் நடத்த ஏற்பாடு செய்திருக் கிறார்கள்.

தருமையாதீன பன்னிரு திருமுறை வெளியீட்டுத் தொகுதியில் ஐந்தாம் திருமுறை பதிப்பு நிதியாக இலட்ச ரூபாய் வழங்கி உள்ளார்கள். 1999-இல் இராமேச்சுரத்தில் திருப்பனந்தாள் காசி மடத்தின் கிளை மடத் திருப்பணிக்கு லட்ச ரூபாய் வழங்கியுள்ளார்.

274 பாடல் பெற்ற தலங்கள், ஜோதிர்லிங்கத் தலங்கள், 1997-இல் திருக் கயிலாய யாத்திரை மேற் கொண்டிருக் கிறார்கள். இவர்களது துணைவியார் சிவகாமசுந்தரி அம்மையார் திருமுறை களை இசை யோடு பாடுவார்கள்.

தில்லையில் ஓர் அற்புத சைவக் குடும்பம்.

(பிறப்பு - 4.9.1925; பிறந்த ஊர் - புது விளாகம், சிதம்பரம் வட்டம். பெற்றோர் - சிவசுப்பிரமணியம் பிள்ளை, சேது அம்மாள்)

முத்து இராமலிங்கம் செட்டியார்

உழவாரம் மாநாடு. மாயூரநாதர் திருக்கோயிலின் வாயிலிலே அறுபத்து மூவர் அருள் வலத்திற்காக ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்தோம். விறுவிறு வென்று ஒரு சிவனடியார் வந்தார். நேராக அறுபத்து மூவர் திருவுருவப் படத்தருகே சென்று அங்கிருந்த ''ஆயுள் தொண்டர் படிவப் பேழை'' யை எடுத்துக் கொண்டு தலையில் சுமந்த



வாறே முன்னே நடந்தார். ஊர்வலம் அவரைப் பின் தொடர்ந்து வந்தது. ஊர்வலம் மாநாட்டு மேடையை நெருங்கியவுடன் மாயமாய் மறைந்து விட்டார். அவருடைய பணி முடிந்து விட்டது. இது ஆண்டுதோறும் நடக்கின்ற செயல். இதுவரை நான் அவரிடம் ஒரு வார்த்தை கூடப் பேசியதில்லை. நின்றால் தானே பேச! அவர் தான் கயிலைச் செல்வர் திருமுத்து. இராமலிங்கம் செட்டியார் அவர்கள்.

தமிழ்நாட்டில் இவர் கலந்து கொள்ளாத திருமுறை மாநாடே கிடையாது. ரிஷபக் கொடியேற்றுவார். அல்லது மாநாட்டினைத் தொடங்கி வைப்பார். தமிழகமெங்கும் இப்பெரு மானாருக்கு அப்படி ஒரு மதிப்பு.

தம் இல்லத்திற்கு வரும் சிவனடியார் களைச் சிவமாகவே பாவித்து வரவேற்று உபசரிப்பதில் தலை சிறந்து விளங்கு கிறார். பல மாவட்டங்களிலிருந்து குழு வாகவும் தனியாகவும் வரும் சிவனடியார் திருக்கூட்டம் இவர்கள் இல்லத்தையும் ஒரு வழிபடுதலமாக மதித்து வந்து தங்கும். மாதாமாதம் தமிழ் முதல் தேதி தோறும் ஒரு திருவிழா வாகவே இருந்து வருவதை இன்றும் காணலாம். தேவார பாராயணம், வேத பாராயணம், நாதசுரக் கச்சேரி, விநாயகர், வழிபாடு முதலியன நடைபெறும். எப்போதும் சிவ ஒலியும் திருமுறை

பாராயண ஒலியும், விருந்து உபசரிப்பு ஒலியும், வேத ஒலியும், நாத ஒலியும், நிரம்பியே காணப் பெறும். பூவின் நறுமணமும் மன நிறைவைத் தந்த வண்ணம் இருக்கும்; வரவேற்கும்.

இருபத்து நான்குக்கும் மேற்பட்ட கோயில் திருப்பணிகளில் இப்பெரு மகனார் பங்கு பெற்றுள்ளார். குத்தாலம் திருக்கோயிலில் உள்ள பஞ்சமூர்த்திகள், வாகனங்கள் புதுப்பிக்கவும் அறுபத்து மூவருக்கும் அபிஷேக ஆராதனை நடைபெற்று வரவும் அறக்கட்டளை நிறுவியுள்ளார்.

இவர்கள் இல்லத்தில் பன்னிரு திருமுறைகள் பலதடவை முற்றோதல் செய்துள்ளார். ஆண்டிற்கொருமுறை திருவாசக முற்றோதலும் நடைபெறும். இல்லத்தில் திருமந்திர விளக்கமும் நடைபெறுகிறது. 1971 முதல் தமிழ் மாதப் பிறப்பு நாளில் தம் இல்லத்தில் அன்னம் பாலிப்பு. பன்னிரு திருமுறை விண்ணப்பம் செய்தல் ஆகியன நிகழ்த்துகின்றார். யாரும் செய்யாத ஓர் அருஞ்செயலை நம் கயிலைச் செல்வர் செய்துள்ளார். திருமுறை அடிப் படையில் திருமணம் செய்வதை நாம் பார்த்திருக்கிறோம். ஆனால் திருமண விழாவே திருமுறை விழாவாக முதன் முதலில் செய்து காட்டிய பெருமை நம் கயிலைச் செல்வருக்கே உரியது. தம் குமாரர் முத்துக்குமரேசன் திருமணத்தின் முதல் நாள் தமிழகத்திலுள்ள குருமகா சந்நிதானங்கள், ஓதுவா மூர்த்திகள் சிவனடியார்கள் முதலானோர்களை அழைத்தார்கள். சிவபூசை, திருமுறை மாநாடு, யானை மேல் திருமுறை வீதியுலா, பள்ளி மாணவர்கள் அறுபத்து மூவர் வேடம் புனைந்து வீதி உலா வருதல் முதலானவற்றை மிகச் சிறப்பாக நடத்தினார்கள். இதனால் இன்றும் பல சைவர்கள் வீட்டுத் திருமணத்திற்கு முன் சிவபூசை, திருமுறை பாராயணம் செய்து வரும் வழக்கம் ஏற்பட்டது.

1976-இல் சமய தீட்சையும், 1984 விசேட தீட்சையும் பெற்றார்கள். 1976-இல் காசி, கேதாரம், நேபாள யாத்திரையும் 1980-இல் அமர்நாத், கங்கோத்ரி, யமுனோத்ரி யாத்திரையும் 1984-இல் திருக்கயிலாய யாத்திரையும் மேற்கொண்டார்கள்.

''சிந்தைதவிர அம்மனை யதனில்

பண்ணுடன் திருமுறைப் பாரா யணமுடன்

மண்ணகம் சிறக்க மகிழ் சிவபூசை

செய்திடும் சிறப்பு செழித்து வளர்க''

எனத் தில்லைத் தமிழ் மன்றத்தார் வாழ்த்துகின்றனர். நாமும் வாழ்த்தி வணங்குவோம். (பிறப்பு - 1939; பிறந்த ஊர் - அஞ்சுக் கோட்டை, திருவாடானை அருகில்; பெற்றோர் - மா. முத்துக் கருப்பஞ் செட்டியார், சிவநாயகி அம்மையார்)

சிவப்பிரகாசம் பிள்ளை

தொண்டர்கள், அறிஞர்கள், புரவலர் கள் மலிந்த நகரம் சிதம்பரம். 1872-இல் சிதம்பரத்தில் பிறந்த சுத்தோத்துவித சைவசித்தாந்தப் பேராசிரியர் திரு. சபா. சிவப்பிரகாசம் பிள்ளையவர்கள் தம் வாழ்நாள் முழுமையும் சிதம்பரத்தி லேயே தங்கி சைவமும், தமிழும் வளர்த்தார்கள். அவர்களுடன் சிறிது நேரம் பேசினாலும் போதும். சென்ற தலைமுறைக்குரிய சமய வரலாறு, தமிழ் வரலாற்றில் ஒரு சிறு பகுதியை நமக்கு ஒரு பலகணியைத் திறந்து வெளி உலகைக் காட்டுவது போலக் காட்டுவார் என்கிறார் ''சித்தாந்தம்'' இதழின் ஆசிரியர்.

ஆடூர் முதலான இடங்களில் தமிழ்க் கல்விச் சாலை வைத்துத் தமிழும் சைவமும் வளர்த்தார். நிர்வாண தீட்சை பெற்றுச் சிவபூசை வழுவாது செய்து வந்தார்; செப்பறைச் சுவாமிகளிடம் சித்தாந்த சாத்திரங்களைப் பயின்றார்.

பல இடங்களில் எவ்விதப் பிரதிபலனும் எதிர்பாராமல் சித்தாந்த பாடமும் சிவஞான போதமும் போதிப்பதே தம் வாழ்க்கை நியமமாகக் கொண்டார். திருப்பெண்ணாகடம் மெய் கண்டார் ஆலயத்தில் பல ஆண்டுகள் சித்தாந்தம் பாடம் சொல்லி வந்தார். தமது 80-ஆம் வயதில் ''சிவஞான போதச் சிற்றுரைச் சுருக்கம்'' என்ற சிறுநூலும் பின்னர் இதன் விளக்கமான சிற்றுரை விளக்க மும் 1960-இல் சிவஞான சித்தியார் வினாவிடையும் எழுதி வெளியிட்டார். இவர்தம் வீட்டில் திருவைந்தெழுத்தை ஓதித்தீர்த்து வைத்த நோய்கள் பல. உடல் நோய்வாய்ப் பட்டுப் பிரக்ஞை தவறியும் கூட சிவஞானபோதம் பன்னிரு சூத்திரங் களையும் சொல்லிக் கொண்டிருந்தார். அவர் மகன் அருகில் வந்தபோது யாரோ தம்பிரான் என்று நினைத்துக் கொண்டு ''சுவாமியா? சுவாமிக்குச் சிவஞான போதம் வருமோ?'' என்று கேட்டார். ''வரும்'' என்று மகனார் சொன்னதும் சூத்திரத்தினைச் சொல்லச் சொன்னார். ''தோற்றிய திதியே - திதி என்றால் தெரியுமா? திதி என்றால் நிலைபேறு... ஞாபகம் இருக்கட்டும்... நிலைபேறு... நிலைபேறு சரி! சுவாமி! போய் மறுபடியும் படிக்கட்டும்'' என்று இப்படியே பேசிக் கொண்டிருந்து சில நாளில் காலமானார். 93 வயது வரை வாழ்ந்த இப்பெரியார் 5.9.1965 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அ.சொ. சுப்பையா

''சிவபெருமான் தமக்கு ஓர் உடம்பாகவே இப்பேரண்டத் தொகுப்பைப் படைத்தார். இதனைச் சிவபெருமானின் மாப்பேருரு என்றும் மாகாயம் என்றும் அழைப்பர். அதே போல் அவர் நமது மனித உடலிலும் தமது சாயலைத் தோற்றுவித்தார். அவரது சிரசில் உள்ள மூன்றாம் பிறைச் சந்திரனைப் போன்றே, மனிதர் களாகிய நம் ஒவ்வொருவர் தலையினுள்ளும் சந்திரப் பிறையை உருவாக்கியுள்ளார். அதனை மூன்றாம் நாளமும் மூளை இணைப்பானும் (Third Verticle and Corpus Column) என்று அறிவியலாரும் அழைப்பர்.

ஏதோ அறிவியற் கட்டுரை என்று நினைக்க வேண்டாம். சுந்தரர் தேவாரம் முதல் பாடல் விளக்கத்தில் ''பிறைகுடி'' என்று சொல்லுக்குத்தான் இப்படி ஓர் அறிவியல் விளக்கம்! இவ்விளக்கம் தந்தவர் முனைவர் திரு. அ. சொ. சுப்பையா அவர்கள். விளக்கம் இடம் பெற்ற நூல் ''சுந்தரர் தேவாரம் முதல் தொகுதி'' இதுபோல நூல் நெடுகிலும் சுந்தரர் தேவாரப் பாடல்களுக்கு சுப்பையா அவர்கள் அறிவியல் விளக்கம் தந்துள்ளார்கள். 1220 பக்கங்கள் கொண்ட முதல் தொகுதியில் 500 பாடல்களுக்கு சுப்பையா அவர்கள் விளக்கம் தந்து உள்ளார்கள். தற்கால நவீன உலகிற்கு இவை போன்ற அறிவியல் விளக்கங்கள் தானே தேவை.

பேராசிரியர் அவர்கள் எழுதிய மற்றொரு நூல் ''தொல்காப்பியம் - சைவ சித்தாந்த நோக்கில்'' ஆகும். யாரும் சிந்தித்துப் பார்க்க முடியாத படைப்பு ஆகும். தருக்க ரீதியாகக் கொண்டு செல்வார்கள். படித்து முடித்தபின் வியப்பு மேலிடும், பேராசிரியரின் பிறநூல்கள் ''தில்லைத்திருப்பதிகங்கள், திருஞானசம்பந்தர் தேவாரம்'' (அச்சில்), ''ஆனைமுகனும் அம்மையப்பனும்'' (அச்சில்)

பேராசிரியர் அவர்கள் அண்ணா மலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த் துறையில் ''திருமுறை இருக்கை'' யில் மொரீஷியஸ் பேராசிரியராகப் பணி யாற்றியமையால் கிடைத்த விளக்கமே ''அறிவியல் பார்வையில் சுந்தரர் தேவாரம்''

பேராசிரியர் அவர்களுடைய நோக்கமே சைவ சமய சாத்திரங்களை

யும், திருமுறைகளையும் அறிவியல் நோக்கில் வெளியிடுவதே ஆகும். இந்த அடிப்படையில் பல்கலைக்கழகக் கருத்தரங்குகளில் உரையாற்றியும், இதழ்களில் கட்டுரைகள் வெளியிட்டும் பணியாற்றியிருக்கின்றார்கள். பன்னிரு திருமுறைகளுக்கும் - அறிவியல் உரை வெளிவர இறையருள் கூட்ட வேண்டுவோம்.

(பிறந்த ஆண்டு - 13.1.1935; பிறந்த ஊர் - சிறுகூடப்பட்டி. சிவகங்கை மாவட்டம்)

மயில்வாகனன்

செந்தமிழ்க் காவலர் மயில்வாகனனார் சிறந்த சொற்பொழிவாளர். ''பெரிய புராணம் சமூகப் பார்வை'' என இரு தொகுதிகளாக வெளியிட்டுள்ளார். தம் மனைய புலவர்களையும் வாயாரப் பாராட்டும் பண்பினர்.

(இயற்பெயர் - பி.எம். சண்முகம்; பிறந்த நாள் 10.10.1935; பிறந்த ஊர் - என். பூலாமேடு, சிதம்பரம்.)

தில்லைத் திருமுறைக்கழகம்

இத்தனை தொண்டர்கள், புரவலர்கள் இருக்கும்பொழுது மன்றங்கள் இல்லாமலா இருக்கும்? 1923இலேயே தில்லைத் திருமுறைக் கழகத்தை ஆடூரில் செப்பறை சுவாமிகள் தொடங்கி வைத்தார்கள். நிறுவனர் - ஆடூர் ரத்தின சபாபதி பிள்ளை; தலைவர் ஆ.சூ. கணபதி பிள்ளை முயற்சியால் நடராஜர் கோயிலில் சிவ சிவ ஒலி மண்டபம் நிறுவுதல், பெரிய தேர்களுக்கு மேற்கூரை நிறுவுதல் முதலான பணிகள் செய்யப் பட்டன. 1954 வரை 13 நூல்கள் வெளியிடப்பட்டன. 1965-இல் சுந்தரேசம் பிள்ளையவர்கள் செயலர் ஆனார்கள். 1978-இல் அவர்களே தலைவர் ஆனார்கள். அதன் பின்னர் அப்பர் சுவாமிகள் விழா, திருநீலகண்டர் விழா, கணம்புல்லர் விழாக்களை ஆண்டுதோறும் நடத்துகின்றனர். உழவாரம் மாநில மாநாட்டையும் நடத்தியிருக்கின்றார்கள். தில்லை - திருவாரூர் பாத யாத்திரை மேற் கொள்கின்றார். 21 ஆண்டுகளாக சிவராத்திரியன்று 200 பேருக்கு தீக்கை கொடுத்துள்ளார். 1161 திருமுறைத் திருமணங்களும், தமிழில் 40 குட நீராட்டு விழாக்களும் நடத்தியிருக்கின்றார். ஆண்டுக்கு இருமுறை திருத்தேர் விழாவின்போது நான்கு வீதிக்கும் நீர்தெளித்து, அலகிட்டு, கோலமிட்டு, தொண்டு செய்கின்றார்.

தலைவர் சுந்தரரேசம் பிள்ளையவர்கள் 1968 முதல் 1990 வரை தாமே இலவச தேவார வகுப்பு நடத்தியிருக்கின்றார். சுந்தரேசம் பிள்ளையவர்கள் பண்ணோடு பாடுவது மட்டுமல்லாது திருமுறைப் பாடல்களுக்கு ஏற்ப ஆடவும் வல்லவர். அவர்களே ருத்ரதாண்டவம் ஆடியிருக்கிறார். திலகவதியார் வேடம் போட்டு தனி நடிப்பும் செய்திருக்கிறார். நால்வர் நாட்டிய நாடகங்கள் நடத்தியிருக்கிறார். திருமுறைப் பாடல்களை அடியொற்றி பெண்களுக்கு கும்மி, கோலாட்டம் நடனம், நாடகப் பயிற்சி கொடுத்திருக்கின்றார். சுந்தரர் தேவாரத்திற்கு உரை எழுதியுள்ளார். இவை ஒரு தனி மனிதர் செய்த செயலாகத் தெரியவில்லை.



சுந்தரேசம் பிள்ளை

''ஆடவேண்டும் நின் புகழ் பாடவேண்டும்''

என முத்தமிழாலும் தில்லைப் பெருமானை சுந்தரேசம் பிள்ளை வழிபட்டிருக்கிறார். (பிறப்பு - 4.5.1930; பிறந்த ஊர் - வானவன் மாதேவி, காட்டுமன்னார் கோயில்)

தமிழ்ப்பேரவை

ஆடி மாதத்திலே அஞ்சல் அலுவலர் 28 பக்க புத்தகம் தந்து விட்டுச் செல்வார். ஆவலுடன் பிரித்துப் பார்த்தால் சிதம்பரம் தமிழ்ப் பேரவையின் சேக்கிழார் விழா அழைப்பிதழ். அழைப்பினைக் கண்டுபிடிக்க ஐந்தாறு பக்கம் புரட்ட வேண்டியிருக்கும். தமிழ் வாழ்த்து, எல்லையைக் காக்கும் வீரர்களுக்கு வணக்கம், விழா நடத்த உதவியவர்களுக்கு நன்றி என ஆரம்ப பக்கங்கள். அழைப்பிலும் 2, 3 பக்கங்கள் புரட்டினால் தான் முதல் நாளைய சிறப்பு பேச்சாளர் யார் என்று தெரியும். இந்த 28 பக்கங்களிலும் 98 பெயர்கள் காணப்படும். அத்துணை பேரும் சிதம்பரத்தில் உள்ள முக்கிய பெருமக்கள் - வணிகர், மருத்துவர், வழக்கறிஞர் - ஆவர். இவற்றின் சிறப்பு பேச்சாளர்களைத் தேடிப்பிடிக்க வேண்டும். தமிழ்ப் பேரவையினர்க்கு அனைவருமே சிறப்புப் பேச்சாளர்கள்தாம். அழைப்பிதழில் நிகழ்ச்சியில் பங்கு பெறுபவர்களின் பெயர்கள் மட்டும் இருப்பதில்லை. பின் அவர்களுக்கு வழங்கப்பட்ட பட்டங்கள், விருதுகள் இருக்குமா? இல்லை. சிறப்பு அழைப்பாளர்களைப் பற்றிப் பாராட்டி நான்கு வரிகள் இருக்கும். இதோ ஒரு எடுத்துக் காட்டு.

''திருமுறைகள் தலைசுமந்து தில்லை
வீதிகளில் வலம் வருவார்
திருத்தொண்டர் வருவார்க்கெல்லாம்
திருநாளும் உணவளிப்பார்
பெருவணிக செல்வம் எல்லாம் பிறைக்
கூத்தன் தாளிடுவார்
பெரிய புராணத்தில் இடம் பெற
வேண்டிய பிற்சேர்க்கை அடியார் இவர்...''

இவர் வேறு யாருமில்லை. நம் சிவத்திரு முத்து இராமலிங்கம் செட்டியார் அவர்களே.

அழைப்பிதழைப் படிக்கவே ஒரு மணி நேரம் தேவைப்படுகின்றது. இந்த அளவு சிரமப்பட்டு எழுத - ஒவ்வொரு சிறப்பு விருந்தினரையும் நேரிலோ, தொலைபேசியிலோ அழைக்க - ஒரு மாதமாவது பிடிக்கும்.

அதுவும் மூன்று நாள் விழா - பட்டிமன்றம், தமிழிசை, தனியுரை, சிந்தனை மேடை, மேல் முறையீட்டு பட்டி மண்டபம், வழக்காடு மன்றம் என வண்ணக் கலவையாய் அமைந்துள்ளது. 1998இலிருந்து 2003 வரை பங்கு பெற்ற சிறப்பு சொற்பொழிவாளர்கள்: சாரதா நம்பியாரூரன், இளம்பிறை மணிமாறன், மு. சிவச்சந்திரன், அகர முதல்வன், வீ. தமிழ்ச் சேரனார், மதுரை ஆதீனம், குமரி அனந்தன், கண. சிற்சபேசன், தருமபுரம் ப. சுவாமிநாதன், கோ. சாரங்கபாணி மாண்பமை கா. காளிமுத்து, தமிழருவி மணியன், கவிஞர் சுரதா, சீர்காழி கோ. சிவசிதம்பரம் ஆகியோர். ஆண்டு தோறும் ஆடி மாதம் முதல் வெள்ளி, சனி, ஞாயிறுகளில் தில்லையிலே திருவிழாதான். இத்துணை திட்டமிட்டுச் செயல்படுத்துபவர் தமிழ்ப் பேரவையின் தலைவர் திரு. இராம. ஆதிமூலம் அவர்கள். இவர் செயல்வீரர் மட்டுமல்ல; சொல் வீரரும் கூட. கடை மடை திறந்தது போல் பேசவும் நாவல்லார். (பிறந்த ஆண்டு - 30.7.1944; பிறந்த ஊர் - அறந்தாங்கி) இப்பேரவை 1985-இல் தொடங்கப் பட்டது.

தில்லைக்காளி வழிபாட்டு மன்றம்

1983-இல் தொடங்கப்பட்ட இம் மன்றத்தினர் ஆண்டிற்குப் பத்துமுறை திரு. வி. சந்திரசேகரன் அவர்கள்

தலைமையில் திருமுறைத் திருத்தல வழிபாட்டினை மேற்கொள்கின்றனர்.

அறுபத்துமூவர் குருபூஜை மன்றம்

1995-இல் தொடங்கப்பட்ட இம் மன்றம் ஆண்டுதோறும் அறுபத்து மூவர் குருபூஜையும், சொற்பொழிவும் தொடர்ந்து நடத்தி வருகிறது.

அர்த்த ஜாமக் குழுவினர்

காலிபோர்னியா திருவருள் மன்றத்தாருடன் இணைந்து சிதம்பரம் மாணிக்க வாசகர் திருக்கோயில் திருப்பணியை நடத்தி இருக்கின்றனர்.

திருத்தொண்டர்கள்

''**தொ**ண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே'' அதுவும் தில்லை யம்பதி திருத் தொண்டர் புராணம் அரங் கேறிய தலம் ஆயிற்றே! தொண்டர்கள் இல்லாமலா இருப்பார்கள்! தலைக்குளம் கிருஷ்ண மூர்த்தி பிள்ளையவர்கள் 1898-இல் தேவாரம் கற்றுப் பரிசு பெற்றவர்.

''உன்னடியார் தாள் பணிவோம்
ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவராவார்''

அருமையான திருப்பாடல். ஆனால் இந்த இருபதாம் நூற்றாண்டில் ''உன் னடியார்'' கிடைக்க வேண்டும்; அவர்க்கே பாங்காக வேண்டும். அவரே ''எங்கணவராக வேண்டும்'' அப்பா! நடக்கக் கூடிய காரியமா? அப்படி ஒரு அம்மையார் தில்லையில் இருந்திருக் கின்றார்கள். தண்டேஸ்வர நல்லூரைச் சேர்ந்த கௌரியம்மாள் என்ற அம்மையார் தில்லை நடராஜப் பெருமானுக்கு நாளும் பூத்தொடுத்து வந்தார். மணப்பருவம் வந்துற்றது. ''நாளும் பெருமானுக்குப் பூத்தொடுக்க அனுமதியளிப்பவரையே மணப்பேன். இல்லையேல் நல்லூர்ப் பெருமணம் வேண்டா'' என்றார் அம்மையார். அவர்தம் எண்ணம் போலவே திருமணம் நடந்தேறியது. நாளும் பெருமானுக்கு மாலை தொடுத்து மகிழ்ந்தார். வாழ்வாங்கு வாழ்ந்து தமது 77-ஆம் வயதில் 2002-இல் இறைவனடி சேர்ந்தார்.

1945- 46 களில் செப்பறை சிவப்பிரகாச சுவாமிகள் தில்லை வர இருந்தார்கள். சுவாமிகளை வரவேற்க வளைவுகள் போடுவார்கள்; தோரணம் கட்டுவார்கள். ஆனால் யாராவது சிவாலயம் கட்டி வரவேற்பார்களா? உடையூர் மங்களம் பிள்ளை, பண்ணப்பட்டு திருநாராயுணப் பிள்ளை, முடிகண்டநல்லூர் கணபதி பிள்ளை ஆகியோர் தத்தமது கிராமங்களில் சிவாலயம் கட்டி சுவாமிகளை வரவேற்றனர். அது ஒரு பொற்காலம்!

தில்லைத் தமிழ் மன்றம்

5.7.1973 அன்று அமரர் திரு. ஆர். கனகசபை பிள்ளையவர்கள் தலைமை யில் தொடங்கப்பட்டது. எடுத்த எடுப்பிலேயே ஓராண்டுக் காலம் க. வெள்ளைவாரணனார் அவர்கள் திருமந்திர வகுப்பு நடத்தினார்கள். ''திரு மந்திர அருள்முறைத் திரட்டு'' என்ற நூலும் அச்சிட்டு வெளியிட்டனர். 20.6.1973 முதல் 6.7.1973 வரை தொண்டை மண்டல ஆதீனம் தவத்திரு. ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்களால் சிவப்பிரகாசம் என்ற நூல் பாடமாக நடத்தப்பட்டது. 10.12.1975 முதல் 24.12.1975 வரை சி. அருணை வடிவேல் முதலியார் அவர்கள் சிவஞான போத வகுப்பு நடத்தினார்கள். 19.9.1996 முதல் 28.9.1976 முடிய கு. சுந்தரமூர்த்தி அவர்கள் திருவருட் பயனும், 1976 முடிய 2 ஆண்டுக் காலம், க. வெள்ளைவாரண னார் அவர்கள் பெரிய புராணமும், 16.12.77 முதல் 13.1.1978 முடிய அ.நடேச முதலியார் அவர்கள் திருவெம்பா வையும், 17.1.1985 முதல் வாரந்தோறும்


பன்னிரு திருமுறைகளும் நடத்தினர். இவர்கள் தவிர தண்டபாணி தேசிகர், வை. இரத்தினசபாபதி, வ.சுப. மாணிக்கம், பழ. இரத்தினம் செட்டியார், தவத்திரு குன்றக்குடி அடிகளார், இரா. இராதாகிருஷ்ணன், கி.வா. ஜகந்நாதன், அ.ச. ஞானசம்பந்தன் ஆகியோரும் உரையாற்றியிருக்கின்றனர்.


சேக்கிழார் மணி மண்டபம்


நினைப்பவர் மனம் கோயிலாகக் கொண்டவன் சிவபெருமான். அவ்வாறு நினைவாலே ஆலயம் கட்டியவர் பூசலார் நாயனார். இருபதாம் நூற்றாண்டில் சேக்கிழார் பெருமானுக்கு நினைவாலே மண்டபம் கட்டினார் ஓர் அம்மையார். நினைவில் மட்டுமா நேரிலும் கட்டி முடித்தார். அவர்தான் ஜெயகாந்தம் துரைக்கண்ணு அம்மையார்.

''இறுதியாக ஒரு பெரிய ஆசை. வாழ்ந்து விட்டால் என்றோ ஒரு நாள் சிதம்பரத்தில் சேக்கிழார் பெருமான் விழா ஆண்டுதோறும் நடக்க ஆவன செய்ய வேண்டுமென்று பேரவா. அந்த நல்ல காரியத்தில் பங்கு கொள்ள வேண்டும் என்பதும் எளியேனது பேரவா? இதற்கு எத்தனை வேண்டும்? எத்தனை முடியுமோ அத்தனையும் வேண்டும். இறைவன் தான் வழிகாட்ட வேண்டும்'' என்று தன் தணியாத மூவாசைகளில் முதல் ஆசையாகக் கூறுகிறார் ஜெயகாந்தம் அம்மையார்.

ஆம்; இறைவன் வழிகாட்டினார். 24.3.1989-இல் சேக்கிழார் விழா, அறக்கட்டளை தொடங்கப் பெற்றன. அது முதல் சிதம்பரம் ஆயிரங்கால் மண்டபத்தில் சேக்கிழார் குரு பூசை விழா வைகாசித் திங்கள் பூசத்தில் நடைபெறுவதாயிற்று. 1989 - 1995 வரை ஆண்டுக்கு ஒருநாள் சேக்கிழார் விழா நடைபெறுவதாயிற்று. ஏழு ஆண்டுகள் இப்படி நடந்து வந்தது. 1996 – 1998 வரை மூன்று ஆண்டுகள் நாவலர் மேனிலைப் பள்ளியில் நடக்கலாயிற்று.







பெரியபுராணக் காட்சிகள் - சேக்கிழார் மண்டபம்

இதற்கிடையில் சேக்கிழார்க்கு எனத் தனியே கட்டடம் எழுப்பி அதில் ஆண்டு விழாவோடு திங்கள் கூட்டங்களும் சிறப்பு நிகழ்ச்சிகளும் நடத்தலாம் என்ற நிலையில் நகரில் நல்ல இடம் தேடப்பட்டது. திருச்சியில் கட்டினால் பெருந்தொகை தருவதாக ஓர் அன்பர் சொன்னார். ''பெரிய புராணம்

அரங்கேறிய சிதம்பரத்தில் தான் கட்ட வேண்டும்'' என்று அம்மையார் உறுதியாக இருந்தார்கள்.

தருமையாதீனம் 26-ஆம் ஸ்ரீலஸ்ரீ குரு மகா சந்நிதானம் அவர்கள் ஞானப் பிரகாசர் வடக்குச் சாலையில் உள்ள சேக்கிழார் கோயில் வளாகத்தில் உள்ள காலி இடத்தில் கட்டலாம் என்று அருள்பாலித்தார்கள். அருகில் நாவலர் பெருமானால் ஏற்படுத்தப்பட்ட சேக்கிழார் கோயில்.

ஆறுமுக நாவலர் சிதம்பரத்தில் சேக்கிழாருக்கு ஒரு கோயில் நிறுவி அவரை வழிபட எண்ணினார். ஞானப் பிரகாசர் குளத்தின் வடக்குப் பக்கத்தை அவர் தேர்ந்தெடுத்தார். கோயிலில் வழிபட விநாயகர் திருவுருவச் சிலையை யும், சேக்கிழார் திருவுருவச் சிலையை யும் செய்தார். ஆனால் அவர் எண்ணம் அவர் காலத்தில் முற்றுப் பெறவில்லை. அவர்களுக்கு பின்னால் ச. பொன்னம் பலம் பிள்ளை அவர்களால் சுமார் 100 ஆண்டுகளுக்கு முன் கோயில் கட்டப் பெற்றதாகத் தெரிகிறது. இக்கோயிலில் நாவலர் கற்சிலையும், ஐம்பொன் சிலை ஒன்றும் உள்ளன. இக்கோயிலுக்குக் கிழக்கு பக்கத்தைத் தான் அம்மையார் தேர்ந்தெடுத்துள்ளார்கள்.

சிதிலம் அடைந்துள்ள சேக்கிழார் சிற்றாலயத்தை சீர் செய்த பின் சேக்கிழார் மண்டபத் திறப்புவிழா நடக்க வேண்டும் என்பதில் அம்மையார் உறுதியாக இருந்தார். மண்டிக் கிடந்த புதர்களை அடியோடு அகற்றி, பாழ் பட்டுக் கிடந்த சேக்கிழார் சிறு கோயில் இருந்த இடத்தையே கருவறை யாக்கி அதன் வலப்புறம் ஞானப்பிரகாசர் இடப்புறம் ஆறுமுக நாவலர் இடம் பெற மண்டபமாக எழுப்பப் பெற்றது. 29.4.1999 அன்று தெய்வச் சேக்கிழார் திருக்கோயில் நன்னீராட்டு விழா நடைபெற்றது.

தனி மண்டபமும் முற்றுப் பெற்றது. சேக்கிழார் கோயில் தென் வடலாக மேல்புறம் அமைந்துள்ளது. மண்ட பமோ கீழ்ப்புறம் கிழக்கு மேற்காக அமைந்துள்ளது. தெற்கு வடக்கு கிழக்கு என முப்பக்கங்களிலும் வாயில்கள் உள. மூன்று வாயில்கட்கும் முறையே திருஞான சம்பந்தர் திருவாயில், சுந்தரர் திருவாயில், மாணிக்கவாசகர் திருவாயில் எனப் பெயரிட்டுள்ளனர். இருபத்தைந்து லட்ச ரூபாய் செலவில் அம்மையார் தெய்வச் சேக்கிழார் திருக்கோயில் திருப்பணியைச் செய்வித்தும் சேக்கிழார் மணிமண்டபம் கட்டுவித்தும் பெரு மகிழ்ச்சியுற்றார்.

பெரியபுராணம் தொடர்பான அனைத்து நூல்களும் ஒரே இடத்தில் இருக்கும் வண்ணம் ''சேக்கிழார் நூலகம்'' ஒன்றும் அமைத்துள்ளனர்.

2005-இல் மேல் மண்டபமும் இருபது லட்ச ரூபாய் செலவில் கட்டி முடிக்கப் பட்டது. ஐந்து லட்ச ரூபாய் செலவில் அறுபத்து மூன்று நாயன்மார் வரலாற்றை யும் சுதையிலே அமைத்துள்ளார்கள். பெரிய புராணக் கருவூலம் தான்!

திங்கள் பூசம் தோறும் கூட்டம் நடத்தல், பெரிய புராணச் சொற் பொழிவுகள், சேக்கிழார் குருபூசை நடத்தல் ஆகியன அறக்கட்டளைச் செயல்பாடுகள். 15.10.2002 முதல் திருமுறை இசைப்பயிற்சி வகுப்புகள் நடைபெறுகின்றன. திங்கள் தோறும் முதல் செவ்வாய் அன்று ஒரு மணி நேரம் திருவாசகம், இன்னொரு மணிநேரம் திருக்குறள் வகுப்பினை முனைவர். கு. சுந்தரமூர்த்தி அவர்கள் நடத்துகிறார்கள். பூசம் தோறும் முனைவர் மு. சிவச் சந்திரன் அவர்கள் பன்னிரு திருமுறை தொடர் விரிவுரை நடத்துகிறார்.

(பிறந்த ஆண்டு - 6.9.1921; பிறந்த ஊர் - ஆலத்தூர், பாபநாசம் அருகில்;


பெற்றோர் - தி.சி. பழநிச்சாமி பிள்ளை, நாகம்மாள்; கணவர் - துரைக்கண்ணு).





கரந்தை ஜெயகாந்தம் துரைக்கண்ணு

க. சுவாமிநாதன்



ஆறாயிரம் மைல்களுக்கு அப்பால் அமெரிக்க நாட்டில் இருந்து கொண்டு இந்த மகத்தான செயலை ஜெயகாந்தம் அம்மையார் செய்து முடித்திருக்கிறார்கள். இது எவ்வாறு சாத்தியம்? ''எங்கள் கனவை நனவாக்கியவர்'' என்று க. சுவாமிநாதன் அவர்களைப் போற்றுகின்றார் அம்மையார். மண்டபம் கட்டுவதிலிருந்து விழா நடத்துவது வரை அனைத்தும் சுவாமிநாதன் அவர்களே அம்மையார் கருத்துக்கேற்பச் செய்து முடித்திருக்கிறார்கள். சுவாமிநாதனாரின் பெருமையைப் பறைசாற்ற இந்த மண்டபம் கட்டி முடித்தது ஒன்றே போதும்.

ஆறுமுக நாவலரின் அறக்கட்டளை உறுப்பினராக இருந்து பள்ளி, அறக் கட்டளை, சைவ சித்தாந்தக் கல்லூரி, நூல் வெளியீட்டகம் அனைத்தையும் கண்ணை இமையிரண்டும் காப்பது போல வண்ணமுறக் காத்து வருகின்றார்.

சிதம்பரம் கோயில் திருப்பணிக் குழுவில் தொடக்க முதலே உள்ளார். குடமுழுக்கின்போது ஆயிரங்கால் மண்டபம், நூற்றுக்கால் மண்டபம்; அங்கங்கு பல்வேறு நிகழ்ச்சிகள் குழுப்பயிற்சி நடைபெறவும், கண் காட்சி நடைபெறவும் திருப்பணிக் குழுத் தலைவர் அமரர் திரு. ஜி. வாகீசம் பிள்ளையவர்கள் திட்டமிடுவார். அதை இவர் செவ்வனே செயல்படுத்துவார். கும்பாபிஷேக மலர், சிவகாமியம்மன் குடமுழுக்கு மலர் சிறப்பாக அமைத்துப் பதிப்பித்தார்.

சிதம்பரம் நாட்டியாஞ்சலிக் குழுவில் துணைத் தலைவர், செயலர் என்று பொறுப்பேற்று உலகப் புகழ் மிக்கதாக ஆக்கினார்.

சிதம்பரத்தில் நடைபெறும் எந்த ஒரு நற்பணியிலும் இவரது பெயர் இடம் பெறாமல் போகாது.

(பிறந்த ஆண்டு - 10.2.1924; பிறந்த ஊர் - சுவாமிமலை. பெற்றோர் - நாகமுத்துப் பிள்ளை, யோகாம்பாள்)

கணினியில் பெரியபுராணம்

திருவாமூர்...

புகழனார் - மாதினியார் சிவபெரு மான் சந்நிதியில் நிற்கின்றனர்.

அருகே திலகவதியார் உருவம் தெரிகின்றது.

இதோ! ஒரு சிறுவர் காட்சியளிக் கிறார்.

ஓ! இவர்தாம் மருள்நீக்கியார்.

திலகவதியார் வளர்ச்சி பெறுகிறார்.

அந்த வளர்ச்சியே - பல்வேறு நிலைகளில் காட்டப்படுகிறது.

மணப்பருவம் எய்துகிறார்.

மணமுடிக்க இருந்த கலிப்பகையார் அரசன் ஆணை மேற்கொண்டு போருக்குச் செல்கிறார்.

குதிரையின் கனைப்பு கேட்கிறது.

போரிலே வீர சுவர்க்கம் புகுகிறார்.

திலகவதியாரின் சோகம் கண்முன்னே விரிகிறது.

என்ன மாயம் இது! கணினியில் இத்தனைக் காட்சிகளும் தெரிகின்றன.


மென்மையான பெண் குரல் கதை யினைக் கூறி வருகின்றது.


அப்பர் பெருமான் நீற்றறையில் அடைக்கப்படுகிறார். என்ன அழகாக நெருப்பு கொழுந்து விட்டெரிகிறது. அதிலிருந்து அப்பர் பெருமான் மீண்டு வருகிறார்.

''மாசில் வீணையும்'' என்று அதே பெண்குரல் இசைக்கிறது.


நம் கண்களையே நம்ப முடிய வில்லை. வீட்டிற்குள் உட்கார்ந்து கொண்டு கணினியின் முன்னே அறுபத்து மூன்று நாயன்மார் வரலாற்றை திரைப்படம் பார்ப்பது போல - ஒலி, ஒளியுடன் இசையுடன் அனுபவிக்க முடிகிறது.











இந்த சாதனையைச் செய்தது யார்? அவரால் எப்படி இம்மாபெரும் செயலைச் செய்ய முடிந்தது?

இதனைச் செய்து முடித்தவர் ஒரு மருத்துவர். பெயர் பத்மினி கபாலி மூர்த்தி.

முதலில் பத்மினி அவர்கள் குழந்தைகளுக்குச் சொல்வது போல கதை வடிவம் கொடுக்க ஆரம்பித்தார். ஒலி நாடாவில் ஒலிப்பதிவுசெய்து பிறகு கேட்ட பொழுது, இவரது பிள்ளைகள், ''இவ்வளவு கடினமாக இருந்தால் எங்களுக்குப் புரியாது. எங்கள் நிலைக்குக் கொண்டு வாங்க'' என்றனர். மரபை மீற முதலில் தயங்கினார். பாதிக்கு மேல் எழுதப்பட்ட கதையைப் பின்னர் மாற்றி எளிமையாக்கினார்.

அடுத்து ஓவியம் உருவாக்க வேண்டும். மருத்துவப் பணியை விட்டுச் சென்னை செல்ல முடியாது. சென்னையிலிருந்து பொறியாளர் ஆறு பேரை வரவழைத்து தனது வீட்டிலேயே தங்கச் செய்து உணவுக்கும் ஏற்பாடு செய்தார். அவர்கள் ஆறுபேரும் கணினியில் வேலை செய்யக்கூடியவர்கள். காலை பணிக்குச் செல்லுமுன் அவர்களிடம் கதையினைச் சொல்லி படம் இப்படி வரையலாம் என்று சொல்லிவிட்டுச் சென்றுவிடுவார். மதிய உணவு வேளையில் உணவைக் கையில் வைத்துக் கொண்டே சாப்பிட்டுக் கொண்டே படம் சரியாக இருக்கிறதா என்று சொல்லிச் சில திருத்தங்களும் சொல்வார். மாலையில் முடிவு செய்வார். இவ்வாறு ஒரு படம் வரைய நான்கு நாட்கள் ஆயின.

படம் உருவாக்க காட்சி, சுற்றுச் சூழல், பாத்திரப் படைப்பு, உணர்வு வெளிப்பாடு, உணவு வகைகள், காலத்துக்கேற்ற அணிகள், உடைகள், வீடுகள் என பெரிய புராணக் காலத்திலேயே பத்மினியும் அவர் குடும்பத்தினரும் வாழ்ந்து விட்டார்கள்.

மாடம், மாடத்தில் விளக்கு, வாசலில் கோலம், மாவிலைத் தோரணம், வெள்ளை சிவப்பு பட்டையிலான கோடுகள் - என ஒவ்வொன்றும் சரியாக அமைய இவரது பெற்றோரும், கணவரும் திருத்தங்கள் செய்வார்கள். மூன்று பேரும் பெரிய புராணத்தில் ஈடுபாடு உள்ளவர்கள். இவருக்கு முழு ஒத்துழைப்பும் கொடுத்தார்கள்.

இத்துணையும் செய்வதற்கு முன்பே திட்டம் துல்லியமாகத் தீட்ட வேண்டும்; ஒரு பொருளைக் கொடுக்க வேண்டுமானால், இடது கையால் ஆடை கொடுப்பது போலப் போட்டு விட்டார். வலது கைக்கு மாற்ற நெடுநேரம்



பத்மினி

பிடித்தது. சாதாரண உலகியலில் உடனே நாம் அடுத்தகைக்கு மாற்றி விடலாம். ஓவியமோ, கணினியிலோ மாற்றுவது என்றால் அதிக நேரம் பிடிக்கும்.

சில படங்கள் பிடிக்காமல் இருக்கும். கடுமையான உழைப்பாயிற்றே என்று சேர்த்துக் கொள்வதில்லை. அப்படங்களை ஒதுக்கிவிடுவார்கள். அவற்றை உருவாக்கியவர்கள் வருந்துவார்களே என்று பொருட்படுத்தியதில்லை. சில காரணங்களால் பொறியியலாளர் பணி தொடர முடியாமல் போய் விட்டது. பத்மினி கலங்கித் தான் போனார். ''ஃப்ராஜெக்ட் அவ்வளவு தானா?'' என்ற திகைப்பு. குழந்தைகளும் குடும்பத்தாரும் தேறுதல் சொன்னார்கள்.

அனைத்துச் சோதனைகளையும் தாண்டி இறுதிக்கட்ட வேலைகள் - எடிட்டிங், பின்னணி குரல் - இவையெல்லாம் செய்து முடிக்க பத்மினி சென்னையில் 21 நாட்கள் தங்கினார். காலை 6 மணிக்கு வேலை தொடங்கினால் நடு இரவு 2.00 மணி அதிகாலை 3.00 என்று ஆகிவிடும். காலை உணவு காரில் செல்லும் போது முடித்து விடுவார். மதியம், இரவு உணவு பதிவாகும் இடத்தில்தான். நிறைவு பத்து நாட்களில் காலை எது இரவு எது என்று தெரியாத நிலை. ஒரு தவம் தான் இருந்தார்.

ஒலிப்பதிவு செய்யும்பொழுது தொடர்ந்து பாடியும், பேசவும் செய்தால் குரல் மாறிவிடும். எனவே காலை பாடல்கள், ஒலிப்பதிவு; பிறகு கணினியில் வேலை; மாலையில் எடிட்டிங்; இரவு நேரங்களில் பேச்சு ஒலிப்பதிவு. நடுநடுவே பறவைகள், விலங்குகள் ஓசைகளைப் பின்னணியில் சேர்க்க வேண்டும். புல்லாங்குழல், வயலின் கலைஞர்கள் ஒத்துழைப்பும் தேவைப்பட்டது.

நிறைவு நாட்களில் பசி இல்லை; தூக்கம் இல்லை.

''கண் துஞ்சார் பசி நோக்கார்''

கேட்டிருக்கிறோம். இதோ! நேர் சான்று பத்மினி. வாயில் புண் வந்து விட்டது. செம்மையாக வரவேண்டுமே என அச்சம்; குடும்பத்தாரைவிட்டு இருக்கிறோமே என்று மனச்சுமை.

C.D. Cover Design introduction Music, CD Cover Collarge Design-உம் பல்வேறு கதைகளுடன் உருவாக்கினார்கள். கணினியில் டிசைன் எல்லாம் நிறைவு செய்தார். கவர்க்கான பெட்டி செய்ய ஓர் இடம், டிசைன் பேப்பர் வேறொருவரிடம். ஒரு வழியாக பெட்டி (பாக்ஸ்) தயார் ஆனது.

சீடியை பிரதி எடுப்பதற்காக மும்பை செல்ல வேண்டி இருந்தது. அசல் சீடி வருவதற்கு முன் இரவு 9.00 மணிக்கு ஓடவிட்டு காலை 5.00 மணிவரை பார்த்தார். கணினி அலுவலகத்தைச் சேர்ந்த 15 பேர் தனித்தனியாகப் பார்த்தார்கள். நிறைவாக சீடி ரோம் பத்மினி கைக்கு வந்தது. பிரசவ வேதனைதான்! ஆனால் கையில் குழந்தை வந்த பிறகு அந்த ஆனந்தமே தனி.

இது ஒரு தவம்!

கணினித் தவம்!

இந்த ஆர்வம் பத்மினி அவர்களுக்கு எப்படி வந்தது? இன்னும் சொல்லப் போனால் பத்மினி அவர்கள் இந்த தவம் மேற்கொள்ள எத்தனை படிநிலைகளைக் கடக்க வேண்டியிருந்தது?

பிறந்து மொழி பயின்ற நாள் முதலாக பத்மினிக்கு திருமுறை ஆர்வம் ஊட்டப் பட்டது. அவரது தந்தையாரே சிறந்த திருமுறை ஆர்வலர். அவர்களை வளர்த்த திருமதி இராஜம் அம்மையாரோ ஓதுவார் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். தேவாரம், பெரிய புராணம் என்று பல்வேறு நீதிக் கதைகளைச் சொல்லியே உணவு ஊட்டுவார்கள். சிறு வயதிலேயே தமிழிலும், ஆங்கிலத்திலும் மேடையில் பேச்சுப் பயிற்சி அளிக்கப்பட்டது. திருமுறைகளைப் பாடவும் தொடங் கினார். திருமுறை நடனமும் ஆடலாயி னார். பத்மினியின் வாழ்வே திருமுறை வாழ்வாயிற்று.

திருமணமான பிறகு கணவர் மருத்துவர் கபாலிமூர்த்தி அவர்களும் பத்மினியின் ஆர்வத்தை வளர்த்தார். தனது ஆர்வத்தை - தேவாரத் திருமுறை களைக் கற்பித்தலை - குழந்தைகளுக்கும் ஊட்டினார். இரவில் குழந்தைகளுடன் படுத்துக் கொண்டே நாயன்மார் கதைகளைச் சொல்லலானார்.

கோயிலிலே பேச அழைப்பு வந்தது. பத்மினி நாயன்மாரின் சிறப்புகளைப் பேசினார். பிறகு ஓஹெச் ஃப்ராஜெக்ட் டில் படங்களைப் போட்டுக் காண் பித்தார். அக்காட்சி குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை ஈர்த்தது. பிறகு கலர் சிலைடு செய்ய ஆரம்பித்தார். ''பெரிய புராணத்தை எளிமையான முறையில் மாணவர்களுக்குக் கொண்டு வந்து விட்டீர்கள்'' என பார்த்தவர்கள் பராட்டி னார்கள்.

''பொதுவாகப் பள்ளிகளிலிருந்து வரும் குழந்தைகள் கார்ட்டூன், கணினி, தொலைக்காட்சி என்று தான் வாழ்கிறார்கள். அந்தக் குழந்தைகளின் நல்வாழ்விற்கு வழிகாட்டியாக என்ன செய்யலாம்'' என்றெல்லாம் பத்மினி சிந்திக்கலானார்.

அதன்பிறகு மருத்துவர்கள் சங்கம், வழக்கறிஞர்கள் சங்கம், கல்லூரிகள், சுழற்சங்கங்கள் என்று பத்மினி சொற் பொழிவாற்றலானார். இவரது சிலைடு ஷோவுக்கு எங்கும் பாராட்டு. இவற்றுக் கெல்லாம் சிகரம் வைத்தாற் போல், தருமையாதீனம் 26ஆம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் இவர்களைப் பார்த்து ''நீ இந்தப் பணியைச் செய்'' என்று அருளாசி இட,

''நமது பண்பாட்டிற்குரிய நாயன் மாரின்
அருள் வரலாறு சிடி ரோம்''

(இரண்டு தொகுதிகள் - 9 மணி நேரம்)


வெளிவந்தது. காலந்தோறும் நாயன் மார் வரலாறு கவிதையாய் - கல் வடிவத் தில் சிற்பமாய் - உரைநடையாய் - வண்ண ஓவியமாய் - மக்களை வளப் படுத்தி வருகிறது. இன்று கணினி வடிவத்தில் அயல் நாட்டிற்கும் செல்ல ஆரம்பித்து விட்டது. நாயன்மார் சரிதம் வற்றாத ஜீவநதி!

(பெற்றோர்; க. சுவாமிநாதன் - பழநி சுவாமிநாதன், கணவர்: ஜெ. கபாலி மூர்த்தி)

(துணை நூல்கள் : ''சிதம்பரம் பெருமக்கள் - மயில்வாகனன்''.


''சேக்கிழார் சீர்பரவும் ஜெயகாந்தம், துரைக்கண்ணு'', ''க. சுவாமிநாதன் சதா பிஷேகமலர்'', ''காரைக்காலம்மையார் - மயில்வாகனன்'' ''தில்லைத் தமிழ் மன்றம்'' - மற்றும் சுந்தரேசம் பிள்ளை, எஸ். திருநாவுக்கரசுப்பிள்ளை முத்து இராமலிங்கம் செட்டியார், ஆதிமூலம், ஏ. சம்பந்தம், பத்மினி கபாலிமூர்த்தி.)

(கட்டுரை தொடர்ச்சி பக்கம் 82-இல்)


1
2
3
4



5



7



6



8



9



11



10



12


13


உழவாரம்
15


14



16


17



19


18


20



21



23



22



24



26



25



27



சேக்கிழார் மணிமண்டபம், சிதம்பரம்

28


30


29



31

படங்கள் : விளக்கம்

1. ஆடல்வல்லான் – நெய்வேலி
2. கணினியில் பெரிய புராண்
3. அறுபத்துமூவர் திருவுருவச்சிலைகள் – நெய்வேலி]
4. கணினியில் பெரியபுராணம்
5. சேக்கிழார் மண்டபம் – சிதம்பரம்
6. நாட்டியாஞ்சலி – சிதம்பரம்
7. சேக்கிழார் மண்டபம் – சிதம்பரம்
8. நாட்டியாஞ்சலி – சிதம்பரம்
9. அறுபத்துமூவர் படம் – மயிலாடுதுறை
10. அறுபத்து மூவர் அருள்வலம் – மயிலாடுதுறை
11. உழவாரம் மாநாடு – மயிலாடுதுறை
12. மேலப்பெரும்பள்ளம் காளியம்மன் கோயில் – திருமண உதவி பெற்றோர்.
13. சுனாமி மாணவர்களுக்கு உதவி – மேலையூர்
14. மாணவர் பண்பாட்டுப் பயிற்சி முகாம் – மேலையூர்
15. பாரதி – ப்ரதீஷ் அறக்கட்டளை உதவி பெற்றோர் – மேலையூர்
16. மாணவர் பண்பாட்டுப் பயிற்சி முகாம் – மேலையூர்.
17. உறையூர் அடியார் திருக்கூட்டம் – நடுவில் இராகவன், சித்ரா இராகவன்.
18. நீ. சீ. சுந்தரராமன் – இராதாதியாகராஜன் – மதுரை
19. கயிலாசநாதர் பண்ணிசை மன்றம் – திருச்சி.
20. திருவுருமலை பன்னிரு திருமுறை வழிபாட்டுக் ககம் – நெல்லை.
21. அப்பர் திருவுருவப் படம் – கனிமேடு.
22. சீனிவாசா மேல்நிலைப்பள்ளி ஆசிரியர்கள் – மேலையூர்.
23. ப. மூக்கப்பிள்ளை – திருச்சி.
24. சிறப்புலிநாயனார் இறைபணி மன்றம் – ஆக்கூர்.
25. உழவாரப் பணி – விருத்தாசலம்.
26. உழவாரப் பணி – கோயில்பட்டி
27. மணிவாசகர் மன்றம் – செம்பனார் கோயில்
28. சேக்கிழார் மணிமண்டபம் – சிதம்பரம்
29. பன்னிரு திருமுறை விழா – திருச்சிராப்பள்ளி.
30. கரந்தை ஜெயகாந்தம் துரைக்கண்ணு சேக்கிழார் விழா அறக்கட்டளை – சிதம்பரம்.
31. பெரியபுராணம் வாழ்க்கை இலக்கியம் வெளியீடு – மயிலாடுதுறை.

2. குறிஞ்சிப்பாடி

முத்துக்குமரசாமி முதலியார்



''குமார் டெக்ஸ்டைல்ஸ்'' என்ற பலகை வாசலில் இருந்தது. உள்ளே நுழைந்தால் ''காண இனியது நீறு'' என்று தருமபுரம் சுவாமிநாதன் ஒலி நாடாவில் பாடியது கம்பீரமாக ஒலித்துக் கொண்டிருந்தது. டெக்ஸ்டைல்ஸ் கடை என்று நுழைந்தால் தேவாரப் பாடல் வருகிறதே என்று மீண்டும் ஒருமுறை வாசலுக்குச் சென்று பார்த்தால் சரியாகத் தான் இருந்தது. உள்ளேபோய் கேட்டால் இதுபோல் 200 ஒலி நாடாக்கள் உள்ளன. பெரியவர் பி.எம். முத்துக்குமரசாமி முதலியார் *(4.6.1920)* அவர்களுக்கு தேவார இசை கேட்பது என்பது உயிர் மூச்சு. பெரியவர் பன்னிரு திருமுறைகளையும் இருமுறை படித்து முடித்து விட்டார்கள்.

தெய்வத்தமிழ் மன்றம்

தன்னுடைய திருமுறை ஆர்வத்தின் வெளிப்பாடாக முத்துக்குமாரசாமி முதலியார் அவர்கள் 7.6.1989-இல் தெய்வத் தமிழ் மன்றத்தைத் தொடங்கினார். முதலில் திருமுறை முற்றோதலில் தொடங்கினார்கள். பாடல் மட்டும் முதலில் படித்தார்கள். பின்னர் உரை விளக்கத்துடன் படிக்கலானார்கள். குறிஞ்சிப்புலவர் அ. பாலசுப்பிரமணியன் அவர்களும், சித்தாந்தப் புலவர் எஸ். கலியபெருமாள் அவர்களும் இருக்கையில் விளக்கத்துக்கு என்ன தடை? ஆண்டு விழாவினைப் பதினைந்து ஆண்டுகளாக நால்வர் விழாவாக நான்கு ஓதுவார்களைக் கொண்டு வீதிவலம், அபிடேகம் என்று மிகச் சிறப்பாகச் செய்கிறார்கள். மார்கழி மாதம் முப்பது நாட்களும் தினமும் காலை திருவெம்பாவை ஓதுகின்றார்கள்.

குறிஞ்சிப்பாடியில் எந்தத் திருமணமாயினும் - குறிப்பாக முத்துக்குமரசாமி முதலியார் அவர்கள் இல்ல எந்த மங்கல நிகழ்ச்சியாயினும் - திருமுறைத் தொகுப்பு நூல் ஒன்று வெளியிட்டு விடுகிறார்கள். குறிஞ்சிப்பாடியில் உள்ள அனைத்து வீடுகளிலும் திருமுறைத் தொகுப்பு நூல்கள் இல்லாமல் இராது.

பிரதோஷ வழிபாடு, தலயாத்திரை எனப் பணியாற்றுகின்றனர். அமைப்பாளர் குறிஞ்சிப் புலவர் அ. பால சுப்பிரமணியனார் மன்றத்தின் பணிகளுக்கு முழுமையாகத் துணை நிற்கின்றார். குறிஞ்சி மக்கள் அனைவரையும் ''சிவ சிவ'' என்று சொல்ல வைத்து விட்டார்.

அநுபவத்தின் முதிர்ச்சியை அங்கு கண்டோம்! இளமையின் எழுச்சியை இனிக் காண்போம்!

சிவனடியார் திருக்கூட்டம் குறிஞ்சிப்பாடி

சிவனடியார் திருக்கூட்டத்தாரிடம் அப்படி ஓர் எழுச்சி! கோவை குமாரலிங்கத்தின் தயாரிப்பு என்றால் சும்மாவா? தவத்திரு கோலசாமிகள் திருக்கோயில் என வழங்கும் அருள்மிகு சொக்கநாதர் திருக்கோயிலுக்கு 8.9.2005 அன்று திருநெறிய தீந்தமிழ் திருக்குட நன்னீராட்டு விழா நடத்தியுள்ளார்கள். ''தமிழில் தான் செய்ய வேண்டும். சிவபெருமானைத்தான் வணங்க வேண்டும். நவக்கிரகங்களுக்கு இங்கே வேலை இல்லை. அப்படி ஏதாவது

பேசினால் ''தூக்கிக் கடாசிப்புடுவோம்'' என்றார்களே பார்க்கலாம். அடேயப்பா! அப்படி ஒரு கொள்கைப் பிடிப்பு! நான் வந்த காரில் சிறிது பழுது பார்க்க வேண்டியிருந்தது. அதனால் தங்கல் சற்று நீடித்தது. அனைத்துக் கொள்கைகளிலும் ஓர் ஆழ்ந்த பிடிப்பு இருந்தது. வழிபாடு அவர்களே செய்கிறார்கள். 2002-இல் தான் இவர்கள் அமைப்பு தொடங்கப் பட்டது. பத்து பேருக்குப் பயிற்சி கொடுத்து வாழ்வியல் சடங்குகளும் திருமுறைகளின் அடிப்படையிலேயே செய்கின்றனர். திருவாசக முற்றோதல் (இதுவரை 60) இல்லங்கள் தோறும் திருமுறை ஓதுதல் (இதுவரை 150), செய்து வருகின்றனர்.

1995-இல் கோலசாமி திருக்கோயிலைக் கவனிக்கவே தவத்திரு கோல சாமிகள் வழிபாட்டு மன்றம் துவங்கப் பட்டது. இந்தக் குழுவினரே இணைந்து திருவாவடுதுறை ஆதீன சைவ சித்தாந்தப் பயிற்சி வகுப்பு நடத்து கின்றனர்.

3, காட்டுமன்னார் கோயில்

முப்பத்தாறு ஆண்டுகளுக்கு முன் தோற்றுவிக்கப்பட்ட சிவனருள் திருக் கூட்டம் மாதத்திற்கு ஒருமுறை அல்லது இரண்டு முறை உழவாரப் பணி செய்தல், அன்னதானம், மாத, ஆண்டு பூச வழிபாடு, சிதம்பரம் தேர்த் திருவிழா வின் போது நான்கு வீதிகளிலும் நீர் தெளித்து, அலகிட்டு, கோலமிட்டு வடம் பிடித்தல் எனப் பணியாற்றுகிறது.

(தலைவர் - ப. சீனியப்பன்; செயலர் - சு. ராமதாஸ்)

4. பண்ணுருட்டி

சொள்ளை சபாபதி செட்டியார்

மூன்னூறு ஆண்டுகளுக்கு முன்னர் பண்ணுருட்டியில் சொள்ளை சபாபதி செட்டியார் என்ற சிவனடியார் இலட்சக் கணக்கான ரூபாய் செலவு செய்து திருவதிகை வீரட்டேஸ்வரர் திருக் கோயிலில் விபூதி மண்டபம், தரிசன மண்டபம், வாகன மண்டபம், நூற்றுக் கால் மண்டபம் ஆகியன கட்டினார். அவரது திருவுருவச்சிலை கோயிலில் நுழையும்போது உள்ள சிறு மண்ட பத்தில் உள்ள தூணில் செதுக்கப்பட்டு உள்ளது. அவரது பெண், மாப்பிள்ளை கொள்ளுப் பேரன் ஆகியோரும் செட்டியார் அவர்கள் வழியைப் பின்பற்றி பல திருப்பணி வேலைகளைச் செய்து வந்தார்கள். இப்பொழுதும் அந்தப் பரம்பரையினர் தொடர்ந்து உபயம் (11 மணி காலம்) செய்கிறார்கள்.

மேலும் சில புரவலர்கள்

1960-70களில் சுப்பராயலு நாயுடு, ஏ.எம். இராமலிங்கம், டி.கே. ராம லிங்கம், சண்முகசுந்தரம் செட்டியார் ஆகியோர் சிவத் தொண்டு செய்து வந்தார்கள். கே.எம். இராமசாமி செட்டியார் நிரம்ப அளவில் பொருட் செலவு செய்தார். இவர்களே திருத் துறையூர் திருக்கோயில் குடநீராட்டு செய்தவர்கள். 1995-இல் ஸ்ரீதர குருக்கள் மூன்று லட்ச ரூபாய் செலவில் செய்தார்.

1963-க்கு முன் மன்றம் ஏதும் இல்லை. 1972-இல் கயிலை மணி வை. ஆறுமுகம் மற்றுமுள்ள அன்பர்கள் சேர்ந்து நால்வர் நற்பணி மன்றம் தொடங்கினர். சில காலமே இயங்கியது (தலைவர் - கிருஷ்ணசாமி; செயலர் - வை. ஆறுமுகம்)

திருநாவுக்கரசு திருத்தொண்டர்கள் இறைபணி மன்றம்

1993-இல் திருவதிகை திருநாவுக்கரசு திருத்தொண்டர்கள் இறைபணி மன்றம் தொடங்கப்பட்டது. சிவராத்திரியன்று சொற்பொழிவுகள், திருமுறை ஓதுதல் என நடத்துகின்றனர். 1996-இல் கயிலை மணி வை. ஆறுமுகம் அவர்கள் தலைவர்

பொறுப்பேற்றார். 15 ஆண்டுகளாக அமாவாசையன்று சொற்பொழிவுகள் நடத்துகின்றனர். மாதா மாதம் உழவாரப் பணி செய்கிறார்கள். இரண்டாம் பிராகாரத்தில் உழவாரப் பணி செய்து கட்டுபடியாகவில்லை. தலைக்கு 1000 ரூபாய் வீதம் போட்டு மூன்று லட்ச ரூபாய்க்கு மேல் தளவரிசை போட்டனர். அதனால் இப்பொழுது உழவாரப் பணிசெய்யும் வேலை வெகுவாகக் குறைந்து விட்டது. செயலர் வீரமணி மாதாமாதம் பிரதோஷச் செலவு செய்து வருகிறார். 4.1.1997இலிருந்து அறுபத்து மூன்று நாயன்மார் குரு பூஜை அந்தந்த நட்சத்திரத்தில் செய்து வருகின்றனர். கயிலை மணி அவர்களே பெரியபுராணம் சொல்கின்றார்கள். நால்வர் குருபூஜை வெகு சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள்.

1996இலிருந்து ரங்கநாதன் அவர்கள் செய்யும் சோமவார வழிபாடும், ஏழு ஆண்டுகளாக ஆறுமுகம், அருணாசலம் முதலியோர் இணைந்து சிவத் தொண்டர் குழு என அமைத்துச் செய்யும் அர்த்தசாம வழிபாடு, சிவத் தலயாத்திரைக் குழு, பாடல் பெற்ற தலங்களுக்கு யாத்திரை என சிவத்தொண்டும் ஆற்றுகின்றனர்.

இளையான்குடி மாறநாயனார் திருவமுது நிதி அறக்கட்டளை

பண்ருட்டியின் தனித்த சிறப்பு இளையான்குடி மாறநாயனார் திரு வமுது நிதி அறக்கட்டளை ஆகும். திருவதிகை (பண்ருட்டி) வழிபாட்டிற்கு வருகிறவர்கள் வழிபாடு செய்வதற்கும், அன்னம் பாலிப்பிற்கும் தேவைப்படின் தங்குவதற்கும் இவ்வறக்கட்டளை உதவு கிறது. இதுவரை இலட்ச ரூபாய் சேர்த்துள்ளார்கள். 4.6.2002-இல் அறக் கட்டளை தொடங்கப்பட்டது. எத்துணை அரிய பணி! பாடல் பெற்ற தலங்களுக்கு வழிபாடு செய்ய வருபவர்கள் பல நேரங்களில் உணவு வசதி ஏதும் இல்லாத கிராமங்களில் தடுமாறுவார்கள். தமிழகத்தில் உள்ள அத்தனை பாடல் பெற்ற தலங்களிலும் இதுபோன்ற அறக்கட்டளை ஒன்று உருவாக வேண்டியது இன்றியமையாதது ஆகும்.

(தலைவர் - வை. ஆறுமுகம்; செயலர் - சோமசுந்தரம்; பொருளர் - தருமலிங்கம் செட்டியார்)

வை. ஆறுமுகனார்



பண்ருட்டியில் எந்த சிவப்பணியா யினும் சரி; மன்றம் தொடங்கு வதாயினும் சரி; கயிலை மணியவர்கள் ''அடியேன்'' என்பார்கள். அப்பர் மன்றம், திருவமுது அறக்கட்டளை அனைத்திலும் அவர்கள் பங்கு உள்ளது. ஸ்ரீ திருவாவடுதுறை ஆதீனம் நடத்தும் சைவச் சித்தாந்த நேர்முகப் பயிற்சிக்கும் இவர்களே அமைப்பாளர். இதுவரை நான்கு தொகுப்புகள் படித்து முடித்து உள்ளனர். 11 ஆண்டுகளாகச் செயல் படுத்தி வருகிறார். தனி மனிதர் எத்துணை செய்கிறார்! கயிலாய யாத்திரை, சிவபூஜை அனைத்தும் கயிலை மணியாருக்கு உயிர் மூச்சு!

எங்கும் காணாத விந்தையாய் அவரது வீட்டு வாசலில் இடபக் கொடி பட்டொளி வீசிப் பறக்கிறது. தேவாரப் பாட்டொளி வீசும் அந்த இல்லத்தில் இடபக் கொடி பட்டொளி வீசுவதில் வியப்பென்ன!

(பிறந்த ஆண்டு 28.6.1939; பிறந்த ஊர் - சின்ன சேலம், விழுப்புரம் மாவட்டம்;)

5. நெய்வேலி



சிவகாமி உடனாய ஆடல்வல்லான்


உலகிலேயே மிக உயரமான நடராஜர் சிலை.

உலகின் முதல் அறுபத்துமூவர் திருக்கோயில்.

இவை எங்கு உள்ளன? இரண்டிற்கும் ஒரே பதில் - நெய்வேலி. நெய்வேலி, சிவபுரத்தில் உள்ள நடராஜர் சிலை 10' 2" உயரமும், 8' 3" அகலமும், 2420 கிலோ எடையும் கொண்ட ஒரே வார்ப்பினாலான - ஐம்பொன்னிலான - மிகப் பெரிய மூர்த்தி ஆகும். 8.9.1986 அன்று இரவு ஐம்பது உலைகளில், குடந்தை அருண ஜடேச ஸ்தபதி, துணை ஸ்தபதிகள் பதின்மர், சீடர்கள் இருநூற்றுவர், பணியாட்கள் பலர் உதவியுடன் ஐம்பொன் குழம்புகளால், போகர் நான்காயிரத்தில் கூறப்பட்ட விதிகளின் படி பல்வேறு மூலிகைகளையும் சேர்த்து, ஓதுவாமூர்த்திகளின் தேவார இசையுடனும், தில்லை வாழந்தணர்களின் வேத கோஷத்துடனும், சீலத்திரு மயிலை குருஜி சுந்தர்ராம் சுவாமிகளின் நேர்முக ஆசியுடனும் அழகிய திருச்சிற்றம்பலமுடையானின் சிலை வார்க்கப் பெற்றது.



சிவபுர வளாகம்



அறுபத்துமூவர் திருஉருவச்சிலைகள்

அழகிய திருச்சிற்றம்பலமுடையான் நெய்வேலியில் எழுந்த வரலாறு என்ன?

பன்னிரு திருமுறை வளர்ச்சிக் கழகம்

1980 அன்று அப்போதைய நெய்வேலி நகரியத்தின் தந்தை ராமலிங்கம் பிள்ளையின் தலைமையில் சிவத் தொண்டர்கள் பலர் கூடிப் ''பன்னிரு திருமுறை வளர்ச்சிக் கழகம்'' என்ற அமைப்பை நிறுவினர். ராஜப்பா, பால் வண்ணன் ஆகியோரின் இடைவிடாத முயற்சியால் இக்கழகம் தொடங்கப் பெற்றது. இக்கழகத்தினர் சிறு அளவிலான வழிபாடுகள், திருமுறை இசை நிகழ்ச்சிகள், திருமுறைப் பயிற்சிகள், முற்றோதல்கள், தல யாத்திரைகள், உழவாரப் பணிகள் என்று தெய்வத் தொண்டாற்றி வந்தனர்.

கோயில் எழுந்த வரலாறு

பன்னிரு திருமுறை வளர்ச்சிக் கழகத்தினர் அழகிய திருச்சிற்றம் பலமுடையான் சிலை உருவாக்கித் திருக்கோயிலும் எழுப்ப விரும்பினர். நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தில் அன்றைய தலைமைக் கண்காணிப்பு அதிகாரி பஞ்சாபகேசன் அவர்கள் கழகத்திற்குப் புரவலராகப் பொறுப் பேற்று மாடக் கோயில் நிறுவ முன் வந்தார்கள். 1986ஆம் ஆண்டு சித்திரை மாதம் மயிலை குருஜி சுந்தரராம் சுவாமிகள் தம்முடைய அருட்கரத்தால் மாடக் கோயிலுக்கு அடிக்கல் நாட்டினார். ஒரே ஆண்டில் பளிங்கு மாமணி ம்ண்டபமாம் - மாடக் கோயிலாம் - தியான சபை உருவாகியது.

ஆறாவது சபை

1. இரத்தின சபை - திருவாலங்காடு 2) வெள்ளி சபை - மதுரை 3) சித்ரசபை - திருக்குற்றாலம் 4. தாமிர சபை - திருநெல்வேலி 5. பொற்சபை - சிதம் பரம். ஆறாவது சபையாக நெய்வேலிச் சிவபுர வளாகப் பளிங்குச் சபை விளங்குகிறது. அழகிய திருச்சிற்றம்பல முடையானின் நெற்றியில் இயற்கை யாகவே விபூதி ரேகைகள் அமைந்து உள்ளன. அம்மையின் திருநாமம் ''அருள்மிகு ஓசை கொடுத்த நாயகி''

நாயன்மார்களுக்கென்று தனியே ஒரு கோயிலை இந்த சிவபுர வளாகத்தில் அமைத்து, பக்தர்களின் நீண்ட நாள் கனவை நனவாக்க வேண்டும் என்று கழகத்தார் முடிவு செய்தனர். இந்த முடிவு கழகத் தனி ஆலோசகர் ராஜேந்திரனிடம் தெரிவிக்கப்பட்ட போது அவர்களும் மனமகிழ்ந்து இசைவு தெரிவித்ததோடு மட்டுமின்றி, கோயில் கட்டுமானப் பணிகளை முழு மூச்சோடு போர்க்கால வேகத்தில் முடுக்கிவிட்டார். 63 நாயன்மார்கட்கும், 9 தொகை அடியார்கட்கும், மணி வாசகர்க்கும், சேக்கிழார்க்குமாக 74 பஞ்சலோகத் திருமேனி அமைக்கும் பொறுப்பு குடந்தை அருண ஜடேஸ்வரர் ஸ்தபதி வசமே ஒப்படைக்கப்பட்டது. திருத் தொண்டர்களுக்கென்று தனியே திருக் கோயில் உலகிலேயே இங்குதான் முதன் முதலாக அமைக்கப்பட்டுள்ளது. இதன் குடநீராட்டு விழா 4.4.2002 அன்று நடந்தது.

ஆராய்ச்சி மணி

இக்கோயிலின் நுழைவாயிலின் பின்புறம் ஆராய்ச்சி மணியொன்று ஸ்தூபியில் பொருத்தப் பெற்று அதனருகில் மக்கள் நலம் கருதி மனுநீதி முறைப் பெட்டி ஒன்றும் அமைக்கப் பட்டுள்ளது. பக்தர்கள் தங்கள் மனக் குறைகளை - நியாயமான விருப்புங் களைத் தனித்தாளில் எழுதி ஆராய்ச்சி மணிக்கு அருகில் உள்ள ''மனுநீதி முறைப்பெட்டியில்'' மும்முறை ஒலிக்க வேண்டும். பிராகாரத்தில் கோரிக்கைகள் நிறைவேறுகின்றன என்பது அனுபவத் தில் கண்ட உண்மையாகும்.

தொண்டர்கள்

சிவக்குமார் (வயது 45, பொறி யியலார்), சேகர் (வயது 43, ஆபரேட்டர்) கோயில் தொடர்பாக எப்பணியாயினும் - குருபூஜை, புறப்பாடு, முற்றோதல், சொற்பொழிவு எதுவாயினும் - முன் நின்று செயல்பட்டு நிறைவுவரை இருப் பவர்கள்.

சீதாலட்சுமி (வயது 50, ஆசிரியை) கோலம் போடுதல். மலர்கள் கொய்து வருபவர்கள் : நடராஜன், நாகப்பன் ஆகியோர் ஆவர். மாலைகள் தொடுப்பவர்கள் : திருமதி ஜெயலட்சுமி, இளங்கோ, முருகையாப் பிள்ளை,

நாகமுத்துப் பிள்ளை, கந்தசாமி, சாந்தி சீதாராமன் ஆகியோர் ஆவர். நெய்வேலி நிலக்கரி நிறுவனத்திற்கு சொந்தமான இந்தக் கோயிலை நிர்வகித்து வரும் பொறுப்பு பன்னிரு திருமுறை வளர்ச்சிக் கழகத்தின் வசம் ஒப்படைக்கப்பட்டு உள்ளது. குறையின்றியும், குறைவின்றி யும் நிறைவாகப் பணியைச் செய்து வருகின்றனர். நெய்வேலி நிலக்கரி நிறுவனத் தலைமைக் கண்காணிப்பு அலுவலரும் தமிழகக் காவலர் துறை கூடுதல் இயக்குநருமாகிய ராஜேந்திரன் ஆலோசகராகவும், நெய்வேலி நிலக்கரி நிறுவனச் சுரங்கங்களின் முதன்மைப் பொது மேலாளர் ஆனந்தன் தலைவராக வும் இருந்து இக்கழகத்தை இப்போது வழி நடத்திச் செல்கின்றனர்.

ஆண்டுதோறும் அறுபத்து மூவர் விழா இங்கு வெகு விமரிசையாக மூன்று நாள் விழாவாகக் கொண்டாடப்படுகிறது. தேவார இன்னிசை, வழக்காடு மன்றம், அறுபத்து மூவர் வீதியுலா, பெரிய புராண நாடகம் என்று சிறப்பாக நடத்து கின்றனர். மயிலாடுதுறை உழவாரம் இயக்கம் நடத்தும் திருமுறை மாநாட்டி னை இக்கழகம் நடத்தியிருக் கிறது.

1989 முதல் இக்கழகம் சிறுவர் களுக்குத் திருமுறைப் போட்டிகள் நடத்தி வருகிறது. 1991 முதல் இசை விருதுப் போட்டியினை நடத்தி வருகிறது. முதல் மற்றும் இரண்டாம் வகுப்பு மாணவர்களுக்கு ''சிவபுராணம் ஒப்பித்தல்'', மூன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரையிலான மாணவர் களுக்கு ''சிவபுராணம்'' ஒப்பித்தலும் வினாக்களுக்கு விடையளித்தலும், ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு ''சிவ புராணம், திருத் தொண்டத் தொகை'' ஒப்பித்தலும் வினாக்களுக்கு விடை யிறுத்தலும், 6 முதல் 12-ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு பதினாறு திருமுறைப் பாடல்களில் தமிழிசைப் போட்டி, 25 வயதிற்குட்பட்டவர்களுக்கு 53 திரு முறைப் பாடல்களில் தமிழிசைப் போட்டி, 25 வயதிற்குட்பட்டவர்களுக்கு 53 திருமுறைப் பாடல்களில் இசை விருதுப் போட்டி, முதல் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை திருநெறிய தமிழ்ப் போட்டி (நால்வர் வரலாறு, திருமுறை ஆசிரியர்கள் வரலாறு) என நடத்துகின்றனர். இதற்காகத் தனி நூல்களும் வெளியிட்டுள்ளனர். நூல்கள் மட்டுமா? அப்பர் அற்புதம், சம்பந்தர் அற்புதம், சுந்தரர் அற்புதம் என திருத்தணி சாமிநாதன் ஒலிநாடாக்களும் வெளியிட்டுள்ளனர்.

பள்ளி மாணவ, மாணவியர்க்கு ஓதுவாமூர்த்திகளைக் கொண்டு இலவச தேவார வகுப்புகள் நடத்துகின்றனர். ஆறு வருடங்கள் நடக்கும் வகுப்புகளில் 70 மாணவர்கள் படிக்கின்றனர்.

பன்னிரு திருமுறை வளர்ச்சிக் கழக மாணவ மாணவியரின் திருமுறை இசைக் கச்சேரிகள் பல இடங்களில் நடை பெற்றுள்ளன. அவற்றையும் திரு முறை மலர்கள் என ஒலி நாடாக்கள் மூலம் கழகம் வெளியிட்டுள்ளது. இதுவரை 10 ஒலி நாடாக்கள் வெளியாகி உள்ளன.

திருத்தொண்டினை முன் வைத்துப் பணியாற்ற இக்கழகம் 14.7.1989 முதல் நால்வர் நற்பணிமன்றம் என்று அமைத்துப் பணியாற்றுகிறது. ஆலோச கர் சிவ. ராசப்பா, தலைவர் - ராமச் சந்திரன்.

இக்கழகம் திருவாவடுதுறை ஆதீன சைவ சித்தாந்தப் பயிற்சி வகுப்பினை நான்காம் தொகுப்பாக நடத்தி வருகின்றது.

இவ்வாறு எழிலான கோயில், திருமுறை இசைப்பயிற்சி, போட்டிகள், திருமுறை மாநாடு, சைவ சித்தாந்த



த.ச. பஞ்சாபகேசன்,
நடராஜர் கோயில் நிறுவியவர்



பொன். ராஜேந்திரன், அறுபத்து
மூவர் கோயில் நிறுவியவர்



சிவ. ராஜப்பா

வகுப்பு என பல நிலைகளிலும் சைவம் வளர்க்கும் இக்கழகம் நெய்வேலியில் சைவத்தைக் காக்கும் சீலவேலியாகத் திகழ்கிறது.

சிவனடியார் திருக்கூட்டம்



கந்தசாமி சிவாசாரியார்

நெய்வேலியில் இருக்கும் சிவனடியார் திருக்கூட்டம் சிவபூஜை செய்தல், தலயாத்திரை, தீக்கை கொடுத்தல், திருநெறிய திருமுறை வழி குடநீராட்டு நடத்துதல், திருமுறை நெறிப்படி வாழ்வியல் சடங்குகளை நடத்துதல் *(1161)*.

திருவாசக முற்றோதல், சமய நூல்கள் வெளியிடுதல் *(30)* எனப் பணியாற்று கிறது. இவ்வமைப்பு 25.2.1979-இல் தொடங்கப்பட்டது.

இத்திருக்கூட்டத்தை நெறிப்படுத்து பவர் கயிலை மணி சிவ சிதம்பர கந்தசாமி சிவாசாரியார் ஆவார். குடநீராட்டு விழா, வாழ்வியல் சடங்கு கள் நடத்துபவர்களும் இவர்களே. இவர் களே நூல்களை எழுதி விளக்கங்களும் தந்துள்ளார்கள். சிவாசாரியார் அவர்கள் கயிலை சென்று வந்துள்ளார்கள்.

(பிறந்த ஆண்டு - 24.11.1940; பிறந்த ஊர் - கோவில் பட்டி; பெற்றோர் - சிதம்பரம் பிள்ளை, சண்முக சுந்தரவடிவு)

6. பெண்ணாகடம்

பெண்ணாகடம் - பெண் *(தேவ கன்னியர்) + ஆ (காமதேனு) + கடம்*

(வெள்ளையானை) ஆகிய இவர்கள் பூசித்ததால் இப்பெயர் பெற்றது.

சிவனடியார் திருக்கூட்டம்

அந்தப் புராணப் பெருமையைப் பெண்ணாகடம் இன்றும் தக்க வைத்துக் கொண்டுள்ளது. கடந்தை சிவனடியார் திருக்கூட்ட மகளிர் அணியினர் பூத் தொடுத்து இறைவனுக்குச் சூட்டும் மலர் அணியூட்டுதல் போல தமிழகத்தில் வேறு எங்கும் காண முடியாத ஒன்று. அந்த அளவு நந்தவனத்தில் மலர்களைப் பறித்துத் தத்தம் வீடுகளில் மாலைகள் தொடுத்து வந்து அலங்கரிக்கச் சொல்லி மகளிர் அழகு பார்ப்பார்கள். பூத் தொடுக்கும் மகளிர்; சித்ரா (48), தேவி (18), வள்ளிநாயகி(52), கோகுலம் (48), சாந்தி (40), மீனா (42), சுசீலா (45), தாட்சாயணி (51) சீனிவாசன் (51) 1983-இல் தொடங்கப்பட்ட கடந்தை (பெண்ணாகடம்) சிவனடியார் திருக் கூட்டம் அடியார்கள் இல்லங்களில் சிவபூசை செய்தல், பன்னிரு திருமுறை முற்றோதல், ஆலயத்திற்கு திருப்பணி செய்தல், மாதந்தோறும் உழவாரப் பணி செய்தல், மகாசிவராத்திரியன்று சிவபூசை மாநாடு நடத்துதல் எனப் பணியாற்று கிறது. (தலைவர் நா. திருஞான சம்பந்தம்)

உழவாரத் தொண்டர்கள் திருக்கூட்டம்

1985-இல் தொடங்கப்பட்ட கடந்தை உழவாரத் தொண்டர்கள் திருக்கூட்டம் மாதந்தோறும் உழவாரப் பணி, தலயாத்திரை, திருக்கோயில் தோறும் நந்தவனம் அமைத்தல், திருமுறை முற்றோதல் ஆகிய பணிகளைச் செய்கிறது. (பொறுப்பாளர் - என் திருஞானசம்பந்தம்)

பன்னிரு திருமுறைக்கழகம்

2000-இல் தொடங்கப்பட்ட பன்னிரு திருமுறைக் கழகம் இல்லங்கள் தோறும் பன்னிரு திருமுறை முற்றோதல், மாலை வழிபாடு முடிந்ததும் திருக்கோயிலில் முற்றோதல், தலயாத்திரை எனப் பணியாற்றுகிறது.

(செயலர் - என். திருஞானசம்பந்தம்)

திருமுறைக்கழகம்

இந்த மன்றங்களையெல்லாம் விட பழைமையானது 1976-இல் நிறுவப் பெற்ற கடந்தை திருமுறைக் கழகம் ஆகும். இதனை நிறுவியவர்கள் மணக் குடையான் சாமிநாதப் பிள்ளை, இறையூர் அரங்கநாதம் பிள்ளை ஆகியோர் ஆவர். இம்மன்றத்தின் பணிகள் வருமாறு: மகாசிவராத்திரி யன்று பாடல் பெற்ற தலங்களில் சுமார் 50 சிவபூசகர்களுடன் சிவபூசை செய்தல், திருமுறை உலா வருதல், சித்திரை சதயத்தன்று பெண்ணா கடத்திலிருந்து திருவாரூருக்குப் பாத யாத்திரை செல்லு தல், ஆண்டுதோறும் 16 இடங்களில் பன்னிரு திருமுறைகளை ஓதி ஆண்டு இறுதியில் ஆண்டு விழா நடத்துதல், 2-ஆம் ஆண்டு விழா சிதம்பரத்தில் மூன்று நாட்கள் பன்னிரு திருமுறை முற்றோதல் செய்தல், மூன்றாம் ஆண்டு விழா திருமுறைப் பாடல்களின் ஆசிரியர்களின் அவதாரத் தலங்களிலும் பாடல்கள் தொடர்பான திருத்தலங் களிலும் முற்றோதல் செய்து நிறைவில் ஆண்டு விழா நடத்துதல், காசி, இராமேச்சுரம், கும்பகோணம் ஆகிய தலங்களில் 15 நாட்கள் தங்கி பன்னிரு திருமுறை முற்றோதல் செய்தல், திருப் புகலூர், இராமேச்சுரம், திருவண்ணா மலை ஆகிய தலங்களுக்குப் பாத யாத்திரை செல்லுதல், தீக்கை வழங்குதல் என திருமுறைக் கழகம் திருமுறை முற்றோதல் கழகமாகவே அமைந்து உள்ளது.

சாமிநாதப்பிள்ளை

நாளும் சிவ சிந்தனையாய் இருந்து பிற சிவனடியார்களையும் சிவசிந்தனை யில் நிறுத்தி நெறிப்படுத்தி வருபவர்

மணக்குடையான் சாமிநாதப் பிள்ளை என்ற முதுபெருந்தொண்டர் திலகம் ஆவார். அவர்களுக்கு வயது 90. சிவபூஜா துரந்தரர். அவர்களது மணி விழா, பவள விழா - சிவபூஜை விழாக்களேயாம். 1975-இல் மணி விழாவில் 45 சிவபூசகர் கட்கும் 70 சிவாச்சார்யார்களுக்கும் ஆடைகள், சன்மானங்கள், 1985-இல் பவள விழாவில் 50 சிவபூசகர்கட்கும் 100 அடியவர்கட்கும் புத்தாடைகள் சன்மானங்கள், 1995-இல் முத்து விழாவில் 73 சிவ பூசகர்கள் 20 ஓதுவார்கள் ஆகியோருக்குப் புத்தாடை கள், சன்மானங்கள் என வழங்கியிருக் கிறார். எண்பது நிறைவில் பல்வேறு கோயில்களுக்கு நிலமாகவும், 24000 ரூபாய் தொகையாகவும் வாரி வழங்கியிருக்கிறார்.

சிவமே சிந்திக்கும் சீலர் சாமிநாத் பிள்ளை. *(பிறந்த ஆண்டு - 1915)*

சிவ. பழமலைப் பிள்ளை

பெண்ணாகடம் தமிழ்ப்புலவர் சிவ குருநாதன் பிள்ளை தான் சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் தொடங்கிய ''வார வழிபாடு'' திட்டத்தை முதன் முதல் பெண்ணாகடத்திற்கு கொண்டு வந்தார்கள். அவர்களுக்குப் பிறகு அவர் தம் சீடரான சிவ. பழமலைப்பிள்ளை அதனை விரிவுபடுத்தி நூறுக்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொள்ளுமாறு செய்தார்கள்.

சிவ. பழமலைப் பிள்ளையவர்கள் ''சமயப் பேரவை'' தொடங்கி சைவம் பரப்பினார். திருவாவடுதுறை ஆதீன சைவ சித்தாந்தப் பயிற்சி மையம் நடத்த உறுதுணையாக இருந்தார். மயிலாடு துறை ''உழவாரம்'' அமைப்பில் கலிக்கம்பர் ஆயுள் தொண்டராக இருந்து குருபூசைவிழா நடத்தி வந்தார்கள்.

(22.12.1924 - 21.5.2004)

7. விருத்தாசலம்

உழவாரத் தொண்டர் திருக் கூட்டத்தினர்



கையில் உழவாரத்துடன் இருப்பவர்
மா. திருச்சிற்றம்பலம்

''உழவாரம்'' அன்பர்களும் நானும் தமிழகத் திருக்கோயில்களின் - குறிப்பாகப் பாடல் பெற்ற தலங்களின் - அன்றைய நிலையை மக்களுக்குச் சுட்டிக் காட்டி, கோயில்களைச் சீர்செய்யவும், திருப்பணி செய்யவும் மக்களுக்கு உணர்வூட்ட ஆறுநாள் தமிழகம் முழுதும் ஆடல்வல்லான் அருள் வலம் வந்த பொழுது நண்பகல் நேரத்தில் விருத்தாசலம் வந்து சேர்ந்தோம். எங்களுக்கு நேர் எதிராக ஆண்களும் பெண்களுமாக 500 பேருக்கு மேல் அணி அணியாக வந்து கொண்டிருந்தனர். ''ஏதோ அரசியல் இயக்கம், தொழிற்சங்க இயக்கம்'' என நாங்கள் நினைத்து எங்கள் வாகனத்தை ஓரமாக நிறுத்தி ஊர்வலம் தாண்டட்டும் என்று காத்திருந்தோம். வந்த பேரணி எங்கள் எதிரே நின்று அடியார்கள் எங்களுக்கு எல்லாம் மாலைகள் அணிவித்து ''சிவ சிவ'' ஒலியுடன் திருக்கோயிலுக்கு எங்களை அழைத்துச் சென்றனர். அவர்கள் அன்பில் திணறிப்போனோம். அவர்கள் திருமுதுகுன்றம் உழவாரத் தொண்டர் திருக்கூட்டத்தினர் ஆவர். அன்றைய தினம் சதயத்திருநாள். ஒவ்வொரு சதயத் திருநாள் அன்றும்



உழவாரத் தொண்டர் திருக்கூட்டத்தினர் உழவாரப் பணி செய்தல்

திருமுதுகுன்றம் திருக்கோயிலில் இத் திருக்கூட்டத்தினர் கூடி உழவாரத் திருப்பணி செய்துவருகின்றனர். 9.4.1978 இல் தொடங்கிய இத்திருப்பணி இன்றைய நாள் வரை இடையறவு படாமல் நடைபெற்று வருகின்றது. 11.2.1984 முதல் பாடல் பெற்ற தலங்களுக்குச் சென்று உழவாரப் பணி செய்து வழிபாடாற்றி வருகின்றனர். இதுநாள் வரை 134 தலங்களில் உழவாரப் பணி செய்துள்ளனர். இத்திருக் கூட்டத் தில் 200 பேர்கள் உறுப்பினராக இருக் கின்றனர்.

தலைவர் திரு அ. பழமலைப்பிள்ளை கோமங்கலம்.

செயலர் திரு. மா. திருச்சிற்றம்பலம், சத்தியவாடி.

பன்னிரு திருமுறை வழிபாட்டு மன்றம்

மார்ச் 6, 2005- விருத்தாசலத்தில் ஒரு கருத்தரங்கில் கலந்து கொண்டு மாலை திருக்கோயில் வழிபாடாற்ற அருள்மிகு பழமலைநாதர் திருக்கோயில் சென்றேன். வெளிப்பிராகாரத்தில் ஓர் அறிஞர் திருமுறைகளை விளக்கிக் கொண்டிருந் தார். ''பன்னிரு திருமுறை வழிபாட்டு மன்றம்'' என்ற பலகை தொங்கிக் கொண்டிருந்தது. என்னுடைய தேடலே இதுதானே! அக்கூட்டத்தில் கலந்து கொண்டேன். ஒவ்வொரு மாதமும் இரண்டாம் சனிக்கிழமை பன்னிரு திருமுறை முற்றோதல் செய்கின்றனர். 1995-இல் இருந்து திருவாசக முற்றோதல் செய்கின்றனர். 2000-இல் இருந்து உழவாரப் பணியும் செய்கின்றனர். முன் நின்று நடத்துபவர் கல்லூரிப் பேராசிரியர் தங்கதுரை என்பவர். கல்லூரி பேராசிரியர் என்ற உடன் கல்லூரி மாணவர் பண்பாட்டுப் பயிற்சித் திட்டம் பற்றி அவரிடம் பேசினேன். மார்ச் மாதம் கல்லூரிப் பாடம் எல்லாம் முடிந்து படிப்பு விடுமுறை விடும் தருணம். இருந்தாலும் தங்கதுரை அவர்கள் தளராது 20 மாணவர்களை இத்திட்டத்தில் சேர்த்து விட்டார். கல்லூரி மாணவர் பண்பாட்டு பயிற்சி திட்டத்தின் முதலாம் ஆண்டு பல கல்லூரிகளும் தயங்கிய நேரத்தில் தங்கதுரை காட்டிய ஆர்வமும், கொடுத்த ஊக்கமும் இத்திட்டத்தை வெற்றி அடைய வைத்தது. அடுத்த ஆண்டில் இருந்து 50 பேருக்கு மேல் சேர்த்து விட்டார். ஒல்லும் வகையெல்லாம் சைவத்தை வளர்ப்பதற்குத் திரு. தங்கதுரை நல்ல எடுத்துக்காட்டு ஆவார்.

2002-இல் தொடங்கப்பட்ட சேக்கிழார் மன்றம் சிவபூசை, சொற்பொழிவு என்று பணியாற்றுகிறது.

(தலைவர் - பரமசிவம். செயலர் - வெங்கடாசலம்.)

1995-இல் தொடங்கப்பட்ட முழு நிலா ஒளி வெளி மன்றத்தினர் திருக் கோயிலையே பௌர்ணமி தோறும் கிரி வலம் செய்கின்றனர். ஒருங்கிணைப் பாளர் திரு. ஞானப்பிரகாசம்.

சாத்துக்குடல் வீ. சோமசுந்தரம் பிள்ளை அவர்கள் (பிறப்பு 22.2.1918; மறைவு 31.5.1986) உழவாரத் தொண்டர் குழுவின் தலைவராக 3 ஆண்டுகள் பணியாற்றியும், 1978 முதல் பெண்ணா கடத்திலிருந்து திருவாமூருக்குச் சித்திரை சதயத்தன்று பாத யாத்திரை நடத்தியும்,

1983 திருமுதுகுன்றம் கோயில் குடநீராட்டு விழா நடத்தியும், தலயாத் திரைகள் பல செய்தும் சைவ நெறியில் நின்றார்கள்.

1. தொண்டர்கள்

ஆர். மெய்கண்டநாதன், வழக்கறிஞர் திருமுதுகுன்றம் இறைபணி மன்றம் தொடங்கி சமயப்பணி ஆற்றி வருகின் றார். இவருடைய பாட்டனார் குருலிங்க சங்கம பத்தியில் மேம்பட்டவரான வழக்கறிஞர் அமரர் திரு. ச. அரங்கசாமி பிள்ளை அவர்கள். 1958-ஆம் ஆண்டில் வடமொழியில் இருந்த ''திருமுது குன்றம் சிவத்தலவரலாற்றினை'' வட மொழி அறிஞரின் துணை கொண்டு தமிழாக்கி வெளியிட்டார். இந்நூலின் முன்னுரையாக அரங்கசாமிபிள்ளை அவர்கள் 20 பக்க அளவில் விருத்தா சலத்தின் பெருமை எந்தெந்த நூல்களில் காணப்படுகிறது என்று விரிவாக எழுதியுள்ளார். அரங்கசாமி பிள்ளையின் பேரர்களான பழமலைநாதன், மெய் கண்டநாதன், சிவகுமார் ஆகியோர் 2004 ஆம் ஆண்டில் இந்நூலை மறு பதிப்பாகக் கொண்டு வந்துள்ளனர்.

2) பொன்னம்மாள், ராஜ் உடையார் (வயது 65) ஆகிய இருவரும் 22 ஆண்டுகளாய் பூத்தொடுத்தல் கைங் கர்யம் செய்து வருகின்றனர்.

திரு. சங்கர் என்பவர், நாதசுர வித்துவான்; இருபது அடியார்களின் ஒத்துழைப்போடு அறுபத்து மூன்று நாயன்மார் அவதாரத் தலங்களில் ரூ. 40,000/- செலவில் ஆண்டுக்கு நான்கு கோயில்களை உருவாக்கத் திட்டமிட்டு உள்ளார். முதல் கட்டமாக திரு எருக்கத் தம் புலியூர் எனப்படும் ராஜேந்திரப் பட்டணத்தில் 17.3.2006 அன்று திருநீலகண்ட யாழ்ப்பாணர் திருக் கோயில் குடநீராட்டு விழா நடை பெற்றது. அமைப்பின் பெயர் - அறுபத்து மூவர் திருப்பணி மன்றம்.

8. கடலூர்

திருக்கோவலூர் ஆதீனம்

இது ஒரு வீர சைவத் திருமடம் இதன் முதற் குருநாதர் சிவத்திரு ஆறுமுக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள். இவர்களது திரு அவதாரம் 325 ஆண்டு கட்கு முற்பட்டதாகலாம். இவர்கள் திருவண்ணாமலை ஆறாம் முறை குகை நமசிவாய சுவாமிகளால் சிவலிங்க தாரணமும் தூல பஞ்சாட்சர உபதேசமும் பெற்றவர்கள். இவர்கள் நிட்டானுபூதி சாரம் முதலாக 31 நூல்கள் (1146 பாடல்கள்) அருளியுள்ளார்கள். இவர்கள் 97 ஆண்டுகள் எழுந்தருளி இருந்தார்கள்.

இவர்களை அடுத்து வந்த சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் 63 ஆண்டுக் காலம் அருளாட்சி செய்து உள்ளார்கள். திருப்பாதிரிப்புலியூர் சந்நிதி வீதியில் சிவத்திரு ஞானியார் மடாலயத்தைத் தோற்றுவித்தவர்கள் இவர்களே. இவர்கள் முருகரந்தாதி முதலாக 7 நூல்கள் (411 பாடல்கள்) அருளியுள்ளார்கள்.

மூன்று நான்கு குருநாதர்களை அடுத்து ஐந்தாம் குருநாதராக அருளாட்சி செய்தவர்கள் சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள். சிவத்திரு ஞானியார் அடிகள் எனத் தமிழக மக்களால் போற்றப்பெற்ற இவர்கள் 17.5.1873-இல் தோன்றியவர்கள். தம் 17-ஆம் வயதில் அருளாட்சி ஏற்று 52 ஆண்டுகள் அருளட்சி செய்தவர்கள்.

தமிழகம் எங்கும் பல்லக்கில் சென்று சமயச் சொற்பொழிவுகள் ஆற்றியவர்கள். இவர்களின் பரிபூரணம் 1-12-1942 தைப் பூசமாகும். ஆறு ஏழு குருநாதர்களை அடுத்துத் தற்போது எட்டாம் குருநாதராக 18.6.1986 முதல் சிவத்திரு சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் அருளாட்சி செய்து வருகின்றார்கள்.

அ. நடேச முதலியார்



அப்போதெல்லாம் (1952-களில்) சனி, ஞாயிறு வந்துவிட்டால் போதும். என் தந்தையார் திருக்குறள்வேள் ஜி. வரத ராஜம் பிள்ளையவர்களுக்குக் காலை முதலே பரபரப்பு வந்துவிடும். மாலை 4 மணியானால் அவர்கள் வீட்டு வாயில் வந்து நின்று சாலையை நெடுநேரம் பார்ப்பதும், பின்னர் கதவை அடைத்து விட்டு உள்ளே செல்வதுமாகப் பலமுறை போய் வருவார்கள். கதவைத் திறப்பதும் சாத்துவதுமாகத் தேய்ந்து போக வேண்டிய நிலைதான். முத்தொள்ளா யிரக் காதலியின் வேதனை தான்.

முதுபெரும்புலவர் பேராசிரியர் அ.நடேச முதலியார் அவர்களிடம் திருக் குறள், திருவாசகம் பாடம் கேட்கத்தான் இத்தனை தவிப்பு; என்னுடைய தந்தை மட்டுமல்ல. இதுபோல பல அன்பர்கள் அவர்களிடம் பாடம் கேட்டிருக் கிறார்கள். பல மாணவர்கள் பாடம் கேட்டிருக்கிறார்கள். மாவட்டக் கழகப் பள்ளிகளில் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றியிருக்கிறார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரி யராக இருந்திருக்கிறார். பேரூர் தமிழ்க் கல்லூரியில் முதல்வராக இருந்திருக் கிறார்.

இவருடைய காலமெல்லாம் பாடம் சொல்லிக் கொடுப்பதிலேயே கழிந்தது.

இவர்களிடம் பாடம் கேட்டபிறகு தான் என் தந்தையார் அவர்களின் வாழ்க்கை முறையே மாறியது. கூட்டுறவு வங்கியில் செயலராகப் பணி யாற்றிய என் தந்தையார் பொருளாதாரப் பட்டதாரி. அவர்களுக்குத் திருக்குறள், திருவாசகம் பாடம் சொல்லிக் கொடுத்து அவர்களின் வாழ்க்கை முறையையே மாற்றி விட்டார்கள். அவர்களிடம் பாடம் கேட்ட என் தந்தையார் திருக்குறள், திருவாசகம் இரு நூல்களுக்கும் உரை எழுதினார்கள். இன்றைய தினம் சைவ உலகிலே என் தந்தையாருக்கு நிலையான பெயர் நடேச முதலியார் அவர்களால் கிடைத்தது.

1952களில் திருச்சி புத்தூர் திரௌபதி அம்மன் கோயிலில் முதுபெரும்புலவர் நடத்திய திருவெம்பாவைச் சொற் பொழிவுகள் மறக்க முடியாதவை. சிக்கலான கேள்விகளை எழுப்பி வெற்றிலை மணக்கும் வாயால் ''பேசிப் பார்ப்போமே'' என்று இலக்கியத்திற்குள் உள்ளே நுழையும் அழகே தனி.

நெருடலான கட்டத்தை விளக்கும் பொழுது அமர்ந்தபடியே சற்றுப் பின் வாங்கி ''ஹா'' என்று ஒரு ஹாங்காரம் கொடுப்பார்கள். முகம் சற்று இறுக்க மாகிவிடும். கடினமான பகுதியை விளக்கிக் கொண்டிருக்கிறார் என்று அர்த்தம். சிறந்த சொற்பொழிவாளர்; நல்ல சொல்வன்மை இருந்தது. தலைப்பை விட்டு நகரவே மாட்டார். நகைச் சுவைக்குச் சிறிதும் இடமே யில்லை. ஆயினும் இனித்தது.

நல்ல சிந்தனையாளரும் கூட. தவத்திரு குன்றக்குடி அடிகளரோடு அனைத்து வகையிலும் ஒப்பிடலாம்.

என்ன! இவர்கள் நூல்கள் ஏதும் பெரிதாக எழுதவில்லை. தான் எடுத்துக் கொண்ட பொருளைத் தொகை வகை விரியாகப் பொருந்திய எடுத்துக் காட்டுகளுடன் யாவர் உள்ளத்திலும் தங்கும் வண்ணம் விளக்கும் திறத்தினர். அவர் நாவும் பேசும். அதன் வழி வலக்கை சுட்டு விரலாலும் பேசும்.

கருத்தரங்கத் தலைமையாயினும் சரி, பட்டி மண்டபத் தலைமையாயினும் சரி. இவர் பேச்சே நெஞ்சில் நிலைத்து நிற்கும். இவர் சைவமும் பேசுவார். வைணவமும் பேசுவார். தோய்ந்து விளக்குவார். ஆழங்கால் படுவார்.

இவர்கள் எழுதி வெளியிட்ட நூல்கள்: திருக்குறள், அருளியல் அறிவியல், திருநாவுக்கரசர், குமரகுருபரன், திருவாசகத்தில் அருள் அனுபவம், திருவைந்தெழுந்து தமிழ் மந்திரமே.

செந்தமிழ் மொழியிலும், ஆரிய மொழியிலும் பெரும் புலமை பெற்றவர். ஞானியார் சுவாமிகளின் சீடர். உ.வே. சாமிநாத ஐயரின் மாணவர். நடேச முதலியார் அவர்கள் 1905 -இல் கடலூர் புதுவண்டிப்பாளையத்தில் அமராவதி முதலியார் தைலம்மை அம்மையாருக்கு மகவாய்ப் பிறந்தார். 1995-இல் கடலூரில் புகழுடம்பு பெற்றார்.

சித்தாந்த சிவநெறி மன்றம்

ஒரு மாதத்திற்கான நிகழ்ச்சியினை முன்கூட்டியே திட்டமிட்டு வரையறை செய்யலாம். ஓராண்டிற்கான நிகழ்ச்சிகளை வரையறை செய்ய முடியுமா? அதுவும் வரவேற்புரையிலிருந்து நன்றியுரை வரை இன்னார் இன்னார் என்றும், மகேசுவர பூசை இன்னார் என்றும் நிமிடக்கணக்கில் துல்லியமாக வரையறை செய்து விடுகின்றனர் இம் மன்றத்தினர். அதுமட்டுமன்று. அந்த ஆண்டில் நடைபெற இருக்கின்ற உழவாரப் பணிகள், பணிகள் நடைபெறும் திருக்கோயில்கள், ஓராண்டிற்கான திருமுறை முற்றோதல்கள் நிகழும் நாட்கள், அச்செலவினை ஏற்போர் முகவரி என்று நெறிப்படுத்தி ஒரு புத்தகமாக ஆண்டுத் தொடக்கத்தில் கொடுத்து விடுகின்றார்கள். இது எப்படி முடிகிறது? சிவத்தல யாத்திரைக் குழு, உழவாரப் பணிக்குழு, முற்றோதல் குழு, அன்னதானக் குழு, பூசைக்குரிய ஏற்பாடு செய்யும் குழு, தீக்கை பெறுதல் குழு, பொதுமக்கள் தொடர்புக் குழு என ஏழு குழுக்களாகப் பிரித்து அக்குழுக்களிடம் பொறுப்புகளை விட்டு விடுகின்றனர். ''இதனை இதனால் இவன் முடிக்கும் என்று ஆய்ந்து அதனை அவன் கண்விட்டு'' விடுகின்றனர். திட்டமிடலுக்கு நல்லுதாரணம் சித்தாந்த சிவநெறி மன்றம். நால்வர் விழாக்களில் சொற்பொழிவுகளோடு திருமுறை இன்னிசையும் நடத்துகின்றனர். 2005 -2007க்கான தலைவர் - புலவர் வ. ஞானப்பிரகாசம் செயலர், சி. இராஜசேகரன், மன்றம் தொடங்கிய நாள் 27.12.1998, மன்ற நிறுவனர் பேராசிரியர் இரா. நடராசன்.

வ. ஞானப்பிரகாசம்

இத்தனை அழகாகத் திட்டமிட்டுப் பணியாற்றும் சைவநெறி மன்றத்தின் தலைவர் புலவர் வ. ஞானப்பிரகாசம் அவர்கள் தம் வாழ்க்கையிலும் திட்டமிட்டே பணியாற்றி வருகின்றார். ஆண்டு தோறும் ஆனித் திருமஞ்சனம் மற்றும் திருவாதிரைத் திருநாளை முன்னிட்டுத் தில்லையைப் பற்றிய அம்பலவாணன் அரும்புகழ் நூல்களை வெளியிடத் திட்டம் தீட்டி 25.6.2004 அன்று குரு நமச்சிவாயர் அருளிய 'சிதம்பர வெண்பா'' என்ற நூலை வெளியிட்டார். திருவாதிரைத் திருநாளுக்குத் ''தில்லைக் கலம்பகம்'' என்ற நூலினை வெளியிட்டார். 13.7.2005 அன்று



பட்டினத்து அடிகள் அருளிய ''கோயில் நான்மணிமாலையை'' வெளியிட்டார். இவ்வாறு அவ்வப்பகுதியில் உள்ளவர்கள் தங்கள் ஊர்களில் தோன்றிய பழந்தமிழ் நூலினை வெளியிட்டு வந்தால் அத்துணையும் நிலைத்து நிற்குமே! இன்னோர் உ.வே.சா அலைச்சலுக்குத் தேவை இருக்காதே.

சேக்கிழார் காட்டும் திருத்தொண்டு நெறி, திருநாவுக்கரசர் போற்றிய திருத்தொண்டர்கள், கந்தபுராணம் உரை நடை உள்ளிட்ட 16 சைவ நூல்கள் வெளியிட்டுள்ளார். இவையல்லாமல் சிறுசிறு நூல்களாகவும், பதிப்பு நூல்களாகவும், குடநீராட்டு மலர்களாகவும் நூற்றுக்கும் மேற்பட்ட நூல்கள் வெளியிட்டுள்ளார். (பிறப்பு 21.8.1951 பிறப்பிடம் – கருங்குழி வடலூர். பெற்றோர் – வடிவேல், மயிலம்மை)

க. சம்பந்தனார்

சைவச் சான்றோர் என்பதற்கு முழு இலக்கணமாக இருப்பவர் சிவநெறிப் புலவர் க. சம்பந்தனார் அவர்கள். இவர்கள் சிறு வயதில் ஞானியார் சுவாமிகளிடம் பாடம் கேட்டவர்களாம். கடலூர் துறைமுக நகரில் பத்தாண்டுகள் தெய்வத்தமிழ்நெறி மன்றம் என்ற பெயரில் இலக்கிய சமயப்பணி ஆற்றியிருக்கிறார்கள். பணி ஓய்வுக்குப்பின் திருப்பாதிரிப் புலியூரில் குடியேறிப் பாடலேசர் திருக்கோயிலில் 15.4.1990 இல் சிவ சிவ பன்னிரு திருமுறை மன்றம் நிறுவி ஞாயிறு தோறும் திருமுறை விளக்கம் கூறித் தற்போது பத்தாம் திருமுறைக்கான விளக்கம் கூறி வருகிறார்கள். ஓய்வு பெற்றவர்கள் இச்சான்றோர் வழியைப் பின்பற்றினால் எப்படி இருக்கும்?

(பிறப்பு - 3.11.1920; பிறப்பிடம் - கடலூரை அடுத்த புதுவண்டிப் பாளையம்; பெற்றோர் வே. கண்ணப்ப செங்குந்தர், அலமேலு அம்மையார்)

(நேர்காணல் - கடலூர் அன்பர்கள்)

9. மயிலம்

பன்னிரு திருமுறை வழிபாட்டு மன்றம்

மயிலம் பன்னிரு திருமுறை வழிபாட்டு மன்றம் நடத்திய திருமுறை முற்றோதல் வேள்வியை ஒரு காலத்தில் சைவ உலகம் பல படப் பாராட்டிப் பேசி மகிழ்ந்தது. முற்றோதல் நிகழ்ச்சிக்காகவே அம்மன்றம் தோற்றுவிக்கப் பட்டது. அதன்பின் இயங்குவதாகத் தெரியவில்லை. முற்றோதல் நிகழ்ச்சிக்கு இவர்களுடையது நல்ல எடுத்துக்காட்டு. மிகவும் முறையாக, பக்தி சிரத்தையோடு செய்தார்கள். நிறைவின்போது அருமையான மலரும் வெளியிட்டார்கள்.

27.4.1993-இல் தொடங்கப் பெற்ற இம்மன்றத்தின் சார்பில், ஒவ்வொரு திருவாதிரை தோறும் ஓர் அன்பர் இல்லத்தில், திருமுறை முற்றோதல் நிகழ்ச்சி தொடர்ந்து நடைபெற்றது. சிறந்த ஓதுவார் ஒருவரால் 20 பதிகங்கள் விண்ணப்பிக்கப் பெற்றுச் சிறந்த பேராசிரியர் ஒருவரால் விளக்கம் தரப் பட்டது.

(அட்டவணை பின் பக்கம் பார்க்கவும்)

மயிலம்

முற்றோதல் அட்டவணை

	நாள்	திருமுறை	தொடங்கியவர்கள்	நடத்தியவர்கள்
1.	27.4.1993	''சம்பந்தர் தேவாரம் முதல் திருமுறை''	''மயிலம் பொம்மபுரம் ஆதீனம் 19-ஆம் பட்டம்	''ஓதுவார்: மயிலாடுதுறை சொக்கலிங்க தேசிகர், சா. சங்கரநாராயணர்''
2.	28.9.1994	''4ஆம் திருமுறை''	தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம்	விளக்கம்: சு. திருநாவுக்கரசு, ''சீர்காழி திருஞான சம்பந்தம்''
3.	5.1.1996	''7ஆம் திருமுறை''	''திருவாவடுதுறை - இளைய சந்நிதானம், புதுவை அம்பலத்தாடையர் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ எஜமான் சுவாமிகள்	சீர்காழி திருஞான சம்பந்தம் சு. திருநாவுக்கரசு
4.	17.6.1996	''8ஆம் திருமுறை''	''திருவாவடுதுறை - சந்நிதானம், புதுவை அம்பலத்தாடையர் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம்	வேதாரண்யம் சு. முத்துக்குமார சுவாமி ஓதுவார்; கு. சுந்தரமூர்த்தி.
5.	27.9.1997	''9ஆம் திருமுறை''	''தொண்டை மண்டல ஆதீனம்''	''சிதம்பரம் ப. இராமச்சந்திரன் கு. சுந்தரமூர்த்தி
6.	15.12.1997	''10ஆம் திருமுறை''	''சிதம்பரம் ஸ்ரீ மௌன மடாலயம் சுவாமிகள்''	''சிதம்பரம் ப. இராமச்சந்திரன்; கு. சுந்தரமூர்த்தி
7.	18.5.1999	''11ஆம் திருமுறை''	''தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம்	''சா. சங்கர நாராயண ஓதுவார்; கு. சுந்தரமூர்த்தி
8.	விக்ரம ஆண்டு வைகாசி	''12ஆம் திருமுறை''	''மயிலம் பொம்மபுர ஆதீனம்	''சா. சங்கர நாராயணன் தா. ம. வெள்ளை வாரணம்.
9.	18.4.2002	'நிறைவு''	- -	சா. சங்கர நாராயணன் தா.ம. வெள்ளை வாரணம்

10\. 30.4.2002 அன்று திருவதிகை வீரட்டத்தில் நிறைவு விழா திருவாவடுதுறை ஆதீனம். ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள். விழாமலரை வெளியிட்டு அருளாசி வழங்கினார்கள். தலைவர் - டி.ஆர். ராஜாராம் ரெட்டியார். செயலர் - ப. வெங்கட சுப்பு ரெட்டியார்.

10. புதுச்சேரி

ஓம் ஸ்ரீ சக்திவேல் பரமானந்த குரு சுவாமிகள்

ஓம் ஸ்ரீ சக்திவேல் பரமானந்த குரு சுவாமிகள் தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள கடலூரில் 175 ஆண்டுகளுக்கு முன் தோன்றினார். காசி, ஹரித்துவார், பண்டரிபுரம், காஷ்மீர் போன்ற பகுதிகள் எல்லாம் சுற்றினார். எங்கும் இறைவன் மயம் என்ற உணர்ச்சி அவருள்ளே பொங்கி வழிந்தது. அதனால் தரையில் கால் வைத்து நடக்கவும் அஞ்சினார். மக்கள் பேசுவதைப் பார்த்து இறைவன் அவர்கள் உருவில் பேசுகின்றான் என்பார். நாய்கள் குரைக்கும். இறைவன் இவ்வடிவத்தில் பேசுகின்றார் என்று அவற்றினிடையே விளையாடுவார்.

கதிரவனின் பிரகாசத்தைப் பார்த்து ஆனந்தக் கூத்தாடுவார். கடலின் அலைகளையும் ஆழத்தையும் கண்டு ''இறைவா உன்னைப் பார்க்க முடிகிறதே'' என்று ஆனந்தக் கூத்தாடுவார். நெருப்பினில் விரலை விடுவார். உன்னை என்னால் தொட முடிகின்றதே என்று மகிழ்ச்சி அடைவார். அந்நெருப்போடு கொஞ்சி விளையாடுவார்.

குண்டலமான முகம்; குமிழ்ச் சிரிப்பு; அருட்பார்வை; சாதாரண நடுத்தர உயரம்; எலுமிச்சம்பழம் போன்ற மேனி. ''இறைவா நீ எங்கும் இருக்கின்றாய். உன்னை நான் எங்கும் பார்க்கின்றேன் உன்னிடம் பேசுகின்றேனே, இதை விட எனக்கு ஒன்றும் வேண்டாம். இப்படியே இருந்தால் போதும்'' என்று ஆனந்தக் கண்ணீர் விட்டுக் கொண்டே இருப்பார். உடம்பு முழுவதும் அவர் கண்ணீரால் நனையும். சுவாமிகள் ஒரே அன்பு மனம். சுவாமிகள் ஒரே ஆனந்த மயம். இப்படியே சுவாமிகள் புதுவைக்கு வந்து சேர்ந்தார்.

இத்தருணத்தில் ஓம் ஸ்ரீ ஞானானந்த சுவாமிகளின் சந்திப்பு ஏற்பட்டது. இருவரின் நட்பும் இமயமலையில் இருவரும் ஆத்ம சாதனை பயிலும்போது ஏற்பட்டது. பிறகு புதுவையில் தங்கியிருக்கும்பொழுது ஞானானந்த சுவாமிகளின் சந்திப்பு மீண்டும் ஏற்பட்டது. ஒளியும் கூடிப் பேரொளியாக மாறியது.

சுவாமிகள் ஆனந்த மயமாக இலட்சுமி கடாட்சமுள்ள முகமாகக் காட்சி அளித்தார். பாமர மக்கள் வந்து குவிந்தனர். நோயுற்றவர்களின் நோய் குணமாகியது. அப்பகுதி மக்களின் துன்பம் சிறுகச் சிறுக மறைந்தது. யாராவது தங்கள் கஷ்டங்களைச் சாமிகளிடம் சொன்னால், ''இதோ இறைவன் இருக்கின்றானே. கஷ்டம் எங்கே? ஆனந்தமாக இருக்கின்றான். சந்தோஷமாக போ'' என்பார். வந்தவரின் கஷ்டம் அங்ஙனமே மறைந்து விடும். சுவாமிகளைக் காலையில் தரிசனம் செய்தால் அன்று முழுதும் சந்தோஷமாக இருக்கும் என்பதை மக்கள் கண்டுணர்ந்தார்கள். நம்பிக்கையும் ஏற்பட்டது. வயது ஏறிக் கொண்டே இருந்தது. அவரின் பேரன்பு பிரபஞ்சம் முழுவதும் பரவத் தொடங்கியது.

ஒருநாள் மாலை அப்படியே உட்கார்ந்திருந்தார். எதையோ பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தார். ஒரு திக்கையே நோக்கித் தொடர்ந்து சிரித்துக் கொண்டிருந்தார். பக்கத்தில் இருந்தவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. அருகில் இருந்தவர்கள் ஆச்சரியத்துடன் வினவினார்கள். ''அங்கே ஆண்டவன் சிரிக்கப் போறாண்டா. ஆயிரமாயிரம் பேர் வாழப் போறாண்டா'' என்று துள்ளிக் குதித்தோடினார்.

தன் வேட்டியை எடுத்துக்காட்டி ''துணி வரப்போகுதடா. துணி வரப் போகுதடா'' என்று சிரித்தார். சற்று நேரம் கழித்து மீண்டும் ''எல்லோரும்

ஏறிப்போக பெரிய வண்டி வரப் போகுது. எப்போது ஓடும்'' என்று சிரித்துக் கொண்டிருந்தார். வயது வளர்ந்தது, நாடி தளர்ந்தது. மக்களைப் பார்த்துச் சிரித்த அவர் மகேஸ்வரனை பார்த்துச் சிரித்தார்.

சில காலம் அமைதியோடு இருந்தார். இரவிலும் பகலிலும் தூங்குவதே இல்லை. ஒருநாள் விடியற்காலை எழுந்து உட்கார்ந்து கொண்டு தரிசிக்க வருவோரை எல்லாம் ''நாளைக்கு வாங்கோ; நாளைக்கு வாங்கோ'' என்றார். ஒவ்வொருவரையும் பார்த்துக் கரம் குவித்துக் கும்பிட்டுச் சொன்னார். இதைக் கேட்டவர்களுக்கு உடல் புல்லரித்தது. சுவாமிகள் சொற்படி மறுநாள் சுவாமிகளைப் பார்க்க வந்தார்கள். ஓம் ஸ்ரீ பரமானந்த சுவாமிகள் பரமானந்தத்தில் திளைத்துச் சமாதியில் மூழ்கிவிட்டார்.

புதுவையிலுள்ள முதலியார் பேட்டை காரமணி குப்பத்தில் சுவாமிகள் அருளுடலை அடக்கம் செய்தனர். சுவாமிகள் வழிபாடு செய்த லிங்கம் சமாதியின் மேல் பிரதிஷ்டை செய்யப் பெற்றது. சுவாமிகள் பூஜித்த இயந்திரம் அங்கேயே உள்ளது.

சுவாமிகள் வாழ்ந்த காலம் கி.பி. 1830 இலிருந்து 1860 வரை அல்லது கி.பி. 1870இலிருந்து 1890 வரை இருக்கலாம் என்று செவிவழிச் செய்திகள் கூறு கின்றன.

சுவாமிகளின் சமாதிக் கோயிலை மையமாக வைத்துக் கொண்டு கே. ஜெயமூர்த்தி என்பார் தன் நண்பர்கள் பக்தர்களுடன் வழிபாடு இயற்றி வருகிறார். அவர்கள் வழிபாட்டிற்கென திருக்கோயில் வழிபாட்டு முறைகள், அகத்தியர் தேவாரத்திரட்டு என ஆண்டுதோறும் நூல்கள் வெளியிட்டு வருகிறார்.

சிவப்பிரகாச சுவாமிகள்

வயது 42; வெள்ளை வேட்டித் துறவி; தேவாரம் நன்கு பாடுவார். கயிலை சென்று வந்தவர். திருத்தலப் பயண வழிகாட்டி ஆவார். திருவண்ணா மலையில் திருமூலர் திருமடம் கட்டியுள்ளார்.

சைவ சித்தாந்தப் பெருமன்றம்

புதுச்சேரி மன்றங்களில் இப்பொழுது இருப்பவற்றில் பழைமையானது சைவ சித்தாந்தப் பெருமன்றம் ஆகும். 55 ஆண்டுகளுக்கு முன் தொடங்கியிருக்க லாம். மன்றம் சொற்பொழிவுகள், நூல்கள் வெளியிடுதல், உழவாரப்பணி, தல யாத்திரை எனப் பணியாற்றுகிறது. (தலைவர் கோ. ஆறுமுகம்; செயலர் - ஏ. முனுசாமி)

1987-இல் தோற்றுவிக்கப்பட்ட பன்னிரு திருமுறை வழிபாட்டு மன்றம் முற்றோதலை முதன்மைப்படுத்தி வரு கின்றது. பன்னிரு திருமுறை களையும் கு. சுந்தரமூர்த்தி அவர்களின் விளக்க உரையோடு நடத்தி நிறைவு செய்து உள்ளார்கள். 23.03.2003 முதல் திருவிளை யாடற்புராண முற்றோதல் தொடங்கி தா.ம. வெள்ளை வாரணனார் விளக்கம் கொடுத்து வருகிறார்கள். (தலைவர் - நடேச. சுப்பிரமணியன்; செயலர் - வெங்கடசுப்பா ரெட்டியார்)

தெய்வச் சேக்கிழார் மன்றம்

''**கு**ழந்தைகளே தாத்தா பேசுகின் றேன்'' நான் உங்கள் தாத்தா; எனக்கு வயது 85. இதுவரை சைவமும் தமிழும் தழைக்க பல அறப்பணிகளைச் செய்துள்ளேன். எனினும் எனக்கு மன நிறைவு ஏற்படவில்லை ஏன்? நேர்மை மறைந்து வருகிறது; தேசபக்தி மறைந்து கொண்டிருக்கிறது.

''குழந்தைகளே! வாழ்க்கை வாழ்வதற் கான உண்மைகளை உணருங்கள்;

அவ்வை அமுதம் என்ற இந்நூலைப் படியுங்கள்'' என ஒரு பெரியவர் மனம் நொந்து எழுதி, ஆத்திசூடி, கொன்றை வேந்தன் முதலான பாடல்களை அச்சிட்டுக் குறைந்த விலைக்கு கொடுத்தார்.

இளைஞர்களுக்கு நல்வழி காட்ட வேண்டும் என்ற தீராத தாக்கத்தினால் பள்ளி, கல்லூரி மாணாக்கரிடையே திருமுறை தொடர்பான பேச்சு, கட்டுரை, மனப்பாடப் போட்டிகள் நடத்திப் பரிசுகள் வழங்கி ஊக்குவித்தார். அவர்களே அமரர் திரு. எம். சொக்கலிங்க முதலியார். அமைப்பு - தெய்வச் சேக்கிழார் மன்றம்.

தலைவர் - வயி. நாராயணசாமி; தொடக்கம் - *1996*

சித்தாந்த சைவத் திருத்தொண்டு மன்றம்



சிவ. மாதவன்

புதுவையில் சுறுசுறுப்பாக இயங்கி வரும் மன்றங்களில் ஒன்று சித்தாந்த சைவத் திருத்தொண்டு மன்றம். அதன் செயலர் சிவ. மாதவன் அவர்களும் சுறுசுறுப்பு மிக்கவர். ''புதுவையில் உள்ள மன்றங்களைப் பற்றி எழுத வேண்டும் தகவல் சேகரித்து வைத் திருங்கள். நான் புதுவை வ்ருகிறேன். அரைநாளோ, முழு நாளோ ஒரு சுற்றுப் போய் வந்து விடலாம்'' என்று தொலைபேசியில் பேசினேன். ''வாருங்கள்'' என்றார், சென்றேன்.

வீட்டிற்குள் அழைத்துச் சென்று அமர வைத்தார். அவரது துணைவியார் சிற்றுண்டி, தேநீர் கொண்டு வந்தார்கள். இவர் ஓர் உறையும், சில புத்தகங்களும் வழங்கினார். உறைக்குள் புதுவையில் உள்ள ஏழு அமைப்புகளைப் பற்றி தகவல் சேகரித்து அழகுற எழுதி வைத் திருந்தார். அலையவேண்டிய வேலை யில்லை. இப்படி ஒவ்வொருவரும் செய்திருந்தால் எனது பணியில் பாதி குறைந்திருக்கும். எத்தனை தொலை பேசி உரையாடல்கள்? எத்தனை கடிதங் கள்? அப்படியிருந்தும் சிலரிடமிருந்து கடைசிவரை தகவல் கிடைக்கப் பெறவில்லை. தகவல் பஞ்ச உலகிலே சிவ. மாதவன் கொள்ளிட வெள்ளம். *(பிறப்பு : 9.9.1958, பிறந்த ஊர் - பெண்ணாடம்)*

அவரே சுறுசுறுப்பு எனில் அவர் செயலராக இருக்கும் சித்தாந்த சைவத் திருத்தொண்டு மன்றத்தின் சுறு சுறுப்புக்குக் கேட்கவா வேண்டும்.

மாதந்தோறும் திருவாதிரைத் திருநாளில் கூட்டு வழிபாடு, இரண்டாம் - நான்காம் ஞாயிற்றுக்கிழமைகளில் திருமுறைச் சொற்பொழிவு. திருத்தலப் பயணம், உழவாரப்பணி, இல்லங்கள் தோறும் திருமுறை, நால்வர் குரு பூசை, ஆண்டுதோறும் மாணாக்கர் களுக்குத் திருமுறைகளில் பேச்சு, மனப்பாடம், கட்டுரைப் போட்டிகள் நடத்திப் பரிசளித்தல், நூல் வெளியீடு எனச் செயல் பொதிந்த நிகழ்ச்சிகள்.

ஆண்டு விழாவும் அதே விறுவிறுப்பு! காலை முதல் இரவு வரை உரையரங்கம், கருத்தரங்கம், மகளிர் அரங்கம், திருமுறை கலை நிகழ்ச்சி, பரிசளிப்பு, நூல் வெளியீடு, அன்னம் பாலிப்பு என இடையறவு படா நிகழ்ச்சிகள். ஆண்டுவிழாவின்போது திருமுறை,

சாத்திர நூல்களை யானை மேல் எழுந்தருளுவித்து வீதியுலா வருதல் சிறப்பு நிகழ்ச்சி.

தலைவர் நடேச சுப்பிரமணியன், கோ. ஆறுமுகம், வெங்கட சுப்பு ரெட்டியார், பணத்தை அள்ளித்தர, துணைத்தலைவர் பூ.சொ. பூபதி, இரா. வடிவேலு அனைத்துச் செயல்களையும் முந்துறச் செய்ய, பச்சையப்பன் இடம் கொடுத்து உதவ, பன்னீர் செல்வம் வழி பாட்டினை நெறிப்படுத்த மன்றத்தின் பணி சிறக்க வியப்பு ஏதுமில்லை. சுந்தரம் 5 ஏழைகளுக்கு வேட்டி துண்டு வழங்குகிறார். (தோற்றம் - 1998)

20-7-2003-இல் நடைபெற்ற ஆண்டு விழாவில் கா. சு.பிள்ளையவர்களின் ''சிவஞான பாடிய சாரத்தினை'' மன்ற வெளியீடாக வெளியிட்டார்கள். 1.8.2004 -இல் நடைபெற்ற ஆண்டு விழாவில் வெ. கோபால்சாமி அவர்கள் எழுதி குமரி பதிப்பகம் வெளியீடாக மலர்ந்த ''திருவடியார் திருத்தாள் போற்றி'' என்ற நூலை வெளியிட்டார்கள்.

திருவடியார் திருத்தாள் போற்றி

''திருவடியார் திருத்தாள் போற்றி'' என்னும் இந்நூல் அறுபத்து மூன்று நாயன்மார், மாணிக்கவாசகர், சேக்கிழார், சந்தான குரவர் நால்வர், தொகையடி யார்கள் எனச் சிவனடியார்களின் பெருமையைச் சிறப்புற எடுத்துரைக் கிறது. கந்தர் கலிவெண்பா குட்டிக் கந்தபுராணமாக அமைவது போல் இந்நூல் குட்டி பெரியபுராணம் அமைகின்றது.

அடியார் ஒவ்வொருவருடைய புகழ்ப் பதிகங்களும் இருபது அடிகளில் அமைந் துள்ளன. அடியார்களின் அவதாரத் திருத்தலம். அவர்கள் இயற்றிய வழி பாடு, இறைவனால் ஆட்கொள்ளப் பெற்ற முறைமை ஆகிய நிலைகளில் அவர்களின் வரலாற்று நிகழ்வுகளை வரிசைப்படுத்தி, ஒவ்வொரு நிகழ்ச்சியை யும் தனித்தனியே போற்றி, இறுதியில் தாம் அத்தகைய அடியார்க்கு அடிமை என உரைக்கின்றார் ஆசிரியர்.

மாணிக்கவாசகர்

''பரிவாங்கச் சென்று பெருந்துறை
மண்ணில்
வரிப்பணத்தை வார்த்தவர்தாள்
வண்மை போற்றி''
''பரியெங்கே'' என்றார் பதிலாய் ''வருமே
சரிதானே'' என்றார் தாள் சாகசம் போற்றி
''நரியைப் பரியாகப் புரிந்த நெறியை
தெரிந்து அறிந்தவர்தாள் தேனமுதாய்ப்
போற்றி''

வண்டு மதுகளிக்கும் வாடா மயிலை, பஞ்சம் அறியாப் பழம் பேரூராம் நல்ல தஞ்சை, தெருவுறங்காவூராம் திரு முனைப்பாடி, தென்றல் நின்றாடும் திருப்புலைப்பாடி, துறையேறிக் கெண்டை துணையோடு நீந்தும் உறையூர் என்று திருத்தலங்கள் அருமை யான வருணனைகளைக் கொண்டு உள்ளன.

எச்சிற்கண் நீக்கிட ஏராளக் கண் சிவன் என வரும் தொடரில் காணப்பெறும் ஏராளக் கண் என்பது ஆயிரம் மிகுதி என்பனவாகிய பொருண்மையில் அமைந்து ''சகஸ்ரலிங்கம்'' என்பதைச் சுட்டுகிறது. 'வல்வினையாற்றுவர்' என உருத்திர பசுபதியாரைச் சுட்டும் சொல்லாட்சிகள் மிக அற்புதமானவை.

திட்பநுட்பம் செறிந்த நிலையில் பொருள் நலச் செறிவும் நூலெங்கும் காணப்படுகின்றது. 'வினையூழ் விளை யாட வெந்துயர் சேர மனையின்பம் விட்டவர்' எனத் திருநீலகண்ட நாயனார் சுட்டப் பெறுகின்றார். அதே பகுதியில் 'தெருவோடு செல்லும் திருவடியார் கண்டு திருவோடு தந்தவர்' என்பதும் அருமையானதாகும். 'ஈசன்பால் மன்றாடி இன்னுமொன்றைப் பெற்று

நேசன் பால் தந்தவர்' என்று காரைக்காலம்மையார் மாங்கனி பெற்ற வரலாறு குறிக்கப்படுகிறது.

''பெரியபுராணத்தைக் கற்க விழை வார்க்கு இந்நூல் ஓர் வழிகாட்டி. தொட்ட இடமெல்லாம் சொல்லும் பொருளும் பக்தியும் மணக்கும் பைந்தமிழ்ப் பெருநூல். மலையைத் தன்னுள் அடக்கிக் காட்டும் பனித் துளியைப் போல பெரிய புராண மாட்சியைக் காட்டும் ஞான விளக்கு இந்நூல்'' என்கிறார் முனைவர் க. திருநாவுக்கரசு அவர்கள்.

இந்நூலாசிரியர் வெ. கோபால்சாமி அவர்கள் கத்துக்கேணி அரசு உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் ஆவார். இவர் தமிழிலக்கியத்திலும், கல்வியியலிலும் முதுகலை பயின்று நிறைந்த கல்வி யாளர். சைவ இலக்கியங்களில் ஆய்வும் தோய்வும் மிக்கவர்.

சிறுத்தொண்ட நாயனார் திருத்தொண்டு சபை

1998 இல் தொடங்கப்பட்ட சிறுத் தொண்ட நாயனார் திருத்தொண்டு சபை வாரந்தோறும் சோம வார வழிபாடு, நால்வர் குருபூசை, புதுவையில் மாங்கனித் திருவிழா நடத்துதல், உழவாரப் பணி, சொற்பொழிவுகள், நடைப்பயணம், நூல்வெளியீடு எனப் பணியாற்றுகிறது.

மெய்கண்டார் சைவத் திருத்தொண்டு மன்றம்

16.9.1999-இல் தவத்திரு வாமதேவ சிவம் அவர்களால் துவங்கப்பட்ட இம்மன்றத்தின் பணிகள் நீண்ட நெடியவாம். பாண்டிச்சேரியில் தியான மண்டபம் நிறுவி அதில் ஐம்பொன்னால் ஆன மெய்கண்டார் திருவுருவச் சிலையைப் பிரதிட்டை செய்து 14.5.2003 அன்று தமிழில் குடநீராட்டும் செய்யப் பட்டது. ஞாயிறுதோறும் சித்தாந்த வகுப்பு, மாத சிவராத்திரியில் கூட்டு வழிபாடு; பன்னிரு திருமுறை முற்றோதல் (24.10.2004 வரை 61 முற்றோதல்) திருமுறை வழியில் வாழ்வியல் நிகழ்ச்சிகள், சிவதீக்கை செய்வித்தல் (51 பேர்), கண் சிகிச்சை முகாம் (51 பேர் பயனடைதல்), இரத்த தானம் செய்தல், சிறு நூல்கள் வெளி யிடுதல், திருமுறை இன்னிசை, மாணவர் களுக்குப் போட்டிகள், உழவாரப்பணி, தலயாத்திரை (225 தலங்கள்) ஊனமுற்றோர் விடுதிக்கு உதவுதல், என மன்றப் பணி விரிகிறது. நிறுவனர் - பா. நந்தகோபால்.

1999-இல் தொடங்கப்பட்ட மெய் கண்டார் சைவத் திருத்தொண்டு மன்றம் சிவராத்திரி வழிபாடு, தல யாத்திரை, சுவாதித் திருநாளில் சித்தாந்த வகுப்பு எனப் பணியாற்றுகிறது. நிறுவனர் - பா. நந்தகோபால்.

2003-இல் இருந்து நமசிவாயம் அவர்களை ஆசிரியராகக் கொண்டு ''திருச்சிற்றம்பலம்'' என்ற இதழ் வெளிவருகிறது.

11. சீர்காழி


பாலசுப்பிரமணிய முதலியார்

இன்பமான சூழ்நிலையில் சைவ நெறியைக் கடைப்பிடித்தல் சற்று எளிது. ஆனால் துன்பம் வந்துற்ற வேளையிலும் சைவநெறியைப் பின்பற்றும் கொள்கைப் பிடிப்பு யார்க்கும் வராது. அப்படி ஒரு சூழ்நிலை வந்தது. அந்தப் பெரிய வருக்கு. ''இந்த வயதிலா...'' என்று வந்தவர்கள் எல்லாம் துடித்தார்கள். ''அவன் தந்தான். கொஞ்சகாலம் என்னுடன் தங்கினான். அவனே அழைத்துக் கொண்டான்'' என்று சிறிதும் கலங்காது இருந்தார். அதுவும் அடுத்த நாள் கூட அல்ல. சம்பவம் நடந்த அன்றைய தினத்திலேயே நிகழ்ந்த ஒன்று.

இந்த உறுதிப்பாடு கோடியில் ஒருவருக்குத்தான் வரும். அந்தக் கோடியில் ஒருவர் தான் எங்கள் பாலசுப்பிரமணிய முதலியார் அவர்கள்.

பன்னிரு திருமுறைகளையும், சைவ சித்தாந்த சாத்திரங்களையும் நாளும் படிப்பவர். 1974-இல் சென்னை சைவ சித்தாந்தப் பெருமன்ற எழுபதாம் ஆண்டு விழாவைச் சீர்காழியில் சிறப்புற நடத்தி மகிழ்ந்தார். கயிலாயம் சென்று வந்த பெருமகனார்.

(பிறந்த ஆண்டு - 19.8.1936; பிறந்த ஊர் - சீர்காழி; பெற்றோர் - சதாசிவ முதலியார், மங்களத்தண்ணி)



எஸ். பாலசுப்ரமணிய முதலியார்

குருஞானசம்பந்தர் பணிமன்றம்

1987-இல் பாலசுப்பிரமணிய முதலியார் அவர்கள் ஸ்ரீ குருஞான சம்பந்தர் பணிமன்றத்தைத் தொடங்கி, அறுபத்து மூவர் நட்சத்திரத்தன்று குருபூஜை, சொற்பொழிவு நடத்துகிறார். நால்வர் குருபூஜை விழாவில் தேவார திருவாசக இன்னிசை நடத்துகின்றார். திருமந்திரம் என். இராமகிருஷ்ணன் மூலம் திரு மந்திரம் தொடர் உரையாக நிகழ்த்தினார். 270 திருத்தலங்கள், ஜோதி லிங்கத்தலங்கள் என்று பயணம் முடித்து இப்பொழுது வைப்புத் தலங்கள் வழிபட உள்ளார்கள். பாலசுப்பிரமணிய முதலியார் அவர்கள் கயிலைச் செல்வரும் கூட. ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியன் தலைமையில் வெள்ளி தோறும் வார வழிபாடு நடந்து வருகிறது.

மாணவர்களை நல்லொழுக்கத்தில் செலுத்த இந்து மேனிலைப்பள்ளியில் நான்கு ஆண்டுகளாக மாணவர் வாழ் நெறிப் பயிலரங்கு நடத்துகிறார்கள். 2004-இல் ஜனவரி 3, 4 இருநாட்களும் காலை 9.30 மணி முதல் மாலை 5.00 மணி வரை மு. சிவச்சந்திரன், வி.சா. குருசாமி தேசிகர், தா. ம. வெள்ளை வாரணம், வி. ராம்தாஸ், கு. சுந்தர மூர்த்தி, எம்.எஸ். இராசமாணிக்கம், தி.பொன்னம்பலம் என். இராம கிருஷ்ணன் ஆகியோர் திரு வாசகம் முழுமையும் மாணவர்களுக்கு எடுத்துக் கூறினார்கள். இளைஞர்களை நோக்கிச் செல்கின்ற அமைப்பே உயிர்ப்புடையது. அப்பணியினை குரு ஞானசம்பந்தர் பணி மன்றம் முறையே செய்து வருகிறது.

சில தொண்டர்கள்

1962 முதல் 1968 வரை வாழ்க்கை கிருஷ்ண முதலியார் சட்டைநாதர் நான்கு வீதிகளையும் வலமாகச் சுற்றி வந்து தேவார திருவாசகம் மற்றும் சிவ புராணம் ஆகிய திருமுறைகளைப் பாராயணம் செய்து வார வழிபாட்டை நடத்தி வந்தார்கள். மேலும் பெரிய புராணத் தொடர் சொற்பொழிவைத் தம் சொந்த செலவில் நடத்தினார்கள். இதே போல 1990களில் கி. அருணாசல முதலியார் தமது வெள்ளை மாளிகையில் கு. சுந்தரமூர்த்தி அவர்களைக் கொண்டு பெரியபுராணச் சொற்பொழிவு நடத்தினார். பரவையார் - சுந்தரர் திருமணத்தைத் திருமண அழைப்பு எல்லாம் அச்சிட்டு ஒரு திருமணமே நடத்தி மகிழ்ந்தார். சி. ராம நாத முதலியார் அவர்கள் சமய தீட்சை பெற விருப்பம் உள்ள தகுதியான அன்பர்களுக்குத் தம் சொந்த செலவில் தீட்சை செய்து வைத்தார்கள்.

சம்பந்தம்

வள்ளலார் பெயரில் வாரி வழங்கும் வள்ளல் சீர்காழியில் உள்ளார். அவரது பணிகள் : 1. சீர்காழி அதனைச் சார்ந்துள்ள 27 தொடக்கப்பள்ளி மாணவர்களுக்கு வாரம் ஒரு நாள் பேரீச்சை, கடலை, கொய்யா வழங்குதல்; மாதச் செலவு ரூ. 2,500/-

2. தொடக்கப்பள்ளி மாணவர்கள் 840 பேருக்கு ரூ. 100க்கு சீருடை வழங்கு தல், செலவு சுமார் 84,000/-

3. ஆண்டுதோறும் 4000 மாணவர்களுக்கு ஒரு குயர் நோட்டு வழங்குதல் செலவு சுமார் ரூ. 24,000/-

4. நாள்தோறும் 300 பேருக்கு மதிய உணவு; செலவு ரூ. 1,00,000/-

5. தைப்பூசத்தன்று 1000 மாணவர்களுக்குப் பகல் விருந்து; செலவு சுமார் 12,000. இந்த வள்ளல் யார் தெரியுமா?

திரு. சம்பந்தம் அவர்கள்,

அமைப்பு : வள்ளலார் மன்ற அறக்கட்டளை. சீர்காழி சம்பந்தம் அவர்கள் தனிக் கட்டடமே கட்டி விட்டார். இவருக்கென்று தனி வாழ்வு இல்லை. வள்ளலார் வாழ்வே இவர் வாழ்வு. திருமணம் செய்து கொள்ளவில்லை. ஆசிரியர் சம்பளத்தில் ஒரு பகுதி தனது அன்றாடச் செலவுக்கு வைத்துக் கொண்டு எஞ்சிய தொகை முழுதும் இத் திருப்பணிக்கே செலவு செய்கிறார். இவ்வள்ளல் பெருமானுக்கு வாய் கோபுரவாசல் உள்ளம் பெருங்கோயில்.

திருமுறை ஆராதனை

ஞானசம்பந்தப் பெருமான் அவதரித்த சீர்காழியில் பெருமானின் திருநட்சத்திரத்தன்று திருவையாறு தியாகராஜ உற்சவம் போல அரைமணிக்கு ஓர் ஓதுவாராகப் பாடச் செய்ய வேண்டும் என்பது என் நெடுநாளைய கனவு. பாலசுப்பிரமணிய முதலியார் அவர்களுடன் அந்நிகழ்ச்சி ஆண்டுதோறும் திருமுலைப்பால் உற்சவத்தை ஒட்டி நடக்கிறது. இம்முயற்சி ஓதுவாமூர்த்திகளே செய்தால் அதனை விடச் சிறந்த அர்ப்பணம் என்ன இருக்க முடியும்?

21.4.1998-இல் திருப்புகலூரில் திருநாவுக்கரசர் விழா,

10.6.1998-இல் திருநல்லூர் பெருமணத்தில் திருஞானசம்பந்தர் விழா,

26.6.1998-இல் தில்லையில் மாணிக்க வாசகர் விழா,

28.7.1998-இல் திரு அஞ்சைக்களத்தில் சுந்தரர் விழா.

1999-ஆம் ஆண்டு முதல் சீர்காழியில் திருமுறை இசைத்தமிழ் வழிபாட்டுக் குழு திருமுறை இசைத்தமிழ் விழா நடத்தி வருகிறது. ஏப்ரல் மாதம் ஞான சம்பந்தர் விழாவின்போது இரண்டு நாட்கள் தொடர்ந்து 124 ஓதுவா மூர்த்திகள் 2001இலும், 132 ஓதுவா மூர்த்திகள் 2002இலும் தங்கள் இசைக் கல்வியினைத் திருஞான சம்பந்தப் பெருமானுக்கு அர்ப்பணிக்கின்றனர்.

ஏப்ரலில் சீர்காழி செல்லவேண்டியது தானே!

12. திருவெண்காடு

தட்சிணாமூர்த்தி குருக்கள்

சைவநெறியைப் பரப்ப சிவாசாரியார்களைத் தவிர வேறு யார் இருக்கின்றார்கள்? சுந்தரர் மரபல்லவா? ஆனால் இப்படி எத்தனை சிவாசாரியார்கள் இருக்கின்றனர்? திருவெண்காடு குரு குருக்கள் எனப்படும் தட்சிணாமூர்த்தி குருக்கள் திருவெண்காடு அருள்மிகு சுவேதாரண்யேசுவரசாமி திருக்கோயி லில் பௌர்ணமி திருவீதி வழிபாடு. அறுபத்து மூவர் அபிஷேகம் என்று செம்மையாகச் செய்கின்றார்.

இவரது சைவப் பற்றினால், ஈர்க்கப் பட்ட மலேசிய மருத்துவர் அன்பழகி என்னும் மாதரசி. இவர்தம் வேண்டு கோளுக்கிணங்க திருவெண்காடு, திங்களூர், மேலப்பாதி, கும்பகோணம், வாரணாசி, திருவெண்ணெய்நல்லூர், செம்பனார் கோயில், நாங்கூர் என பதினெட்டுக்கும் மேற்பட்ட திருக் கோயில்களின் குடநீராட்டு விழா செய்திருக்கிறார். இருபது ஏழைப் பெண் களுக்குத் திருமண உதவி செய்துள்ளார். திருவெண்காட்டில் குரு குருக்கள் பொறுப்பில் ஒரு வேத பாடசாலை தொடங்கியிருக்கிறார்.

ஒரு மருத்துவர்!

ஒரு சிவாசாரியார்!

குரு · என்கிற தட்சிணாமூர்த்தி குருக்கள். பிறந்த ஆண்டு - 13.9.1956. ஊர் - திருவெண்காடு; பெற்றோர் - அகோர குருக்கள்.

மருத்துவர் அன்பழகி (வயது 59; மலேசியா)

இவர்களோடு இணைந்து செயல்படு பவர் இலையமுது கூடம் சண்முகம் பிள்ளை அவர்கள்; பெரியபுராண சொற் பொழிவுகள் நிகழ்த்துகிறார். கீழத்திருக் காட்டுப்பள்ளி திருக்கோயிலில் வார வழிபாடு செய்து வருகிறார்.

(வயது 70, இலையமுது கூடம், தந்தை - சுப்பராயபிள்ளை)

சாவித்திரி அம்மாள் (5.11.1954, கேசிங்கன், கணவர் - பாலசுப்பிர மணியன்) திருவெண்காடு கோயிலில் அறுபத்து மூன்று நாயன்மாருக்கும் அபிஷேகம் செய்தல், சந்நிதிகளைத் தூய்மை செய்தல், திருவிளக்கிடுதல் ஆகிய பணி களைச் செய்கிறார்.

திருவெண்காடு உழவார அமைப்பு நந்தவனம் அமைத்தல், பெரியபுராண சொற்பொழிவு, அறுபத்து மூவர் குரு பூஜை செய்து வருகிறது.

(தோற்றம் 2003, தலைவர் - என். பாலசுப்பிரமணியம், செயலர் - ஏ. பாபு)

திருவெண்காட்டில் வசிக்கும் அகர முதல்வன் நாடறிந்த நல்ல பேச்சாளர். சைவத்திருமுறைகளைப் பற்றி அழகுறப் பேசுவார். இதுவரை 63 நூல்கள் எழுதியுள்ளார். இவற்றில் ஏழு சைவ நூல்கள் ஆகும். 30 நூல்கள் தல வரலாற்று நூல்கள் ஆகும். *(பிறந்த ஆண்டு - 15.1.1944; ஊர் - திருவெண்காடு)*

13. பூம்புகார்

சின்மயானந்த சுவாமிகள்

பூம்புகார் என்று சொல்வதை விட மேலையூர் என்று சொல்வதே சரியானது ஆகும். பூம்புகார் இன்றும் சற்று கிழக்கே கடற்கரையை ஒட்டியது ஆகும். பூம்புகார் நாடறிந்த பெயர்.

1901 இருக்கலாம். பூம்புகார்க்கு அருகில் உள்ள தலைச்சங்காடு கிராமத் தில் நமசிவாயம்பிள்ளை என்பவருக்கு ராமசாமி என்ற மகன் பிறந்தார். தலைச்சங்காடு அருகில் உள்ள கண்ணங் குடி கிராமத்தில் கனகசபை பிள்ளை என்ற தமிழ் ஆசிரியர் இருந்தார். அவரிடம் ராமசாமி தமிழ் கற்று வந்தார். ராமசாமியின் நற்பண்புகளால் ஈர்க்கப் பெற்ற கனகசபைபிள்ளை அவரைத் தனது அபிமானபுத்திரராக ஏற்று இருவரும் தலயாத்திரை செய்து வரலானார்கள்.

இராமசாமியின் மனநிலை துறவினை நாடி இருந்தமையால் கனகசபைபிள்ளை அனுமதி கொடுத்து அனுப்பிவிட்டார். இராமசாமி சூரியனார் கோயில் ஆதீனம் சென்று காஷாயம் வாங்கித் தரித்து இருந்துவிட்டு, சினமயானந்தம் என்ற திருநாமம் பெற்று குரங்குபுத்தூர் என்ற கிராமத்தில் நந்தவனத்தில் கொட்டகை ஒன்று கட்டி அங்கே தனிமையிலே தங்கி வரலானார்.

மேலையூர் கிராமத்தில் சட்டாம் பிள்ளை என்கிற கயிலாசம்பிள்ளை என்பவர் சின்மயானந்தரைப் பார்க்க வந்தபொழுது சின்மயானந்தரின் நற் பண்புகளால் ஈர்க்கப்பட்டுத் தம்முடைய ஊருக்கு அழைத்துப் போக விரும்பினார். சின்மயானந்தரும் அதற்கு இசைந்து வர கயிலாசம்பிள்ளை தனக்குச் சொந்தமான மேலையூரில் உள்ள புஞ்சை நிலத்தைக் கொடுத்தார். அதில் சிவராஜயோக மடம் என்று நிறுவி அங்கே சின்மயானந்தர் வசித்து வந்தார்.

மடத்தில் நால்வர் குருபூஜையும், அறுபத்து மூவர் குருபூஜையும் நடை பெற்று வரலாயின. சில ஆண்டுகள் கழித்து யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர் மாணாக்கர் சுவாமிநாத பண்டிதர் சிவ ராஜயோக மடத்துக்கு வந்து தங்கி இருந்தார். அவர் மடத்தின் பெயரை மாற்றி அறுபத்து மூவர் குருபூசை மடம் என்று பெயர் சூட்டினார்.

சுவாமிநாத பண்டிதர் செட்டிநாட்டு நகரத்தார் பெருமக்களிடம் அறுபத்து மூவர் குருபூசை மடத்தைப் பற்றிச் சொல்லி அறுபத்து மூவர் படம், குருபூசை செலவுக்கான தொகையும் ஏற்பாடு செய்யச் சொன்னார். குருபூசை விழா இன்னும் சிறப்பாக நடைபெறலா யிற்று.

ஒரு சமயம் துறவி ஒருவர் பட்டினத் தார் உற்சவம் நடத்த எண்ணி நன்கொடை பெற்று வந்து மடத்தில் தங்கினார். சுவாமிகளிடம் பட்டினத்தார் விழா நடத்த வேண்டினார். சின்ம யானந்த சுவாமிகளே பட்டினத்தார் வரலாற்றைச் சுருக்கமாக அமைத்து நடத்த ஏற்பாடு செய்தார்கள். பின்னர் இவ்விழா நகரத்தார் பெருமக்களால் விரிவாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

இம்மடத்திற்கு ஞானியார் சுவாமி களும் வந்துள்ளார்கள். சின்மயானந்த சுவாமிகள் மேலையூர் பகுதி மக்களுக்குக் கல்வியும் கற்றுத் தந்துள்ளார். அவ்வாறு கல்வி கற்றவர் தான் திருவலம்புரம், பொன் முத்து வேலாயுதம் என்ற துணி வணிகர். இவர் திருவலம்புர மகாத்மியம் என்ற வடமொழி நூலை அடிப்படையாகக் கொண்டு திருவலம்புர மாலை எனப்பாட வழிவகுத்தவர் ஞானியார் சுவாமிகளே.

சின்மயானந்த சுவாமிகள் நன்கு கவிபுனையும் ஆற்றல் பெற்றவர்கள். ''சிவசக்தி தோத்திர மஞ்சரி'' என்ற நூலை இயற்றியுள்ளார். இந்த தொகுப்பில் உள்ள பனுவல்கள் வருமாறு: *1)* சிவசக்தி அகவல் *2)* சிவசக்தி பதிகம், *3)* சிவசக்தி நவகம். *4)* தற்போத இழப்பு *5)* திருவருள் வியப்பு *6)* சிவசக்தி அலங்கார உண்மை.

சிவசக்தி அகவல்

இறைவியின் திருவுருவப் பேரெ ழிலை முதற் பகுதியில் விளக்கி, அவளது பேரருள் திறத்தினை அடுத்துத் தொடர்ந்து அறிவுறுத்தி, தன் சிறுமையை மனங்கொளப் புலப்படுத்தி, வேண்டு கோள் விளக்கம் செய்த பின்னை, அடைக்கலமாகத் தம்மைச் சிவசக்தி செந்தாமரைப் பதமலர்களில் ஒப்படைக் கின்றார் ஆசிரியர்.

இந்த அகவலின் தொடக்கமே தேவியின் கேசாதிபாத வருணை ஆகும். ஓர் அற்புதமான தொடக்கம்.

''சீர்மலிசூரியர் திகழ் நவமணியதாய்
ஏருறப்பொருந்தி இயங்கு
பொன்முடியும்
காரிருள் நெய்தல் காடெனக் கறுத்துப்
பேரியன் மனமாய்ப் பிறங்கு
பொற்குழலும்''.

இவ்வாறு *44* அடிகள் அமைந்துள்ளன. தனி ஒருவர் ஓதி இன்புறவும், உரு கிடவும், வழிபடவும், அருள் நெறி தலைப்படவும் உறுதுணையாக இருக் கின்றது இச்சிறுபெரும்பனுவல்.

சிவசக்தி பதிகம்

இது அம்பிகையின் பேரருள் நாமங்களை எடுத்து ஓதித் தன் உயிர்க்குணமாகிய சிறுமைகாட்டி உய்வது என்றோ என்று ஓலமிடும் ஆன்மாவின் குரலாக உள்ள பதிகம் எனலாம்.

''வண்மையில் வகை எனை இன்ன நீ
விட்டிடில் வையத்தர் என்ன சொல்வார்
மையலாம் பாவிதன் எவ்வகையின்
உய்குவேல் வண்மையைஅறிந்து நீயே
தண்மையாம் பேரருள் தந்தருள
வேண்டுமே சர்வஉயிரான உமையே
சத்குல சதாநந்த சங்கரஸ்ரூபியே சாநித்ய
ஞானமணியே''

சிவசக்தி நவகம்

அம்பிகையின் பேரருள் திறங்களை அவள் உலகெலாம் ஒன்றாகி, வேறாய் உடலாய் நிற்கும் அருளிப்பாட்டை வியந்து போற்றும் பாடல்கள். யோகநூல் நுட்பங்கள் இதில் நிரம்ப உள்ளன.

''ஒன்றான சிவமாகிப் பரமுமாகி ஓங்கார
முடிந்த இடத்துற்ற ஞானக்
குன்றாகி குன்றில் உறுங்கோயிலாகிக்
கோயில் நடு கோடிகதிரிப் பிரமையான
மன்றாகி மன்றின் நவகோடி பானு
மணியாகும் பீடமாய்ப் பீடத்தின்மேல்
நின்றாடும் திருக்கூத்தின் திருக்
கோலத்தை நின்றருளன நினைந்து
இரண்டான தாயே''

இவ்வாறு மூன்றான தாயே, நான்கான தாயே என பத்தான தாயே, என்று வெண்பாவால் சுவாமிகள் அடுக்கிக் கொண்டே போகிறார்.

தற்போத இழப்பு : தன்னறிவு முதலியவற்றை இழந்த நிலை பற்றிக் கூறும் பாடல்கள் இவை.

''வித்தில் மரங்கள் அடங்குவதும்
மரத்தில் வித்துவிளைவதுவும்
ஒத்தும் ஒவ்வா அண்டங்கள் ஒன்றோடு
ஒன்றாய் நிற்பதுவும்
சத்தும் சலியாச் சிவசத்தி தன்னாலானது
அறிவாயே
செத்தும் பிறக்க எனை நலியத் தினமும்
விரியு மட நெஞ்சே''

திருவருள் வியப்பு : திருவருள் தமக்குத் தந்த பெரும்பயனை வியந்து ஓதும் பாடல்கள் இவை. அனைத்துப் பாடல்களும் பெண் மயக்கில் கிடந்து பேதுறும் தம்மை இறைவி ஆட்கொண்ட வண்ணம் கூறுவனவே.

''மயிலின் சாயல் மென்மொழியார்
மயக்க வலையில் அகப்பட்டுத்
தயிரில் சுழலும் மத்தாகித் தாழ்வா
நரகில் புகுவேனை
பயிலுநெறியைப் பாழ்படுத்திப்
பயிலாநெறியில் பயின்றேறித்
துயில அருளும் சிவசத்தித்
துணைத்தாள் என்றும் மறவேனே''

ஆன்மா உலக மாயையில் சிக்கித் துன்புறுவதை 'தயிரில் சுழலும் மத்து', அலைவாய்த் துரும்பு, பொதி கண்டு உழலும் கர்த்தபம், அற்ற குளத்தின் மீன், காலில் (காற்று) துரும்பு, வெயிலில் புழு, கயத்தில் வீழ்ந்த வீ (மலர்), பதியிட்டு உழலும் பூவையர், உலைவாய் மெழுகு என அற்புத உவமைகளால் விளக்குகிறார்.

சிவசக்தி அலங்கார உண்மை : ஏறத்தாழக் கந்தர் அலங்காரம் போன்றும், அபிராமி அந்தாதி போன்றும் இப் பாடல்கள் அனைத்தும் இலங்குகின்றன. பல பாடல்கள் நித்ய பாராயணத்திற்கு உரியவை. யோக நூல் நுட்பங்கள் பொருந்திய பாடல்கள்.

''ஒளியே ஒளியின் ஒளிக்கு அழகாய்
நின்று உள்ளொளியின்
வெளியே வெளியின் விளைவே
விளைந்த விள்ளாத சுகக்
களியே களிக்கும் கருத்தே கருத்தில்
கருத நின்ற
வளியே சிவசக்தி ஆனந்தமாகிய
அற்புதமே''

மேலும் சின்மயானந்த சுவாமிகள் ''பட்டினத்தடிகளென்னும் திருவெண் காடர் புராண சார அற்புதத் தோத்திரப் பதிகம்'' என்று பனிரெண்டு பாடல்களில் விளக்கிப் பாடியுள்ளார்.

சின்மயானந்த சுவாமிகளுக்குப் பிறகு சுப்பிரமணிய சுவாமிகள் என்ற துறவி மடத்து நிர்வாகப் பொறுப்பேற்றார்.

மாணிக்கவாசக சுவாமிகள்

இவர்களுக்குப் பின்னர் 1953 - 1954 களில் ஸ்ரீலஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் பொறுப்பேற்றார்கள். ஸ்ரீலஸ்ரீ மாணிக்க வாசக சுவாமிகளின் சொந்த ஊர் கொல்லாபுரம். இவர் இளமைக் காலத்தைச் சென்னையில் பணிகளில் செலவழித்துள்ளார். சுவாமிகளின் பூர்வா சிரமப் பெயர் முருக . இலக்குவனார். சிறந்த தமிழ்ப் புலமையும், அழுத்தமான சைவ சமயப் பிடிப்பும் உள்ளவர். ''டாக்டர் சிற்சபையின் மருத்துவ நிலையத்திலே புலவர்களின் ஈட்டம் தேங்குவதுண்டு. ஒருநாள் அங்கே நான்கு ஐந்து இளம்புலவரைக் கண்டேன். ஒருவரது பரந்த நெற்றியும், ஒளியுமிழும் பார்வையும் என் நெஞ்சில் படிந்தன. அவரது நெடுந்தொகை மாநாட்டுப் பேச்சு, என் உணர்வில் நிலவியது. சென்ற ஆண்டு (1942) ஏப்ரலில் அவரும் யானும் திருப்போரூருக்குப் படகில் சென்றோம். வழிநெடுகக் கம்பர் காட்சியளித்த வண்ணமிருந்தனர். கம்பராமாயணத்தில் 'அப்பகுதியைச் சொல்லுங்கள்; இப் பகுதியைச் சொல்லுங்கள்' என்று நண்பரைக் கேட்டு வந்தேன். நண்பர் வாய் கம்பர் தமிழை அருவியெனப் பொழியலாயிற்று. அவரது நினைவுத் திறம் எனக்கு வியப்பூட்டிற்று. 'அஷ்டாவ தானம் சபாபதி முதலியார் இவ்விளைஞ ராய் மீண்டும் உருக் கொண்டனரோ' என்றும் என் மனம் நினைந்தது. அவ்விளந் தமிழர் அவதானப் பயிற்சி செய்தால் அக்கலையில் அவர் வெற்றி பெறுவது திண்ணம். அவர் மிக எளிதில் முயற்சியின்றிப் பாட்டெழுதும் வரம் பெற்றிருத்தல் சிறப்பாகக் குறிக்கத் தக்கது. எனது வரலாற்றைப் பல செய்யுளால் யாக்க அவர் முயன்று வருகிறார். அவர்க்கு அடிமையில் வெறுப்பும் உரிமையில் விருப்பும் இயல்பில் அமைந்திருத்தலை யான் பாராட்டுவதுண்டு. சென்னையில் வித்து வான் சங்கம் காண உழைத்தவருள் அவரும் ஒருவர்.

அச்சங்கத்தின் முதலமைச்சராய் அமர்ந்து தொண்டாற்றியவரும் அவரே. அவர் யார்? வித்துவான் முருக. இலக்குவனார்.'' என்கிறார் திரு. வி.க. ஸ்ரீலஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் மடத்துக்கு வந்த பின்னர் பூம்புகார் பகுதி மக்களோடு தொடர்பு கொண்டு சைவ சித்தாந்த வகுப்புகள் நடத்தினார். மடத்தின் நிர்வாகத்தைச் செம்மைப் படுத்தி வருவாயைப் பெருக்கினார். புதிய கட்டடங்களைக் கட்டினார். பூம்புகார்த் தமிழ்ச் சங்கம் அமைத்து தமிழ் இலக்கியம், சமய இலக்கியம், சித்தாந்தம் குறித்து வகுப்புகள் நடத்தினார்.

இவர் சரபமூர்த்தியிடம் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். அதனால் ஸ்ரீ சரபமூர்த்தியின் செப்புப் படிமத்தை வடித்து வழிபடக் கோயிலும் அமைத் தார். ''ஸ்ரீசரப மூர்த்தி தோத்திரமாலை'' என்ற பெயரில் எழுசீர்க் கழிநெடிலா சிரிய விருத்தத்தில் 52 பாடல்கள் பாடியுள்ளார்.

இவர் 1956களில் பெங்களூரில் நான்கு மாதம் தங்கி சைவசித்தாந்தச் சொற் பொழிவுகள் செய்தார். அப் பேச்சினையும் சில வானொலிப் பேச்சுக் களையும் தொகுத்து ''சைவ சமய அறிமுகம்'' என்ற பெயரில் 1962-இல் வெளியிட்டார். பூம்புகார்க் கல்லூரி தொடங்கிய பின் கல்லூரி மாணவர்

களுக்குச் சைவசித்தாந்தப் பாடம் நடத்தினார்.

1976-இல் நோய் வாய்ப்பட்டு சென்னையில் சிவப்பேறு பெற்றார்.

நித்தியானந்த சுவாமிகள்

இவருக்குப் பின் சில ஆண்டுகள் கழித்து மௌனகுரு நித்தியானந்த சுவாமிகள் மடத்தின் பொறுப்பை ஏற்றார். இவர் காலத்தே சைவசமய நூல்கள் பற்றிய வகுப்புகள் நடைபெற்றன. பெரியபுராணத் தொடர் உரை அகரமுதல்வன் அவர்களால் முழுமையாகச் சொல்லப்பட்டு நிறைவு பெற்றது. சுற்றுப்புறக் கிராம மக்கள் மடத்திற்கு வரும் வகையில் தொடர்பு அமைத்துக் கொண்டார். 1982 -இல் சென்னையில் சிவப்பேறு பெற்றார்.

பூம்புகார்க் கல்லூரி

சிவம் மணக்கும் சூழல் இருந்ததாலோ என்னவோ இதே இடத்தில் பூம்புகார்க் கல்லூரி சைவசித்தாந்தத்தை முதன்மைப் படுத்தி இயங்க ஆரம்பித்தது.

பூம்புகார்க் கல்லூரி நிர்வாகம் 1980 மே மாதம் ''அப்பர் பெருமான் வாழ்வும் வாக்கும்'' என்று திருநாவுக்கரசர் தேவாரத்திற்கு வரலாற்று முறைப்படி ஒரு பதிப்பு கொணர்ந்து, அதற்கு உரையும் எழுதி வெளியிட்டது. உரையாசிரியர்கள் - திரு. அ. கருணாநிதி, திரு. ஆ. ஜெகனாதன், அகரமுதல்வன், ஏ. திருநாவுக்கரசு, எம். ராமலிங்கம், த. தியாகராஜன் ஆகியோர்.

சி. இராமலிங்கனார்

கல்லூரியின் முதல்வராக திரு. சி. இராமலிங்கம் என்பவர் பொறுப்பேற்றார். இவர் தத்துவத்துறைப் பேராசிரியர். திரு. வி.க.வின் உறவினர். சைவ சித்தாந்தத்தை மேனாட்டுத் தத்துவங்களோடு இணைத்துக் கூறுவார். இவர்கள் நீண்ட காலம் முதல்வராகப் பணியாற்றவில்லை. அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தத்துவத் துறைக்கே சென்று விட்டார்.

பூம்புகார்க் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர்களாக விளங்கிய முனைவர் அ.அறிவொளி, முனைவர் அ. திருநாவுக்கரசு, முனைவர் அகரமுதல்வன், முனைவர். த. தியாகராஜன் ஆகியோர் சைவத்தில் ஆழ்ந்த பிடிப்பு உள்ளவர்கள்.


பூம்புகார் மேலையூரில் வசிக்கும் முனைவர் திரு. த. தியாகராஜன் அவர்கள் நல்ல பேச்சாளர்; சுயமான சிந்தனையாளர். சில சமயம் பொறி தட்டுவது போல சொற்கள் வந்து விழும். அவை கவித்துவமாகவும் இருக்கும். ஆழமாகவும் இருக்கும். சைவத்தில் ஆழ்ந்த பிடிப்புள்ளவர். இவரது முனைவர் பட்ட ஆய்வு ''பெரியபுராணம் - மனித உறவுகளும், சமூகப் பின்னணியும்''

சீனிவாசா மேல்நிலைப்பள்ளி

அடுத்து மேலையூரில் உள்ள சீனிவாசா மேல்நிலைப்பள்ளியின் ஆசிரியர்களைப் பற்றிக் கூறுதல் சாலும்.

நான் செய்யும் காரியம் (சைவப்பணி) யாவினுக்கும் கை கொடுக்கும் ஆசிரியப் பெருமக்கள் ஆவர். அவர்களுடைய ஒத்துழைப்பு இல்லையென்றால் உழவார இயக்கத்தில் நான் முழுமூச்சாக ஈடுபட்டிருக்க முடியாது.

மயிலாடுதுறையில் உழவாரம் மாநாடு என்று சொன்னால் போதும், முதலில் 5,000 ரூபாய், 6,000 ரூபாய் என்று கணிசமான தொகை கொடுத்து விடுவார். மாநாட்டு நிகழ்ச்சியின் போது பணியாற்ற வேண்டிய இடங்களுக்குச் சென்று பணிபுரிவார். மேடை அலங்காரம், வரவேற்புத் தோரணங்கள் என்று அமர்க்களப்படுத்தி விடுவார். மேடையில் சிவலிங்கத் திருமேனியையே எழுந்தருளப் பண்ணி விடுவார். ஒருமுறை பூம்புகாரிலிருந்து மயிலாடுதுறை வரை



சீனிவாசா மேல்நிலைப்பள்ளி ஆசிரியர்கள்

500க்கு மேற்பட்ட சைக்கிள்கள், 50க்கும் மேற்பட்ட மோட்டார் சைக்கிள்கள், முன்னே ஒரு மாணவன் அறுபத்து மூவர் அருட்சுடரை ஏந்திய வண்ணம் ஓட பூம்புகார் - மயிலாடுதுறை பகுதி மக்களே மலைத்து போயினர். ஒவ்வோர் ஊருக்கும் குறித்த நேரத்திற்குப் பேரணி வந்து அடைந்தது வியப்பினும் வியப்பு ஆகும். அத்தகைய துல்லியமான திட்டமிடுதலின் விளைவு இது. மாநாட்டு நிகழ்ச்சிகளிலும் பள்ளி ஆசிரியைகள் திருவாசக நடன நிகழ்ச்சி களைத் தயாரித்து அரங்கேற்றியதும் தனிச்சிறப்பு ஆகும். ஓர் ஆசிரியர் (பெயரைச் சொல்லப் பெருவிருப்பம். அனைத்து ஆசிரியர்களின் பங்களிப்பும் இருப்பதனால் தயக்கம்) ''உழவார உண்டியல்'' ஒன்று தயாரித்து தனது குடும்பத்தார் பிறந்த நாட்கள், முக்கிய நிகழ்ச்சிகள் என்று கணிசமான தொகையைப் போட்டு மாநாட்டின் போது கொடுத்து விடுவார்.

உழவாரம் சார்பில் மேலப்பெரும் பள்ளம் கிராமத்தைத் தத்து எடுத்துள் ளோம். கிராம நலத்திட்டங்களைச் செயல்படுத்துவது, நாட்டு நலப்பணித் திட்டம் பத்து நாள் முகாம் நடத்துவது என்று அதற்கும் ஓர் ஆசிரியர் குழாம் முன் நிற்கும்.

கல்லூரி மாணவர், பள்ளி மாணவர் பண்பாட்டுப் பயிற்சி என்று வினாத்தாள் தயாரிப்பது, கல்வி நிலையங்களுக்கு அனுப்புவது, தொடர்பு கொள்வது, மேலையூரில் நடந்த 4 நாள் முகாமிற்கு உணவு தயாரிப்பது, பயிற்சி மாணவ மாணவியரைக் கண்ணும் கருத்துமாகப் பேணுவது என்று அதற்கு ஓர் ஆசிரிய அணி திரண்டது.

மேலையூர் மதுரம் துவக்கப்பள்ளி ஆசிரியர்கள் ஆண்டுதோறும் இயற்பகை நாயனார் குருபூசை விழாவைச் செம்மை யாகச் செய்கிறார்கள். இந்தப் பகுதி துவக்கப்பள்ளி மாணவர்களுக்கு தேவாரம் ஒப்புவித்தல் போட்டி, பேச்சுப் போட்டி நடத்துகின்றனர்.

பூம்புகாரைப் பொறுத்தவரை துவக்கப் பள்ளியிலிருந்து கல்லூரிவரை சைவ சமயச் சிந்தனைக்கு முழு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எந்த ஒரு நல்ல பணி செய்வதற்கும் செல்வம் மட்டும் இருந்தால் போதாது. நல்லவர்களின் துணை வேண்டும்.

அந்த நல்லவர்களே சீனிவாசா மேல் நிலைப்பள்ளி ஆசிரியர்கள்.

இவ்வளவு எழுதிய பிறகு மேலையூர் மேலத் தெரு தாசில்பண்ணை இல்லத்தைப் பற்றிக் கூறாமல் போகக் கூடாது. மயிலாடுதுறையில் எனது தொடர்பு முற்றிலும் அற்றுப்போன பின்னர் ''உழவாரம்'' இயக்கம் தொடர்பாக நான் (ஆணவ மலம் தலை தூக்காத) செய்யும் முயற்சிகளும், சைவ வரலாற்று நூல் எழுதும் முயற்சிகளும் இங்குதான் உருவாகின்றன. அந்த வகையில் அந்த இல்லத்தை மிகப் புனிதமாகக் கருதுகிறேன்.

14. ஆக்கூர்

சிறப்புலி நாயனார் வார வழிபாட்டு மன்றம்

ஆக்கூர் தான்தோன்றீசுவரர் திருக் கோயில் சனிக்கிழமை மாலை 6.00 மணி.

ஐம்பது குழந்தைகள் சிவபுராணம் பாடிக்கொண்டே வலம் வருகின்றனர். ஒவ்வொரு சந்நிதியிலும் நின்று அந்த சந்நிதிக்குரிய பாடல்களைப் பாடு கின்றனர். இறைவன் சந்நிதி முன்னே பஞ்சபுராணம் பாடுகின்றனர். அதுவும் இசையுடன் பாடுகின்றனர். நமக்கு வியப்பு மேலிடுகின்றது. வழிபாடு முடிந்ததும் மண்டபத்துக்கு வரு கின்றனர். அதற்குள் மண்டபத்தில் கூட்டம் சேர்ந்து விடுகின்றது. தமிழ் ஆசிரியர் ஒருவர் பெரியபுராண வரலாற்றில் ஓர் அடியாரைப் பற்றிப் பேசுகிறார். இது வாரந்தோறும் நடக்கிறது. பிள்ளைகளுக்கு இசையோடு பாடப் பயிற்றுவிக்கிறார் அதன் செயலாளர் இராஜேந்திரன் அவர்கள். 20 உறுப்பினர்களைக் கொண்டிருந்த இம்மன்றம் இன்று இவரது முயற்சியால் 200 உறுப்பினர்களைக் கொண்டிருக் கிறது. கூலி அரவை மில்லில் வேலை பார்க்கிறார். பி.யு.சி. வரை படித்து உள்ளார். திருமுறையில் அப்படி ஓர் ஆர்வம்! இவரது திருமுறை ஆர்வம் தெரிந்த இவருடைய மகள் இவரைத் தூக்கத்திலிருந்து எழுப்ப ஒரு தந்திரம் செய்வாள். கன்னத்தோடு கன்னம் ஒட்டி வைத்துக்கொண்டு, ''தோடுடைய செவியன்'' என்று பாடுவாளாம்.





அப்புறம் தூக்கம் கலைய வேண்டியது தானே! தந்தையை எழுப்ப மகளின் பள்ளியெழுச்சி! இப்படி ஒரு குடும்பத்தைக் காணவே ஆர்வம் மீதூர்கின்றது. இதற்காகவே இந்த அனுபவத்தை முற்றும் உணரவே 4, 5 முறை நானாகவே வலிந்து ஆக்கூர் சென்று பேசியிருக்கிறேன்.

இராஜேந்திரன் (பிறந்த ஆண்டு - 7.4.1959. ஊர் - ஆக்கூர், பெற்றோர் - சுப்ப முதலியார். சுப்பம்மாள்)

செயலுக்கு இராஜேந்திரன்; வண்மைக்கு சுப்பராய பிள்ளை; திருமுறை மனப்பாடம் செய்து ஒப்புவிக்கும் குழந்தைகளுக்கு ஒரு கிராம் பொற்காசும், ரூ. 250/-உம் வழங்குகிறார். மன்றம் வெளியிடுகின்ற திருமுறைத் தொகுப்பினை இலவசமாக அச்சிட்டுத் தருகிறார். அமெரிக்காவில் பணிபுரியும் இவர் தம் மகன்களிடமிருந்து மூன்று இலட்ச ரூபாய் நன்கொடை பெற்று ஆக்கூர் சிவன்கோயிலில் சுவாமி, அம்மன் விமானங்கள், மேல்தளம், கருங்கல் சுவர்கள் பழுது நீக்கி திருப்பணி செலவில் பங்கு பெற்றார்.

(பிறந்த ஆண்டு - 5.3.1928, ஊர் - ஆக்கூர், பெற்றோர் - ஆலாலசுந்தரம் பிள்ளை, கௌரியம்மாள்)

இம்மன்றத்தின் தலைவர், பி. இராஜரத்தினம் பிள்ளை வழிபாடு, உழவாரம், தலயாத்திரைக்கு உதவுகிறார்.

(பிறப்பு - 19.12.1929, பெற்றோர் - நடேசபிள்ளை, ஆக்கூர்.)

இவர்கள் எல்லாம் செயல்படுகின்ற அமைப்பு 1995 -இல் தொடங்கப்பட்ட சிறப்புலி நாயனார் வார வழிபாட்டு மன்றம் ஆகும். இம்மன்றத்தைத் தோற்றுவிக்க மயிலாடுதுறை உழவாரம் இணைப்பாளர் இரா. இராஜசேகரன் பெரும் முயற்சிகள் எடுத்தார்.

இம்மன்றம் மாதம் ஒரு பாடல் பெற்ற தலத்திற்குச் சென்று வழிபாடு செய்கிறது. சிறப்புலி நாயனார் குருபூஜையின்போது ஆயிரம் பேருக்கு அன்னதானம் செய்கிறது.

ஆயிரத்தில் ஒருவர் அல்லவா ஆக்கூர் தான்தோன்றீசுவரர்!

15. செம்பனார் கோயில்

மணிவாசக மன்றம்

2004 ஜூலை மூன்றாம் நாள் மாலை 4.30 மணி. செம்பொன்னார் கோயில் வீடுகள் அனைத்தும் பூட்டப்பட்டு விட்டன. சாரை சாரையாக மக்கள் செல்கின்றனர். ஏதேனும் அரசியல் கூட்டமா? திரைப்பட நடிகர் யாரேனும் வருகிறாரா? மேலமுக்கூட்டு தாதா விநாயகர் கோயிலுக்கு அல்லவா போகின்றனர். பன்னிரு திருமுறை ஊர்வலம் என்ற துணிச்சீலை நம்மை வரவேற்கிறது. பன்னிரு திருமுறை ஊர்வலத்திற்கு ஊரே திரண்டெழுந்து பங்கெடுக்கும் இக்காட்சி செம்பொன்னார் கோயில் மணிவாசகர் மன்ற 39-ஆம் ஆண்டு விழாவில் காண முடிந்தது.

''அரசு எழுந்ததோர் பணிலம்''

என்று பாடத் தோன்றுகிறது. அவர்கள் நடத்துகின்ற வார வழிபாடும் காண வேண்டிய ஒன்று. சிறுபிள்ளைகளும், பெரியவர்களுமாக (ஆக்கூர் போலவே) ஒவ்வொரு சந்நிதியாகப் பாடி வழி



பட்டு, மண்டபத்திற்கு வந்து சமய உரை நடத்துகின்றனர். ஆரம்ப காலங்களில் தியாகப்பச் செட்டியார், தற்பொழுது தா.ம. வெள்ளைவாரணனார் அவர்களும் மாதந்தோறும் சொற்பொழிவுகள் நிகழ்த்து கின்றனர். இவ்விரு பெரு மக்களும் இம்மன்றத்தைத் தத்து எடுத்துக் கொண்டனர் எனலாம். வெள்ளைவாரண னார் ஐயா அவர்களுக்கு ஏதேனும் பொன்முடிப்பு வழங்கப்பட்டால் அதனை இம்மன்ற அறக்கட்டளைக்கு வழங்கி விடுவார்.

சிறுசிறு பிரசுரங்களாக இருபது நூல்கள் வெளியிட்டுள்ளனர். செம் பொன்னார் கோயிலில் யாருக்கேனும் மணிவிழா என்றால் உடனே நூல் ஒன்று வெளிவந்துவிடும். வரலாற்றுணர்வு மிக்க ஊர் செம்பொன்னார் கோயில்.

செம்பொன்னார் கோயில் திருப்பணி மணிவாசக மன்றத்தின் நெடுநாளைய கனவு. 1976-இல் தொடங்கப்பட்ட திருப்பணி ஒரு பகுதி வேலை முடிந்தபின் அப்படியே 20 ஆண்டுகளாக நின்றுவிட்டது. இதனைப் பொறாத மணிவாசக மன்றத்தார் மன்றத் தலைவர் திருமுருகேச உடையார் அவர்களையே திருப்பணிக்குழுத் தலைவராக்கி, திருவெண்காடு வந்திருந்த மலேசியா வள்ளல் மருத்துவர் அன்பழகியை அணுகி திருப்பணிக்கு உதவ வேண்டி னர். அவர்களும் இசைந்தார்கள். மன்றத் தின் திட்டமாக சுவாமி கோயிலுக்கும் அம்மன் கோயிலுக்கும் இடையில் உள்ள சுவாமி அலங்கார மேடையை அலங்கார மண்டபமாக லட்ச ரூபாய் செலவில் கட்டி முடித்தனர். குடநீராட்டுப்பணியும் மன்றத்துக்கு வந்து சேர்ந்தது. பலரின் துணை கொண்டு 24.6.1999 அன்று குடநீராட்டு விழாவும் நிகழ்வுற்றது. ஒரு சமய அமைப்பு என்றால் வழிபாட்டு நெறிமுறை, சமய அறிவு மக்களுக்குப் புகட்டுவதோடு தான் சார்ந்திருக்கும் திருக்கோயிலின் வளர்ச்சியிலும் பங்கு பெற வேண்டும். இதற்கு நல்ல எடுத்துக்காட்டு மணிவாசக மன்றம் ஆகும்.

மணிவாசகர் மன்றத்தை 8.2.1965 அன்று அ. நமசிவாயம் பிள்ளையவர்கள் முழு முயற்சிகள் எடுத்து தோற்று வித்தார்கள். பிள்ளையவர்கள் சிவனடி சாரும் வரை (30.9.1989) தாமே செயலராக இருந்து பணியாற்றினார்கள்.

இக்கால கட்டத்தில் க. தியாகப்பச் செட்டியார் அவர்கள் கந்தபுராணம், திருவிளையாடல் புராணம், பெரிய புராணம் ஆகியவற்றைத் தொடர் விரிவுரை செய்தார். நமசிவாய பிள்ளை மறைவிற்குப் பின் அவரது மகனார் காத்து வந்தார். 27.4.1989-இல் மயிலாடுதுறை உழவாரம் அமைப்பின் சார்பில் அதன் இணைப்பாளர் இரா. இராஜசேகரன், பேரறிஞர் வி.சா. குருசாமி தேசிகர் ஆகியோரால் வெள்ளிக்கிழமை தோறும் வார வழிபாடு என்று முறைப்படுத்தப்பட்டு தற் பொழுது முறையாக இயங்கி வருகிறது. இப்பொழுது திங்கள் தோறும் இரண்டாம் வெள்ளியன்று த.ம. வெள்ளைவாரணனார் அவர்கள் ''சமயச் சிந்தனைகள்'' என உரையாற்றி வருகின்றனர்.

(தற்போதைய தலைவர் - மு. சபாநாயகம் பிள்ளை; செயலர் - சி. தட்சிணாமூர்த்தி)

தியாகப்பச் செட்டியார்



பிறப்பால் வீர சைவர்; தொழிலால் தமிழ் ஆசிரியர்; கேட்கவா வேண்டும்? தியாகப்பச் செட்டியாருக்கு தோத்திரப் புலமையும் சாத்திர அறிவும் தாமே வந்து சேர்ந்தது.

அன்பு இதயம்; அல்லும் பகலும் அபிராமி சிந்தனை; செய்ய தமிழ் பாடும் திருவாய்; கணீரென்னும் வெண்கலக் குரல்; நெற்றியில் வெண்ணீறு; அதன் நடுவில் குங்குமப்பொட்டு; நெடிய உடல்; எளிய வெள்ளுடை; எவரிடத்திலும் அன்புடன் பழகும் அருமைப் பாங்கு; இவற்றின் மொத்த உருவமே திருக்கடவூர் க. தியாகப்பச் செட்டியார் அவர்கள்.

இவர் பிறந்த ஊர் திருக்கடவூர் என்றாலும் இவர் தத்து எடுத்துக் கொண்டது மணிவாசக மன்றம். எனவே மன்றத்தோடு இவரது வரலாறு இணைக்கப்பட்டுள்ளது. மன்றத்தில் நீண்டகாலம் திருவிளையாடற்புராணம், கந்தபுராணம், பெரியபுராணம் தொடர் சொற்பொழிவு ஆற்றி வந்தார். அண்மை ஊர்களான காரைக்கால், பொறையாறு பகுதிகளில் சென்று உரை நிகழ்த்துவார்.

(பிறப்பு - 5.10.1922 மறைவு - 7.7.2001 ஊர் - திருக்கடவூர். பெற்றோர் - கணபதி செட்டியார், சிவகாமி அம்மையார்)

நமசிவாயம் பிள்ளை



மணிவாசக மன்றத்தை நிறுவியவர் திரு. நமசிவாயம் பிள்ளையவர்கள். அவர்கள் செயலராக இருந்த பொழுது மன்றத்திற்குப் பல அறிஞர்களை அழைத்துப் பேசச் செய்து இருக்கிறார். சமயநூல்கள் வெளியிட்டு அன்பளிப்பாகக் கொடுக்க வேண்டும் என்ற

எண்ணத்தில் ''அப்பர் அச்சகத்தை'' தொடங்கி அதில் கிடைக்கும் வருமானத்தில் ஒரு பகுதியை ஒதுக்கி ''அப்பர் பணி மன்றம்'' என்று நிறுவி சிறு சிறு நூல்களாக வெளியிட்டார். செம்பொன்னார் கோயில் திருக்கோயில் நால்வர் மண்டபத்தைக் கட்டித் தந்தார். 272 தலங்களுக்கும் அன்பர்களை ஆற்றுப் படுத்தி அழைத்துச் சென்றிருக்கிறார். (பிறப்பு 27.2.1915. மறைவு 30.9.1989)

ஊர் - கீழ்வேளூர்; பெற்றோர். - சிவசுப்பிரமணியபிள்ளை, ஜானகி அம்மாள்)

தென்னவன்

தென்னவன் என்று அழைக்கப்படும் செ. தட்சிணாமூர்த்தி அவர்கள் மன்றத்தின் தற்போதைய செயலர் ''நல்ல கவிஞர்,''மருவார்குழலி விருத்தமணிக் கோவை'' என்ற கவிதை நூலை எழுதி உள்ளார். செம்பொன்னார் கோயில் திருப்பணிக்கும் பெரிதும் துணை புரிந்தார். மன்றத்தை நாளும் காத்து வருகிறார்.

(பிறந்த ஆண்டு 15.3.1936, ஊர் செம்பொன்னார் கோயில்)

ஆறுமுகனார்

நமசிவாயம்பிள்ளை இருந்தபொழுது அவரோடு இணைந்து சைவப்பணிகளைச் செய்தவர், பைண்டர் என்று அன்போடு அழைக்கப்படும் ஆறுமுகனார். இவரது தொழிலும் நமசிவாயம் பிள்ளையவர்களிடம் பணிபுரிவதாக அமைந்து விட்டது. அதனால் கணமேனும் அவரைப் பிரிந்தாரில்லை. அவர் மறைந்த பின்பும் அவரது மகனார் கதிரேசனுடன் இணைந்து மணிவாசக மன்றப் பணிகளைக் கவனித்து வருகிறார்.

(பிறந்த ஆண்டு - 7.3.1935, ஊர் - திருநனிபள்ளி)

தா. ம. வெள்ளைவாரணனார்



2005 பிப்ரவரி 8.... காரைக்கால் திருமுறை மாநாடு 2000க்கும் மேற்பட்ட கூட்டம். தா.ம. வெள்ளைவாரணனார் பேசுகிறார். மகுடி இசை கேட்ட நாகம் போல கூட்டம் கட்டுண்டு கேட்கிறது. வெள்ளை வாரணனார் சொல்லாடல் செய்பவர் அல்லர். நகைச்சுவை என்பதும் அரிது. ஆனால் அவர் சொல்லில் நேர்மை இருந்தது. கருத்தில் ஆழம் இருந்தது.

காரைக்கால் மட்டுமல்ல. பக்தவத்சலனார் தமிழகமெங்கும் நடத்தும் அனைத்துத் திருமுறை மாநாடுகளிலும் வெள்ளைவாரணனார் தான் நட்சத்திரப் பேச்சாளர். மாநாட்டில் அவர் பேச்சு ஒரு முறையோடு நின்றுவிடாது. இரண்டு முறை மூன்று முறை என்றே பேசுவார்.

பன்னிரு திருமுறைகளையும், முப்பெரும் புராணங்களையும் (பெரிய புராணம், திருவிளையாடற் புராணம், கந்த புராணம்) பற்றி வெகு இனிமையாகச் சொற்பொழிவாற்றுவார். செம்பொன்னார்கோயில் மணிவாசக மன்றத்தில் ஒவ்வொரு மாதமும் முதல் வெள்ளியன்று ''சமயச் சிந்தனைகள்'' எனத் தொடர்ந்து சொற்பொழிவாற்றி வருகிறார். திருப்பத்தூர் மாநாட்டில் வழங்கப்பெற்ற பொற்கிழித்தொகை ரூ. 5,000/-உம், அன்பர் ஒருவர் கொடுத்த

தொகை ரூ. 1,000/-உம் அப்படியே மணிவாசக மன்றத்திற்குத் தந்துவிட்டார்.

சைவத்திற்கு இரண்டு வெள்ளை வாரணனார்கள். ஒருவர் சிதம்பரத்தார், மற்றவர் கும்பகோணத்தார். சுந்தர மூர்த்தி சுவாமிகள், சேரமான் பெருமாள் நாயனார் என இரு நாயன்மாரை ஏற்றிப் பரவ இரண்டு வெள்ளை வாரணங்கள் தேவைதான்.

(பிறந்த ஆண்டு - 6.9.1927, பிறந்த ஊர் - கும்பகோணம், பெற்றோர் - மகாலிங்கம் செட்டியார், ஜெகதாம்பாள்)

வீ. கோபாலகிருஷ்ணன்

மணிவாசக மன்றத்தோடு தொடர்புடைய ஒரு சித்தாந்த ரத்தினம் வீ.கோபாலகிருஷ்ணன் (3.7.1949, திருச்செம்பொன்பள்ளி) ஆவார். மணிவாசக மன்றத்தின் வெளியுறவுச் செயலர். சாத்திரம் கற்றவர். ஜோதிர்லிங்க தலங்களையெல்லாம் தரிசித்தவர். துண்டுப் பிரசுர பிரசாரகர், இதுவரை 30 துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்டுள்ளார். இவர் மேலப்பாதி குருவார வழிபாட்டு மன்றத்தின் முக்கியப் பொறுப்பாளர், தலப்பயணச் செயலர். இம்மன்றம் உழவாரம் இரா. இராஜசேகரன் அவர்களால் 11.10.1990-இல் தொடங்கப் பட்டது. அப்பொழுது அருள்மிகு சுரஹரேஸ்வரர் கோயில் பெரிதும் சிதிலம் அடைந்து இருந்தது. 7' 5" அடி உயரம் உள்ள அம்பாளைப் பார்க்க பார்க்க மனம் கசிந்து உருகும். இத்தகைய சிறப்பு வாய்ந்த இக்கோயில் திருப்பணியை நடத்தவும். 21.3.2003 அன்று குடநீராட்டு விழா, செய்யவும் பெரிதும் துணை நின்றது இம்மன்றம். இவை அல்லாமல் வார வழிபாடு, பிரதோஷ வழிபாடு, சிவராத்திரி, சோமவார வழிபாடுகள் நிகழ்ந்து வருகின்றன.

(தலைவர் ஜி. நாகராஜன், செயலர் - பொன். திருமாறன்)

16. பொறையாறு

அம்பலவாணம் அருள்நெறிக்கழகம் கூட்டு வழிபாடு, உழவாரப்பணி, ஆலயத்திருப்பணிக்கு உதவுதல், பிரதோஷ வழிபாடு, சோமவார வழிபாடு இணைந்து நடத்தல் ஆகிய பணிகளைச் செய்து வருகின்றது.

(தலைவர்: தா.ம. வெள்ளைவாரணம் : செயலர் : கு. காசிநாதன்)

1950-இல் தொடங்கப்பட்ட தெய்வத் திரு நெறிவார வழிபாட்டு மன்றம் - இளம் சிறார்களுக்குத் திருமுறைகளைக் கற்பித்து வருகிறது. திங்கட்கிழமைகளில் சிறார்கள் திருமுறைப் பாடி வலம் வருகிறார்கள். பெரியபுராணம் நடத்தப் படுகிறது.

. (தலைவர் : நடராச தேசிக ஓதுவார்: செயலர் - சதாசிவம் செட்டியார்.)

17. காரைக்கால்

2005 பிப்ரவரி 5, 6, 7, 8 நாட்கள்... காரைக்கால் சைவ வரலாற்றில் ஓர் பொன்னேடு... அந்த நான்கு நாட்களும் குடியாத்தம் கி.ஆ. பக்தவத்சலனார் அவர்கள் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் ஆண்டுதோறும் நடத்தும் திருமுறை மாநாடு காரைக்காலில் நடைபெற்றது. காலையும் மாலையும் தொடர்ந்து நடைபெற்ற மாநாட்டில் முதல் நாளிலிருந்து நிறைவு நாள் வரை 2000 முதல் 3000 வரை (மாலை நேரங்களில் கூடியிருக்கலாம்) மக்கள் திரண்டு வந்து கேட்டனர். காரைக்காலை வலம் வந்த திருமுறை ஊர்வலம் பெரும் கிளர்ச்சி ஊட்டியது.

இம்மாநாட்டின் வெற்றிக்குக் காரைக் காலில் உள்ள சைவ மன்றங்கள், சைவப் புரவலர்கள், சைவத் தொண்டர்கள் முழுக்காரணம் என்பதனைச் சொல்லவும் வேண்டுமோ?

சேக்கிழார் பன்னிரு திருமுறை மன்றம்

அடாது மழை பெய்தாலும் - புயலே அடித்தாலும் - விடாது வாரந்தோறும் சொற்பொழிவுகளை நடத்துபவர்கள் காரைக்கால் சேக்கிழார் பன்னிரு திரு முறை மன்றத்தார். அவர்கள் நடத்தும் திருமுறைத் தொடர் விரிவுரையே ஓர் அரும் செயல் ஆகும். பதினாறு ஆண்டு களுக்கு முன்னர் முனைவர் கு. சுந்தர மூர்த்தியவர்கள் முதல் திருமுறை யினைத் தொடங்கினார்கள். தற்பொழுது



பன்னிரெண்டாம் திருமுறை வரை வந்து விட்டார்கள். நீண்ட நெடிய திருமுறைப் பயணம்.



இம்மன்றத்தாருக்கு அனைத்துமே தொடர் விரிவுரைதான். பிற தொடர் விரிவுரைகள் வருமாறு: 1) பெரிய புராணம் (வீ. தமிழ்ச்சேரனார்) 2) திருவிளையாடற்புராணம் (முனைவர் திரு. கு. சுந்தரமூர்த்தி, முனைவர் மு. சிவச்சந்திரன், முனைவர் அகரமுதல்வன்) 3) சிவமகாபுராணம் (இளசை சுந்தரம்) 4) சிவசக்தி மகாபுராணம் (முனைவர் அகரமுதல்வன்) 5) கந்தபுராணம் (இரெ. சண்முகவடிவேல்) 6) விநாயகர் புராணம் (முனைவர் அகரமுதல்வன்) 7) பதினெண் சித்தர்கள் (நாக. துரையரசு) 8) தெய்வத் திருமணங்கள் (சுவாமிநாதன்) 9) திருவருள் கதைகள் (முனைவர் அகரமுதல்வன்) 10) திருக்கூட்டமரபினர் (வீ. தமிழ்ச்சேரனார்) 11) குறள்நெறி (அகர முதல்வன்) 12) அரிச்சந்திர புராணம், திருப்புகழ் (இராம. நடராஜன்) 13) சிவஞான போதம் (முனைவர் திரு. மு. சிவச்சந்திரன் 14) மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் (இரெ. சண்முக வடிவேல்)

ஒவ்வொரு தொடர் முடிவிலும் மிகச் சிறப்பாக விழா எடுத்து சைவத் திருமடங்களின் தலைவர்களை அருளாசி தர அழைக்கிறார்கள். (தோற்றம் – 4.10.1987; தலைவர் – கே. தண்டாயுத பாணி பத்தர். செயலர் – எஸ். சண்முக சுந்தரம்)

இந்து சமயப் பேரவை

1993-இல் தொடங்கப்பட்ட இந்து சமயப் பேரவை வீருசக்தி விநாயகர் ஆலயத்தைப் பழுது பார்த்து, திருப்பணி செய்து, பல்வேறு வழிபாடுகளுக்கு ஏற்பாடுகள் செய்து வருகிறது. இம் மன்றத்தார் சுற்றுப்புறக் கோயில்களில் உழவாரப் பணி, தலயாத்திரை, சமய சொற்பொழிவுகள் ஆகிய பணிகளையும் செய்கின்றனர். தலைவர் இராம. கலியமூர்த்தி (1946) 40 ஆண்டுகளாகச் சமயச் சொற்பொழிவுகள் ஆற்றி வருகிறார். சைவசித்தாந்தப் புலவர்; நூலாசிரியர்.

சிவனடியார் திருக்கூட்ட அறக் கட்டளை ஆற்றிவரும் பணிகள்; மாதம் தோறும் சுற்றுப்புறக் கோயில்களில் உழவாரப்பணி, அறுபத்து மூவர் குரு

பூஜை, அன்னதானம், மாதம் இருமுறை இல்லங்கள் தோறும் திருமுறை ஓதுதல், தலயாத்திரை, மாணவர்களுக்கு திரு முறைப் போட்டிகள் நடத்துதல்.

அர்த்தஜாம வழிபாட்டுமன்றம்

அ/மி. கயிலாயநாதர் திருக்கோயில் அர்த்த ஜாமபூஜைக்கு வேண்டிய பொருள்களைத் தருதல், மேற்படி ஆலயத்தில் ஏழு உபயங்களை ஏற்று நடத்துதல், ஆண்டுதோறும் அக்னி நட்சத்திர பிரதோஷ நாளன்று பெரும் பொருட்செலவில் ஏகாதச ருத்ராபிஷேகம் செய்தல், ஆயிரக்கணக்கானவர்களுக்கு அன்னதானம், திருக்கோயில் தூய்மை.

சிவ. கயிலாசநாதன் (1959) - சைவ சித்தாந்தப் புலவர், சமயச் சொற்பொழி வாளர்; ''காரைக்காலம்மையார் வரலாறு'' நூலாசிரியர்.

18. திருவேட்டக்குடி

திலகவதியார் திருமுறை வழிபாட்டு மன்றம்

திருவேட்டக்குடி...

சிறிய ஊர்தான்...

ஆண், பெண், சிறியவர் பெரியவர், சாதி பேதம், ஏழை செல்வர் பேத மில்லாத ஐம்பதுக்கும் மேற்பட்ட அடியவர்கள் திருக்கூட்டம்... திலகவதி யார் திருமுறை வழிபாட்டுமன்றம்... மன்றத்தின் பெயருக்கேற்ற தொண்டு...

பெரிய நந்தவனம்... போர் செட்...

ஞாயிறு தோறும் நந்தவனத்தைப் பேணிக் காக்கிறார்கள்.. அதில் பூக்கும் மலர்களை அடியவர்கள் நாளும் கொய்து இறைவனுக்குத் தருகின்றார்கள். பள்ளி யறை புறப்பாடு இல்லாமலே இருந்து வந்தது. கயிலை மணி நிர்மலா ராமசாமி அவர்கள் பல்லக்குச் செய்து கொடுத்துப் பள்ளியறை புறப்பாடு ஏற்பாடு செய் தார்கள். அடியவர்கள் புஷ்ப ஊஞ்சலை அலங்கரிப்பார்கள்.

பிரதோஷ வழிபாட்டை மீண்டும் தொடங்கியுள்ளார்கள். மார்கழி மாதத் தில் திருவெம்பாவை ஓதிய வண்ணம் வாத்யங்களுடன் வீதிவலம் வரு கின்றனர். திருவாரூர் வாத்யக்குழு போல இங்கும் ஒரு வாத்யக்குழு உள்ளது. சங்கு, தாளம், கொம்பு என்று இசைக் கிறார்கள். வெளியூர் நிகழ்ச்சிகளுக்கும் செல்கிறார்கள்.

ஆண்டு விழாவும் சிறப்பாகச் செய் கிறார்கள். 1500 பேருக்கு அன்னதானம் செய்கின்றனர். சொற்பொழிவு, திரு முறை இசை, 1008 சங்காபிஷேகம் - ஆகியனவும் உண்டு.

சாதாரண நாட்களிலும் வெளியூர்களி லிருந்து சிவனடியார் வருவதாய் எழுதி விட்டால் போதும். இம்மன்றத்தினர் கையில் பொருள் இருக்கிறதோ இல்லையோ - எப்படியோ புரட்டி - விருந்து படைத்து விடுவார்கள். சொல்லாமல் வந்து விட்டாலும் ஏதாவது ஏற்பாடு செய்து விடுவார்கள். ஆம் மகேசுவரபூசையில் அப்படி ஒரு தீவிரம்!

திருவேட்டக்குடி...

திருக்கூட்டத்தார் வேட்கும்குடி...

(நிறுவனர் - ம. சொக்கலிங்கம்; தலைவர் - ப. ஆறுமுகசாமி; செயலர் - ராஜேந்திரன்)

19. நாகப்பட்டினம்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் நாகை : பத்தொன்பதாம் நூற்றாண்டில் நாகையில் விளங்கிய நற்றமிழ் நாவலர் களில் புத்தகக்கடை நாராயணசாமிப் பிள்ளை, சித்தாந்த சரபம் வீரப்பச் செட்டியார், கிருஷ்ணசாமி உபாத்தியாயர், புருஷோத்தம நாயுடு, நீலலோசனி பத்திராதிபர் ஜி. சதாசிவம்பிள்ளை, பண்டித சாமிநாத பிள்ளை, மறைமலை

அடிகளார் ஆகியோர் மிக முக்கிய மானவர்கள் ஆவார்கள்.

பிள்ளையவர்களின் காரோணப்புராண அரங்கேற்றம் : அருள்மிகு நீலாயதாட்சி அம்மன் கோயிலின் தென்புற மாட வீதியை அடுத்துள்ள சிவன் கோயிலைச் சார்ந்துள்ள திருக்குளம் தேவ தீர்த்தம் எனப்படும். இக்குளத்தில் வடதுறையில் படித்துறைகளுடன் கூடிய ஒரு சிறு மண்டபம் உள்ளது. இம்மண்டபத்தில் தேவாரத் திருக்கூட்டம் என்ற பெயரில் சைவ சமயப் பேரவை ஒன்று விளங்கி வந்தது. அப்பேரவைக்குத் தலைவராக சித்தாந்தச் சரபம் வீரப்பச் செட்டியார் விளங்கி வந்தார். செட்டியார் தலைமை யில் சிவநேயச் செல்வர்கள் ஒருங்கு கூடி தேவாரத் திருமுறைகளைப் பண்ணோடு பாடுவதும் அதன் பொருள் விரித்துப் பேசுவதும் ஆகிய செயல்களில் ஈடுபடுவர். இக்கூட்டத்தைச் சிறப்பித்து மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள் காரோணப் புராணத்தில் பின்வருமாறு வாழ்த்திப் பாடியுள்ளார்.

''நிலவு திருவெண்ணீறும் கண்மணியும்
புனைந்து மறைநெடுநூல் நாப்பட்டு
கலவுதிரு ஐந்தெழுத்தும் கணித்து
அருள்கூர் மாதேவன் கழல் சேவித்தே
உலவும் அவன் நாமம் முழக்குபு
தேவதீர்த்தத்தின்
உதீசிக் கோட்டு
குலவு மணிமய முத்தி மண்டபத்தின்
மேவு திருக்கூட்டம் வாழ்க.''

கி.பி. 1869 -இல் மகாவித்துவான் பிள்ளையவர்கள் நாகைக் காரோணப் புராணத்தை முத்தி மண்டபத்தில் அரங்கேற்றம் செய்தார். ஓர் ஆண்டுக் காலம் இவ்வரங்கேற்றம் நிகழ்ந்து வந்தது. இவ்வரங்கேற்ற நிகழ்ச்சியை முன்னின்று நடத்தியவர்கள் ஓவர்சியர் அப்பாதுரை முதலியாரும், வீரப்பச் செட்டியாரும் ஆவர். அரங்கேற்ற காலங்களில் அவ்வப்போது முத்தி மண்டபத்துக்கு வந்திருந்து கேட்டு பாராட்டியவர்களில் கோடக நல்லூர் சுந்தரசுவாமிகள், கீழ்வேளூர் சுப்பிர மணிய தேசிகர், குடந்தை சங்கராசார்ய சுவாமிகள் ஆகியோர் முக்கிய மானவர்கள்.

அரங்கேற்ற காலங்களில் உடன் இருந்து வேண்டிய உதவிகளைச் செய்த புலவர்கள் புருஷோத்தம நாயுடுவும் கிருஷ்ணசாமி வாத்தியாரும் ஆவர். அரங்கேற்ற முடிவில் வீரப்ப செட்டியார் காரோணப் புராணத்தைச் சிறப்பித்துப் பின்வருமாறு சாற்றுக்கவி பாடியுள்ளார்.

''பூமேவு திருநாகை காயாரோகணப்
பெருமான் புராணம் சொற்றான்
தேமேவு வீரசைவ சிகாமணி அப்பாத்
துரைமால் சிறப்பில் கேட்க
காமேவு சிராமலை வாழ் சைவ சிகாமணி
ஞானக்கலை முற்றோர்ந்து
மாமேவு துணிபமைந்த மீனாட்சி
சுந்தர நாவலர் ஏறே.''

நந்தன் சரித்திரம் அரங்கேற்றம் : ஏறத்தாழ இக்காலத்தில் நரிமணம் கோபால கிருஷ்ணபாரதி என்ற இசைப் புலவர் நந்தன் கதையை இசைப் பாடல்களாகப் பாடி எடுத்துக் கொண்டு நாகை வந்தார். அதுபோது நாகைக் கப்பல் வணிகர் கந்தப்பச் செட்டியார் என்பவர் பாரதியாரை வரவேற்று நந்தன் சரித்திரத்தை நாகையில் அரங்கேற்றம் செய்து வைத்தார். அரங்கேற்றத்தின் போது காரை ஆளுநர் சீசே துரையும் அவரது அலுவலர்களும் வந்திருந்து கேட்டு இன்புற்றதோடு அமையாது கையெழுத்துப் பிரதிகளில் இருந்த நந்தன் சரித்திர கீர்த்தனைகளை அச்சிடவும் செய்தார்.

''சுந்தரேஸ்வரர் கைங்கர்ய வைபவம்: ''அந்நூற்றாண்டின் இறுதியில் சிவ புண்ணிய கைங்கர்ய மானேஜராகிய அ. சாமிநாத செட்டியார் என்பவர் கேட்டுக்

கொண்டபடி நாகை வாழ் புலவர்களில் ஒருவரான சிங்காரவேல் பத்தர் என்பவர் அக்கரைக்குளம் வட கரையில் உள்ள சுந்தரேஸ்வரர் கோயில் மகாத்மியத்தையும் அக்கோயிலுக்குப் பணிசெய்த புரவலர்களையும் சிறப்பித்து ''சுந்தரேஸ்வரர் கைங்கர்ய வைபவம்'' என்ற பெயரில் செய்யுள் நூல் ஒன்று செய்துள்ளார்.

இந்நூல்கள் அனைத்தும் கி.பி. 1902, 1903, 1906 ஆண்டுகளில் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளன.

வீரப்பச் செட்டியார்

நாகை நாணயக்காரத் தெருவில் திருவாரூர் வகுப்பைச் சேர்ந்தவரும் சிற்றம்பலம் உடையான் கோத்திரத்தவருமான சோமாஸ்கந்தன் செட்டியார் சிறந்த வணிகராக வாழ்ந்து வந்தார். சோமாஸ்கந்தன் செட்டியாருக்கு இரண்டு ஆண் மக்கள் பிறந்தனர். மூத்தவரான வீரப்பரே வெளிவை சைவசித்தாந்த சபையைத் தோற்றுவித்தவர் ஆவார். வீரப்பர் இளமையிலேயே கல்வி கேள்விகளில் வல்லவரானார். சிவபெருமானிடத்தில் ஆழ்ந்த பக்தியும் வழிபாடும் கொண்டு வாழ்ந்து வரலானார். வாணிபத்தை இளவலிடம் தந்துவிட்டு தான் தனித்திருந்து சிவபூஜை செய் வதிலேயே காலத்தைச் செலவிட்டார்.

முத்துக்காயாரோகணம் செட்டியார்

சோமாஸ்கந்தன் செட்டியாரின் இரண்டாம் மகனார் மாணிக்கம் செட்டியாருக்கு தண்டபாணி என்ற மகன் பிறந்தார். இவரது மகன் முத்துக்காயாரோகணம் செட்டியார் ஆவார். இவர் தனது பெரிய பாட்டனாரிடத்து சைவ சாத்திரங்களை முறையாகப் பயின்று சமய அறிவும் தமிழ் அறிவும் நிரம்பப் பெற்று செந்தமிழ் ஆசான் எனப் பலரும் போற்ற விளங்கி வந்தார். இவரது ஆதரவில் நாகையில் வாழ்ந்த வி. ஏ. கனகசபாபதி பிள்ளை என்பவர் ''திருநீலகண்டம்'' என்ற மாத இதழை அச்சிட்டு வெளியிட்டு வந்தார்.

வீரப்பச் செட்டியாரின் சமய இலக்கியப் பணிகள்

வீரப்பர் முன் கூறிய காரோணப் புராண அரங்கேற்றத்தின் போது செய்த பணிகளே அன்றி பலருக்கும் சைவ சித்தாந்த பாடங்களைப் போதித்து வந்தார். இவர்பால் சித்தாந்த பாடம் கேட்டுச் சிறந்து விளங்கியவர் சென்னையில் இராணுவ உயர் அதிகாரியாக விளங்கிய திரு. பவானந்தம் பிள்ளை அவர்களாவார். மறைமலையடிகள் சமயம் நேர்ந்தபோது வீரப்பரிடம் நெருங்கிப் பழகிப் பாடம் கேட்டு வந்தவராவார். யாழ்ப்பாணம் பொன்னையா பிள்ளை விசுவலிங்கம் பிள்ளை, முருகேச பண்டிதர், பால்வண்ண முதலியார் போன்ற புலவர்களிடத்தில் நல்ல பழக்கம் உள்ளவர். இத்தனைக்கும் மேலாக 1870-இல் அருட்சோதி வள்ளல் இராமலிங்க அடிகள் தலயாத்திரை மேற்கொண்டு நாகை வந்தபோது முத்தி மண்டபத்தில் தங்கியிருந்து வீரப்பச் செட்டியாரைச் சந்தித்து உரையாடி அனைவரையும் மகிழ்வித்து ஆசி கூறிவிட்டு மதுரை சென்றார் என்று தெரிகின்றது.

வீரப்பரின் நூல்கள்

வீரப்பர் முத்தி மண்டபத்திலும், சபையிலும் புரிந்த சொற்பொழிவுகள் எழுத்துருவத்தில் புத்தகமாக வெளி வந்துள்ளன. நித்திய அநித்திய விவேக பத்திரிகை, சைவசித்தாந்த பிரசங்கக் கோவை முதலியனவாகும். நித்ய அநித்ய விவேக பத்திரிகையில் விக்கினேசரப் பிரபாவம், சபையின் பயன், பிரசங்கத்தின் பயன் போன்ற கட்டுரைகள் அடங்கியுள்ளன. சைவ சித்தாந்த



பிரசங்கக் கோவையில் பரமேஸ்வரது பிரபுத்துவம், பதிபுண்ணியம், சிவாராதனம், சைவ சமய நெறி, விரதமான்மியம், தவத்தின் மகிமை என்பன போன்ற விஷயங்கள் ஆராய்ந்து எழுதப் பட்டுள்ளன. இந்நூல் 1902-இல் அச்சிடப்பட்டு வெளியானது.

வெளிப்பாளையம் சைவ சித்தாந்த சபை

வீரப்பர் நாகையில் உள்ள முத்தி மண்டபத் திருக்கூட்டம் போல வெளிவையிலும் அத்தகைய பேரவை ஒன்று விளங்க வேண்டும் என்ற எண்ணத்தால் அகத்தீசுவரர் கீழவீதியைத் தேர்ந்தெடுத்தார். கீழவீதியில் உள்ள முத்துவேல் பிள்ளை என்பவரது வீட்டை வாடகைக்கு அமர்த்தி அதில் சைவ சித்தாந்த சபையைத் தொடங்கி நடத்தி வரலானார்.

சேது அரசரின் நன்கொடை

இராமநாதபுரத்து அரசரின் மூத்த குமாரர் பாஸ்கர சேதுபதி சிவத்தல யாத்திரையின் போது நாகைக்கு வருகை தந்தார். அது காலை வீரப்பச் செட்டியார் மன்னரை வரவேற்றுக் காயாரோகணர் கோயிலில் உரை நிகழ்த்தச் செய்தார். பின்னர் மன்னரை வாடகையில் உள்ள வெளிவை சைவ சித்தாந்த சபைக் கட்டடத்திற்கு அழைத்து வந்தார். அங்கே மன்னர் ''மணி மந்திர ஔஷதம்'' என்னும் பொருள் பற்றி சொற்பொழி வாற்றினார். சொற்பொழிவு முடிந்ததும் சேது மன்னர் சொந்தத்தில் கட்டடம் அமைய செட்டியாரிடம் ஐநூறு வெண் பொற்காசுகளை நன்கொடையாக வழங்கினார்.

கட்டடம் வாங்குதல் : வீரப்பச் செட்டியார் மன்னர் அளித்த நன்கொடையைக் கொண்டு வாடகைக்கு இருந்த முத்துவேல்பிள்ளையின் கட்டடத்தை விலைக்கு வாங்க விரும்பினார். இக்கட்டடத்தை ஒட்டிய வடபுறத்தில் உள்ள காலிமனை ஒன்றும் இதனை அடுத்து தெற்கே உள்ள கல்கட்டுக் கோப்பு வீடும் கொல்லையும் இருந்தன. ஐநூறு ரூபாய் கொடுத்து 1902 இல் வீட்டை வாங்கி வீரப்பர் சாசனம் செய்து கொண்டார்.

சபை என்ற பெயருக்கு ஏற்ப சபாநாயகரான சிவகாமி அம்மை சமேத சிற்றம்பலமுடையானை சித்திரமாக எழுதி கண்ணாடிச் சட்டமிட்டுப் பிரதிட்டை செய்யப்பெற்றது. சமயாசாரியார் நால்வரது திரு உருவப்படமும், தியான சிந்தாமணியின் திருஉருவப் படமும் பிரதிட்டை செய்யப்பட்டன.

75 வயதுக்கு மேற்பட்டவரான செட்டியார் வியாழன்தோறும் கற்றவர்கள் பலரைச் சபைக்கு அழைத்து வந்து உரை நிகழ்த்தச் செய்வார். சபைக்கு வருகை தரும் பல்லோர்களது ஐயங்களைப் போக்கியும், விரும்பிப் படிப்பவர்களுக்குச் சித்தாந்த பாடங்கள் நடத்தியும் வந்தார். சபையில் நீலகண்ட பாடியம் முதலான சித்தாந்த நூல்களையும் புராண நூல்களையும் சேகரித்து வைத்து வருபவர்கள் படித்துப் பயன்பெற ஏற்பாடும் செய்து வைத்தார்.

இவ்வாறு வீட்டில் சிவபூஜையும், முக்தி மண்டபத்தில் தேவார முழக்கமும், சபையில் சித்தாந்த

போதனையும் நடத்தி வந்த செட்டியார் 1911-ஆம் ஆண்டு மாசி மாதத்தில் இறைவனடி சேர்ந்தார்.

சைவ சித்தாந்த மாநாடு

சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு (சபை பற்றிய துண்டுப்பிரசுரத்தில் 1992 என்ற ஆண்டு இறுதியில் வருகிறது. பிரசுரம் வெளியான ஆண்டு தெரியவில்லை) முன்னால் கூலவணிகர் கோவிந்தராஜன் என்பவரது பெருமுயற்சியால் பெரும் பொருள் செலவில் சைவ சித்தாந்த மாநாடு நடைபெற்றது. இரண்டு நாட்களும் மறைமலை அடிகளார் தலைமையில் சைவ அறிஞர்கள் பலர் பங்குபெற்றனர்.

இருபதாம் நூற்றாண்டில் ஒரு வீரப்பர் சபைக்குக் காவலராக இருந்தார். அவரே நீதித்துறையில் எழுத்தராக இருந்த வீரப்பப்பிள்ளை. இவர் சிறந்த கவிஞர். சைவ சித்தாந்தத்தில் புலமை பெற்றவர். சபையின் செயலராகப் பொறுப்பேற்று தவத்திரு குன்றக்குடி அடிகளார், திருமுருக கிருபானந்த வாரியார், ச. தண்டபாணி தேசிகர், த. ச. மீனாட்சி சுந்தரனார், குடந்தை ப. சுந்தரேசனார் ஆகியோரைச் சொற்பெருக்காற்றச் செய்தார்.

ஞாயிறுதோறும் மருத்துவமணி நம்பி, புலவர் நவநீதகிருஷ்ணன் ஆகியோர் புராணங்கள் பற்றிப் பேசி வந்தனர். தருமலிங்கம் செட்டியார் திருமுறை முற்றோதல் நடத்தி வந்தார்.

தற்போது நால்வர் குருபூஜை மட்டும் நடத்துகின்றனர். ஒரு பகுதி கட்டடம் முற்றிலும் சேதமாகி விட்டது. பழைய படங்கள் ஏதும் இப்பொழுது இல்லை. முன்பகுதியை மட்டும் சீர் செய்து சபையை நடத்தி வருகின்றார்கள்.

மிகத் தொன்மை வாய்ந்ததும், நிலம் கட்டடம் ஆகிய வசதிகள் உள்ளதுமான இச்சபையை மீண்டும் பழைய நிலைக்கு கொண்டு வருவது சைவர்களின் கடமையாகும்.

(தற்போதைய தலைவர் - தியாகி எஸ். பிச்சைமணிபிள்ளை; செயலர் - க. குணசீலன்; பொருளர் - சிவ. நமச்சிவாயம்.)

(துணைநூல் - ''நாகை வெளிப் பாளையம் சைவசித்தாந்த சபையின் வரலாறு'' - இரா. ஆதிகேசவனார்)

சரபோஜிமன்னர் மீனவத் தலைவருக்கு சிவத்தலங்கள் கொடுத்தல்

இராமநாதபுரம் மன்னர் நாகைக்கு வந்தமையால் சைவத்துக்கு ஒரு கட்டடம் கிடைத்தது. தஞ்சையரசர் சரபோஜி மன்னர் நாகை வந்தமையால் நாகை மீனவப்பெருமக்களுக்கு சிவத்தலங்கள் இனாமாக வழங்கப்பட்டன.

சரபோஜி மன்னர் தன் அண்ணன் வயிற்றுவலி நீங்குவதற்கு நாகூரில் உள்ள சில்லடி தர்காவுக்கு தன் அண்ணனுடன் வருகை தந்தார். (தற்போதைய நாகூர் தர்கா) அண்ணனைத் தர்காவில் தங்கவைத்து தெற்கு நோக்கி நுளைப்பாடி என்ற கிராமத்திற்கு வந்தார். (நுளைப்பாடி தற்போது நம்பியார் நகர் என்று உள்ளது). வந்தவர் வெயில் புழுக்கத்தால் கஷ்டப்பட மன்னரிடம் அந்த ஊரில் உள்ள சிவசிதம்பர நல்லதம்பி (நம்பியார்) என்னவேண்டும் என்று கேட்டார். மன்னர் ''காற்று வேண்டும்'' என்று கேட்க, உடன் ''நான் கொண்டு வருகிறேன்'' என்று சொல்லி கட்டுமரத்தில் கடலில் சென்று சிறிது நேரத்தில் குளிர்ந்த காற்றுடன் கரைக்கு வந்தார். மன்னர் இந்த நிகழ்ச்சியில் மகிழ்ச்சி அடைந்து சிவசிதம்பரம் நல்ல தம்பிக்கு நம்பியார் (அரசர்) என்ற பட்டமும் கொடுத்து, நாகையில் உள்ள சிவத்தலங்களை எல்லாம் நம்பியார் கட்டுப்பாட்டில் கொடுத்து, அக்கால கட்டத்தில் சென்னைக் கடற்கரையி

லிருந்து குமரிமுனை கடற்கரை வரை இருந்த 63 மீனவர் குப்பங்களையும் நம்பியாருக்குக் கொடுத்து அவர் தலைமையில் செயல்பட வைத்தார். அதற்கு ஆதாரமாக இன்றும் மீனவர் கிராமங்களில் மங்கல நிகழ்ச்சியில் முதன் முதலாக நம்பியார் தாம்பூலம் கொடுத்து விட்டுத்தான் மற்றவர் களுக்குக் கொடுத்து வருகிறார்கள். நம்பியார் கிராமம் மற்ற கிராமங் களுக்குத் தலைமையாக விளங்கி வருகிறது. நுளைப்பாடி என்றழைக்கப் பட்ட நம்பியார் குப்பத்தில்தான் 63 மீனவ குப்பங்களுக்கும் தலைவர் (அரசர்) இருந்தார். இங்கு நம்பியாகிய அரசர் வாழ்ந்ததனால் இது நம்பியார் நகர் என்று பெயர் பெற்று மீனவ குப்பங்களுக்குத் தலைமை கிராமமாக விளங்குகிறது. சரபோஜி மன்னர் மேலும் முன் சொன்ன நம்பியாருக்கு கடலில் மீன் பிடிக்கத் தனிப்பகுதியை ஒதுக்கி செப்போடை (செப்பேடு என்பதனை இப்படி குறிக்கின்றார் களா?) கொடுத்தார். நம்பியாருடைய வாரிசு விநாயகமூர்த்தியும் அவர் தங்கையும் தற்போது சென்னையில் வசித்து வருகிறார்கள். தற்போது நுளைப்பாடி நம்பியார் நகர் என்றே அழைக்கப்படுகிறது.

அதிபத்த நாயனார் விழா

பெரியபுராண நாயன்மாருள் ஒருவ ரான அதிபத்தர் இறையருள் பெற்ற வுடன் அவரது உடலுக்கு இறுதிக் காரியங்கள் செய்துவிட்டு ஊரில் உள்ள புதிய ஒளி அம்மன் கோயிலுக்கு அருகில் நினைவு மண்டபம் கட்டி நம்பியார் (இம்மரபில் வந்த முன்னோ ராக இருக்கவேண்டும், சரபோஜி மன்னர் காலம் அண்மைக் காலம்; அதிபத்தர் காலம் சேக்கிழார் பெருமானுக்கு முற்பட்டது). விழாவும் நடத்தி வந்தார். பின் நம்பியாரும் மறைந்து விட்டார். நிகழ்ச்சியும் நடைபெறவில்லை. பல ஆண்டுகள் கடந்த பின் கும்பகோணம் தாராசுரத்தில் உள்ள கல்வெட்டு மூலம் தெரிந்து கொண்டு நம்பியார் நகர் மக்கள் 1999-இல் தொடங்கி அதிபத்த நாயனார் விழாவை ஒவ்வோர் ஆண்டும் ஆவணி மாதம் ஆயில்ய நட்சத்திரத்தில் மிகச் சிறப்பாகத் தொடர்ந்து நடத்தி வருகிறார்கள்.

நீலாயதாட்சியம்மன் கோயிலில் அதிபத்த நாயனாரின் வாழ்க்கை வரலாற்றைச் சித்திரித்து நம்பியார் நகர் மீனவர்கள் தனி மண்டபம் கட்டியிருக் கின்றார்கள். நம்பியார் நிர்வாகத்தில் இருந்ததனால் கோயில் விழாவில் இன்றும் முதல் பரிவட்டம் நம்பியார் நகர் பஞ்சாயத்தார்களுக்குக் கட்டி வருகிறார்கள். மேலும் நம்பியார் நகரில் உள்ளவர்கள் இறந்தால் கோயில் வழியாகத்தான் ஊர்வலம் செல்லும். அப்போது கோயில் மூடப்பட்டு இன்றளவும் இரங்கல் தெரிவித்து வருகிறார்கள்.

1999 முதல் இன்று வரை அதி பத்தர் விழாவை நம்பியார் நகர் கிராமத்தின் சார்பாக நடத்தி வருகிறார்கள். அதிபத்தர் நினைவு மண்டபத்தைப் புதுப்பிக்க தமிழக அறநிலையத்துறை ஐந்து லட்ச ரூபாய் வழங்கியுள்ளது. இத்தகவல்களுக் கான சான்று நினைவு மண்டபம் நம்பியார் நகர் புதிய ஒளி மாரியம்மன் கோயிலுக்கு அருகில் தெற்கு பக்கத்தில் உள்ளது. (துணை : நம்பியார் நகர் பஞ்சாயத்தார் முன்னிலையில் எஸ். சித்திரவேலு கூறியது)

சேக்கிழார் மன்றம்

நம்பியார் நகர் அன்பர்களைத் தவிர நாகை சேக்கிழார் மன்றமும் மயிலாடு துறை உழவாரம் அமைப்பும் இணைந்து அதிபத்தர் விழாவினை 27 ஆண்டுகளாக காயாரோகணர் கோயிலில் நடத்தி வருகின்றனர். அதிபத்தர் விழா தவிர திருவெம்பாவை விழாவை முப்பது

நாட்களும் நாகநாதர் கோயிலில் 25 ஆண்டுகளாக இம்மன்றம் நடத்தி வருகின்றது.

(தலைவர் - டாக்டர் பி.என். குப்பு சாமி; செயலர் - புலவர் இரா. அரங்க ராமானுஜம்.)

இது தவிர ஜோதி ராமலிங்கத்தைத் தலைவராகக் கொண்ட முத்தமிழ் மன்றமும் இயங்கி வருகின்றது.

வாரவழிபாட்டு மன்றம் : சில ஆண்டுகளுக்கு முன் வரை ஆதிகேச வனார் (வயது 70 இருக்கும்) என்ற பெரியவர் வார வழிபாட்டு மன்றம் ஒன்று அமைத்து, வாரந்தோறும் நாகையில் உள்ள சிவ, திருமால் தலங்களில் மாறி மாறி முறையாக வழிபாடுகள் நடத்தி வந்தார். வெளிப் பாளையம் சைவ சித்தாந்த சபையின் வரலாற்றை ஆதிகேசவனார் எழுதா விட்டால் நாகை வரலாறு வெற்றிட மாகவே இருந்திருக்கும். அப்படி ஒரு முழுமையான வரலாறு நமக்குத் தந்துள்ளார். தற்பொழுது வயதாகிவிட்ட நிலையில் அவர் முழுமூச்சுடன் வார வழிபாடுகளில் கலந்து கொள்ள முடியவில்லை. எனவே வார வழிபாட்டு மன்றங்கள் முன்பு போல தீவிரமாக இயங்கவில்லை. தங்களால் இயன்ற அளவு பணியாற்றுகின்றனர்.

20. மஞ்சக் கொல்லை

''மஞ்சக் கொல்லை ஒரு காலத்தில் சிவராஜதானியாக இருந்தது'' என்பார் பேராசிரியர் திரு. கு. சுந்தரமூர்த்தி யவர்கள். நாகப்பட்டினத்திலிருந்து 5, 6 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கும் சிறு கிராமம் எப்படி சிவராஜதானியாக இருக்க முடியும் என்பது எங்களுக்கெல் லாம் பெருவியப்பு.

அந்தக் காலகட்டத்தில் மஞ்சக் கொல்லைக்கு வராத சைவப் பெரியார் களே இல்லை எனலாம். காரைக்குடி




ராமசாமி முதலியார்

சொக்கலிங்க ஐயா, கயப்பாக்கம் சதாசிவ செட்டியார், சாத்தூர் வழக்கறிஞர் சுப்பிரமணிய நயினார், சுப்பிரமணிய சிவா, பண்டிதை அசலாம்பிகையம்மாள், ம.ரா. குமரசாமிப்பிள்ளை, கந்தசாமி வர்மா, திருவையாறு சிதம்பர சுவாமி கள், திருபட்டினம் நாகலிங்க முதலியார், வண்ணக் களஞ்சியம் நாகலிங்க முதலியார், அ.மு. சரவண முதலியார், திருமுக கிருபானந்தவாரியார் ஆகியோர் மஞ்சக்கொல்லை திருஞானசம்பந்தம் சபைக்கு வந்திருக்கின்றனர்.

ஞானியார் சுவாமிகள் பலமுறை வந்திருக்கிறார்கள். 12.5.1938-இல் நடை பெற்ற வெள்ளிவிழாவிற்கு வருகை தந்தபோது சபையார் சிறந்த வரவேற்பு அளித்தனர்.

''ஆறுமுகச் செவ்வேள் கமலமென் மலர்க்கழலிணை மலர்ந்த திருத்தகு நெஞ்சமும் தெய்விகம் பழுத்த உருத்தகு வதனமும் ஒரு சிவலிங்கம் தவழ்ந் தொளிர் தேகமும் தாங்கிய பெரும! சிவநெறியாற்றிய சீர்சால் தவமும் செந்தமிழரசியின் முந்துறு தவமும் உருக்கொண்டென்ன உலகெலாம் போற்றப் பாதிரிப் புலியூர் ஞானியார் மடத்து மேதகு தலைமை மேவிய



திருநாவுக்கரசு முதலியார்

செம்மால்! ஸ்ரீலஸ்ரீ சிவஷண்முக மெய்ஞ்ஞான சிவா சாரிய சுவாமிகள்! வருக.''

ம.ரா. குமரசாமி பிள்ளையவர்களின் சொற்பொழிவினைப் பற்றி மஞ்சக் கொல்லை சம்பந்தமூர்த்தி முதலியார் 27.7.1984 -இல் இவ்வாறு தனது குறிப்புப் புத்தகத்தில் எழுதியுள்ளார். ''பலர் ஆயினும் ம.ரா. குமரசாமி பிள்ளைய வர்கள் தமது சொல்வன்மையால், அருள் மொழியால், கேளாரும் வேட்ப மொழியும் பெருநாவலர் திறத்தால் நம்மூரை மட்டுமல்ல, திருபட்டினம், வாழுமங்கலம், திருமருகல், காரைக் கால், நாகை, வெளிப்பாளையம் ஆகிய இடங்களிலும் கடல் மடை திறந்தாற் போல் 2 மணி நேரத்துக்குக் குறையாமல் பேச கடைசி உபந்நியாசமாக ஆயிரக் கணக்கானோர் இரவு 10 மணிக்கு மேலும் காத்திருந்து நிசப்தமாகக் கேட்டுப் பல குற்றங்களை விலக்கி நல்லொழுக்கத்தில் நின்று பலர் பாராட்டுமாறு வாழ்ந்து வந்தனர்.''

பொன் சண்முகனார் உண்மை விளக்கமும், ஈரோடு அ. ஞானசம்பந்த முதலியார் அவர்கள் திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார், திருவருட் பயனும் பாடம் சொன்னார்கள். தண்டபாணி தேசிகரவர்கள் வாரந் தோறும் திருக்குறள் பாடம் நடத்தி னார்கள். கோடை விடுமுறையில் 13 முதல் 15 நாட்கள் சாத்திர பாடம் நடத்தினார்கள். க. வச்சிரவேல் முதலியார் ''சித்தியார் - சுபக்கம்'' பாடம் சொன்னார். முதல் இரண்டு ஆண்டுகள் வெளியூர்களிலிருந்தும் (கன்னியாகுமரி, காஞ்சி, குடந்தை, புன்செய் புளியம் பட்டி) சுமார் 50 பேருக்கு மேல் பாடம் கேட்டனர். இதுபோல ஏழு ஆண்டுகள் நடந்தன.

இத்தனைச் சிறப்புகளைக் கொண்ட திருஞானசம்பந்த சபையை மஞ்சக் கொல்லை க.சொக்கலிங்க முதலியார் அவர்கள் 1911-இல் மஞ்சக் கொல்லை யில் தோற்றுவித்தார். தலைவர், செயலர் பதவி ஏற்கவில்லை. திருவாரூரிலிருந்து மஞ்சக்கொல்லை வந்து தங்கி நாகை தேசிய உயர்நிலைப்பள்ளியில் பணி யாற்றியவரும், சீடர்களுக்குச் சிவ தீக்கை செய்து கொண்டும் இருந்த மு. சாமிநாத தேசிகர் அவர்களே தலைவர். நாகை ரிப்பன் பிராஞ்ச் பிரஸ்ஸில் பணியாற்றிக் கொண்டிருந்த ப.லெ. வெங்கட்டராம சாஸ்திரியார் செயலர்.

1915களில் சொக்கலிங்க முதலியார் அவர்களே சிறுவர்களைச் சேர்த்துக் கொண்டு தேவார நாமாவளிகளைப் பாடிக் கொண்டு வீதிவலம் வருவார்கள். மார்கழி மாதம் திருப்பள்ளி எழுச்சி தரிசனமும் உண்டு. சபையின் முதல் முப்பது ஆண்டுக்காலப் பணியினை சம்பந்தமூர்த்தி முதலியார் தனது குறிப்பு புத்தகத்தில் எழுதியுள்ளார். ''ஆலய வழிபாடு, திருக்கோயில் திருப்பணி கும்பாபிஷேகம், பிள்ளைகளுக்குச் சமயாசாரியர் பெயர் சூட்டல், சபையின் மாதாந்தரக் கூட்டம், ஆண்டுவிழா சிறப்பாக நடத்துதல் முதலியன. நால்வர்



சம்பந்தமூர்த்தி முதலியார்

குருபூஜை, அன்னம்பாலிப்பு முதலியன நியமமாக நடந்தன. ''காசி, இராமேஸ்வரம் வரை சுவாமி தரிசனம், தீர்த்த ஸ்நானம் முதலியன மேற்கொண்டனர்''.

இந்நற்செயல்களில் பெரியவர்கள் தவிர இளையவர்களும் சிறப்பாக ஈடுபட்டனர். அவர்களுள் குறிப்பிடத் தக்கவர்கள் தி. அருணாசல முதலியார் அவர்களும், சபா. ரெ. விநாயகமூர்த்தி முதலியார் அவர்களுமே ஆவார்கள். மகளிரும் சிறப்பானதொரு குறிப்பிடத் தக்க செயல் செய்தார்கள். தங்கள் சிறுவாட்டுத் தொகையைக் கொண்டு வெள்ளி ரிஷப வாகனம் செய்து தந்துள்ளார்கள். சிவ. இரத்தினம்பிள்ளை என்பவர், வெள்ளி வாகனமிருக்கும் படிச்சட்டத்தைத் தந்து உதவினார். இவரது தந்தையார் சிவராமபிள்ளையவர்கள் காசி யாத்திரை செல்லும்போது அவரது நண்பர்கள் ''நீர் நல்லவரானால் காசியிலேயே இறந்துவிடவேண்டும்'' என்று கூறியதுபோல் காசியிலேயே இறைவன் திருவடி நீழல் அடைந்தார்.

1940க்குப் பின் சமயாசாரியார்களோடு சந்தானாசாரியார்கள் பெயர்களைக் குழந்தைகளுக்கு இட்டு வழங்குவது, சந்தானாசாரியார்கள் அவதாரத் தல யாத்திரை, திருப்படிமப் பிரதிட்டைக்கு உதவி போன்ற செயல்களும் வழக்கமானவற்றோடு கூடின. மீண்டும் திருக்குட முழுக்கு, திருக்குளம் தூர் எடுத்தல், கரை கட்டுதல் ஆகிய பணிகள் செய்யப் பட்டன.

*1980*களில் திருமுறை முற்றோதல் தொடங்கப்பட்டது. *1984*-இல் (குறிப்பு தேதி *22.7.1984*) *2*-ஆம் திருமுறை *100*-ஆம் பதிகம் முடிந்துள்ளது.

மஞ்சக் கொல்லை சிறு கிராம மாயினும் இற்றை நாளில் பல நகரங்களில் தனித்தனியாகச் செய்யப் பட்டு வரும் அரும் பெரும் பணிகளையெல்லாம் *90* ஆண்டுகளுக்கு முன்பே சபை செய்து வந்திருக்கிறது.

திருஞானசம்பந்த சபையில் உரையாற்ற வருகின்ற பெரியவர்களை யெல்லாம் ஏற்றுப் போற்றியவர்கள் மஞ்சக்கொல்லை இராமசாமி முதலியார் அவர்கள். ''ஞானியார் சுவாமிகளே எங்கள் வீட்டில்தான் தங்கியிருந்தார்கள்'' என அவர்கள் பெயரானார் சிதம்பரநாத முதலியார் அவர்கள் பெருமை பொங்கக் கூறினார்கள். அறிஞர்கள் மட்டுமல்ல. மஞ்சக்கொல்லைக்கு யார் வந்தாலும் இராமசாமி முதலியார் அவர்களே விருந்து படைப்பார்கள். வாலாஜாபாத் இந்துமத பாடசலை மாணவர்கள் மஞ்சக்கொல்லை சுற்றுப்பயணம் வந்த பொழுது பெரு விருந்து படைத்தார்கள். ''தங்கள் வீடு யாவரும் எப்பொழுதும் வந்து தங்கி உண்டு மகிழுமாறு அடையா நெடுங்கதவுடையது'' என்று வாழ்த்து மடல் படித்தனர் பாடசாலையார். உணவுப் பங்கீடு கடுமையாக இருந்த காலத்தில் பாடசாலை மாணவர்கள் 65 குழந்தைகளும் பஞ்சம் என்பதே என்னவென்று தெரியாமல் இருக்க உதவினார். மாணவர் இல்லத்துக்கு நன்கொடையும் வழங்கினார்.

எந்த ஒரு மங்கல நிகழ்ச்சியாயினும் சைவ நூல் ஒன்று வெளியிட்டு விடு வார்கள். இராமசாமி முதலியார் அவர்கள் மணிவிழாவின்போது திருமிகு க. வச்சிரவேல் முதலியார் அவர்கள் (''கடவுள் உண்மை'') திருமிகு சி. அருணைவடிவேல் முதலியார் அவர்கள் (''ஆன்ம லக்கணம்''), திருமிகு. ஆ. ஈசுரமூர்த்திப்பிள்ளை (''ஆணவ மலம்'') ஸ்ரீலஸ்ரீ ஈசான சிவாசாரியர் (''சாதனவியல்''), ஸ்ரீலஸ்ரீ ஈசான சிவாசாரியர் (''சாதனவியல்'') திரு ஔவை சு. துரைசாமிபிள்ளை (''பயனியல்'') ஆகிய தலைப்புகளில் உரையாற்றினார்கள். அக்கட்டுரைகளை அப்படியே அச்சிட்டு ''சித்தாந்த விளக்கக் கட்டுரைகள்'' என நூலாகவும் வெளியிட்டார்கள். இந்நூலுக்கு ஸ்ரீலஸ்ரீ ஈசான சிவாசாரியர் அவர்கள் முன்னுரை வழங்கியுள்ளார்கள். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் சைவசித்தாந்தத் துறை தொடங்கிய பொழுது சாத்திரக் கருத்துகள் வசனநடையில் உள்ள புத்தகங்கள் இல்லை என்று இந்நூலின் 75 பிரதிகளைப் பெற்றுப் பாடம் நடத்தி னார்கள் என்றால் இந்நூலின் பெருமையை என்னென்பது? இன்னும் சொல்லப்போனால் சாத்திரக் கருத்துகள் உரைநடையில் வந்த முதல் நூல் இதுவே எனலாம்.

சிவ வழிபாடு, திருமுறைச் சிந்தனை, எளியோர்க்கு உதவுதல் ஆகிய பண்பு களைப் பெற்றிருந்த இராமசாமி முதலியார் அவர்களின் அறுபதாம் ஆண்டு நிறைவின்போது ஸ்ரீமத் ஞானியார் மடாலயத்து சுவாமிகள் ஓதியருளின பாடல் வருமாறு.

''குன்றமர் குமரன் தாதையின் குரைகழல்
என்றும் துதிக்கும் இலங்கிய தவத்தினன்
வீரசை வத்தின் விதிமுறை ஒழுகுவோன்
இட்டலிங்கத்தின் இயல்பறி போற்றினன்
இரப்போர்க் கென்றும் ஈயுங் குணத்தோன்''

சமுதாயப் பணியாக முதலியார் தொடங்கிய பள்ளி இன்று உயர்நிலைப் பள்ளியாகத் திகழ்கிறது.

1884-இல் பிறந்த இராமசாமி முதலியார் அவர்கள் 1950இல் சிவப்பேறு பெற்றார்கள்.

''மைந்தர் என்றால் இவரன்றோ
மைந்தரென மாநிலத்தார் மகிழ்ந்து பேசத்
தந்தையார் அடிச்சுவடு தளராதே
சென்றவர்தம் தருமம் காத்துச்
சந்தமும் நிலைபெற ஓர் தளியெடுத்த
சால்புடையார் தமக்கே மூத்துத்
தந்தையெனத் தம்பெரும் தெய்வமெனத்
துணைவனும் தழுவ நிற்போய்''

என குமரன் கல்வி நிலைய ஆசிரியர்கள் சார்பில் வெளிவை வீரப்பப்பிள்ளை வாசித்தளித்த மணிவிழா வாழ்த்து மடல் நூற்றுக்கு நூறு உண்மை. தந்தையார் சென்ற விடமெல்லாம் சென்று - சைவக் கூட்டங்களுக்கு - செய்வனவற்றுக்கு எல்லாம் துணை நின்று - சமயப் பணி, சமுதாயப் பணி - உயர்ந்து நின்றவர். திருமிகு இராமசாமி முதலியார் அவர் களின் தவப்புதல்வர் திருமிகு சம்பந்த மூர்த்தி முதலியார் அவர்கள். இந்தச் செய்தியினைத் திருத் தொண்டர் உதவி நடுநிலைப்பள்ளியினர் தங்கள் மணி விழா வாழ்த்தாக முன் வைக்கின்றனர்.

''மேன்மைசேர் சைவமும் தமிழும் இந்த
மேதினிமேல் விளங்கவழி கண்டீரன்றோ?
நான் மறையார் உறைமஞ்சட்கொல்லை
தன்னில் நற்சைவ நெறி பேணி வளர்த்தீர்
எங்கள்
தேன் அமிழ்தத் தமிழ்பரப்பும் விழாக்கள்
ஆற்றும் திருத்தொண்டில் பங்கினையும்
பற்றி நாங்கள்
வான்புகழும் அறிஞருரை கேட்கும்
வாய்ப்பும் வகுத்தளித்த உம் செயலை
வரையப்போமோ?''

மஞ்சக்கொல்லை சைவ விழாக் களுக்கு எல்லாம் தந்தையாரும்

தனயனாரும் பெருமளவில் உதவினார்கள் என்பதற்கு இப்பாடல் மட்டுமே சான்றாக உள்ளது. திருஞானசம்பந்த சபையின் அழைப்புகளிலும் சரி; சம்பந்தமூர்த்தி முதலியார் அவர்கள் எழுதிய குறிப்புப் புத்தகத்திலும் சரி; இவர்கள் இருவரின் பங்களிப்பு பற்றி ஏதும் காணக் கிடைக்கவில்லை. அப்படி ஓர் அவையடக்கம்!. *1984* வரை சபை நிகழ்ச்சிகள் முற்றோதல், சமய வகுப்பு என நடந்ததாகத் தெரிகிறது.

தந்தையார், தாயார், சம்பந்தமூர்த்தி முதலியார் - அனைவருமே தீக்கை பெற்றவர்கள். சிவனடியார்கள் வருகை தந்தால் தவறாமல் அன்னம்பாலிப்பு நடக்கும்.

பன்னிரு திருமுறைகள், பதினான்கு சாத்திரங்களும் கற்றவர். ஒவ்வோர் இல்ல நிகழ்ச்சியிலும் ஒரு நூல் வெளியிட்டு விடுவார்கள். இதுவரை *100* தொகுப்பு நூல்கள் வெளியிட்டதாகச் சொன்னார்கள்.

''சென்னையுள்ள சிவனடியார் திருக்கூட்டத்தார் இளவழகர்
என்னும் சான்றோர் தலைமையினில் இருநூற்றுக்கும் மேற்பட்டோர்
முன்னம் தலயாத்திரைக்கு வர முன் வந்து இவர்தாம் செய்த பஃறொண்டு
இன்னும் எம்மால் மறப்பரிய! இவர்தம் பெருஞ்சீர்க்கு எல்லையுண்டோ''

என்று பாடிப் பரவுகிறார். ந.ரா. முருகவேள். சைவ நெறி வழிபாட்டு முறைகள் தவறாது இருக்க வேண்டும் என்பதில் மிகுந்த அக்கறையுடன் செயல் பட்டவர்கள். ஒருமுறை நாகை அ/மி காயாரோகண சுவாமி திருக்கோயில் திருவிழாவில் தேவாரத்திற்கு ஆசீர் வாதம் சொல்லப்பட்டபோது அதனைக் கண்டித்துத் திருத்தினார். சிவபூசை செய்தல்; திருமுறை ஓதுதல்; சாத்திரம் கற்றால்; சிவனடியார் ஓம்புதல்.

செம்மேனி; தூய கதராடை; நெற்றியில் திருநீறு; கழுத்தில் உருத்திராக்கம்.

இவற்றின் முழுவடிவம் சம்பந்த மூர்த்தி முதலியார் அவர்கள்!

மஞ்சக்கொல்லை சிவராஜதானியின் இளவரசர்!

(தோற்றம் - 1909; மறைவு - 1987)

இராமசாமி முதலியார் அவர்களுக்கு மக்கட்செல்வம் மூவர் ஆவர். *1)* சம்பந்தமூர்த்தி *2)* திருநாவுக்கரசு *3)* மாணிக்கம் என மூவர் பெருமக்களின் பெயர் சூட்டினார். நான்காம் மகன் பிறக்காமையினால் பெயரனாருக்கு சுந்தரமூர்த்தி என்று பெயர் சூட்டினார்.

இரண்டாவது குமாரரான திருநாவுக்கரசு முதலியார் அவர்கள் குடந்தை வீர சைவத் திரு மடத்தோடு தொடர்பு கொண்டு பல அரிய சிவப்பணிகள் ஆற்றியுள்ளார். அகத்தியர் தேவாரத் திரட்டைச் சொல்லிய பாட்டின் பொருளுணர முனைவர் திரு. கு. சுந்தரமூர்த்தி அவர்களைக் கொண்டு ஐந்தாண்டுகள் திங்களுக்கு ஒருமுறையாகத் தம் இல்லத்திலேயே வைத்துப் பாடமாக நடத்தி மகிழ்ந்தார் *(1920 - 2005)*

மஞ்சக் கொல்லையில் சம்பந்த மூர்த்தி முதலியார் அவர்களுடன் இருந்தும் அவர்களுக்குப் பின்பும் சிவநெறியைப் போற்றி வருபவர்கள் திரு. அ. முத்துக் குமாரசாமி முதலியார், திரு. சண்முக சுந்தர முதலியார் ஆகியோர்களாவர்.

முத்துக்குமாரசாமி முதலியார் அவர்கள் இளமை முதலே சைவ நல் ஒழுக்கமும், சிவவழிபாடாற்றி வரும் அருட்செல்வமும் உடையவர்கள். மஞ்சக் கொல்லையில் வார வழிபாட்டுக் கழகம் ஒன்றை நிறுவி அதன் வழித் தம்மொடு பிறரையும் ஆற்றுப்படுத்திச் சிவச் செல்வம் தழைய வாழ்ந்து வருபவர்கள்

ஆவர். திருமுறைகளை நாளும் ஓதி இம்மை, மறுமை, அம்மை ஆகிய மும்மை நாள்களும் பெறுதற்கு ஏதுவாகப் பல அரிய திருமுறைத் தொகுப்பு நூல்களை வழங்கி வரும் அருட்செல்வர் ஆவர்.

மஞ்சக்கொல்லையில் பூத்து அமெரிக்காவில் மணம் வீசும் நறுமலர் திரு. சண்முக சுந்தரமுதலியார் அவர்கள். மஞ்சக்கொல்லை அ/மி வெற்றி வேலாயுத சுவாமித் திருக்கோயில் குட நீராட்டிற்கென ஓர் இலட்ச ரூபாய் வழங்கிய பெருந்தகையாளர். தம் மணி விழா மலராக ''உண்மை விளக்கம்'' என்ற சாத்திர நூலும் (முனைவர் திரு. கு. சுந்தரமூர்த்தி உரை) எண்பதாம் ஆண்டு நிறைவு விழா மலராக ''ஆறுமுகன் நூல்களும் ஆன்மிக அனுபவங்களும்'' என்ற நூலும். தமது மகனார் மணி விழா மலராக ''அகத்தியர் தேவாரத் திரட்டு'' (முனைவர் திரு. கு. சுந்தரமூர்த்தி உரை) என்ற நூலும் வெளியிட்டுள்ளார்கள்.

எங்கேனும் யாதாகிப் பணிபுரியினும் மஞ்சக் கொல்லையார் மனம் மகேசன் பணியே!

இவர்கள் அல்லாமல் இவர்களது உறவினர்களான திரு. ஆர்.எம்.பி. ராஜ கோபால் முதலியார், அவர் தம் புதல்வர் திருவாரூர் திரு. சிங்காரவேல் முதலியார் இருவரும் சிவனடியார்கள் தலப்பயணம் வரும்பொழுது பல நாட்களுக்குத் தங்குமிடம், உணவு ஏற்பாடு செய்தல், மகா சிவராத்திரியில் மன்னை சிவ னடியார் திருக்கூட்டத்திற்கு ஐந்து காலபூசை ஏற்பாடு செய்தல், சைவ சமய நூல்கள் பெரும்பொருள் செலவில் இலவசமாக வெளியிடுதல் போன்ற பெருந்தொண்டுகள் செய்து வரு கின்றனர்.

மஞ்சக் கொல்லையின் தொடர்புப் பகுதி அந்தணப் பேட்டையில் வாழ்ந்து வந்த திரு. ப.வ. திருநாவுக்கரசு செட்டியார். அவர் தம் இளவல் ப.வ.பழனியாண்டி செட்டியார் ஆகிய இருவரும் தங்களது விநாயகர் கோயிலில் வெள்ளிக்கிழமை தோறும் வழிபாடு நடத்துதல், மார்கழி மாதத்தில் தெருச்சிறார்களை அழைத்துக் கொண்டு தனுர்மாத பஜனை வழிபாடு செய்தல், அண்ணாமலையார் கோயிலில் நித்ய பூசனை, விநாயகர் கோயிலில் நித்ய பூசனை ஆகியன செய்து வந்தனர். வைகாசிப் பெருவிழாவில் தியாகேசப் பெருமானைத் தூக்கி ஆராதனை செய்யும் உரிமை பெற்றவர்கள். முதல் பெரும்புயலில் நாகை செல்ல முடியாத புகைவண்டிப் பயணிகளுக்கு மூன்று நாட்கள் அன்னம்பாலிப்பு செய்தார்கள். மூத்தவர் ப.வ.திருநாவுக்கரசு செட்டி யாரின் புதல்வர் ப.வ.தி. தருமலிங்கம் செட்டியார் (வயது 91), அவர்களின் துணைவியார் திருமதி வேதநாயகி அம்மையார் ஆகிய இருவரும் மஞ்சக் கொல்லையாருடன் சேர்ந்தும், தனித்தும் சிவப்பணி, சிவனடியார் தொண்டு ஆகியன செய்து வருகின்றனர். இன்றும் திருமுறை வழி வாழ்ந்து வருகின்றனர். இவரது இளவல் திரு. ப.வ.தி. சக்கரவர்த்தி செட்டியார் அவர்கள் அய்யூர் என்னும் ஊரில் (திருத்துறைப்பூண்டி தாலுகா) மார்கழி மாத பூசனை செய்து வைணவர்களையும் சிவநெறியில் திகழச் செய்தார்.

ஓதுவாமூர்த்திகளையும், சிவனடியார் களையும் ஏற்றுப் போற்றியவர். இவர் தம் புதல்வராகிய திரு. ச. திருநாவுக்கரசு அவர்கள் (தஞ்சாவூர் பகுதியில் காண்க) சைவ சொற்பொழிவுகள், தேவார இன்னிசை, திருமுறை நெறியில் வாழ்வியல் சடங்குகள், திருவாசக முற்றோதல், உழவாரப் பணிசெய்து வருகின்றார். கரூர், நெல்லை, சங்கரன் கோயில், திருச்சி பகுதிகளில் விரிவுரை செய்து வருகிறார்.

21. கீழ்வேளூர்

தமிழ்த்தாத்தா உ.வே.சா. அவர்கள் ''என் சரித்திரத்தில்'' எழுதிய கீழ்வேளூர் சொக்கலிங்க ஓதுவாரைப் பற்றிப் படித்ததிலிருந்து அந்த ஊருக்குச் செல்ல ஆர்வம். மிகுந்த ஆவலுடன் சென்றேன். யாருக்கும் சொக்கலிங்க ஓதுவார் பற்றி தெரியவில்லை. எண்பது வயதான ஓதுவாமூர்த்திகள் சோமசுந்தர தேசிகரைச் சந்தித்தேன். உற்சாகமாகப் பல பாடல்கள் பாடினார். ஆனால் தகவல்கள் ஏதும் சொல்ல முடியவில்லை.

அஞ்சுவட்டத்தம்மன் வார வழிபாட்டு மன்ற அமைப்பாளர் ஜெயராமனைப் பார்க்கச் சென்றோம். வீட்டு வாசலில் தமிழ்த்தாய் சிலை ஒன்று வரவேற்றது. சிலைக்குப் பின்னே வட்ட வடிவில் திருக்குறள், சங்க இலக்கியம், சிலப்பதிகாரம் என்று பகுதி பகுதியாகப் பிரிக்கப்பட்டு சுழல் வடிவில் இருந்தது. ஒவ்வொருவருக்கு ஒவ்வோர் ஆர்வம். ஆர்வம் இல்லா வாழ்க்கை அவல வாழ்க்கை.

அஞ்சுவட்டத்தம்மன் வார வழிபாட்டு மன்றம் ஞாயிறுதோறும் மாலை வழிபாடு, தேவார திருமுறை பாராயணம், நாயன்மார் வழிபாடு, சொற்பொழிவு உழவாரப்பணி, ஆண்டிற்கு ஒருமுறை பக்தி நாடகங்கள் எனப் பணியாற்றுகிறது.

கீழ்வேளூருக்கு அருகில் உள்ள வடக்கு ஆலத்தூரைச் சேர்ந்த ப. சின்னசாமி *(1932 - 2004)* பெரியபுராணச் சொற்பொழிவாளர்; பட்டிமன்றப் பேச்சாளர்; பல தமிழ்த் திருமணங்கள் செய்து வைத்தவர். ஆவரணதரி பார்த்தசாரதி *(1937 - 2005)* சிக்கல் நவநீத கிருஷ்ணன் *(1921 - 2005)* ஆகியோரும் சமய விரிவுரை ஆற்றி வந்தனர்.

வலிவலம்

வலிவலம்பாலசுப்ரமணியன் அவர்களும் தேவூர் வந்திருந்தார். அவர் செயலராகப் பணியாற்றும் திருநாவுக்கரசு வழிபாட்டு மன்றம் வழிபாடு, உழவாரப் பணி, ஆறு ஆண்டுகளாகத் திருமுறை முற்றோதல் எனப் பணியாற்றுகின்றது. *(தலைவர் - முத்து. செல்வராசு; செயலர் : இரா. பாலசுப்பிரமணியன்)*

திருக்குவளை

திருக்குவளை ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் வழிபாட்டு மன்றத்தினர் ஆண்டுக்கு ஒரு சுற்று பன்னிரு திருமுறை முற்றோதல் செய்து முடித்துவிடுகின்றனர். உழவாரப் பணி, குண்டையூர் கோயில் திருப்பணி, நால்வர் வழிபாடு எனப் பணியாற்றுகின்றனர். திருக்குவளை முற்றோதல் வெகு ஜன இயக்கம் ஆகும். ஒரு நாளைக்குப் பாயசம், அவல் என்று அவரவர்கள் கொண்டு வருவார்கள்.

(செயலர் : ஆர். சண்முகசுந்தரம், பொருளர் - ஆர். பார்த்தசாரதி)

22. தேவூர்

கொறுக்கை சுந்தரம்பிள்ளை

''சம்பந்தனுக்கு என்னடா தெரியும்? பாலைக்குடிச்சான்; பாடினான்'' என்று ஓங்கி ஒலித்தார் அந்த பெரியவர். தேவூர் க. கோவிந்தராசனார்க்கு ஒன்றும் புரியவில்லை'' என்ன ஒரு கொள்கைப் பிடிப்பு இருந்தால் இவ்வாறு சொல்ல துணிச்சல் வரும்?'' என்று நினைத்துக் கொண்டார். இதனை எழுதக் கை கூசுகின்றது. பெரியவருக்கு இறைவியின் பேரிலும் அந்த அளவுக்குச் சற்றும் குறையாத அளவு ஞானசம்பந்தப் பெருமான் பாலும் அளவு கடந்த பக்தி இருந்தமையால் தான் அவ்வாறு பேசமுடிந்தது. மறுமுறை, ''திருஅண்டப்

பகுதியில் 'கொட்கப் பெயர்தல்' என்று வருகிறதே! என்ன தெரியுமா?'' என்று கேட்டார். தேவூரார் விழித்தார். ''இப்பொழுது இடவலமாகச் சுற்றுகின்ற உலகம் ஊழிக்காலத்தில் அழிகிற பொழுது வல இடமாகச் சுற்றும். அதுதான் கொட்கப்பெயர்தல்'' என்றார். இப்படி ஒவ்வொரு முறையும் வரும் பொழுதும் ஏதாவது ஒரு செய்தி. தமிழ் இலக்கியத்தில் அப்படி ஓர் ஆளுமை அவருக்கு இருந்திருக்கிறது. அவர்தான் கொறுக்கை சுந்தரம் பிள்ளையவர்கள்.

சாலையில் நடந்து கொண்டிருக்கும் பொழுது சில பூக்களைப் பறித்து வாயால் ஊதிவிட்டு அந்தப் பூவின் பெயர், அதன் குணம், அப்பூவின் பெயர் எந்தெந்த இலக்கியத்தில் எத்தனை இடத்தில் வருகிறது என்று கூறுவார். சிவ புராணத்தில் வருகின்ற ''நேயத்தே நின்ற நிமலனடி போற்றி'' என்ற வரியில் ''நேயத்தே'' என்பதை விளக்கும் பொழுது கலிங்கத்துப் பரணியிலிருந்து விளக்கம் கூறி, ''இறைவன் அடியார் களுக்குத் துன்பம் வருகின்றபொழுது மிக அருகில் வந்து பாச உணர்வோடு அந்தத் துன்பத்தை நீக்குகின்ற மாட்சி மையே நேயம்'' என்றார். ''இண ரூழ்த்தும் நாறாமலர் அனையர்'' என்ற திருக் குறளில் வரும் மலர் கல்யாண முருக்க மலர் என்று பிறிதொரு முறை விளக்கினார்.

இப்படி தொட்ட தொட்ட இடமெல் லாம் இலக்கிய விளக்கம் சொல்பவர் கொறுக்கை சுந்தரம் பிள்ளை. தேவூ ராரின் பழக்கம் சிறிதளவேயாயினும் அவரிடம் பெற்ற தமிழ் இன்றும் இவருக்குத் துணை நிற்கிறது.

பிள்ளையவர்கள் தம் தந்தையாரிடம் சமய நூல்கள், திருக்கோவையார் விளக்கம் கேட்டறிந்தார். ''சித்தாந்தத் திலும் திருமறைகளிலும் ஆற்றல் பெற்றவர்'' என்று குன்றக்குடி அடிகளார் ''மண்ணும் மைந்தர்களும்'' என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்கள்.

கொறுக்கை சுந்தரம்பிள்ளை தருமை ஆதீனத்தில் சமய போதகராக இருந்தார்.

இவர்களின் முன்னோர்களில் ஒருவ ரான சோமசுந்தரம் பிள்ளை மதுரை திருஞானசம்பந்தர் திருமடத்தில் தலைமை சமயப் புலவராக விளங்கி னார்.

சித்தாந்தத்தில் பெரிய (authority) நிபுணர். ஒருமுறை சிவபுராணத்தில் ''நமச்சிவாய வாழ்க'' என்ற ஒரு வரிக்கு 7 மணி முதல் 11 மணி வரை விளக்கம் சொன்னார். இதுபோல நான்கு நாட்கள் நான்கு வரிகளுக்கு விளக்கம் சொன்னார். 1905-இல் (சுமார்) பிறந்த கொறுக்கை சுந்தரம் பிள்ளையவர்கள் 1985-இல் (சுமார்) இறைவனடி சேர்ந்தார்.

தேவூர் க. கோவிந்தராசனார் அவர்கள் இல்லத்திற்குச் சென்ற பொழுது அவர்கள் இந்த அரிய வரலாற்றினைக் கூறினார்கள். நான் சென்ற சமயம் வலிவலம், தேவூர் மன்றங்களை யெல்லாம் வரவழைத்திருந்தார்கள். தேவூரில் மன்றங்கள், தொண்டர்கள் பற்றியெல்லாம் ஒவ்வொருவராக மாறி மாறிச் சொல்லலானார்கள்.

தியாகி சுந்தரம்பிள்ளை

நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் தேவூரில் முதன்முதலாக வாரவழிபாட்டு மன்றத்தைத் தொடங்கியவர் விடுதலைப் போராட்ட வீரர் தியாகி சுந்தரம் பிள்ளை அவர்களே.

க. கோவிந்தராசனார்

அவர்களுக்குப்பின் தேவூராரும் மற்றவர்களும் சேர்ந்து இந்து சமய வழிபாட்டுப் பேரவையைத் தொடங் கினார்கள். வார வழிபாடு, சிறப்பு வழிபாடு, உழவாரப்பணி என்று அமைகிறது. தேவூரார் வெள்ளிதோறும் பெரியபுராணம் சொல்லி வருகிறார்.



தேவூரார் அந்தப் பகுதியில் உள்ள சுற்றுப்புற ஊர்களில் எல்லாம் வழிபாட்டு மன்றங்களை ஏற்படுத்தி நெறிப்படுத்தி உள்ளார். சாட்டியகுடி திருஞானசம்பந்தர் மன்றம் (1 ஆண்டு முற்றோதல், வார வழிபாடு), குளப்பாடு மணிவாசகர் வார வழிபாட்டு மன்றம், சித்தாம்பூர் அகிலாண்டடேசுவரி வார வழிபாட்டு மன்றம் (முற்றோதல்) திருநெல்லிக் காவல் திருநாவுக்கரசர் வழிபாட்டு மன்றம் (மாசி சங்கடகர சதுர்த்தி! என்று பல மன்றங்களைத் தேவூரார் நிறுவியுள்ளார்.

தேவூரார் வழிபாட்டு மன்றங்களின் மையம்! தேவூரார் என்று அன்போடு அழைக்கப்படும் க.கோவிந்தராஜு அவர்கள் 1.9.1936-இல் தேவூரில் கந்தசாமி குஞ்சம்மாளுக்குப் பிறந்தார்.

திருத்தொண்டர்

தேவூரில் 1905-இல் பிறந்த பக்கிரிசாமிபிள்ளை பூ கைங்கர்யம் செய்து வந்தார்.

23. திருவாரூர்

1950களில் கொறுக்கை சுந்தரம் பிள்ளையவர்கள் ''அநபாயன் ஆத்திக சங்கத்தை'' ஆரூரில் நிறுவி சமய வகுப்புகள் நடத்தி வந்தார்கள். ''பன்னிரு திருமுறைகளில் திருவாரூர்'' என்ற நூலையும் அச்சிட்டு வெளியிட்டார்கள்.

பன்னிரு திருமுறை மன்றம்

1978-இல் தொடங்கப்பட்ட பன்னிரு திருமுறை மன்றம் நாயன்மார் குரு பூஜையைச் செம்மையாகக் கொண்டாடுகின்றது. கேப்டன் எம். இராமசாமி முதலியார் பத்தாயிர ரூபாய் வழங்க, ஒவ்வொரு குருபூஜைக்கும் அன்பர்கள் ரூ.500/- வீதம் முதலீடு செய்துள்ளனர். குருபூஜை விழாக்களின் போது சொற்பொழிவுகளும் நடக்கின்றன. சமய நூல்களும் வெளியிடுகின்றனர். மன்றத்தின் செயலர் முத்துகாமாட்சி அவர்கள் தியாகேசப்பெருமாள் மீதுள்ள ஈர்ப்பாலும், உழவாரப்பணியில் கொண்ட ஆர்வத்தாலும் மதுரையை விட்டு நீங்கி திருவாரூரில் வந்து தங்கியுள்ளார். சைவசமயச் செய்திகளை இனிமையாகச் சொற்பொழிவுகளில் கூறுவார்.

(தலைவர் - ஆர்.கணேச முதலியார்; செயலர் - வி. முத்துகாமாட்சி)

நன்னெறிக் கழகம்

1985-இல் தொடங்கப்பட்ட நன்னெறிக் கழகம் வாரந்தோறும் வியாழக்கிழமையன்று வார வழிபாடு, நூல் வெளியீடு (3 நூல்கள்), பெரிய புராணச் சொற்பொழிவு நடத்தி வருகிறது. இதன் தலைவர் கேசவனார் (64, வயது) இதுவரை 1060 வார வழிபாட்டுக் கூட்டங்கள் நடத்தி உள்ளார். இவர் உழவார இயக்கத்தின் தண்டியடிகள் ஆயுள் தொண்டர் ஆவார்.

தினம் ஒரு பணிசெட்

1990-இல் பி.ஆர்.எம்.கே. சுரேஷ், கே. வேல்மயில், இன்பசேகரன், கருணா ஆகியோரால் தொடங்கிவைக்கப்பட்ட ''தியாகராஜ சுவாமிக்கு தினம் ஒரு பணிசெட் மாலை'' என்ற திட்டத்தின் கீழ் ஆண்டுமுழுதும் அன்பர்கள் உதவியுடன் தியாகராசர் தினமும் பணிசெட் அலங்காரத்துடன் காட்சியளிக்கிறார்.

1996-இல் திரு.வி. கந்தசாமிபிள்ளை அவர்களால் அருள்மிகு பிரகதீஸ்வரர்

ஆலயக் குடநீராட்டு விழா நடத்தப் பெற்றது. 1997 முதல் அவரது உதவியுடன் நவராத்திரி பத்து நாட்களும் அபிஷேகம், வழிபாடு, பஜனைப்பாடல்கள், கூட்டு வழிபாடு நடக்கின்றன. திருநெல்வேலி வி. கல்யாண சுந்தரம் அவர்கள் பாடல்கள் பாடி வழிபாடு செய்கிறார்.

சுந்தரமூர்த்திகள் அடியார் திருக்கூட்டம்

9-4-2001-இல் திருவாரூர் திருக்கோயில் குடநீராட்டு விழாவிற்குமுன் கோயில் பட்டி திருச்சிற்றம்பல வழிபாட்டு மன்றத்தினர் செய்த உழவாரப்பணி திருவாரூரில் பெரும் கிளர்ச்சியை உண்டு பண்ணிவிட்டது. அவர்கள் திருக் கோயிலைத் தூய்மை செய்ததும், சுற்று மதில் சுவர்கள் மற்றும் மண்டபங் களுக்கு சுண்ணாம்பும், வர்ணமும் அடித்ததும் திருவாரூர் பெருமக்களுக்கு பிரமிப்பூட்டின. திருநீறு சண்ணித்த மேனியராய் உருத்திராக்கம் அணிந்த கழுத்தினராய் தோற்றப்பொலிவுடன் இருந்ததும், ஐந்து நாட்களும் அயராது உழைத்ததும் பலரை அவர்கள் நெறியில் நின்று தொண்டு செய்யத் தூண்டியது.

இதன் விளைவாக 2003-இல் அடியார்கள் ஒன்றுகூடி திருத் தொண்டுகள் செய்யலாயினர். 2005 செப்டம்பரில் எம்பிராட்டி பரவையார் உடனுறை எம்பிரான் சுந்தரமூர்த்தி சுவாமிகள் சீர்போற்றும் அடியார் திருக்கூட்டம் என்ற அற்புதப் பெயரை திருக் கூட்டத்திற்குச் சூட்டினார்கள். கோயில் பட்டியார் விளைத்த மாயம் தான் என்னே! ஜி. ஜெயராமன் அவர்கள் இளைஞர் குழாமுடன் நித்தல் எம்பிரானுடைய கோயில் புக்கு மாலைதொடுத்து, அலகிட்டு, விளக்கும் இடுகின்றார். எஸ். அசோக்குமார் ஞாயிறுதோறும் தேவாசிரிய மண்டபத் தில் மாலை நேரத்தில் அன்பர்களுடன் திருமுறை ஓதி வருகிறார்.

குமரவேல் அவர்கள் இரண்டு ஆண்டு களுக்கு முன்பு வரை பூட்டியிருந்த தேவாசிரிய மண்டபத்தைத் தினமும் திறந்து வைத்து தூய்மை செய்து விளக்கேற்றி வைக்கிறார். மணிகண்டன், பரணி, விஜயன், விஜய், கார்த்தி போன்ற இளைஞர்கள் தினமும் எக்காளம், வாங்காரம், சங்கு, பிரம்மதாளம், திருச்சின்னம் போன்ற வாத்தியங்களை இரண்டாம் காலத்திலும், அர்த்த சாமத்திலும் இசைத்து வருகிறார்கள்.

இத்திருக்கூட்ட அன்பர்கள் இந்த ஆலயத்தில் உழவாரப்பணி செய்தும், பிற இடங்களில் சென்று உழவாரப்பணி செய்தும், தினமும் திருமுறை ஓதியும், இல்லங்களில் சென்று ஓதியும் சிறப்பாகப் பணியாற்றி வருகின்றனர்.

வாயே! நீ வாழ்த்து கண்டாய்!
கையே! நீ உழவாரப்பணி செய்வாய்!
மாலைதொடுப்பாய்!
அலகிடுவாய்!
வாத்யங்கள் இசைப்பாய்!
கண்ணே! இத்தொண்டக் காட்சியைக் காண்பாய்!
செவியே! இவர்கள் இசையைக் கேட்பாய்!

திரு. சங்கரன் அவர்கள் முயற்சியால் விஜயபுரம் அ/மி கபிலேஸ்வரர் கோயி லில் பிரதோஷ வழிபாடும், உழவாரப் பணியும், திரு. கார்த்தி மாஸ்டர் முயற்சியால் திருப்பள்ளி முக்கூடல் சிவாலயத்தில் பிரதோஷ வழிபாடும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

திருத்தொண்டத் தொகை உருவான தலம் அல்லவா!
திருத்தொண்டர்கள் உருவாகியிருப்பது நலம் அல்லவா!

புரவலர்கள்

தொண்டர்கள் மலிந்த திருவாரூரில் புரவலர்களும் இருக்கின்றனர், கேப்டன் எம். இராமசாமி முதலியார் திருவாரூரில் கல்விப்பணி, சமுதாயப்பணிகள் பல ஆற்றி வருகிறார். சமயப்பணியாக, வி.எஸ். தியாகராஜ முதலியார் திருவாரூர் தெப்ப உற்சவம் மீண்டும்

தொடர்ந்து நடைபெறச் செய்த போது கேப்டன் அவர்கள் பெரும் பொருள் வழங்கினார்கள். தன் அருமைமகன் நினைவாக திருவாரூர் மடப்புரத்தில் ஸ்ரீகுரு தட்சிணாமூர்த்தி சுவாமிகள் மடத்திற்கு ஒரு மண்டபம் கட்டிக் கொடுத்தார்கள். திருவாரூர் தியாகராஜா சுவாமி கோயிலுக்கும், சிவாலயங் களுக்கும் கணக்கில் அடங்காப்பெரும் தொகை கொடுத்து வருகிறார். திருமரு கல் திருக்கோயில் திருப்பணிக்கு 20,000 ரூபாய் வழங்கியுள்ளார்.

(பிறப்பு - 7-5-1923; பிறந்த ஊர் - மடப்புரம், திருவாரூர். பெற்றோர் - டி. முருகைய முதலியார், முத்துக்கண்ணு அண்ணி)

பெரியவர் திரு. பவானந்தர் அவர்கள் சைவசித்தாந்தத்தில் பெறும் பற்றுள்ள ஆன்மிகச் செம்மல். 2003 வரை சிறு சிறு நூல்களாக ஏழு நூல்கள் வெளியிட்டுள் ளார். திருக்கோயில் வழிபாடு, திரு வாரூர் தலவரலாறு ஆகியன இவர் எழுதிய நூல்கள் ஆகும்.

24. நன்னிலம்

நன்னிலம் என்ற சிறிய ஊரில் மன்றம் அமைத்து அ/மி மதுவனேஸ்வரர் சுவாமி வாரவழிபாட்டுக் கழகத்தினர் 15 நூல்களையும் வெளியிட்டுள்ளனர் என்பது வியப்புக்குரிய செய்தி. அவற்றில் குறிப்பிடத்தக்கது திருத்தல வழிகாட்டி ஆகும். இந்நூல் இருமுறை வெளியாகியுள்ளது. இரண்டாம் பதிப்பில் 276 பாடல்பெற்ற தலங்கள் பற்றியும் 256 வைப்புத் தலங்கள் பற்றியும் செய்திகள் இடம் பெற்று உள்ளன. வைப்புத் தலங்கள் பற்றி இதுவரை அதிக நூல்கள் வரவில்லை, அந்த வகையில் பாராட்டப்படவேண்டிய முயற்சி ஆகும்.

12-12-1976-இல் துவங்கப்பட்ட இக் கழகம் கூட்டுவழிபாடு, சொற் பொழிவுகள், உழவாரப்பணி, தல யாத்திரை, அன்னதானம், திருமுறை முற்றோதல், கார்த்திகை சோமவாரம் சங்காபிஷேகம், அன்னாபிஷேகம் அம்பாளுக்கு வெள்ளிக்கவசம் சார்த்தல், சுவாமிக்கு வெள்ளி நாகாபரணம் எனப் பணியாற்றுகின்றது.

(தலைவர் - ச வெங்கடேசன்; செயலர் - வெ. முத்துசாமி)

கே. ராமாமிர்தய்யர் என்பவர் நன்னிலம் நகரில் உள்ள எட்டு கோயில் களையும் தம் முயற்சியாலும் உதவி யாலும் திருப்பணிகள் செய்து கும்பாபிஷேகம் செய்தவர். தினமும் கோயில்களில் திருவிளக்கேற்றுதலை தொடர்ந்து செய்து வருபவர். விசேஷ தின வழிபாடுகளைத் தாமும் மேற் கொண்டு அன்பர்கள் உதவி களையும் பெற்றுச் செய்து வருபவர்.

திரு. மணி ஐயர் அவர்கள் திருமீயச்சூர் அ/மி லலிதாம்பிகை கோயிலை திரு. மேகநாதன் அவர்கள் துணையுடன் திருப்பணி செய்து குடநீராட்டுக்கும் உதவியவர். இன்றும் நித்ய வழி பாட்டுடன் சிறப்பு வழிபாடுகளும் சிறப்பான முறையில் செய்ய உதவி வருகிறார்.

சேக்கிழார் வழிபாட்டு மன்றம்
அச்சுதமங்கலம்

23.12.1998-இல் தொடங்கப்பட்ட இம்மன்றம் அ.மி. சோமநாதஸ்வாமி ஆலய அர்த்தஜாம வழிபாடு, உழவாரப் பணி, கார்த்திகை சிறப்பு வழிபாடு, பாவை விழா ஆகிய பணிகளைச் செய்து வருகிறது. இம்மன்றத்தின் முயற்சியால் 2003-இல் இவ்வாலயத்தின் குடநீராட்டு விழா நடைபெற்றது.

25. மயிலாடுதுறை

தேடல்

தேடல்.... ....
நாற்பத்தைந்து ஆண்டு காலத்
தேடல்.... ....

1959-61-களில் நான் திருச்சியில் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த பொழுது மலைக்கோட்டை உச்சிப் பிள்ளையார் கோயிலுக்குப் போவது உண்டு. அங்கே தாயுமானசுவாமி திருக்கோயிலில் நுழையும் மூலையிலே இராமகிருஷ்ணா தபோவனம் வெளியீடு களாக ''இராமகிருஷ்ணரின் அருள்முரசு'' விவேகானந்தரின் வீரமுரசு'' என்றெல் லாம் சிறுசிறு பிரசுரங்கள் குறைந்த விலையில் அழகாக அச்சிடப்பட்டு விற்பனைக்கு இருக்கும். இவைபோல மக்களை எட்டும் வகையில் சைவசமய அருளாளர்களைப் பற்றிய நூல்கள் வரவில்லையே என்று என் தந்தையார் அமரர் திருக்குறள்வேள் ஜி. வரதராஜம் பிள்ளையவர்களிடம் ஏக்கத்துடன் கூறுவேன். அந்த ஏக்கம் உள்ளே கனன்று கொண்டே இருந்தது.

அதன் பின் ஒன்பது ஆண்டுகள் கழித்துத் தருமை ஆதீனக் குருபூசைத் திருநாளில் உரையாற்றி விட்டு அமரர் ஔவை சு. துரைசாமி பிள்ளையவர்கள் மயிலாடுதுறையில் உள்ள எனது இல்லத்திற்கு வந்தார்கள். அப்பொழுது நானும் எனது வழக்கறிஞர் நண்பர்களும் ''சிவஞானபோதம் கடுமையாக உள்ளதே'' என்று பேராசிரியர் அவர் களிடம் சொன்னோம். மதுரைக்குச் செல்ல இருந்தார்கள். பயணத்தை நிறுத்தி விட்டு அப்படியே எங்கள் இல்ல மாடியில் உட்கார்ந்து கொண்டு நூல்கூட இல்லாமல் போகிறபோக்கிலே சிவ ஞான போதம் பன்னிரண்டு சூத்திரங் களையும் அறிவியல் ரீதியாக இரண்டு நாட்கள் தொடர்ந்து விளக்கினார்கள். உணவுக்கு மட்டும் தான் கீழே போவோம். அந்த சமயத்திலும் இதே பேச்சு வந்தது. அந்த உரையாடலின் முடிவில் தான் ஓர் அமைப்பு என்று இருந்தால் சொற்பொழிவு, நூல் வெளி யிடுதல் என்றெல்லாம் முயற்சிகள் எடுக்கலாம், என்ற எண்ணம் எழுந்தது. ''இது ஒரு நல்ல திட்டம் தான்'' என்று பேராசிரியர் அவர்கள் தலையை ஆட்டிய வாறே சொன்னார்கள். அந்த எண்ணத் தின் விளைவாகத்தான் 1970-இல் தெய்வத் தமிழ் மன்றம் தோன்றியது.

தெய்வத் தமிழ் மன்றம்




ஔவை சு. துரைசாமிபிள்ளை



கி.வா. ஜகந்நாதன்



எஸ். மகராஜன், ஜி. வரதராஜன்



கீரன், வாரியார், மு.வ.



வாரியார் சுவாமிகள்

அமரர் ஜி. சுந்தரேசம் பிள்ளையவர்கள் தலைவராகவும் நான் செயலராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டோம். மூன்று மாதத்திற்கு ஓர் அறிஞரை அழைப்பது என்றும், அவர்களை இரண்டு நாட்கள் தங்கச் செய்து முதல் நாள் சங்க இலக்கியம் என்றும், இரண்டாம் நாள் சமய இலக்கியம் என்றும் பேசுமாறும் ஏற்பாடு செய்து வந்தோம். பேராசிரியர் ஒளவை சு. துரைசாமிப்பிள்ளை, கி.வா. ஜகந்நாதன், அ.ச. ஞானசம்பந்தன், திருமுருக கிருபானந்தவாரியார், புலவர் கீரன், க. வெள்ளை வாரணனார். இரா. இராதாகிருஷ்ணன், திருக்குறள் வீ. முனுசாமி, மாண்பமை எஸ். மகராஜன், திருவாசகமணி கே. எம். பாலசுப்பிரமணியம், குன்றக்குடி அடிகளார், சொ. சிங்காரவேலன், நா. கிரிதாரிபிரசாத், சோ. சத்தியசீலன், அ.வ. ராஜகோபாலன், அ. அறிவொளி, சா. கணேசன், பாலகவி இராமநாதஞ் செட்டியார், கு. சுந்தரமூர்த்தி, தெ.பொ. மீனாட்சி சுந்தரனார், ஒளவை து. நடராஜன், ந.ரா. முருகவேள், ம.பொ. சிவஞானம், தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம், தவத்திரு சுந்தரசுவாமிகள், சாயிமாதா சிவ. பிருந்தாதேவி, சுகி சிவம், முனைவர் சி. பாலசுப்பிரமணியம், மு. சிவச்சந்திரன், இரா. செல்வக் கணபதி, சுப. அண்ணாமலை ஆகியோர் பல முறை உரையாற்றி உள்ளனர். இலக்கியமும் சமயமும் கலந்து இருந்தாலும் செம்பாதி கூட்டங்கள் திருமுறைகளை ஒட்டியும், சாத்திரங்களை ஒட்டியும் அமைந்திருந்தன.

சைவ சமய உச்சிப்பேரவை

1973-இல் தெய்வத் தமிழ் மன்றத்தில் முக்கிய நிகழ்வு ஒன்று நடந்தது. ''சைவ சமய வரலாறு வெறும் வரலாற்றுக் குறிப்புகளாக மட்டும் அமையாது சமுதாய வாழ்வோடு சைவம் பின்னிப் பிணைந்துள்ள சமுதாய வரலாறாக எழுதப்படவேண்டும்.'' என்று மூதறிஞர் அ.ச. ஞானசம்பந்தனார் அவர்கள் மன்றக் கூட்டத்தில் ஒருமுறை கூறினார்கள். மூதறிஞர் அவர்களையே திட்டம் வகுத்துத் தரக் கேட்டபொழுது, சைவ சமய வளர்ச்சியை வரலாற்று ரீதியாகத் தொகுத்து, தனித்தனியே காஷ்மீர சைவம், வீர சைவம் என்றெல்லாம் பிரித்து, ஒவ்வொரு தலைப்பினையும் ஆராயக் கூடியவர்களின் பெயர்களையும் தெரிவு செய்து அவர்களை அழைக்கவும் சொன்னார்கள்.

அதன்படி மூதறிஞர் அ.ச. ஞானசம்பந்தனார், சி. அருணை வடிவேல் முதலியார், ச. தண்டபாணி தேசிகர், மு. அருணாசலம், க. வெள்ளை வாரணனார், டி.பி. சித்த லிங்கையா, சுப. அண்ணாமலை, சி. இராமலிங்கம், செ. வைத்தியலிங்கம், கு. சுந்தரமூர்த்தி, சொ. சிங்காரவேலன், திருக்குறள் வேள், ஜி. வரதராஜன், இரா. செல்வக்கணபதி ஆகியோரை அழைத்தோம். *1973*







செப்டம்பர் 2,3 இருநாட்களும் அத்துணை அறிஞர்களும் எனது இல்லத்தில் தங்கி, சிந்துசமவெளி முதல் தற்காலம் வரை முழுமையாக ஆராய்ந்து, பகுதி பகுதியாகப் பிரித்து, இன்னார் இன்ன கட்டுரைகளை எழுதுவது என்றும் முடிவெடுத்தனர்.

இதனையொட்டி மூதறிஞர் அ.ச. ஞா. அவர்கள் 1975-ஆம் ஆண்டில் தெய்வத் தமிழ் மன்றத்தில் பல்கலைச் செல்வர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் அவர்கள் தலைமையில் மூன்று நாட்கள், ''சைவ சமய சமுதாய வரலாறு'' என்று உரையாற்றி, அவ்வுரையை ஒலி நாடாவில் பதிவும் செய்தார்கள். அந்தக் கூட்டம் சைவ சமய உச்சிப் பேரவை (Summit Meeting) எனலாம். ஆனால் அந்த முயற்சி முழுமை அடையாமல் போய் விட்டது.

நூல்கள் வெளியிடுதல்

தெய்வத் தமிழ் மன்றம் சொற் பொழிவுகள் ஏற்பாடு செய்வதோடு நின்றுவிடாமல், நூல்கள் வெளியிடு வதிலும் முனைந்து நின்றது. தபோவன வெளியீடுகள் போல சைவ அருளாளர் களின் அருட்செய்தி (மெசேஜ் ஆஃப் திருநாவுக்கரசர்) வரிசையில் வெளியிட வேண்டும் என்ற திட்டத்தை முதலில் செயல்படுத்தினோம். தெய்வத் தமிழ் மன்றத்தின் முதல் நூல் முனைவர் சொ. சிங்காரவேலனாரைக் கொண்டு ''அப்பர் அருட்செய்தி'' என்ற பெயரில் தேவிகா அறக்கட்டளையின் சார்பில் வெளி வந்தது. ஜி. வரதராஜன், தி. கல்யாண சுந்தரம், வ. இராஜேந்திரன், இரா. இராஜசேகரன் ஆகியோர் தலைக்கு 1000 ரூபாய் வழங்கி தேவிகா அறக் கட்டளையை நிறுவினார்கள்.

''கிறிஸ்துவர்கள் வெளிநாடுகளி லிருந்து வந்து தங்கள் சமயக் கருத்து களைப் பரப்புகின்றனர். நமது நாட்டி லேயும் இராமகிருஷ்ண பரஹம்சர், விவேகானந்தர் போன்றோரின் அருள் உரைகளை எவ்வளவு உயர்ந்த முறையில் அவர் தம் சீடர்கள் பரப்பி வருகின்றனர். நமது இதிகாசங்கள், உபநிடதங்கள் மற்றும் பழம்பெரும் நூல்களை எவ்வளவு அழகிய முறையில் பாரதிய வித்யா பவனத்தார் அச்சிட்டு வெளியிடு கின்றனர். நமது தமிழிலே தான்


எத்துணை சமய நூல்கள்? எவ்வளவு விழுமிய கருத்துகள்? இவற்றை யெல்லாம் தக்க வழியில் பரப்ப நமது தமிழகத்திலே ஒரு நல்ல நிறுவனம் இல்லையே என்ற ஏக்கக் குரல் காதில் விழுகின்றது.

''பன்னிரு திருமுறைகள், பதினான்கு சாத்திரங்கள் ஆகியவற்றின் பெருமை களை வெளிநாட்டார்க்கும், நமது மக்களுக்கும் கூற வேண்டாமா? இருக்கும் வசதியைக் கொண்டு எந்த அளவு சமயப் பணி செய்ய முடியும் என்று சிந்தித்துப் பார்த்தோம். கொடைக் கானல் செண்பகனூரில் ஒரு பாதிரியார் சாதாரண அஞ்சல் அலுவலகத்தையே நாடு முழுமையும் பாராட்டக்கூடிய வகையிலே மாற்றவில்லையா? வசதியை எதிர்பார்த்தாரா? பெரும் பொருள் பெற்றாரா? இல்லையே, துணிவு பெற்றோம். மாயூரம் நகரில் தெய்வத் தமிழ் மன்றம் தோன்றியது. சொற் பொழிவுகளோடு நின்றுவிடாமல், அவற்றை நூல் வடிவில் வெளியிட முனைந்தோம். அத்தகைய முயற்சியின் முதல் வடிவம் 'அப்பர் அருட் செய்தி' என்னும் இவ்வரியநூல்'' என்று முன்னுரையில் *(மார்ச் 1974)* எழுதினேன். என்னுடைய தேடலின் முதல் வடிகால் தான் தெய்வத் தமிழ் மன்றம்.

தெய்வத் தமிழ் மன்றம் வெளியிட்ட பிறநூல்கள் : தெய்வத்தமிழ் *(1974)* ஜி. வரதராஜன் அவர்களின் ''திருமந்திர நெறி, அ.ச. ஞானசம்பத்தனாரின் தத்துவமும் பக்தியும்'' ''உழவாரம்'' *(1984)*, ''இன்பமே எந்நாளும் துன்ப மில்லை'' *(1994)*

உழவாரம்

தமிழ் நாட்டில் உள்ள சைவ சமய, திருமுறை மன்றங்கள் தங்கள் தனித் தன்மை கெடாமல் ஒருங்கிணைந்து செயல்பட வழிவகைகள் வகுக்க அனைத்து மன்றங்களையும் கூட்டி ஒரு பெரும் மாநாட்டினை *1984* ஜனவரி *7,8* இருநாட்களும் தெய்வத் தமிழ் மன்றம் மயிலாடுதுறையில் நடத்தியது. தருமை யாதீனம் ஸ்ரீலஸ்ரீ இருபத்தாறாம் குரு



''உழவாரம்'' தொடக்கம், முதல் மாநாடு, 1984



திருமுறை ஊர்வலம்; 1984

மகா சந்நிதானம் அவர்கள், திருப் பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ எஜமான் சுவாமிகள் அவர்கள், தவத்திரு குன்றக் குடி அடிகளார் அவர்கள், கௌமார மடம் தவத்திரு சுந்தர சுவாமிகள், தவத்திரு ஊரன் அடிகள் ஆகியோர் எழுந்தருளி ஆசியுரை வழங்கினர். மூதறிஞர் அ.ச. ஞானசம்பந்தனார், மகாவித்துவான் ச. தண்டபாணி தேசிகர், க. வெள்ளை வாரணனார் ஆகியோர் கலந்து கொண்டனர். தமிழகத்தின் பல்வேறு மன்றங்களின் பிரதிநிதிகளாக *200* உறுப்பினர்களும், மாலை மாநாட்டில் *1000* பேருக்கு மேலாகவும் கலந்து கொண்டனர். இந்த ஒருங் கிணைப்பு அமைப்புக்கு ''உழவாரம்'' என்ற பெயர் சூட்டப்பட்டது. சைவ சமய

வரலாற்றிலே 7, 8 ஜனவரி 1984 ஒரு மைல்கல் எனலாம்.

மாநில மாநாடுகள்



அறுபத்து மூவர் ஆயுள் தொண்டர் அருள் வலம், 12.12.2000

28,29 ஏப்ரல் 1984 இருநாட்களும் 2-ஆம் மாநில மாநாடு மதுரை பன்னிரு திருமுறை மன்றத்தாரால் மதுரையில்



எட்டாவது மாநில மாநாடு, 12.12.2000

நடத்தப்பட்டது. திரு. முத்து பழனியப்ப செட்டியார், திரு. நீ.சீ. சுந்தரராமன் முன்னின்று நடத்தினர். 20,21 ஜூலை 1985-இல் திருச்சி திருவானைக்கா திரு. அப்புலிங்கம் அவர்கள் முயற்சி யால் 3-ஆம் மாநாடு திருச்சியில் நடைபெற்றது. 20,21 செப்டம்பர் 1986-இல் ஈரோட்டில் தொண்டர் சீர் பரவுவார், பழ. முருகேசன் ஆகியோர் முயற்சியில் 4-ஆம் மாநாடு நடைபெற்றது. 20, 21 மே 1988-இல் நெய்வேலியில் பன்னிரு திருமுறை வளர்ச்சிக் கழகம், சேக்கிழார் கழகம் இணைந்து 5-ஆம் மாநில மாநாட்டை நடத்தியது. சிவ. ராஜப்பா, அரங்க. மணி ஆகியோர் முன்னின்று நடத்தினர். 10-6-1989-இல் மயிலாடுதுறையில் தெய்வத் தமிழ் மன்றம் 6-ஆம் மாநில மாநாட்டை நடத்தியது. 1, 2 ஜூலை 1990-இல் சிதம்பரத்தில் திருமுறைக் கழகம் 7-ஆம் மாநில மாநாட்டை நடத்தியது. பொறுப்பு திரு. ச. சுந்தரேசம் பிள்ளையவர்கள்.

''ஏதேனும் செய்ய வேண்டும்'' என்ற தேடல் தெய்வத் தமிழ் மன்றமாகி உழவாரமாகப் பரிணமித்தது. தெய்வத் தமிழ் மன்றமாவது இலக்கியம், சமயம் என்று இருநிலைகளில் செயலாற்றியது. ஆனால் ''உழவாரம்'' அமைப்பு சைவ சமயத்துக்கென்றே அமைக்கப்பட்டது. உழவாரம் அமைப்பு தோன்றி தமிழ் நாட்டின் ஏழு முக்கிய நகரங்களில் மாநில மாநாடு நடத்தியது. இருந்தும் என் தேடல் முழுமையடையாததாகவே இருந்தது. உள்ளச் சிப்பியை நாளும் அரித்துக் கொண்டிருந்தது. அந்தச் சிந்தனைத்துளி ''அவதாரத் தலங்களில் நாயன்மார் திருநாள்'' என்ற முத்தாகப் பரிணமித்தது.

அவதாரத் தலங்களில் நாயன்மார் திருநாள்

அறுபத்து மூவர் திருநாள் கொண் டாடப்படாத சைவத்திருக் கோயில் களோ, சைவ மன்றங்களோ தமிழ் நாட்டில் கிடையாது. ஆனால் நாயன்மார் அவதரித்த தலங்களில் நாயன்மார் முக்தியடைந்த நாளன்று குருபூசைத் திருநாள் நடத்துவது என்பது பெறற்கரிய பேறாகும். இந்தச் சிந்தனை தோன்றிய பின் குருபூசைத் திருநாள் தொடர்ந்து நடத்த, ''ஆயுள் தொண்டர்'' என ஏற்பாடு செய்து அவர்கள் தம் ஆயுள்வரை இப்பணியினைச் செய்ய வேண்டும் என வரையறை செய்தோம். இந்த அடிப் படையில் 36 நாயன்மார்களுக்கு விழா எடுக்க 36 ஆயுள் தொண்டர்கள் முன் வந்தனர். 1985 மார்கழி உத்திரநாளன்று




மங்கையர்க்கரசியார் திருநாள், பழையாறை

பூம்புகார் திருச் சாய்க்காட்டில் மதுரம் துவக்கப் பள்ளி ஆசிரியர்களால் இயற்பகை நாயனார் திருநாள் கொண்டாடப்பட்டது. இதுவே இந்த அடிப்படையில் செய்யப்பட்ட முதல் குருபூஜைத் திருநாள் ஆகும். கல்லூரிப் பேராசிரியர்கள், பள்ளி ஆசிரியர்கள், வணிகர்கள், கடைகளில் பணி புரி பவர்கள் எனப் பலர் ஆயுள் தொண்ட ராகப் பணியாற்ற முன் வந்தார்கள். 17-12-2000 அன்று அறுபத்து மூன்று நாயன்மார் குருபூஜையினை நடத்த 63 ஆயுள் தொண்டர்கள் இசைவு தந்து பணி முழுமை அடைந்தது. 63 ஆயுள் தொண்டர்கள் ஏற்பாடு செய்த நிறை வினை ஒட்டி 12-12-2000-இல் மயிலாடு துறையில் 8-ஆம் மாநில மாநாடு நடைபெற்றது. அறுபத்துமூன்று ஆயுள் தொண்டர்களும், அறுபத்துமூவர் திரு உருவப்படங்களுடன் அறுபத்து மூவர் அருள்வலம் வந்தது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

4, 5-8-2001 அன்று மயிலாடுதுறையில் ஒன்பதாம் மாநில மாநாடும், 11-10-2003 அன்று மயிலாடுதுறையில் பதினோராம் மாநில மாநாடும், 26-9-2004 அன்று சிதம்பரத்தில் பன்னிரண்டாம் மாநில மாநாடும் நடைபெற்றன. 11-10-2003 பதினோராம் மாநில மாநாட்டின் போது பூம்புகார் கடற்கரை, மேலையூர், மேலப் பெரும் பள்ளம், தலச்சங்காடு, ஆக்கூர், செம்பனார்கோயில், விளநகர், மயிலாடுதுறை வழியாக 300க்கு மேற்பட்ட மேலையூர் சீனிவாசா மேல்நிலைப்பள்ளி ஆசிரியர்கள், மாணவிகள் சைக்கிளில், மோட்டார் சைக்கிளில் வரவும், அவர்களுக்கு முன் ஒரு மாணவர் அறுபத்து மூவர் அருட்சுடர் ஏந்தி வரவும் வியக்கத்தக்க வகையில் அறுபத்து மூவர் அருட்சுடர் வலம் நடைபெற்றது.

திருநாவுக்கரசர் திருநாளை முன் னிட்டு திரு. ஞானசேகரன் அவர்கள் தலைமையில் பதினெட்டு ஆண்டு களாகப் பேரளத்திலிருந்து திருப் புகலூருக்குப் பாத யாத்திரை நடை பெற்று வருகின்றது.

ஆடல்வல்லான் அருள்வலம்



ஆடல்வல்லான் அருள்வலம்,
புறப்படுதல் 10.5.1993

பாடல்பெற்ற தலங்களைப் பேண வேண்டும் என்ற விழுமிய நோக்கத்தை மக்களிடையே கொண்டு செல்ல இணைப்பாளன் இரா. இராஜசேகரன் தலைமையில் 10 பேர் கொண்ட குழு 10-5-1993 காலை பூம்புகார் திருச்சாய்க் காட்டிலிருந்து கிளம்பி காரைக்கால், நாகப்பட்டினம், திருவாரூர், மயிலாடு துறை, குடந்தை, தஞ்சை, புதுக் கோட்டை, காரைக்குடி, தேவகோட்டை, மதுரை, பழநி, உடுமலைப்பேட்டை, பொள்ளாச்சி, கோயம்புத்தூர், ஈரோடு, திருச்சி, சீர்காழி பயணித்து 15-5-1993 அன்று நிறைவு செய்தது. நேரிடையாக

1000-க்கு மேற்பட்ட அன்பர்களிடமும், செய்தித் தாள்கள் மூலமாக பல ஆயிரக்கணக்கான பொதுமக்களிடமும் செய்தி சென்ற டைந்தது குறிப்பிடத் தக்கது. 63 நாயன் மார்களுக்கு 63 ஆயுள் தொண்டர்களும் உள்ளூர் மயிலாடு துறை திருக்கோயில் தொண்டர்கள் 63 பேரும் என வரையறை செய்து அவற்றின் தொகுப்பு, ''நாயன் மார்கள் நற்றமிழ் மாலை'' எனும் நூலாக வெளிவந்துள்ளது.

இல்லங்கள் தோறும் நல்வாழ்வு வழிபாடு, திருமுறை முற்றோதல், மயிலாடுதுறை, சுற்றுப்புறங்களில் சமயச் சொற் பொழிவுகள் எனப் பணி விரிகின்றது.

அறுபத்து மூவர், நால்வர் படங்கள், ஒன்றே குலம், சைவ வரலாறு, நாவரசர் வரலாறு எனத் துண்டுப் பிரசுரங்களும், மாநில மாநாட்டின்போது சிறப்பக் கருவூலங்களைக் கொண்ட ''தெய்வத் தமிழ்'' சிறப்பிதழ்களும் உழவாரம் வெளியிட்டு வந்தது. ''ஊரெல்லாம் சிவமுழக்கம்'' என்ற அடிப்படையில் பூம்புகார், மேலையூர், வாணகிரி, மேலப்பெரும்பள்ளம், மணிக்கிராமம், இலையமுதுகூடம், திருவெண்காடு ஆகிய ஊர்களிலும் (14 இடங்கள்) மயிலாடுதுறையைப் பகுதி பகுதியாகப் பிரித்துக் கொண்டு சீனிவாசபுரம், வலம்புரிநகர், கணபதி நகர் என 26-க்கும் மேற்பட்ட இடங்களிலும் தன்னார் வலர்களை ஒன்று சேர்க்க எண்ணி முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. இதன் வழியாக மயிலாடுதுறை பகுதியில் விழிப்புணர்வு ஏற்பட்டு புதிதாக 2,3 மன்றங்களும் தோன்றின.

துண்டுப் பிரசுரங்கள், பலரால் பலரின் உழைப்பில் மேற்கொள்ளப்பட்ட சைக்கிள் பேரணி, 40க்கும் மேற்பட்ட இடங்களில் நேரில் சென்று கலந்துரை யாடல் என்றெல்லாம் பிரசாரம் செய்தாலும் முழுப்பலன் கொடுத்ததா என்பது தெரியவில்லை. எனவே தேடல் தொடர்ந்தது.

கிராம ஏற்புத் திட்டம்

சைவ சமயம் வாழ்வில் அடித்தட்டில் இருக்கும் மக்களிடம் சென்று சேர வில்லையே என்ற ஏக்கம் இருந்து



வசதிகுறைந்த பெண்களின் திருமணத்திற்கு உதவி, மேலப்பெரும்பள்ளம்





காளியம்மன் கோயில் முன் மண்டபம் கட்ட உதவி, மேலப் பெரும்பள்ளம் நன்கொடையாளர்கள் - மணிகண்டன், ப்ரியா மணிகண்டன், தேவிபாரதி ப்ரதீஷ்



ப்ரதீஷ் - தேவிபாரதி அறக்கட்டளை
உதவி பெற்றோர், சீனிவாசா மேல்நிலைப்பள்ளி



வந்தது. மேலப்பெரும்பள்ளம் எனப் படும் திருவலம்புரம் எனும் கிராமத்தைத் தத்து எடுத்தோம். 12-3-2003-இல் கிராம ஏற்புத் திட்டம் தொடங்கப்பட்டது. 2003-இல் கல்லூரி மாணவர் ஒருவர் கணினி படிக்க 3 மாதம் உதவித்தொகை, ஆதிதிராவிடப் பெண்ணின் திருமணத் திற்கு ரூ. 2,000/- ஆதிதிராவிட காலனி யில் உள்ள காளியம்மன் கோயில் முன்மண்டபம் கட்ட ரூ. 7,000/-, 200 மாணவர்களுக்கு நோட், பேனா உதவி செய்யப்பட்டது. என்னுடைய மகள்கள், கௌரிப்பிரியா - மணிகண்டன் ஆகி யோரும் தேவிபாரதி - ப்ரதீஷ் ஆகியோரும் 200 அமெரிக்க டாலர் தந்துதவினர். 2004-இல் 2 பெண்களுக்கு தையல் இயந்திரங்கள், 200 மாணவர் களுக்கு நோட் புக், பேனா, 50 பேருக்குப் புடவை, 20 பேருக்குப் போர்வை (மயிலாடுதுறை இன்னர்வீல் சங்க உதவி) வசதி குறைந்த பெண் திருமணத்திற்கு ரூ. 5,000/- செலவில் சீர் பாத்திரங்கள் என உதவி செய்யப்பட்டது. 17-6-2004 அன்று மயிலாடுதுறை அன்பகம் எம். ஞான சம்பந்தம் அவர்கள் உதவியால் வியாழன் தோறும் இலவச மருத்துவச் சிகிச்சை, இலவச மருந்துகள் வழங்குதல் தொடங் கப்பட்டது. வாரந்தோறும் நூற்றுக்கும் மேற்பட்ட ஏழை மக்கள் பயன் பெறுகின்றனர். 2005-இல் ஆகஸ்டு 15 முதல் ஆகஸ்டு 24 வரை சீனிவாசா மேல்நிலைப் பள்ளி என்.எஸ்.எஸ். மாணவர்கள் முகாமிட்டு சாலைகள் அமைத்தல், குளங்கள் தூர்வார்தல், கோயில்களில் உழவாரப்பணி, நந்த வனம் அமைத்தல், மருத்துவ முகாம் என மிகச் செம்மையாகச் செய்து முடித் தார்கள்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட வேறு எங்கும் உதவி கிடைக்காத மாணவர்கள் 30 பேருக்கு புத்தகப் பைகள், 10 பேருக்குக்காலணிகள், 7 பேருக்கு ஜியோமிதி பெட்டிகள் 5 பேருக்கு பேனாக்கள் வழங்கினோம். உளவியல் ரீதியாக உற்சாகப்படுத்த தாராசுரத்திற்கு அழைத்துச் சென்றோம். அவர்களில் ஏழு மாணவர்களைத் தேர்ந்தெடுத்து என்னுடைய இல்லத்தில் தினம் ஒருவராக அழைத்து அவர்கள் விருப்பம் அறிந்து விருந்து கொடுத்தேன். இந்தப் பணிகளைத் தொடர்ந்து செய்ய என் மாப்பிள்ளை டாக்டர் பிரதீஷ் அவர்களும், மகள் தேவிபாரதியும் ரூ. 1000 டாலர் தந்துள்ளனர்.

அந்தத் தொகையினைக்கொண்டு மேலையூர் சீனிவாசா மேல்நிலைப் பள்ளியில் உள்ள 2756 மாணவ, மாணவியரில் வசதி குறைந்த 100 மாணவர்களை அந்தந்த வகுப்பு ஆசிரியர்கள் மிகுந்த பரிசீலனைக்குப் பிறகு தேர்ந்தெடுக்க, அவர்களில் 58 பேரை தலைமை ஆசிரியர், N.S.S. பொறுப்பு ஆசிரியர் தேர்வுசெய்து அவர்களைத் தத்து எடுத்துள்ளது

உழவாரம் அமைப்பு. முதல் தவணையாக 20-10-2005-இல் ரூ. 9200 செலவில் அவர்களுக்கு புத்தாடைகள் வழங்கினோம்.

மக்கள் நலப்பணியை உழவாரத்தோடு இணைத்துச் சிறு சிறு முயற்சிகளாகச் செய்ய ஆரம்பித்தது சற்று மன நிறைவு தருகின்றது. இருந்தாலும் இன்னும் ஒரு பெரும்பகுதி கவனிக்கப் படாமலே இருந்து வருகின்றது. திரைப்பட மயக்கத்தாலும், அரசியல் ஆரவாரத்தாலும் இளைஞர் சமுதாயம் அலைக்கழிக்கப்பட்டு வருகின்றது. இளைஞர் சமுதாயத்தை நெறிப்படுத்த மயிலாடுதுறை, பூம்புகார் பகுதியிலாவது ஏதேனும் செய்ய முடியாதா என்பது என் தணியா தாகம்.

மாணவர் பண்பாட்டுப் பயிற்சித் திட்டம்

முப்பது ஆண்டுகளுக்கு மேலாக எங்கள் மேற்பார்வையில் இயங்கும் சீனிவாசா மேல்நிலைப்பள்ளியில் 6-ஆம் வகுப்பு வரை மாணவர்களுக்கு ஆத்தி சூடி, கொன்றைவேந்தன், திருக்குறள், பெரியபுராணம் எனப் பாடத் திட்டம் வகுத்து ஒவ்வொரு வகுப்பிலும் சிறப்பு விழுக்காடு பெறும் மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கவும் ஏற்பாடு செய்துள்ளோம். குறிப்பாக பதினோராம் வகுப்பு மாணவர்களுக்கு என ''ஒன்றே குலம்'' என்ற தலைப்பிலே புறநானூறு முதல் பாரதியார் கவிதை வரை அவற்றில் உள்ள சமதர்மக் கருத்துள்ள பாடல்களின் விளக்கமாக நூல் ஒன்றினை நான் எழுதி அவர்களுக்குப் பாடத்திட்டமாக வைத்துள்ளோம். திருமுறைகளுக்கு மட்டும் நாற்பது பக்கங்கள் ஒதுக்கியுள்ளோம்.

பள்ளியை ஒட்டிய மாணவர் விடுதியில் முப்பது ஆண்டு காலமாகக் காலை வழிபாடு சிவபுராணம் ஓதுதலாக அமைத்துள்ளோம். மூன்று ஆண்டுகளாக நான் மேலையூர் வரும்போது ஞாயிற்றுக் கிழமைகளில் தேவாரம், திருவாசகம், பெரிய புராணம் விளக்கங்கள் கொடுத்து வருவதுண்டு.

இது எங்கள் கல்வி நிலையங்களோடு நின்று விடுகின்ற ஒன்று. இம்முயற்சி பிற கல்வி நிலையங்களையும் சென்றடையத் திட்டமிட்டோம். சிந்து சமவெளி நாகரிகம் முதல் அண்மைக் கால சைவப் பெரியார் தவத்திரு குன்றக்குடி அடிகளார் வரை சைவம் எப்படி





பயிற்சித் திட்டத்தில் பங்கு பெற்ற மாணவர்கள், கு. சுந்தரமூர்த்தி உள்ளிட்ட ஆசிரியர்களுடன்

யெல்லாம் வளர்ந்திருக்கிறது என்று வரலாற்று ரீதியாக அதே சமயம் மனித நேயம், சமதர்மம், வழிபாட்டு உணர்வு ஊட்டும் பாடல்களையும் இணைத்து - ''சைவப் பெருவெளியில் காலம் - மாணவர் பதிப்பு'' என்ற நூலாக வெளியிட்டு அதனைக் கல்லூரி மாணவர்கட்கு வழங்கி அவர்களைப் படிக்கச் செய்து, அதில் தேர்வும் வைத்தோம். 2004-2005-க்கான முதல் பிரிவில் பூம்புகார் கல்லூரியிலிருந்து 14 மாணவர்களும், ஸ்ரீதருமையாதீனக் கலைக் கல்லூரியிலிருந்து 16 மாணவர் களும், திருவாரூர் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் கல்லூரியிலிருந்து 10 மாணவர் களும் மயிலாடுதுறை ஏ.ஆர்.என்.விசுவ நாதன் கல்லூரியிலிருந்து 10 மாணவர் களும், விருத்தாசலம் கொளஞ்சியப்பர் அரசுக் கலைக்கல்லூரியிலிருந்து 30 மாண வர்களும் ஆக 80 மாணவர்கள் பங்கு பெற்றனர். இவர்களில் 32 மாணவர் களுக்குப் பூம்புகார் மேலையூரில் 24, 25, 26,27 மே 2005-ஆம் ஆண்டில் பயிற்சி வகுப்பு நடத்தப் பெற்றது. 32 மாணவர்களுக்கும் இலவச உணவு, தங்கும் பயணச் செலவு வழங்கப்பட்டது. பாடத்திட்டம் வருமாறு : சிவஞான போதம் 6 மணிநேரம்; திருவாசகம் - 2 மணிநேரம்; பெரியபுராணம் - 2 மணி நேரம்; ஆலய அமைப்பு, வழிபாட்டு முறை - 2 மணிநேரம்; சிவ சாதனங்கள் - 2 மணிநேரம்; அறிவியலும் சைவமும் - 1 மணிநேரம், அனைத்து மாணவர் களும் அன்றன்றைய பாடத்தைத் தாங்கள் அறிந்த வண்ணம் அன்றிரவு எழுதி கருத்தாய்வு வழங்கினார்கள். அதற்கும் 100 மதிப்பெண்கள் சமமாகத் தந்தோம். மூன்றாம் நாளன்று மின்வசதி இல்லாமல் வியர்க்க வியர்க்க அமர்ந்து கொண்டு அத்துணைபேரும் தங்கள் மனம் முழுமையாக மாறிப் போனமையை உணர்ச்சிவசப்பட்டுப் பேசினார்கள். இவர்களில் மூன்று பேர் கடவுள் மறுப்பாளர்கள். பூம்புகார் கல்லூரி சி. தேவி முதற்பரிசு ரூ. 2000/-பெற்றார். முகாம் தேர்வில் கூடுதல் மதிப்பெண் பெற்ற தருமை ஆதீனக் கலைக்கல்லூரி சி. மணிகண்டன் சிறப்புப்பரிசு பெற்றார். இரண்டாம் பரிசு ரூ. 1,000. இருவர் (1) சங்கரி, (2) வெ. சித்ராதேவி,



பட்டமளிப்பு விழா; வலது - மணிகண்டன் (சிறப்புப் பரிசு); இடது - தேவி (முதற்பரிசு)

மூன்றாம் பரிசு ரூ. 500. அறுவர் (1) ந. கீதா, (2) ஆர். ராஜலக்ஷ்மி, (3) எஸ். தீபன்ராஜ், (4) சி.ம. சிவஞானம், (5) வே. கோபால கிருஷ்ணன், (6) பா. பாலாமணி.

சென்னை மூத்த வழக்கறிஞர் ஜி. மாசிலாமணி (அன்று) ஆண்டுதோறும் 10,000 ரூபாய் வழங்குகிறார்.

21.8.2005 பள்ளி மாணவர்களுக்கான பயிற்சித் திட்டம் வகுத்து ''பெரிய புராணம் வாழ்க்கை இலக்கியம்'' என்ற பாடநூல் வெளியிடப்பட்டது. 2005-2006-ஆம் ஆண்டில் கல்லூரி மாணவர்கள் 300 பேரும், பள்ளி மாணவர்கள் 300 பேரும் தேர்வு எழுதுகின்றனர். இவ்விரு முயற்சிகளும் வெற்றி பெற்றுத் தமிழ்நாடு முழுமையும் பரவினால் என்னுடைய தேடல் ஒருவேளை முடிவுறும்.

சைவப் பெருவெளியில் முடிவு ஏது? துவக்கம் ஏது?

எனக்கு எப்படி இந்த ஆர்வம் வந்தது? ''அடியேன்'' என்ற பணிவுச் சொல்லைப் போட கை கூசுகிறது. பெரியவர்கள் பொறுத்தருள்க. என் தந்தையார் திருக்குறள், திருவாசகம், திருமந்திரம் ஆகிய நூல்களுக்கு உரை எழுதிய திரு. ஜீ. வரதராஜம் பிள்ளை யவர்கள். என்னுடைய 6-ஆம் வயதிலேயே எங்கள் இல்லத்திற்கு தந்தையாருக்குப் பாடம் சொல்லித் தர முதுபெரும் புலவர் அ. நடேச முதலியார் அவர்கள் வர ஆம்பித்து விட்டார்கள். அதன் பிறகு தந்தையாரின ஆசிரியர்களான திரு. அ.மு. சரவண முதலியார் அவர்கள், திரு. முத்து சு. மாணிக்கவாசகமுதலியார் அவர்கள், திரு. சி. அருணை வடிவேல் முதலியார் அவர்கள் மற்றும் அவர்கள் நெருங்கிப் பழகிய மகாவித்துவான் திரு. தண்டபாணி தேசிகர் அவர்கள், திரு. க. வச்சிரவேல் முதலியார் அவர்கள், திரு. ந.ரா. முருகவேள் அவர்கள் மற்றும் பல சைவ அறிஞர்களுடன் சிறுவயதிலேயே பழக நேர்ந்தது. 1970-ஆம் ஆண்டில் மயிலாடுதுறையில் தெய்வத் தமிழ் மன்றம் தொடங்கியபின் சொற் பொழிவுக்கு வந்த அறிஞர்கள் எனது இல்லத்திலேயே தங்கியமையால் உடனுறைவின் பயன் பெற்றேன். சொற்பொழிவு, கலந்துரையாடல் ஆகியவற்றால் செவிச் செல்வமும் கூடியது. என்னுடைய 14-ஆம் வயதில் (1956) சொல்லின் செல்வர் திரு. ரா.பி. சேதுப்பிள்ளை அவர்களின் 'தமிழ் இன்பம்' நூல் வாசிக்கத் தொடங்கினேன். இன்றளவும் ஆண்டுக்கு 3000 ரூபாய், 4000 ரூபாய் அளவில் நூல்கள் வாங்குகிறேன். இதுவரை தமிழ், ஆங்கிலம் என 4000 நூல்கள் வாங்கிப் படித்தும் வருகிறேன். இவற்றில் பெரும்பான்மை சைவ நூல்களே.

1988-1991-ஆம் ஆண்டுகளில் தருமை யாதீனம் மாலை நேரக் கல்லூரியில் நான்கு ஆண்டுகள் படித்து தேர்ச்சி பெற்று ''சித்தாந்த கலாநிதி'' பட்டம் பெற்றேன். முனைவர் கு. சுந்தரமூர்த்தி (சிவஞான மாபாடியம்), வி.சா. குருசாமி தேசிகர், சொ. சிங்காரவேலன், ப. நீலா ஆகியோர் பாடம் நடத்தினார்கள். 1999-2000-ஆம் ஆண்டுகளில் சித்தர்காடு திருநாவுக்கரசு பிள்ளையவர்களுடன் சேர்ந்து பதினான்கு சாத்திரங்கள், திருவாசகம், பெரியபுராணம், திருமந்திரம் நீங்கலாக பிற திருமுறைகள், சிவஞான மாபாடியம், ஞானாமிர்தம் மறுவாசிப்பு செய்தேன். 'திருமந்திரம்' ராம

கிருஷ்ணன் அவர்களிடம் திருமந்திரம் 2000 பாடல்கள் வரை கற்றேன்.

மலேசியாவில் நடைபெற்ற அனைத் துலக சைவசித்தாந்தக் கருத்தரங்கில் ''சூழ்நிலைக்கேற்ற வாழ்நிலை'' என்ற தலைப்பிலும், 2005-ஆம் ஆண்டில் சிதம்பரத்தில் அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற திருமந்திரக் கருத்தரங்கிலும், 2005-ஆம் ஆண்டில் சிதம்பரத்தில் நடைபெற்ற சைவ சித்தாந்த பெருமன்ற நூற்றாண்டு விழாவில் ''ஏழாம் திருமுறையில் சைவ சித்தாந்தக் கருத்துகள்'' என்ற தலைப்பிலும் உரையாற்றியுள்ளேன்.

நான் எழுதியுள்ள நூல்கள் :

(1) "இன்பமே எந்நாளும் துன்பமில்லை" (1994)

அப்பர் தேவாரத்தை (1) மனிதன் (2) தடைகள் (3) இறைவன் (4) என்ன தருவான்? (5) வழிபாடு (6) இன்பம் என ஆறு வகையாகப் பிரித்து அப்பர் பெருமானின் மூன்று திருமுறைகளையும்



உள்ளடக்கி எழுதப்பட்டது. ஆறாம் திருமுறையில் வரும் ''பொய்மாயப் பெருங்கடல்'' என்று தொடங்கும் பத்து பாடல்களையும் விளக்கியது எனக்குப் பெரிதும் நிறைவு தந்தது. அந்த ஆரூர்ப்பதிகம் அற்புதமான ஒன்று. ''தீவினைகாள்! ஐம்பெரும் பூதங்காள்'' என ஒவ்வொன்றாக விளித்து ''நீவிர் என்னைத் துன்புறுத்தாதீர். நான் யார் தெரியுமா? உலகு ஏழுக்கும் தலை வனாம் ஆரூர்ப் பெருமானின் அடியவன். நும்மால் நமைப்புண்ணேன்'' என்று செம்மாப்போடு சொல்கிறார். படித்துப் படித்து மகிழவேண்டிய பத்து பாசுரங்கள். ஆனால் யாரும் இப் பதிகத்தை மேடையிலோ, எழுத்திலோ பயன் படுத்தவேயில்லை.

இந்நூலுக்கு அணிந்துரை வழங்கிய மூதறிஞர் அ.ச. ஞான சம்பந்தனார் அவர்கள், 'இந்த மூவாயிரம் பாடல்களில் அங்கங்கே பொதியப் பட்டுள்ள அருங்கருத்துகள் படிப்பவர் மனத்தில் அவ்வப்பொழுது தோன்றினாலும் அவை கோவையாகத் தரப் படாமையின் மனத்தில் நிற்பது கடினம். இந்த உண்மையைப் புரிந்து கொண்ட நண்பர் இராஜசேகரன் இதற்கு ஒரு வழியைக் கண்டார். 4-ஆம் திருமுறை தொடங்கி 6-ஆம் திருமுறை முடிய முன்னும் பின்னுமாக, அங்கும் இங்குமாகக் காணப்படும் வாழ்க்கைக்கு வழி காட்டும் அருமருந்தாகிய கருத்துகளை எடுத்து வகைப் படுத்தித் தொகுத்து ஆறு தலைப்புகளில் தந்துள்ளார்'' என்கிறார்.

(2) சிவஞானபோதம் (1997)

12 நூற்பாக்களையும், 29 பக்கங்களில் எளிய நடையில் யாவருக்கும் புரியும் வண்ணம் எழுதப்பட்டுள்ளது.

(3) ஒன்றே குலம் (2003)

பதினோராம் வகுப்பு மாணவர் களுக்கு புறநானூறு, திருக்குறள், சிலப் பதிகாரம், திருமந்திரம், அப்பர் தேவாரம், பெரிய புராணம், திருவாய் மொழி, கம்ப ராமாயணம், திருஅருட்பா, பாரதியார் பாடல் ஆகிய நூல்களிலிருந்து ஒருமைப்பாடு தொடர்பான கருத்து களைத் தேர்ந்து எடுத்து எழுதப்பட்ட நூல்.

(4) "சைவப் பெருவெளியில் காலம் - இளைஞர் பதிப்பு" (2004)

கல்லூரி மாணவர் பண்பாட்டுப் பயிற்சித் திட்டத்திற்காக சிந்துசமவெளி நாகரிகம் தொடங்கி, காரைக்காலம்மையார், திருமூலர், நால்வர் பெருமக்கள், சேக்கிழார், மெய்கண்டார், தாயுமானவர், வள்ளலார், மீனாட்சி சுந்தரம்பிள்ளை, ஆறுமுக நாவலர், திரு.வி.க., தவத்திரு குன்றக்குடி அடிகளார் வரை வரலாற்று ரீதியாக அவர்கள் பங்களிப்பையும், படைப்பையும் சுவையாக விவரிப்பது இந்நூல்.

(5) "பெரிய புராணம் - வாழ்க்கை இலக்கியம்" (2005)

பள்ளி மாணவர் பண்பாட்டுப் பயிற்சித் திட்டத்திற்காகப் பெரிய புராணம் இன்றைய வாழ்விற்கு எவ்வாறு பயன்படுகிறது என்ற அடிப் படையில் எழுதப்பட்ட நூல்.

(6) "சைவப் பெருவெளியில் காலம்" (2003)

இந்நூல் நான் எழுதியவற்றுள் மிகவும் கடுமையாக உழைத்து ஆய்வு செய்து எழுதப்பட்ட நூல் ஆகும். 5.3.1996-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட முயற்சி செப்டம்பர் 2003-ஆம் ஆண்டில் நிறைவு பெற்றது. பத்தொன்பதாம், இருபதாம் நூற்றாண்டு சைவ வரலாற்றினைக் கூறுவது ஆகும். மூன்று தொகுதிகளாக வர உள்ளது. இது முதல் தொகுதி. 390 பக்கங்களைக் கொண்டது.

இந்நூல் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப் பட்டுள்ளது.

முதற்பகுதி

தொன்மைக் காலம் முதல் பதினெட்டாம் நூற்றாண்டு வரை சைவ சமயம் தமிழ்நாடு, இந்தியாவில் கண்ட வளர்ச்சி, வெளிவந்த தமிழ், இந்திய இலக்கியங்கள், அரசர்களின் பங்களிப்பு, சைவத்தின் பல்வேறு பிரிவுகள் : இது முன்னுரை ஆகும்.

இரண்டாம் பகுதி

(1) பத்தொன்பதாம் நூற்றாண்டு ஆன்றோர்கள் வரலாறும், சைவத் தொண்டும் - தமிழ்நாடு : ஹெச்.ஆர். ஹொய்சிங்டன் முதல் கோயில் ஆண்டவர் வரை - 54 ஆன்றோர்கள்.

(2) இருபதாம் நூற்றாண்டு ஆன்றோர் களின் வரலாறும், சைவத் தொண்டும் - தமிழ்நாடு; தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் முதல் ச. கங்காதரன் வரை 40 அறிஞர்கள்.

(3) 19, 20-ம் நூற்றாண்டு ஆன்றோர்கள் - ஈழம் - 17 ஆன்றோர்கள் இந்நூலுக் கென 1000-க்கும் மேற்பட்ட ஆங்கில, தமிழ் நூல்களைப் படிக்க நேர்ந்தது. 100-க்கும் மேற்பட்ட அறிஞர்களைச் சந்தித்தேன். தமிழ்நாட்டின் தலை சிறந்த நூலகங்களான உ.வே.சா. நூலகம், மறைமலையடிகள் நூலகம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவன நூலகம், கன்னிமாரா நூலகம், தஞ்சாவூர் டி.என்.இராமச் சந்திரன் நூலகம், வடலூர் ஊரன் அடிகள் நூலகம் ஆகியவற்றில் உள்ள சைவ நூல்களை எல்லாம் ஒரு சுற்று பார்த்து முடித்தேன்.

"சைவப் பெருவெளியில் காலம் - இரண்டாம் தொகுதிக்காக மதுரை, நெல்லை, நாகர்கோயில், திருச்சி மாவட்டம், சிதம்பரம், விருத்தாசலம், காரைக்கால், கோவை, சேலம், தஞ்சை, குடந்தை, பாண்டிச்சேரி, கடலூர், காஞ்சிபுரம், வேலூர், திருவண்ணா மலை, நாகப்பட்டினம், நெய்வேலி, பண்ருட்டி, காரைக்குடி, தேவகோட்டை ஆகிய ஊர்களில் இரண்டு ஆண்டுகள் சுற்றுப் பயணம் செய்து 2000-க்கும் மேற்பட்ட தொண்டர்கள், அறிஞர்களைச் சந்தித்தேன். இவையெல்லாம் ஒட்டு மொத்தமாகச் சேர்ந்து சைவம் பற்றிய எனது அறிவை விரிவாக்கியது.

இந்தப் பயணம் இன்னும் முடியவில்லை.

தொண்டர் தரிசனமும் பெருவெளி தானே!


அதற்கும் முடிவு ஏது? துவக்கம் ஏது/

இரா. இராஜசேகரன்

பிறந்த ஆண்டு - 15.5.1942; பிறந்த ஊர் - லால்குடி; பெற்றோர் - ஜி. வரதராஜம் பிள்ளை; தருமாம்பாள்; ஏற்பு பெற்றோர் - கே.எஸ். ராமலிங்கம் பிள்ளை, கௌரியம்மாள்)

உழவாரம்

நாயன்மார் அவதாரத்தலங்களில் குருபூஜைத் திருநாள் நடத்தும் ஆயுள் தொண்டர்கள்



1. **திருநீலகண்ட நாயனார்** – சிதம்பரம் பேராசிரியர் திரு. சாமி கிருஷ்ண மூர்த்தி.
2. **இயற்பகை நாயனார்** – காவிரிப் பூம்பட்டினம் – மதுரம் துவக்கப்பள்ளி ஆசிரியர்கள்.
3. **இளையான்குடிமாற நாயனார்** – இளையான்குடி (பரமக்குடி காளையார் கோயில் வழி) திரு. சு. முருகேசன்.
4. **மெய்ப்பொருள் நாயனார்** – திருக் கோவிலூர் பேராசிரியர் திரு. V. சச்சிதானந்தம்.
5. **விறன்மிண்ட நாயனார்** – திருச்செங்குன்றூர் - (கேரளா - கொல்லத்திலிருந்து 30 கி.மீ) புலவர் திரு மு. வடுகநாதன்.
6. **அமர்நீதி நாயனார்** – பழையாறை (கும்பகோணம் அருகில்) முனைவர் சிவ. திருச்சிற்றம்பலம்.
7. **எறிபத்த நாயனார்** – கருவூர் (கரூர்) - திரு. சிவ. மு. சடையப்பன்.
8. **ஏனாதி நாத நாயனார்** – எயினனூர் (நாச்சியார் கோயிலுக்கு மேற்கே 3 கி.மீ) புலவர் திரு. கோ. சுப்பிரமணியனார்.
9. **கண்ணப்ப நாயனார்** – உடுப்பூர் (திருப்பதியிலிருந்து 30 கி.மீ) சித்தாந்த ரத்தினம், புலவர் திரு. மு. செல்வநாதன்.
10. **குங்குலியக் கலய நாயனார்** – திருக்கடவூர் - திரு. ச. இரமேஷ்.
11. **மானக் கஞ்சாற நாயனார்** – ஆனந்த தாண்டவபுரம் - திரு பொன். சம்பந்தம்பிள்ளை.
12. **அரிவாட்டாயர்** – கணமங்கலம் (திருவாரூர்- திருத்துறைப்பூண்டி சாலையில் உள்ளது) திரு. இரா. சாரங்கபாணி.
13. **ஆனாய நாயனார்** – திருமங்கலம் (லால்குடியிலிருந்து வ.மே. 4 கி.மீ) - திரு. ப. சண்முக வேலாயுதம்.
14. **மூர்த்தி நாயனார்** – மதுரை திரு. தி. சுரேஷ்.
15. **முருக நாயனார்** – திருப்புகலூர் - திரு. மா. கேசவன்.
16. **உருத்திர பசுபதி நாயனார்** – திருத்தலையூர் (கொல்லுமாங்குடிக்கு கிழக்கே 3 கி.மீ) - பேராசிரியர் திரு. இரா. சம்பந்தமூர்த்தி.
17. **திருநாளைப்போவார்** – மேலாதனூர் (மயிலாடுதுறை - பட்டவர்த்தி சாலையில் வில்லியநல்லூருக்குக்

கிழக்கே 3 கி.மீ) பேராசிரியர் முனைவர் திரு.மு. சிவச்சந்திரன்.

18. **திருக்குறிப்புத் தொண்டர்** – காஞ்சிபுரம் - திரு. சிவ. கணேஷ்.

19. **சண்டேசுவர நாயனார்** – திருச்சேய்ஞலூர் (கும்பகோணம் - திருப்பனந்தாள் சாலை) - திரு. N. குருநாதன்.

20. **திருநாவுக்கரசு நாயனார்** – திருவாமூர் (பண்ருட்டி மடப்பட்டு சாலை) - திரு. V. முருகன், எம்.ஏ.,

21. **குலச்சிறை நாயனார்** – மணமேற்குடி (பட்டுக்கோட்டை - இராமேஸ்வரம் சாலை) - திரு. இரா. குஞ்சிதம்.

22. **பெருமிழலைக் குறும்ப நாயனார்** – மிழலை (புதுக்கோட்டை - மதுரை சாலை) - பேராசிரியர் திரு. பழ. முத்தப்பன்.

23. **காரைக்காலம்மையார்** – காரைக்கால் - திருமதி. ஆர். சகுந்தலா.

24. **அப்பூதியடிகள்** – திங்களூர் (கும்ப கோணம் - திருவையாறு சாலை) - பேராசிரியர் முனைவர். திரு.இரா. செல்வக்கணபதி.

25. **திருநீலநக்க நாயனார்** – திருச்சாத்த மங்கை (சன்னாநல்லூர் - நாகூர் சாலை) - பேராசிரியர் திரு. அ. ஞானசிகாமணி.

26. **நமிநந்தி அடிகள் நாயனார்** – ஏமப் பேறூர் (திருவாரூர் - திருத்துறைப் பூண்டி சாலை) பேராசிரியர் திரு. மகாராசன்.

27. **திருஞானசம்பந்தர்** – சீர்காழி - முனைவர் திரு. தி. மணிசண்முகம்.

28. **ஏயர்கோன் கலிக்காம நாயனார்** – பெருமங்கலம் (திருப்புன்கூரிலிருந்து வடக்கே 1 கி.மீ) - திரு. இரா. செல்வ நாயகம், எம்.ஏ., எம்.எல்.ஐ.எஸ்.,

29. **திருமூல நாயனார்** – சாத்தனூர் (திருவாவடுதுறை) திரு. ச. சண்முகவடிவேலு, பி.காம்.,

30. **தண்டியடிகள்** – திருவாரூர் - பேராசிரியர் திரு. க. கேசவனார்.

31. **மூர்க்க நாயனார்** – திருவேற்காடு (சென்னை) திரு. எஸ். வெங்கடேஷ் பாபு.

32. **சோமாசி மாற நாயனார்** – அம்பர் மாகாளம் (பூந்தோட்டத்திற்கு கிழக்கே 5 கி.மீ) திரு. இராச. கைலாசம்.

33. **சாக்கிய நாயனார்** – திருச்சங்கமங்கை (காஞ்சிபுரம் அருகில் கோனேரி குப்பம்) - அருட்புனல் திரு. இ. இராஜகோபாலன்.

34. **சிறப்புலி நாயனார்** – ஆக்கூர் (மயிலாடுதுறை - திருக்கடையூர் சாலை) - பேராசிரியர் திரு. மா. கருணாநிதி.

35. **சிறுத்தொண்ட நாயனார்** – திருச்செங்காட்டங்குடி (சன்னாநல்லூர் - திருப்புகலூர் அருகே 3 கி.மீ) - திரு. இராம. சிதம்பரம்.

36. **கழறிற்றறிவார்** – கொடுங்களூர் (கேரளா - திருஅஞ்சைக்களம்) முனைவர் திரு. மு. சபேசன்.

37. **கணநாதர்** – சீர்காழி திரு. தெ. இராஜாமணி, எம்.ஏ., எம்.எட்.,

38. **கூற்றுவர்** – களந்தை (களப்பால்) (திருத்துறைப்பூண்டி - மன்னார்குடி சாலை) - திரு. என். இராமலிங்கம்.

39. **புகழ்ச்சோழர்** – உறையூர் - திருச்சிராப்பள்ளி - புலவர் திரு. மு. வைத்தியநாதன்.

40. **நரசிங்க முனையரைய நாயனார்** – திருநாவலூர் (பண்ருட்டி - உளுந்தூர்பேட்டை சாலை) - திரு. சு. சிவசுப்பிரமணிய நயினார்.

41. **அதிபத்த நாயனார்** – நாகப்பட்டினம் - திரு. கி. காளிதாசன்.

42. **கலிக்கம்ப நாயனார்** – பெண்ணாகடம் (விருத்தாசலம் - ஜெயங்கொண்டம் சாலை) - நா. திருஞானசம்பந்தம்.

43. **கலிய நாயனார்** – திருவொற்றியூர் (சென்னை) - சித்தாந்த ரத்தினம், திரு.பனசை அருணா, எம்.ஏ., எம்.ஃபில்., தலைமையாசிரியர்.

44. **சத்தி நாயனார்** – வரிஞ்சையூர் (கீழ்வேளூர் - திருத்துறைப்பூண்டி சாலை) - திரு. ஆர். மாரிமுத்து.

45. **ஐயடிகள் காடவர்கோன் நாயனார்** – காஞ்சிபுரம் - திரு. சி. பாலாஜி.

46. **கணம் புல்ல நாயனார்** – இருக்கு வேளூர் (சேலம் - வாழப்பாடியி லிருந்து வடக்கே 6 கி.மீ) - திரு. பி. பழனிச்சாமி, பி.இ.,

47. **காரி நாயனார்** – திருக்கடவூர் - திரு. அ. சீனிவாசன்.

48. **நின்றசீர் நெடுமாற நாயனார்** – மதுரை - திரு. அ. பாண்டி.

49. **வாயிலார் நாயனார்** – மயிலாப்பூர் (சென்னை) - திரு. கே. இராஜு.

50. **முனையடுவார் நாயனார்** – நீடூர் (மயிலாடுதுறையிலிருந்து வடக்கே 3 கி.மீ) பேராசிரியர் திரு. இரா. மருதநாயகம்.

51. **கழற்சிங்க நாயனார்** – காஞ்சிபுரம் - திரு. சோம ஆறுமுகம்.

52. **இடங்கழி நாயனார்** – கொடும்பாளூர் (விராலிமலை - புதுக்கோட்டை சாலை) பேராசிரியர் திரு. சோ. குமரேசமூர்த்தி.

53. **செருத்துணை நாயனார்** – கீழ்த்தஞ்சாவூர் (திருச்செங்காட்டாங் குடியிலிருந்து 3 கி.மீ) - பேராசிரியர் திரு.வை. சிவசங்கரன்.

54. **புகழ்த்துணை நாயனார்** – செருவில்லிபுத்தூர் (அழகாபுத்தூர் கும்பகோணம் - நாச்சியார் கோயில் சாலை) - திரு. பி. மாசிலாமணி.

55. **கோட்புலி நாயனார்** – திருநாட்டியத்தான்குடி (திருவாரூர் - திருத்துறைப்பூண்டி சாலையில் மாவூரிலிருந்து மேற்கே 5 கி.மீ) - திரு. எ.ஆர். சச்சிதானந்தம்.

56. **பூசலார் நாயனார்** – திருநின்றவூர் (சென்னை - அரக்கோணம் புகை வண்டிச் சாலை) - சித்தாந்த ரத்தினம் புலவர் திரு. பனசைமூர்த்தி, எம்.ஏ., எம்.ஃபில்.,

57. **மங்கையர்க்கரசியார்** – பழையாறை வடதளி (கும்பகோணம் - பட்டீஸ்வரம் அருகில் 1 கி.மீ) - திருமதி. என். தேவிகாராணி, எம்.ஏ., எம்.எட்.,

58. **நேச நாயனார்** – காம்பிலி (ஆந்திரா மாநிலம் - பெல்லாரி - மயிலாடுதுறை - கூறைநாடு என்றும் கூறுவதுண்டு - பேராசிரியர் முனைவர் திரு. க. சேகர்.

59. **கோச்செங்கட் சோழ நாயனார்** – திருவானைக்காவல்-திருச்சிராப்பள்ளி பேராசிரியர் முனைவர் திரு. கி. சேகர்.

60. **திருநீலகண்ட யாழ்ப்பாணர்** – எருக்கத்தம்புலியூர் (இராஜேந்திரப் பட்டினம்) விருத்தாசலம் - ஜெயங்கொண்டம் சாலை) - திரு. பி. பொன்னுசாமிப் பிள்ளை.

61. **சடையனார்** – திருநாவலூர் - திரு. வி. சம்பந்த குருக்கள்.

62. **இசைஞானியார்** – திருவாரூர் பேரா சிரியர் திரு. பா. பாஸ்கரன், எம்.காம்., எம். ஃபில்.,

63. **சுந்தரமூர்த்தி சுவாமிகள்** – திருநாவலூர் - திரு. எஸ். சுப்ரமணியம் சுவாமி.

64. **மாணிக்கவாசகர்** – திருவாதவூர் (மதுரை அருகே) - திரு. ப. நடனபாதம்.


65. **சேக்கிழார்** – குன்றத்தூர் (சென்னை அருகே) - திரு. பரமானந்தம்.

நாயன்மார் ஆயுள் தொண்டர்கள்






சு. சுந்தரேசன் செட்டியார்



ப.தி.கோ. சிங்காரம் செட்டியார்



ப.தி.சோ. குமரசாமி செட்டியார்

சிவனடியார் திருக்கூட்டம், கும்பகோணம்

நாயன்மார் ஆயுள் தொண்டர்கள் பெயர் விவரம்

(இடமிருந்து வலமாக)

முதல் வரிசை

1. சாமி. கிருஷ்ணமூர்த்தி
2. ஏ. கஸ்தூரிபாய்
3. எஸ். முருகேசன்
4. கோ. சுப்பிரமணியனார்
5. எம். செல்வநாதன்
6. கே. இரமேஷ்
7. பொன். சம்பந்தம்பிள்ளை
8. ஆர். சாரங்கபாணி

இரண்டாம் வரிசை

9. எம். கேசவன்
10. ஆர். சம்பந்தமூர்த்தி
11. எம். சிவச்சந்திரன்
12. என். குருநாதன்
13. ஆர். குஞ்சிதபாதம்
14. பழ. முத்தப்பன்
15. ஆர். சகுந்தலா
16. ஏ. ஞானசிகாமணி

மூன்றாம் வரிசை

17. மகராசன்
18. எஸ். சண்முகவடிவேலு
19. கே. கேசவனார்
20. ஆர். கயிலாசம்
21. கி. இராசகோபாலன்
22. கருணாநிதி
23. இராமசிதம்பரம்
24. எம். சபேசன்

நான்காம் வரிசை

25. டி. இராஜாமணி
26. சிவசுப்பிரமணியன்
27. கே. காளிதாசன்
28. மாரிமுத்து
29. ஆர். மருதநாயகம்
30. சோம. ஆறுமுகம்
31. குமரேசமூர்த்தி
32. வை. சிவசங்கரன்

ஐந்தாம் வரிசை

33. ஏ. ஆர். சச்சிதானந்தம்
34. கே. சேகர்
35. பி. பொன்னுசாமிப்பிள்ளை
36. எஸ். சுப்பிரமணியம்
37. சிவ.நா. திருஞானசம்பந்தம்

தொழிலுக்கேற்ற தொண்டு

(மு. சிவச்சந்திரன்)



மயிலாடுதுறையில் ''உழவாரம்'' அமைப்பு மேற்கொண்டுள்ள முயற்சிகள் மாணப் பெரியவை. தனி ஒருவரால் செய்ய முடியாத ஒன்று. அதற்கு மயிலாடுதுறை அளவிலாவது அமைப்பு ஒன்று உருவாக வேண்டும். முனைவர் திரு. மு. சிவச்சந்திரன்- தலைவர்; புலவர் திரு. சா. முத்துக்கிருஷ்ணன்- துணைத் தலைவர்; கயிலைமணி திரு. க. ஞானசேகரன் - செயலர்; எஸ். பிரகாஷ் - இணைச்செயலர்; ஏ. சீனுவாசன் - துணைச்செயலர்; இரா. சம்பந்தமூர்த்தி - பொருளர்; இராம. சிதம்பரம் - செய்தித் தொடர்பாளர்; திரு. தி. ஜெயபாலன், ப. கோபாலன், எம். கேசவன், கே. நடராஜன், கே. பாலசுப்ரமணியன், எம். வரதராஜன், ஜி. திருநாவுக்கரசு, எஸ். கண்ணன், சி. சிவகடாட்சம் ஆகியோர் செயற்குழு உறுப்பினர்கள் ஆவர்.

அமைப்பு ஏற்பட்டாலும் நாயன்மார் குருபூசைத் திருநாளில் நாயன்மார் பற்றி உரையாற்ற அறிஞர்கள், புலவர்கள் வேண்டும். ஆனால், 63 திருநாட்கள் வருகின்றன. இன்றைய நாளில் பேச்சாளர்கள் 4,000, ரூ. 5,000 என்று வாங்குகின்றனர். இது ஒரு சிக்கலான சூழ்நிலை. உழவாரத்திற்கு இந்தச் சிக்கலே வரவில்லை. தருமையாதீனக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் முனைவர் திரு. மு. சிவச்சந்திரன், தாமே முன்வந்து உழவாரம் நடத்தும் எந்த நிகழ்ச்சி யாயினும் பொருள் ஏதும் பெறாமல் பங்கு பெற இசைவு தந்தார். அவர் மட்டுமல்ல, அவரோடு பணியாற்றும், பழகும் தமிழறிஞர்களையும் இப் பெரும் பணியில் ஆற்றுப்படுத்தினார். இது அரும் பெரும் செயல் ஆகும்.

முனைவர் மு. சிவச்சந்திரன் அவர்கள் நாடறிந்த நல்ல பேச்சாளர். தமிழகம் முழுமையும் அவர் ஏறாத மேடை இல்லை. மலேசியா, சிங்கப்பூர் வரை இவர் புகழ் பரவியுள்ளது. பட்டி மண்டபம், கருத்தரங்கம் என்று எல்லா நிலையிலும் மக்களைத் தம்சொல் வன்மையால் கவர்ந்து விடுபவர். சங்க இலக்கியம் முதல் பாரதியார் வரை கரைத்துக் குடித்தவர். தோத்திரமும், சாத்திரமும் முறையாகப் படித்தவர். ''போதமும் சித்தியும்'' என்ற நூலை எழுதியவர். அனைத்திற்கும் மேலாகத் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ 26-ஆம் குரு மகா சந்நிதானமவர்களின் அருளாசி முழுமையாகப் பெற்றவர்.

கம்பராமாயணச் சொற்பொழிவுகள் நிகழ்த்தச் சென்றால், நாளொன்றுக்கு எளிதாக ரூ. 2000, ரூ. 3000 வரை வாங்கலாம். ஆனால், அவற்றை எல்லாம் பெரிதாகக் கருதாமல் பொருள் ஏதும் பெறாது உரையாற்ற வருவது, பெரிய புராணத்தில் கூட இடம் பெறாத தொண்டு ஆகும். புதிய தொண்டு மரபினை சிவச்சந்திரன் அவர்கள் ஏற்படுத்தியுள்ளார்.

ஆம். சொற்றுணை வேதியன் சோதி வானவனை சொல்தொண்டால் பரவு கிறார் சிவச்சந்திரன்.

இதுவரை நூற்றுக்கும் மேற்பட்ட கூட்டங்களில் இதுபோல கலந்துள்ளார். ''உழவாரம்'' நடத்தும் ''மாணவர் பயிற்சித் திட்டத்திலும்'' எட்டு மணி நேரம் பாடம் நடத்துகிறார். ஒருமுறை ஒரே நாளில் 4 மணிநேரம் பாடம் நடத்தினார்.

மயிலாடுதுறையில் ஐந்து ஆண்டுகள் திருமுறை முற்றோதலில் பங்கு பெற்றிருக்கிறார்.

உழவாரம் அமைப்பின் ஆயுள் தொண்டர் திட்டத்தின்கீழ் திருநாளைப் போவார் ஆயுள் தொண்டராகப் பணியாற்ற முன்வந்து ஆண்டுதோறும் ஆதனூரில் திருநாளைப் போவார் திருநாள் நடத்தி வருகின்றார். ஆதனூர் நிகழ்ச்சியில் இவர் நடத்தும் தெரு முனைப் பிரசாரம் அடித்தட்டு மக்களிடமும் பெரியபுராணம் சென்று செல்லக்கூடிய அளவில் அமைந்துள்ளது.


பல இளைஞர்களைச் சைவ சமயத்தில் ஆர்வம் கொள்ளச் செய்கிறார். ''உங்களுக்கு இருக்கும் பணிகளில் எப்படி இதெல்லாம் செய்ய முடிகிறது'' என்று கேட்டால் ''பெரிய புராண அடியார்கள் தாங்கள் செய்யும் தொழிலுக்கேற்ற தொண்டினைச் செய்தார்கள். என்னுடைய தொழில் பேச்சு. அதனையே தொண்டாகக் கொண்டு விட்டேன்'' என்கிறார்.

ஒவ்வொருவரும் தொழிலுக்கேற்ற தொண்டினைச் செய்தால், தமிழ்நாடு உச்சத்துக்கு வந்து விடும்!

(பிறந்த ஆண்டு : 8.1.1950; பிறந்த ஊர் - அருங்கால், கீழப்பழுவூர். பெற்றோர் : கே. முத்தையா, பர்வதவர்த்தினி)

சொல்தொண்டு எனும் புதிய தொண்டர் மரபிற்கு முனைவர் சிவச்சந்திரன் அவர்களுடன் தோள் கொடுத்து உழவார இயக்கத்திற்கு உறுதுணையாய் இருக்கும் சொல் தொண்டர்கள் வருமாறு : (1) தெ. இராஜாமணி - வயது 50 இருக்கலாம்; குழையூர்; மயிலாடுதுறை குருஞான சம்பந்தர் உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்; கணநாதர் ஆயுள் தொண்டர். (2) முனைவர் இரா. மருதநாயகம் - வயது 45; தருமையாதீனம் கல்லூரி தமிழ்ப் பேராசிரியர்; முனையடுவார் ஆயுள் தொண்டர்; உடல் நலத்தையும் பொருட்படுத்தாமல் பொருள் நலத்தையும் எதிர்பார்க்காமல் உரையாற்றுபவர். (3) முனைவர் க. சேகர் - வயது 45 தருமையாதீனம் கல்லூரி தமிழ்ப் பேராசிரியர்; சொல் தொண்டோடு உழவாரம் நடத்தும் மாணவர் பயிற்சித் திட்டத்திலும் கலந்து கொண்டு பாடம் நடத்தவும், விடைத் தாள்களைத் திருத்தவும் உதவுபவர்; நேசநாயனார் ஆயுள் தொண்டர். (4) இரா. செல்வகுமார் ; வயது 40; பிறந்த ஊர் - நாங்கூர்; ஆக்கூர் பள்ளி தமிழாசிரியர்; மயிலாடுதுறை கோயில் அப்பர் குருபூசை விழா ஆயுள் தொண்டர். (5) சாமி. கிருஷ்ணமூர்த்தி - வயது 45; மயிலாடுதுறை அ.வ.அ. கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியர்; பொருட் செல்வத்தைப் பொருட்படுத் தாது அருட்செல்வம் ஒன்றையே கருதுபவர்.

கயிலை ஞானசேகரன்



மயிலாடுதுறையில் ''உழவாரம்'' மாநாடுகள் நடத்தும்பொழுது உணவுப் பகுதியைப் பற்றி கவலையே பட வேண்டாம். செலவும் சரி, நிர்வாகமும் சரி, முழுப்பொறுப்பினையும் திரு. ஞானசேகரன் அவர்கள் ஏற்றுக் கொள்வார். மாநாடு என்றால் எத்தனை பேர் வருவார்கள் என்று துல்லியமாகச் சொல்ல முடியாது. சிலசமயம் எதிர்பார்த்ததைவிட அதிகமாக வந்துவிடுவார்கள். சளைக்காமல் உணவு படைத்து விடுவார்.

எங்கிருந்து யாரிடம் பணம் பெறுவார் என்று தெரியாது. வெள்ளிக்கிழமை வரை வாட்டமாகவே இருப்பார். சனிக்கிழமை யன்று ஒவ்வொரு பொருளாக மண்டபத் துக்கு வந்துவிடும். ஒருமுறை சமையற் காரர்கள் வரவில்லை. மாநாட்டுக் காலை நிகழ்ச்சி நிறைவுறும் சமயம். நல்ல பசி நேரம். ஞானசேகரன் நண்பர்கள், உறவினர்கள் குழுவினர் களத்தில் இறங்கிவிட்டனர்.

உழவாரம் ஏற்பாடு செய்துவரும் திருப்புகலூர் பாதயாத்திரைக்கு சித்திரை, சதயம் தோறும் 20 பேரை அழைத்துக் கொண்டு பணியினை மேற்கொள்வார். 15 ஆண்டுகளுக்கு மேலாக இப்பணி நடக்கிறது.

உழவாரம் மேற்கொள்ளும் எந்தப் பணியாயினும் - பன்னிரு திருமுறை முற்றோதல் (இதுவரை 36 கோயில்களில் முற்றோதல்) இல்லங்களில் நலம் தரும் வழிபாடு, நாயன்மார் குருபூசைத் திருநாட்களில் அவதாரத் தலங்களுக்கு அடியார்களை அழைத்துச் செல்லுதல் என்று பணியாற்றுகிறார். உழவாரத்தின் மயிலாடுதுறைப் பகுதி (ஆயுள் தொண்டர்கள் உள்ளிட்டது) செயலர் அல்லவா?

உழவாரம் தவிர சித்தர்காடு சிற்றம் பல நாடிகள் கோயில் திருப்பணி, வழி பாட்டு மன்றம் அமைத்து 12 ஆண்டு களாக சொற்பொழிவுகள், நூல் வெளி யீடு என மிகச் சிறப்பாகச் செயல்படுத்து கிறார். மாதிரிமங்கலம் ரோட்டு சுவாமி கள் குருபூஜை, மாத பூஜை, குட முழுக்கு, குடில் கட்டுதல் என 28 ஆண்டுகளாகப் பணிபுரிகிறார்.

ஜோதிர்லிங்க யாத்திரை மேற் கொண்டிருக்கிறார். கயிலை யாத்திரை யும் திருவருள் கூட்டி வைத்திருக்கிறது. இவரது துணைவியாரும் இவர்தம் காரியம் யாவினுக்கும் கை கொடுக்கிறார்.

(பிறந்த ஆண்டு - 25.09.1946)

சம்பந்தமூர்த்தி

விலங்கியல் பேராசிரியர்; சைவ சித்தாந்தம் நான்காண்டு பயிற்சியில் முதல் வகுப்பு பெற்றவர்; பிறந்தது மேலப்பெரும்பள்ளம் கரைமேடு கிராமம்; சிவபூசைச் செல்வர்; எளிய குடும்பத்தில் பிறந்தவர்; தன் முயற்சி யால் முன்னுக்கு வந்தவர்; ஒன்றரை இலட்ச ரூபாய் தலச்சங்காடு திருப் பணிக்கு வழங்கி அந்தத் திருப்பணியைச் செம்மையாகச் செய்தார். குரு மகா சந்நிதானங்களே வியந்து போகக்கூடிய அளவு குடநீராட்டு விழாவினை ஆகம விதிகளுக்குச் சிறிதும் குறையாமல் செய்து முடித்தார். குடநீராட்டு விழா முடிந்த பின்னும் வழிபாடு ஒழுங்காக நடக்கிறதா? குருக்களுக்குத் தட்டு இல்லாமல் பொருள் வருகிறதா? என்றெல்லாம் தொடர்ந்து கவனித்து இடைவெளி ஏற்படுகிற இடமெல்லாம் நிரப்பிவிடுவார். பாடல் பெற்ற தலம் ஒவ்வொன்றுக்கும் சம்பந்தமூர்த்தி போல ஒருவர் இருந்துவிட்டால் போதும். பாடல் பெற்ற தலமெல்லாம் அடியார் பெற்ற தலமாகி விடும்!

உழவாரம் சார்பில் உருத்திரபசுபதி நாயனார் ஆயுள் தொண்டர். ஆயுள் தொண்டராகப் பொறுப்பேற்றதிலிருந்து இதுவரை தொடர்ந்து சென்று குருபூசை விழா நடத்தி வருகிறார். சிலர் சில ஆண்டுகள் செல்லாமல் இருந்து விடுவார்கள். சிலர் குருக்களுக்குப் பணம் அனுப்பி விடுவார்கள். சம்பந்த மூர்த்தி அவ்வாறு செய்ய மாட்டார். ஊர் மக்களை இணைத்து அனைவரும் பங்குபெறச் செய்யும் அழகே அழகு! தற்சமயம் அக்கோயிலின் கும்பா பிஷேகத்திற்காக முழுமூச்சாகச் செயல் படுகிறார். ''ஒரு பணியை எடுத்துக் கொண்டால் அதனை மெல்ல மெல்ல விரிவுபடுத்தி மிகப்பெரும் சாதனை என்று போற்றும் அளவு கொண்டு செல்ல வேண்டும். அதுதான் உண்மையான பணி'' என்பது சம்பந்தமூர்த்தியின் தாரக

மந்திரம். அவர் வாழ்க்கை ஓர் எடுத்துக் காட்டு.

திருமுறைகளை இசையுடன் பாடுவது, வழிபாட்டு முறையில் மரபு வழுவாமல் இருப்பது, உழவாரப் பணிகளில் துணை நிற்பது - இவையெல்லாம் இக்கரிய செம்மலின் அரிய செயல் வண்ணம்!


(பிறந்த ஆண்டு - 15.1.1947; பிறந்த ஊர் - கரைமேடு, மேலப்பெரும்பள்ளம்; பெற்றோர் - ரத்னசாமி - ராமாமிருதம்)

இராம சிதம்பரம்

நகரத்தார்க்கே உரிய நற்பண்புகள் மிக்கவர். உழவார விழாக்கள், மாநாடுகளில் இவருக்குத் தனிப்பங்கு உண்டு. தொலைபேசி மூலமே அன்புவலை வீசி விடுவார். சிதம்பரம் மாநாடு நடத்த மண்டபம் ஏற்பாடு செய்யவும், பெரியவர் சுப்பையா செட்டியார் அவர்களைக் கொண்டு அரியவிருந்து படைத்ததும் மறக்க முடியாத பணிகளாகும். அரிய விருந்து என்றால் அரிமா சங்க விருந்துகளுக்கு இணையாக - சைவத் திருக் கூட்டம் என்றால் புளிச் சாதம், தயிர்சாதம் என்ற நிலை மாற்றி - ரோஜாப்பூ குல்கந்தில் பேரிச்சம் பழங்களும், வெண் பொங்கலில் முந்திரி பருப்புகளும் கலந்து படைத்த விருந்து. இவர் நடத்தும் சிறுத்தொண்டர் விழா காணக் கண்கோடி வேண்டும். நகரத்தார்க்கே உரிய முறையில் பெருவிருந்து படைப்பார். (பிறந்த ஆண்டு - 27.6.1947; பிறந்த ஊர் - காரைக்குடி)

சா. முத்துகிருஷ்ணன்

உழவார இயக்க மாநாடு, குருபூசை விழாக்கள், திருமுறை முற்றோதல், மாணவர் பயிற்சித் திட்டத்தின்கீழ் பாடம் நடத்துதல், விடைத்தாள் திருத்துதல் அனைத்திலும் பங்கேற்பவர். மயிலாடுதுறையில் நடக்கும் எந்த சமய நிகழ்ச்சியாயினும் இவரில்லாமல் நடக்காது. சிவனடியார் திருக்கூட்டத்தில்



திருவிளையாடற்புராண விளக்கம் கொடுத்து வருகிறார். சித்தாந்த கலாநிதி, ஓய்வு பெற்ற தமிழாசிரியர், தலைமையாசிரியர், எறிபத்த நாயனாரின் மயிலாடுதுறைத் தொண்டர்.

(பிறந்த ஆண்டு - 22.3.1942; ஊர் - சேந்தங்குடி, மயிலாடுதுறை; பெற்றோர் - க. சாம்பசிவம் பிள்ளை)

அருட்பணிச்செல்வர்

மயிலாடுதுறை நகரில் மையப் பகுதியில் தெய்வத் தமிழ் மன்றத்தில் சமயச் சொற்பொழிவுகளும் இலக்கியச் சொற்பொழிவுகளும் நடந்து கொண்டிருந்த சமயம், மயிலாடுதுறையின் மேற்குப் பகுதியில் காவிரி நகரில் அமைதியாகப் பல பெரும் பணிகள் நடந்து கொண்டிருந்தன. புராணங்களும், சாத்திரங்களும் தொடர் வகுப்புகளாக நடத்தப்பட்டு வந்தன. திருமுறைகள் பன்னிரண்டுமே தொடர் சொற்பொழிவுகளாக நடத்தப்பட்டன. சிறப்புக்கு உரியவற்றில் சில: திருவாசகம், திருக்கோவையார், தாயுமானவர் பாடல்கள். பெரியபுராணம் நான்கு முறை முழுமையாகப் படித்து விரிவுரைகள் சொல்லப்பட்டன. திருவிளையாடற் புராண விரிவுரை தொடர் சொற்பொழிவாக வழங்கப்பட்டது. கந்தபுராணம் முழுமையும் ஓதப்பட்டது. இத்தனையும் நடத்தியவர் அருட்பணிச் செல்வர்

அமரர் கு. பாலகிருஷ்ண உடையார் ஆவார். 1969-ஆம் ஆண்டில் காவிரி நகரில் ஞானானந்தர் வழிபாட்டுச் சங்கம் ஒன்றை நிறுவி உடையார் அவர்கள் இத்துணை பணிகளும் செய்து வந்தார்கள். வாரம் இருமுறை நடந்த நிகழ்ச்சிகளில் ஜி.கல்யாணம் பிள்ளை (2 ஆண்டுகள்) வி.சா. குருசாமி தேசிகர் (திருவாசகம் - 1 ஆண்டு), மு. சிவச் சந்திரன் (பெரிய புராணம்) உரையாற்றி யிருக்கின்றனர்.

இச்சிறப்புக்கள் எல்லாம் பெற்ற பின்னும் உடையார் மனம் குறையுள்ள தாகவே இருந்தது. எனவே, 1990-ஆம் ஆண்டு மே மாதம் 11-ஆம் தேதி சைவ சித்தாந்தப் பெருமன்றக்கிளை ஒன்றைத் திரு. அம்பை சங்கரனாரைக் கொண்டு துவக்கினார். ஆறு ஆண்டுகளில் (1990-96) அரும்பெரும் சொற்பொழிவுகள் எல்லாம் நிகழ்ந்தன. தவத்திரு பொன்னு சாமி அடிகளார் உண்மை விளக்கம், திருவருட்பயன், சிவப்பிரகாசம், சிவஞான சித்தியார் ஆகிய நூல்களில் உள்ள அரும்பொருள் விளக்கங்களை மூலப் பாடல்கள் முழுமையும் சொல்லி விளக்கினார். திருக்குறள் முழுமையும் நாற்பது நாள் தொடர் சொற்பொழிவாக விளக்கினார். கந்தர் சஷ்டி நாள்களில் தொடர்ந்து வரும் ஆண்டுகளில் கந்தர் அலங்காரம், கந்தபுராணச் சுருக்கத் தொகுப்புப் பாடல்கள், சம்பந்த சரணாலயர் பாடிய கந்தபுராணம், கந்தசஷ்டி கவசம், கந்தர் அநுபூதி, கந்தர் கலிவெண்பா ஆகியவை முறையே சொல்லப்பட்டன.

தமக்கு ஞானோபதேசம் செய்த ஸ்ரீலஸ்ரீ மீனாட்சி சுந்தர தேசிக சுவாமிகள் குரு பூசையை வருடாவருடம் கொண்டாடினார்கள். நாயன்மார்கள் நால்வர் குரு பூசைகளையும் சிறப்பாகக் கொண்டாடி மகேசுவரபூசையும் செய் வித்து வந்தார்கள். சித்தாந்த சாத்திர விரிவுரை ஆற்றிய தவத்திரு பொன்னு சாமி அடிகளார் குரு பூசையும் கொண்டாடி அன்னதானம் செய்து வந்தார்கள். திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் நினைவு நாளையும் விடாது கொண்டாடி வந்தார்கள். திருக் கோயிலூரில் 14 ஆண்டுகளாகத் திருமுறை முற்றோதல் நடத்த ஏற்பாடு செய்தார்கள். உடையார் அவர்கள் பூசை செய்வதே தனி அழகாகும். அருங்காலை நேரத்தில், அன்றாடக் கடமைகள் முடித்து, நீராடி, நீறாடி சிவபூசையில் அமர்வார்கள். எப்பொழுதும் திருநீறும் சிவமணியும் துலங்கக் காட்சி அளிப்பார்கள்.

அவர்கள் தோற்றமே இனிமையும் எளிமையும் உடையதாய் இருக்கும். நாலுமுழ வேஷ்டியும், முழுக்கை கதர் ஜிப்பாவும், மேல்துண்டும் அணிந்து வெளியில் செல்வார்கள். வேஷ்டியைக் கணுக்காலுக்கு மேலேதான் கட்டி இருப்பார்கள். சிவப்பு நூல் கயிற்றில் கோத்த ஒற்றை உருத்திராட்சம் கழுத்திற்கு அணி செய்யும். விபூதி அணிந்த நெற்றியுடன் காணப்படுவார். அவரது மெல்லிய உடலும், ஆடை அணிகலன்களும் அப்பர் பெருமானே நேரில் வந்ததுபோன்று காட்சியளிக்கும். எல்லோரிடமும் இவர் இனிமையாகவே பேசுவார். தன் முதிர்ந்த 84-ஆம் வயதிலும் அன்றைய நாள் வரை தன் நித்ய கடமையான சிவபூசை செய்து, இறைவனை வழிபட்ட உடையார் அவர்கள் 24.10.1996 காலை 5.45 மணிக்கு இறைவனடி சேர்ந்தார்.

(1912 - 1996; பிறந்த ஊர் - கடகம்; மயிலாடுதுறை வட்டம்)

திருநாவுக்கரசு பிள்ளை

''எப்பொழுதுமே சாத்திரச் சிந்தனை; சைவ சமயமே வாழ்க்கை; வேறல்ல. இரயில்வேயில் டிக்கெட் பரிசோதகராக இருக்கும்பொழுது பணிநேரம் போக அமர்ந்து இருக்கும்பொழுதும் சாத்திரமே படித்தல்; பயணிகள் யாராவது கேட்டால் விளக்குதல்; சைவ சித்தாந்தமே என்



பொழுதுபோக்கு'' இப்படி ஒரு பெருமகனார் வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்றால் வியப்பாகத்தான் இருக்கிறது. அவர்கள்தான் உடையார் அவர்களின் நெருங்கிய நண்பர் சித்தர்காடு திருநாவுக்கரசு பிள்ளையவர்கள்.

எட்டுமுறை சித்தாந்த சாத்திரமும், மூன்றுமுறை பன்னிரு திருமுறையும் படித்து முடித்துள்ளார்கள். *1999*-ஆம் ஆண்டு டிசம்பரில் எனக்கு ஒரு முக்கியமான வழக்கு. தினமும் நீதிமன்றம் செல்ல வேண்டும். சற்று பதற்றமான சூழ்நிலை. ஆறுதலாகப் பேசலாம் என்றால் குடும்பத்தாரோ சென்னையில் இருந்தனர். அந்த நேரத்தில் திருநாவுக்கரசு பிள்ளையவர்களுடன் இணைந்து சாத்திரம், திருமுறை படிக்கலாமே என்று நினைத்தேன். பிள்ளையவர்கள் பையை எடுத்துக் கொண்டு வந்துவிட்டார்கள். மயிலாடுதுறை இராஜசேகரபவனம் இல்லத்தில் (தற்போதைய ஹோட்டல் சிலம்பு) தங்கி விட்டார்கள். காலையிலேயே படிக்க ஆரம்பித்து விடுவோம். அங்கேயே உட்கார்ந்து சாப்பிடுவோம். நீதிமன்ற நேரம் வந்தவுடன் கிளம்பி விடுவேன். பிள்ளையவர்கள் அங்கேயே படுத்திருப்பார்கள். வழக்கு நேரம் முடிந்தவுடன் இல்லம் வந்து நுழைவேன். நேராக சித்த புருஷர் போல அமர்ந்திருப்பார்கள். ''தனியாக விட்டுச் சென்று விட்டேனே'' என்று குற்ற உணர்வு இருக்கும். அவர்கள் அதைப் பொருட்படுத்துவதே இல்லை. ''உட்கார்ந்த இடத்தில் உணவு; அருகிலேயே கழிப்பறை; நீங்கள் வந்தவுடன் சாத்திர பாடம். இந்த சுகம் எங்கு கிடைக்கும்?'' என்பார்கள். பிறகு இரவு வரை படிப்போம். இதுபோல இரண்டு மாதம் அவர்களுடன் இணைந்து *14* சாத்திரங்கள் *7,9,11*-ஆம் திருமுறைகள் திருக்கோவையார், சிவஞான மாபாடியம், ஞானாமிர்தம் அனைத்தும் படித்தோம். வழக்கின் வெம்மையே தணிந்தது. பாடியம் முடிந்தது. பெரிய ஆய்வரங்கம் நடத்தி அவர்களுக்குப் பண முடிப்பு வழங்கினோம். ''அதுமட்டும் வேண்டாம்'' என்று கொடுத்து விட்டார்கள்.

இத்தனைக்கும் திருநாவுக்கரசு பிள்ளையவர்கள் ஆசிரியரைக் கொண்டு பாடம் கற்கவில்லை. தானாகப் படித்தது தான். அதுவும் அந்த இரயில் சத்தத்தில் படித்தது.

(பிறப்பு - 1925; ஊர் - திருவெண்காடு)

காவேரிநகர் திருமுறைக் குழாத்தோடு தங்களை இணைத்துக் கொண்ட பிற ஆன்றோர்கள்

1. ஆறுமுக முதலியார் *(1934 - 1992)*; ஆசிரியர்; கந்தபுராணம், திருக்கோவையார் சொற்பொழிவுகள்.

2. அப்புலிங்க முதலியார் *(1992)*; ஆசிரியர்; தேவார திருவாசகம் இசையோடு பாடுவார்; சொற்பொழிவுகள் செய்வார்.

3 கோ. ஆறுமுகம் *(1930)*; மூவலூர் ஸ்ரீநமசிவாய மூர்த்திகள் நூலகப் பொறுப்பு; திருப்பூண்டி, நாகப்பட்டினம் *1950*-ஆம் ஆண்டிலிருந்து திருமுறை விளக்கம் சொல்லி வருகிறார். *1972*-ஆம் ஆண்டிலிருந்து பெரிய புராணம் *(3* முறை), கந்தபுராணம் *(5* ஆண்டுகள் - ஒரு முறை), திருவிளையாடற்புராணம் *(7* இடங்கள்) சொல்லியிருக்கிறார்.

ஜி. கல்யாணம் பிள்ளை



இந்தக் காலகட்டத்தில்தான் (1970 - 1980) அமரர் ஜி. கல்யாணம் பிள்ளையவர்கள் கச்சேரி ரோடில் இருக்கும் அபிராமியம்மையார் யோக மடத்திற்கு வந்து தங்கி தனது ஓய்வுக் காலத்தைக் கழிக்கத் திட்டமிட்டார்கள். அபிராமி அம்மையாரின் பேரனார். சிறந்த சைவ அறிஞர். திருக்கோயில், அருளோசை, சித்தாந்தம் இதழ்களின் ஆசிரியராகச் சில காலம் இருந்திருக் கிறார் என்றால் அவரது புலமையை விளக்க வேண்டியதில்லை. சைவ சித்தாந்தப் பெருமன்றத்தின் செயலராக இருந்திருக்கின்றார். அவர்கள் மயிலாடுதுறைக்கு வந்து தங்கிய நாளிலிருந்து யோக மடத்தில் சமய சொற்பொழிவுகளும், சிந்தனை அரங்குமாகக் கும்மாளியிட்டது. பழுத்த சைவராக இருந்தாலும் தற்கால இலக்கிய முயற்சிகளுக்கும் இடம் கொடுத்தார்கள். இவர்கள் காலத்தில் மயிலாடுதுறையில் நடந்த சைவக் கூட்டங்களில் இவர்களே தலைவராக இருப்பார்கள். (1903 - 5.12.1981).

கோ. ஞானசுந்தரம்

இதனையடுத்துப் பணி முடித்து மயிலாடுதுறை வந்த மற்றுமோர் ஓய்வாளர் முன்னை கூட்டுறவு சங்கத் துணைப்பதிவாளர் அமரர் கோ. ஞானசுந்தரம் ஆவார். இவர் மயிலாடுதுறை வந்த கால கட்டத்தில்தான் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குரு மகா சந்நிதானம் அவர்கள் நாடெங்கும் குருஞானசம்பந்தர் பணி மன்றத்தினைத் தொடங்கினார்கள். இவர்கள் மயிலாடுதுறை கிளையின் பொறுப்பேற்று திங்கள் வழிபாடு முறையாக நடத்தினார். 1983-87-ஆம் ஆண்டுகளில் 274 பாடல் பெற்ற தலங்களுக்கும் யாத்திரையாக மயிலாடுதுறை சிவனடியார்களை அழைத்துச் சென்ற அருஞ்செயலை இன்றும் பெரியவர்கள் வியந்து சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். அந்தத் தலயாத்திரை முழுமையிலும் கலந்து கொண்டு ஊக்குவித்தவர்கள் திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடம் எஜமான் சுவாமிகள் ஆவார்கள். ஸ்ரீ எஜமான் சுவாமிகள் மகிழுந்து முன்னே செல்ல பின்னால் பேருந்திலே அடியார்கள் வர தலங்கள் தோறும் கோலாகல வரவேற்பு! விருந்து! வாசலில் மெழுகிட்டு, கோலம் போட்டு சுவாமிகளுக்குப் பாத பூஜை செய்தும் தோரணங்கள் கட்டி வரவேற்றதும் பாடல் பெற்ற தல யாத்திரைக்கு நல்ல அணிந்துரையாகும்.

தனியூர் சிவனடியார் திருக்கூட்டம்

மயிலாடுதுறையில் மன்றங்களுக்கும் குறைவில்லை. தனியூர் சிவனடியார் திருக்கூட்டம் சற்று பழைமையானது. 1954-ஆம் ஆண்டில் குஞ்சு செட்டியார் (பிறந்த ஆண்டு 1904). அவர்கள் திருக்கூட்டத்தைத் தொடங்கினார்கள். பின்னர் பழனியப்பா செட்டியார் (1910) தலைவர் ஆனார்கள். தற்போதைய தலைவர் திரு. அய்யாரப்ப செட்டியார் செயலர் திரு. என்.எஸ். இராமலிங்கம் செட்டியார். உழவாரப்பணி, தல யாத்திரை, ஆண்டுவிழா எனப் பணி விரிகின்றது.

மன்றச் செயலர் இராமலிங்கஞ் செட்டியார் (11.5.1927, கூறைநாடு) சிவ

பூஜா துரந்தரர்; பலருக்குச் சிவபூசை செய்வித்துள்ளார். இவர் பங்கேற்காத சிவபூஜை மயிலாடுதுறையில் கிடையாது. இவர் இடபக் கொடி ஏற்றினால் தான் மயிலாடுதுறையில் விழாவே தொடங்கும். அப்படி ஒரு ராசி. மயிலாடு துறையில் பல வழிபாட்டு மன்றங் களைத் துவக்கியுள்ளார். ஐம்பது ஆண்டு களாகச் சைவப்பணி ஆற்றி வருகிறார்.

அர்த்தஜாம வழிபாட்டு மன்றம்

1963-ஆம் ஆண்டில் திரு. ராமசாமி பிள்ளையவர்களும் *(1918)* திரு. அம்பிகாபதி அவர்களும் *(1932)* மாயூர நாதர் திருக்கோயிலில் அர்த்தஜாம வழிபாட்டு மன்றத்தைத் தொடங்கி னார்கள். அமரர் திரு. ஜி. கல்யாணம் பிள்ளை, என்.எஸ்.பி. நகை மாளிகை சிங்காரம் செட்டியார் துணையுடன் *1978*-ஆம் ஆண்டில் தொடங்கி திருப்புகலூர், திருநாவலூர், திருஅஞ்சைக் களம் முதலிய திருக்கோயில்களில் *3* முறை திருமுறை முற்றோதல் செய்திருக் கிறார். நித்ய வழிபாடு, தலயாத்திரை எனப் பணி அமைந்துள்ளது.

ஸ்ரீ கௌரி மாயூரநாதர் சிவனடியார் திருக்கூட்டம்



1987-ஆம் ஆண்டு மயிலாடுதுறை சைவ சமய வரலாற்றில் ஒரு மைல் கல். மயிலாடுதுறையில் உள்ள சிவன் கோயில்களில் எல்லாம் வழிபாட்டு மன்றங்கள் தொடங்கப்பட்டன. பல இளைஞர்கள் ஆர்வத்துடன் வழிபாட்டி லும், உழவாரப் பணியிலும் ஈடுபட்டனர். இந்த வரிசையில் *1987*-ஆம் ஆண்டு முதலில் துவங்கப்பட்ட அமைப்பு ஸ்ரீ கௌரி மாயூரநாதர் சிவனடியார் திருக்கூட்டம் ஆகும். இதனை ஆரம்பித்தவர் கிருஷ்ணமூர்த்தி என்ற இளைஞர். மூன்று மன்றங்களைத் தொடங்கினார். ஐம்பதுக்கும் மேற்பட்ட இளைஞர்களை நெறிப்படுத்தினார். உழவார அமைப்பில் இணைந்து கோட்புலி நாயனார் ஆயுள் தொண்டராக வும் இருந்தார். இறைவன் திருவுள்ளம்; *36* வயதிலேயே தன்னிடம் அழைத்துக் கொண்டான். *(4.3.1954 - 1990)*

அவர் உருவாக்கிய இளைஞர்களில் தலைமைச் சீடர் முருகானந்தம் ஆவார். ஸ்ரீ மாயூரநாதர் திருக்கோயிலோடு தன்னை ஒன்றுபடுத்திக் கொண்டார். வாரவழிபாடு, உழவாரப் பணி என்று தொடங்கி இன்று கும்பாபிஷேகம் வரை மாயூரநாதரைச் சிக்கெனப் பிடித்துக் கொண்டார். நல்ல வருமானமுள்ள வேலையைக்கூட விட்டுவிட்டு இன்று மாயூரநாதர் கோயிலில் பணிசெய்ய இசைந்துள்ளார். சுற்றுப்புறக் கோயில் களில் வழிபாட்டு மன்றங்கள் அமைக்க வும் பாடுபடுகிறார். நீடூர் கோயில் முனையடுவார் கோயில், என *10*-க்கு மேற்பட்ட கோயில்களில் மகேசுவர பூசை செய்து வருகிறார். மயிலாடு துறையில் திருமுறை முற்றோதல், திரு விளையாடற்புராணம் – *100* இடங்களில் நிகழ்த்தியுள்ளார். இத்திருக்கூட்டத்தின் தலைவர் திரு. என்.எஸ். இராமலிங்கம் செட்டியார். (முருகானந்தம் பிறந்த நாள் - *10.1.1965*; பிறந்த ஊர் - செம்மங்குடி, சீர்காழி அருகில்; பெற்றோர் - என். கோவிந்த ராஜன், பிரகுஜாம்பாள்)

பிற மன்றங்கள்

முருகானந்தம் மற்றும் சிவனடியார் திருக்கூட்டத்தால் *1987*-ஆம் ஆண்டில் துவக்கப்பட்ட மற்றுமொரு மன்றம் காசி விசுவநாதர் வழிபாட்டு மன்றம் ஆகும். செவ்வாய்க்கிழமை தோறும் வார

வழிபாடு நடைபெற்று வருகிறது. 1990-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட ஸ்ரீ அய்யாரப்பர் வழிபாட்டு மன்றம் வாரந்தோறும் உழவாரப்பணி, பிரதோஷ வழிபாடு, திருமுறை முற்றோதல் நிகழ்த்தி வருகிறது. தலைவர் என்.எஸ். இராமலிங்கம் செட்டியார்; செயலர் - எம்.சுவாமிநாதன்.

புனுகீஸ்வரர் சிவனடியார் திருக்கூட்டம்

1992-ஆம் ஆண்டில் தொடங்கப் பட்ட புனுகீஸ்வரர் திருக்கூட்டம் மிகச் சுறுசுறுப்பான ஒன்று. மாதந்தோறும் உழவாரப்பணி, வெள்ளிக்கிழமை தோறும் அர்த்தஜாம வழிபாடு, தை மாதம் கடைசி வெள்ளிக்கிழமை இலட்ச தீபம் இடுதல் எனப் பணியாற்றுகிறது. திருநின்றவூர் வார வழிபாட்டு மன்றம் இத்திருக்கூட்டத்தின் பொறுப்பில் உள்ளது. ஐம்பதுக்கும் மேற்பட்ட கோயில்களில் உழவாரப் பணி செய்துள்ளனர். 200-க்கு மேற்பட்ட இளைஞர்கள் உழவாரப் பணிகளில் ஈடுபடுகின்றனர். இவர்களையெல்லாம் இயக்கும் செயல் வீரர் தட்சிணாமூர்த்தி ஆவார் (1964)

தட்சிணாமூர்த்தி அவர்களும், அவரின் நண்பர்களும் உழவாரம் நடத்துவதோடு, உருத்திரபசுபதியார் குருபூசையன்றும், திருநாளைப்போவார் குருபூசையன்றும் உணவு தயாரித்து உதவுகின்றனர்.

வலம்புரி நகர் வார வழிபாட்டு மன்றம்

''உழவாரம்'' அமைப்பின் முயற்சி யால் துவங்கப்பட்ட மன்றம் வலம்புரி நகர் வார வழிபாட்டு மன்றம் ஆகும். இது தொடங்கிய நாளிலிருந்து (நான் நேர்காணல் செய்த)12.6.2004 வரை 85 வார வழிபாட்டுக் கூட்டம் விடாது நடத்தியிருக்கிறார்கள். வாரந்தோறும் ஞாயிற்றுக் கிழமையன்று இல்லங்கள் தோறும் திருமுறை ஓதுதல், வழிபாடு என்று நடைபெறுகிறது. பொறுப்பாளர் கள் - திரு.ஏ.திருநாவுக்கரசு (1942) திரு. ஆர். ராஜா (1964).

ஸ்ரீ குருஞானசம்பந்தர் வார வழிபாட்டு மன்றம், தருமபுரம்

மயிலாடுதுறையில் இத்துணை மன்றங்கள் இருக்கும்பொழுது தருமை யாதீனம் ஸ்ரீலஸ்ரீ குரு மகா சந்நிதானம் அவர்கள் அருளாட்சி செய்து வரும் தருமபுரத்தில் மன்றங்கள் இல்லாது இருக்குமா? 23.9.1988-ஆம் ஆண்டில் ஸ்ரீலஸ்ரீ குரு மகா சந்நிதானமவர்களின் அருளாசியுடன் தொடங்கப்பட்ட இம் மன்றத்தின் சார்பில் தருமபுரம் ஸ்ரீ ஞானபுரீஸ்வரர், ஸ்ரீதருமபுரீஸ்வரர் திருக்கோயில்களில் வாரவழிபாடு, திரு முறை பாராயணம், சொற்பொழிவுகள் நடத்தப்படுகின்றன. 26.9.2002-ஆம் ஆண்டு முதல் வியாழன் தோறும் ஸ்ரீ ஆனந்தபரவசர் குருமூர்த்தி வழிபாடு நடைபெற்று வருகிறது. பிற பணிகள் : தலயாத்திரை, உழவாரப்பணி, ஆண்டு விழா, நூல் வெளியீடு. இப்பணிகளை யெல்லாம் முன்னின்று நடத்துபவர் திரு. அ.சீனுவாசன் அவர்கள். பூப்பறித்தல், மாலை கட்டுதல், இறைவனுக்கு அணிவித்து மகிழ்தல் என்பதே இவருடைய அன்றாடப் பணியாகும். உழவாரம் ஆற்றுகின்ற பணிகளுக்கெல் லாம் உதவுபவர். காரிநாயனார் ஆயுள் தொண்டர்.

சூடாமல் கொடுக்கும் சுடர்க்கொடிகள்

வார வழிபாடு, உழவாரப்பணி என்பன போல பூத்தொடுத்தல் என்ற பணியும் பல சிவாலயங்களில் காணப் படுகின்றது. சில மாதரசியர் திருமணம் கூடச் செய்து கொள்ளாமல், சூடாமல் கொடுக்கின்ற சுடர்க் கொடிகளாக இருக்கின்றனர். இவர்களின் தியாக வாழ்வை நினைத்தாலே மெய்ச் சிலிர்க்க வைக்கிறது. அத்தகையவர்களுள் ஒருவரே உஷா என்ற பட்டதாரி. 1975-ஆம் ஆண்டு முதல் காசி விசுவநாதர் கோயிலுக்குப் பூத்தொடுத்து தரும் பணியில் ஈடுபட்டார். காலைச் சந்தி, சாயரட்சைப் பூசைக்குப் பூத்தொடுத்து தருகிறார். தற்பொழுது அருள்மிகு

மாயூரநாதர் திருக்கோயில், தெப்பக் குளம் விசுவநாதர் கோயில், அருள்மிகு வதான்யேசுவரக் கோயில், ஐயாரப்பன் கோயில், பல்லவராயப் பேட்டை கோயில் என்று இவருடைய பணி விரிகிறது. *(14.1.1953;* பிறந்த ஊர் - எரவாஞ்சேரி, நல்லாடை) தலைசிறந்த ஓதுவார்களைக் கொண்டு குறைந்தது 4 பேர் – கடந்த இரண்டு ஆண்டுகளாக முழுநேரத் திருமுறை இன்னிசை நடத்தி வருகின்றார்கள். 26 ஆண்டுக் காலமாக எஸ். பிரேமா (1955) அவர்கள் துணை புரிகின்றார்கள். இவர்கள் அல்லாத இன்னும் 10 பேர் அவ்வப்பொழுது வந்து சேர்ந்து கொள்கிறார்கள்.

பூத்தொடுத்தால் மட்டும் போதுமா? நாளும் பூக்களைச் சேகரித்துக் கொண்டு வருவதும், தொடுத்த மாலைகளைக் கோயில்களில் கொண்டு சேர்ப்பதும் பெரும்பணியாகும். அப்பணியை 16 ஆண்டுகளாக மேற்கொண்டிருப்பவர் திரு. இராமலிங்கம் ஆவார். இது தவிர இராமலிங்கம் வள்ளலார் வழிபாட்டு மன்றம் அமைத்து உழவாரப் பணியும் செய்து வருகிறார். இவருக்குத் திருமுறைகள் முழுமையும் தெரியும். (பிறந்த ஆண்டு 5.7.1957)

ஆர். விஸ்வநாதன் என்பவர் திருமுறைகளை நன்கு பாடக்கூடியவர்; வழிபாடு இல்லாத கோயில்களில் விளக்கேற்றி வருகிறார் (6.2.1961)

ஜீ.ச. முரளி

''தேவாரத்தலங்கள் - நடுநாடு'' அட்டையிலேயே சோமாஸ்கந்தர் அழகுறக் காட்சியளிக்கிறார். அதனைத் தாண்டிச் செல்ல முடியவில்லை. அடுத்து விநாயகப் பெருமான், வண்ணமுற வீற்றிருக்கின்றார். அதனைத் தாண்டியும் செல்ல முடியவில்லை. நடு நாடு வரைபடம். 27 தலங்களும் குறிக்கப் பட்டிருக்கின்றன. இதோ! திருநெல் வாயில் அரத்துறை வந்து விட்டோம். அடடா! இராஜகோபுரம் இல்லையோ?



அந்தத் திருக்கோயிலின் மேலே அந்தத் தலத்தின் நடராஜப் பெருமான் அழகுறத் தாண்டவம் ஆடுகிறார். எடுத்த பாதமும், தீ ஏந்திய கையும் திருவாசிக்கு வெளியே காணப்படுகின்றன. சடைமுடி பரந்து காணப்படவில்லை. பின்புறம் இருக் கிறது. இறைவனின் திருமுடி திருவாசி யைத் தொட்டுக் கொண்டு இருக்கின்றது. இத்துணை விரிவாக நீங்கள் கோயி லுக்குச் சென்றால் கவனிக்க முடியாது. வீட்டில் உட்கார்ந்து கொண்டு உன்னிப் பாய்ப் பார்த்துப் பார்த்து மகிழலாம். ஆடல் வல்லான் முனைவர் பட்டம் பண்ண விரும்புபவர்கள் 274 கோயில் களுக்கும் போக வேண்டியதில்லை. இருந்த இடத்தில் இருந்தபடி ஆய்வு செய்யலாம். அடுத்து கறுப்பு வெள்ளை யில் அம்மை, ஆலமர் செல்வன், திருக்கோயில் படங்கள்.

பின் தொடர்வது : இருப்பிடம், பெயர்க் காரணம், மூர்த்திகள், கோயி லமைப்பு, கோயில் வரைபடம், தலப் பெருமை, வான்மீகி முனிவர், ஓடேந்திய பெருமான், ஞானசம்பந்தர் தங்கிய கோயில் படங்கள், தலத்துக்குரிய திருப் பதிகங்கள். இதுபோல ஒன்பது தொகுதிகள் வர உள்ளன. 274 தலங்களை யும் நாளும் வீட்டில் இருந்தே தரிசிக்கலாம். சென்று தரிசிக்கவும் வழிகாட்டும்.

இந்த அரிய நூல்களைத் தந்து - தர - இருப்பவர் ஜீ.ச. முரளியவர்கள்.

தற்பொழுது மற்றுமொரு அரும் பெரும் முயற்சியில் முரளி ஈடுபட்டிருக் கிறார். பன்னிரு திருமுறைகளையும் ஒரே தொகுதியாகக் கொண்டு வர உள்ளார். 2006-ஆம் ஆண்டு ஏப்ரலில் வெளி வரலாம். அடக்க விலைக்குக் குறை வாகவே விற்பனை செய்ய உள்ளார். எத்தகைய பணி!

(பிறந்த ஆண்டு - 12.9.1963; ஊர் - சோமங்கலம்; தங்கிப் பணியாற்றுவது - மயிலாடுதுறை. பெற்றோர் - சந்திர சேகரன், சகுந்தலா)

மயிலாடுதுறை சைவ அறிஞர்கள் மலிந்த ஊர். திரிசிரபுரம் மீனாட்சி



வி.சா. குருசாமி தேசிகர்



சொ. சிங்காரவேலன்

சுந்தரம் பிள்ளையவர்கள் வாழ்ந்து மயிலாடுதுறையை வளப்படுத்தியவர். அவர்களை நாடி வந்தவர்கள் உ.வே.சா., கோபாலகிருஷ்ண பாரதியார் உள்ளிட்ட பேரறிஞர்கள் ஆவர். தருமை யாதீனம் அருள் நிழலில் கீ. இராம லிங்கனார், பின்னால் தொண்டை மணடல ஆதீனமாக அருளாட்சி செய்த முத்து சு. மாணிக்க வாசக முதலியார், சி. அருணை வடிவேல் முதலியார், ச. தண்டபாணி தேசிகர், முனைவர் சொ. சிங்காரவேலன், இரா. செல்வக்கணபதி ஆகியோர் தருமையில் தங்கிப் பணி யாற்றினார்கள். இன்றைய நாளில் முனைவர் கு. சுந்தரமூர்த்தி, வி.சா. குருசாமி தேசிகர், முனைவர் மு. சிவச்சந்திரன் ஆகியோர் சைவப் பணி யாற்றுகிறார்கள். (இவர்கள் அனைவரை யும் பற்றி ''சைவப் பெருவெளியில் காலம்'' என்ற நூலில் எழுதப் பட்டுள்ளது) செவிச்செல்வம் இவர் களோடு நிற்காமல், தருமையாதீனக் கல்லூரி முதல்வராகப் பணியாற்றிய முனைவர் ப. நீலா அவர்கள் சாத்திர, தோத்திரங்களில் கற்றுத் தேர்ந்தவர்கள். நல்ல சொற்பொழிவாளர். நன்கு பாடக் கூடியவர். எங்களுக்குச் சைவ சித்தாந்த வகுப்பு நடத்தியபொழுது

**''மூலை யிருந்தாரை முற்றத்தே விட்டவர்
சாலப் பெரியார் என்று உந்தீ பற
தவத்தில் தலைவர் என்று உந்தீ பற''**

என்று அவர்கள் பாடிக்கொண்டே சுவையுடன் திருவுந்தியாரை விளக்கியது இன்றும் நெஞ்சில் நிற்கிறது. பெரிய புராண, திருமுறை சொற்பொழிவுகள் நிகழ்த்துகிறார். அண்மையில் ''சேக் கிழார் விருது பெற்றார். (பிறப்பு - 1939; ஊர் - தஞ்சை; பெற்றோர் - பரமேஸ்வர அய்யர், அலமேலு அம்மாள்).

மயிலாடுதுறையில் வசிக்கின்ற மற்று மோர் அறிஞர் பூம்புகார்க் கல்லூரி தமிழ்ப் பேராசிரியர் முனைவர் திரு. அ. திருநாவுக்கரசு அவர்கள். மயிலாடு துறையில் சிவனடியார் கூட்டம் நடத்தும்

திருமுறை முற்றோதுதல், திருவிளை யாடற் புராண முற்றோதுதலில் கலந்து கொண்டு விளக்கம் கூறி வருகிறார்கள்.

(பிறந்த ஆண்டு - 20.12.1948; ஊர் - கோயம்புத்தூர், பெற்றோர் - எஸ். அருணாசலம்).

15.11.1936-ஆம் ஆண்டில் பிறந்த முனைவர் அ.கலியபெருமாள் சமயச் சொற்பொழிவுகள் நிகழ்த்தி வருபவர் கள். ''திலகவதியார்'' என்ற நாடகக் காவியம் படைத்துள்ளார். இவர்களது முனைவர் பட்ட ஆய்வு ''திருப்போரூர் சிதம்பர சுவாமிகள் நூலாராய்ச்சி'' ஆகும்.

காலகாலமாக மயிலாடுதுறையில் சொற்செல்வமும், தொண்டுச், செல்வ மும் மண்டிக் கிடக்கின்றன.

மயிலாடுதுறையில் திருக்கோயில் திருப்பணிகளுக்காகவும், திருமுறை வளர்ச்சிக்காகவும் அண்மையில் ஒரு பெரும் எழுச்சி ஏற்பட்டுள்ளது. அவ் வெழுச்சியை முன்நின்று நடத்துபவர் கோமல் திரு. சேகர் அவர்கள். கோவை திரு. வசந்தகுமார் அவர்களைப் பற்றி எழுதும்பொழுது முழுமையாகச் சேர்க்கப்படும்.

26. கஞ்சனூர்



தமிழ்நாட்டில் இறைவன் கருவறைக் குள் நுழைந்த – கணமேனும் கருவறையை விட்டு நகராத – பெருமை கஞ்சனூர் திருவருள் தவநெறி மன்றத்துக்கே உரியது. ஆம். தமிழகத்தின் பல கோயில்களில் இறைவனின் கருவறையில் சிவலிங்கத் திருமேனிக்கு மேலே உருத்திராக்க விதானம் இருக்கும். முகப்பில் திருவருள் தவநெறி மன்றம் எனப் பொறித்திருக்கும்.

குடநீராட்டு விழா என்று செய்தித் தாளிலேயோ, அழைப்பிலேயோ பார்த்து விட்டால் போதும். கலியபெருமாள் உருத்திராக்க விதானத்தை எடுத்துக் கொண்டு கிளம்பி விடுவார். தன் பெயருக்கு அழைப்பு வந்திருக்கிறதா என்று கூடப் பார்க்க மாட்டார். இதுவரை (மார்ச் 2005) 214 அஸ்மானகிரி (உருத்திராக்க விதானத்தை அப்படித்தான் கூறுகிறார்) வழங்கியிருக்கிறார். 1008 அஸ்மானகிரி 1008 கோயில்களுக்கு வழங்கத் திட்டமாம்.

கலியபெருமாள் ஆடுதுறையில் நகைக்கடை வைத்திருக்கிறார். இரண்டு அறை கொண்ட கடை. ஓர் அறையில் கடை; மற்ற அறையில் உருத்திராக்க விதானப்பணி. கடையில் கூட்டம் இல்லையென்றால் கலியபெருமாள் அடுத்த அறைக்கு வந்து தனது பணியைத் துவங்கி விடுவார். தொழிலுக்கேற்ற தொண்டு பார்த்திருக்கிறோம். இங்கே தொழிலுடன் தொண்டு ஒருசேர நடக்கிறது. தொண்டில்தான் எத்தனை வகை?

கலியபெருமாள் உருத்திராக்கத்திலே சிவலிங்கம், கும்பம், விளக்கு எல்லாம் செய்கிறார். மூன்று வருடங்களாக அஸ்மானகிரி பணி செய்து வருகிறார். பத்து வருடங்களாக உருத்திரக்காமாலை வழங்கி வருகிறார். ஆடுதுறையில் ஓர் உருத்திராக்கத் தொண்டர்!

கலியபெருமாள் செயலராகப் பணி புரியும் திருவருள் தவநெறிமன்றம் மேற்கொள்ளும் உழவாரப் பணியும் வழிபாட்டு முறையும் துல்லியமாகத் திட்டமிடப்பட்டவை ஆகும். தமிழகச் சைவ மன்றங்கள் பின்பற்ற வேண்டிய ஒன்று.

மாதம் ஒரு கோயிலைத் தேர்ந் தெடுக்கிறார்.

காலை 7.00 மணிக்குத் திருக்கோயில் வருகை.

7.00 முதல் 10.00 மணிவரை தொண்டு.

இளைஞர்கள் - உழவாரப்பணி

பெரியவர்கள் - திருவாசி முதலான தூய்மை செய்தல்

பெண்கள் - பெருக்குதல், நீர் தெளித்துக் கழுவுதல்

பின் அபிஷேகம், அலங்காரம், அனைத்து மூர்த்திகளுக்கும் ஆடைகள்

சொற்பொழிவு.

மகேஸ்வர பூஜை.

30.4.2005 வரை 375 வழிபாடுகள். இம்மன்றம் 19.2.1954-ஆம் ஆண்டில் திரு. ஏ.எஸ்.ஏ. நாகையன் செட்டியார் அவர்களைத் தலைவராகக் கொண்டு தொடங்கப்பட்டது. அப்பொழுது பொருளாளராக இருந்த அப்பு ஐயர் அவர்களின் தவக்கோலமும் சிவ சிந்தையும் நெஞ்சை ஈர்க்கும். நெடுநாள் வாழ்ந்து மறைந்தார். தற்போதைய தலைவர் கிருஷ்ணமூர்த்தி ஐயர்.

27. மேல மருத்துவக்குடி

ஆடுதுறை

மாணிக்கவாசகர் நூல்நிலையம் : சிவபாலன்...

பெயருக்கேற்ற வகையில் சிறியமலர் பள்ளி, மேல்நிலை படிக்கும் மாணவர் களுக்கு இலவசமாகப் பயில நூல்கள், பள்ளி மாணவ மாணவியர்க்குப் பெரிய புராணம், திருவாசகம், எடுத்துரைக்க ஆன்மிக வகுப்பு, பரிசு வழங்குதல், உயர்கல்வி மாணவர்க்குப் படிக்க சைவ நூல்கள், சிவபுராணம், கோளறு பதிகம் முதலான 12 நூல்களை 300, 500 என்று படிகள் எடுத்து இலவசமாக வழங்குதல். என்ன ஒரு வளமான சிந்தனை!

ஒரு கிராமத்தில் தனியொரு மனிதராக சிவபாலன் இவ்வாறு செயல்படுகிறார்.

ஊர் - மேல மருத்துவக்குடி.

அமைப்பு - மாணிக்கவாசகர் நூல் நிலையம்.

28. குத்தாலம்

குரு ஞானசம்பந்தர் பணி மன்றம் : எத்தனை ஆண்டுப் பணியோ? கிடைத்தது 2-ஆம் ஆண்டு மலர் மட்டுமே. ஆண்டு மலரிலேயே அப்பர் பெருமான் பற்றி முப்பத்தாறு அரிய கட்டுரைகள். தமிழகத்தின் தலைசிறந்த ஆய்வறிஞர்கள் எழுதியவை. இந்த ஒரு படைப்பே குத்தாலம் குருஞான சம்பந்தர் வார வழிபாட்டுக் கழகத்தின் பெருமையைக் காலமெல்லாம் பறை சாற்றுகிறது.

1974-75-ஆம் ஆண்டில் 52 நிகழ்ச்சிகள். மார்ச்.1973-ஆம் ஆண்டில் தொடங்கப் பட்டது. தலைவர் சி.ப. சிவஞானம் செட்டியார், செயலர் : சி. கோவிந்த ராஜலு.

29. ஆடுதுறை

வைத்தியலிங்கம் செட்டியார் ஆடுதுறையில் அப்பர் நெறிக்கழகம் தொடங்கி குன்றக்குடி அடிகளார் ப. சுந்தரேசனார் போன்ற அறிஞர்களின் சொற்பொழிவுகளை நடத்தியிருக்கிறார். இல்லத்துக்கு வரும் அன்பர்களுக்கு அறுசுவை ஊட்டி மகிழ்பவர். தேவாரப் பாடல்களை நன்கு இசையுடன் பாடுபவர். (பிறப்பு 27.8.1929; தந்தையார் - விருத்தாசலம் செட்டியார்)

30. திருநாகேசுவரம்

ஊரெல்லாம் சேக்கிழார் விழா... தலமெல்லாம் அறுபத்துமூவர் குரு பூசை... என்றிருக்கும் பொழுது சேக் கிழார் பெருமானின் ஆன்மார்த்த தலமான திருநாகேஸ்வரத்தில் இல்லா

மல் இருக்குமா? முப்பத்தாறு ஆண்டுகளாக வைகாசி பூசத்திலே ஆறுநாள் விழாவாக நடத்துகிறார்கள். சீர்வளர் சீர் குரு மகா சந்நிதானங்கள், அறிஞர்கள், ஆன்றோர்கள் என்று ஆறுநாட்களும் கருத்தரங்கம், பட்டிமன்றம், சுழலும் சொற்போர், வழக்காடு மன்றம், நூல் வெளியீடு என்று சிறப்பாகச் செய்கின்றனர். சேக்கிழார் வைகாசி பூசப் பெருவிழாக் குழுவினர் என்ற அமைப்பினை ஏற்படுத்தி திருநாகேஸ்வரத்தில் உள்ள அனைத்து வழிபாட்டு மன்றங்களையும் இணைத்து மிகச் சிறப்பாக நடத்துகின்றார்கள். திருக்கோயில் அறங்காவலர்களும் இடம் பெற்றுள்ளனர். விழாக்குழுவில் இடம் பெற்றுள்ள மன்றங்கள் : சேக்கிழார் மன்றம் [தோற்றம் : *1969*; தலைவர் . இ.பி. சேதுராமன்; செயலர் புலவர் ப. ராஜமாணிக்கம்; முதல் தலைவர் எஸ்.எஸ். முதலியார் *(17 ஆண்டுகள்)* *2-ஆம் தலைவர் (2003 வரை)*], சேக்கிழார் ஆதிவார வழிபாடு *(50 ஆண்டுகளாக* ஞாயிறு தோறும் திருமுறை வழிபாடு; தலைவர் - பி.எஸ்.பி. சண்முகம்) சுக்கிர வார வழிபாடு *(15 ஆண்டுகள்;* தலைவர் - இ.பி.கணபதி) குருவாரவழிபாடு *(10* ஆண்டுகள்; தலைவர் - எம். கணேசன்).

31. கும்பகோணம்

உத்தண்டி செட்டியார் :

சோழபுரம் செட்டியார் மரபினர்களில் சில குடும்பத்தார்க்குக் குலதெய்வமாக விளங்குபவர் பெரிய திருக்குன்றம் (பெரிய திருக்கோணம் - அரியலூர் பக்கத்தில் உள்ளது) உத்தண்ட ஐயனார் ஆவார். அவர் பெயரை மக்களுக்கு வழங்குவது அக்கோயிலாளிகளின் வழக்கம்.

அரங்கோட்டை சாட்சிலிங்கம் செட்டியார் மகனாகத் தோன்றியவர் உத்தண்டி செட்டியார். அவருக்கு மூத்தவர் குப்பு சாமி செட்டியார். இவர் அரங்கோட்டையிலேயே தங்கிவிட்டார். உத்தண்டி செட்டியார் இளமையிலேயே கும்பகோணம் வந்துவிட்டார். இங்கே காசுக்கடை நடத்திவந்த பொன்னுசாமி செட்டியாரிடத்தில் தொழில் பழகித் தாமே சொந்தத்தில் கடை நடத்தினார். 'சம்பந்த விலாஸ்' என்று அதற்குப் பெயர்.

இவரோடு பழகிய பெரியவர்கள் பலர்.

இவரோடு மிகவும் நேயமாகப் பழகியவர்களில் சித்தபுருஷர் பாடகச்சேரி ராமலிங்க சுவாமிகள், மகான் ராமாசாது, பழனி சாது சுவாமிகள், சித்தர் விராலிமலை சுவாமிகள், அண்ணா சுவாமிகள், தேப்பெருமாநல்லூர் அன்ன தான சிவம் முதலியவர்களைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். சாதுசாமி மடத்துக்கும், அன்னதான சிவத்துக்கும் அவ்வப்போது அரிசி, நெல் முதலியவை அனுப்பி வைப்பது இவருடைய வழக்கம்.

கொட்டையூர் கோடீச்சுரசாமி கோயிலுக்கு மும்முறை தலைமை தர்ம கர்த்தராக இருந்தார். இவருடைய ஆட்சிக் காலத்தில்தான் கோயில் கும்பாபிஷேகம் நடைபெற்றது.

குடந்தையில் சக்கரபடித் துறையருகே ஒரு வீட்டை வாங்கினார். அங்கே தேவார பாடசாலை நடத்தினார். காஞ்சி காமகோடி சந்திரசேகர சரஸ்வதி சுவாமிகள் திறந்து வைத்தார். பிடில் கந்தசாமி தேசிகர் ஆசிரியராக இருந்தார். அவரிடம் முதலில் இசைப் பயிற்சி பெற்றவர் பண்ணாராய்ச்சி வித்தகர் சுந்தரேசனார். சுந்தரேசனார் சில காலம் கொட்டையூர்க் கோயிலில் ஓதுவாராகவும் பணியாற்றினார். பாடசாலை மூன்றாண்டுகள் நடந்தது. அதற்குமேல் நடத்த முடியவில்லை.

உத்தண்டி செட்டியார் குடந்தை கும்பேசுவரசாமி மாசி பிரமோற்சவங்களில் திருமுறை கோஷ்டிகளை வருவித்து விழா முடிவில் ஒருநாள்

திருமுறை உற்சவமும் நடத்தி வந்தார். இது பல்லாண்டுக் காலம் நடந்தது.

சுந்தர ஓதுவாமூர்த்தி முதலிரண்டு உற்சவங்களில் கலந்து கொண்டார். தண்டபாணி தேசிகர் ஓரிரு முறை கலந்து கொண்டார். காஞ்சிபுரம் சாரங்கபாணி செட்டியாரும், பச்சையப்பனும் ஆண்டு தவறாமல் வருபவர்கள். திருச்சேறை சட்டநாத தேசிகர், வேதாரணியம் மணி தேசிகர், திருக்கடவூர் சாமி ஐயா தேசிகர், இவர்கள் தவறாமல் கலந்து கொண்டது எனக்குத் (மா. வயித்தியலிங்கம்) தெரியும்.

விழா நாட்கள் பத்திலும் காலையும் மாலையும் கும்பேசுவரசுவாமி திருவுலாவுக்குப் பின்னால் இந்த இசை வாணர்கள் திருநீறு, கண்டிகை அணிந்து மாலையணிந்து வருவார்கள். யாவரும் சிகை உடையவர்கள். அந்தக் கோலமே காண அழகாக இருக்கும். பத்து நாட்களும் செட்டியாருடைய பாட சாலையில் காலை காபி, பிறகு பலகாரம் காபி, பகல் உணவு, மாலை சிற்றுண்டி, இரவு அன்னம், பால் வழங்கப்பெறும். சனிக்கிழமை எண்ணெய் வழங்கப்படும்.

திருமுறை விழாவின்போது யானை மீது திருமுறைகள் ஏற்றப்பட்டு குடை, தீவட்டி, சாமரங்களோடு கும்பேசர் திருவீதியில் தேவார பாராயணத்தோடு வலம் வருவார்கள். அந்தக் காலத்தில் எடுக்கப்பட்ட புகைப்படங்களில் இரண்டு மட்டுமே இப்போது கிடைக் கின்றன. செட்டியாருடைய வீட்டில் அன்று மாகேசுர பூசை சிறப்பாக நடைபெறும். தெருவார் பலர் அழைக்கப் படுவார்கள்.

இந்த ஓதுவாமூர்த்திகளுக்கு விழா நாளில் ஒரு மத்தியான நேரம் (வியாழக் கிழமை என்று நினைவு) எங்களது வீட்டில் (மா. வயித்தியலிங்கம்) மாகேசுர பூசை நடைபெறும்.

ஆறாம் திருநாள் கும்பேசர் பல்லக்கில் எங்கள் பேட்டை நாணயக்காரத் தெருவுக்கு எழுந்தருளுவார். நெல்லுக் கடை மண்டபத்தில் தங்கி மாலை 7 மணி அளவில் திரும்புவார். அவருக்கு வீட்டுக்கு வீடு தீபாராதனை அருச்சனை நடைபெறும். பின்னால் பாடி வருகிற ஓதுவாமூர்த்திகளுக்கு அவரவர்கள் பால், பழம், கற்கண்டு வழங்குவார்கள். தெருவில் நமஸ்காரம் செய்வார்கள். ஆறாம் திருநாளில் எங்கள் இல்லத்துக்கு ஓதுவாமூர்த்திகள் எழுந்தருளிச் சிற்றுண்டி (இனிப்பு), காரம், மலைப் பழம், காபி, பால் ஏற்றுக்கொள்வது தொடர்ந்து நடைபெற்றது. என் அம்மான்மார் இந்தத் தொண்டிற்கு உடனிருந்து உதவுவார்கள்.

திருமுறைக் கோஷ்டியில் பங்கு பெறாத ஓதுவாமூர்த்திகள் அனேகமாக இல்லை. திருமுறை வாணர்களுக்குப் புத்தாடை பணம் வழங்கி விடை கொடுப்பார் உத்தண்டி செட்டியார். முழுச்செலவும் அவருடையது.

உத்தண்டி செட்டியார் தமது அறுபதாம் ஆண்டுக்குப் பிறகு ஒவ்வோராண்டும் தமது ஜன்ம நட்சத்திரங்களில் ஒரு கோயிலில் சிறப்பான அபிஷேக ஆராதனை செய்து வந்தார். (குடும்பத்தில் பாகப் பிரிவினைக்குப் பிறகு அது நின்று போயிற்று)

திருவிடைமருதூர் - திருக்கலயநல்லூர் அபிஷேகங்கள் எனக்கு நினைவிருக் கிறது.

கார்த்திகையில் ஒரு சோமவாரத்தில் ஒவ்வொரு கோயிலில் சிறப்பு அபிஷேகங்கள் நிகழ்த்தி வந்தார். கரும்பாயிர விநாயகர் - உச்சிப் பிள்ளையார் கோயில் அபிஷேகங்கள் நினைவில் இருக்கின்றன.

நாள்தோறும் தேவாரத் திருமுறைகள் பாராயணம் ஜபம் பண்ணாமல் அவர் உண்டதில்லை. அதனை நெடுநேரம் செய்யும் இயல்பு உடையவர்.

உத்தண்டி செட்டியார் தரும சிந்தனையை நினைவூட்டி குடந்தை

புளியஞ்சேரி நெடுஞ்சாலையில் ஒரு கிணறு அ.சா.உ. தருமம் என்ற எழுத்துக் ளுடன் இன்றும் நிற்கிறது.

செட்டியார் அவர்தம் சிவபக்தி, வழிபாடு ஒழுக்கம் ஆகியவற்றிற்குப் பொருத்தமான பரிசாக 1961-ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் இறைவனுக்கு மிக உகந்த அன்னாபிஷேக நாளன்று விடியற் காலையில் அவர் பெயரனாகிய என் மடிமீது தலையிருக்க, ''எண்ணுகேன் என்சொலி எண்ணுகேனோ என்ற திருத்தாண்டகப் பாட்டை நான் பாடிக் கொண்டிருக்கும்போதே சிவத்தில் ஒன்றினார்.

(தோற்றம் - 1880; மறைவு - 1960)

(உதவி - பேர்ராசிரியர் மா. வயித்திய லிங்கம்.)

சிவனடியார் திருக்கூட்டம்

ஒவ்வொரு ஞாயிறும் தலயாத்திரை; பாடல் பெற்ற தலங்கள், வைப்புத் தலங்கள், புராண வரலாற்றுத் தொடர் புடைய தலங்கள்; ஐம்பத்தோர் ஆண்டுகளாக இதுநாள்வரை ஒரு ஞாயிறும் தவறியதில்லை; தொலைவு என்று கொள்வதில்லை; மழை, வெயில் எனப் பொருட்படுத்துவதில்லை; கடின மான பாதை எனக் கருதுவதில்லை; செலவாகுமே என்று சிந்தையில் கொள்வதில்லை; பேருந்து நெருக்கடி, ரயில் பயணத்தில் ஏற்படும் களைப்பு, இவற்றையெல்லாம் சமாளித்து வழி பாட்டிற்கு வந்தே தீருவோம் என்பது தலைவர் முதல் தொண்டர் வரை கொண்டுள்ள உறுதிப்பாடு. பரம ஏழைகள் முதல் பெருஞ்செல்வர் வரை இடம் பெற்றுள்ள திருக்கூட்டத்தின் சம தர்மசிந்தனை. சிற்றூர்கட்கும் செல்லுங் கால் வசதியற்ற பாதையில் சிறுவர்கள் கூட வரப்பிலும், வயலிலும் தள்ளாடி வழிபாடொன்றே குறிக்கோளாகக் கொண்டு இறைநாமம் கூறி ஆடிப்பாடி வரும் ஆனந்த நிலை.

தலயாத்திரை என்றால் இதுவன்றோ தலயாத்திரை!

வலஞ்சுழி தொடங்கி வாரணாசி வரை வழிபாடாற்றிய இத்திருக்கூட்டம் உணவைப் பொருட்படுத்துவதில்லை. சில தலங்களில் சிவநேசச் செல்வர்கள் உணவுக்கு ஏற்பாடு செய்திருப்பார்கள். சில இடங்களில் கட்டமுது எடுத்துச் செல்ல நேரிடும். திருநெடுங்களம் செல்லும் போதெல்லாம் கட்டமுதுதான். நெடுங்களத்திட்டம் என்றே சிலேடை யாகக் கூறும் வழக்கம் வந்துவிட்டது.

சோழநாடு, பாண்டிநாடு, தொண்டை நாடு, நடுநாடு, கொங்குநாடு, துளுவ நாடு, மலை நாடு, வட நாடு

ஐவகை வழிபாடு : காலைக் கடம்பர், மத்தியானச் சொக்கர், அந்தி ஈங்கோய் மலை; மகா மகத்தின்போது பஞ்சக் குரோச தல யாத்திரை, திருவண்ணா மலை கிரிவலம், சோமேசர் திருக் கோயில் வியாழன் தோறும் வழிபாடு. சரி. இத்திருக் கூட்டத்தின் வழிபாட்டு முறை எப்படி? அனைத்து மூர்த்தி களுக்கும் அர்ச்சனை செய்தல், மும்முறை வலம் வருதல், தலப்பதிகம் முழுவதும் பாராயணம் செய்தல், பன்னிரு திருமுறைகள் பாடுதல்.

வழிபாட்டின் நிறைவில் தல வர லாற்றுச் சிந்தனை, பதிகத்தின் திரண்ட கருத்து விரித்தல், அத்தலத்துற்ற சிறப்பு மூர்த்திகளின் அற்புதம் விளக்குதல் போன்றவை சிறப்பு அம்சங்களாகும்.

வழிபாடு மட்டுமல்லாது சிவவழி பாடு செய்வோருக்கு அக்காலத்தில் ஸ்ரீலஸ்ரீ மீனாட்சி சுந்தர தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் மூலமாகவும், இக்காலத்தில் கோப்பு கோ. நடராச செட்டியார் மூலமாகவும் சிவபூசை செய்து வைக்கப் படுகிறது.

திருக்கூட்டத்தின் பிறபணிகள் தொடங்கப்பட்டது

1959-ஆம் ஆண்டில் திருக்குடந்தைக் காரோணம் அருள்மிகு சோமேசர் ஆலயத்

திருப்பணிக்கு உதவுதல், அதே கோயிலில் திருஞானசம்பந்தப் பெருமானின் திருவுருவத்தை எழுந்தருளப் பண்ணி பஞ்சாக்கரக் கோயிலுக்குக் குடமுழுக்குச் செய்தல், காரோணப் பதிகக் கல்வெட்டுப் பதித்தல், நால்வர், சேக்கிழார் திருமேனிகள் செய்விக்கப் பெற்று எழுந்தருளப்பண்ணி நால்வர் குரு பூசையின்போது உலாவரச் செய்தல், முற்றோதல், சொற்பொழிவு நடத்துதல், சேக்கிழார் மூலஸ்தானத் திருவுருவம் அமைத்துக் குடமுழுக்கு செய்தல் (உபயம் : அன்றையத் தலைவர் ப.தி.சோ. சிங்காரம் செட்டியார்)

திருக்கூட்டம் ஸ்ரீ ஆதிகும்பேசர் திருக்கோயிலில் அறுபான்மும்மை நாயன்மாரின் எழுந்தருள் (நல்ல புதிய சொல் தந்துள்ளார்கள்) திருமேனிகளை அடியார்களின் உபயமாக 1966-ஆம் ஆண்டிலும், தொகையடியார் திருமேனிகளை 1967-ஆம் ஆண்டிலும் செய்வித்துக் குடமுழுக்கும் நடத்தியது. திருத்தொண்டத் தொகைக் கல்வெட்டு அமைத்தல், அறுபான்மும்மை நாயன்மார் குருபூசை நடத்துதல்.

மாசிமகத் திருவிழா நான்காம் நாள் காலையில் நாயன்மார்கட்கு அபிஷேக ஆராதனை செய்து நாயன்மார்கள் புறப்பாடு நடத்துதல் காணக் கண் கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

இத்திருக் கூட்டத்தின் ஆண்டு நிறைவு விழா ஆண்டுதோறும் ஜனவரித் திங்கள் முதல் வாரம் வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய நாட்களில் நடைபெறும். வெள்ளி திருக்குடந்தைக் காரோணம், சனி கீழ்க்கோட்டம், ஞாயிறு திருகுடமுழுக்கு ஆகிய பாடல் பெற்ற திருக்கோயில்களில் காலையில் வழிபாடு. மாலையில் ஆதிகும்பேசர் ஆலயத்தில் சொற்பொழிவு, தேவார இன்னிசை போன்ற நிகழ்ச்சிகள் நடைபெறும். தருமை, துறைசை, பனசை, குன்றக்குடி அடிகளார், பேரூர் ஆதீனம், சிரவை, கூனம்பட்டி, சூரியனார் கோயில், மயிலம் பொம்மபுர ஆதீனம் ஆகிய சைவத் திருமடங்களின் குரு மகா சந்நிதானங்கள் ஒவ்வோராண்டும் அருளாசி வழங்கியுள்ளார்கள். ஆண்டு விழாக்களில் அன்றைய ஈசான சிவாசாரிய சுவாமிகள் தொடங்கி இன்றைய சிவச்சந்திரன் வரை உரையாற்றியிருக்கிறார்கள். திருமுறை இன்னிசை நிகழ்ச்சிகளும் ஓதுவா மூர்த்திகள் நிகழ்த்தியிருக்கிறார்கள்.

இத்தனைச் சிறப்புக்கள் வாய்ந்த குடந்தை சிவனடியார்த் திருக்கூட்டம் 4.1.1948 அன்று திருவலஞ்சுழியில் அமரர் த.ச.மீனாட்சி சுந்தரம் பிள்ளை, அமரர் சு. சுந்தரேசம் செட்டியார் ஆகியோரால் தொடங்கப்பெற்றது. அமரர் ப.தி. சோ.குமரசாமி செட்டியார் அவர்கள் தலைவராகவும், அமரர் ச. சாமிநாத செட்டியார் அவர்கள் செயலராகவும் பொறுப்பேற்றார்கள்.

தலைவர்களாக பணியாற்றிய விவரம்

ப.தி.சோ. குமாரசாமி செட்டியார் *(1948-1956)*

கே.ஆர்.எம்.சிங்காரம் செட்டியார் *(1956-1957)*

ப.தி.சோ. குமாரசாமி செட்டியார் *(1957-1980)*

எஸ். சுப்பிரமணிய முதலியார் *(1980-1985)*

சு. சுந்தரேசன் செட்டியார் *(1985-1987)*

தற்போதைய தலைவர் - கோப்பு நடராசன் செட்டியார்; செயலர் - சி.மௌனகுருநாத செட்டியார்)

இத்தனை சிறப்புகள் வாய்ந்த குடந்தை சிவனடியார் திருக்கூட்டத்தின் முதல் தலைவர் அமரர் ப.தி.சோ. குமாரசாமி செட்டியார், பட்டவிருத்தி சபாபதி செட்டியார், உ.வே. சாமிநாதய்யர், குடந்தைக் கல்லூரித் தமிழ்ப் பேரா

சிரியர் ம.வீ. இராமானுசாச்சாரி, அருணாசல வாத்தியார், ஞானியாரடிகள், மறைமலை யடிகள், இலக்கணம் முத்துக் குமார சாமித் தம்பிரான், மகா சந்நிதானம் முத்துக்குமாரசாமி தேசிகர், பழனி ஈசான சிவாசாரியார் ஆகியோரிடம் சைவ நூல்கள் கற்றவர். வேதாரணியம் தியாக ராஜ தேசிகரிடம் முறையாகப் பாடம் கேட்டவர். சிவதீக்கையுற்று செந் நெறி ஒழுகியவர்.

(மறைவு - 29.6.1956)

திருக்கூட்டத்தின் இரண்டாம் தலைவர் திரு.கே.ஆர்.எம். சிங்காரம் செட்டியார் *(1887-1957)* பல திருக்கோயில்களின் அறங்காவலராக இருந்து பல திருப்பணிகள் செய்துள்ளார்.

1957-ஆம் ஆண்டு முதல் *1980*-ஆம் ஆண்டு வரை தலைவராக இருந்த ப.தி.சோ. சிங்காரம் செட்டியார் *(1900-1980)* நால்வர் உற்சவமூர்த்தி, மலர் மஞ்சம் செய்து நால்வர் விழா, அன்னம் பாலிப்பு என்று சைவப்பணி ஆற்றினார்.

கோ.நடராசன் செட்டியார் :



1988-ஆம் ஆண்டு முதல் இன்றைய நாள்வரை கோப்பு கோ. நடராசன் செட்டியார் தலைவராகப் பொறுப்பேற்று சிறப்பாக பணியாற்றி வருகிறார். இவருடைய காலத்தில் சிவனடியார் திருக்கூட்டம், சிவத்தல யாத்திரை, நாயன்மார் குருபூசை, அறுபத்து மூவர் புறப்பாடு, திருமுறை முற்றோதல் என விரிவாக வளர்ந்து உள்ளது. *4.1.1998*-ஆம் ஆண்டில் திருக் கூட்டத்தின் பொன் விழாவைச் சிறப்பாகக் கொண்டாடி அருமையான மலரும் வெளியிட்டார். ஐந்து வயது முதலே திருமுறைகள் பயிலத் தொடங்கினார். திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரியில் தமிழ் பயின்றார். சைவ சம்பந்தமான அரிய நூல்களையும், திருமுறைகள், சைவ சித்தாந்த சாத்திரங்களையும் முயன்று பல முதுபெரும் அறிஞர் பெரு மக்களிடம் பயின்றதோடு, வடமொழி ஆகம நூல்கள் முதலியவற்றையும் பல சிவாச்சாரியார்களிடம் பயின்றார். *1968*-ஆம் ஆண்டில் சமய தீட்சையும், *1970*-ஆம் ஆண்டில் விசேட தீட்சையும், சிவபூசையும் பெற்று *1978*-ஆம் ஆண்டில் உடையவர் பூசையும் (ஞான பூசை) பெற்று திருக்குடமூக்கு அருள்மிகு ஆதி கும்பேசப் பெருமானை ஆன்மார்த்த மூர்த்தியாகப் பெற்று நாடோறும் தவறாது மூன்று மணிநேரம் பூசை செய்து வருகிறார். கார்த்திகை, சோமவாரம், மகா சிவராத்திரி புண்ணிய காலங்களில் பல அன்பர்களுக்கு சிவ தீட்சை, விசேட தீட்சை வழங்கி வருகிறார். (பிறந்த ஆண்டு - *1952*; பிறந்த ஊர் - குடந்தை; பெற்றோர் - கோப்பு செட்டியார், சுலோச்சனா).

திருமுறை மன்றம்

திருமுறை மன்றத்தின் நிறுவனர் - தலைவர் : அமரர் திரு. எம்.சி.எஸ். இரத்தினசபாபதி செட்டியார் *(1908-1984)*. தமிழ்ப் புலமை மிக்கவர். திருமுறை களை இசையோடு பாடுபவர். இளைஞர் களைப் பாடச் சொல்லி இனிப்புகளை வழங்குவார். மாசிமக விழாவில் திருமுறைவாணர்களை அழைத்துப் பாடச் செய்வார்.

திருக்குடந்தைத் திருமுறை மன்றம் 1972-ஆம் ஆண்டில் தொடங்கப் பெற்றது. தலைவர் எம்.சி.எஸ். இரத்தின சபாபதி செட்டியார், செயலர் - டி.பி.சி. சக்கரபாணி செட்டியார். 1980-ஆம் ஆண்டிலிருந்து எம்.சி.எஸ்.ஆர். சம்பந்தம் தலைவராகப் பணியாற்று கிறார். தற்போதைய செயலர் சபா. பரமசிவம்.

சபா. பரமசிவம்

மாதக் கார்த்திகை தோறும் தேவார நிகழ்ச்சிகள், சொற்பொழிவுகளை மன்றம் நடத்துகிறது. ஆவணி மாதக் கார்த்திகையன்று ஆண்டு விழா எனப் பணியாற்றுகிறது. செயலர் சபா. பரமசிவம் தமிழாசிரியர். நல்ல சொற் பொழிவாளர். (பிறந்த ஆண்டு - 1.7.1930, பிறந்த ஊர் - ஆடுதுறை). இவரது மகனார் மகாலிங்கம் திருமுறைகளில் தோய்வும், சைவப்பற்றும் உள்ள தமிழாசிரியர் ஆவார். புதுக்கவிதையில் அடியார்கள் பற்றி வடித்துள்ளார் - சேக்கிழார் இயற்றிய திருத்தொண்டர் புராணம் செய்யுள் நடையாய் - மரபுக் கவிதையாய் - இருப்பதால் கற்றுணர்ந்த புலவர்க்கு மட்டுமே விருந்தாக இருப்பதை அறிந்தார். பெரியபுராண உரைநடை நூல், கதைப்பகுதியைக் கூறு வதாக இருக்கிறதேயன்றிச் சேக்கிழாரின் இலக்கிய நயத்தைத் தரவில்லை என்றும் தெளிந்தார். எனவே சேக்கிழாரின் மரபுக் கவிதைக்கும் உரைநடைக்கும் இடையே தமிழறிந்தாரும் உணரும்படியாக பெரிய புராணத்தைப் புதுக்கவிதையாக எளிய முறையில் வடித்துத்தர முடிவு செய்தார். அதன் பயனாக விளைந்த நூல் ''புதுக்கவிதையில் பெரியபுராண அடியார்கள்'' என்னும் நூல். புராணச் செய்திகளைச் சொற் செட்டுடன் அதே வேளையில் கருத்து விளக்கத்துடன் கூறம் திறன் இவருக்குக் கைவந்த கலையாய் அமைந்திருக்கிறது. ஒவ்வொரு நாயன்மாருக்கும் ஏற்ற வகையில் இனிய தலைப்பு, கண்ணையும், கருத்தையும் சிதைக்காமல் ஒவ்வொரு வரியிலும் ஓரிரு சீர்களைக் கொண்டு நெடிய வரலாற்றை குறுகத் தரித்துள்ளார்.

ஐம்புலம் வென்ற ஐயன் (திருநீலகண்ட நாயனார்), இல்லை என்னாத இனியர் (இயற்பகை நாயனார்), அறுசுவை ஈந்த வள்ளல் (இளையான் குடி மாற நாயனார்) இவ்வாறு தலைப்புகளே கவிதை பாடுகின்றன; கதையைச் சொல்கின்றன. வரலாற்றைச் சொல்லுகின்ற அழகு இதோ!

நீலகண்ட நாயனார்

இளமை நீங்கி மூப்பு இவர்கள் வாழ்வில் முற்றுமையிட்டது. இதுநாள் வரையில் இருந்தனர்... மெய் சேராமல் வாழ்ந்தனர் அயல் அறியாமல்.

இயற்பகை நாயனார்

வணிகர் குல வள்ளலுக்கு இல்லை என்று சொல்லாத வணிகச் சூத்திரம் வாசித்தா வசப்பட வேண்டும்

மூல நூலுக்குச் சற்றும் குறை வராமல் அதே உவமைகளை எளிமையாகச் சொல்கிறார்.

''பாச பந்தம்
பற்றறுப்பார் போல
பறித்தார் கீரையை''

''தாம் மறைத்த
கத்தியால்
நினைத்த காரியத்தை
செய்து முடித்தான்''

வருணனை கவிதைக்கு அழகு, புதுக்கவிதையில் இயலுமா?

கருமுகில்
ஓய்வெடுக்க
நெடுமதில்
பாய் விரிக்கும்
கருவூர்''

உருவகம் இல்லையா?

''போர்க்களம்
விளையாட்டு மைதானம்
பகைவர்கள்
உதைத்தாடும் பந்துகள்''

புதுக்கவிதையில் பழம்பெரும் வரலாறு.

திருநாவுக்கரசர் உழவார சிவனடியார் திருக்கூட்டம்

திருக்குடந்தை திருநாவுக்கரசர் உழவார சிவனடியார் திருக்கூட்டம் 8.5.2005 அன்று தனது 47-ஆம் மாத வழிபாட்டினை அருள்மிகு வாஞ்சிநா தேசுவரர் சுவாமி திருக்கோயிலில் சிறப்புற நடத்தியது. பாடல் பெற்ற தலங்களில் உழவாரப்பணி, அபிஷேகம், வழிபாடு, திருமுறைப்பாராயணம், சொற்பொழிவு எனத்திருக்கூட்டம் பணியாற்றுகிறது. தொடர்பாளர் - டி. மாரிமுத்து.

32. குடவாசல்

அ.மி. கோணேசர் திருக்கோயில் வார வழிபாட்டுக்கழகம் : இக்கழகத்தின் பணிகள் : ஞாயிறு தோறும் கூட்டு வழிபாடு, மாதம் ஒருமுறை திருக் கோயில் உழவாரப்பணி, தலயாத்திரை, நால்வர் குருபூஜை, அன்னம் பாலிப்பு (தொடக்கம் - 1979) இம்மன்றத்தின் தலைவர் திரு.ந. விநாயகமூர்த்தி (பிறப்பு : 1.2.1932; பெற்றோர் - நடேச முதலியார், ராஜம்மாள்) செயலர் - சு. சுவாமிநாதன்.

33. திருவீழிமலை

அ.மி. வீழிநாதர் வழிபாட்டு மன்றம் : மன்றத்தின் பணிகள் : பிரதோஷ வழிபாடு, பௌர்ணமி வழிபாடு, உழவாரப் பணிகள்; தலைவர் : பி.ஆர். ஜெயராமன், செயலர் கே. மாரியப்பன்.

34. சுந்தரப் பெருமாள் கோயில்

சுந்தரப் பெருமாள் கோயிலில் ஒரு களஞ்சியம் இருக்கின்றது. தஞ்சை மாவட்டம் என்பதனால் நெற்



களஞ்சியம் என்று எண்ண வேண்டா. இது சைவசமயக் களஞ்சியம். இரண்டு, மூன்று தலைமுறைகளாக நிரம்பி வழிகின்ற களஞ்சியம்.

மா. சிவகுருநாத பிள்ளை, பல நூல்களின் ஆசிரியர்.

அவர் மகன் சிவ. திருச்சிற்றம்பலம்

அவர் மகன் திரு. திருநாவுக்கரசு ('சிவசிவ' இதழாசிரியர்)

பெரியவர்களைப் பற்றி முதல் தொகுதியில் எழுதப்பட்டுள்ளது. ஈண்டு பேசப்படுபவர் சிவ. திருச்சிற்றம்பலம் ஆவார். சைவசமயக் கலைக்களஞ்சியம் - தோத்திரமும் சாத்திரமும், சிவன் திருத்தலங்கள், சிவன் திருவடிவங்கள், சைவத் தமிழ் இலக்கிய வரலாறு, சைவத் தொகையகராதி என ஐந்து தொகுதிகளாக வெளியிட்டுள்ளார். விநாயகர் கலைக் களஞ்சியம், திருமுருகன் கலைக் களஞ்சியம், ஸ்ரீசக்தி கலைக்களஞ்சியம் முதலான நூல்களும் வெளியிட்டுள்ளார். சூரியனார் கோயில் ஆதீனத்தின் சார்பில் திருமுறை சித்தாந்த ஆய்வு மையம் தொடங்கி மாநில அளவில் இரு நூற்றுக்கு மேற்பட்ட சைவத் தமிழ்ப் புலவர்களை உருவாக்கியுள்ளார். ஓராண்டு அஞ்சல் வழிக்கல்வியின் பாடத் திட்டம்: தோத்திரமும் சாத்திரமும், சைவத் திருத்தலங்கள், சைவத் தொகை அகராதி, மாவட்டத்தில் உள்ள சிவன் கோயில்கள் பற்றிய திட்டக் கட்டுரை. இதுவரை மூன்று தொகுப்புகள்

நிறைவாகி உள்ளன. தஞ்சை சைவ சமயப் பயிற்சி மையச் சிறப்புநிலைப் பேராசிரியராக மாணவ, மாணவியர் பலர் சைவ சமயக் கல்வியைப் பெறப் பெரும் பணி ஆற்றியவர். தமிழ்வழி குடமுழுக்கு மற்றும் திருமணங்களை நடத்தி வருபவர். பெரியபுராணம், திருவிளை யாடற்புராணம் தொடர் சொற் பொழிவுகள் நிகழ்த்தியுள்ளார். தஞ்சை அருள்நெறித் திருக்கூட்ட அமைப் பாளராக இருந்து பல சிவத்தல யாத்திரைகளை அன்பர்கள் மேற்கொள்ள உதவி வருகிறார்கள். *(பிறந்த ஆண்டு 1.8.1946.)*

இவரது தந்தையார் மா.சிவகுருநாத பிள்ளை தலைசிறந்த சைவ அறிஞர். ஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் பற்றிய அரிய ஆய்வுகள் செய்து நூல்கள் வெளியிட்டுள்ளார். இவர்களைப் பற்றி முதல் தொகுதியில் கூறப்பட்டுள்ளது.

திருச்சிற்றம்பலனாரின் மகனார் திருநாவுக்கரசு சைவ நல்லிளைஞர்; 'சிவ சிவ' இதழின் ஆசிரியர். மூன்று தலை முறைகளாக சைவப்பணி ஆற்றிவரும் வழிவழிச் சைவக் குடும்பம்.

குடந்தையில் ஒரு சிவகுருநாதன் பிள்ளை குடும்பம்!

கோவையில் ஒரு ஸ்வர்ணா சோம சுந்தரம் குடும்பம்!

வழிவழிச் சைவக் குடும்பங்கள்!

35. தஞ்சாவூர்

இராஜராஜ சமய சங்கம்

பார்த்திப ஆண்டு சித்திரைச் சதயம்.... .. அப்பர் பெருமான் திருநாள் *(3.5.2005)* தஞ்சை இராஜராஜ சமய சங்கக் கட்டடத்தில் நெல்லுப்பட்டு நமச்சிவாய சுவாமிகள் தேவாரப் பண்ணிசைத்துக் கொண்டிருந்தார். மெல்ல மெல்ல கூட்டம் சேருகிறது. கற்பக விநாயகர் அறக்கட்டளைக் குழுவினர், அறுபத்து மூவர் மன்ற உறுப்பினர்கள் எனத் தஞ்சையில் உள்ள சைவ மன்றத்தினர் தங்கள் தங்கள் பகுதிகளில் அப்பர் குருபூஜையை நடத்திவிட்டு இராஜராஜ சமய சங்கக் கட்டடத்திற்கு வர ஆரம்பிக் கின்றனர். தஞ்சை சைவ மன்றங்களின் சங்கமமாகத் திகழ்கிறது. இராஜராஜ சமய சங்கக் கட்டடம்; பெரிய மண்டபம்; மாடியிலும் அதே அளவு நீள அகலமான மண்டபம். ஐநூறுக்கும் மேற்பட்டவர் உட்காரலாம். தஞ்சையில் சமயக் கூட்டங்கள் நடத்த இடத்துக்கு அலைய வேண்டியதில்லை. சங்கத்தின் செயலர் திரு. டி. ஆர். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் (ஓய்வு பெற்ற மாவட்ட வருவாய்த்துறை அதிகாரி) பம்பரமாகச் சுழல்கிறார். மண்டபம் கட்ட வாரியார் சுவாமிகள் உதவியதை நினைந்து நினைந்து போற்று கின்றார். நால்வர் குருபூஜை, சமயச் சொற்பொழிவு, நூல்கள் வெளியிடுதல், சைவ சித்தாந்தப் பயிற்சி வகுப்பு, மாணவர்க்குப் போட்டி எனச் சபையின் பணி விரிகின்றது. சமுதாயப் பணியாக ஆண்டு தோறும் இலவசத் திருமணம் நடத்துகின்றனர்.

(தோற்றம் - 1954; தலைவர் - திரு. டி.ஜி. வெங்கடாசலம்; செயலர் - திரு. டி.ஆர். கிருஷ்ணமூர்த்தி)

கற்பக விநாயகர் அறக்கட்டளை

அங்கிருந்து கூட்டுறவு காலனி ஸ்ரீ கற்பக விநாயகர் கோயிலுக்கு நடை யைக் கட்டினோம். இராஜராஜன் சமயச் சங்கக் கட்டடம் போலவே கற்பக விநாயகர் அறக்கட்டளையின் சார்பில் கீழும் மேலுமாக 500 பேர் உட்காரக் கூடிய அளவுக்கு விசாலமான மண்ட பங்கள் உள்ளன. தமிழ் நாட்டில் உள்ள அனைத்து ஊர்களிலும் சைவ மன்றங் களுக்கு இப்படிப்பட்ட மண்டபங்கள் இருந்தால் எப்படி இருக்கும்? அறக் கட்டளையின் சார்பில் விநாயகர் கோயில் கட்டுதல், குடநீராட்டு விழா நடத்துதல், நால்வர் குருபூசை நடத்துதல்,

திருமுறை முற்றோதல், அன்னதானம் எனப் பணியாற்றுகின்றனர்.

(தோற்றம் - 1985; தலைவர் - ந. சாரங்கன்; செயலர் - இராச. கயிலாசம்)

வார வழிபாட்டுக் குழு

தஞ்சாவூர் பெரியகோயில் வார வழிபாட்டுக் குழு சற்றுப் பழைமை யானது. 24-07-1958-இல் கே. பழனிவேல் பிள்ளை அவர்களைத் தலைவராகக் கொண்டு துவங்கப்பட்டது. 47 ஆண்டு களாக வார வழிபாடு, நால்வர் குரு பூசை, தலப்பயணம் மேற்கொள்ளல், ஆறு ஆண்டுகளாகத் திங்களுக்கு ஒருமுறை திருவாசகம் முற்றோதல், திருமுறை விண்ணப்பம் செய்தல், முதல் ஞாயிறன்று உழவாரப்பணி, திருமுறைத் திருமணம் செய்து வைத்தல், தமிழில் குடநீராட்டுச் செய்தல், மூன்று ஆண்டு களாக அறுபத்து மூவர் விழா நடத்துதல், சிறு சிறு நூல்களாக வெளியிடுதல் எனப் பணியாற்றுகின்றனர். தற்போதைய செயலர் சோம. ஆறுமுகம் அவர்கள் ''Bless me to multiply the worshippers'' என்ற மில்டனின் மொழியை மறைமொழி யாகக் கொண்டு பணியாற்றி வரு கின்றார்.

(தோற்றம் - ஆடி சுவாதி 1958; செயலர் - சோம. ஆறுமுகம்)

அருட்பணி மன்றம்

சந்து பொந்துகளை எல்லாம் தாண்டி பூக்காரத் தெரு போய்ச் சேர்ந்தோம். அங்கு அயர்ந்து படுத்திருந்தார் பால சுப்பிரமணியன். அவரைச் சுற்றி அண்டாவும், குண்டானும் அணி வகுத் திருந்தன. மறுநாள் அதிகாலை அருட் பணி மன்றத்தினர் தலயாத்திரையாம். மூடிய கண்களோடு அலைபேசியில் கட்டளைகள் பிறப்பித்துக் கொண்டிருந் தார். அருட்பணி மன்றத்தில் மாதக் கார்த்திகை தோறும் சமயச் சொற் பொழிவுகள் (அழைப்பிதழ் - விளக்கு 26 சுடர் 9) என ஒளிவிட்டுப் பிரகாசிக் கின்றன. ஆடிமாதம் மட்டும் பத்து நாட்களுக்குத் தொடர்ந்து சொற் பொழிவுகள் நடத்துகின்றனர். தஞ்சைச் சைவமன்றங்கள் அனைத்தும் பூக்காரத் தெருவில் குழுமி விடுகின்றன. மன்றங் களின் சங்கமம் போற்றப்பட வேண்டிய ஒன்று. இது தான் தஞ்சாவூர்ச் சைவத்தின் புனிதத் தன்மையோ?

(தோற்றம் - 1979; தலைவர் - திரு. சிவ. பாலசுப்பிரமணியன்; செயலர் - ந. எத்திராஜ்)

சைவ சித்தாந்தப் பெருமன்றக் கிளை

4-5-1986-இல் தொடங்கப்பெற்ற இம் மன்றம் திரு. மு. அருணாசலம், திரு. யு. சுப்பிரமணியம், அரங்கமுத்துமணி, சாரங்கனார், டாக்டர் சி. திருநாவுக்கரசு, முனைவர் வி. ஜெயபால் ஆகியோரால் பலகால கட்டங்களில் பேணி வளர்க்கப் பட்டது. மாதந்தோறும் மூன்றாம் வெள்ளிக்கிழமை தோறும் சமயச் சொற் பொழிவுகள் நடத்துவது மன்றத்தின் முக்கிய பணியாகும். *30-11-2005*-இல் *207*-ஆம் கூட்டம் நடைபெற்றது. சிவ ஞானபோதம் (பொழிப்புரை), வினா வெண்பா (கருத்துரை), உண்மைநெறி விளக்கம் (தெளிவுரை), சித்தாந்த சாத் திரம் (பதிநான்கு சொற்பொழிவுகள்), The Concept of god in Saiva Siddhantha (S.N.Kandaswamy) போன்ற நூல்களை வெளியிட்டுள்ளது.

அகத்தியர் சன்மார்க்க சங்கம்

அகத்தியர் சன்மார்க்க சங்கம்; சித்தர்கள் சித்தாந்தத்தைப் பரப்பி வருவதோடு திருமுறைகள் ஓதுதல், சிவனடியார்கள் திருக்கூட்டம் அமைத் தல் என்று சைவப்பணி புரிந்து வரு கின்றது. 14 வருடங்களாக டாக்டர் எஸ். திருவேங்கடம் திருமந்திரத்திற்கும், தற்போது முனைவர் வீ. ஜெயபால் சிவ வாக்கியத்திற்கும் விளக்கம் கொடுத்து வருகிறார்கள். ''சித்தர் நெறி'' என்ற இதழ் வெளியிடுகிறார்கள். சித்ரா

பௌர்ணமியன்று 15000 பேருக்கு அன்னதானம் வழங்குகின்றனர்.

(தலைவர் - ஜீ. சகாதேவன்; செயலர் - த. துரைராஜன்)

தனி மனிதரா? நிறுவனமா?

தனி மனிதராக இருந்தே நிறுவன மாகச் செயல்படுவர்களும் தஞ்சையில் இருக்கின்றனர். அத்தகைய பெரியவர் தான் திருநாவுக்கரசனார். திருமுறை களைப் பண்ணோடு இசைப்பார். பெரிய புராணச் சொற்பொழிவுகள் நிகழ்த்து வார். திருமுறைத் திருமணம் செய்து வைப்பார். பன்னிரு திருமுறை மையம் என்ற பெயரில் சிறு சிறு வெளியீடுகளும் வெளியிடுகிறார். சைவ சித்தாந்தப் பெருமன்றத்தின் தலைவராகப் பொறுப் பேற்று சாத்திர நூல்கள் வெளி யிட்டுள்ளார்.

சங்கங்களின் சங்கமம்



மற்றுமோர் ஆன்றோர் - நிறுவனம் - இராச. கயிலாசம் அவர்கள் ஆவார். சமய தீக்கை, விசேட தீக்கை பெற்றவர். 1995-இல் இவர் துணைவியார் அமரர் சகுந்தலா கயிலாசம் பெயரில் 59000 ரூபாய் நிதியுடன் அறக்கட்டளை ஒன்று துவங்கினார். அதன் ஓர் அங்கமாக 15-6-1998-இல் அறுபத்து மூவர் மன்றம் துவங்கி பிரதிமாதம் மாத சிவராத்திரி யன்று அந்த மாதத்திய நாயன்மார் குரு பூசை, சிவபூசை, மகேசுவர பூசை, அன்னதானம் நடத்துதல்; ஆண்டுதோறும் சேக்கிழார் குருபூசைத் திருநாளன்று அறுபத்து மூவர் பட ஊர்வலம், திரு முறை விண்ணப்பம், சொற் பொழிவுகள் என விரிவாக நடத்துதல் ஆகிய பணிகளைச் செய்கின்றார். தஞ்சையில் உள்ள அனைத்து சைவ மன்றங்களிலும் ஏதேனும் ஒரு பொறுப்பில் இருக்கிறார். சங்கங்களின் சங்கமம் இவர். மயிலாடு துறை ''உழவாரம்'' அமைப்பின் ''சோமாசி மாறர் ஆயுள் தொண்டராக'' அம்பர் தலத்தில் ஆண்டுதோறும் சோமாசிமாறர் குருபூசை நடத்துகிறார்.

(பிறப்பு : 15.8.1934; ஊர் - பெருந் தோட்டம்)

சைவ ஆய்வில்
முனைவர் பட்டம் பெற்றவர்



மெய்கண்டார் சைவசித்தாந்த ஆய்வு மையத்தின் அமைப்பாளர் வீ. ஜெயபால் அவர்கள், நிர்வாண தீக்கை பெற்றவர். நாள்தோறும் சிவபூசை செய்பவர். பல்லாண்டு காலமாக சைவ சித்தாந்த சாத்திர வகுப்பு, திருமந்திர வகுப்பு நடத்தி வருபவர். தஞ்சை, திருச்சி, கரூர், வெள்ளக் கோயில், கோவை, பேராவூரணி, புதுக்கோட்டை ஆகிய ஊர்களில் சைவ சித்தாந்த வகுப்புகள் நடத்தியுள்ளார். தஞ்சைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணிபுரியும் இவர் ''வரலாற்றுப் பின்னணியில் சைவ சமய நாடகங்கள்'' என்ற ஆய்வுத் தலைப்பில் ஆய்வு செய்து முனைவர் பட்டம்

பெற்றுள்ளார். 1000 கட்டுரைகள் எழுதி உள்ளார். இவற்றில் முக்கியமானவை அட்டாங்க யோகம் போன்ற திருமந்திரக் கட்டுரைகளும், திருவருட்பயன் போன்ற சைவசித்தாந்தக் கட்டுரைகளும். ஆம். ஆங்கிலத்திலும் எழுதியுள்ளார். இவர் அமைப்பாளராக இருந்து செயல்பட்டு வரும் மெய்கண்டார் சைவசித்தாந்த ஆய்வு மையம் சமயச் சொற்பொழிவுகள் நடத்துதல், தலயாத்திரை செய்தல் ஆகிய பணிகளைச் செய்து வருகின்றது. இம் மையம் 14.4.1997 அன்று தொடங்கப் பட்டது.

(வீ. ஜெயபால்; பிறந்த ஆண்டு - 4-12-1955)

அப்பர் தமிழ் மன்றம்

3-5-2005 அன்று தொடங்கப்பட்ட அப்பர் தமிழ்மன்றம் பெரியபுராணத் தொடர் சொற்பொழிவு நடத்துதல், மாணவ, மாணவியர்க்குத் திருமுறை ஒப்புவித்தல் போட்டி நடத்துதல், தலயாத்திரை நூல்கள் வெளியிடுதல் ஆகிய பணிகளைக் குறிக்கோளாக கொண்டு இயங்குகிறது.

சில தொண்டர்கள்

(தலைவர் - குரு. சிவசுப்பிரமணியன்; அமைப்பாளர் - முருக. வைத்திலிங்கம்; செயலர் - குரு. புவனசுந்தரலட்சுமி)

1. சிவத்திரு. கே. ஷண்முகம் பிள்ளை (வயது 82; பிறந்த ஊர் - திருவாரூர்) சைவ அமைப்புகளுக்குப் பணிபுரிதல், அடியார் இல்லங்களில் சிவபூஜை செய்தல், உழவாரப்பணி)

2. திரு. சோம. குஞ்சிதபாதம் (65 வயது); சமயதீட்சை விசேட தீட்சை; சிவபூஜகர்; இல்லத்தையே சைவ சித்தாந்த நூல் நிலையமாக அமைத்தல்; துறைசை ஆதீன சைவசித்தாந்த வகுப்பு ஆசிரியப் பணி; பெரிய புராணச் சொற்பொழிவு; திருவாசக வகுப்பு நடத்துதல்.

3. திரு. முருக. வைத்தியலிங்கம் (வயது 55, கீழக்கோட்டை, ஒரத்தநாடு தாலுகா); பெரிய புராணம் வகுப்பு நடத்துதல்.

திருவருள் அறநெறிச் சபை

2001-இல் தொடங்கப்பட்ட இந்த மன்றம் அ/மி கற்பகவிநாயகர் ஆலயத்தில் தென்முகக் கடவுள், மீனாட்சி சுந்தரேசுவரர், சண்டேசுரர் திருஉருவச் சிலைகளை நிறுவி குட நீராட்டும் செய்து முடித்தது. மாதந் தோறும் முதல் ஞாயிறன்று திருவாசகச் சொற்பொழிவு, தொகுப்பு நூல்கள் வெளியீடு, வள்ளி தெய்வானை உடனுறை முருகப் பெருமானுக்கு வெள்ளிக்கவசம் சாத்துதல், பிரதோஷ மற்றும் சிறப்பு வழிபாடுகள் எனப் பணியாற்றுகிறது.

தலைவர் : திரு. T.K. சுவாமிநாதன் (வயது 71). இவர் பள்ளிப் பருவத்தி லேயே தேவாரத்தை இசையோடு பாடுவார். கற்பக விநாயகர் கோயில் தலைவராக இருந்து இருமுறை குட நீராட்டு செய்துள்ளார். ஆண்டு தோறும் சிவனடியார்களுக்கு ஆடைகள் வழங்கி யிருக்கிறார். பாடல் பெற்ற தலயாத்திரை மேற்கொள்கிறார். துணைத் தலைவர் - திரு. குண்டுமணி நாகராஜன் அ/மி கற்பகவிநாயகர் ஆலய குடநீராட்டு விழாவிற்கு உதவி, தலயாத்திரை.

செயலர் : திரு. அ. தாயுமானவர் (வயது 66) திருமுறை ஓதுதல், தலயாத்திரை, சிவனடியார்க்கு அமுது படைத்தல் ஆகிய பணிகளைச் செய் கிறார். சைவத்தமிழ்ப்புலவர் கோ. கேசவ நாதன் (வயது 66) அ/மி. கற்பக விநாயகர் ஆலயத்திற்கு நிதி திரட்டினார். திருமுறைப் பாடல்களைத் தொகுத்து வழங்குவார். சைவ சித்தாந்தம் படித்தவர். K.S. ராகவன் - வாழ்வே சிவனடியார் வாழ்வாக அமைந்தவர்.

திருமுறை மாநாடு கண்ட திருவாசகச் செம்மல்



திருமுறை மாநாடுகளை உலகத் தரத்துக்கு உயர்த்தியவர் திருவாசகச் செம்மல் திரு. டி.என். அருணாசலம் பிள்ளையவர்கள். திருவிடைமருதூரில் நடைபெற்ற திருமுறை மாநாடுகளில் திருவாசகம் பற்றி இன்னார் தான் உரையாற்ற வேண்டும்; திருக்கோவை யாருக்கு இன்னார்; திருமந்திரத்திற்கு இன்னார் என்று ஒவ்வொரு திருமுறைக்கும் பார்த்துப் பார்த்துத் தேர்வு செய்து தமிழ்நாட்டு சைவப் பேரறிஞர்களை ஒரே மேடையில் பேச வைத்துப் பெரும் புகழ் பெற்றவர் அருணாசலம் பிள்ளையவர்கள். திருவாவடுதுறையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குரு மகா சந்நிதானமவர்களின் அருளாசியுடன் திருவிடை மருதூரில் ஐந்து திருமுறை மாநாடுகள் நடத்தியுள்ளார். திருவாசக மாநாட்டிற்கு இந்தியப் பிரதமர் மாண்புமிகு மொரார்ஜி தேசாய் அவர்களையும் தமிழக முதல்வர் மாண்புமிகு எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்களையுமே அழைத்திருந்தார்கள். திருவிடைமருதூர் என்ற சிற்றூரில் இவையெல்லாம் நடக்கக்கூடிய காரியமா? இன்றும் அக்காட்சிகள் எங்கள் நெஞ்சைவிட்டு அகலவில்லை. அத்துணைபேருக்கும் நேரம் தப்பாமல் - இடிபாடுகள் இல்லாமல் - அறுசுவை விருந்து. முதல் மாநாட்டுக் கருத்தரங்கு மலரைப் புரட்டினால் மாநாட்டின் அருமை புலப்படும்.

இதேபோல் இவர்கள் துணையுடன் வெளியிடப்பட்ட திருவிடைமருதூர் கும்பாபிஷேக மலர் மிகவும் அரிய படைப்பாகும். ஒரு குடநீராட்டு மலர் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு நல்ல எடுத்துக்காட்டு ஆகும். திருவிடை மருதூர் திருப்பணியும், திருப்பெருந் துறை திருப்பணியும் இவரது நிர்வாகத் திற்கு நல்லுதாரணங்கள் ஆகும்.

ஹவாய் சைவ ஆதீன முதல்வர் முப்பொருள் உண்மையை மறுத்து நூல் வெளியிட்டார்கள். இது சைவ சித்தாந்தத் திற்கு மாறான கருத்து ஆகும். பிள்ளையவர்கள் அக்கருத்தை மறுத்து முப்பொருளுண்மையை நிலைநாட்டி ஆங்கிலத்தில் "There can be only one final conclusion in the saiva siddhantha" என்று வெளியிட்டார். இந்நூல் தருக்க ரீதியாக நல்ல ஆங்கில நடையில் எழுதப்பட்ட நூல் ஆகும்.

பிள்ளையவர்கள் தம் ஒய்வுக் காலத் தில் தஞ்சாவூர் வந்து தங்கினார்கள். வாரந்தோறும் திருவாசக விளக்கம் சொல்லி வந்தார்கள். தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்காக, வயது முதிர்ந்த நிலை யிலும் ''திருவாசக ஆங்கில மொழி பெயர்ப்புகளின் தொகுப்பும், ஆய்வும்'' என்ற நூலுக்காக, ஆய்வு மேற்கொண்டு எழுதி வரலானார்.

திருவாசகமே மூச்சாக வாழ்ந்த பிள்ளையவர்கள் 21-1-1995 அன்று இறைவனுடன் கலந்தார்கள்.

(பிறப்பு - 27-5-1912; ஊர் - திருக்கடவூர்; பெற்றோர் - நாகரத்தினம் பிள்ளை, மீனாட்சி அம்மையார்; மறைவு - 21-1-1995)

"நான் மறை வேதமன்று" என வலியுறுத்திய அறநிலையத்துறை ஆணையர்



"நான் மறை எனச் சங்க இலக்கியம், திருமுறைகள் ஆகிய நூல்கள் குறிப்பிடு வன வடமொழி வேதம் அல்ல" எனப் பக்கம் பக்கமாகச் சான்றுகளைக் காட்டி நிறுவியுள்ளார் ஓர் அரசுத்துறை அதி காரி. அவர் தான் அமரர் யு. சுப்பிரமணியன் ஐ.ஏ.எஸ். (ஓய்வு) நூல் - "தமிழ்ச் சமயம், தமிழர் வேதம், தமிழகத்துக் கோயில் கள்". "சால்பகம்" என்ற அமைப் பினைத் தொடங்கி நல்ல தமிழ் நூல் களை வெளியிட்டார். தஞ்சைச் சைவ சித்தாந்தப் பெருமன்றத் தலைவராகப் பொறுப்பேற்று 47 கூட்டங்கள் நடத் தினார். இவரது நூலைப் பற்றி மூதறிஞர் அ.ச. ஞா. இவ்வாறு கூறுகிறார். "சங்க இலக்கியம் தொடங்கிக் குமரகுருபரர் வரை இந்த ஆசிரியர் எந்த நூலையும் விட்டு வைக்க வில்லை. சமயம், வேதம், கோயில் என்பவை பற்றி மேலே கூறியுள்ள நூல்களில் காணப் பெறும் எந்த ஓர் அடியையும் எந்த ஓர் சொல்லையும் இவர் விட்டார் இல்லை."

(மறைவு - 27-10-1991 பெற்றோர் - டி. உலகநாதத் தஞ்சைராயர்; கனகத்தம் மாள்.)

ஊரெல்லாம் சிவம் மணக்கச் செய்யும் சாரங்கன்



தஞ்சை நகரின் தென்பகுதியில் கூட்டுறவுக் காலனி உள்ளது. அங்கே தான் கற்பக விநாயகர் கோயிலும், அருமையான சொற்பொழிவு மண்டப மும் உள்ளன. இந்த விநாயகர் கோயி லுக்கு மூன்று முறை கும்பாபிஷேகம் ஆகிவிட்டது. இவற்றை எல்லாம் செய்து முடித்தவர் ந. சாரங்கன் ஆவார். அறக்கட்டளையின் அங்கமாக நால்வர் மன்றம் அமைத்து நால்வர் குருபூசை, திருமுறை முற்றோதல், அன்னதானம், வார வழிபாட்டு மன்றம் அமைத்து செவ்வாய்க்கிழமை தோறும் வார வழிபாடு; மற்றும் சைவசித்தாந்தப் பெருமன்றம் மூலம் சமயச் சொற் பொழிவுகள்; மெய்கண்டார் ஆய்வு மையம் மூலம் சைவ சமய வகுப்புகள்; அருள் நெறித் திருக்கூட்டம் மூலம் சமய விளக்கக் கூட்டங்கள் - என இத்தனைப் பணிகளையும் சாரங்கள் செய்து வரு கிறார். கூட்டுறவுக் காலனி என்று மட்டு மல்ல; அப்பகுதியில் உள்ள ஒவ்வொரு காலனியிலும் வாரவழிபாட்டு மன்றம் அமைத்து வழிபாடு, திருமுறைகள் ஓதுதல் எனத் தஞ்சையை சிவம் பெருக்கும் நகரமாக மாற்றி வருகிறார். இவரது முயற்சியால் கூட்டுறவு காலனி பகுதியில் ஒவ்வோர் ஆண்டும் 150 பேர் ஓர் இலட்சம் தடவை "ஓம் நமசிவாய"

எழுதியுள்ளனர். 50 பேருக்கு மேல் பன்னிரு திருமுறைகளையும் படி எடுத்துள்ளனர். நூறு வீடுகளில் பன்னிரு திருமுறைகள் உள்ளன. இரு பள்ளிகளில் 100 க்கும் மேற்பட்ட பிள்ளைகளைச் சைவ சொற்பொழிவு, எழுத்துத் தேர்வில் பங்குபெற வைத்துள்ளார். இவர் அரசு ஊழியத்திலிருந்து ஓய்வு பெற்றபின் தன் முழுநேரத்தையும், சைவப் பணி, சமுதாயப் பணிக்கென செலவிடுகிறார். தமிழக அரசு தன் ஊழியர்களின் ஓய்வுக் கால வயதினை இன்னும் கொஞ்சம் குறைத்தால் கூட ஒரு வகையில் நல்லது தானே! (பிறப்பு - 15-6-1928; ஊர் - புலவர்நத்தம், தஞ்சை அருகே)

அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருமடம்

1847-ஆம் ஆண்டில் கோவிந் தம்மையார் நாராயணசாமி அவர்கட்கும், பரிபூரணத்தம்மையாருக்கும் திரு மகளாகத் தோன்றினார். இவர் தம் எட்டாம் வயதில் இவருக்குத் திருமணம் நடந்தது. திருமணம் நடந்த எட்டு மாதங்களில் கணவர் இறைவனடி சேர்ந்தார். மன அமைதிக்காகத் தல யாத்திரை செய்த அம்மையார் மதுரையில் சிவயோகியார் ஒருவரிடம் மெய்யுணர்வு பெற்றார். மீனாட்சி சொக்கநாதரை விட்டு வரமாட்டேன் என்று அம்மையார் கூறவும், தந்தையார் மீனாட்சி சுந்தரேசுவரர் திருவுருவப் படத்தினை வாங்கி அம்மையாரிடம் அளித்து ''இதோ, நீ கேட்ட மீனாட்சி, சொக்கநாதர். இவர்களையும் அழைத்துக் கொண்டு தஞ்சை செல்வோம்'' என்றதும் சம்மதித்துப் புறப்பட்டுத் தஞ்சாவூர் வந்து சேர்ந்தார். வீடுவந்து சேர்ந்தது முதல், தெருவாயில் கடந்து வெளியில் செல்வ தில்லை என்று உறுதி பூண்டார். அது முதல் அவர்கள் வசித்த தஞ்சாவூர் தத்தோஜியப்பா சந்து 811-ஆம் எண்ணுள்ள வீடு அருள்மிகு மீனாட்சி சுந்தரேசர் திருமடம் ஆனது. வீட்டின் தென்மேற்கு மூலையில் உள்ள ஓர் அறையில் தாம் தனித்துத் தவம் செய்ய வேண்டும் என்று கூறி, அதில் அமர்ந்து, தியானமும், தவமும் செய்து கொண்டு பன்னிரு திருமுறைகளையும், திருவருட் பா ஆறு திருமுறைகளையும் படித்து இன்புற்றார்கள். கல்லாமலே கலை ஞானம் கூடியது. சைவ சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கையும் தாமே பயின்றார்கள். இவை நிறைவு பெற்றவுடன் தவம் செய்த வீட்டறை இடிந்து விழுந்து விட்டது. இடிபாடு களை அகற்றியபின், இவர்கள் அமர்ந்து தவம் செய்த இடத்தில் அரச மரமும் வேப்பமரமும் தாமே முளைத் தெழுந்தன. அரசமரம், வேப்ப மரத்திற்கு தினமும் திருமுழுக்கு செய்து அலங் கரித்து வழிபாடு செய்ததோடு, அருள்மிகு மீனாட்சி சொக்கநாதருக்கும் பூசனைகள் நிகழ்த்தி வந்தார்கள். நாடோறும் திருவிளையாடற் புராணம் படிப்பதும், தாம் உணர்ந்தவற்றை மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்லுவது மாக இருந்தார்கள்.

இவர்கள் வசித்து வந்த பக்கத்து வீட்டில் குடியிருந்த இராமசாமிப் பிள்ளை என்பாரின் மகனாருக்கும், அம்மாக் கண்ணு அம்மையாருக்கும் 11-12-1923 -இல் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு சொக்க லிங்கம் என்றே பெயரிட்டனர். இக் குழந்தைக்குச் சமய, விசேட தீக்கை தந்து 1933-இல் திருமடத்தின் இளவரசராக்கி னார்கள். இவர்கள் திருமுறைகளும் சாத்திரங்களும் முறையே கற்று வந்தார்கள். அதுமுதலாக இத்திரு மடத்தின் அதிபராக தவத்திரு சொக்க லிங்க சுவாமிகள் விளங்கி வருகிறார்கள். சுவாமிகள் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர் களுக்குத் தீட்சைகள், சிவ பூசைகள் வழங்கி உள்ளார்கள். தேவாரப் பாடசாலை துவங்கிச் சிறுவர்களுக்குத் தேவாரம் கற்பித்து வருகிறார்கள். தனது மூன்றாவது மகனை இளவரசுப் பட்ட மாக நியமித்து உள்ளார்கள். திருமுறை முற்றோதல், சிவபூசை, சமயச் சொற்

பொழிவுகள், உழவாரப்பணி - செய்து வருகின்றார்கள். ''சிவனடியார் திருக் கூட்டம்'' தொடங்கி தமிழ்மாதம் முதல் தேதியன்று பெரிய கோயில் ராஜவீதியில் தேவாரம் ஓதி வலம் வருகின்றார்கள். திருத்தென்குடிதிட்டை, பெரும் புலியூர் ஆகிய கோயில்களில் திருமுறைகளை கல்வெட்டில் பதித்து உள்ளார்கள். சுவாமிகளே திருக் கூட்டத்தின் தலைவர் ஆவார். சிவனடியார் திருக்கூட்டம் *1-5-1988* அன்று தொடங்கப்பட்டது.

சுந்தரர் தேவாரத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர்



சுந்தரர் தேவாரத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த பெருமை முனைவர் சோ. ந. கந்தசாமி அவர்களைச் சேரும். ஒரு பதிகத்தை எடுத்துக் கொண்டால் ஐந்தாகப் பிரித்துக் கொள்கிறார். (1) A note on the thalam *(தலம்)* (2) Verse (3) Transliteration (4) Free Translation (5) Explanation in English எடுத்துக்காட்டாக, திருவெண் ணெய் நல்லூர் பதிகத்தை எட்டு வகைச் செய்திகளால் விளக்குகிறார். "This Pathikam *(பதிகம்)* is recited in the Royal festivals of Thailand" என்ற அரிய செய்தியும் இடம் பெற்றுள்ளது.

பத்து பாடல்கள் முடிந்தவுடன் The Specific features of the Decade என்று எழுதியுள்ளார். இது அரும்பெரும் சாதனையாகும். *832* பக்கங்கள் கொண்ட இந்நூலை செம்மஞ் சேரியில் உள்ள Institute of Asian Studies வெளியிட்டுள்ளது.

S.N.K. அவர்கள் தமிழில் முப்பது நூல்களும், ஆங்கிலத்தில் பத்து நூல் களும் எழுதி வெளியிட்டுள்ளார். இவர் எழுதியுள்ள திருமுறை இலக்கியம் உலகத் தமிழிலக்கிய வரலாறு, தமிழ் இலக்கியச் செல்வம், இந்தியத் தத்துவக் களஞ்சியம், திருமுறையில் இலக்கிய வகை Tamil Literature and Indian Philosopy, The Yoga of Siddha Avvai, History of Science, Philosophy and Culture in Indian civiliation *(பலர் எழுதியது)* ஆகிய நூல்களில் முழுமையாகவோ, பகுதியாகவோ, திருமுறைகள் சைவ சித்தாந்தம் இடம் பெற்றுள்ளன.

பௌத்தத் தத்துவத்தில் முனைவர் பட்டம் பெற்றுள்ள இவர் மலேசியா, அண்ணாமலை, தமிழ்ப் பல்கலைக் கழகங்களில் பணியாற்றிவிட்டு இப் பொழுது தஞ்சையில் வசித்து வருகிறார்.

(பிறப்பு 15-12-1936; பிறப்பிடம் - இலையூர், செயங்கொண்ட சோழபுரம் அருகில். பெற்றோர் - வை.கோ. நடராச முதலியார், மீனாம்பாள்)

சைவ சித்தாந்தப் பேராசிரியர்



முனைவர் ஜி. பாஸ்கரன் அவர்களின் விவரக் குறிப்பையே ஒரு நூலாகப் போடலாம். எத்தனை கருத்தரங்குகள்! (உலகளாவியது; தேசிய அளவிலானது; மாநில அளவிலானது) எத்தனை வகை யான ஆய்வுகள்! பார்க்கவே மலைப்பாக இருக்கின்றது. இவரது M. Phil ஆய்வே

''ஒன்பதாம் திருமுறை வெளிப்படுத்தும் சைவசித்தாந்த அடிப்படையில் ஒரு மதிப்பீடு'' தமிழ்ப் பல்கலைக் கழகத் தத்துவத் துறைப் பேராசிரியராக இருந்துகொண்டு பின்வரும் ஆய்வுத் திட்டங்களை மேற்கொண்டுள்ளார். (1) Epitomology of Saiva Siddhanta (2) Social Philosopy (3) Contribution of Siddhanta Saivism to Indian culture (4) Contribution of the Agamas for the development of Saivism and Vaishnavism.

மேலும் மூன்று புத்தகங்கள் எழுதி வெளியிட்டுள்ளார். (1) Existence of God (2) Reason and Faith (3) Social Philosophy.

அருள் நமசிவாயம்

எழுத்தாலும், பேச்சாலும் தன்னுடைய முத்திரையை எங்கும் பதிக்காதவர் வழக்கறிஞர் அருள் நமசிவாயம். டி.என். ராமச்சந்திரன் அவர்களின் நேர் சீடர் ஆவார். 1974 இலிருந்து டி.என்.ஆர். இடம் சாத்திர, தோத்திர பாடம் கேட்டவர். டி.என்.ஆர். சொல்வதை யெல்லாம் எழுத்து வடிவமாக்குபவர். அச்சுப் பணிக்குப் பின்பு திருத்தி உதவுபவர்.

(பிறப்பு - 1932; பிறப்பிடம் - புள்ளமங்கை)

ப. ஜம்புலிங்கம்

இவர் பேராவூரணி திருவாசக சபையின் அமைப்பாளராக இருந்து பல ஊர்களில் அன்பர்களுடன் திருவாசக முற்றோதல் செய்து வருகிறார். திருமுறை வழிபாடு, உழவாரப்பணி, சைவ சமயச் சொற்பொழிவுகள் நடத்துதல் எனப் பணியாற்றுகிறார். பேராவூரணி யில் சைவ சமய மாநாடு நடத்தினார். திருவாவடு துறை ஆதீன சைவ சித்தாந்த நேர்முகப் பயிற்சி மையத்தின் அமைப் பாளர்; தன்னுடைய வருமானத்தில் ஒரு பகுதியைச் சைவ சமயத்திற்காக அர்ப் பணிப்பது மட்டும் அல்லாமல் நேரத் தையும், உழைப்பையும் சமயத்திற்காக அர்ப்பணித்து வருகிறார் *(வயது 46)*.

சிவ. அமிர்தலிங்கம்

தஞ்சையில் சிவபூஜை மாநாடு நடத்தி ''திருவாசகம்'' வெளியிட்டமை, பெருவுடையார் சந்நிதியில் பஞ்சாக்கர வேள்வி நடத்தியமை, ''சித்தர் வழி'' இதழ் வெளியிட்டுவரல்; சித்தர் நூல்களை மலிவு விலைக்குத் தர ஏற்பாடு செய்தல்; ஆண்டுதோறும் நான்குமுறை இல்லத்தில் சிவபூஜை செய்தல்; தேவாரம் திருவாசகம் முற்றோதல், தமிழ்மாதப் பிறப்பன்று ராஜ வீதியில் திருமுறை முற்றோதல், அடியார்களுக்கு உருத்திராக்கம், ஆடை, பூசைப் பொருள் கள் வழங்குதல் *(1954, திருநாகேஸ் வரம்)*.

36. திருவையாறு

**''மாதர் பிறைக் கண்ணியானை மலையான்
மகளொடும் பாடி
கண்டேன் அவர் திருப்பாதம் கண்டறியாதன
கண்டேன்''**

ஆம். ஆடி அமாவாசையன்று திருவை யாற்றில் அப்பர் கயிலைக் காட்சியில் ''கண்டறியாதன காணலாம்''. அன்றைய தினம் காலையிலேயே தமிழ் நாட்டின் பல்வேறு ஊர்களிலிருந்தும் பல்லாயிரக் கணக்கான மக்கள் வந்து குழுமி விடுவர். பல மாவட்டங்களிலிருந்தும் வந்துள்ள சிவபூசைச் செல்வர்கள் இறைவன் திருமுன் அமர்ந்து சிவபூசை செய்வர். ஐயாறனடிமை கோ. சுப்பிரமணியனார் அவர்கள் இருபது ஆண்டு காலமாக சிவபூசைச் செல்வர்களை வரவேற்று மகேஸ்வர பூசை செய்து வைப்பார். இரவு 9 மணிக்குக் கயிலைக் காட்சி நிகழ்வுறும். இக்காட்சியைச் சுப்பிரமணி யனார் அவர்கள் தமக்கே உரிய பாணியில் கம்பீரமாக நேர்முக வருணனை செய் வார்கள். கேட்பாரை ஈர்த்து மெய் சிலிர்க்க வைக்கப் பேசும் இவர் வருண னையைக் கேட்கவே பலர் காத்துக் கொண்டிருப்பர்.

அண்மைக் காலத்தில் *(1995 இலிருந்து)* கயிலைக் காட்சி விழாவிற்கு முன் பத்து

நாட்கள் ''பன்னிரு திருமுறை முற்றோதல்'' தொடங்கி விடுகின்றது. முற்றோதல் நடத்துபவர் வேறு யாருமல்லர். நெல்லை ''திருவாசகம் - முற்றோதல் திலகம்'' திரு. கே. சுப்பிரமணியம் அவர்களும், அவர் தம் குழுவினரும் ஆவர். பத்து நாட்கள் இடையறாது பன்னிரண்டு திருமுறைகளையும் சுமார் 19000 பாடல்களையும் ஒரு சேர இசையுடன் பொருள் நயத்துடன் ஓதுவர். இப்பணியையும் செயல்படுத்துபவர் கோ. சுப்பிரமணியனாரே!

கோ. சுப்பிரமணியனார் 1990-இல் ஐயாறன் மெய்த்தொண்டர் இயக்கத்தைத் தொடங்கி திருவையாறு (கிரி) வலம் வருதல், பிரதோஷ வழிபாடு, அர்த்த சாம வழிபாடு, வாரம்தோறும் பெரிய புராண, திருவிளையாடற் புராண சொற்பொழிவுகள் நிகழ்த்துதல், மார்கழியில் திருவெம்பாவை ·பாராயணத்துடன் வீதிவலம் வருதல், நாள்தோறும் ஓதுவார் துணை கொண்டு மாணவ மாணவியர்க்குத் திருமுறை இசை கற்பித்தல், திருவையாற்றுத் திருப்பதிகங்கள் பதினெட்டினையும் கல்வெட்டாக்கித் தக்க இடத்தில் பதிப்பித்தல் எனப் பணியாற்றுகின்றார். நல்ல சொற் பொழிவாளர். நூல்கள் பல எழுதி யுள்ளார். உழவாரம் ஏனாதிநாதர் ஆயுள் தொண்டர்.

(கோ. சுப்பிரமணியனார்; பிறப்பு - 5-2-1927; பிறப்பிடம் - திருவையாறு)

பிற சைவ மன்றங்கள்

(1) ஐயாறப்பர் வாரவழிபாட்டு மன்றம்; தோற்றம் - 1980; தலைவர் - சுப்பிரமணியச் செட்டியார்; செயலர் - வடிவேல் பிள்ளை; தற்போதைய தலைவர் - இராம வேலாயுதம்; பணி - வார வழிபாடு.

(2) அப்பர் அப்பூதி திருச்சபை; தோற்றம் - 1975க்கு முன்; தலைவர் - இராம வேலாயுதம்; பணி - ஆடி அமாவாசையன்று திருமுறை இசை, சமயச் சொற்பொழிவு.

(3) சைவ சமயச் சங்கம்; தோற்றம் - 40 ஆண்டுகளுக்கு முன்; பணி - ஒரு நாள் மகேசுவர பூசை.

தொண்டர்கள்

(1) கவிஞர் அரங்க முத்துமணி (வயது 70); சைவசமய, சித்தாந்த சொற்பொழிவுகள் நடத்துபவர்.

(2) கு. தங்கவேல் (வயது 65. பஞ்சரதிக் கோட்டை, ஒரத்தநாடு அஞ்சல்); அன்னம் பாலிப்பு; பசுஞ்சாணத்தில் திருநீற்றினைச் சுத்தமாகத் தயார் செய்து வழங்குதல்.

37. களிமேடு

அப்பர் திருநாள்



களிமேடு - இப்பெயரைக் கேட்டவுடன் நெஞ்சம் களி கூருகின்றது. தமிழ் நாட்டு வரலாற்றிலே இந்த கிராமம் இடம் பெறாமல் போகலாம். இவ்வூர் இருக்கும் பகுதி கூடப் பலருக்குத் தெரியாமல் போகலாம். ஆனால் சைவ வரலாற்றிலே இக்கிராமம் தனி இடம் பெற்றுள்ளது. சைவத்தின் கோட்டைகளாக இருக்கும் பேரூர்கள், நகரங்களுக்கு இல்லாத தனிச் சிறப்பு இவ்வூருக்கு உள்ளது.

களிமேடு தஞ்சைக்கு அருகில் உள்ள குக்கிராமம்தான்; மக்கள் தொகை



ஆயிரம்பேர் தான் இருப்பார்கள். கிராமத்தில் படித்தவர்கள் விகிதமும் குறைவாகத் தானே இருக்கும். பரம்பரையாகச் சைவத்தைப் பின்பற்றியவர்களும் அரிதாகவே உளர். இப்படிப்பட்ட சூழ்நிலையில் 500க்கும் மேற்பட்டவர்களுக்கு 200 தேவாரப் பாடல்களாவது தெரிந்திருக்கின்றது. இளைய தலைமுறையினர் திருவாசகம் பாடுதலைக் கேட்டு ஓதுவா மூர்த்திகளும் பாராட்டியிருக்கின்றனர். மதுரை சோமு ஒருவரின் குரல்வளையைத் தடவி ''உன்னுடைய தொண்டையில் இவ்வளவு இனிமையைக் கடவுள் வைத்திருக்கின்றாரே'' என்று உருகிப் பாராட்டியிருக்கின்றார். களிமேட்டு இசைவாணர் ஒருவர் காம்போதி ராகத்தில் பாடியதைக் கேட்ட இசைக் கலைஞர் ஒருவர் மனமார பாராட்டிப் புகழ்ந்திருக்கிறார். அப்பர் திருநாளன்று திருமுறை ஊர்வலம் வருகின்ற பொழுது அந்தந்த வீடுகளில் நிற்க வைத்து வீட்டில் உள்ளவர்களும் சேர்ந்து பாடுவார்கள். ஒருமுறை ஓதுவார் ஒருவர் சிறு தவறு செய்தபொழுது இவ்வூர்க்காரர் திருத்தியிருக்கிறார். வீட்டிற்கு ஒரு பிள்ளைக்காவது நாவுக்கரசர் பெயரோ ஏனைய மூவர் பெருமக்கள் பெயரோ உள்ளது. இப்பொழுது சொல்லுங்கள். களிமேட்டின் பெருமையை எந்த ஊராலும் மிஞ்ச முடியுமா?

களிமேட்டின் இத்தனைச் சிறப்புக்கும் காரணம் அங்கு எழுப்பப்பட்டுள்ள அப்பர் சுவாமிகள் திருமடமும், சித்திரைச் சதயத்தன்று நடைபெறும் அப்பர் குருபூசைத் திருநாளுமே ஆகும். காலையில் திருமுறை விண்ணப்பம், மகேசுவர பூசை; மாலையில் சமயச் சொற்பொழிவுகள், திருமுறை இன்னிசை. இங்கு பேசாத சைவ அறிஞர் இல்லை. பாடாத ஓதுவார் இல்லை. ந.மு. வேங்கடசாமி நாட்டார், சச்சிதானந்தம் பிள்ளை, அ.மு. சரவண முதலியார், கிருபானந்த வாரியார், குன்றக்குடி அடிகளார், பாஸ்கரத் தொண்டமான், அ.ச. ஞான சம்பந்தன் என அனைத்துப் பெருமக்களும் சொற்பெருக்காற்றியிருக்கின்றனர். தருமபுரம் சாமிநாதன் அவர்கள் இருபது ஆண்டுகளாகத் தொடர்ந்து வந்திருக்கின்றார்.

அப்பர் அவை நிறைவுற்ற பின்னர் இரவு பத்து மணிக்கு அப்பர் சுவாமிகள் திருவுருவப்பட வீதியுலா நிகழ்வுறும். அப்பர் திருவுருவப்படம் எழுந்தருளப் பண்ணியிருக்கும் விமானத்தின் பின்னால் திருமுறைக் குழுவினர் இன்னிசையுடன் பண்களைப் பாடிச் செல்வர். அன்று இரவு முழுவதும் இசைப் பெரு வெள்ளம் வீதி வழியே பெருக்கெடுத்து ஓடும். களிமேடு களியாரும் மேடாகவே காட்சியளிக்கும். அந்த மகிழ்ச்சி அடுத்த ஆண்டு சதயம் வரும் வரை ஊர் மக்களின் உள்ளத்தில் நிலைபெற்று உன்னத உணர்வினை உரத்துடன் உணர்த்திக் கொண்டே இருக்கும்.


அப்பர் திருநாள் நடக்கின்ற நாளன்று களிமேட்டைச் சேர்ந்தவர்கள் தமிழ் நாட்டில் எங்கு இருந்தாலும் தங்கள் ஊருக்கு வந்துவிடுவர். 76-ஆம் ஆண்டு விழாவிற்கு மட்டும் வசூலான தொகை 61,878 ரூபாய் ஆகும். செலவு 39320 ரூபாய் ஆகும். ஒரு குக்கிராமத்தில் இவையெல்லாம் சாதனையல்லவா?

மே 3, 2005 அன்று 77-ஆம் ஆண்டு சதய விழாவிற்கு நான் சென்ற சமயம் அறிவொளி, மு. கணபதி, டி.என். இராமச்சந்திரன் ஆகியோர் உரை நிகழ்த்திக் கொண்டிருந்தனர். அந்தப்

புனித மண்ணை நெற்றியில் பூசிக் கொண்டேன்.

தொண்டரடிப்பொடி தானே திரு நீற்றுச் செல்வம்!

சிவகுருநாத பிள்ளை



இந்த விந்தை நிகழக் காரணம் என்ன என்று கேட்டால் 77 ஆண்டுகள் பின்னோக்கிச் செல்ல வேண்டும். அதுவும் கரந்தை என்ற கருந்தட்டாங் குடிக்குச் செல்ல வேண்டும். கரந்தையில் சிவகுருநாத பிள்ளை என்ற பெரியவர் வாழ்ந்து வந்தார். கரந்தைக் கல்லூரி பேராசிரியர். சைவ சமயச் சொற்பொழி வாளர்களில் தலை சிறந்தவராக விளங்கினார். அவர்களின் இசைச் சொற்பொழிவு மாந்தரின் உள்ளத்தைக் கனிவிக்கும்; களிப்பூட்டும். இவர் இறையடி சேர்ந்த ஆண்டு 1875 ஆக இருக்கலாம். அப்பொழுது அவர்களுக்கு வயது 70 ஆக இருக்கலாம். களிமேட்டு வாழ் மக்களில் சிலர் ஆட்டு வியாபாரம் செய்து வந்தனர். வியாபாரம் நிமித்தம் கரந்தைப் பகுதி வந்தவர்களைச் சைவமாக்கி சொற்பொழிவு நடத்தி, சிவபூசை செய்வித்துச் சைவ உணர்வு ஊட்டினார்கள். சிவகுருநாத பிள்ளை யவர்களைப் பலரும் சத்குருவாக ஏற்றுப் போற்றினர். அவர்கள் போட்ட விதை இன்று களிமேட்டைச் சிவலோகம் ஆக்கியுள்ளது. (அப்பரவை, களிமேடு; 1928-இல் முறைப்படுத்தப்பட்டது. அதற்கு முன்பே சதயவிழா நடத்திருக் கின்றது. தலைவர் - எம். அம்பிகாபதி வி.ஏ.ஓ. செயலர் - கு. செல்வம்)

தேவாரப் பண்களையும், கட்டளை பேதங்களையும் விளக்கிய தமிழ் வேதநாவலரும் அவர் தம் சீடரும்

தேவாரம் பண்களால் அமைந்தது. ஒவ்வொரு பண்ணுக்கும் கட்டளை பேதங்கள் உண்டு.

இவை மிகவும் எளிமையான வரிகள் தான். யாராலாவது இவற்றை விளக்க முடியுமா என்றால் விழிப்பார்கள். நம் களிமேட்டு அறிஞர் புலவர் க. அப்பாராசன் இவற்றை விளக்குகிறார்.

''மூலாதாரம் தொடங்கிய எழுத்தின் நாதம் ஆளத்தியாய்ப்பின் இசை யென்றும், பண்ணென்றும் பெயராம். பெருந்தானம் எட்டினும் கிரியைகள் எட்டானும் பண்ணிப்படுத்தலால் பண் ணென்று பெயராயிற்று. பெருந்தானம் எட்டாவன; நெஞ்சும், மிடறும், நாக்கும், மூக்கும், அண்ணாக்கும், பல்லும், உதடும், தலையும் என இவை கிரியை கள் எட்டாவன; எடுத்தல், படுத்தல், நலிதல், கம்பிதம், குடிலம், ஒலி, உருட்டு, தாக்கு என இவை. கட்டளைகள் பாங்கார் திறங்களாக உரைக்கப்படும்.''

அப்பாராசனார் ஞானசம்பந்தப் பெருந் தகையின் முதல் திருமுறையில் முதல் பதிகத்தில் முதற்பாடலை எடுத்துக் கொள்கிறார். முதல் பதிகம் நட்ட பாடைப் பண்ணால் அமைந்தது. முதல் பாடல் ''தோடுடைய செவியன்'' இதோ அப்பாராசனார் விளக்குகிறார்.

நட்டபாடை

''நாட்டம் செயற்படும் பா அடை வினையை உடையது என்பனவற்றின் சுருக்கமே நட்டபாடை என்பதாகும். நாட்டம் - கண், கண்கள் இரண்டும் ஒரு

பொருளை நோக்கும் போது ஒன்றாம் தன்மையை எய்தும். அதுபோல இரண்டு சீர், இரண்டு யாழ், இரண்டு அடி, இரண்டு திறம் ஒன்றாக இணைவது நட்டபாடை என்னும் பண்ணுக்குரிய இலக்கணமாகிறது.

இந்தக் கருத்தை அப்பாரசனாரின் குருநாதர் சித. வே. ஷண்முகநாத பிள்ளை அவர்கள் ஒரு நூற்பாவால் விளக்குகிறார். 21 பண்களுக்கும் அவற்றின் கட்டளை பேதங்களுக்கும் ஷண்முகநாத பிள்ளையவர்கள் நூற்பாக் களால் பாடி விளக்கியிருக்கிறார். அந்த விளக்கங்களை அப்பாராசனார் தம் குருநாதரிடம் பல்லாண்டுக் காலம் கேட்டு அவற்றை நமக்குத் தந்திருக் கின்றார்.

''நாட்டம் இரண்டும் நாட ஒன்றான போல்
சீர்யாழ் யாப்படி திறமிவை நாட்டம்
பட இரண்டொன்றும் பணி நட்ட பாடை''

''தோடுடைய செவி'' என்று தொடங்கும் பாடல் இரண்டு யாப்பு இணைந்து வந்த நட்டபாடைப் பண்ணாகும். ஓர் அடியில் மிகுதியாக வரும் சீர்கள் யாழ் என்றும், குறைவாக வரும் சீர்கள் யாப்பு என்றும் கொள்ளப் பெறும். யாழ் என்பது இசையமைதி என்றும் பொருள்படுகிறது.

''தோடுடைய செவி யன்விடை யேறியோர்
தூவெண் மதிசூடி''

என்னும் ஆறுசீர்களாக இந்த அடி யினைப் பிரிக்கலாம்.

தோடுடை - கூவிளம்; யசெவி - கூவிளம்;

யன்விடை - கூவிளம்; யேறியோர் - கூவிளம்.

இந்த நான்கு சீர்களும் யாழாகும்.

தூ வெண் - தேமா; மதிசூடி - புளிமாங்காய்.

இந்த இரண்டும் யாப்பாகும்.

மாச்சீரும் காய்ச்சீரும் யாப்பாக இணைந்து நான்கு விளச் சீர்களையும் யாப்புறுத்துகின்றமையின், இந்தப் பதிகம் யாப்பு இரண்டு இணைந்து வந்த நட்டபாடையாயிற்று.

''தோடுடையசெவி'', ''குறிகலந்த இசை'', ''பத்தரொடு பலரும்'' என்று தொடங்கும் மூன்று பதிகங்களும் யாப்பு இரண்டு இணைந்து ஒன்றாக வந்த நட்டபாடைப் பண்ணாம்.

நாலாம் பதிகமாகிய ''மைம்மரு பூங்குழல்'' அடியிரண்டு இணைந்து வந்த நட்டபாடைப் பண்ணாகும். ''செய்யரு கே'', ''அங்கமும் வேதமும்'', ''பாடக மெல்லடி'', ''புண்ணியர் பூழியர்'' என்று தொடங்கும் பதிகங்கள் அடியிரண்டு இணைந்து வந்த நட்டபாடைப் பண்ணாகும்.

அடுத்துவரும் ''வண்டார் குழல்'', முதலாக ''சூலம் படை'' எனத் தொடங் கும் பதிகம் முடிய வருபவை இரண்டு திறங்கள் ஒன்றிவரும் நட்டபாடைப் பண்ணாகும்.

எட்டுத் திறங்கள்

கட்டளை என்பது திறமாகும். இந்தப் பதிகத்தை இன்ன திறத்தில் பாட வேண்டும் என்று இசைவலார் கட்டளையிடுவது. பண் என்பது சீர்வகையால் கணிக்கப்பெறும் யாப்பு முறையாகும். திறம் என்பது பொருள் வகையில் உணரக் கூடியதாகும். திறத்தின் நுட்பம் கொண்டே அதற்குரிய ராகத்தை அமைத்துப் பாடுதல் வேண்டும்.

திறம் 1 : நைவளம்

''வளத்தில் மனது மகிழ்ந்து நெகிழ்ந்து
நேய நயவளம் நிகழ்த்தல் நைவளத்திறம்''

(ஷண்முக நாதபிள்ளை)

இறைவனாரின் அருள்வளத்தை நினைந்து உள்ளம் மகிழ்ந்து, நெகிழ்ந்து அன்பு மிகுதியால் பெருமானாரின்

கீர்த்தியை அழகுறப் பாடுவது நைவளத் திறம் ஆகும்.

தோடுடைய செவியன் பாடலுக்கு விளக்கம். இறைவனார் உமையுடன் ஒன்றியிருத்தல் உலகினைக் காக்கும் பொருட்டேயாம். விடையின் மீதிவர்தல் 'ஆதேயம்' ஆகவும், உயிர்களை ஏற்று அருள் புரிதலை உணர்த்தற் பொருட்டே யாம். பிறையினைச் சடையில் தரித்தல், பிழை பொறுத்து ஆளும் திறத்தினை உணர்த்தற் பொருட்டேயாம். காட்டினில் விளைந்த நீற்றினைப் பூசுதல் உயிர்கட்கு வீட்டுநெறியின் கண்வேட்கை உண்டா தற் பொருட்டேயாம் என்றவற்றையெல் லாம் தம் பாடலில் பாடி உருகி, மகிழ்ந்து இறைவனாரின் வளம் செப்புகின்றார். இது நைவளம் திறமாகிறது.

திறம் - 2 - படுகுறிச் சீர்திறம்

இறைவனாரின் சிறப்பியல்பும், அவர் வீற்றிருக்கும் தலத்தின் மேன்மையும் மக்கள் உள்ளத்தில் பதியும்படி பாடுதல் படுகுறிச் சீர்திறமாகும்.

பதிகம் - 2 : பாடல் - 3

''பண்ணிலாவும் மறை பாடலினான் இறை
சேரும் வளையங் கைப்
பெண்ணிலா வவுடை யான்பெரி யாள்கழ
லென்றுந் தொழுதேத்த
உண்ணிலா வியவர் சிந்தையுள் நீங்கா
ஒருவன் இடமென்பர்
மண்ணிலாவும் அடியார்குடி மைத்தொழில்
மல்கும் புகலூரே''.

ஞானியர் சிந்தையை விட்டு நீங்காத பெருமான் வீற்றிருப்பது அடியார்கள் விருப்பத்துடன் பணி செய்யும் திருப் புகலூரேயாகும் என மக்கள் உள்ளத்தில் பதியும் வண்ணம் தேற்றம் கொடுத்துக் கூறுதலின் இது படுகுறிச் சீர்திறம் ஆகி றது.

திறம் - 3 - செந்திறம்

வினையும், அதனால் விளைகின்ற துன்பமும், துயரமும், தீர்கின்ற, தீரும் செம்மையாம் நலத்தினைப் பாடுவது செந்திறம் ஆகும்.

பதிகம் - 3 - காசுரம்

''பத்தரொடு'' என்று துவங்கும் பாடலில் ''திருவலிதாயத்தின்கண் சித்தம் வைத்த அடியார்களிடம் இடர் தரும் பிறவி நோய் அடையா'' என்று தீமை தீரும் முறையினைக் கூறுதலின் இது செந்திறமாயிற்று.

திறம் - 4 - அயிர்ப்புத் திறம்

''இறைவனாரிடம் இதற்குக் காரணம் என்ன சொல்வீர்களாக'' என்று ஐயத்து டன் கேட்டல் அயிர்ப்புத் திறமாகும். அயிர்ப்பு - ஐயம்.

பதிகம் - 4 பாசுரம் - 1

''மைம்மரு பூங்குழல்'' என்ற பாசுரத்தில்

''ஈச என்நேச இதென்கொல் சொல்லாய்
மெய்ம்மொழி நான்மறையோர் மிழலை
விண்ணிழி கோயில் விரும்பியதே''

என ஐயம் தோன்றப் பாடியுள்ளமையின் இது அயிர்ப்புத் திறம் ஆகிறது.

திறம் - 5 - செம்பாலைத் திறம்

தீமைகளை அடியோடு நீக்கும் செம் பொருளாம் இறைவனைச் சார்ந்து நலம் பலபெறும் நிலைகளைக் கூறுவது செம்பாலைத் திறமாம்.

''செய்யருகே'' என்று தொடங்கும் பாடலில் ''திருக்காட்டுப் பள்ளியில் உறையும் இறைவனை நினைத்தால் மேலுலகினை அடையலாம்'' என்பதால் செம்பாலை ஆகும்.

திறம் - 6 - நவில் திறம்

''பெருமானே! இவ்வாறு அமைந்து உள்ள காரணத்தைக் கூறுவாயாக'' என விளித்துக் கேட்பது நவில் திறம் ஆகிறது.

''திருச்செங்காட்டாங்குடிக் கணபதீச் சரத்திலுள்ள திருவோலக்கக் காட்சி

திருமருகலில் கொண்டுள்ள காரணத்தைச் சொல்வீராக'' என்று கேட்பது நவில்திறம் ஆகிறது.

திறம் - 7 - ஆற்றுக் குறிச் சீர்திறம்

இறைவனாரின் அருட்பணியை ஆற்றும் வண்ணம் வலியுறுத்திக் கூறுவது ஆற்றுக் குறிச் சீர் திறமாகிறது.

''புண்ணியர் பூதியர்'' என்ற பாசுரத்தில் ''பசுபதி ஈச்சரத்தை நாவே! நீ பாடு வாயாக'' என நாவிற்குக் கட்டளை இடுதலின் இது ஆற்றுக் குறிச் சீர் திறமாகிறது.

திறம் - 8 - குறிச் சீர் செந்திறம்

குறிச் சீர் திறமும் செந்திறமும் விரவி வருதல். அதாவது இறைவனாரைத் தொழுகின்ற அடியவர் அடையும் நலத்தைக் குறித்தும், இறைவனாரின் இயல்புகள் குறித்தும் பாடப்பெறும் திறம்.

பதிகம் - 10 ''உண்ணாமுலை'' என்ற பாசுரம் இறைவனார் சிறப்பையும், குறிச் சீர்திறம் அவரைத் தொழுபவர் வினை அற்றுபோம் எனும் அடியார் பெறும் நலத்தையும் (செந்திறம்) கூறுகிறது.

இவ்வாறு 21 பண்களுக்கும் 74 கட்டளைகளுக்கும் அப்பாராசனார் விளக்கம் தருகிறார். இத்தனை செய்தி களையும் அப்பாராசனார் ''பண்முதலும் பாங்கார் திறமும்'' என்ற நூலில் தொகுத்துத் தருகிறார். ''இந்நூல் ஒரு தமிழிசைப் பண்டாரம். தமிழ் இயல் இசை என்ற இரண்டின் ஒத்திசைவு இந்நூல் மூலமே முதன் முதலில் வெளி வருகிறது. இவ்வத்துவித தரிசனம் ஓர் ஆனந்தமே! ஆம் ஓரத்தக்க ஆனந்தமே. பலநூறு ஆண்டுகளாக மந்தணமாகக் கரந்திருந்த இசை நுட்ப நுணுக்கங்கள் இப்போதாவது வெளிவர நாம் கொடுத்து வைத்திருக்கிறோம். இந்நூல் வெளி வரும் காலம் தமிழ்இசையின் புனர் உற்பவ காலம். தமிழ் இசையின் வைகறையில் நாம் வாழ்கின்றோம்'' என்கிறார் சேக்கிழார் அடிப்பொடி திரு. டி. என். இராமச்சந்திரன் அவர்கள்.

இந்நூலில் உள்ள கருத்துகள் யாவும் அப்பாராசனாரின் கருத்துகள் அன்று. அப்பாராசனார் தேவகோட்டையில் தமிழாசிரியராகப் பணியாற்றியபொழுது 1957-இல் வைத்தியமணி, தமிழ்வேத நாவலர் சித. வே. சண்முகநாத பிள்ளை அவர்களிடம் பழக நேர்ந்தது. தமிழ் வேதநாவலர் ஞானசம்பந்தப் பெருந் தகை முதலாவதாகப் பாடிய நட்ட பாடைப் பண்ணின் மேற்கணக்காம் நவவியாக் கரண விளக்க ஆவணத்தை அப்பா ராசனார்க்குக் காட்டினார்கள். பின்னர் ''பண்ணிசை இலக்கணச் சூக்கம்'' என்ற அரிய தமிழிசை இலக் கண நூலைத் தமிழ்வேத நாவலர் விளக்கி வந்தார்கள். அவர்கள் கூறிய விளக்கத் தைப் பல மாதங்கள் உழைத்து அப்பா ராசனார் எழுத்து வடிவமாக் கினார். அதன் பலனே இவ்வரிய படைப் பாகும்.

தமிழ் வேதநாவலர் ஷண்முகநாதப் பிள்ளை அவர்கள் சிவயோகம் கைவரப் பெற்றவர்; சீலமிகு தவவாழ்வு வாழ்ந் தவர். தம்முடைய யோகக் காட்சி மூலம் சூக்கும உண்மைகளைத் தரிசித்தவர். 5-8-1915-இல் தேவகோட்டையில் பிறந்த தமிழ் வேத நாவலர் அவர்கள் விபவ ஆண்டு தைத்திங்கள் பதினான்காம் நாள் இறைவனடி சேர்ந்தார்கள்.

அப்பாராசனார் அவர்கள் தம் குருநாதர் விளக்கிய நவவியாக்கரணத்தை 1800 பக்கங்களில் எழுதி வைத்திருக்கின்றார். திருஞானசம்பந்தப் பெருந்தகை அருளிய முதல் மூன்று திருமுறைகளின் பண் விளக்கம், கட்டளை வேறுபாடுகள் இவற்றை எல்லாம் விளக்கி எழுதி யுள்ளார். இந்நூல் வெளிவந்தால் தமிழ் இசைக்கு மணிமகுடமாகத் திகழும்.

(அப்பாராசனார் : பிறப்பு - 7-6-1928; பிறப்பிடம் : களிமேடு, தஞ்சை)

38. தென்னங்குடி

சீளிமேடு அப்பர் திருநாளைக் காணச் சென்ற பொழுது (3-5-2005) களிமேட்டின் அருகில் உள்ள தென்னங்குடி கிராமத்தில் அப்பர் அடிகளின் ஐம்பொன் திரு மேனிக்குத் திருக்குடமுழுக்கு விழா நடைபெற்றது. அத்திருக்கோயிலிலும் அப்பர் பெருமான் திருவுருவப் படம் இருந்தது. அதன் தொன்மை எண்பது வயது நிரம்பிய பெரியவருக்கே தெரியவில்லை. நூறு ஆண்டுகளுக்கு மேல் இருக்கலாம். அதுபோல அங்கு நடைபெற்று வரும் அப்பர் விழாவின் தொடக்கமும் தெரியவில்லை. நெடுங் காலமாக நடைபெற்று வருகின்றது. இவற்றை எல்லாம் நெறிப்படுத்த பத்து ஆண்டுகளுக்கு முன்னர் (1995) நாவுக்கரசர் நற்பணி மன்றம் துவங்கி அன்னதானம், வீதியுலா, சொற்பொழிவு என்று நடத்தி வருகின்றனர். வெள்ளம் பெரம்பூரில் அப்பர்மேடு, நடுகத்தியில் அப்பர் மடம், வடகால், கள்ளப் பெரம்பூரில் சம்பந்தர் மடம் என எங்கும் நால்வர் புகழ்பேசும் நல்லூர்களே! இவற்றையெல்லாம் உள்ளடக்கி நாவுக் கரசர் மாவட்டம் உருவாக்கினால், அதன் தலைநகரம் களிமேடாகத்தானே இருக்க முடியும்!

இன்னுமோர் இணைப்புச் செய்தி; ஒரு காலத்தில் தஞ்சாவூர் சம்பந்தர் மடத்திலிருந்து ஏழு முத்துப் பல்லக்கு களில் ஏழு திருஞானசம்பந்தர் திரு வுருவப்படங்கள் எழுந்தருளப் பண்ணி வீதியுலா வரும் காட்சி கண் கொள்ளாக் காட்சியாக இருக்குமாம்!

39. திருப்பூந்துருத்தி

அப்பர் திருமடம்

''அங்குறை யுந்தன்மை வேண்டி 'நாமடி
போற்றுவதென்று
பொங்கு தமிழ்ச்சொல் விருத்தம் போற்றிய
பாடல் புரிந்து
தங்கித் திருத்தொண்டு செய்வார் தம்பிரா
னாரருள் பெற்றுத்
திங்களும் ஞாயிறுந் தோயுந் திருமட
மங்கொன்று செய்தார்''

-திருத்தொண்டர்புராணம் 1654.

இப்பாடலுக்கு சிவக்கவிமணி சி. கே. சுப்பிரமணிய முதலியார் தரும் விளக்கம்:

''திங்களும் ஞாயிறும் தோயும் திரு மடம்'' இஃது அத்திருமடத்தின் உயர்வு குறித்தது.

''தோயும்'' : நிலம் தோயும்படி நாயனாரை வந்து வணங்கும் என்ற குறிப்புப்பட நின்றது. அத்திருமடத்தின் அகன்ற திருமுற்றத்தில் இரவில் திங்களும், பகலில் ஞாயிறும் நில வொளியும் வெயிலும் பரப்பிச் சேவகம் செய்கின்றன என்பது அத்திருமடத்தின் அமைப்பினைப் பற்றி இப்போது உள்ள அதன் பகுதிகளின் துணைகொண்டு அறிந்து கொள்ளலாம்.

''திருமடம் ஒன்று''

''ஒன்று'' : ஒப்பற்றது என்ற குறிப்புப் பட நின்றது. இத்திருமடம் நம் சைவசமய பரமாசாரியாராலே செய்யப் பட்ட தனிப் பெருமை உடையது. இது போல வேறெச் சமயத்திலும் சமய ஆசாரியார்கள் தாம் அமைத்து அமர்ந்த மடங்கள் கேட்கப்படவில்லை. அவ்வவர் பெயரால் வழங்குவனவாகிய மடங்கள் பின் வந்தவர்களால் அந் நினைவு பற்றி அமைக்கப்பட்டனவாகவே காண்கின் றோம். இத்திரு மடத்தில் நம் ஆசாரிய மூர்த்திகள் பல காலம் எழுந்தருளி யமர்ந்து சிவபூசை சிவஞான யோகம் முதலிய தவங்களைச் செய்திருந் தருளினார்கள்.

அவ்வாறு பூசித்த இடமும், யோகத்தமர்ந்த இடமும் அடையாளங் காண இன்றும் உள்ளன. இத் திருமடத்திலேதான் நம் மற்றொரு பரமா சாரியாராகிய ஆளுடைய பிள்ளை யாரும் நாயனாருடனே பலநாள் தங்கி உடனமர்ந்தளவளாவியிருந்தருளினார்கள். பிள்ளையார் தென்னாடாகிய தமிழ்

நாட்டில் எழுந்தருளிச் சைவத் தாபனம் செய்த சிறப்பும், நாயனார் வடநாடாகிய தொண்டை நன்னாட்டிலும் அப்பால் உள்ள வடதேயத்திலும் போந்துபின் திருக்கயிலைக் காட்சி கண்டருளிய சிறப்பும் ஒருவர்க்கொருவர் இத்திரு மடத்தில் பேசி அளவளாவிக் களித்தனர். அது காரணமாக நாயனார், பின்னர் தென்னன் நாடு சென்றருளவும், பிள்ளையார் திருத்தொண்டை நன்னாடு சென்று அங்கம் பூம்பாவையாக்கிய பின்னர்த் திருமணத்திற் கெழுந்தருளவும் உள்ள தெய்வ நிகழ்ச்சிகள் உளவாயின.

இத்தகைய தனிச்சிறப்பு வாய்ந்த இத்திரு மடம் இந்நாளில் இடிந்து சுவர்கள் மட்டும் காண உள்ள காட்சி மிக வருந்தத்தக்கது. இத்திருமடத்தின் சுவர் - பூசைமேடை முதலிய திரு அடையாளங் களைப் பொன்னே போற் பாதுகாத்து, வழிபடுதற்குரிய சிறந்த இடமாக அமைத்து வைக்க வேண்டியது சைவ நன்மக்களது பெருங்கடமை. அது பெருஞ்சிவ புண்ணியமுமாம். இத்திரு மடத்திற் சிதைந்து கிடக்கக் காணும் ஒவ்வொரு சிறிய செங்கற்றுண்டுகளும் பலப்பல கோடி பொன்விலை பெறும் சிறந்த தெய்வ மதிப்புடையவை என்று சொல்லலாம்.'' என்ற சிவக்கவிமணி யவர்களின் விண்ணப்பம் படிப்போர் அனைவரின் நெஞ்சையும் கசிவிக்கும்.

ஆனால் அதற்குச் செயல் வடிவம் கொடுத்தவர் துறவி கணேசனார் அவர்களே. துறவி கணேசனார் 26-11-1998-இல் சொந்த செலவில் ரூ.25000/- செலவிட்டு திருப்பணி செய்து முடித்துத் தொடர்ந்து ஒவ்வொரு மாதமும் சதய நட்சத்திரத்தன்று வழிபாடும் சொற்பொழிவும் ஏற்பாடு செய்து நடத்தி வருகிறார். நிகழ்வுகளுக்கு சொந்தப் பணம் ரூபாய் ஓர் இலட்சம் அளவில் செலவிட்டுள்ளார்.

துறவி கணேசனார்

துறவி கணேசனார் திருவையாறு வட்டம் வளப்பக்குடி கிராமத்தில் அமைந்திருக்கும் அப்பர் அடிகள் திருமடத்தைத் தனது சொந்தப் பணம் ஓர் இலட்ச ரூபாய் செலவில் திருப்பணி செய்தார். சிவநேயச் செல்வர்களின் துணைகொண்டு மடத்தை விரிவு படுத்தினார்.

திருத்துறைப்பூண்டி வட்டார மேட்டுப் பாளையத்தில் உள்ள சிவன் ஆலயத் திற்கு முழுச்செலவும் (சுமார் 7 இலட்ச ரூபாய்) தானே செய்து திருப்பணியும், குட நீராட்டும் செய்து முடித்தார். இதேபோல திருவாலம்பொழிலில் உள்ள சிவன் கோயிலின் கருவறைப் பகுதி முழுவதும் தனது சொந்தச் செலவிலேயே செய்து முடித்தார். திருப்பூந்துருத்தி தலவரலாறு, திருவை யாற்றுப் பதிகங்கள் ஆகியன வெளி யிட்டார்.

13-6-1936-இல் திருத்துறைப்பூண்டி வட்டம் மேட்டுப்பாளையத்தில் மாரியப் பப்பிள்ளை, கண்ணம்மாள் ஆச்சியின் புதல்வனாக துறவி கணேசனார் பிறந்தார். ஐந்தாம் வகுப்பு வரை மட்டுமே படித்த கணேசனார் இளமை யிலேயே ரெட்டியப் பட்டி சுவாமிகளைக் குருநாதராக ஏற்றுக் கடுமையான அனுஷ் டானங்களைக் கடைப்பிடித்தார். குன்றக் குடி அடிகளாரிடம் சமய தீட்சையும், வாரணாசியில் மௌனசாமி ஒருவரிடம் சிவதீட்சையும் பெற்றார்.

பன்னிரு திருமுறை மன்றம்

துறவி கணேசனாரைக் கௌரவத் தலைவராகக் கொண்டு 27-2-2003-இல் தஞ்சாவூரில் தொடங்கப்பட்ட பன்னிரு திருமுறை மன்றம் ஆங்கில மாதத்தில் 2-ஆம் 4-ஆம் ஞாயிற்றுக்கிழமைகளில் பெரியபுராண வகுப்பு நடத்துதல், ஓதுவாரைக் கொண்டு மாதம் இரண்டு வகுப்பு இசையோடு பயிற்றுவித்தல், மாதம் ஒருமுறை தலயாத்திரை, உழவாரப்பணி செய்தல், தமிழ்நெறி குடநீராட்டு, வாழ்வியல் நிகழ்ச்சிகள் நடத்துதல், அன்னம்பாலிப்பு, எனப்

பணியாற்றுகிறது. சிவாலயத் திருப்பணிகளும் மன்றம் செய்யத் தொடங்கியிருக்கிறது.

(தலைவர் - இல. குணசேகரன்; செயலர் - இரா. கார்த்திக் நாராயணன்)

மன்றத் தலைவர் இல. குணசேகரன் (12-4-1964, கோட்டையாண்டார் இருப்பு, ஒரத்தநாடு வட்டம்) திருமுறைத் தமிழில் கிரியைகள் செய்தல், பெரியபுராண வகுப்புகள், திருமுறை சொற்பொழிவு நடத்துதல் எனப் பணியாற்றுகிறார். துணைச்செயலர் ந. சரவணகுமார் (27-9-1979; தஞ்சாவூர்) தெய்வத் தமிழ் வழியில் குடநீராட்டு முதல் திருமணம் வரை அனைத்துக் காரியங்களையும் செய்தல், திருவாசக முற்றோதல், சொற்பொழிவு செய்தல் எனப் பணியாற்றுகிறார்.

40. திருநெடுங்களம்

''கோயில் திருப்பணிக்குக் கொண்டு செலுத்திய உழவாரப்பணி'' திருநெடுங்களத்தின் பண்பாய் அமைந்துள்ளது. 1969-ஆம் ஆண்டில் தவத்திரு குன்றக்குடி அடிகளார் கயிலாசபுரம் பி.ஹெச்.ஈ.எல். -இல் அருள்நெறித் திருக்கூட்டம் என்ற அமைப்பினைத் தொடங்கி நெடுங்களத்தில் உழவாரப் பணி செய்யப் பணித்தார்கள். 1993-இல் பெருமழையால் ஏற்பட்ட வெள்ளத்தால் திருநெடுங்களநாதரே மூழ்கும் நிலை ஏற்பட்டது. அப்பொழுது பல்வேறு அமைப்புகளில் உள்ள உழவாரப்பணி அன்பர்கள் பி.வி.சி. பைப்புகள் வைத்து அபிஷேக வாய்க்கால் அடைப்பை நீக்கி சரிசெய்ய உதவினார்கள். இதனைக் கண்ணுற்ற மெய்யன்பர்கள் முழுத் திருப்பணியும் செய்ய கேட்டுக் கொண்டார்கள். திருநெடுங்களநாதர் உழவாரப் பணிக்குழுத் தலைவர் திரு. டி. பழனிவேலு தலைமையில் திருப்பணி மேற்கொள்ளப்பட்டு திருக்கோயிலின் மேல் தளம் Weathering Coverage Course அடைத்துப் புதிய மங்களூர் ஓடுகள் பதித்தல், அனைத்து சந்நிதிகள் இராஜ கோபுரத்திற்குக் கதவுகள் அமைத்தல், கோயில் முக்கிய இடங்களில் தளவரிசை அமைத்தல், புதிய நந்தவனம் அமைத்தல், திருக்குளத்திற்குச் சுவர்கள் அமைத்தல் எனப் பணிகளை முடித்து 30-6-1999 அன்று திருக்குடநீராட்டு விழாவும் நடத்தினார்கள்.

மொட்டைக் கோபுரம் இராஜகோபுரமாக உருவெடுத்த வரலாறு அற்புதமானது ஆகும். இராஜ கோபுரத்தில் ஐந்து நிலைகளின் முன்புறமும் பின்புறமும் திருஞானசம்பந்தர் அருளிய இடர்களையும் பதிகமாம் ''மறையுடையாய்'' எனத் தொடங்கும் பதிகத்தின் மொத்தச் சான்றுகளையும், நெடுங்களம் தல வரலாற்றையும் மட்டுமே சுதை வடிவத்தில் செய்து வைத்திருப்பது எங்கும் இல்லாத ஓர் அற்புதப் படைப்பாகும்.

அருள்மிகு நித்ய சுந்தரேஸ்வரர் வழிபாட்டு மன்றம் (தோற்றம் - 2000; தலைவர் - கருப்பையா; செயலர் - பழனிவேலு) பிரதோஷ வழிபாடு, உழவாரப் பணி செய்து வருகின்றது. விவேகானந்தர் பொது நல மன்றம் உழவாரப்பணி, அடியார் விருந்தோம்பல் ஆகிய பணிகளைச் செய்து வருகிறது. மங்களாம்பிகை மகளிர் மன்றம் (பொறுப்பு - ராஜம்மாள்) கோயில் தூய்மை, விளக்கு பூஜை எனப் பணியாற்றுகிறது. அருள்மிகு திருநெடுங்களநாதர் திருவாசக சபை (2 ஆண்டுகளாகப் பணி; நடத்துபவர் - முருகேசன்) முதல் ஞாயிறன்று திருவாசக முற்றோதலும், இரண்டாம் ஞாயிறன்று பெரிய புராணச் சொற்பொழிவும் நடத்தி வருகின்றது.

இடிந்த மண்தரை; முட்காடு இவற்றினூடே சிவபெருமான் சோளீசுரத்தில் (நெடுங்களம் அருகே) வீற்றிருந்தார். இது 2000-இல் நிலை. நாகலிங்கம் (வயது 65) என்ற பெரியவர் இக்காட்சியைக் கண்டு பதறிப் போனார். அன்பர்களின்

துணை கொண்டு முட்புதரை நீக்கித் தூய்மை செய்து, சோளீஸ்வரர் உழவாரக் குழு அமைத்து (தலைவர் - முனியாண்டி; செயலர் - இராமலிங்கம்), புரவலர்களை நாடி திருப்பணி செய்யச் செய்து கோயில் எழுப்பிக் குடநீராட்டும் விழாவும், செய்துவிட்டார். ஒரு புதர் புனிதர் கோயில் ஆன அற்புதம்!

கயிலாசபுரம் அருள் நெறித் திருக் கூட்டம் நான்கு ஆண்டு காலமாக கு. சுந்தரமூர்த்தி அவர்களைக் கொண்டு திருவாசக விரிவுரை, வாரந்தோறும் கூட்டு வழிபாடு என்று பணியாற்றுகிறது.

(தொடக்கம் - 1970; தலைவர் - ஏ. பழனியப்பன்; பி.ஹெச்.ஈ.எல்; செயலர் - கே. குருசாமி, பி.ஹெச்.ஈ.எல்.)

கயிலாசபுரம் ஊரகத்தில் பி.ஹெச். ஈ.எல்., டி4 பகுதியில் ஒரு மகளிர் திருவாசகக் குடும்பமே உள்ளது. எட்டு ஆண்டுகளாகச் செயல்பட்டுவரும் இவ் வமைப்பு இதுவரை 100க்கு மேல் திருவாசக முற்றோதல் செய்துள்ளது.

41. திருவெறும்பியூர்


திருவெறும்பியூர் திருக்கோயிலுக்கு ஆரம்ப காலங்களில் (30, 40 ஆண்டு களுக்கு முன்) மக்கள் அதிகம் வர மாட்டார்கள். கோயிலில் விளக்கு கூட இல்லாமல் இருந்தது. அப்பொழு தெல்லாம் வேங்கூர் தட்சிணாமூர்த்தி, காடவராயர் இருவர் மட்டும் வந்து தேவாரம் பாடுவார்கள். பிறகு பி.ஹெச். ஈ.எல். ஐச் சேர்ந்த மாடசாமி என்பவர் வரத் தொடங்கியவுடன் அவர் பிரதோஷம், நால்வர் அபிஷேகம், நடராசர் அபிஷேகம் என்றெல்லாம் முறைப்படுத்தினார். அதன்பிறகு பிரதோஷம் தோறும் 50 பேருக்கு மேல் வர ஆரம்பித்தார்கள். இப்பொழுது 4, 5 மன்றங்கள் தோன்றி தீவிரமாகச் செயல் படுகின்றன.

புனிதர் பேரவை (தோற்றம் 1974; தலைவர் - சிவதாணுப்பிள்ளை; செயலர் - மாணிக்கம்; பணிகள் - தலயாத்திரை, அடியார்களைப் பேணுதல்) திருஉறும் பீசர் நற்பணி மன்றம் (தோற்றம் - 2002; சின்னத்துரை; பணிகள் - வாகனங் களைப் புதுப்பித்தல், தேர்த்திருப்பணி, வடகயிறு கரையானிலிருந்து காப்பாற்று தல்) இளைஞர் நற்பணி மன்றம் (2002; உழவாரப்பணி) அருள்தரும் நறுங்குழல் நாயகி உடனமர் அருள்மிகு எறும்பீசுவரர் பன்னிருதிருமுறை வார வழிபாட்டு மன்றம் (தலைவர் - வே. கணேஷ்; செயலர் - குத்தாலலிங்கம்; பணிகள் - நான்கு வாரங்களும் உழவாரப்பணி, திருவாசக முற்றோதல், சுந்தரர் தேவாரம் முற்றோதல், தலங்கள் தோறும் திருவாசக முற்றோதல், பௌர்ணமி கிரிவலம், மார்கழி திருவெம்பாவை), சேக்கிழார் தெய்வத் தமிழ் மன்றம், துவாக்குடிமலை (தோற்றம் - 2003; தலைவர் பி.ஏ.பி. சண்முகம், செயலர் திரு. பாண்டியன்; பணிகள் - நான்கு வாரங்களில் திருத்தல யாத்திரை, சிறுவர்களுக்கு திருமுறைப் பயிற்சி, திருவாசக முற்றோதல், பெரிய புராண வகுப்பு) ஆகிய மன்றங்கள் பணியாற்றுகின்றன. பாண்டியன் (வயது 48) அவர்கள் பெரிய புராண நாடகங்கள் தயார் செய்து பல இடங்களில் நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது. இவர் பெரிய புராண வகுப்பு எடுக்கிறார்.

42. திருச்சிராப்பள்ளி

மூக்கப்பிள்ளை





திருச்சி சைவ வரலாற்றிலே ஒரு நாற்பது ஆண்டுக்காலம் ஊடும் பாவுமாகப் பின்னிப் பிணைந்திருப்பவர் பெரியவர் திரு. ப. மூக்கப்பிள்ளை அவர்கள். திருச்சி மட்டுமன்று. தமிழ் நாட்டிலேயே விரல்விட்டு எண்ணக் கூடிய பத்து சைவப் பெரியவர்களில் முதல் வரிசையில் இருப்பவர் சிவநெறிக் காவலர் மூக்கப்பிள்ளையவர்கள்.

உழவாரப்பணியா! திருமுறை முற்றோதலா! திருமுறைப் பண்ணிசையா! மாநாடா! எதுவாயினும் தொடங்கி, நடத்தி, நிறைவு செய்யும் நிறை பணியாளர்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் அருளாணை வழங்கினார்கள். திருவெறும்பூர், திருநெடுங்களம், திருப்பழனம் போன்ற பல பாடல் பெற்ற தலங்களில் சிவநெறிக் காவலர் அவர்கள் அருள் நெறித் திருக்கூட்டத்தாருடன் சேர்ந்து உழவாரப் பணி மேற்கொண்டார்கள்.

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சன்னிதானம் அவர்கள் அருளாணை பிறப்பித்தார்கள். சிவநெறிக்காவலர் ஒவ்வொரு மாதமும் மூன்றாம் ஞாயிறன்று இல்லங்கள் தோறும் திருமுறை முற்றோதல் நிகழ்த்தி வருகின்றார்கள். தற்பொழுது மூன்றாம் சுற்றாக நூறாம் முற்றோதல் (ஆகஸ்ட் 2004) நடைபெற்றுள்ளது.

1968-இல் சைவசித்தாந்த சபையின் தலைவராக,

1969-இல் அருள்நெறித்திருக் கூட்டத்தின் தலைவராக,

1973-இல் திருநெறிய தமிழிசை மன்றத்தின் தலைவராக,

1982-இல் சைவநெறிக் கழகத் தலைவராக,

1991-இலிருந்து திருமுறை மன்றத் தலைவராகத் தொடர்ந்து பணியாற்றி வருகின்றார்.

எத்தனை பொறுப்புகள்!

எத்தகைய அளப்பரிய தொண்டு!

சிவநெறிக்காவலர் தொட்ட பணியெல்லாம் துலங்கியது என்பது சம்பிரதாய வார்த்தையல்ல; சத்திய வாக்கு.

திருச்சி சைவசித்தாந்த சபை தமிழ் நாட்டின் பழைமையான சைவ நிறுவனங்களில் ஒன்றாகும். அதன் நூற்றாண்டு விழாவினைச் சீரும் சிறப்புமாகக் கொண்டாடியதோடு தொடர்ந்து நடத்தி வருகின்றார்.

அருள்நெறித்திருக்கூட்டம் தவத்திரு அடிகளார் நடத்தி வந்த சைவசமயப் பேரியக்கம் ஆகும். அதே போல சைவநெறிக் கழகம் தத்புருஷதேசிகர் அவர்களின் உயிர்மூச்சு ஆகும். இவற்றிற்கு எல்லாம் தலைமையேற்பது என்பது சாதாரண செயலன்று. செயற்கரிய செயல் ஆகும்.

திருச்சி திருமுறை மன்ற பண்ணிசை விழாக்கள் திருச்சியின் பெருமையை உலகுக்குப் பறை சாற்றுவன. பண்ணிசை விழா அழைப்பிதழ்கள் சைவ வரலாற்று ஏடுகள் ஆகும். அவ்விழாக்களில் பங்கு பெறாத சைவத்திருமடங்களின் தலை

வர்கள் யாருமிலர். திருச்சி மாவட்டத்தில் உள்ள சைவ மன்றங்களின் பொறுப்பாளர்கள், புரவலர்கள், தொண்டர்கள் அத்துணை பேரும் அவ்விழாக்களில் இடம் பெறுவர். தமிழகச் சைவப் பெரியவர்களின் சங்கமமாக இவ் விழாக்கள் திகழ்ந்து வருகின்றன. மூன்று நாட்களில் ஐந்து பொழுதுகளில் ஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர், சேக்கிழார் தம் அருட் பாடல்களை ஓதுவாமூர்த்திகள் நான்கு மணி நேரத்திற்குக் குறையாமல் பாடுகிறார்கள். தொடக்க காலத்தில் இருபத்தேழு ஓதுவாமூர்த்திகள் பாடி வந்தனர். தற்பொழுது பன்னிரெண்டு ஓதுவாமூர்த்திகள் பாடுகின்றனர். தமிழகத்தின் தலைமை ஓதுவார் - ஓதுவாமூர்த்திகளுக்கு ஆசிரியர் பிரான் - திரு. வேலாயுத ஓதுவார் அவர்களின் பெயரில் ஆண்டுக்கு ஓர் ஓதுவா மூர்த்திக்கு நினைவுப்பரிசு வழங்கி வருகிறார். ஒவ்வோர் ஆண்டும் எண்பதாயிரம் ரூபாயிலிருந்து இலட்ச ரூபாய் வரை செலவாகிறது. ஓதுவா மூர்த்திகளுக்குப் பொற்காலம் என்றால் மிகையாகாது.

ஞாயிற்றுக்கிழமை காலையில் சிவக் களிற்றின் மீது பன்னிரு திருமுறை திருவீதி உலா - நால்வர் பெருமக்கள் திருமேனி திருவீதியுலா காணக் கண் கோடி வேண்டும். யானை, மங்கல வாத்தியம், ஓதுவாமூர்த்திகள், சிவ பூஜைச் செல்வர்கள், சைவ மன்றங்களின் உறுப்பினர்கள், பள்ளி மாணவர்கள் என அணி அணியாகச் செல்வர். ஆகஸ்ட் 2005-இல் பண்ணிசை விழாவின் பதினோராம் ஆண்டு விழாவும், திருமுறை மன்றத்தின் பதிநான்காம் ஆண்டு விழாவும் நடைபெற்றன. தலைவர் திரு. ப. மூக்கப்பிள்ளை செயலர் - புலவர் திரு. மு. வைத்திய நாதன்.

பெரியவர் மூக்கப்பிள்ளை சிறந்த சிவ பூசகர், சமய, விசேஷ நிர்வாண தீட்சை யாளர், பன்னிரு திருமுறைகளையும் இனிய இசையோடு, திறத்தோடு, பாடி மகிழும் இயல்பினர்.

சிவநெறிக் காவலரைப் பற்றி தவத்திரு அடிகளார் கூறும் கூற்று முழுமையான ஒன்றாகும். ''தமிழகத்தில் இருநூறு ஆண்டுகளுக்கு முன் கிராமப் புற வாழ்க்கையைக் கற்பனையால் எண்ணிப் பாருங்கள்! உச்சிக்குடுமி! பஞ்சகச்சம் கட்டிய திருமேனி! நீறு நிறைந்த நெற்றி! கழுத்தில் அக்குமணி! திருமுறைகளை இசையோடு பாடும் திறன்! நாள்தோறும் சிவபூசை செய்தல்! இப்படிப் பலர் அன்றைய கிராமங்களில் வாழ்ந்தனர். இவர்கள் நல்ல மனிதர்கள். இவர்கள் வளர்ந்தவர்கள். பழுத்த மனத்து அடியார்கள். இத்தகையோரை இன்று காணல் அரிதாகிவிட்டது''.

''ஆனால் திருச்சியில் ஒருவர் வாழ்கிறார்! அவர் யார்? அவர் தான் அருள்நெறிச் செல்வர் சிவத்திரு ப. மூக்கப் பிள்ளை. இவர் பங்கேற்காத பொதுப்பணி யாதொன்றும் இருத்தல் இயலாது. இனிய அமுதப் பொழி வெனப் பேசுபவர். போராட்டக் குணங்களும் உடையவர். நமது தலை முறையில் மிண்டிய மாயா வாதத்தைத் தலையில் ஒரு குட்டு குட்டி அடக்கிய அணியின் தலைவர்''.

அதென்ன! மிண்டிய மாயா வாதத்தைத் தலையில் குட்டிய செய்தி! இதோ! ஜி. பஞ்சநாதம் அவர்கள் விளக்குகிறார்கள். சென்ற சில ஆண்டு களுக்கு முன்னர் திருவானைக்கா ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி திருக்கோயில் உள்ளே ஏகான்ம வாதக் கொள்கை யுடைய ஒருவரின் சிலையை வைக்க சிலர் முயற்சி மேற்கொண்டனர். அதை அறிந்த நம் தலைவர் எறிபத்த நாயனார் போல் வெகுண்டு எழுந்து உடனே நகர சைவப் பெரு மக்களை அழைத்துக் கூட்டம் கூட்டி முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர் களைத் தலைவராகக் கொண்ட ஒரு குழு அமைத்து தக்க நடவடிக்கை எடுத்து

அரசுக்கும், மக்களுக்கும் நிலைமையை நோட்டீஸ் மூலம் விளக்கி சிலை வைக்கும் முயற்சியைத் தடுத்து நிறுத்தி சைவநெறியைக் காத்து வெற்றி கண்டார்கள்''

சைவப் பயிரும் வளர்க்கிறார்.
களையும் எடுக்கிறார்.

சைவநெறிக்காவலர் பெயர் பொருத்தம் தானே!

''பொருள் நெறியே பெரிதென்று நாளும் எண்ணிப்
போற்றுகின்ற உலகத்தில் அவ்வா றின்றி
அருள்நெறியே பெரிதென்று போற்றுகின்ற
அடிப்படையின் முதல்வரவர் மூக்கப்பிள்ளை''

''கல்லார்க்கும் கற்றவர்க்கும் புரியும் வண்ணம்
காலமெல்லாம் திருமுறையை ஓதச் சொன்னார்''

''ஊர்கொண்ட திருக்கோயில் தேடிச் சென்றே
உழவாரப் பணியங்கே சிறக்கச் செய்வார்''

''நாலெழுத்துக் கற்றவர்கள் நெஞ்சத் தெல்லாம்
நலங்கொடுக்கும் அஞ்செழுத்தைப் பதியச் செய்வார்''

''திருமடங்கள் தருகின்ற திட்டந் தன்னைத்
தெளிவாகப் பலருக்கும் விளக்கிச் சொல்லிப்
பெருமடங்காய்க் கூட்டத்தைக் கூட்டுகின்ற
பெருமைக்கு முன்னோடி மூக்கப்பிள்ளை''

''சைவத்தின் வாழ்வதையே தனது வாழ்வாய்த்
தரைமீதில் நினைக்கிறவர் மூக்கப்பிள்ளை''.

''எங்கெல்லாம் சைவத்தின் வளர்ச்சி உண்டோ
எங்கெல்லாம் திருமுறையின் முழக்கம் உண்டோ
அங்கெல்லாம் முன் நிற்பார் மூக்கப்பிள்ளை''.

''ஒப்பரிய சைவத்தின் வளர்ச்சிக்கான
ஊற்றுக்கண் திருச்சியிலே மூக்கப்பிள்ளை''.

(அயிலை தமிழ்ச்செழியன்)

(பிறப்பு - 11-7-1928; பிறந்த ஊர் - தாராநல்லூர், திருச்சி. பெற்றோர் - பழநியாண்டிப் பிள்ளை, மாரியாயி அம்மாள்)

குழந்தைகளுக்குத் திருமுறை



திருச்சி பெரிய கடைவீதியில் கயிலாச நாதர் கோயில் அருகில் ஞாயிற்றுக் கிழமைகளில் காலை ஒன்பது மணி யளவில் காலார நடந்தால் பிஞ்சுக் குரல்களின் தேவார ஒலி காதில் விழும். ஆர்வம் மீதூர்ந்து உள்ளே சென்றால் வியப்பு பின்னும் மேலிடும். ஐம்பது குழந்தைகள் ''நன்றுடையானைத் தீயதி லானை'' இசைத்துக் கொண்டிருப் பார்கள். நாம் நெருங்கிச் சென்று விசாரித்தால் நமது மகிழ்ச்சி இரட்டிப் பாகும். ஏன் தெரியுமா? அந்தக் குழந்தைகளே சொல்கிறார்கள், ''காலை ஒன்பது முதல் பத்தரை வரை நாங்கள் தேவாரம் பண்ணோடு கற்கிறோம். பத்தரை முதல் பனிரெண்டு வரை அருகில் உள்ள சௌந்தரபாண்டியன் தெருவில் உள்ள திருஞானசம்பந்தர் பன்னிரு திருமுறை மன்றத்தில் நாற்பது பிள்ளைகள் தேவாரம் கற்கிறார்கள்'' என்றனர். இவர்களுக்கு எல்லாம் தேவாரம் கற்பிப்பவர் யார் தெரியுமா? உறையூர் வெக்காளியம்மன் கோயில் ஓதுவார் சுந்தரவடிவேலு அவர்களே. திருஞானசம்பந்தர் பன்னிரு திருமுறை மன்றத்தில் எட்டு ஆண்டுகளாகவும் (1997) கயிலாசநாதர் கோயிலில் நான்கு ஆண்டுகளாகவும் (2001) திருமுறை களைப் பண்ணோடு சொல்லித் தருகிறார். இது ஓர் அரும்பெரும் செயல்

ஆகும். திருச்சி செல்பவர்கள் ஞாயிறன்று காலை பெரிய கடைத்தெருவிற்கு வருகை புரியவேண்டியதுதானே! ஒல்லும் வகையெல்லாம் நற்செயல்களை ஆதரிக்க வேண்டியது தானே! சுந்தர வடிவேலு ஓதுவார் பணி இதோடு நிற்க வில்லை. கண்டோன்மென்ட் ஐயப்பன் கோயிலிலும் பொன்னார் விநாயகர் கோயிலிலும் சொல்லித் தருகிறார். மொத்தம் 150 பிள்ளைகள் என்றார். மனமார வாழ்த்திவிட்டு நகர்கிறோம்.

திருஞானசம்பந்தர் பன்னிரு திருமுறை மன்றம்

தோற்றம் 1997, தலைவர் - ல. சிவஞானம், செயலர் எஸ். சக்திவேலு.

கயிலாசநாதர் பண்ணிசை மன்றம்

தோற்றம் 2001, தலைவர் - எம். என். பழனியப்பன், செயலர் - நாகராஜன், மாரியப்பன்.

திருவாசக முற்றோதல்

திருவாசக முற்றோதலும் திருச்சியில் செம்மையாக நடைபெற்று வருகின்றது. 1986-இல் தொடங்கப்பட்ட முற்றோதல் மாதம் இரண்டு அல்லது மூன்று முறை (இல்லங்கள், கோயில்கள்) ஐயப்பன் நகர் சேக்கிழார் மன்றத்தால் நடத்தப் பட்டு வருகின்றது. இதுவரை 232 முற்றோதல்கள் (செப். 2004) நடை பெற்றுள்ளன. வாரந்தோறும் திரு. சொ. கிருஷ்ணன் அவர்களைக் கொண்டு மூன்று முறை பெரிய புராணம், கந்த புராணம், திருவிளையாடற்புராணம், தொடருரை நிகழ்த்தியுள்ளனர்.

சேக்கிழார் மன்றம், ஐயப்பன் நகர்

தோற்றம் 1980, தலைவர் மா. சொக்கலிங்கனார் பன்னிரு திருமுறை களையும் முறையாகப் படித்துள்ளார். நிர்வாண தீக்கை பெற்றவர் (பிறப்பு 15-9-1929)

திருப்பணி வரை கொண்டு செலுத்தும் உழவாரப் பணி

இத்தனை அரும் செயல்கள் நடக்கின்ற திருச்சியில் உழவாரப் பணி இல்லாமல் இருக்குமா? உழவாரப் பணியிலும் ஒரு கூடுதல் சிறப்பு இருக்கின்றது. உழவாரப் பணியோடு நிறுத்தி விடுவதில்லை. திருப்பணி, குட நீராட்டு விழா என்று முடித்துவிட்டுத் தான் தொண்டர்கள் திரும்புகின்றார்கள். திருப்பணிக்கு என்று நன்கொடை பெறுவதும் இல்லை. உறுப்பினர்களே செலவுத்தொகை கொடுத்து விடுகின் றார்கள். வாரம் தோறும் உழவாரப் பணி செய்கின்றார்கள். உறுப்பினர்கள் அத்தனை பேரும் மண் வெட்டியைத் தூக்கியாக வேண்டும். அப்படி ஒரு கண்டிப்பு! கைத்தொண்டின் பயன் புரிய வேண்டுமாம். பழவினையையே போக்குவதாயிற்றே கைவினைத் தொண்டு! வாசியில்லாக் காசு தருவ தாயிற்றே! இதுவரை அறுபதுக்கு மேற்பட்ட பாடல் பெற்ற தலங்களுக்கு உழவாரம் - திருப்பணி - குட நீராட்டு விழா செய்திருக்கின்றனர். இன்னம்பர் கோயிலுக்கு பதிநான்கு இலட்ச ரூபாய் விசயமங்கை (ஏழு இலட்ச ரூபாய்) திரு ஆப்பாடி (நான்கு இலட்ச ரூபாய்) என்று செலவாகி உள்ளது. சிறுகோயில்களும் ஐம்பதாயிரம் ரூபாய், இலட்ச ரூபாய் என்று எடுத்துச் செய்துள்ளனர்.

செய்!

திருந்தச் செய்!

முற்றுமாய்ச் செய்!

இதுவே திருச்சி தாயுமானவர் உழவாரப் பணி மன்றத்தின் தாரக மந்திரம்.

தாயுமானவர் உழவாரப்பணி மன்றம்

தோற்றம் 1989; 70 உறுப்பினர்கள், பொறியியலார்கள் எனப் பல திறத்தார்; தங்கள் பெயர்களைச் சொல்லக்கூட மறுக்கிறார்கள்.

அருள்நெறித் திருக்கூட்டம்

மாவட்ட அருள்நெறித் திருக்கூட்டம் முப்பது நான்கு ஆண்டுகளாகத் திருச்சியில் அப்பரடிகள் விழா தவத்திரு குன்றக்குடி அடிகளார் தலைமையில் நடத்தி வருகின்றது. அப்பர் அடிச்சுவட்டில் அருள்நெறிச் செலவும் செய்து வருகின்றது.

(தலைவர் : ப. மூக்கப்பிள்ளை, செயலர் - மா. சொக்கலிங்கம்)

கயிலாசபுரம் அருள்நெறித் திருக்கூட்டம் கூட்டு வழிபாடு, சமயச் சொற்பொழிவுகள், ஆண்டுவிழா, மலர்கள் வெளியிடுதல் எனப் பணியாற்றுகின்றது.

(தலைவர் - ஏ. பழனியப்பன், செயலர் - எஸ். சிவராஜ்)

திரிசிரபுரச் சைவ சித்தாந்த சபை

1888-ஆம் ஆண்டு......

யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர் அவர்கள் இராமநாதபுரத்திலிருந்து திருவாவடுதுறை சென்று கொண்டிருக்கிறார்கள். வழியில் சில நாட்கள் திரிசிரபுரத்தில் நாவலர் அவர்கள் தங்கினார்கள். திருச்சியில் வாழ்ந்த சைவப் பேரன்பர்கள் சைவ நூல்கள் கற்றுணர ஓர் அமைப்பு வேண்டும் என்று வேண்டினார்கள். நாவலர் அவர்களே முன்னிருந்து திரிசிரபுரச் சைவசித்தாந்த சபையினைத் தொடங்கி வைத்தார்கள். 21-6-1885 அன்று சபை பதிவு செய்யப்பட்டது.

திருச்சியில் பிறந்து வளர்ந்த ஜெ.மு. நல்லசாமிப் பிள்ளை அவர்கள் சைவ சமய சண்டமாருதம் திரு. சோமசுந்தர நாயக்கர் அவர்களைத் திருச்சிக்கு அழைத்து வந்து பல நாட்கள் சொற்பொழிவாற்ற வைத்திருக்கின்றார். ஜெ.மு. நல்லசாமிப்பிள்ளையவர்கள் சபை தற்பொழுது இயங்கிவரும் கட்டடத்தை அன்பர்கள் உதவியுடன் வாங்கி சபைக்கு உரிமையாக்கினார்கள்.

அருட்திரு ஞானியார் சுவாமிகள் தென்பகுதி தலயாத்திரை முடிந்து திரும்புகையில் திருச்சிராப்பள்ளியில் ஒரு திங்கள் தங்கிச் சபையில் சைவ சித்தாந்த உரை நிகழ்த்தி இருக்கிறார். சுவாமிகள் உரையால் ஈர்க்கப்பட்ட வணிகர்கள் சபைக்குத் தாமே வந்து ஆதரவு கொடுத்தனர்.

மறைமலையடிகளார் பல நாட்கள் திருச்சியில் தங்கியிருந்து விரிவுரை நிகழ்த்தி இருக்கிறார்கள். பின்னர் அவ்விரிவுரை ''கடவுள் நிலைக்கு மாறான கொள்கைகள் சைவம் ஆகா'' என நூலாக வெளிவந்தது.

ந.மு. வேங்கடசாமி நாட்டார் சபையின் எதிர்வீட்டில் இருந்தார்கள். பல தொடர் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள்.

அ.மு. சரவண முதலியார் மலைக்கோட்டையை வாழ்விடமாகக் கொண்ட பிறகு சபை அறிவு நிலையமாக மாறியது. அவர்கள் நிகழ்த்திய விரிவுரைகள் பலவாம். முப்பெரும் புராணங்களைப் பற்றி தொடர் உரையாற்றியுள்ளார். அவை ''கட்டுரைப் பொழில்'' ''அழுது அடியடைந்த அன்பர்'' என நூல்களாக வெளிவந்தன.

வாலையானந்த சுவாமிகள், திரு. வி.க., கிருப்ானந்த வாரியார் சுவாமிகள், சுவாமி விபுலானந்தர், அ. ச. ஞான சம்பந்தம், தத்புருஷ தேசிகர், அ. நடேசமுதலியார் கு. சுந்தரமூர்த்தி, மு. வைத்தியநாதன் ஆகியோர் தொடர்ந்து விரிவுரை ஆற்றியிருக்கிறார்கள்.

1984-ஆம் ஆண்டு சபையின் நூற்றாண்டு விழா மூன்றுநாள் நிகழ்ச்சிகளாக மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு மலரும் வெளியிடப்பட்டது. ஜெ. மு. நல்லசாமிப்பிள்ளை, கி.ஆ.பெ. விசுவநாதம் ஆகியோரெல்லாம் செயலராகப் பணியாற்றியிருக்கின்றனர் என்றால் சபையின் சிறப்புக்குக் கேட்பானேன்?

தற்போதைய தலைவர் - ப. மூக்கப்பிள்ளை

செயலர் - மு. வைத்தியநாதன்

க. சீனிவாசன்

அவர் பொறியியற் கல்லூரியின் தாளாளர்!

''அறுவகை வழிபாட்டு ஆய்வு நூலகம்'' என்று அமைத்துக் கொண்டு 6000 நூல்களைச் சேகரித்து வைத்துள்ளார். அவற்றின் மூலம் கிடைக்கும் தகவல் களைக் கொண்டு பிள்ளையார் வழிபாடு, சிவ வழிபாடு, கந்தன் வழிபாடு, அம்பாள் வழிபாடு, சுந்தரர் காட்டிய சிவன் என எட்டு தொகுப்பு நூல்களாக வெளியிட்டுக் கேட்போருக்கு இலவச மாகத் தரலானார். அண்மையில் ''தமிழ் மாவட்டங்களில் ஆன்மிகத் தொண்டு'' என்ற நூலை வெளியிட்டு இலவசமாக வழங்கி வருகிறார். இந்நூல் தமிழ் நாட்டின் ஆன்மிக நிறுவனங்களின் முகவரிகளைக் கொண்டது.

அத்தாளாளர் மேஜர் க. சீனிவாசன்

(பிறந்த ஆண்டு - 15-8-1932, ஊர் - ராஜமன்னார்குடி; பெற்றோர் - கந்தசாமி பிள்ளை, லோகாம்பாள்)

மு. கணபதி



1956...

திருச்சி புத்தூர் பிஷப்ஹீபர் உயர்நிலைப் பள்ளி.....

பான்ட், முழுக்கை சட்டை, பான்ட்டுக்குள் அழகுற செருகி.....

தமிழாசிரியரா இப்படி?

ஒன்பதாம் வகுப்பு மாணவர்களாகிய எங்களுக்கு ஒரே வியப்பு!

''ஆமை முதுகில் அலவன் துயில் கொள''

என்ற நளவெண்பாப் பாடலை சுவையுடன் விளக்கலானார். திருமண மான புதிது. இன்பச் சுவை சற்று தூக்கலாகவே இருந்தது.

2005...

சென்னையில் சத்தியவேல் முருகனார் அவர்கள் நடத்தும் திருமந்திர விழா! எங்கள் ஆசிரியர் பிரானுக்கும், எனக்கும் ஒரே மேடையில் விருது வழங்கு கிறார்கள். ''உலகிலே ஆசிரியருக்கும் மாணவனுக்கும் எங்கேயாவது ஒரே சமயத்தில் விருது கொடுத்திருக்கிறார் களா? அந்த பெருமையினை நான் இன்று அடைகிறேன். ஆயிரக்கணக்கான மாணவர்கள் என்னிடம் படித்தனர். ஆனால் இராஜசேகரனை மட்டும் இன்று என்னோடு மேடையில் பார்க்கிறேன்'' என்று நாத் தழுதழுக்கக் கூறினார்கள்.

யாருக்கு வரும் இந்தப் பெருந் தன்மை!

கட்டைவிரலை வாங்கும் துரோணர் களும் இருக்கிறார்களே!

2005...

பூம்புகார் சீனிவாசா மேல்நிலைப் பள்ளி.....

தமிழ்ச் சங்கக் கூட்டம்...

அதே பெருமகனார் (இப்பொழுது வேட்டி, சட்டையில்) பேசுகிறார்.

''சடையாய் எனுமால்....''

என்ற பதிகத்தை இரண்டு மணிநேரம் விளக்குகிறார். முதல் பாடலிலிருந்து அடுத்த பாடல் கருத்து வளர்ச்சி பெறுகிறது. இவ்வாறு பதினொரு பாடல்

களில் கருத்துபடி நிலையாக வளர்கிறது. எங்கள் வியப்பு மேலும் கூடுகிறது. இதுபோல யாரும் இதுவரை அணுக வில்லை. கண்ணீர் பெருக ஆசிரியர் பிரான் அவர்கள் மேலே மேலே உச்சத்துக்கே போய்விட்டார்கள். எங்க ளால் தான் எட்டிப்பிடிக்க முடிய வில்லை.

இதுவாவது பரவாயில்லை. திரு வாசகம் பற்றி ஆசிரியர் பிரான் அவர் களைப் பேச அழைத்தால் ஒத்துக் கொள்ளவே மாட்டார்கள். ''திருவாச கம்'' என்று சொன்னவுடனே ஆசிரியர் பிரான் கண்களிலிருந்து கண்ணீர் பெருக ஆரம்பித்து விடும். ஆசிரியர் பிரானுக்கு நாவெழாது. சொற்பொழிவுக்குப் பேச அழைத்தவர்கள் பாடு திண்டாட்டம் தான்! ஏன் இந்த வம்பு என்று ஆசிரியர் பிரான் திருவாசகம் மேடையில் பேச இசைவதில்லை. ஆசிரியர் பிரானுக்குப் பெரிய புராணம் தான் கோட்டை. உள்ளே நுழைந்தார் என்றால் ஆயிரம் சொல்வீரர்களாலும் அவர்களை மீட்க முடியாது. இடபக் கொடியை ஏற்றிய பிறகு தான் ஆசிரியர் பிரான் கீழே இறங்குவார்கள்.

அவர்கள் பெயரை ஒருதரமாவது சொல்லத்தானே வேண்டும்.

உ.வே.சா. அப்படித்தானே வழிகாட்டி யிருக்கிறார்கள்.

ஆம். என் ஆசிரியர்பிரான் திருமுறைச் செல்வர் திரு. மு. கணபதி அவர்கள்.

(வயது - 80 தற்பொழுது வசிப்பது - முத்தரசநல்லூர்)

பி. ரா. நடராஜன்

திருமுறைக்கு உரை எழுதுவது என்பதே அரிய பணி

அதுவும் பனிரெண்டு திருமுறை களுக்கும்

ஒருவரே உரை எழுதுவது என்றால்....!



ஆம். அப்படித்தான் ஒரு பெருமகனார் பன்னிரு திருமுறைகளுக்கும் உரை எழுதத் தொடங்கி ஏழு திருமுறைகளை அச்சிட்டு வெளியிட்டுவிட்டார். பதி னொரு திருமுறைகளுக்கு எழுதி முடித்து விட்டார் (2004-இல் நிலை) இந்நேரம் பனிரெண்டு திருமுறைகளையும் முடித் திருக்கலாம்.

திருஞானசம்பந்தர் தேவார உரைக்கு ஓர் எடுத்துக்காட்டு:

சிவக்கன்றின் சிவச்செலவு

தலம் - திருவேடகம்; பதிக முதற்சீர் - ('வன்னிற'); திருமுறை - 3-290; பெரியபுராண வரலாற்று எண் - 850; பதிகச் செய்யுள் - 10.

165 - திருவேடகம்

''தலமும் தலச்சிறப்பும்''

''பதிக வரலாறு''

''பாடல்''

''பொழிப்புரை''

''விளக்கவுரை''

என்று அமைகின்றது. என்ன விரிவான அமைப்பு!

''சொற்றுணை வேதியன்'' என்ற அப்பர் பெருமான் பாட்லுக்கு விளக்க மாக தூலபஞ்சாக்கரம், சூக்கும பஞ்சாக் கரம் என விரிவாக விளக்கம் தந்துள்ளார்.

பெரியபுராண உரையும் வெளிவந்து விட்டால் ''பன்னிரு திருமுறைகளுக்கும் உரை எழுதிய ஒரே பெருமகனார்'' என்ற பெருமை இவரை வந்தடையும்.

இவையல்லாமல் தேவாரத் தலங்கள், எழில் முருகனின் எண்பது புலங்கள், கந்தர் அலங்காரம் உரை, கந்தரனுபூதி உரை ஆகிய நூல்களும் இப்பெரு மகனார் எழுதியுள்ளார். நல்ல சொற் பொழிவாளர்; சிவதீக்கை பெற்றவர் நூலாசிரியர் - பி. ரா. நடராஜன்

பிறந்த ஆண்டு - *28-12-1935*; பிறந்த ஊர் - திருச்சி; பெற்றோர் - இராமசாமி சர்மா, இலட்சுமியம்மாள்

மு. வைத்தியநாதன்

இதோ தாயுமானவரைத் தரிசனம் செய்யுங்கள்!

''நன்றுடையானை'' பாடலைப் பாடி விளக்குகிறார்.

இதோ! பாருங்கள் மகேந்திர பல்லவன் குடைந்த சிற்பக் கருவூலம்!

அட! இங்கே வாங்க என்று பிடித்து இழுத்து உச்சியிலிருந்து ஒரு சாளரம் வழியாகத் ''திருச்சி முழுமையும் பாருங்க! அம்மா நீங்களும் இங்க வாங்க'' என்கிறார் அந்த நண்பர்.

நாம் திக்குமுக்காடிப் போகிறோம். திருமுறைப் பயிற்சி, சைவ சித்தாந்த ஆய்வு, வரலாற்றுணர்வு, அனைத்தும் விளக்கவேண்டும் என்ற தாகம்! இத் துணையும் நிரம்பியவர் சைவ அறிஞர் மு. வைத்தியநாதன். திருச்சி தாயுமானவர் திருக்கோயிலைத் தரிசனம் செய்ய நாம் அறிஞர் வைத்தியநாதன் அவர்களை உடன் அழைத்துச்செல்லவேண்டும். இல்லையேல் தரிசனம் முழுமை அடையாது.

அது தாயுமானாரின் தரிசனம்!

தமிழின் தரிசனம்!

நாற்பது ஆண்டுகளாகத் தமிழ் ஆசிரிய ராகப் பணியாற்றியிருக்கிறார். பன்னிரு திருமுறைகளையும், பதிநான்கு சாத் திரங்களையும் மரபு வழி ஆசிரியரிடம் முறையாகப் பயின்று பல ஆண்டு களாகப் போதித்தும் வருகிறார். இது வரை 36 சித்தாந்த கலாநிதிகளையும், 300 சித்தாந்தப் புலவர்களையும் உருவாக்கி இருக்கிறார். 18 நூல்களுக்கு மேல் எழுதியிருக்கிறார். சைவசித்தாந்த சபை, திருமுறை மன்றம் என திருச்சியில் இருக்கும் பெரும் சைவ அமைப்புகளை எல்லாம் செயலர் என்ற முறையில் சிறப்பாக நடத்துகிறார். திருச்சியில் வெளிவரும் மலர்கள், சைவ நூல்கள் எதுவாயினும் இவரது பங்களிப்பு இல்லாமல் இருக்காது. மூக்கப்பிள்ளை யவர்கள், ஆலமரம் என்றால் இவர் அரசமரம். ஆலும், அரசும் திருச்சியில் ஆட்சி செய்கின்றன!

(பிறந்த ஆண்டு - 10.2.1941, ஊர் - திருநகர்பிள்ளைப்பாளையம், திருச்சி)

இரா. கலைக்கோவன்

வைத்தியநாதன் வரலாற்று உணர் வினர் என்றால் கலைக்கோவன் வரலாறே படைக்கிறார். பழங்கோயில்களைக் கண்டுபிடிக்கிறார். மறைந்திருக்கும் கல்வெட்டுகளை வெளிப்படுத்துகிறார். டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்று ஆய்வுமையம் ஏற்படுத்திப் பல ஆய்வாளர்களை உருவாக்குகிறார். ஆய்வுக் கட்டுரைகள் பல எழுதுகிறார். அவற்றை நூல்களாக வெளியிடுகின்றார். கல்வெட்டு ஆராய்ச்சிக்காக ஓர் இதழே வெளியிடுகின்றார். வரலாறு ஆய்விதழ் 13 தொகுதிகள் வெளிவந்துள்ளன. இவர் எழுதியுள்ள நூல்கள் : கலைவளர்த்த திருக்கோயில்கள், காட்டுக்குள் ஒரு கலைக்கோயில், எழில் கொஞ்சும் எறும்பியூர், பழுவூர்ப் புதையல்கள், சுவடழிந்த கோயில்கள், சோழர் கால ஆடற்கலை, பழுவூர் அரசர்கள் கோயில்கள் சமுதாயம், அத்யந்த காமம், தலைக்கோல், மகேந்திரர் காலக் குடைவரைகள், பெண் தெய்வ வழிபாடு தோற்றமும் வளர்ச்சியும்,

கண் மருத்துவரான இவர் எப்படி இத்தனை ஆய்வுகளை மேற்கொண்டு இத்துணை நூல்கள் எழுதி வெளி யிட்டிருக்கின்றார். ''சைவ சமய வளர்ச்சி'' என்ற மகத்தான வரலாற்று நூலைப் படைத்த இராசமாணிக்கனாரின் மகனார் அல்லவா!

விதை ஒன்று போட சுரை ஒன்றா முளைக்கும்?

(பிறந்த ஆண்டு - 21-4-1948; ஊர் - சென்னை; பெற்றோர் - மா. இராச மாணிக்கனார் - கண்ணம்மாள்)

அ. அறிவொளி

சென்னை விழா ஒன்றில் அறிவொளி அவர்கள் ''வாராதே வரவல்லாய்'' என்ற கம்பராமாயணப் பாடலை விளக்கிக் கொண்டிருக்கிறார். ஒருவருக்கும் ஒன்றும் புரியவில்லை. அது எப்படி ஒரே சமயத்தில் வராமல் இருப்பது? அப்புறம் எப்படி வருவது?

தலைவர் சோ. சத்தியசீலன் அவர்கள். அறிவொளி சத்தியசீலன் அவர்களைப் பார்த்து ''நான் இப்பொழுது உங்களைப் பார்க்கிறேன் அல்லவா?'' என்கிறார். அவரும் சின்னப்பிள்ளையாட்டம், ''ஆமா! பார்க்கிறீர்கள்'', அறிவொளி, ''இல்லை நான் உங்களைப் பார்க்க வில்லை''

சத்தியசீலன் ''என்ன ஐயா! என்னையே குழப்புகிறீர்கள்?''

அறிவொளி - ''என் மனம் பார்வை யோடு ஒன்றுபடவில்லை. நீங்கள் இருப்பது தெரியாமலே உங்களைத் தாண்டிப் போய்விடுகிறேன். பார்ப் பவர்கள் எல்லாம் பார்ப்பதில்லை'' என்கிறார். அவையே சிரித்து விடுகிறது.

மேலும் தொடர்கிறார் ''எங்கும் உள்ள மூல பரம்பொருள் ஓரிடத்திற்கு என்று வரவேண்டியதில்லை. அதுதான் எங்கும் நிறைந்திருக்கிறதே! எங்கும் நிறைந்த அம்மூலப் பரம்பொருள் நம் கண்ணுக்குப் புலப்படுவதில்லை. நாம் மனம் ஒன்றி தியானம் செய்யவில்லை. மனம் ஒன்றி செய்யும்பொழுது வந்து விடுகிறான். எங்கும் நிறைந்த பரம் பொருள் வர வேண்டிய நிலையில் இல்லை. நாம் மனம் ஒன்றி தியானிப்ப தால் வந்து விடுகிறான். இது தான் வாராதே வரவல்லாய்!!''

எவ்வளவு அரிய தத்துவத்தை நகைச் சுவையாக விளக்கிவிட்டார்? அப்பொழு தெல்லாம் அவர் பேச்சு முழுக்க நகைச்சுவை குமிழியிடும்.

2004. உழவாரம் சார்பில் சிதம்பரம் மாநாட்டில் பேசினார். ''ஞானம், முப்பத்தாறு தத்துவம்'' என்று அடுக்கிக் கொண்டே போய்விட்டார். நகைச்சுவை யரசு என்று பெயர் வாங்கிய அறிவொளி எப்படி இந்த அளவு உயர் தத்துவத்தை எளிமையாக விளக்குகிறார் என்று வியந்து போனோம்.

எங்கள் வியப்பு அதோடு நிற்க வில்லை. 5 ஆண்டுகளுக்கு முன் ''சிவ புராணம்'' பகுதி மட்டுமே பெரு விளக்கம் கொடுத்து வெளியிட்டார். மூதறிஞர் அ.ச.ஞா.வே. வியந்து போனார். ''பலே'' என்ற தன் முத்திரை வார்த்தையை வழங்கினார்கள். 2005-இல் மெய்கண்ட சாத்திரம் பதிநான்கிற்கும் 900 பக்கத்தில் எளிய உரை எழுதி முதற் பதிப்பு விற்று மூன்றே மாதத்தில் இரண்டாம் பதிப்பு வந்து விட்டது.

அறிவொளி இருந்தால் தான்

அறிவொளி கிடைக்கும் போலிருக்கிறது.

(பிறந்த ஆண்டு - 21-1-1937 - ஊர் - சிக்கல்)

வில்வத்தொண்டர் சாரமாமுனிவர்

''ஏழு தினங்களும் எம்பிரானுக்கே'' என்ற கோட்பாட்டினை உடையவர் வில்வத் தொண்டர் சாரமாமுனிவர்.

சோமவாரத்தில் சொக்கநாதன், மங்கள வாரத்தில் மாதொருபாகன், புதனில் புனிதன், வியாழனில் விமலன்,



வெள்ளியில் வள்ளல், சனிக்கிழமையில் சங்கரன், ஞாயிறில் ஞானநாயகன்.

ஒவ்வொரு கிழமைக்கும் பன்னிரு திருமுறைகளிலிருந்து பொருத்தமான பாடல்களை எடுத்து வெளியிட்டு இருக்கிறார்கள்.

தாயுமானவர் கோயில் சார்ந்த மூலையில் உட்கார்ந்து இருப்பார்கள். அதுதான் அவர்கள் வாழ்விடம். பகல் முழுமையும் வில்வங்கள் இருக்குமிடம் சென்று பறித்து மாலையாகத் தொடுத்துப் பெருமானுக்குத் தருகிறார். தவவேடப் பொலிவோடு இருப்பார். சிவபூசை செய்பவர்.

டாக்டர் ஞானசுந்தரி

திருமதி டாக்டர் ஞானசுந்தரி அவர்கள் ஓய்வு பெற்ற கூடுதல் இயக்குநர், மருத்துவத்துறை. ஓய்வு பெற்ற பின் திருச்சி புத்தூர் இல்லத்திற்கு வந்து சைவசித்தாந்தம் கற்று, சிவசக்தி மகளிர் மன்றம் துவங்கி அப்பகுதி பெண்டிருக்கு சைவ நெறிமுறைகளைப் பல்லாற் றானும் போதித்து வந்தார்.

(பிறப்பு - 21-1-1931; மறைவு - 7-3-2003; ஊர் - வேலன்குடி, நாகை மாவட்டம்; கணவர் - நடனசிகாமணி, பி.இ.,)

50 வயதான மீரா (2004) தினமும் பூத்தொடுத்து இறைவனுக்குத் தருகிறார்.

திருச்சி காலந்தொறும் சைவ அறிஞர்களைத் தமிழகத்துக்குத் தந்து வரும் தனிப்பெரும் நகரம். திரிசிரபுரத்திலே பிறந்த ஸ்ரீ மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை, மயிலாடுதுறையில் நெடுங்காலம் தங்கி சைவமும் தமிழும் பரப்பி வந்தாலும் திருச்சிக்கும் பிற சீடர்களுடன் வந்து பூவாளூர் தியாகராஜ செட்டியார் அவர்களுடனும் கருத்து பரிமாறி தமிழ் வளர்த்தார். ந.மு. வேங்கட சாமி நாட்டார், பூவாளூர் அ.மு. சரவண முதலியார் ஆகியோர் பிறப்பிடம் வேறாய் இருந்தாலும் நெடுங்காலம் இருப்பிடம் திருச்சியாகவே அமைந்திருந்தது. முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம், திருவாசகம், திருமந்திரம் உரையாசிரியர் லால்குடி ஜி. வரதராஜம் பிள்ளை ஆகியோர் திருச்சியிலே வாழ்ந்து மறைந்த சைவப் பெரியார்கள்.

பட்டிமண்டபப்புயல் தமிழகத்தில் வீசியபொழுது நெடிது உயர்ந்து நின்றவர் பேராசிரியர் இரா. இராதாகிருஷ்ணன். குன்றக்குடி அடிகளாருக்கு அடுத்து நெறிமுறை பிறழாமல் பட்டி மண்டபங்கள் நடத்தியவர். அவர் தன் சிகையைத் தட்டிவிட்டுப் பேச ஆரம்பித்தால் அவையில் தமிழ்முகை விட்டு மலரும். அப்படி ஒரு எடுப்பான பேச்சு! அத்தமிழ்த்தலைவரின் தானைத் தளபதி பேராசிரியர் சோ. சத்தியசீலன் *(14-4-1933)*. தலைவருக்கேற்ற தளபதி! அதே கருத்து வளம்! குரல் வன்மை! கேட்பார் பிணிக்கும் தகைய சொல். இவர்களை அடியொற்றி வருபவர் அ.வ. ராஜகோபாலன். சிம்மம் போல கர்ச்சிப்பார். இம்மூவரும் சேர்ந்தாலே தமிழ் விளையாடும். இசைக்குழு போல பட்டி மண்டபக்குழு என்று தொடங்கியதே இவர்கள் காலத்தில் தான். அ.வ. ராஜ கோபாலனுக்குப் பிறகு அறிவொளி அவர்கள் அந்த இடத்தைப் பிடித்து விட்டார்கள். பேராசிரியர் இராதா கிருஷ்ணன் அகால வயதில் மறைந்தது நம் தவக்குறைவே.

நடுநடுவே ஆ. ஜகந்நாதன், பழ. முத்தப்பன் என்ற அறிஞர்கள் பலர் திருச்சியில் தங்கித் தமிழ்மணம் பரப்புகிறார்கள். எங்கள் ஆசிரியர் பிரான் முத்தரச நல்லூரில் தங்கி இருந்து கொண்டு பெரிய புராண மணம் பரப்பி வருகிறார்.

43. உறையூர்

உறையூர் அடியார் திருக்கூட்டம்

''உள்ளேன் உனை அல்லால் பிற தெய்வம்'' இறைக் கற்பு உறையூர்ச் சைவமாக மணக்கிறது. ஐவண்ணநாதர் கோயிலில் நுழைந்தவுடன் ஒரு சிவனடியார் பெரியபுராணம் நாயன்மார் கதையை விளக்கிக் கொண்டிருக்கிறார். அறுபதுக்கு மேற்பட்ட அடியவர்கள் - வெண்ணீறு சண்ணித்த மேனியராய் - தலைமேல் கைதூக்கிக் கும்பிட்டவாறு ஆகாகாரம் செய்கிறார்கள்.

எங்கும் வெண்ணீற்றின் ஒளி!

அத்திருக்கூட்டத்தை நெருங்கவே அருகதையற்ற நிலையில் சற்றுத் தள்ளி ஓர் ஓரமாக அமர்ந்து செவிமடுக்க வேண்டியுள்ளது. வெண்ணீற்று வேலி! மெய்யெலாம் நீறுபூசிய அவர்கள் எங்கே? ஒற்றைக் கீற்றாய் நீறு பூசும் நாம் எங்கே? அவையிலிருந்து ஓர் ஐந்து வயது குழந்தை எழுந்து வந்து திருநீற்றுச் செல்வம் பொங்கிவழியும் விபூதிப் பையை என்முன் நீட்டியது. திருநீறு முழுமையாகப் பூசியாவது அத்திருக் கூட்டத்தில் சேரும் அருகதை பெறலாம் என்ற நிலையில் நெற்றி நிறைய பூசிக்கொண்டு அக்குழந்தையிடம் ''போதுமா?'' என்று கேட்டேன். ''ஊஹீம்'' என்றது அக்குழந்தை. மீண்டும் கைநிறைய அள்ளிப் பூசிக் கொண்டு அக்குழந்தையைப் பார்த்தேன். இம்முறை அக்குழந்தை பேசவில்லை. உதட்டைப் பிதுக்கி நெற்றியின் மேல்புறம் வெற்றிடமாக இருந்த பகுதியில் தன் பிஞ்சுக் கரங்களால் சுட்டிக்



காட்டியது. மீண்டும் பூசிக்கொண்டேன். அதன்பிறகுதான் அக்குழந்தையின் முகம் மலர்ந்தது. அக்குழந்தையின் பெயர் திருநாவுக்கரசு.

உறையூரில் ஒரு தகப்பன் சாமி!

பிறகு முறையான வழிபாடு; அன்னம் பாலிப்பு. இவ்வாறு வாரந்தோறும் நடைபெறுகிறது. இதே உறையூர் அடியார் திருக்கூட்டத்தார் வாரந்தோறும் திரு ஆனைக்காவில் கூடி திருமுறைகளைப் பண்ணோடு இசைக்கிறார்கள். திருமுறைப் பயிற்சி முடிந்தவுடன் திருக்கோயில் வலம் வந்து வழிபாடு செய்கிறார்கள். அவர்கள் நடத்தும் அறுபத்து மூவர் வழிபாடு கண்கொள்ளாக் காட்சி ஆகும்.

''தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்'' என்று திருத்தொண்டத் தொகை பாடி ஒவ்வோர் ''அடியாருக்கும் அடியேன்'' என வரும்பொழுது ஒவ்வொரு முறையும் கீழே விழுந்து வணங்குகிறார்கள். மெய் சிலிர்க்க வைக்கும் காட்சி ஆகும்.

இத்திருக் கூட்டத்தின் ஞானகுருவாக இருப்பவர் திரு. வே. சிவராகவன் அவர்கள். வங்கியில் பணியாற்றி விருப்ப ஓய்வுத் திட்டத்தின் கீழ் ஓய்வு பெற்றுள்ளார். 1983-இல் திருமுறைகளை ஓத ஆரம்பித்த ராகவன் காலை, மாலை என்று பத்து ஆண்டுகள் திருமுறைப் பாராயணம் செய்து முடித்துள்ளார். பெரியபுராணப் பாடல்கள் அனைத்தும் இவருக்கு மனப்பாடம். சிவக்கவிமணி அவர்களை நாயனாராகவே கருதி வழிபடுகிறார்.

எங்களை வாழ்விக்க முன்னாள்
எழிலார் பேருரை செய்த எம்பிரான்
சிவக் கவிமணிநாயனார்

''பொது வெளியில் நடமாடும் பூங்கழலான்
திருவருளால்
புதுப்பொலிவில் பேருரையைப் புனிதம் பெற
எமக்களித்தே
எதுபொருளோ எது உரையோ என்றறியா
எளியோமை
இது பொருள்காண் எனக்காட்டி ஈடேற்றம்
செய்தருளி,
செதுகையாகும் பிறப்பறுத்த சிவக்கவியாம்
தவமணியின்
மதுமலர்நல் திருவடிகள் வாழியவே!
வாழியவே!''

''ஒன்று வேறு உணர்வும் இல்லேம்'' என்ற இவர் தம் கோட்பாடு எழுத்தில் மட்டும் அல்ல. இவரது இதயத்திலும் பதிந்து நிற்கிறது. அதனால்தான் சிவ சிந்தனை தவிர வேறு சிந்தனையே இல்லாமல் வாழ்கிறார். உடல்நலம் குன்றினாலும் மருத்துவச் சிகிச்சை பெற்றதேயில்லை. ஒருமுறை இவரது துணைவியார் வயிற்றுப் போக்கினால் கிழித்துப் போட்ட நாராக ''ஆவி அகத்ததோ புறத்ததோ'' என்று கிடந்த நிலையில் கூட மருத்துவரிடம் செல்லாமல் திருநீற்றுக் கவசம் ஒன்றையே பற்றி நின்றார். கங்காளன் பூசும் கவசத் திருநீறு அம்மையாரைக் காத்தது. அம்மையாருக்கும் ஏழுதிருமுறைகளும் மனப்பாடம். அம்மையார் பெயர் சித்ரா. இராகவன் அவர்கள் சகோதரி மகனான வைத்தியநாதன் என்பாரும் வேதியியல் பட்ட மேற்படிப்பு படித்து பணியிலிருந்து விலகி தன் தாய் மாமனுக்குத் துணையாகச் சைவப்பணி ஆற்றுகிறார். இவருக்குச் சுந்தரர் தேவாரம் முழுமையும் மனனம். திரு ஆனைக்காத் திருக்கோயிலில் தானே முன்வந்து ஓதுவாராகப் பணிபுரிகிறார்.

ஆம், ஒன்று வேறு உணர்வும் இல்லா ஒரு தனிக் குடும்பம்.

(வே. சிவராகவன் : பிறந்த ஆண்டு - *17-5-1954;* பிறந்த ஊர் - மயிலாடுதுறை; பெற்றோர் - வேங்கடராமன், அலமேலு

சிவ. சித்ரா : பிறந்த ஆண்டு - *14-4-1965;* பிறந்த ஊர் - திருச்சி; பெற்றோர் - ஜெயராமன், ருக்மிணி.


ர. வைத்தியநாதன் : *7-2-1974,* திருச்சி.)

வாகீச பக்த ஜனசபைச் சமரச சுத்த சன்மார்க்க சங்கம்

உறையூர் பலவகையில் புண்ணியம் செய்த ஊராகத் திகழ்கிறது. உறையூர் அடியார் திருக்கூட்டம் அல்லாது வேறு இரண்டு அமைப்புகள் சைவப்பணி ஆற்றுகின்றன. அவற்றுள் வாகீச பக்த ஜனசபைச் சமரச சுத்த சன்மார்க்க சங்கம் சற்றுப் பழைமையானது. 11-1-2004-இல் தனது 48-ஆம் ஆண்டு விழாவை நடத்தியது. ஆரம்பகாலங்களில் தத்துவப் பேராசிரியர் வை. இரத்தின சபாபதி அவர்கள் வாகீச பக்தஜனசபை என்ற பெயரில் தொடங்கி சுமார் 30 ஆண்டுகள் சாத்திர தோத்திர வகுப்புகள் நடத்தி வந்திருக்கின்றார். சைவவயலில் ஒரு சால் உழவு நன்றாகவே உழுதிருக்கிறார். அதேசமயம் இன்னொரு புறம் கோபால் நாயர், சண்முகம்பிள்ளை ஆகியோர் சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தினை நடத்திக் கொண்டிருந்தனர். இரண்டையும் இணைத்து மேலே குறித்த பெயரை அவ்வமைப்பு தற்பொழுது பெற்று உள்ளது. மார்கழி முப்பது நாளும் கந்த புராணம், பெரியபுராணம், திருவிளை யாடற்புராணம், திருமுறை சொற் பொழிவுகள், நால்வர் குருபூஜை, ஆண்டு விழா எனப் பணி அமைந்துள்ளது. (தற்போதைய தலைவர் - பி. சோம சுந்தரம் பிள்ளை செயலர் - சண்முகம் பிள்ளை; பொருளர் - கர்ணன் ராமசாமி)

வார வழிபாட்டு மன்றம்

15 ஆண்டுகளாக வாரவழிபாட்டு மன்றம் இடைவிடாமல் வார வழிபாடு, சமயக் குரவர்கள் விழா, அறுபத்து மூவர் குருபூஜை, திருவாசக முற்றோதல், தலயாத்திரை எனப் பணியாற்றுகின்றது. அக்டோபர் 2-இல் நான் சென்ற சமயம் சுகிசிவம், மருதாசல அடிகளார், சீர்காழி எஸ். திருஞானசம்பந்தம் என்றுமிகச் சிறப்பாக 15-ஆம் ஆண்டு விழாவினை நடத்திக் கொண்டிருந்தனர். (தலைவர் - ஆர். இராமலிங்கம் செயலர் - எஸ். மோகன்)



தமிழ், வடமொழி, இசைப்புலமை உடைய சிவக்கொழுந்து தேசிகர் அவர்கள் கோயில்களில் உயிர்ப்பலி இடு தலைத் தடுத்தும், மது உண்ணாமையைப் பிரசாரம் செய்தும் சமுதாயப்பணி ஆற்றியிருக்கிறார். 22-2-1914-இல் பிறந்த தேசிகர் 27-6-2004-இல் இறைவனடி சேர்ந்தார்.

(ஊர் – உக்கடை. பேரளம் அருகில்; பெற்றோர் – விசுவநாதம் பிள்ளை, இராமாமிருதத்தம்மாள்)

இவரது மகனார் அம்பலவாணன் அவர்கள் 500 முற்றோதல்கள் செய்து உள்ளார். திருமுறைப் பாடல்களைப் பண்ணுடன் பாடுகிறார். விதை ஒன்று போட சுரை ஒன்றா முளைக்கும்? என்று மீண்டும் பாடத் தோன்றுகிறது.

(பிறந்த ஆண்டு - 27-8-1953; ஊர் - பெரியகுளம், தாயார் - சேதுமணி ஆச்சி)

44. திருக்கற்குடி (உய்யக்கொண்டான்)

''பெரியவர்கள், சிறார்கள் என மக்களுக்குத் திருமுறை கற்பித்தல்'' திருக்கற்குடி சைவத்தின் பண்பாக அமைந்துள்ளது. ஞாயிற்றுகிழமைகளில் காலை நேரத்தில் உய்யக்கொண்டான் திருமலைக்குச் சென்றால் பெரியவர்கள், சிறார்கள் எனக் கலந்து 300 பேர் ஒவ்வொரு சந்நிதியாகச் சென்று முறையாக வழிபாடு செய்து, இணைந்து

சிவபுராணம், திருத்தொண்டத் தொகை ஓதி வலம் வந்து ஓரிடத்தில் அமர் கின்றார்கள். வாரவழிபாடு மன்றத்தின் அமைப்பாளர் தட்சிணாமூர்த்தி (வயது 51) திருமுறைப் பாடலைப் பண்ணோடு பாடி மற்றவர்களையும் பாடச் செய்கிறார். பண்முறையில் பாடும் வரை அவர் விடுவதாய் இல்லை. ஒரு பாடலை பண்முறைப்படி பாட 5,6 வாரம் பிடிக்கிறது என்றார். பாடலை அச்சிட்டும் கொடுத்து விடுகிறார். இவ்வழிபாட்டு மன்றத்தின் பணி பிரதோஷத்தன்று சுவாமி புறப்பாடு, உழவாரப்பணி, நால்வர் குருபூஜை, மார்கழி திருவெம்பாவை என விரிகின்றது.

(தொடக்கம் - 1993)

தமிழ் முதல் ஞாயிறன்று நால்வர் வழிபாட்டு மன்றத்தினரும் (தலைவர் நடராஜன்; உறுப்பினர்கள் - 10 பேர்), ஆங்கில முதல் ஞாயிறன்று அகி லாண்டம் பிள்ளை குழுவினரும் (10 பேர்) திருக்கோயிலுக்கு வந்து தேவாரம் பாடுகின்றார்கள். பாம்புகுத்தியா பிள்ளை (80 வயது) தினமும் கோயி லுக்கு வந்து தேவாரம் பாடுகிறார்.

நாவுக்கரசர் பணிமன்றத்தைச் சேர்ந்த மனோகரன் (வயது 45, பொறியியலாளர்) 4 பேருடன் உழவாரப் பணி செய் கிறார். பிஹெச்ஈஎல்லிருந்து ஓய்வு பெற்ற சுந்தர்ராஜன் அவர்கள் (வயது 65) முத்து, பெரியசாமி, பழனி ஆகியோரின் துணையுடன் வாரந்தோறும் கோயிலுக்கு வந்து சந்து, பொந்துகள் எல்லாம் சிமெண்ட் பூசிவிட்டுச் செல்கிறார்.

இவ்வாறு ஒவ்வொருவரும் ஒவ் வொரு பணியாகப் பிரித்துக் கொண்டு பணியாற்றுவதால் கற்குடி நற்குடியாக அமைந்துள்ளது.

45. திரு ஆனைக்கா

பன்னிரு திருமுறை வார வழிபாட்டுக் கழகம்

பன்னிரு திருமுறை வார வழிபாட்டுக் கழகத்தின் பணிகள் திருவானைக்கா திருக்கோயிலோடு பின்னிப் பிணைந் துள்ளன. பிரதி ஞாயிறுதோறும் காலை யிலும் பௌர்ணமி தினங்களில் இரவிலும் பன்னிரு திருமுறைகளை ஓதி வலம் வருதல் - பிரதி திங்கட்கிழமை தோறும் இரவு கூட்டு வழிபாடு - வெள்ளிக்கிழமை தோறும் இரவு கூட்டு வழிபாடு - வெள்ளிக்கிழமை தோறும் சமயச் சொற்பொழிவு - பிரதி மூன்றாம் ஞாயிற்றுக்கிழமை திருவாசக முற்றோதல் - நால்வர் பெருமக்கள் திருநட்சத்திரங்களில் சிறப்பு ஆராதனை, திரு வீதியுலா சித்திரைத் திங்களில் திருமுறைவிழா, அறுபத்துமூவர் விழா - மகா சிவராத்திரியன்று நான்கு காலமும் ஆன்மார்த்த சிவபூசை நடைபெறச் செய்தல் - உழவாரப்பணி - இப்படி முழுமையாக வார வழிபாட்டுக் கழகத்தினர் தங்களைக் கோயிலோடு பிணைத்துக் கொண்டுள்ளனர். வார அட்டவணை, மாத அட்டவணை, ஓராண்டுக் கால அட்டவணை என்று திட்டமிட்டுச் செயல்படுகின்றனர். அந்த அட்டவணையைப் பார்த்தால் நமக்கே திருஆனைக்காவிற்குக் குடிபெயர்ந்து விடத் தோன்றும். பதியெழு அறியாப் பழங்குடி. தீக்கை வழங்கல், தல யாத்திரை, மாணவர்க்குத் திருமுறைப் போட்டி, சமயநூல்கள் வெளியிடுதல் என்று பிறபணிகளும் இவ்வமைப்பில் இடம் பெற்றுள்ளன.

2000-ஆம் ஆண்டு நடைபெற்ற ஆலயத் திருப்பணியின்போது அறுபத்து மூவர்க்கும் பீட தளம் முழுவதும் கரும் பச்சை கிரானைட் பதித்தும், பின்புறம் வெண்ணிறப் பளிங்கு பதித்தும், ஒளியூட்டியும், திருத்தொண்டத் தொகை யினைக் கல்வெட்டில் பதித்தும்

அறுபத்துமூவரைச் சிங்காரித்துச் சீரழகு பார்த்திருக்கின்றனர்.

(தோற்றம் - ஆகஸ்ட் 1968, முதல் தலைவர் - அமரர் க. அப்புலிங்கம் பிள்ளை, தற்போதைய ஆலோசனைக் குழுத்தலைவர் - சிவதத்புருஷதேசிகர் சொ. கிருஷ்ணன், செயல் தலைவர் - திரு. டி. மருதவாணன், செயலர் - திரு. எஸ். சிதம்பரம்)

பன்னிரு திருமுறை வார வழிபாட்டுக் கழகம் 1968-இல் தொடங்கப்பட்டாலும் 1955-இலேயே ஜட்ஜ் அகிலாண்டம் பிள்ளை வாரவழிபாட்டினைத் தொடங்கி விட்டார். பள்ளிச்சிறார்களை வைத்து வெள்ளி தோறும் வாரவழிபாடு, திருமுறை ஓதும் சிறார்களுக்கு போட்டி வைத்துப் பரிசுகள் வழங்குதல், திரு ஆனைக்கா கோயிலில் பணியாற்றிய நடராஜ் ஓதுவாரை வைத்துப் பயிற்சி தருதல் எனப் பல வகையில் சைவப்பயிர் வளர்த்தார். 1985 வரை அகிலாண்டம் பிள்ளை இவ்வார வழிபாட்டினை நிகழ்த்தினர். 1987-இல் தனது 90-ஆம் வயதில் அகிலாண்டம் பிள்ளை இறை வனடி சேர்ந்தார்.

அப்புலிங்கம்பிள்ளை



கலைவாணர் அப்புலிங்கம்பிள்ளை ''ஞானதீபம்'' ஏந்துகிறார். கலை வளர்ந்து ஞானம் ஆவதும், ஞானம் ஒளிமிக்க சிவம் ஆவதும் படிமுறை வளர்ச்சியின் இயற்கை.

கலைவாணர் வாழ்க்கையும் அப்படித் தான் அமைந்தது. இவர் பிறவிக் கவிஞர். இவர் இயற்றிய ''உதயம்'' காந்தியப் பெருங்காப்பியம். பின்னர் 1980-இல் இவர் இயற்றிய ''ஞானதீபம்'' சைவப் பெருங்காப்பியம். ''ஞானதீபம்'' தருமை யாதீனக் குரு முதல்வர் ஸ்ரீகுரு ஞான சம்பந்தர் வரலாற்றை 692 விருத்தப் பாக்களில் இயம்புகிறது.

காப்பியம் என்றால் காதலும், வீரமும் அமைந்தது தான் என்ற பொய்யான இலக்கிய நியதியை கலைவாணர் புறம் போகச் செய்துள்ளார். காதலில் சிறந்த காதல் பரம்பொருளின் மேற்கொள்ளும் காதல்! வீரத்தில் சிறந்த வீரம் தன்னைக் கண்டு அடங்குதல். இத்தகு காதலும் வீரமும் மக்கள் மன்றத்தில் வளராமை யால் தான் எங்கும் இருட்கூகையாட்டங் கள்; நிர்வாண விளம்பரப் போக்குகள்; இந்தச் சூழ்நிலையில் கலைவாணர் ஞானத்தைக் கருப் பொருளாகக் கொண்டு காப்பியம் இயற்றியுள்ளார்.

காப்பியத் தலைவர் - ஞானாசிரியர் தருமைக் குருஞானசம்பந்தர்

காதல் - கண்ணுதற்பெருமான் காதல்

வீரம் - தம்மை உணர்ந்து அடங்கி, ஆழ்கடல்

ஆழத்தினும் அடங்கி இமயத்தின் உயர்ந்து விளங்குதல்.

இவ்வாறு தவத்திரு குன்றக்குடி அடி களார் அழகுற வாழ்த்துரை வழங்குகிறார் கள். அவர்கள் மேலும் தொடர்கிறார்கள்.

காப்பியம் சிறப்புற அமைந்திருக் கிறது. முன்னைப் பழைமைக்கும் பழைமையான ஞானம் காப்பியம் முழுதும் ஊடுருவிநின்று உணர்த்துகிறது. ஞானத் தின் இயற்கை பழைமையாய் நிற்றலன்று. நாள்தோறும் புதுமையாய்ப் பொலி வுற்று, மன்னுயிர் ஆர்ந்து அனுபவிக்க விளங்குவது ஞானத்தின் இயற்கை. புதுமைப் பொலிவுகள்

பெறாத ஒன்று ஞானமாக முடியாது; அறிவாக முடியாது. ஏன்? காலத்திற்குக் காலம் புதுமைப் பொலிவுகள் பெற்று வளராத ஒன்று உயிர்ப்புடையதன்று. ஆதலால் கலை வாணர் காட்டும் ஞானதீபத்தில் புதிய சிந்தனைக் கதிர்கள் ஒளிவீச்சுடன் பாய்ந்து உயர்வைத் தூண்டுகின்றன.

இஃதோர் அருமையான படைப்பு; அருமையான சாதனை.

காப்பியத்திலிருந்து சில துளிகள்

திருவாசகம்

''உழுதாலே நெல்விளையும் உள்ளம்
கசிந்துருகி
அழுதாலே துயர் அகலும் ஆண்டவனைக்
கையாரத்
தொழுதாலே அருள்புரியும் தூய திருவாசகம் நம்
பழுதான நெஞ்சறியப் பகர்வதிதே
என்பார்கள்''
(பா – 201)

குடிகள் தழுவிய கோயில்

''குடிகளால் கோயில் ஓங்கக் கோயிலால்
குடிகள் வாழ
அடிமுதல் முடிவரை இவ் அற்புதத்
தொடர்பில் பண்டு
வடிவுறப் பெற்ற நங்கள் வாழ்வினை மீட்டுத்
தந்து
படிமிசைச் சைவம் காக்கப் பரம சற்குரு
செல்கின்றார்''
(பா – 498)

மாணிக்கவாசகர்

''மக்கள் தம் பொருளை மக்களுக்கெனவே
மன்னவன் செலவிடல் அறமாம்
துக்கமே பரப்பத் தொடுத்திடும் சமர்க்கோ
தொலைப்பது? பாவம்
தக்கதப்பொருளைத் தனிப்பெரும் தாளினில்
வைப்பதே'' என்று
அக்கறையுடன் தம் அடிகளார் அமைத்த
ஆலயம் புரட்சியின் சின்னம்''

தருமையாதீனம்

''போதுகமழும் புராரிபழம், புனிதம் கமழும்
அடியவர் நக
ஓதுமடத்தில் முறையுடனே ஒன்றிக் கமழும்
பண்ணிசையே,
வாதுகடந்து வளர் சைவ வாசம் கமழும்
வாழ்முறையில்,
கோதுகடந்த மனத்துறவோர் கூட்டம் கமழும்
தருமையெலாம்''

கலைவாணர் கவிஞர் மட்டுமல்ல, சிவபூஜை மாநாடுகள் திருமுறை விழாக்கள் எனத் திருஆனைக்காவலில் நடத்தியிருக்கிறார். உழவாரம் அமைப்பின் மூன்றாம் மாநில மாநாட்டை ஆனைக்காவில் வெகு சிறப்பாக நடத்தினார்கள். அம்மாநாட்டின்போது ''திருவாசகம்'' அருமையான பதிப்பு ஒன்று வெளியிட்டார். பன்னிரு திருமுறைக் கழகத்தின் தலைவராக *1968* முதல் *1988* வரை பணியாற்றியுள்ளார்.

சொ. கிருஷ்ணன்



கலைவாணருக்குப்பின் வாரவழிபாட்டுக் கழகத்தின் தலைவராகப் பொறுப்பேற்றவர் சொ. கிருஷ்ணன். வார வழிபாடு, ஆண்டுதோறும் அறுபத்துமூவர் விழா ஆகியன சிறப்பாக நடத்தி வருகின்றார். ஆனைக்கா குடநீராட்டு விழாவின் போது

அறுபத்துமூவர் சந்நிதித் திருப் பணிகளைச் சிறப்பாக நடத்தித் திருத்தொண்டத்தொகை திருப்பதிகக் கல்வெட்டும் திருக்கோயிலில் பதிக்கச் செய்தார். கழகத்தின் வெள்ளி விழா வினையும் சிறப்பாக நடத்தி வெள்ளி விழா மலரும் வெளியிட்டார். இவை யெல்லாம் கிருஷ்ணன் அவர்களுக்கு எளிதில் செய்யக்கூடிய பணிகள். சைவப் பணி இவரது இரத்தத்தில் ஊறிப் போன ஒன்று. தவத்திரு குன்றக்குடி அடிகளார் அருள் நெறித்திருக்கூட்டம் தொடங்கிய போது இவர்தான் முதல் செயலாளராகப் பொறுப்பேற்று திருச்சியில் கருத்தரங்கு, கவியரங்கு, பட்டிமன்றம் மற்றும் சமய மாநாடுகள் பல நடத்தி சமயத்துறையில் எழுச்சியும் மறுமலர்ச்சியும் கண்டார். கூட்டு வழிபாடு என்ற வழிபாட்டு முறையைத் திருச்சியில் மிகச்சிறப்பாக நடத்துவித்து வழிபாட்டுத் துறையில் பலரை ஈடுபடுத்தினார்.


1996-இல் ஆசாரிய அபிஷேகம் பெற்று குருமூர்த்தியாக விளங்கி 200 அன்பர் களுக்கு மேலாக இவர்கள் தீக்கை கொடுத்து வருகிறார்கள்.

(பிறந்த நாள் - 22-12-1922; பிறந்த ஊர் - நெடுவயல், அச்சன்புதூர், திருக் குற்றாலம் அருகில்; பெற்றோர் - சொக்கலிங்கம்பிள்ளை, மகராசி அம்மாள்)

46. திருவரங்கம்

ஸ்ரீதரன்

திருவரங்கம் அருள்மிகு அரங்க நாதரை வழிபடச் சென்றால் ஓர் அரிய காட்சியைக் காணலாம். கோயில் யானை திருமண் சார்த்திப் பொலிவுடன் நிற்கும். அதன் அருகே நெற்றிமுழுதும் திருநீறு பூசிய கோலத்தில் யானைப் பாகன் நிற்பார். விழாக்காலங்களிலும் பெருமாள் ஊர்வலம் வரும்பொழுது திருமண் கோலத்துடன் யானை; திருநீற்றுக் கோலத்துடன் யானைப்பாகர்.



''அனபா பணிக்குத் தன்னை
ஆளாக்கொண்ட யானைப்பாகர்.
ஒரு மாதின் பாகருக்கு ஆட்பட்டார்''

என்கிறார் ஆசிரியர்பிரான் மு. கணபதி. அரங்கநாதப்பெருமாளின் யானை வளர் கூடமே இவர் வசிக்கும் இல்லம்; அதுவே கோயில். நாளும் வழிபாடு, சங்காபிஷேகம், சோமவார பிரதோஷ வழிபாடு, அன்னாபிடேகம் எல்லாமே நடக்கும்.

ஆண்டுதோறும் விழா நடத்துவார். அந்த அபிஷேகத்தைக் காணக் கண்கோடி வேண்டும். என் ஆசிரியர் பிரான் அதனை வருணிக்கின்றபோது காணவேண்டும் என்ற ஆர்வம் மேலிடும். ''மாதுளம் பழமா! ஐம்பது பழங்களைப் பிழிந்து மாதுளம் அபிஷேகம். இது பலாப் பழக்காலமா? உடனே பலாப்பழ அபிஷேகம். இன்ன அபிஷேகம் என்ற கணக்கு கிடையாது. அப்படி ஒரு முரட்டு பக்தி!'' என்பார்.

தருமபுரம் சுவாமிநாதன் அவர்களிடம் அளவற்ற அன்பு; அவரில்லாமல் இவர் நடத்தும் விழா கிடையாது. ஒருமுறை தருமபுரம் ஐயா அவர்களிடம் இவர் நடத்தும் திருவரங்கம் அழகிய திருச்சிற்றம்பலமுடையான் திருக்கூட்ட ஆண்டு விழாவிற்கு நாள் கேட்டார். தருமபுரம் ஐயா ஆகஸ்ட் 17 என்றார்.

7+1=8, 8-ஆம் ஆண்டு விழா, 8-ஆம் திருமுறையாகிய திருவாசகப்பொழிவு 8-ஆம் நாயனாராகிய எறிபத்தநாய னாரின் வரலாற்றுப்பொழிவு, வழி பாட்டில் பெருமானுக்கு 8 வகை திருமஞ்சனப் பொருள்கள், 8 திரு நற்றாடைகள், 8 வகை அமுதூட்டும் பொருள்கள், 8 வகை தளிர்கள், மலர்கள், மகேஸ்வர பூஜையும் 8 வகை கனிகள், 8 வகை தொடுகறிகள். மாலையில் தரும புரம் ஐயா அவர்களால் 8-ஆம் திருமுறை இன்னிசை 8 சிவனடியார்களுக்கு புத்தாடை வழங்குதல், 8 சிவனடியார் களுக்கு திருநீற்றுக்கலயம் வழங்குதல், ஆடல்வல்லானுக்கு 8 வகைப் பொருள் களால் ஒப்புநீராட்டு நிகழ்வு,

என விழா முழுவதும் 8வகைச் சிந்தனை.

தருமபுரம் ஐயாவுக்கு எண்பது தொடக்கமும் இவர்தான் செய்தார். நிறைவும் இவர்தான் செய்தார். அதிலும் புதுமை. ஐயாவுக்குப் பரிசு வழங்கும் சமயம் நான்குபேரை நால்வர் வேடமிடச் செய்தும், தருமபுரம் ஐயாவுக்கு ஆன்மார்த்த குருவான தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ 25-ஆம் குரு மகா சந்நிதானமாக இவரே வேடமிட்டும் (வேடப் பொருத்தம் கனகச்சிதமாம்) பொன்னாக வும் பட்டாகவும் வாரி வழங்கினாராம். என்ன ஓர் அன்பு! என்ன ஒரு வண்மை! என்ன ஒரு புதுமை! எத்தனை பெரிய மனது!

திரு ஆனைக்காவில் ஸ்ரீ அகிலாண் டேசுவரி சிலையில் சிறுபின்னம் ஏற்பட்டு விட்டது. நம்முடைய ஸ்ரீதரன் (அதுதான் அவருடைய பெயர்) அதனைச் சரிசெய்தார். செய்தவர் அம்மையை ஆனைக்காவிற்கு எழுந்தருளப் பண்ணிய காட்சி இருக்கிறதே! அடடா! அரசர் காலத்தில் ஊர்வலம் போல அப்படி ஓர் அணிவகுப்பு! 4000 பேருக்கு மேல் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். யானைமேல் வெள்ளி பூரணகும்பம் நல்ல அலங்காரம்; ஒரு வண்டிக்கு மேல் மலர்கள் வந்து சேர்ந்தன. அபிஷேகமா - நன்கு கறக்கும் காராம்பசு மூலம் 18 லிட்டர் பால் அபிஷேகம், பேரிகை, சங்கு, குழல் இசை முழக்கத்துடன் எழுந்தருளப் பண்ணினார்.

அதேபோல் சிதம்பரத்தில் மாணிக்க வாசகர் சிலை பிரதிட்டை செய்ய வேண்டும் என்று பொது தீட்சதர்கள் ஸ்ரீதரனிடம் கேட்டுக் கொண்டார்கள். ஸ்ரீதரன் அவர்களிடம் எல்லாமே பெருந் திட்டம் தானே! ஆனைக்கா ஸ்ரீ அகிலாண்டேசுவரி எழுந்தருளப் பண்ணியது போலவே ஸ்ரீ மாணிக்க வாசகர் பிரதிட்டைக்கும் செய்து விட்டார். அதுபோல ஓர் ஊர்வலம் அதற்கு முன்னும் நடக்கவில்லை; பின்னும் இல்லை.

ஸ்ரீதரன் அவர்கள் ஐந்து வயதிலேயே சிவபூஜை செய்ய ஆரம்பித்துவிட்டார். நன்கு சமைப்பார். நாம் சாப்பிட மறுத் தால் நடக்கிற கதையே வேறு....! நல்ல வேளை! நான் ஓடிவந்து விட்டேன். ஓய்வாக இருக்கும்பொழுது தகடி, சபா, முத்துக்கொண்டைகள் செய்து கொண்டு இருப்பார். அற்புதமாக இருக்கும். தஞ்சாவூர் பெயிண்டிங்கில் விற்பன்னர். அழகாக வண்ணக்கோலமிடுவார்.

ஸ்ரீதரன் ஒரு கலா ரசிகர். அதனால் தான் கலைநயம் கலந்த பக்தியாக மிளிர்கிறது அவர் தொண்டு. கலையும், பக்தியும் களிநடமாடிடும் கூடம் ஸ்ரீதரன் யானை வளர் கூடம். ஸ்ரீதரன் அவர்கள் சமயத் தொண்டோடு சமுதாயத் தொண்டும் புரிந்து வருகிறார். ஊனமுற்றவர்களுக்கு 16 ஆண்டுகளாக உணவு தருதல், அநாதைப் பிணங்களை அடக்கம் செய்தல் என்று சமுதாயப் பணியும் புரிகிறார்.

நடமாடும் கோயில்!
படமாடும் கோயில்!

இரண்டுமே ஸ்ரீதரனின் உள்ளப் பெருங்கோயிலாம்.

(பிறந்த ஆண்டு - 3-8-1958, பிறந்த இடம் - ஆனைக்கா கோபுர வாயில்; பெற்றோர் - சிவராமன், லெட்சுமி)

செண்பகத் தமிழ் அரங்கு

நெல்லை பொருநை இலக்கிய வட்டம், திருச்சி செண்பகத் தமிழ் அரங்கு.

இரு அமைப்புகளும் தமிழ்நாட்டு கின்னஸ் அமைப்புகள். திருவான்மியூர் மருந்தீசர் அருட்பணி மன்றத்தை விட்டு விடுங்கள். அவ்வமைப்பு நித்தமும் எம்பிரான் புகழ்பாடுவது ஆகும்.

இரு அமைப்புகளிலும் அடாது மழை பெய்தாலும் விடாது வாரக்கூட்டம் நடைபெறும். நெல்லை அமைப்பு கொஞ்சம் மூத்த அமைப்பு 2003-இல் 1000-ஆம் வார நிறைவு விழா கொண்டாடி விட்டுப் பின்னும் தன் பணியைத் தொடர்கின்றது. செண்பகத் தமிழ் அரங்கு 2005 நவம்பரில் தனது 750-ஆம் வாரக்கூட்டத்தை நடத்த உள்ளது. செண்பகத் தமிழ் அரங்கில் ஒரு சிறப்பு என்னவென்றால் அத்தனை பொழிவுகளும் ஒலி நாடாவில் பதிவு செய்யப்பட்டுவிட்டன.

இரு அமைப்புகளும் தமிழ் இலக்கியம் என்ற அமைப்பில் சமய இலக்கியப் பொழிவுகளை நடத்துகின்றன. செண்பகத் தமிழ் அரங்கில் சைவ சித்தாந்த சொற்பொழிவுகள் - பாலகிருஷ்ணன் 22-உம், பெரியபுராணச் சொற் பொழிவுகள் - மு. கணபதி 30-உம் திருக்கோவையார் - கு. சுந்தரமூர்த்தி (10-இல் 6 பொழிவுகள் நிறைவு பெற்று உள்ளன) நடத்தப்பட்டுள்ளன.

திருவரங்கத்தில் சைவமணம் கமழ்வது வியப்பு அல்லவா!

பொருநை இலக்கிய வட்டத்துக்கு ஒரு தளவாய் ராமசாமி முதலியார்.

செண்பகத்தமிழ் அரங்கிற்கு ஓர் இராசவேலு செண்பகவல்லி!


47. லால்குடி

நாடு காண் குழு

பண்ணாராய்ச்சி வித்தகர் ப. சுந்தரேசனாரின் அன்பு வலையில் ஈர்க்கப் பட்ட ஊர்களில் லால்குடியும் ஒன்று. மாதந்தோறும் தலங்கட்கு சென்று வழிபாடு, திருமுறை ஓதுதல், சொற் பொழிவு என்று சுந்தரேசனார் திட்டம் வகுத்தார். ஓ! நம் தலயாத்திரை! என்று நினைக்கலாம். ஆனால் நம் சுந்தரேசனார் இதற்கு வைத்த பெயர் நாடு காண் குழு. சிலம்பிசைத்தவர் அல்லவா? நாடு காண் காதையும், காடுகாண் காதையும் அவர் நினைவில் நிழலாடி இருக்க வேண்டும். ஆம். அந்த அந்தத் தலத்தை இக்குழு வினர் கண்டனர். அதனதன் வரலாற்றை அறிந்தனர். அதனதன் இலக்கியத்தைப் பயின்றனர். இது புதுமையல்லவா? பயின்றதோடு மட்டுமல்லாமல், லால் குடியில் அதன் இலக்கியமான பெருந் திருப் பிராட்டிப் பிள்ளைத் தமிழையும் கல்வெட்டில் பதிக்கவும் வைத்தார். தலப்பயணம் கூட ''செலவுநயப்பு'' என்று அழகுத் தமிழில் அழைப்பாய் வரும். 9-1-1977-இல் திருஊற்றத்தூரில் சுந்தரேசனாரால் திருத்தவத்துறை நாடு காண் குழு தோற்று விக்கப்பெற்றது. பத்து ஆண்டுகளுக்கு மேலாக அனைத்துத் தலங்களுக்கும் இக்குழுச் சென்று வந்தது. சுந்தரேசனார் மறைவுக்குப் பின் பண்ணாராய்ச்சி வித்தகர் ப. சுந்தரேசனார் நாடு காண்குழு என மாற்றம் பெற்றது. தற்போதைய தலைவர் திரு. சண்முக வேலாயுதம், பூவாளூர்; செயலர் - திரு. பாலசுப்பிரமணியம்.

அவர் மறைவிற்குப் பின் 16-2-2003-இல் அதே பணியினைப் பண்ணாராய்ச்சி வித்தகர் ப. சுந்தரேசனார் பணி மன்றம் என்ற பெயரில் திருமாந் துறையில் துவங்கி அம் மன்றத்தார் செய்து வருகின்றனர். இதன் தலைவர் காரைப் பாக்கம் திரு. ச. இராமையாப் பிள்ளை.

அறநெறிக் கழகம்



ஜி. கனகசபை

லால்குடியில் 57 ஆண்டுகளாக இடையறவு படாமல் சைவப் பணியும், தமிழ்ப் பணியும் செய்து வரும் அமைப்பு அறநெறிக் கழகம் ஆகும். 1948 ஏப்ரலில் 'தவத்திரு குன்றக்குடி அடிகளார் தலைமையில் ரா. பி. சேதுப்பிள்ளை, திரு. ஏ. சி. செட்டியார் ஆகியோரால் துவங்கப்பட்ட இக்கழகம் பொதுவாகத் தமிழ் இலக்கியப் பணி செய்து வரு கின்றது. ஊடே ஊடே சைவப் பணியும் இடம் பெறுகின்றது. அதுவே பெரும் பட்டியலாகும்.

21-12-1969-ஆம் ஆண்டு விழாவில் திருமுருக கிருபானந்தவாரியார் தலைமையில் திருமுறைப் பெருவிழா; மாலை அ.ச. ஞானசம்பந்தனார் தலைமையில் பட்டி மண்டபம் பெரிய புராணத்தில் பெரிதும் உணரவைப்பது சமயநெறியே! வரலாறே! தமிழ் இலக்கியமே! 15-5-1972-இல் ஔவை து. நடராஜன், குமரி அனந்தன் பங்கு பெற்ற திருமுறை அரங்கு; 4,5 மே 1974-இல் பா. நடராஜன், நா. கிரிதாரி பிரசாத் பங்கு பெற்ற திருமந்திரக் கருத்தரங்கம் 3,4 மே 1975-இல் அ.ச. ஞானசம்பந்தனார் தலைமையில் பல்சமயக் கருத்தரங்கம். அவ்வை நடராசனார் - சைவம்; 6-5-1979 சுந்தர சுவாமிகள் - சிவப்பிரகாசர்; சோ. சத்தியசீலன் - மீனாட்சி சுந்தரம் பிள்ளை; அ.ச.ஞா. - குமரகுருபரர் 6,7, மே 1978-இல் இரா. இராதாகிருஷ்ணன் தலைமையில் ''திருவிளையாடற் புராணம்'' கருத் தரங்கம் : தெ. ஞான சுந்தரம் - இலக்கிய மணம்; அ. அறிவொளி - பக்திச் சுவை; சோ. சத்தியசீலன் - வாழ்வியல் விளக்கம்; அ.வ. ராஜகோபாலன் - உலகியல் நெறி; மாலை அ.ச.ஞா. தலைமையில் பட்டி மண்டபம்; திருத் தொண்டர் புராணத்தில் விஞ்சி நிற்பது அடியார்தம் ஈரநெஞ்சமே! வீரநெஞ்சமே! 3-5-1981-இல் திருத் தொண்ட மாக்கதையில் வரலாற்று வளம் - பா. நமசிவாயம்; இலக்கிய இன்பம் - ஜனார்த்தனம் 2 மே 1991 - சுந்தரர் விழா. 1-5-1993 சாத்திரவிழா; 4-5-1996 சேக்கிழார் விழா.

இவையல்லாமல் 1976 முதல் 2-5-1981 வரை ப. சுந்தரேசனாரின் ''பெரிய புராணத் தொடருரை''; மு. வைத்திய நாதன் ''திருவருட்பயன் - தொடர் 16-3-70 முதல் 22-3-1970 வரை பொத்தனூர் ராமசாமி ஐயரின் ''கந்த புராணத் தொடருரை''; ப. அரங்கசாமி அவர்களின் ''திருவிளை யாடற் புராணத் தொடருரை'' எனச் சைவப் பணி ஆற்றியுள்ளது அறநெறிக் கழகம்.

இப்படி 57 ஆண்டுகளாக அறநெறிக் கழகத்தைத் தொடங்கி இன்றளவும் தாமே முழுப் பொறுப்பேற்று நடத்தி வருகின்ற பெருமகனார் இலக்கியப் புரவலர் திரு. ஜி. கனகசபை. எண்பதைத் தாண்டிய நிலையிலும் விடாது நடத்திவரும் சைவப்பணி - தமிழ்ப்பணி - காலம் உள்ளளவும் போற்றப்படும்! புகழப்படும்.

1970 களில் திருமந்திர உரையாசிரியர் ஜி. வரதராஜம் பிள்ளையவர்கள் சுமார் பதினைந்து ஆண்டுகள் தொடர்ந்து தம்பாச்சியாபிள்ளை சத்திரத்தில் 15- நாள் சைவசித்தாந்த வகுப்பு நடத்தி வந்தார்கள். அருணவடிவேல் முதலியார், க. வச்சிரவேல் முதலியார் ஔவை சு.

துரைசாமிபிள்ளை, முத்து சு. மாணிக்கவாசக முதலியார், ந.ரா. முருகவேள் ஆகியோர் பாடம் நடத்தி யிருக்கின்றனர். பதினைந்து நாட்களும் பயிற்சி பெறுவோர்க்குத் தங்கும் வசதி, உணவு வசதி ஏற்பாடு செய்யப்பட்டது.

48. பூவாளூர்

தியாகராசச் செட்டியார்



பூவாளூர் என்றால் தியாகராசச் செட்டியார் அவர்களைப் பற்றிக் கூறாமல் இருக்க முடியாது. அந்த அளவிற்குச் செட்டியார் அவர்களைப் பற்றித் தமிழ்த் தாத்தா உ.வே. சாமி நாதையர் அவர்கள் எழுதியிருக்கின்றார். ஐயரவர்கள் காலத்தில் மகா வித்வான் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களுக்கு அடுத்த நிலையில் தமிழ் உலகில் செட்டியாரவர்கள் பேரும் புகழும் பெற்றிருந்தார்கள். அவரைப் பற்றி உ.வே.சா. இவ்வாறு கூறுகிறார். ''தியாகராசச் செட்டியாருடைய பெருமையை நான் பல நாட்களுக்கு முன்பிருந்தே கேள்வியுற்றேன். கும்ப கோணம் கல்லூரியில் தலைமைத் தமிழா சிரியராக இருந்த அவர் சிறந்த படிப்பாளி என்றும், அவரிடம் படித்த மாணாக்கர்கள் எல்லோரும் சிறந்த தமிழறிவுடையவர்கள் என்றும் சொல்லிக் கொள்வார்கள். கல்லூரியில் உள்ள மற்ற ஆசிரியர்களுக்கு எவ்வளவு கௌரவம் இருந்ததோ அவ்வளவு கௌரவம் அவருக்கும் உண்டு.

''தியாகராசச் செட்டியார் தம்முடைய அறிவையும் பொருளையும் நல்ல முறையிலே பயன்படுத்தினார். அதனால் இவருக்குப் புகழும் புண்ணியமும் உண்டாயின. தம் அறிவுத் திறத்தால் இவர் பிரபுக்களை நண்பராக்கினார். புலவர் பால் மதிப்படைந்தார். மாணாக் கர்களுடைய அன்பைப் பெற்றார். சிறந்த ஆசிரியரென்ற பெயர் இவருக்கு உண்டாயிற்று. தெரிந்த விஷயத்தைத் தெளிவாகக் கற்பிக்க வேண்டும் என்பதே இவர் கருத்து. பல விஷயங்களைத் தெரிந்து கொண்டதாக மாணாக்கர் களுக்குத் தம்மைப் புலப்படுத்திக் கொள்வதைவிட அவர்கள் தாம் கற்பிப்ப வற்றை முற்றும் உணர்கிறார்களா· என்பதை உணர்ந்து போதிப்பது தான் ஆசிரியனது இலக்கணம். அந்த இலக்கணம் செட்டியாரிடம் நிரம்பி யிருந்தது. மாணாக்கர் இவர்பால் ஈடுபட்டு இவரை என்றும் மறவாமல் பாராட்டி வந்தனர் என்பதே இதற்குச் சிறந்த சான்றாகும்.

''கேட்கும் நூற்கருத்துகளை அவர் ஊன்றிக் கேட்டுப் பயில்வதும் சிந்திப் பதும் தெளிவதும் பிள்ளையவர்களுக்கு அவர்பால் அதி அன்பை உண்டாக்கியது. புதியவையாகச் செய்யுள் செய்யும் வன்மையும் அக்காலத்தில் அவருக்கு இயல்பாக அமைந்திருந்தது. பிள்ளைய வர்கள் பால் படிக்க வந்த காலந் தொடங்கி நூதனமாகப் பாடங்கேட்க வருபவர்களுக்குப் பாடஞ் சொல்லு தலும் பிள்ளையவர்கள் நூதனமாகச் செய்யும் நூல்களையோ தனிச் செய்யுட் களையோ பனையேட்டில் அப்பொழுது எழுதுதலுமாகிய இப்பணிகளை அவர் பிறருக்குக் கொடுத்து விடாமல் தாமே வகுத்துக்கொண்டனர்; ஒரு நிமிஷ மேனும் இவரைவிட்டுப் பிரிந்திரார். புதிய செய்யுட்களை இவர் சொல்லத் தாம் எழுதும் பொழுது அவற்றின்

சொல்லின்பம் பொருளின் பதங்களை யறிந்து கண்ணீர் மல்குவார். அவற்றின் நயங்களைப் பிறருக்கு எடுத்துச் சொல்லுவார். இவையே அவருக்கு உண்டாகிய கல்வி முதிர்ச்சிக்கும் மற்ற மாணாக்கர்களைக் காட்டிலும் மேற் பட்டு விளங்கியதற்கும் காரணமாக இருந்தன. பிள்ளையவர்கள் செட்டியா ரிடம் வைத்திருந்த அன்பு ஒப்பற்றது. செட்டியார் பாடல் சொல்லுதலும், பொருள் சொல்லுதலும் செய்யுள் செய் தலும் அவரது குரலும் பிள்ளையவர்கள் பாடல் சொல்லுதல் முதலியவற்றிற்குப் படியெடுத்தாற் போலவே இருக்கும். பிள்ளையவர்களுக்கு எவ்வளவு புகழ் உண்டோ அந்தப் புகழுக்கு அடுத்த படியான புகழைத் தமிழ் நாட்டில் பெற்று விளங்கினவர் அவரே''

தியாகராசச் செட்டியார் இயற்றிய நூல்கள் : (1) மீனாட்சி சுந்தரம் பிள்ளை அந்தாதி (2) வீரை உமை அம்மை பிள்ளைத் தமிழ் (3) சவரிராயலு நாயகர் இரட்டை மணிமாலை (4) திருச்சிற்றம் பல வெண்பா அந்தாதி (5) திருவாரூர் பாதி திருவொற்றியூர் பாதி வெண்பா அந்தாதி (6) திருவாரூர் மருந்து வெண்பா மாலை (7) வியாசக் கோவையின் பிற்பகுதி. பதிப்பித்த நூல்கள் (1) உறையூர்ப்புராணம் (2) திருக்குடந்தைப் புராணம் (3) திருப்பெருமணநல்லூர் திருவெண்ணீற்றுமைப் பிள்ளைத் தமிழ் (4) திருத்தவத்துறை பெருந்திருப் பிராட்டியார் பிள்ளைத் தமிழ் (5) திருவிடைக்கழி முருகன் பிள்ளைத் தமிழ் (6) திருவானைக்கா அகிலாண்டேசு வரிமாலை (7) பூவாளூர்ப் புராணம்.

''பளபளவென்றிருந்தது அவர் தேகம். நல்ல சிவப்பு; அதிக உயரமும் இல்லை. குட்டையும் இல்லை. நல்ல பலம் பொருந்திய தேகக்கட்டு. அவர் நடையில் கம்பீரமும் பார்வையில் தைரியமும் பேச்சில் துணிவும் புலப்பட்டன. அவர் இடையில் தோய்த்துலர்ந்த ஒரு துண்டை உடுத்திருந்தார். யாரையும் அவர் லட்சியம் செய்ய மாட்டாரென்றும் மிக்க கண்டவாதியென்றும் முன்பு நான் கேள்வியுற்றிருந்தேன். அதற்கு ஏற்ற படியே அவர் நடையும் பேச்சும் இருந்தன. அவர் பிள்ளையவர்கள் முன் பணிந்து எழுந்தபோது, அவ்வளவு தைரியத்திலும் அலட்சியத்திலும் இடையே அப்பணிவு நன்றாக வெளிப் பட்டது.

(தோற்றம் - 1826; திருவடிப்பேறு - 19-1-1888; தந்தையார் - சிதம்பரஞ் செட்டியார்)

பூவாளூர் சைவ சித்தாந்த சங்கம்



அமிருதம் செட்டியார்

பூவாளூர்ச் சைவத்திற்கும் நீண்ட நெடிய வரலாற்றுப் பின்னணி உள்ளது. பூவாளூர்ச் சைவசித்தாந்த சபை 1910-இல் (சௌமிய ஆண்டு மாசி மாதம்) தொடங்கப் பெற்றது. கயப்பாக்கம் சதாசிவச் செட்டியார், ஜே.எம். நல்லு சாமிப் பிள்ளை, திரு.வி.க., உ.வே. சாமி நாதையர், பூவை கல்யாண சுந்தர முதலியார், கா.சு.பிள்ளை, ந.மு. வேங்கடசாமி நாட்டார், விபுலானந்த அடிகள், சச்சிதானந்தம் பிள்ளை, சி.கே. சுப்பிரமணிய முதலியார், பண்டிதமணி கதிரேசன் செட்டியார் முதலியோர் உரையாற்றியதிலிருந்து இச்சங்கத்தின் பழைமை தெரியவரும். இவையல்லாமல்

சாத்திர வகுப்புகளும் இச்சங்கத்தில் நடைபெற்றுள்ளன. சு. சாமி ஐயாதேசிகர் ஆரம்ப காலத் தலைவராக இருந் திருக்கிறார். அ.ரா. அமிருதம் செட்டியார் ஆரம்ப காலச் செயலாளராகப் பணி யாற்றினார். பின்னர் அவரே (தோற்றம் : 25-7-1883; மறைவு : 17-6-1959) தலை வராகவும் பணியாற்றினார். திருமுறை களைப் படிப்பது தவிர வேறு பணியே செய்யாதவர். பன்னிரு திருமுறை களையும் ஐம்பது தடவையாவது படித் திருப்பார். பலரையும் கூட்டித் திருத் தொண்டர் புராணத்தைத் தாமே வாசித்துப் பொருள் தெரிவிக்கச் செய்து பலரையும் சிவபுண்ணியத்திற்கு ஆளாக்கி உள்ளார்.

சங்கம் தோன்றியதிலிருந்து அறுபது ஆண்டுகளுக்கு மேலாக ஐம்புலிங்கஞ் செட்டியார் (1885-1973) சங்க வளர்ச்சியில் திறம்பட உழைத்திருக்கிறார். இவருக்குப் பெரிய புராணம் கரதலப் பாடம்.

பூவாளூரின் மற்றொரு முத்து மு. சுப்பிரமணியன் செட்டியார் (தோற்றம் : 17-3-1918; மறைவு : 30-4-1982) ஆவார். சங்கத்தின் செயலாளராகச் சில ஆண்டு கள் இருந்திருக்கின்றார். ப. சுந்தரேசனார் அவர்களின் துணையுடன் ''நாடு காண்குழு'' என்ற ஓர் அமைப்பினைத் தொடங்கி 1982 வரை மாதம் ஒரு கோயிலாகத் தலயாத்திரை மேற் கொண்டு பலரையும் இச்சிவப் பணியில் ஈடுபடுத்தினார்.

சங்கத்தின் தற்போதைய தலைவர் - ஷண்முக வேலாயுதம்; செயலர் - வெ. முருகேசன்.

49. திருமழபாடி

திருமழபாடிச் சைவம் சுந்தரேசச் சைவமாக மிளிர்கிறது. திருமழபாடி மட்டுமல்ல. திருமழபாடியைச் சுற்றி 50 கி.மீ. வரை உள்ள கிராமங்கள் வரை, சுந்தரேசச் சைவம் பண் முழங்கி யிருக்கிறது. அம் முழக்கத்தில் தோன்றிய மன்றங்கள் எத்தனை? உருவாகிய தொண்டர்கள் எத்தனை பேர்?

1969-ஆம் ஆண்டில் ஓர் அந்திப் பொழுது; திருமழபாடி கொள்ளிடம் ஆற்றங்கரை. பண்ணாராய்ச்சி வித்தகர் ப. சுந்தரேசனாரும் திருமழபாடி அன்பர் களும் அங்கு வருகின்றனர். சூரியன் மேற்கே மறையும் சமயம். எங்கும் பொன்னொளி. செக்கச் செவேர் என்று சிவந்த வானம். இந்தக் காட்சியைப் பார்க்கிறார். சுந்தரேசனார் பாட ஆரம்பிக்கிறார்.

''பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர் கொன்றை அணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே
அன்னே உன்னையல்லால் இனியாரை நினைக்கேனே''

''ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இப்படித்தானே நம்முடைய ஆரூரர் இக்கொள்ளிடக் கரையைக் கடக்கும் போது இக்காட்சியைக் கண்டிருக்க வேண்டும். இந்தச் செக்கர் வானம் செம்மேனி அம்மானை நினைவூட்டி யிருக்க வேண்டும். அதனாலன்றோ 'பொன்னார் மேனியனே' என்று எடுத்துப் பாடியுள்ளார்.'' என்று மகிழ்ச்சி மீதூரப் பேசுகின்றார். உடன் இருந்த அன்பர்கள் எல்லாம் மெய்ம்மறந்து கேட்கின்றனர். இந்த அனுபவத்தைத் தொடர்ந்து பெற விரும்பினர். அதன் விளைவாகத் தோன்றியதே அப்பர் அருள் நெறி மன்றம்.

அப்பர் அருள்நெறி மன்றம்

அப்பர் அருள்நெறி மன்றம் 10-10-1969 -இல் தொடங்கப் பெற்றது. டி.வி.ஆர். மாணிக்கம் பிள்ளை தலைமைப் பொறுப்பேற்றார்.

(செயலர் - மா. திருநாவுக்கரசு, ராமையாப் பிள்ளை; பொருளாளர் - மாணிக்கத்து உடையார்)

பண்ணாராய்ச்சி வித்தகர் தன் ஆயுள் காலம் வரை தொடர்ந்து பெரிய புராணம், சேக்கிழார் பிள்ளைத் தமிழ், திருவிளையாடற்புராணம் விளக்க உரை கொடுத்து வந்தார். வாரவழிபாடு, பிரதோஷ வழிபாடு, சதயவிழா நடத்து கின்றனர். பெரிய புராண நிறைவு நாளன்று அதன் நினைவாகத் திருமழ பாடித் திருக்கோயில் பன்னிரு திரு முறைக் கல்லெழுத்து வெட்டச் சொல்லி அமைத்துள்ளனர். அக்கல்லெழுத்துப் பாடல்களைத் தொகுத்து ஒரு நூலாகவும் தந்துள்ளனர்.

திருவூடல்

திருமுறைத் தொகுப்பின் தனிச்சிறப்பு ''திருவூடல்'' என்ற பகுதியாகும். இறைவனுக்கும், இறைவிக்கும் நிகழ்ந்த ஊடல் விளையாட்டினை, தேவாரத் திருப்பதிகங்களைக் கொண்டே திருக் கோயில்களில் திருவாதிரைப் பெருவிழா வில் நிகழ்த்துவது வழக்கம். இவ் விழாவிற்குரிய உரைநடை திருப்பதிகத் தொகுப்பு முதலானவை அந்தந்தத் தல ஓதுவார்களிடம் உள்ள ஏட்டுச் சுவடிகளில் இருக்கின்றன. திருமழபாடித் திருத் தலத்தைப் பொறுத்த வரையில் ஓர் ஏட்டுச் சுவடி ஓதுவார் மீனாட்சி சுந்தரம் பிள்ளை திருவூடல், திருவெம்பாவை, தேவாரத் திருப்பதிகம் என ஏட்டின் மேல் எழுதப் பெற்று, சி. இரத்தினம் பிள்ளை அவர்களால் மார்கழித் திருவாதிரையில் ஓதிவரப் பெற்ற வழக்கமாக இருந்தது. அவரது பெயரர் ந. மகாலிங்கம் அவர்களிடமிருந்து பெற்று அருள்நெறி மன்றம் அச்சிட்டு வெளியிட்டுள்ளது. இது ஓர் அரிய கருவூலம் ஆகும்.

திருவூடல் நிகழ்முறை

மார்கழித் திருவாதிரை.... திருவீதி வலம் வந்தபின் பெருமானை நிறுத்தி இறைவியைத் திருக்கோயிலுக்குள் எழுந் தருளச் செய்து கதவடைக்கும் பொழுது

''சதுரம் மறை'' என்ற பாடலைப் பாடுதல்.

அம்மன் சந்நிதியில் நின்று கொண்டு திருவூடல் வாசித்தல்

''திருந்த மாதவம்'' ஓதுதல்.

நம்பியாரூரரை இறைவி சந்நிதியில் எழுந்தருளுவித்து இறைவி கூறுதல்;

''சூழும் கங்கை நதி முடித்தார்.
இன்று காளியுடன் நடித்தார்.
தாழுங்குழல் மண்டோதரியைச் [கங்கையை] சடையில் தரித்தார்
அத்தகையினர் சூழும் சிறை வண்டறைத்துக்
கொன்றைத் தொடையார் விடையார்
அவிழ் சடையார் வாழும் புலியூர் அம்பலவர் வருவார்.
ஆடல் வல்லார் மெல்ல வருவாரே! வருவாரே!''

நம்பியாரூர் இறைவன் சந்நிதிக்கு வருதல் (அடியார்கள் ஓத வேண்டும்)

''நம்பியாரூரன் வந்தான் நாவலர் நம்பி வந்தான்''

இசைக் கருவிகள் அனைத்தும் ஒருசேர முழங்குதல்.

இறைவன் முன் சுந்தரர் முறையிட, இறைவனார் சுந்தரர்க்கு அருளிப் பாடிட்டு, திருவூடல் தீர்க்குமாறு பரிவட்டம் கட்டுதல் (தல ஓதுவார்)

சுந்தரர் பாடுதல் :

''வங்கமலி கடல் நாகை'' [அப்பர்]

''பூண்டதோர் இளவானம்'' [சுந்தரர்]

இறைவன் திருவுள்ளம் பற்றிக் கூறுவதாக,

''இவையாவும் உலகமேத்தும் உணர்வினால் அன்றோ?
சுந்தரனே! இன்றைய நாளில் நம் தேவி நம் மேல் ஊடல்
கொண்டு நம்மைக் கோயிலுக்குள் புகாமல் தடுத்துத்
திருக்கதவம் அடைப்பித்துத் திருவுளக் கோபமாக!
இருக்க நாம் என்ன தாழ்வு பண்ணினோம்?''

நம்பியாரூரர் இறைவியிடம் சென்று கூறுதல்;

''செய்வதென்! சிவனே என்று.......''

என்று கூறி இறைவி சந்நிதியைச் சுந்தரர் வலம் வருதல்.

இறைவி திருமுன் சுந்தரர் : ''ஒருத்தி தன்'' (அப்பர்)

இறைவி கூற்று ''சுந்தரரே! என்னை ஒரு பாகத்தில் வைத்தார் என்றீர்! அவளை உள்ளே ஒளித்தார் என்றீர்! ஆகையினாலே என்னிலும் காண அவளே அந்தக்கரணம் ஆச்சுதல்லவா? நீரும் நல்ல தொண்டர். உம்முடைய தோழரும் பெரியவரே''

சுந்தரர் இறைவன் திருமுன்னே சென்று வணங்கி,

''மங்கை வாணுதல்''[சம்பந்தர்]

''பட்டிசைந்த'' [சம்பந்தர்]

இறைவன், ''சுந்தரரே! எல்லாரும் மனம் நடுங்க உளம் பதைபதைக்க வந்த கங்கையை எல்லா உலகமும் பிழைக்க வன்றோ, நாம் தலையில் தாங்கிச் சடையில் தரித்துக் கொண்டோம். பொல்லாத தாருகாவனத்து முனிவர்கள் நம்மையறிந்தும் போற்றாத படியினா லன்றோ அவர்களுக்கு புத்தி புகன் றோம்'' என, சுந்தரர் இறைவனை நோக்கியும் ''நீறடைந்த'' (சம்பந்தர்) இறைவனைச் சூழ்ந்த முனிவர்களை நோக்கியும் ''உள்ளவாறு'' (சம்பந்தம்) என்று பாடினார். முனிவர்கள் சுந்தரரை நோக்கி, ''எங்களுக்கு இத்துறை அறவே தெரிய வராது. நீரே தீர்த்து வையும்'' எனச் சுந்தரர் இறைவிமுன் ''கூடினார் உமை தன்னோடே'' (அப்பர்) எனப் பாடுகிறார். இறைவியின் கோபம் இன்னும் மீதூர சுந்தரர் இறைவனிடம் ''என்னால் இயலாது'' என்கிறார். ''கூடினாய்'' (சுந்தரர்) என்ற பாடல் பாடுதல். இறைவி ''கழிந்த தீயுடல்'', ''புலியின் ஈருரி'' ''உமது சொல் இங்கு செல்லாது போம்'' என்று என்னைத் தள்ளிவிட்டனர் என்கிறார் சுந்தரர்.

''எங்களுக்குள் ஏற்பட்ட ஊடலைத் தீர்த்து வைக்க உம்மைத் தவிர சிறந்த தோழரில்லை'' என்று இறைவனார் வலியுறுத்த, சுந்தரர் இறைவியிடம் செல்கிறார். ''கங்கை நீர்'' (அப்பர்) பாடலைச் சுந்தரர் பாடுதல். பலமுறை இறைவியிடம் வேண்டி விண்ணப் பித்தல். இறைவி மனம் மாறி ஊடல் தணிந்து இறைவனை வலம் வந்து வணங்குதல்.

இறைவனார் தாண்டவம் ஆடினார்.

இறைவி இறைவனார் இடப்பாகம் எழுந்தருளப் பண்ண சுந்தரர் பாடுதல்.

''இருபதமும்'' [சுந்தரர்] ''சூடினார் [அப்பர்].

தென்னாடுடைய சிவனே போற்றி

இறைவன், இறைவி திருக் கோயிலுக்குச் செல்லுதல்.

அப்பர் அருள் நெறி மன்றத்தின் இன்றைய தலைவர் திரு. எஸ். ஆர். கிருஷ்ணமூர்த்தி பிள்ளை. *(31-5-1925; திருமழபாடி; தந்தை - ராசாங்கம் பிள்ளை)*; செயலர் திரு. மா. திருநாவுக் கரசு *(10-3-1932; வைத்தியநாதன் பேட்டை, திருவையாறு அருகில்; பெற்றோர் - மாணிக்கம் பிள்ளை, அங்கம்மாள்; திருமுறைகளில் ஆழங் கால் பட்டவர்; அழகம்மை பிள்ளைத் தமிழ் முதலான கவிதை நூல்களைப் படைத்துள்ளார்.)*

திருமழபாடிச் சுந்தேரேச இயக்கம் சுற்றுப்புறக் கிராமங்களையும் ஈர்த்தது. இலந்தைக் கூடம், பாளையார் பாடி, கீழப்பழூவூர், காரப்பாக்கம், புள்ளம் பாடி, லால்குடி என்று விரிந்தது. ஊருக்குப் பத்துப் பேராவது திருமழ பாடிக் கூட்டங்களில் கலந்து கொண் டனர். புள்ளம்பாடி, கீழப்பழூவூர், லால்குடி ஆகிய ஊர்களில் திங்கள் தோறும் சுந்தரேசனாரின் பெரியபுராண உரை நிகழ்ச்சிகள் நடக்கலாயின. திருமழபாடி அன்பர்கள் தவிர இவ்வியக்கத்தில் தீவிர ஈடுபாடு காட்டியவர்கள்: புள்ளம்பாடி திரு.

முத்துசாமி உடையார் (ஜவுளிக்கடை), காரப்பாக்கம் திரு. ராமையா பிள்ளை, கீழப்பழுவூர் திரு. இரத்தின சபாபதி பிள்ளை ஆகியோர் ஆவர்.

இரத்தினசபாபதி பிள்ளை



கீழப்பழுவூர் நல்லாசிரியர் (வயது : 90; பேரூர்; உலகநாதர் - அம்மாக்களம்) திரு. இரத்தினசபாபதி பிள்ளை முழுநீறுபூசிய காட்சியர்; இளநகை படர்ந்திருக்கும் திருமுகத்தில் இருப்பது நரைத்திருக்கும் தாடியா? நகைத் திருக்கும் தாடியா? உழவாரப்பணி, திருவாசக முற்றோதல் - இவர் ஆற்றும் பணிகள்.

சுந்தரேசனார்க்காகவே திருஞான சம்பந்தர் அறநெறி மன்றத்தினை 1927-இல் தொடங்கி பெரிய புராணத் தொடருரை நிகழ்த்தச் செய்தார். நால்வகைச் சாதியிலிருந்து நான்கு பெண் குழந்தைகளைத் தத்தெடுத்து ஆளாக்கி மேல் நிலைக்கு உயர்த்திய மனித நேயர். சேமிப்பு நன்னிதியை அறக்கட்டளை யாய் நிறுவியுள்ளார். மணி மன்றம் தோற்றுவித்துச் செந்தமிழ் வித்தகர்க்குப் பொற்கிழி வழங்கி வருகிறார்.

50. அரியலூர்

1934-42 ஆண்டுகளில் அரியலூர் உயர்நிலைப் பள்ளியில் திரு. அ. நடேச முதலியார், திரு. க. முருகேச முதலியார், திரு. அ.மு. சரவண முதலியார் ஆகியோர் பணியாற்றி வந்தார்கள். தமிழால் ஆட்பட்ட இம்மூவரின் மாணவரான வேளூர் கிராமத்தைச் சேர்ந்த குமரவேலு என்பவர் வெள்ளூர் கிராமத்தில் 21-12-1942-இல் மணிவாசக மன்றத்தைத் துவக்கினார். 6,7-7-1934-இல் அ.மு. சரவண முதலியார் மன்றத்தின் தொடக்க உரை ஆற்றினார்கள். 18-8-1945 வரை வெள்ளூரிலேயே மன்றம் நடைபெற்று வந்தது.

19-8-1945-இல் மன்றம் அரியலூர்க்குக் கொண்டு வரப்பட்டது. சிறந்த அறிஞர் களைக் கொண்டு மாத சொற்பொழிவு களும் ஆண்டு விழாக்களும் நடத்தப் பட்டன. திருவெம்பாவை, கந்தபுராண தொடர் விரிவுரைகளும் நிகழ்ந்தன. அ.மு. சரவண முதலியாரின் ''அழுது அடியடைந்த அன்பர்'', அ. நடேச முதலியாரின் ''மணிவாசகர் மணி மொழிகள்'' முதலான ஆறு நூல்கள் வெளியிடப்பட்டன. 19-8-1972-இல் நடைபெற்ற வெள்ளிவிழாவில் வெளி யிடப்பட்ட வெள்ளிவிழா மலர் 91 சான்றோர்களின் கருத்துகளையும், இரு நூறு பக்கங்களையும் கொண்ட அரிய கருவூலம் ஆகும்.

51. குளித்தலை

இராமலிங்க சுவாமிகள்



''தனியொரு ஆன்றோரால் செம்மாந்த நிலை'' - குளித்தலைச் சைவத்தின் பண்பாக அமைந்துள்ளது. ஆம்.

முத்தமிழ்ச் சைவ மாமணி, சித்தாந்த வித்தகர், சைவசித்தாந்த சரபம், சோதிட சிகாமணி சு. இராமலிங்க சுவாமிகளே அத்தகைய சிறப்புமிக்க ஆன்றோர் ஆவார்.

குளித்தலையில் மட்டும் அப்பர் வழிபாட்டுமன்றம், திருஞானசம்பந்தர் திருக்கூட்டம், சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருக்கூட்டம், மாணிக்கவாசகர் சன் மார்க்க சங்கம் என நால்வர் பெரு மக்களின் பெயரில் நல்ல சிவனடியார் களை உருவாக்கி நான்கு அமைப்பு களிலும் வாரந்தோறும் புராண விரிவுரை செய்து வருகின்றார். குளித்தலை வட்டத் தில் சுவாமிகள் ஏராளமான சிவனடியார் களை உருவாக்கியுள்ளார். ஞானாசிரியர் களைக் கொண்டு 500 பேருக்கு தீக்கை செய்து வைத்துள்ளார். குளித்தலை கடம்பந்துறையில் 12 ஆண்டுகளாகவும் (ஒவ்வொரு வாரம்) திருச்செங்கோட்டில் 10 ஆண்டுகளாகவும், கரூர் பசுபதீசுவரர் ஆலயத்தில் 40 ஆண்டுகளாகவும் (ஒவ் வொரு மாதமும்) சமய விரிவுரை ஆற்றி வருகிறார்.

சுவாமிகள் பன்னிரு திருமுறைகள், பதிநான்கு சாத்திரங்கள், புராணங்கள் ஆகியவற்றை முழுமையாகக் கற்றுத் தேர்ந்தவர். ஆயிரக்கணக்கான பாடல் களுடன் கடல்மடை திறந்தாற்போல பேசுகிறார். இத்தனைக்கும் சுவாமிகள் பள்ளிக்கூடம் சென்றதே இல்லை.

திருமுறைப் பாடல்களைப் பண் ணோடு பாடுகிறார். நாங்கள் சென்ற சமயம் ''பால் நினைந்தூட்டும் தாயினும்'' என்ற திருவாசகப்பாடலை நெஞ்சுருகப் பாடினார். சுவாமிகளின் மகனார் மாணிக்கவாசகனும் ''நன்றுடை யானைப்'' பாடலை இனிமையாகப் பாடினார். குடும்பமே சிவக்குடும்பம்!

சுவாமிகள் தேவகோட்டை (சுவாமி கள்) தத்புருஷ தேசிகரிடம் நிருவாண தீக்கை பெற்றவர். சுவாமிகளின் குடும்பமே தீக்கை பெற்றுள்ளது.

நாங்கள் சென்ற சமயம் குளித்தலை கோயிலில் உரையாற்றிக் கொண்டு இருந்தார். என்ன குரல்வளம்! புறம் போகாத கருத்து வெள்ளம்! பரவசமான நிலையில் தன்னை மறந்த சிரிப்பு! சுவாமிகளின் உரையை செவிமடுத்தல் ஓர் இன்ப அனுபவமே!.

(பிறந்த ஆண்டு - 27-7-1945; வசிக்கும் ஊர் - சீதம்பட்டி, குளித்தலை; பெற்றோர் - சுப்பிரமணிய ஆச்சாரி, வீரம்மாள்)

அப்பர் வார வழிபாட்டு மன்றம்

கூலிக்குப் போகிறவர்கள், படிப்பறி வில்லாதவர்கள், கிராமவாசிகள், உறுப் பினர்களாயிருப்பது இம்மன்றத்தின் தனிச் சிறப்பு ஆகும். இம்மன்றம் 12 வருடமாகச் செயல்பட்டுவருகிறது. வீரப்பன், சிதம்பரம்பிள்ளை ஆகியோர் தொடக்ககால அமைப்பாளர்கள் ஆவர். தற்போதைய தலைவர் P. ஆறுமுகம் ஆவார். சனிக்கிழமை தோறும் தேவாரம் பாடிக் கடம்பரை வழிபடுகின்றனர். திருவாசகம், பெரியபுராணம், திருவிளை யாடற்புராணம், திருவாதவூரடிகள் புராணம், கந்தபுராணம், அருணாசல புராணம் வரை நிறைவு செய்திருக் கிறார்கள்.

ஒவ்வொரு புராணமும் நிறைவு பெற்றவுடன் நடக்கும் நிறைவு விழாவே ஒரு கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். 200 பேருக்கு மேல் வருவார்கள். விழாவிற்கு வரும் அத்தனை பேரும் தீக்கை பெற்றவர்கள். பெரும்பான்மையோர் பெண்கள் ஆவர். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு தலத்து இறைவர் ஆத்மநாதராக இருப்பர். ''குளித்தலைக் கடம்பர், சிராப்பள்ளி தாயுமானவர் என்று 274 பாடல்பெற்ற தலங்களின் இறைவர்களை ஒருசேர எங்கள் குளித்தலையில் வழிபடலாம்'' என்று மகிழ்ச்சியோடு சொன்னார்கள்.

நாங்கள் கடம்பரை வழிபடச் சென்ற போது இரண்டு இளைஞர்கள் உருத்தி ராக்கம் அணிந்து திருநீறு பூசிய நெற்றி

யுடன் அமர்ந்து பேசிக் கொண்டிருந் தார்கள். அப்பொழுதுதான் அருணாசலப் புராணம் நிறைவு விழாவினைத் திருவண்ணாமலையில் நடத்திவிட்டு அவ்விழா பற்றி பேசிக்கொண்டிருந் தார்கள். என்னுடைய வழக்கமான கேள்வியை ''இங்கே ஏதேனும் சைவ அமைப்பு இருக்கிறதா?'' அவர்களிடம் வீச அவர்கள் மனமகிழ்ந்து மன்றத் தலைவர் ஆறுமுகம் இல்லத்திற்கு அழைத்துச் சென்றார்கள். ஆறுமுகமும் அவரது துணைவியாரும் தீவிர சைவம். ''உள்ளேன் உனையல்லால் பிற தெய்வம்'' எனும் கொள்கை உறுதிப் பாடு உடையவர்கள். ஆறுமுகம் போக்கு வரத்துக் கழகத்தில் ஓட்டுநராக பணி புரிகின்றார். வீட்டிற்குப் பெயரே ''திருநாவுக்கரசர் இல்லம்'' அட ஓர் அப்பூதியடிகள்!

குளித்தலையில் உள்ள பிற சைவ மன்றங்கள் வருமாறு

1] **திருஞானசம்பந்தர் திருக்கூட்டம்:** தோற்றம் 2002, தலைவர் - கௌதமன்; பணி - பெரியபுராண வகுப்பு.

2] **மாணிக்கவாசகர் சன்மார்க்க சங்கம்:** தோற்றம் 2002, தலைவர் - ஸ்ரீதர், பணி - திருவாதவூரடிகள் புராணம்.

3] **சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருக்கூட்டம் :** தோற்றம் - 2002; தலைவர் - தங்கராசு; பணி - கந்த புராணம், 150 பேருக்குச் சிவதீக்கை.

முன்பு இருந்து 10 ஆண்டுகள் செயல்பட்டு இப்பொழுது செயல்படாது இருக்கும் மன்றங்கள் வருமாறு:

லாலாபேட்டை கண்ணப்பர் திருக் கூட்டம், மகாதானபுரம் திருஞான சம்பந்தர் திருநெறிய கூட்டம்.

(நேர்காணல் - குளித்தலை அன்பர்கள்)

52. புதுக்கோட்டை

சாயிமாதா சிவபிருந்தா தேவி

''நான் அவன்'' என்பது வேதாந்தம்.



(அஹம் ப்ரும்மாஸ்மி - நான் பிரமமாக இருக்கிறேன்)

''அவன் நான்'' என்பது சித்தாந்தம்.

(தத்துவமசி - அது நீயாக இருக்கிறாய்)

இரண்டிற்கும் உள்ள வேறுபாட்டைத் தெரிந்து கொள்ள வேண்டும். நான் நினைத்தவுடன் இறைவனாகி விட முடியாது. இறைவன் நினைத்தால் யாராகவும், எவராகவும் பேராசிரியர் லிந்தோமைப்போல, மாணவி ஷாலியைப் போல, மொழி பெயர்க்கும் டாக்டர் பாலாவைப் போல யாரைப் போலவும் இரங்கியும் வரலாம்; இறங்கியும் வரலாம்; இதனைத் தான் ''சைவ சித்தாந்தம்'' ''அவன் நான்'' என்று சொல்லுகிறது. ''அவன் நான்'' என்பதை உணர்ந்து கொண்ட அனுபூதி பெற்ற அருணகிரிப் பெருமான் அழகுத் தமிழில் தமது திருப்புகழில்

''சோதி உணர்கின்ற வாழ்வு சிவமென்ற
சோகமது தந்து எனை ஆள்வாய்''

என்றார். இங்கு சோகம் என்றால் துக்கம் என்று பொருள் அல்ல.

ஸ - அது; அஹம் - நான்.

''அது நான்'' என்றுணரும் பெரிய நிலையைத் தான், தன் திருப்புகழில் சந்தப் பாவில் சொந்தம் கொண்டு கந்தன் கருணையை நமக்குப் புரிய வைக்கிறார்.

இத்தனை உயரிய, அரிய கருத்து தமிழ் நாட்டில் எத்தனை சைவர்களுக்குத் தெரியும்? திருமந்திரத்தில் தத்துவமசி மகாவாக்கியம் என்று வருகிறதே ஒழிய ஒருவருக்கும் புரிவதில்லை. இந்த அரிய விளக்கத்தை ஒருவர் விளக்குகிறார். அதுவும் தமிழ் நாட்டில் அல்ல; விவேகானந்தர் வீரமுரசு கொட்டிய சிகாகோ நகரில் பல்கலைக் கழகத்தில் இவ்வாறு விளக்கியவர் ஒரு பெண் துறவி. ஆம். அருள்மிகு சாயிமாதா பிருந்தாதேவி அவர்கள்.

அதே சிகாகோ நகரில்.....

அன்று ஓர் ஆண் துறவி.

இன்று ஓர் பெண் துறவி.

சிகாகோ தமிழ் இலக்கிய மன்றத்தில் - ''ஆலயம்'' நியூயார்க் கோயிலில் - ''கணபதி தத்துவம்'' பால்டிமோர் தமிழ் கலாசார மன்றம் - ''தமிழர் பண்பாடு'' இது முழுக்க முழுக்க சங்க இலக்கியம் நியூயார்க் பாரதி சொசைடியில் ''பாரதியார்'' பிட்ஸ்பார்க் வெங்கடேஸ் வரர் ஆலயத்தில் ''தசாவதாரம்''

''எத்தனை மாறுபட்ட தலைப்புகள்!

என்ன ஒரு சிந்தனை வளம்!

அனைவரையும் ஈர்க்கும் சொல் வன்மை!

மேரிலாண்ட் தமிழ் கலாசாரக் கழகத்தில் ''கலையாத கல்வியும்'' என்ற அபிராமி அந்தாதி பாடலுக்கு விளக்கம்; அப்படியே அமெரிக்க உதாரணங்களை வைத்து விளக்கினார்.

''கலையாத கல்வி என்பது அமெரிக்க நாட்டில் என்னால் காண முடிகிறது. ஒன்றை ஆராயப் புகின் இடையில் என்ன தடை வரினும் ஆராய்ச்சியை நிறுத்தா மல் முற்றிலும் செய்து முடித்து நிலை நாட்டுகின்ற கல்வியே கலையாத - நிலைகுலையாத - விலைமதிப்பற்ற கல்வி. அதுவே சாகாக் கல்வியாக - வேகாக் கல்வியாக - ஆகி மனிதன் இறந்த பின்னரும் அவனது கண்டு பிடிப்பு மரணமில்லாத பெருவாழ்வை அவனுக்கு நல்குகிறது.

குறையாத வயது - தொண்ணூறு, நூறு வயதிற்கும் கூட அமெரிக்காவில் இருப்பவர்கள், நல்ல திடகாத்திரத்துடன் ஓடியாடி உழைப்பதோடு சுறுசுறுப்பாக இருப்பதும் நாம் கண் கூடாகக் காணும் காட்சி.

''கபடு வாராத நட்பு'' - நின்று இருந்து கலந்து பேசினால் தானே வம்பு, தும்பு, சூது வாது, கள்ளம், கபடு எல்லாம் தெரியக் கிடக்கிறது? அமெரிக்காவில் ஒருவரையொருவர் எவ்வளவு வேண்டிய வராக இருந்தாலும், ஓடுகின்ற ஓட்டத் தில் ''ஹாய்'' என்று கையைத் தூக்கி விட்டு ஓடும்போது, கபடு எங்கே நட்பிற்கு வந்து களங்கம் விளைவிக்கப் போகிறது.

இப்பெரு நாட்டில் குன்றாத வளமை இருக்கிறது. குன்றாத இளமை இருக்கிறது. கழுபிணிக்கு இடமே இல்லை. 6½' உயரம் 3½" அகலம், ஆஜானு பாகுவான தோற்றம் - துளியும் நோய் நொடியில்லை.

சலியாத மனமும், அன்பு அகலாத மனைவியும் தேடிப் பார்த்தால் கிடைக்குமோ என்னவோ? உப்புப் பெறாத விஷயத்திற்கு விவாகரத்துக் கோரும் தன்மையில் அன்பகலாத மனைவி எங்கேனும் மூலைக்கு ஓரிருவர் இருக்கலாமோ என்னவோ? சலித்துக் கொண்டே இருக்கும் மனத்திற்கு நிம்மதியில்லாமல் பலர் ஏங்குகிற காட்சியும் காண முடிகிறது.

தவறாத சந்தானம் - தகப்பனின் வார்த்தை தவறாத பிள்ளை. இது அமெரிக்காவில் கொஞ்சம் கஷ்டமாகத் தான் இருக்கிறது. மகன் இம்பாலா காரிலே போவார். தகப்பன் வீதிவழியே நடந்து வந்தாலும் தன் வழியிலே இம்பாலாவில் செல்லுகிற சத்புத்திரர் களும் உண்டு.

''தாளாத கீர்த்தி'' உடைய அமெரிக்கர்கள் பலருண்டு. விஞ்ஞானத்திலே, வியாபாரத்திலே, சுறுசுறுப்பிலே உயர்ந்து வளர்ந்து தாளாத கீர்த்தி பெற்றோர் பலருண்டு.

''மாறாத வார்த்தை'' கொண்டவர்கள் இந்த நாட்டிலே ஏராளம் - ஏராளம்? உண்டு என்றால் உண்டு. இல்லையென்றால் இல்லை. எந்த வகையான சிபாரிசுக்கும் இடமில்லை. சட்டத்தின் படி எல்லாம் திட்டமாகவே நடக்கும்.

''தடைகள் வாராத கொடை'' - அமெரிக்காவில் நிரம்ப இருக்கலாம். எனக்கு நேரடி அனுபவம் இல்லை.

''தொலையாத நிதியம்'' - நிதி என்றால் ஒரு நாள் வரும். ஒருநாள் போகும். எனவே தொலையாத நிதியம் என்பது எது என்று எண்ணுமிடத்துத் தான தருமங்கள் செய்த நிதியம் - அதனால் வரும் புண்ணியப் பேறு பெற்ற திருநாட்டில் நடுநிலை குன்றாத நல்லாட்சி நடைபெறும். அப்படிப்பட்ட நாட்டில் வசிக்கும் மக்களுக்கு எவ்விதத் துன்பமும் வாராது.

அம்மையார் அவர்கள் தக்க நயங்களோடும் மேற்கோள்களோடும் பேசியதும் - சுருக்கமாகவும் தெளிவாகவும் பேசியதும் – பலருக்கும் உள்ளத்தை நல்லபடி தொட்டது. அம்மையார் உரை முடிந்தவுடன் எழுந்த கரவொலி நிற்கவேயில்லை.

கேள்விகளுக்கும் குறைவில்லை. கர்மா பற்றியும், வினை பற்றியும் பற்பல நுணுக்கமான கேள்விகளை அமெரிக்க அன்பர்கள் கேட்டார்கள். ''நான் எப்போதோ முன்னொரு பிறவியில் தப்பு செய்தேன். இருநூறு முன்னூறு ஆண்டுகள் கழித்து அல்லது எப்போதோ நான் மறுபடியும் பிறக்கிறேன். அப்போது செய்த தவறு என்னவென்று இப்போது எனக்குத் தெரியவும் தெரியாது. இப்போது நான் வேறு ஓர் ஆளாகப் பிறந்திருக்கிறேன். ஆனாலும் முன் செய்தவினைக்கு நான் இப்போது ஏன் ஆளாக வேண்டும்? என்று ஓர் அன்பர் கேட்டார்.

''காலையில் டாக்டர் கமலேஸ்வரி எனக்கு அன்புடன் - ஆசையுடன் - நெய் தோசை சுட்டுத் தந்தார்கள். ஒரு தோசை தான் சாப்பிட்டேன். காலையில் 8 மணிக்குச் சாப்பிட்ட அந்த ஒரு தோசை, பிறகு 3 மணிக்கு மேல் ஆகியும் ஜீரணமாகவில்லை. குடலை என்னவோ படுத்துகிறது. இது எப்போது ஜீரணமாகுமோ தெரியாது. ஜீரணமாகும் வரை நான் துன்பப்பட்டுத்தான் தீரவேண்டும். முன் எப்போதோ செய்தது தானே என்று எதையும் நாம் ஒதுக்கிவிட முடியாது. வினை என்பது இயற்றப்பட்ட அளவிற் கேற்பத் தொடர்ந்து வந்து நல்லதை செய்திருந்தால் நற்பயனையும், தீயதை செய்திருந்தால் தீய பயனையும் அளித்தே தீரும் என்பது சாத்திரம் கண்ட - சரித்திரமும் கண்கூடாகக் கண்ட பேருண்மை'' என மேற்கொள்களுடன் அம்மையார் பதிலளிக்கவும் அனைவர்க்கும் ஒரே மகிழ்ச்சி.

இவ்வாறு 1978 நவம்பர் 18-இல் தொடங்கிய அமெரிக்கப் பயணம் 1979 ஜனவரி 1-ஆம் தேதி நிறைவுக்கு வந்தது.

சென்ற இடமெல்லாம் இனிமையான தமிழில் அழகுற பல்வேறு வேறுபட்ட தலைப்புகளில் பேசி அம்மையார் அவர்கள் அமெரிக்கத் தமிழர்கள் உள்ளங்களைக் கொள்ளை கொண்டார்கள்.

அமெரிக்கா மட்டுமன்று; 1987-இல் மலேசியாவில் 6-ஆம் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு; 1991-இல் சிங்கப்பூர் மலேசியாவில் திருமுறை மாநாடு; 15-11-85-இல் நியூயார்க் அருகில் உள்ள நியூ ஜெர்சியில் உலக சமய ஒருங்கிணைப்புக் கழக முதல் மாநாடு; 1986-இல் மேற்கு ஜெர்மனி பாட்நாகிம் நகரில் உலக சமயங்களின் மாநாடு. 1960-இல் இலங்கையில் முதல் பயணம் மேற்கொண்டு தொடர்ந்து பல முறை சென்றமை; 1960-61-இல் சிங்கப்பூரில்

ஹேப்பி வேர்ல்டு ஸ்டேடியத்தில் முப்பதாயிரம் மக்களுக்கு முன்னே தமிழின் சிறப்பு பற்றி உரையாற்றியது; என உலக நாடுகளைத் தன் பேச்சுத் திறத்தாலே பாலித்திட்டார்கள் அம்மையார்.

வெளிநாடுகளில் சங்கநாதம் முழங்கிய அம்மையார் தமிழ் நாட்டிலும் பல இடங்களில் உரையாற்றியிருக்கிறார். உரையாற்றியதோடு நிறுத்தாமல் ''மனிதன் எங்கேயோ போகிறான்'', ''இந்து மதம்'', ''மனிதனும் தெய்வ மாகலாம்'' போன்ற நூல்களும், இதழ்கள், தீபாவளி மலர்களுக்குக் கட்டுரைகளும் எழுதியுள்ளார்கள். முதல் வகுப்பு முதல் 5-ஆம் வகுப்பு வரை மாணவர்களுக்குப் பாடநூல்களும் எழுதியுள்ளார்கள். பேச்சைப் போலவே எழுத்தும் ஆழமானது; அழகுடையது.

நான் யார்?

நான் என்பது என்ன? அது என்னுடைய கையா? காலா? நரம்பா? எலும்பா? தசையா?

வெங்காயத்தினுடைய தோலை உரிக்க உரிக்கத் தோலே தான் வரும். விதை காண முடியாது. அதுபோல நான் என்பதை ஆராயப் புகுந்தால் எதுவும் கிடைக்காது.

''யானாகிய என்னை விழுங்கி வெறும்
தானாய் நிலை நின்றது தற்பரமே''.

என்பார் அருணகிரிநாதர்.

நான் என்ற ஆணவம், மிடுக்கு, செருக்கு, அற்றுப்போக வேண்டும். அப்போது இறைவன் இறங்கியும் வருவான்; இரங்கியும் வருவான்.

''Who Know not the soul
Know not the Lord''

எவன் தன்னை அறியவில்லையோ அவன் தலைவனையும் அறியமாட்டான்.

''தன்னையறியத் தனக்கொரு கேடில்லை
தன்னையறியாமல் தானே கெடுகின்றான்
தன்னையறியும் அறிவை அறிந்த பின்
தன்னை அர்ச்சிக்கத் தானிருந்தானே''

இந்த சீவன் சிவனாகின்ற நிலை இது.

(''மனிதனும் தெய்வமாகலாம்)

எவ்வளவு ஆழமான தத்துவம்! அம்மையாரால் எளிமையாக விளக்கப் படுகிறது.

''சர்வ சமய சமரசப் பிரார்த்தனை'' என அம்மையார் 'அமுதசுரபி' தீபாவளி மலரில் ஒரு கட்டுரை எழுதியிருந்தார். இருக்கு வேதம், பிருஹதாருண்யா உபநிடதம், க்ரீக் மொழியில் உள்ள கிறிஸ்துவப் பிரார்த்தனை, அரபிக் மொழியில் குரானில் உள்ள இஸ்லா மியப் பிரார்த்தனை, ஆப்பிரிக்கப் பரம் பரை ஜீம்பாவின் சமயம், இரானியன் மொழியில் உள்ள ஜெராஸ்டரானியன் பிரார்த்தனை, ஹீப்ரு மொழியில் உள்ள ஜுடாயிஸம், பாலி பாஷையில் உள்ள பௌத்தம், சீன மொழியில் உள்ள தாவோயிஸம் - என அனைத்து சமயக் கருத்துகளையும் கொண்டு எழுதப்பட்ட அற்புதக் கட்டுரை!

இனி அம்மையாரின் முழு வரலாற் றினைப் பார்ப்போம்.

1927-இல் புதுக்கோட்டையில் சிவ ராம நட்டுவனார்க்கும் - நல்லம்மாளுக் கும் கடைசிப் புதல்வியாக பிருந்தா வனம் பிறந்தார். இளவயதிலே அம்மை நோய் பீடித்தமையால் கண் பார்வையும் போய், காலும் நடக்க முடியாமல் போய் விட்டது. எனவே படிப்பு உயர்நிலைப் பள்ளியில் தடைப்பட்டது. அந்த நேரத்தில் வீட்டில் உள்ள நூல்களையும், ஊரில் உள்ள நூல்களையும் படித்து முடித்துவிட்டார். திருமுறைகளையும் ஓதிவந்தார். ஒரு நாளைக்கு 100 பக்கங்கள் படிப்பதும் 10 பக்கங்கள் எழுதுவதும் பழக்கமாகி விட்டது. ஒரு நூல் நிலையம் வைப்பதற்குரிய நூல்கள் அம்மையாரிடம் சேர்ந்து விட்டன. சாயிமாதா தனது இருபத்தோராம்

வயதிலேயே மேடை ஏறிவிட்டார். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தத்துவப் படிப்பு வகுப்பில் சேர்ந்து இந்திய தத்துவ தரிசனங்களைக் கற்று முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றார். அதன் பிறகு தருமையாதீன சைவ சித்தாந்தப் பயிற்சி வகுப்பில் சேர்ந்து முத்து சு. மாணிக்க வாசக முதலியாரிடம் சாத்திரமும், வச்சிரவேல் முதலியாரிடம் தருக்கமும் கற்றார். பண்டிதமணி கதிரேசன் செட்டியாரை எங்கெங்கு சந்திக்கிறார் களோ அங்கெல்லாம் அவர்களிடம் சாத்திர தோத்திர நுட்பங் களையும் கேட்டறிந்தார்.

புதுக்கோட்டையில் டாக்டர் ராஜ ரத்தினம் பிள்ளை அவர்களைத் தலைவ ராகக் கொண்டு தாமும் கணித ஆசிரியர் வி.கே. ராஜகோபால் அய்யரும் செய லாளர்களாக இருந்து வார வழிபாட்டுக் கழகம் துவங்கி பல மடாதிபதிகளையும், பல பேராசிரியர்களையும் பேசச் செய்ததோடு, தத்புருஷ தேசிகரைக் கொண்டு 52 வாரம் சிவஞான சித்தியார் வகுப்பும் நடத்தச் செய்து நிறைவு விழாவும் நடத்தினார். பல ஆண்டுகள் வார வழிபாட்டுக் கழகம் புதுக்கோட்டையில் சமயப் பணியாற்றி வந்தது. அதனைத் தோற்றுவித்து நடத்தியது அம்மையாரின் ஆரம்பத் தொண்டாகும்.

அதன் பிறகு மாதர் சங்கம் நிறுவினார். காங்கிரஸ் பேரியக்கத்தில் சேர்ந்தார். *1957*-இல் புதுக்கோட்டையில் மகளிர் இல்லம் என்ற அநாதை ஆசிரமத்தை நிறுவினார். சமுதாயம், அரசியல் என அம்மையாரின் கவனம் பொது வாழ்வின் பக்கம் தெரிந்தது. இதன் நடுவே இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் சென்று சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்.

அச்சமயம் ஸ்ரீலஸ்ரீ விபூதி சாயிபாபா சுவாமிகள் புதுக்கோட்டைக்கு வருகை தந்தார். அவர்களிடம் சாயிமாதா, ''எனக்கு என்ன வேண்டும் என்று தெரிய வில்லை சுவாமி! மனம் என்னவோ தவிக்கின்றது. காணாத ஒன்றைக் காண வும், கேளாத ஒன்றைக் கேட்கவும் ஆசை யுறுகிறது. இது எதனால் என்பதும் தெரியவில்லை'' என்றார். சுவாமிகள், ''நீ தயாரா? என்று கேட்டார். ''இப்போதே சித்தம்'' என்றார். அம்மையார் சந்நியாசத்திற்கு நாள் குறிக்கப்பட்டது.

14-2-1971 அன்று பகல் *11-15* மணிக்கு ஸ்ரீவிபூதி பாபா சுவாமிகளின் திருக் கரத்தால் சந்நியாச வைபவம் நடத்தி வைக்கப் பெற்றது.

1978-இல் அமெரிக்கா சென்றார். *1981*-இல் புதுக்கோட்டையில் அம்மை யார் அவர்கள் நடத்திய மூன்று நாள் உலக சமய மாநாட்டில் தருமபுரம், தொண்டை மண்டலம், திருப்பனந்தாள், குன்றக்குடி, பேரூர் ஆகிய திருமடங் களின் குரு மகா சந்நிதானங்களும், இலங்கை, மலேசியா, தமிழ் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து அறிஞர் களும், ஆன்றோர்களும் வந்து கலந்து கொண்டனர். புதுக்கோட்டை நகர சமய வரலாற்றில் ஓர் புதிய அத்தியாயம்.

30-6-1983 – புதுக்கோட்டை நகர வரலாற்றில் புகழார்ந்த புதிய அத்தி யாயம் உதயமான திருநாள்! ஆம்! சைவ சமய வரலாற்றில் ஓர் முக்கிய திருநாள்! ஆன்மிகப் பணியினைச் சிறப்பாகச் செய்து வந்த அன்னை சாயிமாதா சிவபிருந்தா தேவி திலகவதியார் திருவருள் ஆதீன அருளாட்சியின் பொறுப்பையேற்ற அற்புத நாள். தமிழகத்தில் முதல் முறையாக ஒரு பெண்மணி ஆதீனத் திருமடத்தின் தலைவியாக ஆன நாளல்லவா அது!

உலக இந்து சமய மகளிர் முதல் மாநாட்டை கோயம்புத்தூரில் மூன்று நாட்கள் மிகச் சிறப்பாக நடத்தினார் அன்னை. *1985*-இல் அமெரிக்காவில் நியூஜெர்சியிலும், *1986*-இல் ஜெர்மனி பாட்நாகிமிலும் உரையாற்றினார். *1995*-இல் புதுக்கோட்டை ஜீவாநகரில்

அமைக்கப்பெற்ற ஷண்மத ஆலயங்களின் குடநீராட்டு விழா நடைபெற்றது.

27-11-1998 அன்று அன்னை இறைவனது திருவருட்பேறு பெற்றார்கள்.

அன்னை சாயிமாதா சிவபிருந்தா தேவியின் வரலாறு புதுக்கோட்டை நகரச் சைவ வரலாறு ஆகும்.

துணை நூல் : ''ஒரு பெண் துறவியின் சமயவாழ்வும் சமுதாய வாழ்வும்''

- தயானந்த சந்திரசேகரன்.

53. செட்டிநாடு

நகரத்தார் வரலாறு

பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம், புதுக்கோட்டை மாவட்டம் ஆகிய இரண்டு மாவட்டங்களில் நாட்டுக் கோட்டை செட்டியார்கள் எனப்படும் நகரத்தார் வாழும் 96 கிராமங்கள் செட்டிநாடு எனப்படும்.

நகரத்தார் கி.மு. 2898க்கு முன்பே சம்புத்தீவில் உள்ள நாகநாட்டில் சாந்தியாபுரி என்ற நகரில் வாழ்ந்து வந்ததாகக் கூறுகின்றனர். அப்பொழுது அவர்கள் கோபதீசுவர சுவாமியினை வழிபட்டு உள்ளனர். சதாசிவ குருபீடத்தில் சிவ தீட்சை பெற்றுள்ளனர். மரகத விநாயகரைப் பூசை செய்து வந்துள்ளனர். சிவாகம சித்தாந்தத்தைப் படித்துச் சைவ தீட்சையுடன் எப்போதும் விபூதியையும் உருத்திராட்ச மாலையையும் அணிந்து உள்ளனர்.

சாந்தியாபுரியிலிருந்து குடிபெயர்ந்த அவர்கள் கி.மு. 2897 முதல் கி.மு. 790 வரை காஞ்சிபுரத்தில் வாழ்ந்தனர். இங்கும் மரகத விநாயகரை வழிபட்டனர். காஞ்சியில் சக்திபுரீசுவரரை வழி பட்டனர். அருணகிரி சிவ சங்கராசாரியரிடம் சிவதீட்சை பெற்றனர்.

பிறகு காஞ்சிபுரத்திலிருந்து புறப்பட்டு கி.மு. 789 முதல் கி.பி. 706 வரை காவிரிப்பூம்பட்டினத்தில் வாழ்ந்தனர். இங்கு உருத்திராபதீசுவர சுவாமியினை வழிபட்டு உள்ளனர். சிதம்பரத்தில் உள்ள பதஞ்சலி என்னும் பகுதியில் இருந்த ஈசான குருவினிடத்தில் சிவ தீட்சை பெற்றுள்ளனர்.

பின்னர் கி.பி. 707-ஆம் ஆண்டு பாண்டியநாட்டிற்கு வந்தனர். இவர்கள் இப்போதைய பசும்பொன். புதுக் கோட்டை மாவட்டங்கள் உள்ள 96 கிராமங்களில் 18-ஆம் நூற்றாண்டு வரை வசித்து வந்தனர்.

நகரத்தார் ஒவ்வொரு பகுதியை விட்டு நீங்கிய காரணம் இவர்களது செல்வச் செழிப்பாலும், இவர்கள் பெண்களைக் கவரும் நோக்கத்தாலும் அந்தந்த பகுதிகளில் உள்ள மன்னர்கள் - நாகநாட்டு மன்னன், காஞ்சியில் பிரதாபராசன், காவிரிப்பூம்பட்டினத்தில் பூவந்திச் சோழன், பாண்டிய நாட்டில் காருண்ய பாண்டியன் – செய்த கொடுமைகளே ஆகும்.

அடைக்கலம் புகுந்த பாண்டி நாட்டிலும் அதே துன்பங்கள் தொடர்ந்தமையால் வேறு ஒரு பகுதியை நாடி அவர்கள் செல்லவில்லை. தங்கள் வாழ்வின் மையமாக அரசர்களைக் கொண்டு வாழ்ந்ததால்தான் துன்பம் ஏற்பட்டது. பொருளையே பெரிதாக மதித்ததாலேயே இன்னல்கள் ஏற்பட்டன என்ற மெய்யுணர்வினைப் பெற்றார்கள். நாம் யாருடைய குடிமக்கள் என்று ஆழமாகச் சிந்தித்திருக்க வேண்டும். சோழனின் குடிகள் அல்லர்; பாண்டியனின் குடிகளல்லர். பிறகு? நாம் தெய்வத்தின் குடிமக்களே என்பதை மனமார உணர்ந்தார்கள்.

மன்னர்களை வணங்குவதில்லை என முடிவெடுத்ததாலும், தெய்வத்தையே தங்களது மன்னராக ஏற்றுக் கொண்ட காரணத்தாலும், கோயில்களையே தமது வாழ்வின் மையமாகக் கொள்ளத் தலைப் பட்டனர். குடியிருக்கும் ஊர்களில் எல்லாம் கோயில்களைக் கட்டினர். அதனாலேயே அரசுக்கு வரிசெலுத்துவது

போன்று, கோயிலுக்கு வரி செலுத்த ஆரம்பித்தனர். தங்கள் குடும்பங்களைப் 'புள்ளிகள்' எனச் சொல்லிக் கோயிலில் பதிவு செய்து வருகின்றனர். திருமணத்திற்கான அடிப்படைப் பிரிவுகளுக்குக் (கோத்திரங்களுக்கு) கோயில் பிரிவுகளையே வைத்துக் கொண்டுள்ளனர். திருமணத்திற்கு முதலில் உரிய கோயில்களில் பதிவு செய்த பிறகே பிறருக்கு அழைப்பு அனுப்புகின்றனர். அரசனின் ஆணைபோல உரிய கோயில்களிலிருந்து மாலை வந்தால் தான் திருமணம் நடைபெறும் என விதி வகுத்துள்ளனர். நகரத்தார் மயானத்தைச் சிவன் கோயிலே நிர்வகித்து வருகிறது. பல்வேறு நாடுகளில் அவர்கள் பட்ட துன்பங்கள் அவர்களைச் சுடச்சுடரும் பொன்போல மாற்றியிருக்கின்றன. வாழ்க்கையில் உய்யும் ஒரேவழி தெய்வத்திடம் அடைக்கலம் புகுதலே என நன்கு உணர்ந்துள்ளனர். எனவே தான் நகரத்தார் முழுமையான ஈடுபாட்டோடு கோயில்களைக் கட்டுகின்றார்கள்; வழிபாடு செய்கின்றார்கள்; பேணிக் காக்கின்றார்கள்.

இவ்வாறு டாக்டர் வ. தேனப்பன் அவர்கள் ''ஒன்பது நகரக் கோயில்கள்'' என்ற நூலில் அருமையானதொரு ஆய்வு செய்து எழுதியுள்ளார்கள். காவிரிப்பூம் பட்டினத்தில் இருந்து பாண்டிய நாட்டுக்கு வந்த வணிகர்களுக்கு சவுந்தர பாண்டியனால் அரியூர் நகரமும், பிரான் மலைக் கோயிலும், சுந்தர பட்டணமும் அவ்வூர்க் கோயிலும் விட்டுக் கொடுக்கப்பட்டன. அரியூருக்கும் சுந்தரப் பட்டணத்திற்கும் சென்ற வணிக மரபினர் இளையாத்தங்குடியில் குடியேறியவர்களுடன் கொள்வினை கொடுப்பினையின்றி பிரிந்துவிட்டனர். எனவே இளையாத்தங்குடியில் குடியேறியோரின் விதிமுறையினரே நகரத்தார் என அழைக்கப்படுகின்றனர்.

நகரத்தார் கோயில்கள்

பின்பு தங்களுக்குள் ஒற்றுமைப் படாமல் எண் வகையான கூட்டத்தாராகித் தங்கள் தங்களுக்கு வெவ்வேறு கோயில்கள் விட்டுக் கொடுக்க வேண்டுமென்று பாண்டிய மன்னனைக் கேட்டுக் கொண்டனர். எண் வகைப் பிரிவினர்க்கும் தனித்தனியாக கி.பி. 712-இல் மாற்றூர்க் கோயிலையும், வயிரவன் பட்டிக் கோயிலையும் கி.பி. 714-இல் இரணியூர்க் கோயிலையும், பிள்ளையார் பட்டிக் கோயிலையும், நேமம் கோயிலையும், இலுப்பைக் குடி கோயிலையும் கி.பி. 718-இல் சூரைக்குடிக் கோயிலையும் வேலங்குடிக் கோயிலையும் பாண்டிய மன்னன் அளித்துள்ளான்.

ஒரு கோயிலிலிருந்து எட்டுக் கோயில்கள் பிரிந்ததாக மேலே கூறியனவற்றால் தெரிய வருகிறது. ஆனால் தேனப்பன் அவர்களின் கள ஆய்வின்படி ஏழு கோயில்களிலிருந்து தான் ஒன்பது கோயில்கள் தோன்றின என்கிறார். கி.பி. 1278-இல் இளையாத்தங்குடியின் ஒரு பிரிவினர் அதிலிருந்து பிரிந்து சென்று இரணியூர், பிள்ளையார் பட்டி ஆகிய இரு கோயில் பிரிவுகளைப் புதிதாகத் தோற்றுவித்துள்ளனர். இதனால் 13-ஆம் நூற்றாண்டில் ஏழு நகரக் கோயில்கள் ஒன்பது நகரக் கோயில்களாக வளர்ந்து உள்ளன. அவை வருமாறு : (1) இளையாத்தங்குடிக் கோயில் (2) மாற்றூர்க் கோயில் (3) வயிரவன் பட்டிக் கோயில் (4) நேமம் கோயில் (5) இலுப்பைக் குடிக்கோயில் (6) சூரைக்குடிக் கோயில் (7) வேலங்குடிக் கோயில் (8) இரணியூர்க் கோயில் (9) பிள்ளையார்பட்டிக் கோயில்.

சிவவழிபாடே நகரத்தார்களின் தலையாய வழிபாடு. ஆதலால் அனைத்துக் கோயில்களும் சிவபெருமானின் திருக்கோயில்கள் ஆகும். இந்த ஒன்பது கோயில்கள் தவிர நகரத்தார்கள் தங்கள் ஊர்தோறும் சிவன் கோயில் கட்டி வழிபட்டு வந்தார்கள்.

கோயில் திருப்பணிகள்

''கோயில் பழுதாகி விட்டதா? செட்டியாரைக் கூப்பிடு'' என்று கோயில்

திருப்பணிகளோடு நகரத்தார் ஒன்றி விட்டார்கள்.

1953-இல் வயிநாகரம் அ. இராமநாதன் செட்டியார் எழுதி வெளியிட்டு உள்ள ''நாட்டுக் கோட்டை நகரத்தார் வரலாறு'' என்ற நூலில் குறிப்பிட்டுள்ள படி அவர்கள் செய்த அறச்செலவுகள் வருமாறு :

		ரூபாய்
1.	ஒன்பது நகரக் கோயில்கள்	1,05,42,500
2.	சுற்றுப்புற 34 ஊர்கள்	64,92,500
3.	நகரத்தார் வாழும் 78 ஊர்கள்	3,83,14,700
4.	சோழ நாட்டுத் தலங்கள்	2,96,43,500
5.	பாண்டி நாட்டுத் தலங்கள்	95,44,500
6.	கொங்குநாட்டுத் தலங்கள்	12,41,000
7.	நடுநாட்டுத் தலங்கள்	67,35,000
8.	தொண்டை நாட்டுத் தலங்கள்	39,27,000
		10,64,40,700

(4 முதல் 8 வரை தேவாரத் தலங்கள் 123 ஆகும்)

நகரத்தார் அறப்பணிகளில் காசி, திருவண்ணாமலை, சிதம்பரம், மதுரை ஆகிய தலங்களில் செய்துள்ள அறங்கள் குறிப்பிடத்தக்கவை. காசியில் 24-8-1868 முதல் விசுவேசவரருக்குத் திருவனந்தல், உச்சிக்காலம், அர்த்தசாமம் ஆகிய முக்காலப் பூசைகளுக்குரிய பொருள் அனைத்தும் காசி நாட்டுக் கோட்டை நகரச் சத்திரத்திலிருந்து அனுப்பப் படுகின்றன. காசியிலுள்ள விசாலாட்சி கோயில் நகரத்தார்களால் புதிதாகக் கட்டப்பெற்றது. மேலே குறிப்பிட்ட கோயில் சார் அறப்பணிகள் அத்தனையும் திருவண்ணாமலை, சிதம்பரம், மதுரை ஆகிய ஊர்களில் செய்யப்பட்டுள்ளன. ஏறத்தாழ 75 ஆண்டுகளுக்கு முன்பே திருவண்ணாமலையில் 31 லட்ச ரூபாய், மதுரையில் 38 லட்ச ரூபாய், சிதம் பரத்தில் 43 லட்ச ரூபாய் - இத்தகைய அறப்பணிகளுக்காக நகரத்தாரால் செலவிடப் பெற்றுள்ளன. அண்மையில் திருக்கடவூர் அபிராமியம்மை திருக் கோயிலில் மிகப்பெரிய முன் மண்டபம், அழகிய முகப்பு மண்டபம் ஆகியன அந்நாளைய திருப்பணிபோல திரு. ஏ.சி. முத்தையா குடும்பத்தினரால் அமைக்கப் பெற்று உள்ளன.

உபதேசம் கேட்டல்

நகரத்தார் சமய வழிபாட்டிற்குக் கொடுத்திருந்த முதன்மையைக் காட்டுவது 'உபதேசம் கேட்டல்' ஆகும். சமயம், விசேஷம், நிருவாணம், ஆச்சாரிய அபிஷேகம் என்னும் நான்கு வகைத் தீட்சைகளில் தொடக்க நிலையாகிய சமய தீட்சையே உபதேசம் ஆகும். குரு திருவைந்தெழுத்தாகிய மூலமந்திரத்தைச் சீடனுக்கு உபதேசிப் பார். அது முதல் நாள்தோறும் காலை மாலை இருவேளையும் அனுட்டானம் செய்து திருநீறு பூசவேண்டும். உபதேசம் கேட்டல் நகரத்தார் இனத்தின் பெருவிழா வாகவும் இல்லத் திருவிழாவாகவும் கொண்டாடப்படுகிறது.

குருபூசை மடங்கள் அமைத்தல்

குருபூசை மடங்கள் அமைத்தலும் நகரத்தார் சமய வாழ்வில் சிறப்பிடம் பெறுகிறது. வயிநாகரம் குடும்பத்தார் ஏறத்தாழ 175 ஆண்டுகளுக்கு முன் மதுரை அறுபத்துமூவர் குருபூசை மடத்தை ஏற்படுத்தி வழிபாடு செய்து வரலாயினர். 130 ஆண்டுகட்கு முன்னர் சத்திரம் சோம குடும்பத்தினர் தேவ கோட்டை கருதாவூருணிக்கரையில் அறு பத்துமூவர் குருபூசை மடம் கட்டிப் பூசை செய்யத் தொடங்கினர். 120 ஆண்டுகட்கு முன் கட்டை முருகப்ப செட்டியார் தேவ கோட்டை எல்லையில் காட்டுத் தண்ணீர்ப்பந்தல் வைத்து அங்கு கட்டப்பெற்ற கல்மண்டபத்தில் நால்வர்

குருபூசை செய்து வழிபட்டனர். இவ்விடத்தில் பொறகிழிக்கவிஞர் காசிஸ்ரீ அரு. சோமசுந்தரன் அவர்கள் நால்வர் கோயில் கட்டித் திருப்பணி செய்து வழிபாட்டுக்கும் ஏற்பாடு செய்துள்ளார். தமிழகத்திலேயே இது தான் முதல் நால்வர் கோயிலாகும். ஏறத்தாழ இதே காலத்தில் காரைக்குடியில் நகரச் சிவன் கோயில் அருகில் அறுபத்துமூவர் குரு பூசைமடம் அமைக்கப்பட்டது. செட்டி நாட்டுக்கு வெளியே திருவாரூரில் தேவ கோட்டையைச் சேர்ந்த மேனா வகையார் கட்டியுள்ள குரு பூசைமடம் நூற்றாண்டு விழாக் கண்ட மடமாகும். தமிழ் நாட்டில் நகரத்தார் 16 ஊர்களில் குரு பூசைமடம் கட்டி அறுபத்துமூவர் அல்லது நால்வர் அல்லது மாணிக்கவாசகர் அல்லது சேக்கிழார் குரு பூசைகளும், 22 ஊர்களில் குரு பூசை மடம் கட்டிப் பிற சிவனடியார்களின் குரு பூசைகளும் நடத்த ஏற்பாடு செய்துள்ளனர்.

பட்டினத்தார் விழா

காவிரிப்பூம்பட்டினத்தில் நகரத்தார். ஆண்டுதோறும் நடத்தும் பட்டினத்தார் திருவிழா ஓர் அரிய நிகழ்வாகும். 500, 600க்கு மேற்பட்ட நகரத்தார் ஆண், பெண் இருபாலரும் செட்டிநாட்டிலிருந்து பெயர்ந்து பத்து நாட்கள் இங்கேயே தங்கி அவர்களே சமைப்பதும், உண்ணுவதும், விழா வினை நடத்துவதும், சொற்பொழிவு களை நடத்துவதும், சுற்றுப்புறத் தலங்களுக்குச் செல்வதுமாக அது ஒரு தனி உலகமாகக் காட்சி அளிக்கும். நகரத்தார் பெருமக்கள் 1924-இல் இவ்விழா வினைத் தொடங்கினர். பத்து நாள் விழாவில் அந்தந்த நாள் விழாவிற் கேற்பப் பட்டினத்தார் கதை பகுதி பகுதியாகப் பிரிக்கப் பெற்றுச் சொல்லப் பெறும். அந்தந்தக் கதைப் பகுதிக் கேற்பத் திருவுருவச் சிலைகள் எழுந்தருளல் நிகழும்.

இதே போல காவிரிப்பூம்பட்டினத்தில் இயற்பகை நாயனார் விழாவும் ஐந்து நாட்கள் நடத்துகின்றனர்.

நடைப் பயணம்

நகரத்தார் சமய வாழ்வில் திருக்கோயில்களுக்கு விரதம் மேற்கொண்டு நடைப்பயணம் செய்வதும் முக்கிய அங்கம் வகிக்கிறது. கி.பி. 1600-ஆம் ஆண்டில் நெற்குப்பை பிச்சஞ்செட்டி குமரப்பன் பழநி வழிநடைப் பயணம் மேற்கொண்டார். அன்று முதல் இன்று வரை தொடர்ந்து ஆயிரக்கணக்கான மக்கள் வழிநடைப் பயணம் மேற்கொள்கின்றார்கள். 200 ஆண்டுகளாக கீழச் சீவல் பட்டியிலிருந்து வைத்தீசுவரன் கோயிலுக்கு விரதம் இருந்து நடைப் பயணம் மேற்கொண்டு வருகின்றனர். இதேபோல அறுபடை வீடு, திருவொற்றியூர் நடைப்பயணங்கள் மேற்கொள்கின்றனர். இராமேஸ்வரத்தில் இருந்து காசிக்கு நடை பயணமாக 1983-இல் அரு. சோமசுந்தரம், 1990-இல் வைரவன், 1997-இல் காசிநாதன் தலைமையில் மூன்று குழுக்கள் காசி நடைப்பயணம் சென்று வந்துள்ளனர்.

குருபீடங்கள்

நகரத்தார்களுக்கெனத் தனி குரு பீடங்கள் உள்ளன. சைவ நெறி பரப்ப ஈசான சிவர், அகோர சிவர் என்ற இரு சிவயோகியர்கள் தோன்றினர். இவ்விருவரும் சைவ ஆகமங்களுக்கு விளக்கம் தந்தவர்கள். அகோர சிவர் சிதம்பரத்திலும், ஈசான சிவர் மதுரையிலும் தங்கி திருத்தொண்டு ஆற்றி வந்தார்கள். நகரத்தார்கள் அகோர சிவாச்சாரியாரைத் தங்கள் குருவாகக் கொண்டார்கள்.

முன்னர் குறிப்பிட்டபடி கி.மு. 594-இல் பூவந்திச் சோழன் நகரத்தாரின் குலப் பெண்களைச் சிறைப்படுத்தியதால், எண்ணாயிரம் நகரத்தார் குடும்பங்கள் தங்கள் ஆண் மக்களை குருவிடம் ஒப்படைத்துவிட்டு உயிர் நீத்தனர். கி.மு. 585-இல் சோழ மன்னன் தன் மகன் ராஜபூஷணனுக்கு முடிசூட்ட விரும்பி நகரத்தார்களை அழைத்து முடிசூட்டு மாறு வேண்டினான். அதற்கு நகரத்தார், ''நாங்கள் பிரம்மச்சாரிகள்,

முடிசூட்டலாகாது'' என்றனர். அரசன் நகரத்தார்களின் குலகுருவான அகோர சிவரை அழைத்துக் கேட்டபொழுது ''வைசியர்கள் வேளாளர் குலத்தில் பெண் எடுக்கலாம்'' என்றார். அதற்கு வேளாளர்கள் ''எங்கள் குருமார்களையே எங்கள் பெண்களுக்கும் குருவாக ஏற்ப தானால் சம்மதம்'' என்று கூற நகரத் தார்களும் சம்மதித்தனர்.

நகரத்தார் காவிரிப்பூம்பட்டினத்தை விட்டுப் பாண்டிநாடு செல்ல நேர்ந்த பொழுது ஆண்கள் குருவாகிய அகோர சிவாச்சாரியாரையும் (ஒரே பெயர் தலைமுறை தலைமுறையாக வந்திருக்க வேண்டும்) பெண்கள் குருவாகிய நிரம்பவழகிய தேசிகரையும் அழைத்துக் கொண்டு கி.பி. 767-இல் பாண்டிநாடு வந்து சேர்ந்தார்கள். பாண்டியநாடு வந்து சேர்ந்த பிறகு, அகோர சிவாச்சாரியார் தமக்கு வயதாகி விட்டபடியால் தாம் சிதம்பரம் சென்று தவம் செய்ய விரும்புவதாகவும், தமது நண்பராகிய ஈசான சிவாச்சாரியாரிடம் தீட்சை பெற்றுக் கொள்ளுமாறு கூறித் திருமுகம் அளித்துவிட்டுச் சிதம்பரம் அடைந்தார். எனவே பாண்டிய மன்னன் ஈசான சிவாச்சாரியாருக்காக கலாமடம் முதலிய ஐந்து கிராமங்களையும், நிரம்பவழகிய தேசிகருக்கு துளாவூர் முதலிய கிராமங் களையும் அளித்து மடம் ஏற்படுத்திக் கொடுத்தான். அதுமுதல் ஆண்களுக்குக் கலாமடமும், பெண்களுக்குத் துளா வூரும் குருபீடங்களாக அமைந்தன.

துளாவூர் ஆதீனம்

கி.பி. *913*-இல் ஸ்ரீவாஞ்சியத்தில் ஞானப்பிரகாச தேசிகரால் துளாவூர் ஆதீனம் தோற்றுவிக்கப்பெற்றது. ஆதி குருவின் பெயரில் நிரம்ப அழகிய தேசிகர் ஆதீனம் என்றே பெயரிட்டார். தற்போதைய *29*-ஆம் குரு ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிகர் *30-8-1995* முதல் ஆதீனகர்த்தராக விளங்குகின்றார்.

பாதரக்குடி மடம்

ஆண்கள் குருபீடமான பாதரக்குடி மடம் முதலில் கலா மடத்தில் இருந்தது. *1566*-இல் பாதரக்குடி மடம் திருப்புன வாயில் இராமநாத சுவாமிகளை குரு வாகக் கொண்டு தோற்றுவிக்கப் பெற்றது. *1975*-இல் இந்த இரண்டு குரு பீடங்களும் ஒன்றிணைக்கப்பட்டு இப்போது பாதரக்குடி சுவாமிகள் மட்டுமே உபதேச குருவாக விளங்கு கிறார். இம்மடத்தின் பன்னிரண்டாம் பட்டமாக காமாட்சி சுந்தரதேசிகர் என்ற ரவீந்திர சுவாமிகள் *1975*-இல் பொறுப் பேற்றுக் கொண்டார்.

கோயிலூர்த் திருமடம்

1791-இல் காரைக்குடியில் பிள்ளையார் பட்டியைச் சேர்ந்த மெய்யப்பச் செட்டியார் வள்ளியம்மை ஆச்சிக்கு முத்துராமலிங்கம் என்ற ஆண்மகவு பிறந்தது. வடநாட்டில் இருந்து வந்த போது யோகி ஒருவர், ''இவர் அனுக் கிரகம் செய்ய அவதரித்த ஆண்டவர்'' என்று கூறினாராம். அது முதல் இவரை ''ஆண்டவர்'' என்றே மக்கள் அழைக்க லாயினர். சிக்கலுக்கு அருகில் வசித்து வந்த உகந்தலிங்க சுவாமிகளிடம் ஞான நூல்கள் அனைத்தும் கற்றார். காரைக் குடியில் இருந்த கொற்றவாளீசர் கோயில் இவரை மிகுதியும் ஆட் கொண்டது. அக்கோயிலைக் கருங்கல் திருப்பணி யாகக் கட்டி முடித்தார். ஆண்டவர் கோயிலூரிலேயே ஒரு மடத்தை நிறுவி வேதாந்தம் சொல்லித் தரத் தொடங் கினார். நகரத்தாரை இவர் தம் அருளாணையினால் நெறிப்படுத்தி, அவர்கள் வாழும் ஊர்கள் எங்கும் சிவன் கோயில் கட்டி வழிபடுமாறு தூண்டி னார். அவர் காலத்திலேயே கல்லல், கானாடுகாத்தான், சாக்கோட்டை போன்ற பல ஊர்களில் கற்கோயில் திருப்பணிகள் செய்திருக்கிறார். இன்று செட்டி நாடெங்கும் சிவாலயங்கள் காணப் பெற ஆண்டவரே அடிப்படைக் காரணம்.

''மடம் உண்டோ? சிவாலயங்கள் மிகுதி உண்டோ?
... ...
வடகயிலைக்கு இறைவன் எனும் முத்துராம வள்ளல் திருக் கழநிநகர் வாராமுன்னம்''

என்பார் சேந்தினி பழநியப்ப ஐயா.

இத்திருமடத்தின் ஐந்தாம் மடாதி பதியான வீரசேகர ஞானதேசிகர் காலம் (பீடமேறியது 1883 - பரிபூரணம் அடைந்தது 1911) பொற்காலம் ஆகும். இவரது ஆட்சிக் காலத்தில் 1908-இல் திருநெல்லை அம்மன் உடனாய கொற்றவாளீசர் கோயிலுக்குத் திருக்குட நன்னீராட்டு விழா செய்தார். இவ்வா லயத்தைச் சிற்பக்கலைத்திறம் செறிந்த ஒரு கலைக் கோயிலாக்கினார். திருக்களர் ஆலயத்தைப் புதுப்பித்துத் திருப் பணியை நிறைவேற்றினார்.

5-7-1995-இல் ஆதீனகர்த்தராகப் பொறுப்பேற்றுக் கொண்டிருப்பவர் நாச்சியப்ப ஞான தேசிக சுவாமி களாவார். வேதாந்தப் பாட வகுப்புகளை நடத்த ஆவன செய்தார். ''சனாதன தரும உலகப் பல்கலைக் கழகம்'' ஒன்றைத் தொடங்கத் திட்டமிட்டு, அதன் உறுப்பு களாக திருமுறைக் கல்லூரி, நாதசுர இசைக் கல்லூரி, வேத ஆகமக் கல்லூரி ஆகியவற்றை 5-10-1995 அன்று கோவிலூர் வளாகத்தில் தொடங்கி உள்ளார்.

நகரத்தார் சமூகத்திற்கு இன்றியமை யாத திருமடம் கோயிலூர். தங்கள் முன்னேற்றம் கருதியும் வாழ்க்கை முறையில் மாறுதல்கள் குறித்தும் 96 ஊர் நகரக் கூட்டங்களைக் கோயிலூரில் கூட்டுவதே மரபு எனச் செவிவழிச் செய்திகள் கூறுகின்றன.

★ ★ ★

இத்துணைச் செய்திகளையும் பூம்புகாரில் இருந்த இடத்தில் இருந்து கொண்டே சேகரிக்க முடிந்தது. களஞ்சியங்களாகவும், மலர்களாகவும், வரலாறாகவும் நகரத்தார் பெருமக்கள் பதிவு செய்திருக்கின்றனர். இத்துணை யும் முடித்துவிட்டு மூன்று நாள் பயண மாகச் செட்டிநாடு செல்லத் திட்ட மிட்டிருந்தேன். மஞ்சக் கொல்லை, நாகை பகுதிகளில் சென்று சேகரிக்க வேண்டிய பணி இருந்தமையால் பயணத்திட்டம் இரண்டு நாட்களாகக் குறைந்தது.

காசிஸ்ரீ அரு. சோமசுந்தரம் அவர் களுடன் தொலைபேசியில் பேசிய பொழுது ''ஞாயிறு காலை கிளம்புங்கள். பிற்பகலில் ஒரு வலம் வந்து விடலாம்'' என்றார். செட்டி நாட்டிலும் காரைக்குடி திரு. அரு. சோமசுந்தரம் தேவகோட்டை திரு. சபா. அருணாசலம், தேவகோட்டை சிவஸ்ரீ ஈசான தேசிகர் ஆகியோரை மட்டுமே சந்தித்தேன். அதுவே போது மானதாயிருந்தது. அப்படி ஒரு தகவல் களஞ்சியம்! நகரத்தார் பெருமக்கள் அத்துணைச் செய்திகளையும் பதிவு செய்து விடுகிறார்கள். வருங்காலத்தில் வரலாறு எழுதுவதற்கும் நல்ல தரவுகளாக அமைந்து விடுகின்றன. போற்ற வேண்டிய செயல்!

2005 நவம்பர் 23-ஆம் தேதி பிற்பகல் 1.30 மணிக்கு காரைக்குடி அரு.சோ. அவர்கள் இல்லம் வந்து சேர்ந்தேன். அவர்கள் இல்ல வாசலிலேயே நிறுத்தி விட்டார்கள். அரு. சோ. அவர்களுக்கு ஒரு நல்லபழக்கம். தினமும் செய்தித் தாள்களைப் படித்துவிட்டு முக்கியச் செய்திகளைக் கரும்பலகையில் எழுதி வாசலில் தொங்க விட்டு விடுவார். அக்கரும்பலகையைச் சுட்டிக் காட்டி னார். தேசிய, மாநிலச் செய்திகள் வரிசையாக இடம் பெற்றிருந்தன. மூன்றாவது செய்தியாக ''பூம்புகார் பத்தினிக் கோட்ட உரிமையாளர் இரா. இராஜசேகரன் தமிழ் நாட்டில் உள்ள சைவ மன்றங்களைப் பற்றிய வரலாறு எழுதி வருகிறார். அதில் நம் செட்டி நாடும் இடம் பெறும். தகவல்கள் சேகரிக்க இன்று காரைக்குடி வருகிறார்'' என்று இருந்தது. வியப்புடன் நிமிர்ந்து பார்த்தேன். உற்சாகமாகச் சிரித்த அரு. சோ. ''இன்று மாலைக்குள் 500, 600 பேர் படித்து விடுவார்கள்'' என்றார். புது மாதிரியான வரவேற்பு!

பயணத்தில் அரு. சோவும் எங்களுடன் சேர்ந்து கொண்டார். தேவகோட்டை ஊர் நுழைவில் அவர் கட்டியுள்ள நால்வர் கோயிலை வழிபட்டுவிட்டு தேவ கோட்டை நகருக்குள் சென்றோம். சிவஸ்ரீ ஈசான தேசிகர் அவர்களது இல்லத்துக்குச் சென்றோம். தத்புருஷ தேசிகர் என்று பிற்றை நாளில் அழைக்கப்பட்ட பாலகவி வயிநாகரம் ராமநாதஞ் செட்டியார் அவர்களின் திருமகனார் ஆவார். நிரம்பச் செய்திகள் தந்தார். பலமுறை அவர்களே தொலை பேசியில் பேசி தகவல்கள் தந்தார்.

நகரத்தார் காலகாலமாக சிவத் தொண்டு செய்து வந்தாலும் திருக் கோயில் திருப்பணி என்று தொடங் கியது, வயிநாகரம் குடும்பத்தைச் சேர்ந்த நாகப்ப ஐயா அவர்கள் காலத்தில் தான். திருப்பணியோறப்பத்தி வயிநாகரம் குடும்பம். நாமும் அங்கேயே தொடங்கு வோம்.

ஸ்ரீ மெய்யப்ப சுவாமிகள்

ஸ்ரீ மெய்யப்ப சுவாமிகள் காரைக் குடியில் தன வைசியர் மரபிலே அவதாரம் செய்தவர். இவர்களுக்கு வயிற்று நோய் இருந்ததால் மதுரை பொற்றாமரைக் குளத்தில் நாளும் நீராடி அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரரை வழிபட்டு நோய் நீங்கினார். அது முதல் மதுரையை விட்டு நீங்குவதில்லை என அங்கேயே தங்கி கோயிலில் பல திருத்தொண்டுகள் செய்து வந்தார். முறைவழுவாது சுவாமிகள் பெரிய புராணம் சித்தாந்த சாத்திரங்கள் முதலிய நூல்களைப் பாடம் சொல்லி வந்தார்கள். காரைக்குடி சொக்கலிங்க ஐயா இவர் களிடம் பாடங்கேட்டவர்கள். (பரி பூரணம் - 1885 பார்த்திப மாசி 5-ஆம் தேதி)

நாகப்ப ஐயா

அது சமயம் அமராவதி புதூர் வயிநாகரம் குடும்பத்தைச் சேர்ந்த நாகப்ப ஐயா (1820-1882) வேங்கடாசலம் ஐயா (காலம் சுமார் 1822 - 1888; ஊர் - சேர்ந்தணி, இராமநாதபுரம் மாவட்டம்; பெற்றோர் - இராமநாதன் செட்டியார், வள்ளியம்மை ஆச்சி) இருவரும் தொழில் நிமித்தம் அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் நாள் வழிபாட்டிற்கு சென்று வந்த வேளையில் ஸ்ரீ மெய்யப்ப சுவாமிகளிடம் தொடர்பு ஏற்பட்டு அவர்கள் கூறிய வண்ணம் திருமாலைத் திருப்பணி தொடங்கி, சுவாமி கோயில் முதற் பிராகாரம், இரண்டாம் பிராகாரம் தளவரிசைகள், ஆடி வீதித் தளவரிசை, சுவாமி அம்மன் தங்க விமானம் தங்கம் வெள்ளி வாகனங்கள், திருவாபரணங்கள், பல மண்டபங்கள், அம்மன் தேர் முதலியன அமைத்தும், மொட்டைக் கோபுரம் முழுக்கோபுரமாக அமைத்தும் இருபத்தைந்து லட்ச ரூபாய் செலவு செய்து 6-2-1878, 1-7-1923 ஆகிய நாட்களில் குடநீராட்டு விழாக்களும் செய்து முடித்தனர்.

திருப்பரங்குன்றம், திருவாதவூர், திருப்பத்தூர் அம்பாள் கோயில்களும், திருவாப்பனூர்க் கோயில், திருக்கானப் பேர் சோமேசர் கோயில், திருவேடகம் கோயில் அடிப்பகுதி ஆகிய திருப் பணிகளும், கண்ட தேவி, விருத்தாசலம், அமராவதி புத்தூர், பல்லவனீச்சரம் ஆகிய கோயில்களின் முழுத்திருப் பணிகளும் திருவொற்றியூர், சீர்காழி சில பகுதிகளும் திருப்பணிகள் செய்யப் பட்டன. சிவாலயத் திருப்பணிக்கென்றே சிவ பெருமான் நாகப்ப ஐயாவை தமிழகத்திற்கு அனுப்பிவைத்தான் போலும்!

வயிநாகரம் குடும்பமே நகரத்தார் திருப்பணிகளுக்குத் தாய்!

அனைத்துத் திருப்பணிகளுக்கும் தோற்றுவாய்!

சோமசுந்தரம் செட்டியார்

வேங்கடாசலம் ஐயாவின் மகன் வயிற்றுப் பேரனார் திரு. சோமசுந்தரம் செட்டியார் ஆவார். அவர்களுக்கு மகப் பேறு வாய்க்காததனால் திருவெண்காடு முக்குளத்தில் நீராடி நோன்பிருந்து

வந்தனர். அவ்வமயம் தலயாத்திரைக்கு வந்தவர்கள் பல்ல வனீச்சுரம் திருக் கோயிலுக்கு வந்தார்கள். அங்குள்ள கோயில் இடிபாடுகளுக்கிடையில்... மூர்த்தி மரத்தடியில் இருந்தது. அதனைப் பார்த்துச் செட்டியார் மனம் வருந்தி கோயிலைத் திருப்பணி செய்ய மனம் கொண்டு, மதுரையில் திருப்பணி செய்து கொண்டிருக்கும் தன் தகப்பனாருக்கு அஞ்சல் அட்டையில் (இன்று ஐம்பது பைசா; அன்று காலணா) தனது உள்ளக் கிடக்கையை எழுதினார். அந்த அஞ்சல் அட்டையைப் பார்த்து மகிழ்ந்த தகப்பனார், ''இன்று தான் நீ எனக்கு மகன் ஆனாய்'' என்று எழுதிவிட்டு சுமார் இரண்டு லட்சம் ரூபாய் வரையில் திருப்பணி செய்வதற்கு வேண்டிய தச்சர், கொல்லர், தள வாடங்கள் முதலிய வற்றை அவ்வப் போது அனுப்பிக் கொண்டிருப்பதாயும் திருப்பணி செய்து குடமுழுக்கு நடத்தும் வரையில் நீயும் உன் மனைவியும் அங்கேயே தங்கிப் பிறகு வரலாம் என்று அதே மாதிரி கார்டில் பதில் எழுதினார். பிறகு அங்கிருந்து ஆட்களையும் சாமான் களையும் அனுப்பி வைத்து, திருப் பணிகள் ஓர் ஆண்டுக் காலத்தில் நிறை வெய்தி குடமுழுக்கும் முடிந்தது. கோயி லின் தினசரி பூசைகள் செவ்வனே நடை பெறுவதற்கு வேண்டிய நிலபுலன்களை யும் வெள்ளி வாகனங்கள் முதலியவை செய்தும் திருக்குளம் அமைத்தும் கடமைகளை நிறைவேற்றி விட்டு மனைவியுடன் ஊர் திரும்பினார்.

சோமசுந்தரஞ் செட்டியாரின் மகன் வயிற்றுப் பேரனார் கருப்பஞ்செட்டியார் ஆவார். இவர் சிவபூஜைகள் நடத்து விப்பதிலும் குடமுழுக்கு விழாக்கள் நடத்துவிப்பதிலும் ஊக்கமும் ஆக்கமும் கொண்டவர். (மறைவு - 6-10-1983)

வயிநாகரம் குடும்பத்தில் மற்றுமொரு சைவக் கற்பகம் சைவசித்தாந்த சரபம் சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் (பாலகவி வே. இராமநாதன் செட்டியார்). (இவர்களின் எழுத்துப்பணி முதல் தொகுதியில் வந்துள்ளது) இவர் சேக்கிழார் திருநாட்கழகம், சிவாகம சித்தாந்த பரிபாலன சங்கம், சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் தமிழகச் சைவ நெறிக் கழகம் என பல அமைப்புகள் மூலம் சைவப் பெருந்தூணாய் நின்றார். அவற்றை ஒவ்வொன்றாகக் காண்போம்.

வன்றொண்டர்

முதலில் சேக்கிழார் விழா! அவ்விழா நடைபெறக் காரணமாக இருந்தவர் வன்றொண்டர் என்றழைக்கப்பட்ட நாராயணன் செட்டியார் ஆவார்.

நாராயணன் ஐந்து வீட்டார் மரபில் முத்துராமன் செட்டியார் மகனாகத் தோன்றினார். அம்மை நோயால் இளமையிலேயே கண்பார்வை இழந் தார். தமிழ் இலக்கண இலக்கியங்கள், சைவ சித்தாந்த நூல்களைக் கற்க வேண்டும் என்ற ஆசையால் இலங்கை நல்லூர் ஆறுமுக நாவலரிடம் சென்றார். இவரது உறுப்பு ஊனத்தைக் கருதி அவர் பாடம் சொல்ல மறுத்துவிட்டார். இவர் தமது முயற்சியில் தளராமல் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளையை அணு கினார். அவர் இவரது ஆர்வத்தையும், முயற்சியையும் பாராட்டிப் பல்வேறு தமிழ் இலக்கிய இலக்கண, சைவ சித்தாந்த சாத்திர நூல்களைப் பாடம் சொன்னார். மிகுந்த நினைவாற்றல் கொண்ட வன்றொண்டர் ஒருமுறை கேட்டதை பின்னர் மறப்பதில்லை. பல்லாயிரம் பாடல்கள் அவருக்கு மனப்பாடம். இவரது நினைவாற்றலை உ.வே.சா. தமது வாழ்க்கை வரலாற்று நூலில் போற்றி எடுத்துரைக்கிறார்.

''நாராயண செட்டியார் நேத்திரம் இல்லாதவர். ஆனாலும் நுண்ணிய அறிவுடையவர். வேறொருவர் படிக்க அவர் பாடம் கேட்பார். அவருக்கு ஞாபக சக்தி அதிகம் உண்டு. பாடம் நடக்கை யில் இவ்வளவு பாடல்களாயின; நிறுத் தலாமென்பார். பிள்ளையவர்களிடம் ஐயங்களை ஞாபகத்தில் வைத்துக் கொண்டு கேட்கும் பொழுது இன்ன

படலத்தில் இன்ன செய்யுளின் இன்ன அடியென்று ஞாபகம் வைத்திருந்தே கேட்பார். அது யாவருக்கும் ஆச்சரியத் தைத் தரும்.

சிவநேசச் செல்வர்கள் பலர்கூடி அவருக்கு வன்றொண்டரென்றே பெய ரிட்டு வழங்க வேண்டுமென்று சொன் னார்கள். பிள்ளையவர்கள் அங்கீகரித்து,

''சத்திவாழ் வாமத்துச் சங்கரன்பொற்
றாட்கமலப்
பத்தியாற் றேவார பாராய – ணத்தினால்
வான்றோய் புகழ்மிகுந்த வன்றொண்ட
னென்னும் பேர் அழைத்து வரலானார்
சான்றோய் நினக்குத் தகும்''

என்னும் பாடலைக் கூறி அன்று முதல் வன்றொண்டர் என்றே அழைத்து வரலானார்.

வேம்பத்தூர் பிச்சுவையர், சதாவ தானம் சுப்பிரமணிய ஐயர், சொக்கலிங்க ஐயா, சிந்நயச் செட்டியார் ஆகியோர் வன்றொண்டரிடம் பாடம் கேட்டவர் களாவர். ''சிவஞான போத லகு வசனம்'' என்ற நூலை இவர் படைத்து உள்ளார்.

விநாயகர் கோயிலில் 108 முறை வலம் வந்து 108 முறை கீழே விழுந்து வணங்கும் பழக்கத்தை மேற்கொண்டு இருந்தார். இதை நேரில் கண்டறிந்த திருவாவடுதுறை ஆதீனகர்த்தர் மேல கரம் சுப்பிரமணிய தேசிக சுவாமிகள் இவரை வன்றொண்டர் என அழைத்துப் பாராட்டினார்.

திருத்தொண்டர் புராணத்தை ஆசிரிய ரிடம் பாடம் கேட்டு அத்தனை பாடல் களையும் நினைவில் கொண்டிருந் ததுடன் சேக்கிழார் பெருமானிடத்தும் வன்றொண்டர் எல்லையற்ற அன்பு கொண்டிருந்தார்.

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையைக் கொண்டு சேக்கிழார் பெருமானுக்கு ஒரு பிள்ளைத் தமிழ் செய்து வாங்க வேண்டும் என்று எண்ணி அக்கருத்தை அவரிடம் தெரிவிக்க அவர் அதனை மகிழ்ந்து ஏற்று 1874 ஜூன் மாதத்தில் செட்டி நாட்டுக்கு வந்து சில மாதங்கள் தங்கிச் சேக்கிழார் பிள்ளைத் தமிழ், சூரை மாநகர்ப்புராணம், கோயிலூர்ப் புராணம், கண்டதேவிப் புராணம், வீரவனப் புராணம் முதலிய வற்றை இயற்றித் தந்தார். சேக்கிழார் பிள்ளைத் தமிழைச் செந்தமிழுக்கு அணி சேர்க்கும் வகையில் பிள்ளையவர்கள் இயற்றக் காரணமாக இருந்தவர் வன்றொண்டச் செட்டியாரே ஆவார்.

சேக்கிழார் பெருமானிடம் இவர் கொண்டிருந்த ஈடுபாட்டினால் அப் பெருமானுக்குத் தேவகோட்டையில் ஒரு திருக்கோயில் கட்டிப் பூசை நிகழ ஏற்பாடு செய்ய எண்ணித் தனது பொருள் வசதிக்கேற்ப ஓர் இடத்தை விலைக்கு வாங்கி அதில் திருக்கோயில் அமைக்கத் திட்டம் செய்தார். அப்போது தேவ கோட்டை நகரத்தார் அனைவரும் ஒன்றுகூடி அதுவரை தேவகோட்டைக் கென்று தனிச் சிவாலயம் இல்லாத படியால் சிவன்கோயில் அமைக்க முடிவுசெய்து வன்றொண்டர் சேக்கிழார் கோயிலுக்கென வாங்கிய இடத்தை சிவன் கோயிலுக்குத் தரவேண்டு மெனவும், அதற்குரிய விலையைத் தந்து விடுவதாகவும் கேட்டுக் கொண்டார். வன்றொண்டர் கோயிலுக்கென வாங்கிய இடத்தை விலைக்குக் கொடுக்க முடியாது என்றும், அமைக்க இருக்கும் சிவன் கோயிலில் தனிக் கருவறையுடன் சேக்கிழாருக்கு ஒரு தனிக்கோயில் அமைக்க வேண்டுமென்றும், நாள் தோறும் பரிவார மூர்த்திகளுக்குப் போலல்லாமல் மூலஸ்தான மூர்த்தி களுக்குப் போல எல்லாக் கால பூசைகளும் சேக்கிழாருக்கு நடைபெற வேண்டுமென்றும் கேட்டுக் கொள்ள நகரத்தாரும் அதற்கு இசைந்தனர். சிவன் கோயிலில் ஒலித்துக் கொண்டு இருக்கும் ஆராய்ச்சி மணி அந்தக் காலத்தில் வார்ப்பு வேலையில் சிறப்புப் பெற்றிருந்த செய்கோனுக்கு (வியட்நாம்) எழுதி சேக்கிழார் திருக்கோயிலுக்காக வரவழைக்கப்பட்டதாம். அந்த மணியில்

சேக்கிழார் திருக்கோயில் என்ற பெயரும் எழுதப்பட்டுள்ளது. இத்திருக்கோயிலில் உள்ள சேக்கிழார் பெருமான் திருவுருவம் அவரது அவதாரத் தலமாகிய குன்றத்தூர் மலையிலிருந்து கொண்டு வந்த கல்லில் அமைக்கப் பெற்றது.

தமிழ்வள்ளல் மெய்யப்பனார்

சேக்கிழார் விழாவிற்குக் காரண மானவர் வன்றொண்டர். அதற்குப் பெரிதும் துணைநின்றவர் தமிழ் வள்ளல் மேனா.

''மேனா''

''தமிழ் வள்ளல்''

அரை நூற்றாண்டுக் காலம் தமிழ் வள்ளல் மெ. அவர்கள் அறியாத தமிழ் அறிஞர் இல்லை. அவரை அறியாத தமிழ் அறிஞரும் இல்லை. வள்ளல் அவர்கள் தேவகோட்டையை ஒரு குட்டித் தமிழ் உலகம் ஆக்கினார். அவர் நடத்திய சேக்கிழார் விழாவிற்கும், அவர் வீட்டுத் திருமணம் முதலிய சிறப்புகளுக்கும் பற்பல தமிழறிஞர்கள் ஆண்டுதோறும் வந்த வண்ணம் இருந்தனர். புலவர்கட் கெல்லாம் மெ. அவர்களின் இல்லத்தில் விருந்துபசாரம் சிறப்பாக நிகழும்.

தேவகோட்டையிலும், சென்னை போன்ற நகரங்களிலும் மெ. அவர்கள் எந்நேரமும் புலவர் சூழலிலேயே இருப்பார். தமிழ் பற்றியும், சைவசமயம் பற்றியும் உரையாடுவதில் அவருக்கு மிகுந்த விருப்பம். வெளியூர்கட்குச் செல்லும் மேனா தனியே செல்வதில்லை. அவர்களுடன் எப்போதும் இரு புலவர்களாவது பக்கத்தில் இருப்பார்கள். தமது பங்காளிகளுக்குக் கொடுத்து வந்த மரியாதையைப் புலவர்கட்கும் அளித்து வந்தார். தைப் பொங்கலன்று தம் பெண் மக்கள் வீடுகட்குப் பொங்கற்சீர் கொடுத்து அனுப்புவது போலவே மேனா தமிழ்ப் புலவர்கள் வீடுகட்கு அரிசி, கரும்பு, தேங்காய், மஞ்சள் கொத்து போன்றவற்றை ஆண்டுதோறும் அனுப்பி வந்தார்.

மேனா ஏராளமான பேருக்குத் தமிழ் படிக்க உதவியிருக்கிறார். மேலைச் சிவபுரி சன்மார்க்க சபையில் பல மாணவர்கள் கல்வி பயில உதவியதுடன் அவர்களுக்கான மற்ற செலவுகளையும் தாமே ஏற்றுக் கொண்டார். அதே போல மயிலம் தமிழ்க் கல்லூரியில் பயின்ற மாணவர்கள் பலருக்கும் உதவியிருக் கின்றார்.

திருவையாறு தமிழ்க் கல்லூரியில் படிக்கத் தமிழண்ணல் பரிந்துரைக் கடிதத்துடன் மேனா அவர்களிடம் வந்தார். தங்க இடம் கொடுக்குமாறு கணக்குப் பிள்ளைக்கும், தம் பிள்ளைகள் போல கவனித்துக் கொள்ளு மாறு கல்லூரி முதல்வருக்கும், வைணவப் பேரறிஞர் புருஷோத்தம நாயுடுவுக்குமாக மூன்று பரிந்துரைக் கடிதங்கள் கொடுத்தார். ''பங்களாவி லிருந்து வந்து படிக்கும் பிள்ளை'' என்று தமிழண்ணலுக்குத் திருவையாற்றில் பெருமதிப்பு. ''வளமனை வாழ் பிள்ளையாக மாறிவிட்டேன்'' என்று பெருமை பொங்கக் கூறுகிறார் தமிழண்ணல்.

மேனாவின் அரவணைப்பில் இருந்து இன்று உயர்நிலைக்கு வந்துள்ளவர்களில் குறிப்பிடத் தக்கவர்கள் முனைவர் சுப. அண்ணாமலை, பேராசிரியர் திரு. சொர்ண காளீஸ்வரன் ஆகியோர் ஆவர். அறிஞர்கள் தெ.பொ.மீ., மொ.அ. துரையரங்கனார், அ.ச.ஞா. போன்ற பெரும்புலவர்கள் எல்லாம் அடிக்கடி வள்ளலைச் சந்திக்க வருவார். அவர்கட்கும் எத்தனையோ உதவிகள்! முனைவர் சுப. அண்ணாமலை ஐந்தாண்டுகள் பி.ஓ.எல் (ஆனர்ஸ்) படிக்க நிதியுதவி வழங்கினார். கருமுத்து தியாகராசர் கல்லூரியில் பணியில் அமர்த் தினார். தெ.பொ.மீ. அவர்களிடம் மேனா பேரன்பு பூண்டிருந்தார். அவரது வெள்ளி விழாவினை மேனா சிறப்புற நடத்தினார். சிந்தாதிரிப் பேட்டையில் தெ.பொ.மீ அவர்களின் உருவச்சிலையை நிறுவினார். குரு தேவரின் கட்டுரைகளை



இடமிருந்து வலம் : முன்வரிசை மூன்றாவதாக நிற்பவர் தமிழ்வள்ளல் மெய்யப்பனார்; 4. பாலகவி இராமநாதஞ் செட்டியார்; 5. ஈசான சிவாசாரியார்; 6. இராய சொக்கலிங்கம்; 7. திருவாடானை அய்யாமணி சிவம்

நூல் வடிவாக்கி மணிவிழாவில் வெளியிட்டார். தேவ கோட்டை நகரத்தார் உயர்நிலைப் பள்ளியில் திருவள்ளுவர் விழா, திருக்குறள் போட்டி ஆகியவை ஆண்டு தோறும் சிறப்பாக நடைபெற வழி வகுத்தார். பள்ளிகளில் பரிசுகளாக வழங்க நூற்றுக்கணக்கான தமிழ் நூல்களை வாங்கிக் கொடுத்துள்ளார். தஞ்சை நாட்டார் பேரவை, கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் புரவலராக இருந்தார்.

நடமாடும் இலக்கிய வரலாற்றுக் களஞ்சியம் அவர். வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள், மயிலம் சிவ ஞான பாலைய சுவாமிகள், ஞானியார் சுவாமிகள், வன்றொண்டர் செட்டியார், காரைக்குடி சொக்கலிங்க ஐயா முதலிய மறைந்த தமிழ் அறிஞர்கள் பற்றியும், அன்று வாழ்ந்து கொண்டிருந்த நூற்றுக் கணக்கானவர் பற்றியும் அவர் வாழ்வில் நடந்த சுவையான சம்பவங்கள் பற்றியும் மேனா மணிக்கணக்கில் கூறுவார். (அடடா! மேனா இன்று இல்லாமல் போய் விட்டாரே! அவர் இருந்திருந்தால் என்னுடைய பணி எவ்வளவு எளிதாகி யிருக்கும்)

மேனா பா இயற்றும் இயல்புடையவர் அவர் எழுதிய நூல்கள் வருமாறு :

1) திருவையாறு அறம் வளர்த்த நாயகி பதிகம் 2) கருதாவூரணி ஸ்ரீகயிலாச விநாயகர் நான்மணிமாலை, 3) குன்றை நகர்க்குமரன் போற்றிப் பதிகம், 4) ஸ்ரீ செயங்கொண்டசோளீசர் போற்றிப் பதிகம் 5) திருவேடகம் ஸ்ரீ ஏடகநாதர் மெய் வருக்க மாலை 6) திருவையாறு ஐயாறப்பர் நவமணிமாலை 7) கோட்டையவயல் ஸ்ரீ நடராசர் உயிர் வருக்கமாலை 8) இலம்பையங் கோட்டூர் ஸ்ரீ அரம்பேசன் திருவிருத்தப் பதிகம் 9) சிவபூசை முறை அநுட்டான விதி 10) சைவ சித்தாந்த விதி 11) சைவ தர்ப்பண விதி 12) சட்பிரபந்தம் 13) துவைதப் பிரபந்தம்

திருவையாற்றில் ஐயாறுடைய அடிகளின் ஆலயத்தில் அறம் வளர்த்த

நாயகியாம் அம்பிகைக்குப் பெருநிதி யாகப் பத்து இலட்ச ரூபாய் செலவில் திருப்பணி செய்து 40,000 ரூபாய் செலவில் 2-5-1937 அன்று குடநீராட்டும் செய்தார். திருக்கோயில் நிர்வாகத் தாராகிய தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குரு மகாசந்நிதானம் குடநீராட்டு விழாவில் வள்ளல் ''மெ'' அவர்களை யானை மீது அமர்ந்து வரச்செய்து தாம் பல்லக்கில் அமர்ந்து ஊர்வலம் நடத்தி வள்ளல் அவர்களுக்குப் பெருஞ்சிறப்பு செய்து வாழ்த்தினார்.

சென்னையை அடுத்த கூவத்தில் திரு இலம்பையங்கோட்டூர் சந்திரசேகருக்குப் பெருங்கோயிலாகக் கட்டிக் குட நீராட்டும் செய்துள்ளார்.

திரு ஏடகம் ஏடகநாதேசுரர் திருக் கோயிலுக்கு ''மெ'' அவர்களும், அவர்களின் குடும்பத்தாரும் ஏழு லட்ச ரூபாய் செலவில் திருப்பணி செய்து 8-6-1939 அன்று குடநீராட்டு விழாவும் செய்து முடித்தனர்.

மேனா அவர்கள் சொத்துவரி, புள்ளி வரி ஆகியவற்றை வசூலித்து நேமம் கோயில் திருப்பணியையும், குட நீராட்டையும் செய்து வைத்தார். நித்ய பூசைக்கு நன்கொடை திரட்டி அத் தொகையை மூலதனமாக வைத்து வட்டியிலிருந்து செலவு செய்ய ஏற்பாடு செய்தவர்களில் மேனா அவர்களின் பங்கு பெரியது.

சிவ வழிபாடு செய்தல், சைவ உணவு மட்டுமே உட்கொள்ளுதல், சைவ சித்தாந்தத்தைக் கற்பது, கற்பிப்பது, சைவ மடங்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிப்பது போன்ற சைவப் பணி களையும் செய்து வந்தார். தூத்துக்குடி முத்தையாப் பிள்ளையிடம் இலக் கணமும் சக்திவேல் பிள்ளையிடம் இலக்கியங்களும் கற்றார். பழநி ஈசான சிவாசாரியாரிடம் சிவதீட்சை பெற்றார். ஒவ்வோர் ஆண்டும் சிவபூசகர்களை ஓரிடத்தில் கூட்டிச் சிவபூசைமாநாடு நடத்தி வந்தார். பூசை எடுத்துக் கொள்பவருக்குப் பூசைக் கலன்களும் உருத்திராக்கமும் நன்கொடையாக அளித்து வந்தார். தவத்திரு குன்றக் குடி அடிகளார் 'அருள்நெறித் திருக்கூட்டம் என்ற அமைப்பைத் தொடங்கிய போது அவர்களுக்கு 'மெ' அவர்கள் உறுதுணை யாக இருந்தார். சிவத் தலங்கள் அனைத்திற்கும் யாத்திரை சென்று வந்தார். எங்கு சென்றாலும் தான் மட்டும் செல்லாது உறவினர் களையும் நண்பர்களையும் அழைத்துச் செல்வார்.

குன்றக்குடி அடிகளார் இராசா சர். முத்தையாச் செட்டியார் தலைமையில் ''தமிழ் வள்ளல்'' என்ற பட்டத்தை இவருக்கு வழங்கினார். 11-5-1910-இல் தேவகோட்டையில் சின்னச் சேவுகன் செட்டியாருக்கும் முத்துக்கருப்பி ஆச்சிக்கும் தலை மகனாகத் தோன்றிய மெய்யப் செட்டியார் 9-3-1967 மகா சிவராத்திரியன்று சிவனை வழிபடும் நிலையில் இவ்வுலகை நீத்து இறைவன் திருவடிப்பேற்றை எய்தினார்.

வள்ளல் மெய்யப்பனாரின் பெருமை களை ஆ. சக்திவேற் பிள்ளை என்பார் விக்கிரம ஆண்டு ஆனி மாதம் ''சீர்த்தி மாலை'' என முப்பது வெண்பாக்களால் பாடியுள்ளார்.

''செம்பொற்சோதிப்பெருமான்தேவி அறம் வளர்த்த
அம்பிகை தன் ஆலயத்தில் ஆர்ந்தொளிரக் – கம்பிவழி
செல்லுமுயர் மின்சாரத் தீபமிட்டான் மெய்யப்பன்
நல்லவர்கள் வாழ்த்த நயந்து''

''வாடகத்தைக் கொண்டரசி மந்திரியார் வாட்டமற
ஏடகம் சாந்து உற்றதல ஈசற்குச் – சூடலந்த
வாச மலந்நந்தனவனம் வைத்தான் மகிழ்ந்து
நேசமிகு மெய்யப்பனே''

திருவையாறு திருப்பணியைப் போற்றி முனைவர் சுப. அண்ணாமலை அவர்கள் கவி பாடுகிறார்.

''உருவளர் காவிரி ஐம்பெரும் கிளையதாய்
உலவிடும் தஞ்சை மண்ணில்
ஓங்குபுகழ் ஐயாற்றில் அறம் வளர் நாயகிக்கு
ஒளிநிறை கோயில் செய்தோர்
ஒருபெருந் தமிழினை உவப்புடன் கற்பவர்க்கு
உறுதுணையாக நிதியம்
உதவியே பற்பலர் வாழ்வினில் உயர்ந்திட
உதவியே தமிழின வள்ளல்''

சேக்கிழார் விழா

சேக்கிழாருக்கெனத் தனிக்கோயில் அமைக்கப்பட்டுள்ள தேவகோட்டை நகரச் சிவன் கோயிலில் சேக்கிழாருக்கு விழா எடுக்கச் சேக்கிழார் திருநாட்கழகம் 1974-இல் தோற்றுவிக்கப் பெற்றது. இக்கழகத்திற்குத் தமிழ் வள்ளல் சேவு. மெய்யப்ப செட்டியார் தலைவராகவும் பாலகவி இராமநாதன் செட்டியார் (ஸ்ரீ தத்புருஷ தேசிகர்) அமைச்சராகவும் வன்றொண்டர் பரம்பரையில் வந்த தமிழ்ப் புலவர் கரு. ராம. சோம. இராமநாதன் செட்டியார் செயலாள ராகவும் இருந்து சேக்கிழார் விழாவைச் சிறப்புற நடத்தினர். வைகாசிப் பூசத்தன்று சேக்கிழார் பெருமான், அறுபான்மும்மை நாயன்மார்களுக்குச் சிறப்பான பூசனை வழிபாடுகளும் இரவில் பெரிய புராணத்திருமுறையுடன் வெள்ளி யானை வாகனத்தில் சேக்கிழார் பெருமான் திருவீதி உலாவும் நடை பெறும். மூன்று நாட்களும் சொற் பொழிவுகள், சமய விரிவுரைகள் நடைபெறும். தொடக்க விழாவில் சிவக்கவிமணி சி.கே. சுப்பிரமணிய முதலியார் தலைமை தாங்க, பழனி ஈசான சிவாச்சாரியர் சேக்கிழார் திருவுருவப் படத்தைத் திறந்து வைக்க, பண்டிதமணி கதிரேசஞ் செட்டியார் தொடக்க உரையாற்ற, இலக்கணம் முத்துக்குமரத் தம்பிரான் வாழ்த்துரை வழங்கினார். பின்னர் ஆண்டுதோறும் நடந்து வந்த விழாக்களில் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார், அ.மு. சரவண முதலியார், கி.வா. ஜகந்நாதன், மு. வரதராசனார், சமரபுரி முதலியார், சச்சிதானந்தம் பிள்ளை, ம. பாலசுப்பிர மணிய முதலியார், க. வச்சிரவேல் முதலியார், அருணைவடிவேல் முதலியார், நாகர்கோயில் ஆறுமுக நாவலர், சுந்தரமூர்த்தி ஓதுவார், அ.ச. ஞானசம்பந்தன் போன்ற புலவர்கள் விரிவுரையாற்றிச் சிறப்பித்திருக் கிறார்கள். 1972 வரை பாலகவி வாரந் தோறும் சொற்பொழிவு நடத்தினார். இடையில் சில ஆண்டுகள் நின்றுவிட்ட இவ்விழா 1990 முதல் வெ. அழகப்ப செட்டியார் தலைவராகவும், டாக்டர் சபா அருணாசலம் செயலராகவும் பொறுப் பேற்றுத் தொடர்ந்து சிறப்பாகக் கொண்டாடப் பெற்று வருகிறது.

சிவாகம சித்தாந்த பரிபாலன சங்கம்

தத்புருஷ தேசிகர் அவர்களுடன் தொடர்புள்ள மற்றோர் அமைப்பு சிவாகம சித்தாந்த பரிபாலன சங்கம் ஆகும். வேத சிவாகம. நெறிமுறை விளங்குதற்கென 1916-ஆம் ஆண்டில் சத்திரம் சோமசுந்தரம் செட்டியார், பெரிய மைனர் ராமநாதன் செட்டியார், ஜமீன்தார் அருணாசலம் செட்டியார், திருப்புனவாசல் சுப்பிரமணியன் செட்டியார் முதலிய செல்வர்கள் கூடிப் பேசி சிவாகம சித்தாந்த பரிபாலன சங்கத்தைத் தொடங்கினர். அச் சங்கத்தில் வடமொழி தென்மொழிச் சாத்திரப் பயிற்சிக்கென ஆசிரியர்கள் நியமிக்கப் பெற்றும் பல இடங்களில் இருந்த சிவாகமச் சுவடிகள் சாத்திரச் சுவடிகளை அரிதில் முயன்று பெற்று அச்சிட்டும் செய்தற்கரிய அரிய பணிகள் பல செய்யப் பெற்றன. சங்க ஆசிரியருடன் தூத்துக்குடி முத்தையா பிள்ளையும், காளையார் கோயில் காளீசுவரக் குருக்களும், மாணவருள் சிவஸ்ரீ ஈசான சிவாசாரிய சுவாமிகளும் நினைவில் இருத்தத் தக்கவர்கள்.

சங்கம் பதிப்பித்து வெளியிட்ட நூல்கள் :

1) சிவார்ச்சன சந்திரிகை (நாகரம்) 2) அஷ்டப் பிரகரணம் (நாகரம்) 3) சைவ பூஷணம் (மூலமும் தமிழ் முறையும்) 4) மாதங்க ஆகமம் - ஞான பாதம் (நாகரம்) 5) சம்பு பூஜாவிதி 6) சைவ சித்தாந்த பரிபாஷை (நாகரம்) 7) உபமன்யு விலாசம் (கிரந்தம்)

(''சிவநேசன் விளம்பரம் - 1928 பிப்ரவரி)

1950-க்குப் பின் சங்கப் பணி நின்றுவிட்டது. கடைசியில் பொறுப்பில் இருந்த திருநாவுக்கரசு செட்டியார் தத் புருஷ தேசிகரிடம் சங்கப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும் படி கேட்டுக் கொண்டார். அதன்படி சங்கத்தில் வியாழக்கிழமை தோறும் சாத்திர பாட வகுப்பும் சிற்சில நூல் வெளியீடுகளும் தத்புருஷ தேசிகரால் நிகழ்த்தப் பெற்றன.

வேதசிவாகம வித்யாலயம்

செட்டிநாட்டில் நடந்த எந்த நிகழ்வுகளும் தத்புருஷ தேசிகர் பங்களிப்பு இல்லாமல் இருக்க முடி யாது. பிள்ளையன் பட்டி குருக்கள் சிவஸ்ரீ பிச்சைக் குருக்கள் பிள்ளையார் பட்டியில் ஒருவேத சிவாகம வித்யா லயத்தை நிறுவி அதன் மூலம் சைவக் கிரியா விதிகள் முறையாக நடைபெற ஏற்பாடு செய்ய தத்புருஷ தேசிகரிடமும், கம்பன் அடிப்பொடியாரிடமும் கேட்டுக் கொண்டார். அதன்படி 1980-இல் ஒரு வேத சிவாகம வித்யாலயம் பிள்ளையார் பட்டியில் தொடங்கப் பெற்றது. அந்த வித்யாலயத்தில் பலர் பயிற்சி பெற்றுத் தமிழகத்திலும் மலேசியா முதலிய வெளிநாடுகளிலும் சைவக் கிரியாபாத விற்பன்னர்களாக விளங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் தமிழகச் சைவ நெறிக் கழகம்

சிவஸ்ரீ தத்புருஷ தேசிகரின் சீடர்கள் பலர் கூடி நெறிமுறையோடு கூடிய சமயத் தொண்டு எதிர்காலத்தில் எப்போதும் நிகழ்ந்து வரவேண்டும் என்று கருதி 1979-ஆம் ஆண்டில் சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் தமிழகச் சைவநெறிக் கழகம் என்னும் ஒரு கழகத்தை நிறுவினார். சிவஸ்ரீ தத்புருஷ தேசிகரின் பிறந்த நாளாகிய ஒவ்வொரு மார்கழிச் சுவாதியிலும் அவரது நாண்மங்கல விழாவைச் சிவபூசை மாநாடாகக் கொண்டாடுவது, சிவ பூசகர்கள் சேர்ந்து செய்யும் பூசையால் மக்களைச் சிவபூசை செய்யத் தூண்டுவது, தேசிகரின் நூல்களை அச்சுக்குக் கொண்டு வருவது ஆகியவை இக் கழகத்தின் நோக்கங் களாகும். ஆண்டுக்கு ஒருமுறை தமிழ் நாட்டின் முக்கிய ஊர்களில் இம்மாநாடு நடைபெற்று வருகிறது. 1999-இல் தத்புருஷ தேசிகர் இறைவனடி சேர்ந்ததும் திருக்குமாரர் சிவஸ்ரீ ஈசான தேசிகர் அவருடைய கழகத்துக்குக் குருமூர்த்தியாகப் பட்டத்திற்கு வந்தார். இப்பொழுதும் ஆண்டு தோறும் நடை பெறும் மாநாடு தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் நடைபெற்று வருகிறது. சிவஸ்ரீ ஈசான தேசிகர் தீக்கை கொடுத்தல், சொற்பொழிவுகள் நடத்து தல் என்று சிவஸ்ரீ தத்புருஷ தேசிகரின் பணியைத் தொடர்கிறார். ஒவ்வொரு குரு பூசையிலும் நூல் வெளியிடுகிறார். சிவஸ்ரீ தத்புருஷ தேசிகரின் கட்டுரைகள் அடங்கிய ''வழித்துணை'' 23-6-2002-இல் வெளியிடப்பட்டது.

வயிநாகரம் குடும்பத்தைப் பற்றியே தனியாக ஒரு நூல் எழுதலாம்.

இனி காலவரிசையில் நகரத்தார் பெருமக்கள் சிலரின் சைவப் பணி களைக் காண்போம். ஒன்று விடாமல் காண்பது என்பது இயலாத ஒன்று. சைவப் பணி செய்யாத நகரத்தாரே இல்லை. அத்தனையும் எழுதுவது என்றால் ஆயிரம் பக்கங்கள் ஆகும். அவர்கள் பற்றி நகரத்தார் நூல்கள் நிரம்ப இருக்கின்றன. முதலில் புரவலர்களைப் பார்ப்போம்.

கோட்டையூர் அ.க.சி.த. குடும்பம் (1875-ஆம் ஆண்டு) திருவண்ணா மலையில் பெரிய சத்திரம் கட்டினார். தம் பொருள் கொண்டும் நகரத்தார் பொருள் கொண்டும் 12,35,000 ரூபாய் செலவில் திருப்பணி செய்தார்.

இராமச்சந்திரபுரம் நாச்சியப்பச் செட்டியார் திருப்பாதிரிப் புலியூர் கோயில் திருப்பணிக்கும் இதர தருமங் களுக்குமாக 25 இலட்ச ரூபாய் செலவிட்டார். இவர்களது வாழ்க்கை வரலாற்றை ஞானியாரடிகள் எழுதி யுள்ளார். இவர்களது மகனார் திரு.நா. மு. முத்தையச் செட்டியார் (1883-1936) 32 இலட்ச ரூபாயில் அறப்பணிகள் செய்தார். இவரும், முருகப்பா செட்டியார், சிதம்பரம் செட்டியாரும் சேர்ந்து திருப்பாதிரிப் புலியூர் கோயிலுக்கு 12 இலட்ச ரூபாய் செலவில் திருப்பணியும், இலட்ச ரூபாய் செலவில் 6-3-1908, 28-6-1917களில் இருமுறை குடநீராட்டு விழாக்களும் நடத்தினர். திருவாசகத்தை நாடெங்கும் பரப்ப இரண்டணா (12 காசு) பதிப்பாக சென்னைச் சைவ பரிபாலன சபை வாயிலாக முத்தையச் செட்டியார் வெளியிட்டார்.

சிவநேசன் செட்டியார் (1883)

மடம், சங்கம், திருக்கூட்டம், இதழ், திருப்பணி - இத்தனையும் ஒருவரே செய்தார் என்றால் நம்ப முடியுமா? அப்படிச் செய்தவர் சிவநேசன் இராம சாமிச் செட்டியார்.

இவர் தனது ஊரில் திருவாசக மடம் ஒன்றை அமைத்தார். அதன் அருகே விநாயகர் கோயில் ஒன்று கட்டினார். மடத்தையும், கோயிலையும் ஒட்டி மணிவாசகச் சங்கம் அமைத்தார். பல அறிஞர்கள் இச்சங்கத்தில் பேசியுள்ளனர். காரைக்குடி சிவநேசன் திருக்கூட்டத்தில் பெரும் பங்கு வகித்தார். திருக் கூட்டத்தின் சார்பில் வெளிவந்த ''சிவநேசன்'' என்ற கிழமை இதழின் ஆசிரியப் பொறுப்பு ஏற்றார்.

தஞ்சைக்கு அருகில் உள்ள திட்டை எனும் திருக்கோயிலுக்கு திருப்பணி செய்ய விரும்பினார். இதற்காக அச்சகத்தையும், இதழையும் திட்டைக் குக் கொண்டு வந்துவிட்டார். அடி முதல் முடி வரை கருங்கல்லினாலேயே திருப் பணி செய்தார். அக்காலத்திலேயே திருப்பணி செலவு ரூபாய் லட்சம் ஆயிற்று.

அங்கும் ஒரு புதுமை செய்தார். பன்னிரு திருமுறைகளுக்கு எங்கும் கோயில் கிடையாது. திட்டையில் செட்டியார் திருமுறைகளுக்குக் கோயில் எழுப்பி வழிபடச் செய்தார்.

எழுபத்தேழு ஆண்டுகள் வாழ்ந்த செட்டியார் 1960-இல் மறைந்தார்.

மேலும் சில நகரத்தார் பெருமக்கள்

தேவகோட்டை ராமனாதன் செட்டியார்; இலக்குமணன் செட்டியார் இருவரும் சேர்ந்து திருக்கச்சி ஏகாம்பர நாதர் திருக்கோயில் திருப்பணிக்கு 20 லட்ச ரூபாய் செலவில் திருப்பணி செய்து குடநீராட்டு விழா செய்தனர்.

மெ. அரு. நா. இராமநாதன் செட்டியார், மெ. அரு. அரு. அருணாசலம் செட்டியார் இருவரும் இணைந்து திருக்காளத்தி திருக்கோயில் திருப் பணிக்கு 10 லட்ச ரூபாய் செலவில் திருப்பணி செய்து 21-4-1912-இல் குடநீராட்டு விழா செய்தனர். மகா சிவராத்திரியன்று தமது மனைவியாரின் தாலியை வாங்கி அம்பாள் கழுத்தில் அணிவித்து சிவபூசை செய்யலானார். சிவபூசை செய்து கொண்டிருக்கும் பொழுதே இறைவனடி சேர்ந்தார்.

சத்திரம் சோமசுந்தரம் செட்டியார் 1916-இல் சிவாகம சித்தாந்த பரிபாலன சங்கம் துவங்கப் பெரிதும் துணை புரிந்தார். காசி முதல் கண்டதேவி வரை பல சத்திரங்கள் கட்டியவர். காசி வாசி செந்திநாதையர் தமது நூல்களை அச்சிட உதவி வேண்டி செட்டியாரைச் சந்திக்க வந்தார். வந்தவர் குளத்தில் அனுட்டா

னம் செய்து கொண்டிருந்தார். இது அறியாத செட்டியார் பங்களா மாடியி லிருந்து இந்தக் காட்சியைப் பார்த்தார். ஓதுவாரை அழைத்து ''வெளியூர் அன்பர் ஒருவர் வந்திருக்கிறார். அவரை அழைத்து வாருங்கள்'' எனக்கூறி அனுப் பினார். மேலே வந்த செந்திநாதையர் புத்தகம் அச்சிட உதவி வேண்டும் என்றார். செட்டியார் அவர் பேரில் திருப்பரங்குன்றத்தில் வீடு வாங்கி, ஓர் அச்சகமும் வாங்கி, அதன் நிர்வாகச் செலவுக்காகவும், அவருடைய அன்றாடச் செலவுக்காகவும் முழுமை யாகப் பணமும் கொடுத்து, ''நீங்கள் வேண்டுமளவு அச்சிடுங்கள். முழுச் செலவுக்குமான பணம் என் பொறுப்பு. உங்கள் பணி முடிந்தவுடன் அச்சகத்தை நீங்களே வைத்துக் கொள்ளலாம்'' என்றார். சத்திரம் சோமசுந்தரம் செட்டியார் போல இன்று ஒருவர் இருந்தால் அச்சில் வெளிவராமல் இருக்கும் நூல்கள் பல வெளிவர ஏதுவாக இருக்குமே?

சோம. நாராயணன் செட்டியார்

10-6-1931-இல் பிறந்த ஜமீன்தார் சோம. நாராயணன் செட்டியார் மற்றுமொரு திருப்பணிச் செல்வர் ஆவார். காளையார் கோயில் (1983), தேவகோட்டை நகரச் சிவன் கோயில் (1989), உத்தரகோச மங்கை, பல்லவனீச் சுரம் (1995) ஆகிய கோயில்களில் குடநீராட்டு விழாவைத் தலைவராக இருந்து நடத்தி வைத்துள்ளார். நகரச் சிவன் கோயிலிலும், ஊரில் உள்ள பிற கோயில்களிலும் 1950 முதல் வார வழிபாடு நடத்தி வருகிறார். நகரத்தாரின் குருபீடங்களான பாதரக்குடி, துளாவூர் ஆகிய மடங்கள் மறுமலர்ச்சி பெற அறக்கட்டளை அமைத்துப் பெருந் தொகை திரட்டி அதன் வருவாயிலிருந்து மடங்களின் பணிகள் சிறப்புற நடை பெறவும், சைவ சமயச் கருத்தரங்குகள் முதலியன நடைபெறவும் இவரும் காசி ஸ்ரீ அரு. சோமசுந்தரமும் இணைந்து பாடுபட்டு வருகின்றனர்.

அருணாசலம் செட்டியார்

20-5-1900-இல் தேவகோட்டை ராம. அரு. அரு. அருணாசலம் செட்டியார் 2,30,000 செலவில் திருப்பணி செய்து குடநீராட்டும் செய்தார். பின்னர் அவரே எட்டு லட்சம் ரூபாய் செலவில் மிகத் திருத்தமாகத் திருப்பணி செய்து குடநீராட்டு விழாவும் நடத்தினார். அருணாசலம் செட்டியாருக்கு அவர் களுடன் எப்பொழுதும் ஏழு ஓதுவார்கள் இருப்பார்கள். செட்டியாருடன் 1008 சிவாலயங்களில் கட்டளை இருந்தது. அந்தந்த சிவாலயத்திலிருந்து திரு நீற்றுப் பிரசாதம் வரும் பொழுது அந்தத் திருக்கோயில் பதிகம் முழுமையும் ஓதுவாமூர்த்திகள் பாடுவார்கள். பாடி முடிக்க, முடிக்க ''சிவாயநம'' என்று உச்சரித்த வண்ணம் உடம்பு முழுதும் திருநீற்று பிரசாதத்தை அப்படியே பூசிக் கொள்வார். வண்டியில் காளை மாடு பூட்டிச் செல்ல மாட்டார். சிவபெரு மானின் வாகனம் அல்லவா?

அரு. சோமசுந்தரனார்

இருபதாம் நூற்றாண்டின் முதல் பொற்கிழிக் கவிஞர் அரு. சோ. என்றழைக்கப்படும் காசி ஸ்ரீ அரு. சோமசுந்தரன் ஆவார். மங்கையர்க் கரசியாரைப் பற்றி இவர் எழுதிய ''பாண்டிமாதேவி'' என்னும் காவியத்திற்காக 1973-ஆம் ஆண்டில் மதுரை அருள்மிகு மீனாட்சியம்மன் கோயிலார் நடத்திய காவியப் போட்டி யில் முதற்பரிசாகிய பொற்கிழி அரு. சோ.விற்கு வழங்கப்பட்டது. ''திரு முறைகள் வீட்டு நூல்'', ''அன்னை மீனாட்சி அந்தாதி'' உள்ளிட்ட நூறு நூல்கள் வெளியிட்டு உள்ளார். சைவ சமய சொற்பொழிவுகள் தொடர் விரிவுரைகள் நிகழ்த்தி வருகின்றார். பழநி, திருச்செந்தூர் பாதயாத்திரை செய்திருக்கின்றார். 1983-ஆம் ஆண்டில் அரு. சோ. தலைமையில் 13 பேர் கொண்ட குழு இராமேஸ்வரத்திலிருந்து காசிக்குப் பாத யாத்திரை மேற்



அரு. சோமசுந்தரனார்

கொண்டது. அரு. சோ. முயற்சியில் இதுவரை நான்கு பாத யாத்திரைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. துளாவூர், பாதரக்குடி ஆதீனங்களில் நிதிச் செயலராக இருந்து திருத்தொண்டு புரிகிறார். கோயிலூர் ஆதீனத்தில் ''சிந்தனைப் பூங்கா'' என்னும் அமைப்பின் செயலராக இருக்கின்றார். தேவகோட்டையில் நால்வர்க்குத் திருக்கோயில் எழுப்பி நாள் வழிபாடும், நால்வர் குரு பூசைகளும் முறையாகச் செய்து வருகிறார். முத்துப்பட்டணம், செல்வவிநாயகர் கோயிலில் வெள்ளிக் கிழமை தோறும் வாரவழிபாடு நடத்து கிறார். துளாவூர் ஆதீனத்தில் பத்து ஆண்டுகளாக நடக்கும் சமய வகுப்பு களுக்கு அரு. சோவே. அமைப்பாளர் ஆவார். *(பிறப்பு 14-8-1936; பிறந்த ஊர் - புதுவயல்; பெற்றோர் - முத்துராமன், மீனாட்சி)*

அரு. சோ. செட்டிநாட்டில் பக்தி மறு மலர்ச்சி இயக்கத்தின் ஊற்றுக்கண்; கோயிலூர், பாதரக்குடி, துளாவூர் மடங்களில் பக்திப் பொழிவுகள் செழிக்கச் செய்யும் ஒருங்கிணைப்பாளர்; சொல்லும் செயலும் ஒத்த உத்தமர்; இளைஞர்களுக்கு வழிகாட்டி; கவிஞர்; நூலாசிரியர்; சொற்பொழிவாளர்; அமைப்பாளர்; பல்கலை வித்தகர்.

மு. அ. சிதம்பரம் செட்டியார்

15-2-1941-இல் மு.அ. சிதம்பரச் செட்டியார் - ஒப்பிலாள் ஆச்சியின் மகனாக இளையாத்தங்குடியில் பிறந்த அ.சி. முத்தையா திருக்கடவூர் அபிராமி ஆலயத்தில் மாபெரும் முன்மண்டபத் திருப்பணி செய்தார். வைத்தீசுவரன் கோயில் திருப்பணிக் குழுத் தலைவராக இருந்து பணியாற்றினார். சென்னை தமிழிசைச் சங்கத்தில் ஆண்டுதோறும் நால்வர் விழாவை சொற்பொழிவு, திருமுறை இசை என்று சிறப்பாக நடத்தி வருகிறார்.

பிவி குளத்தார் வீடு முத்து வீரப்ப செட்டியார், அருணாசலம் செட்டியார் என்ற சகோதரர்கள் இருவரும் சிறந்த சிவனடியார்கள். திருவிசைநல்லூர் திருப்பணி உட்பட பலகோயில் திருப் பணிகளை மேற்கொண்டனர்.

எழுபது ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த நேமத்தான்பட்டி திருநாவுக்கரசு செட்டியார், திருநாவுக்கரசு பெருமான் பால் அளவு கடந்த பக்தி பூண்டவர். இன்றுவரை வீட்டில் எத்தனை குழந்தை பிறந்தாலும் பேரக்குழந்தைகள் பிறந் தாலும் - அத்தனை குழந்தைகளுக்கும் ஆணாயின் திருநாவுக்கரசு என்றும் பெண்ணாயின் திருநாவுக்கரசி என்றும் பெயர் வைத்துவிடுவார். வீடு, பள்ளி, தெரு அனைத்திற்கும் திருநாவுக்கரசர் பெயரே சூட்டியுள்ளார். இது தலை முறை தலைமுறையாக நடந்து வருகிறது.

இருபதாம் நூற்றாண்டில் ஓர் அப்பூதியடிகள்!

எழுபது ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த கடிகாப்பட்டி தி.சொ. சொக்கலிங்கம் செட்டியார் பல கோயில்களுக்குத் திருப்பணிகள் செய்துள்ளார்.

அறிஞர்கள்

இனி அறிஞர்களைப் பற்றிச் சிறிது சிந்திப்போம். பள்ளத்தூர் கா. இராம நாதன் செட்டியார் *(1899– 4-1-1966)* சைவ சித்தாந்த வித்தகர். ஏன் பிறந்தோம், சைவத்தின் சிறப்பு, வாழ்க் கையும் சமயமும், ஆழமும் அகலமும், ஞானச்

செய்தி, பார்ப்பது எது, திருவாசகத் தேன் ஆகிய நூல்களை எழுதியுள்ளார்.

வைரவன் கோயில் உ. அருணாசலம் செட்டியார் *(1901–19-10-1951)* காரைக்காலில் சில ஆண்டுகள் வாழ்ந்த போது காரைக்கால் சைவ சித்தாந்த வித்தியாசிரமத்தில் உறுப்பினர்களுக் காகச் சைவ சித்தாந்தச் சொற்பொழிவாள ராக விளங்கினார்.

இளையாத்தங்குடியில் பிறந்த நெ. ஆதி. மா. சிதம்பரம் செட்டியார் சாத்திர தோத்திரங்கள் கற்றுத் துறைபோகிய புலவர் ஆவார். தமிழ், வடமொழி அறிஞர். 1930-ஆம் ஆண்டில் வெளியிடப் பெற்றுள்ள ''காசி விஸ்வநாதர் கோயில் திருப்பணி முறையீடு'' என்னும் நூலில் 63 புராண நூல்கள் உள்ளிட்ட 139 நூல் கள், ஆகமங்கள் உள்ளிட்ட 23 வடமொழி நூல்களைப் பிரமாண மேற்கோள்களாக எடுத்துக் காட்டியுள்ளார். வடமொழி சுலோகங்களைத் தமிழ் எழுத்திலும், அதன் கருத்தைத் தமிழிலும் கொடுத்து உள்ளார். இந்நூல் வரலாற்றுக் குறிப் புடையதாகவும், இவருடைய பரந்து பட்ட ஆழமான இலக்கியப் புலமை யைக் காட்டுவதாகவும் அமைந்துள்ளது. இவர் எழுதிய பிறநூல்கள் :

1) தேவகோட்டைக் கலங்காத கண்ட விநாயகர் விண்ணப்ப மாலை *2)* அமிஞ்சிக்கரை வரசித்தி விநாயகர் பதிகம் *3)* தில்லைக் கற்பக விநாயகர் வெண்பா அந்தாதி *4)* தில்லைச் சிவகாமியம்மை பதிகம் *5)* தில்லைக் கற்பக விநாயகர் சதகம் *6)* தில்லைக் கற்பக விநாயகர் தோத்திரம் எழுபது

10-1-1934-இல் வைரவன் கோயிலில் பிறந்த முனைவர் வெ.சு. அழகப்பன் பதினோராம் திருமுறையில் ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்று ''பதினோராந் திருமுறைத் திறன்'' என்ற நூலும் எழுதியுள்ளார்.

7-5-1945-இல் புதுவயலில் பிறந்த முனைவர் பழ. முத்தப்பன் சைவசித்தாந் தத்தில் (அருணந்தி சிவாசாரியார் நூல்கள் - ஓர் ஆய்வு) ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றவர். திருமுறைகளில் அகக் கோட்பாடு, பெரியபுராணத்தில் மனிதநேயம், முப்பொருள் இயல்பு, ஞானாமிர்தம் (உரை), சிவஞான சித்தியார் உரை, சிவஞான முனிவரின் அந்தாதி இலக்கியங்கள் முதலிய 6 ஆய்வு நூல்களைப் படைத்துள்ளார்.

இனி சைவ அமைப்புகளைக் காண் போம். சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் வரலாற்றில் பல முக்கிய அமைப்பு களைப் பார்த்தோம். அதில் இடம் பெறாத பிற அமைப்புகளைப் பற்றி இங்கு காண்போம்.

மேலைச் சிவபுரி சன்மார்க்க சபை

பண்டிதமணி மு. கதிரேசன் செட்டி யாரின் நண்பர்களான மேலைச் சிவபுரியைச் சேர்ந்த புரவலர்கள் வ.பழ. சா. பழநியப்பா செட்டியார், அவர் தம்பி அண்ணாமலை செட்டியார் ஆகியோர் பண்டிதமணியின் தூண்டுதலால் 13-5-1909-இல் மேலைச்சிவபுரியில் சன்மார்க்க சபையினைத் தொடங்கினர்.

சன்மார்க்க சங்கத்தின் முக்கிய நோக்கங்களுள் தலையாயது அறிஞர் களின் சொற்பொழிவுகள் வாயிலாகத் தமிழும் சைவமும் வளர்த்தல். ''சபை தொடங்கியதிலிருந்து ஆண்டுதோறும் மூன்று நாட்கள் இலக்கியத் திருவிழா வாகச் சபையின் ஆண்டு விழா கொண்டாடப் பெற்றது வரலாற்றில் இடம் பெற்ற பசுமையான நிகழ்ச்சி. இவ்விழாவிற்கு போக்குவரத்து வசதிகள் பெருகாத அக்காலத்தில், செட்டிநாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும், ஆயிரக் கணக்கானோர் மாட்டு வண்டிகளில் வந்து, சொற்பொழிவுகளைக் கேட்டு பயன் பெற்றனர்.

விழாவிற்கு வந்த அனைவருக்கும் வ.பழ.சா. குடும்பத்தார் இந்த மூன்று நாட்களும் விருந்துக்கு ஏற்பாடு செய்த தோடு, அவர்களது வண்டி மாடுகட்கும் வைக்கோல் தண்ணீர் முதலியவை

வழங்கி, மூன்று நாள் முழுச் செலவு செய்து விழா நடத்தினர். 1910களிலிருந்து அவர்கள் செய்த தமிழ்ப்பணி இது.

சன்மார்க்க சபை ஆண்டு விழாவிற்கு வராத தமிழறிஞரோ, சைவசித்தாந்த வித்தகரோ இல்லை எனலாம். டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர், மு.ரா. கந்தசாமிக் கவிராயர், மு. ராகவையங்கார், ரா. ராகவையங்கார், டி.கே. சீனிவாச ஐயங்கார், விபுலானந்த அடிகள், திரு.வி.க. த.வே. உமாமகேசுவரம் பிள்ளை, ச. சோமசுந்தர பாரதியார், ந.மு. வேங்கடசாமி நாட்டார், வே.ப. சுப்பிரமணிய முதலியார், சி.கே. சுப்பிரமணிய முதலியார், கரந்தைக் கவியரசு வேங்கடாசலம் பிள்ளை, கா. சுப்பிரமணிய பிள்ளை, ரா.பி. சேதுப்பிள்ளை, டாக்டர் மு.வ. டாக்டர் வ.சுப. மாணிக்கனார் ஆகியோர் ஆண்டுவிழாத் தலைவர்களில் சிலர். இன்றைய இளைஞர்களுக்கு இவர்களில் ஒருவர் பெயராவது தெரியுமா என்பது கேள்விக்குறியே.

சன்மார்க்க சபையைப் பண்டித மணியின் சபை என்றே அறிஞர்கள் கூறுவர். அவர் கலந்து கொள்ளாமல் சபையில் எந்தவொரு விழாவும் நிகழ்ந்தது கிடையாது. பண்டித மணிக்குப் பின் வ.சுப. மாணிக்கனாரும் அவருக்குப் பின் தமிழண்ணலும் சபை வளர்ச்சியில் தமிழறிஞர் பங்கையும், வ. பழ. சா. குடும்பத்தார் நிருவாகப் பங்கையும் ஏற்றுச் செயல்பட்டுச் சபை தொடர்ந்து சிறந்த தொண்டு செய்யத் துணையாக உள்ளர்.

மணிவாசக சங்கம், பலவான்குடி (1910)

திருமுறைகள் ஓதுதல், சொற்பொழிவு, வழிபாடு, திருக்கூட்டம், குடநீராட்டு, இதழ் வெளியீடு, பாடசாலை எனப் பன்முகப் பணிகளை மேற்கொண்டது பலவான்குடியில் இருந்த மணிவாசக சங்கம் ஆகும். இவற்றுள் ஏதேனும் ஒரு பணியினைத் தொடர்ந்து நடத்துதலே கடினம். அப்படியிருக்கச் சங்கத்தை 32 ஆண்டுகளுக்கு மேலாகவும், திருக்கூட்டத்தை 19ஆண்டுகளுக்கு மேலாகவும் இதழை 15 ஆண்டுகளுக்கு மேலாகவும், நடத்தியது பெரும் சாதனையாகும். *(1942 மே "சிவநேசன்" இதழ் வரை கிடைத்தது. அதற்கு மேல் கிடைக்கவில்லை.)* இத்தகைய சங்கத்தின் வரலாற்றைப் பின்னோக்கிப் பார்ப்பது எழுச்சி தருவது ஆகும்.

குன்றக்குடிக்கு அருகில் உள்ள பலவான்குடியில் பிலவங்க வருடம் தை மாதத்தில் *(1908)* திருவாசகத் திருக்கூட்டம் தோன்றியது. அதிலிருந்து சாதாரண ஆண்டு ஆவணித் திங்களில் *(1910)* திருவாசக பாடசாலையும், மணிவாசக சங்கமும் நிறுவப் பெற்றன.

மணிவாசக சங்கம் 1942 மே வரை 32 ஆண்டு விழாக்களை நடத்தியுள்ளது. இந்த ஆண்டு விழாவில் பங்கு பெறாத அறிஞர்களும், ஆன்றோர்களும், தமிழ் மறை வாணர்களும் இல்லை எனலாம். தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்தும் சைவ அன்பர்கள் கலந்து கொண்டு இன்புற்றனர்.

இச்சங்கத்தின் 13-ஆம் ஆண்டு நிறைவு விழாவில் உருத்திரோற்காரி 1923-ஆம் ஆண்டு ஆவணி மாதம் 6,7 நாட்களில் தன வணிகர்கள் 16 பேரைக் கொண்டு சிவநேசர் திருக்கூட்டம் துவங்கப் பெற்றது. சிவாலய வழிபாடு இத்திருக்கூட்டத்தின் நோக்கம் ஆகும். இதன் செயலர் திரு. சேவு. மெ. மெய்யப்ப செட்டியார் ஆவார். ஆண்டு விழாக்களும் நடைபெறுவது உண்டு.

சிவநேசர் திருக்கூட்ட 4-ஆம் ஆண்டு நிறைவு விழாவன்று பிரபவ ஆண்டு ஆவணியிலிருந்து (1927) "சிவநேசன்" இதழ் வெளிவரத் தொடங்கியது.

இந்து மதாபிமான சங்கம்

"இந்து மதத்தைப் பரப்ப வேண்டும்" என்ற நோக்கத்தோடு

10-9-1917-இல் காரைக்குடியில் இந்து மதாபிமான சங்கம் சொ. முருகப்பனார், இராய. சொக்கலிங்கம் போன்ற இளைஞர் களால் தோற்றுவிக்கப் பட்டது. திரு.வி.க. பல ஆண்டு விழாக்களில் தலைமை தாங்கியிருக்கிறார். காந்திஜிக்கு சங்கம் வரவேற்பு தந்துள்ளது. இராஜாஜி சங்கக் கட்டடத்தைத் திறந்திருக்கிறார். பாரதியார் வாழ்த்துக் கவிதை பாடியிருக் கிறார். வ.உ.சி., வ.வே.சு. ஐயர், ஞானியார் சுவாமிகள், ஈசான சிவாச் சாரிய சுவாமிகள், விபுலானந்த சுவாமிகள், வீர. சுப்பைய சுவாமிகள், வேங்கடசாமி நாட்டார், டி.கே.சி., சோமசுந்தர பாரதியார், பண்டிதமணி, ரா.பி. சேதுப்பிள்ளை, ஜகவீர பாண்டியன், உமாமகேசுரம் பிள்ளை, சரவண முதலியார் போன்றோர் தலைமை தாங்கியும், விரிவுரையாற்றி யும் உள்ளனர். இந்து மதம் என்பதால் சைவம், வைணவம் என்ற பேதமில்லா மல் நிகழ்ச்சிகள் நடந்துள்ளன.

சங்கத்திற்கு உரிமையாக உள்ள ஐந்து கட்டடங்களுக்கு நால்வர் பெயரும், சேக்கிழார் பெயரும் சூட்டப்பட்டு உள்ளன. 1967-இல் சங்கம் நடத்திய பொன் விழாவில் வெளியிடப்பட்ட பொன்விழா மலர் சைவப் பெரியோர் களின் வரலாற்றுக் களஞ்சியம் ஆகும். திரு.வி.க. பற்றி வரலாற்று அறிஞர் வெ. சாமிநாத சர்மா, சுப்பிரமணிய சிவா பற்றி விடுதலைப் போராட்ட வீரர் சா. கணேசன், வ.வே.சு. ஐயர் பற்றி சுத்தானந்த பாரதியார், உ.வே.சா. பற்றி இரா. சாரங்கபாணி, ஞானியார் சுவாமிகள் பற்றி அவரது சீடர் அ. நடேச முதலியார், ஈசான சிவாச்சாரியார் பற்றி இராய. சொக்கலிங்கனார், சொக்கலிங்க ஐயா பற்றி ராம. திருநாவுக்கரசு செட்டியார், கவிமணி பற்றி எஸ். மகராஜன், டி.கே.சி. பற்றி குழந்தையன் செட்டியார், பண்டிதமணி பற்றி லெ.ப.கரு. இராமநாதன் செட்டியார் ஆகியோர் எழுதியுள்ளனர். தாங்கள் வாழ்ந்த காலத்தில் இருந்த பெரியார் களைப் பற்றி அவர்களோடு பழகி யவர்கள் எழுதுவது என்பது அரிய வரலாற்றுப் பதிவாகும்.

''பலநூல்கள் பதிப்பித்தும், பல பெரியோர்கள்
பிரசங்கம் பண்ணுவித்தும்,
நலம் உடைய கலாசாலை புத்தகசாலை
நாட்டியும் தம்
குலம் உயர நகர் உயர நாடு உயர
உழைக்கின்றார் கோடி மேன்மை
நிலவுற இச்சங்கத்தார் பல்ஊழி வாழ்ந்து
ஒளிர்க நிலத்தின் மீதே''
- பாரதியார்.

சிவநேசர் திருக்கூட்டம்

17-3-1922-இல் சொ. முருகப்பா ''காரைச் சிவனடியார் திருக்கூட்டம்'' என்ற அமைப்பைத் தொடங்கினார். இவ்வமைப்பின் சார்பில் அமைப்பின் தலைவராகிய சொ. முருகப்பாவையே ஆசிரியராகக் கொண்டு மே 1922 முதல் ''குமரன்'' இதழ் வெளி வரத் தொடங் கியது. இவ்வமைப்பின் இன்றியமையாத பணியாக நகரத்தார் ஊர்கள் தோறும் கோயில்களிலும், வீட்டுப் படைப்பு களிலும் உயிர்ப் பலியைத் தடுக்கப் பிரச்சாரமும் போராட்டமும் நடத்தியிருக் கின்றனர். இவ்வமைப்பின் சார்பிலேயே திரு.வி.க. எழுதிய ''நாயன்மார் வரலாறு'' முதன் முதலில் வெளியிடப் பெற்றது.

இந்தச் சூழலில் செட்டி நாட்டைச் சேர்ந்த சிவபூசைச் செல்வர்கள் பலர் சேர்ந்து காரைக்குடி சொக்கலிங்க அய்யா தலைமையில் ''சிவநேசர் திருக்கூட்டம்' என்ற அமைப்பை *1923* செப்டம்பரில் பிள்ளையார் பட்டியில் தொடங்கினர். செட்டிநாடு ஊர்களில் அகர வரிசைப்படி ஒவ்வொரு மாதமும் பூர்வபட்ச பிரதோஷத்தன்று ஆலயவழிபாடு செய்து சைவ சொற்பொழிவுகள் நிகழ்த்துவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். ஆண்டு நிறைவு விழாவை 9 நகரக் கோயில்களில் அகர வரிசைப்படி வருடம் ஒரு கோயிலில் விநாயக சதுர்த்தியன்று கொண்டாடி வந்தனர். பலவான்குடியைச்

சேர்ந்த இராம. கு. இராமசாமிச் செட்டியார் 1927-இல் இவ்வமைப்பின் சார்பில் ''சிவநேசன்'' என்ற வார இதழைத் தொடங்கி நீண்டகாலம் நடத்தி வந்தார்.

54. மதுரை

பன்னிரு திருமுறை மன்றம்

மன்றங்களும், மாந்தருமாய் மணம் பரப்புகின்றது மதுரைச்சைவம். அதோ! கோயிலை வலம் வருகின்றன. மார்கழி மாதம் மட்டும் இல்லை; ஆண்டு முழுமையும் வாரத்தில் மூன்று நாட்கள் வலம் வரும் பாதங்கள். இருபத்துநான்கு ஆண்டுகளாக (1981 முதல்) ஆங்கில புத்தாண்டு முதல் நாளில் திருவாதவூர் நடைப்பயணம் மேற்கொள்ளும் பாதங்கள்; முப்பது ஆண்டுகளாக தமிழ் புத்தாண்டு நாளில் திருப்பரங்குன்றம் நடைப்பயணம் புரியும் பாதங்கள்.



ஒரு பெரியவர் நெற்றியில் திருநீறும், இடுப்பில் ''சிவ சிவ'' துண்டும் கையில் தாளமேந்தியவராய் மார்கழிப்பனியில் காலைப்பொழுதில் திருவெம்பாவைப் பாடல்களைப் பாடிக்கொண்டு மீனாட்சி யம்மன் திருக்கோயிலை வலம் வருகின்றார். அவரைச்சூழ்ந்து முப்பது அடியவர்கள் பண்ணிசைத்து வருகின்றனர். மார்கழி மாதம் முப்பது நாட்களும் இத்திருப்பாதங்கள் மீனாட்சியம்மன்

''அடியார் திருப்பாதங்கள் காணீரோ!
அன்பு நெஞ்சீர் காணீரோ!''

அப்படி நடந்த - நடக்கும் - பாதங்கள்தான் மதுரையில் இன்றளவும் சைவத்தையும் திருமுறைகளையும் வளர்த்து வருகின்றன. அப்பாதங்களின் சொந்தக்காரர்கள் மதுரை பன்னிரு திருமுறை மன்றத்தார்; அவர்களை நடத்திச் செல்பவர் அதன் செயலர் திரு. நீ. சீ. சுந்தரராமன் ஆவார்.

158 இல்லங்களில் இல்லந்தோறும் திருமுறைப்பாராயணம் செய்தல்; 156க்கும் மேற்பட்ட இலவச வெளியீடுகள் வெளியிடுதல்; அறுபான் மும்மை நாயன்மார் குருபூசைகளைத் தக்கவாறு நடத்துதல்; விரும்பும் அன்பர்களுக்கு தீட்சைகள் செய்வித்தல்; ஆண்டுக்கு இருமுறை தலவழிபாடு நிகழ்த்துதல்; பலமுறை திருமுறை இசை அரங்குகள், மாதந்தோறும் பதிகச் சிந்தனைகள், 108 முறை திருவாசக முற்றோதல்கள், உழவாரத் தொண்டு - என மன்றத்தின் பணிகள் விரிகின்றன. மன்றத்தின் ஆண்டு விழா நிகழ்ச்சிகள் குறிப்பாக வெள்ளிவிழா நிகழ்ச்சிகள் பன்னிரெண்டு நாட்கள் பன்னிரு திருமுறைகளைப் பற்றி, தலைசிறந்த அறிஞர்கள் பேசவும், ஓதுவா மூர்த்திகள் பண்ணிசைக்கவும், சைவத் திருமடங்களின் குரு மகா சந்நிதானங்கள் ஆசி வழங்கவும் என மிகச் சிறப்பாக அமைக்கப்பட்டு நடத்தப் பெறுகின்றன. ''உழவாரம்'' அமைப்பின் இரண்டாம் திருமுறை மாநாடும் மன்றத்தால் வெகு சிறப்பாக நடத்தப்பெற்றது. மன்றத்தின் வெள்ளிவிழா, பொன்விழா, திருமுறை மாநாட்டு மலர்கள், ஞானப்பேழை ஆகிய வெளியீடுகள் ஒவ்வொரு நூலகத்திலும் பேணப்படுகின்ற கருவூலங்கள் ஆகும்.

''உழவாரம்'' திங்கள் இதழ் இருபத்தோர் ஆண்டுகளாக வெளி யிட்டு வருவது மன்றத்திற்குச் சிகரமாய் விளங்குகிறது.

30-8-1953 அன்று சுழியல் கோவிந்தசாமி பிள்ளையவர்கள் முயற்சியில் துவங்கப்பெற்ற இம்மன்றத்தின் முதல் தலைவர் திரு. ம.க. சுந்தரேசப்பட்டர் ஆவார். முதல் செயலர் திரு. என். எஸ். சீனிவாசப்பிள்ளை ஆவார். தற்போது செயலர் நீ.சீ. சுந்தர ராமன் ஆவார்.

பிற அமைப்புகள்

சைவ சித்தாந்த சபை 3-3-1957 அன்று தொடங்கப்பெற்றது. ஒவ்வொரு வாரமும் செவ்வாய் வெள்ளி அன்று திருமுறை வகுப்புகளும் ஞாயிற்றுக் கிழமை அன்று சித்தாந்த சாத்திர வகுப்பும் சபையில் நடைபெற்று வருகின்றன.

செயலர். திரு. தி.சு. கோவிந்தசாமி பிள்ளை; தலைவர் திரு. தே. கற்பூரசுந்தர சிவாசாரியார்.

1972-இல் தொடங்கப்பெற்ற திருநகர் திருமுறைமன்றம் வாரந்தோறும் சமயச் சொற்பொழிவு நடத்துதல், மார்கழி மாதம் திருவெம்பாவை வகுப்பு நடத்துதல், பெரியபுராண தொடர் நடத்துதல், மாதந்தோறும் திருவாசக முற்றோதல், பௌர்ணமி தோறும் திருமுறைப்பாடல்களைப் பாடி திருப்பரங்குன்றம் கிரிவலம் வருதல் என பணியாற்றி வருகின்றது. இதன் தலைவர் செல்வநாயகம்.

சிவனடியார் திருக்கூட்டம்

31-7-1988 அன்று தமிழ்நாடு சிவனடியார் திருக்கூட்டம் தொடங்கப்பட்டது. சிவஞானபோத வகுப்புகள் நடத்துதல், துண்டுப் பிரசுரங்கள் வழங்குதல் (100க்கு மேல்) ஆயிரம் பேருக்கு மேல் தீட்சை வழங்குதல், பிரதோஷ வழிபாடு ஏற்பாடு செய்தல் என மன்றத்தின் பணி விரிகின்றது. மீனாட்சியம்மன் கோயிலில் சந்தானாசாரியார்களின் திருவுருவச்சிலைகளைத் திருக்கூட்டத்தார் பிரதிட்டை செய்து உள்ளார். மன்றத்தின் பொருளாளர் மு.அ. இராதாகிருஷ்ணன் செட்டியார் ஆவார்.

1990-இல் தொடங்கப்பெற்ற அண்ணா நகர் சர்வேசுவரன் பக்தசபை மாசி மாதத்தில் 30 நாட்களும் முப்பது பேச்சாளர்களைக் கொண்டு பெரிய புராணச் சொற்பொழிவு நடத்தி வருகிறது. தலைவர் - நடராஜ அண்ணாமலை; பொருளாளர் பி.எல். சுப்பிரமணிய செட்டியார்.

போற்றிப் புரக்கும் புரவலர்கள்

ம.க. சுந்தரேசபட்டர்



பன்னிரு மன்றத்தைப் போற்றிப் புரந்த - புரக்கின்ற - புரவலர்கள் பலர் ஆவர். மன்றத்தின் முதல் தலைவர் சிவபூஜா துரந்தரர் திரு.ம.க. சுந்தரேச பட்டர் ஆவார். தன் வாழ் நாள் முழுவதும் தலைவராக இருந்தார். தோற்றப் பொலிவும் இசையோடு பாடி சபைகளில் எல்லாரையும் கவரும் வண்ணம் பேசும் ஆற்றலும் வாய்க்கப் பெற்றவர். சமயச் சொற்பொழிவுகள், கும்பாபிடேகங்கள் நிகழ்வதற்கு முன்னின்று பாடுபட்டவர். 1978 மே எட்டாம் தேதி இறைவனடி சேர்ந்தார்.

எஸ். தர்மலிங்கமுதலியார்



திரு.எஸ். தர்மலிங்க முதலியார் தான் தமது இல்லத்தில் பன்னிரு திருமுறை மன்றத்தை தோற்று வித்தவர். நாளொன்றுக்கு ஐம்பது பாடல்களாக ஓர் ஆண்டில் பன்னிரு திரு முறைகள் முழுவதையும் பாராயணம் செய்து முடிப்பார். சிவபூஜை போன்றே பன்னிரு திரு முறைகளையும் சிவபெருமானாகவே பாவித்து, பூஜை செய்து, தமது குரு மூர்த்தியிடமே பெற்றுக் கொண்டார். பாராயண முதலிலும், முடிவிலும் மலர் தூவி வழிபடுவார். பாராயணம் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்க உருகி உருகிச் செய்வார்.

ஆத்மார்த்தமூர்த்தம் திருவாவடுதுறையில் எழுந்தருளியுள்ள ஒப்பிலா முலையம்மை உடனாய மாசிலாமணி ஈசனை ஆவாகனம் செய்து ஆகம விதிப்படி அகோர சிவாச்சாரியர் பத்ததியில் உள்ளவாறு பூசிப்பதோடு செவ்வாய்க் கிழமைதோறும் வைத்தீஸ்வரன் கோயில் தையல்நாயகி அம்மன் உடனாய அருள்மிகு வைத்தியநாத பெருமானையும் புற்று மண்ணால் செய்த சிவலிங்கத்தில் ஆவாகனம் செய்து முன்போலவே பூசித்து இறுதியில் சண்டேசர் பூஜையை மட்டும் செய்து அருள் பெறுவார். மதுரைக்கு மாற்றலாகி வந்து முதல் ஒவ்வொரு திங்கட் கிழமையும் புற்று மண்ணால் இரண்டு அங்குல உயரமுள்ள இலிங்கத்தின் மீனாட்சியம்மை உடனாய சுந்தேரசப் பெருமானை ஆவாகனம் செய்து, பூசை செய்து திருவாலவாய்த் திருப்பதிகங்களைப் பாராயணம் செய்வார். தலமுறை அடங்கன் முறை தேவாரத்தில் உள்ள முறைப்படி சிதம்பர முதல் திருநொடித்தான் மலை வரை உள்ள 274 பாடல் பெற்ற திருத்தலங்களில் உள்ள பெருமானை அந்தந்த திருத்தலத்தில் அமைந்த சாமி, அம்மன் திருநாமம்படி மேலே கண்ட முறைப்படி ஞாயிற்றுக் கிழமைதோறும் பூசை செய்து தமது பன்னிரு திருமுறைப் பாராயணம் தவிர அன்று பூசை செய்த திருத்தலத் திருப்பதிகங்களில் பாராயணம் செய்வார். ஏராளமான பதிகங்கள் உள்ள சீர்காழி, சிதம்பரம், திருவாரூர் முதலிய திருத்தலப் பெருமானார்களைப் பூசிக்கும் பொழுது மேற்படி தலமூவர் தேவாரப் பாராயணம் முடிவு பெறும் வரை 4 அல்லது 5 வாரங்கள் ஆனாலும் அந்த 4, 5 வாரங்களிலும் பாராயணம் செய்யப்பெறும் திருத்தலநாதனையே பூசிப்பார். ஞாயிற்றுக்கிழமை முதலிய

நாட்களில் சிவபூஜா துரந்தரர்களையும் தேவார ஓதுவா மூர்த்திகளையும் பாராயணம் மட்டும் செய்யும் அடியார் களையும் தமது இல்லத்திற்கு வர வழைத்து உபசரித்து நாலுவித அறுசுவை உண்டி அருத்துவார். மன்றத் தலைவராக இருந்து பணியாற்றியதோடு தானும் பெரிய புராண விளக்கவுரையாற்றி சிவக்கவிமணி சி.கே.எஸ். அவர்களின் உரைத்திறமையையும் விளக்குவார். சிவபூஜை பாராயணம் செய்த நேரம் தவிர எஞ்சிய நேரங்களில் பன்னிரு திருமுறை ஆராய்ச்சியும் அறுபத்துமூன்று நாயன்மார் திருத்தொண்டின் திறங்களை யும் நினைந்து உருகுவார். தர்மலிங்கம் முதலியார் வாழ்வு தவ வாழ்வு ஆகும்.

முத்துபழனியப்பச் செட்டியார்



திருமுறை வளர்ச்சிக்காகத் தன் வாழ்வை அர்ப்பணித்தவர் முத்து பழனி யப்பச் செட்டியார் அவர்கள். எந்த திருக் கோயிலில் குடநீராட்டு நடந்தாலும் செட்டியார் அவர்கள் திருமுறை பண்ணிசைக்கப் பன்னிரண்டு ஓதுவா மூர்த்திகளின் செலவினை ஏற்றுக் கொள்வார்கள். சிறு கோவிலுக்கு 3 அல்லது 4 ஓதுவார்களை அனுப்பு வார்கள். திருவண்ணாமலை திருக் கோவில் குடநீராட்டு விழாவிற்கு 63 ஓதுவா மூர்த்திகளை ஏற்பாடு செய் தார்கள். இதுபோல சிதம்பரம், இராமேஸ்வரம், மதுரை (49 ஓதுவார்கள்) திருவாரூர் உள்ளிட்ட 300 திருக்கோயில் களில் குடநீராட்டு விழாக்களுக்குத் திருமுறை வாணர்களை ஏற்பாடு செய்தார். இது பெரும் சாதனை யாகும். செட்டியார் மதுரை, முக்குறுணி விநாயகர் திருப்பணிச் செலவு முழுமையும் ஏற்றுச் செய்தார். மருத்துவ உதவி, திருமண உதவிகளுக்கென மாதம் ஐம்பதாயிரம் வரை செலவிட்டார். (தோற்றம்; 9-4-1914 மறைவு 22-12-1996; பிறந்த ஊர்; சங்கந்தி; சிவகங்கை மாவட்டம் (பாகனேரி)

''தேவாரப் பண்ணையிலே முளைத்த சம்பா
திருமுறைக்குச் சிவபெருமான் கொடுத்த
வேலி''

சொ.சொ.மீ. சுந்தரம்



பெரியவர் அவர்களின் பணியை அவரது திருமகனார் மு. பழ. கண்ணப்பச் செட்டியாரும் தொடர்கின்றார். ஓதுவார் களைப் புரத்தல், திருப்பணி செய்தல்; ''உழவாரம்'' இதழின் மதிப்பியல் ஆசிரியர் பொறுப்பு ஏற்றல்; அப்பர் சதயவிழா என கண்ணப்பர் தொண்டும் தொடர்கிறது. (தோற்றம் 6-5-1942)

''சிந்தையுடன் செயல் செல்வம் எல்லாம்
சைவத்
திருமுறைக்கே என வாழும் செழுமை
தோன்றும்
தந்தையைப்போல் திருமுறைசொல்
ஓதுவார்க்குத்
தளராமல் கொடுக்கின்ற தகவு தோன்றும்''

என்று பொற்கிழிக்கவிஞர் சொ. சொ. மீ. சுந்தரம் பாடி மகிழ்கிறார்.

''மதுரையிலே அடையாத நெடுங்க தவம்
கண்ணப்பர்
மாளிகையும் மாசற்ற மனமும்தான்
அங்குதங்கி
மதுரையிலே ஓதுவார்கள் காதலொடு
பெருமை சொல
மதுரையிலே கண்ணப்பர் 'பதிகவழி'
புரக்கின்றார்''.

என்று பல்லாண்டு பாடுகின்றார் மதுரை தா. குருசாமி தேசிகர்.

இராதா தியாகராஜன்



மதுரையிலே மற்றுமொரு முத்தான குடும்பம் கலைஅன்னையார் முனைவர் திருமதி இராதா தியாகராஜன் அவர்களுடையது ஆகும். இவரும் இவரது திருமகனார் கருமுத்து தி. கண்ணனும் திருவாதவூர் திருக் கோயிலுக்குத் திருப்பணிகள் செய்து குடமுழுக்கும் நிகழ்த்தினர். தியாகராசர் கல்லூரியில் திங்கள்தோறும் சைவ சித்தாந்த சொற்பொழிவுகள் அறிஞர் களைக் கொண்டு நடத்தி வருகின்றார். திருப்பரங்குன்றத்தில் ''அருள் ஞானசபையைத்'' தோற்றுவித்து ஞான தானம் வழங்கி வருகிறார். திருவாசகம் பற்றி இனிக்க இனிக்கப் பேசும் ஆற்றல் வாய்ந்த அம்மையார் திருவாசகத்தில் முனைவர் பட்டம் பெற்றும் ''திருவாசகத்தில் அருளியல்'' என்று அரிய நூலை வெளியிட்டும் பணி புரிந்துள்ளார்கள்.

கருமுத்து சொக்கலிங்கம் செட்டியார்



கருமுத்து குடும்பத்தில் மற்றுமோர் முத்து கருமுத்து சொக்கலிங்கம் செட்டியார் ஆவார். திருக்கோயில் வழிபாடு, திருமுறை வளர்ச்சி, பாடல் பெற்ற தலங்களில் திருப்பணி ஆகிய மூன்று பணிகளும் சொக்கலிங்கனார்க்கு மூன்று கண்கள் ஆகும். சொக்கலிங்கனார் தமது வளமனையில் திருவிளையாடற் புராணம் வகுப்பு நடத்திய போது, வெள்ளியம்பலத் திருக்கூத்தாடிய படலத்தின் நிறைவு விழாவில், மார்கழி மாதத்துத் திருவாதிரை நட்சத்திரம் தொடங்கி, மேல்வரும் மார்கழி மாதத்துத் திருவாதிரை நட்சத்திரம் வரையும் பொற்றாமரைத் திருக் குளத்திலே நீராடி வெள்ளியம்பலத் திருக் கூத்தைத் தரிசித்து அங்கிருந்து கொண்டு பஞ்சாட்சரத்திலே நூற்றெட்டு உருச் செய்து சபிப்பவர்கள், தாம் தாம் நினைத்த வரங்களைப் பெறுவார்கள் என்ற செய்தியைக் கேட்டளவில் அந்த நிமிடமே சங்கல்பம் செய்து கொண்டு அந்த ஆண்டு மார்கழி தொடங்கி, அடுத்த மார்கழி திருவாதிரையில் செயல் முடித்தார்.

ஒரு முறை தொழில் நிமித்தம் பம்பாய் செல்ல வேண்டியிருந்தது. தான் மேற்கொண்ட செயல் முட்டுப்படாமல் இருக்க காலை விமானத்தைப் பிடித்து நேராக மதுரை வந்து திருக்குளத்திலே நீராடி வெள்ளியம்பலவாணரைத்

தரிசித்து பஞ்சாக்கரம் ஓதி வழிபட்டுப் பின் மறுவிமானத்தில் பம்பாய் சென்று விட்டார். எடுத்த பணியை முடிக்கும் பெரியபுராண கொள்கைப்பிடிப்பு! கருமுத்து சொக்கலிங்கனார் பாடல் பெற்ற தலங்களில் உள்ள திருக்கோயில் களில் திருப்பணி நடத்த வேண்டும் என்பதில் குறியாக இருந்தார்.

சிதம்பரம் அருள்மிகு நடராசப் பெருமான் சிவகாமியம்மை ஆலயத் திருப்பணியை இருமுறை முன்னின்று செய்துள்ளார். மற்றும் திருவானைக் காவல், திருமயிலை, சிக்கல், சீர்காழி, திருக்கோலக்கா, திருவெண்காடு, திருச் செய்ஞலூர், திருவாப்பாடி, திருவுத்தர கோசமங்கை, காவிரிப்பூம்பட்டினம் கோயில்களுக்கும் பெரும்பொருள் நன்கொடை வ்ழங்கித் திருப்பணி செய்து உள்ளார்.

இவரை நேரில் பார்த்தால் ஒரு தொழிலதிபர் போலவே தோன்ற மாட்டார். சைவச் சூழலில் பங்கேற்க வரும் பொழுது மேலே சட்டை கூட அணியமாட்டார். இடுப்பிலே ''சிவ சிவ'' துண்டு; கழுத்து நிரம்ப உருத்தி ராக்க மாலைகள்; திருநீறு பூசிய மேனி: சிவனடியார் திருக்கோலம்தான்!

மிக இளவயதில் இறைவனடி சேர்ந் தாலும் அதிலும் சிவபுண்ணியம் கலந்துள்ளது. திருக்கயிலைப்பயணம் மேற்கொள்ள நேபாளம் வரை சென்று விட்டார். நேபாளத்தில் உடல் நலக் குறைவு ஏற்பட்டுக் கயிலை நாதனையே சிந்தித்து அவன் திருவடி சேர்ந்தார்.


(தோற்றம் - 29-4-1943; மறைவு - 30-5-1997; பெற்றோர் - கருமுத்து தி. சுந்தரம் செட்டியார் - அலமேலு ஆச்சி; பிறந்த ஊர் - மாத்தூர் - மணலூர், ஆ. தெற்கூர்)

மு.சா. இராதாகிருஷ்ணன் செட்டியார்

சமய தீட்சை, விசேஷ தீட்சை, நிர்வாண தீட்சை, அபிஷேக தீட்சை வரை செய்து வைக்கப்பெற்றவர். 1989-ஆம் ஆண்டு திருவாடானையில் சிவதீக்ஷா வைபவத்தைப் பெருவிழாவாகச் செய் தவர். சுந்தரமூர்த்தி சுவாமிகளின் ஆடிச் சுவாதிப் பெருவிழாவினை ஆண்டு தோறும் சிறப்பாக நடத்தி வந்தார். தமிழ்நாடு சிவனடியார் திருக்கூட்டத்தின் பொருளாளர் ஆவார். கும்பாபிஷேகத் திருப்பணிகளில் ஈடுபாடு, சாத்திர - தோத்திர - போற்றிப் பனுவல்கள் சிறு சிறு வெளியீடுகளாக வெளியிடுதல் - இவர் மேற்கொண்டு வரும் பிற பணி களாம்.

(தோற்றம்; 17-7-1937; பிறந்த ஊர் - மதுரை; பெற்றோர்; அப்புசாமி செட்டியார் - சிவநாயகி அம்மாள்.)

கி. பழநியப்பனார்



1943 டிசம்பர் 27, 28, 29 தேதிகளில் மதுரையில் சைவ சித்தாந்த மாநாடு நடைபெற்றது. அதில் கலந்து கொள்ள திரு.வி.க. மதுரை வந்திருந்தார். அவரைச் சந்தித்த பழநியப்பனார் ''தேவாரப் பாடல் ஆலயங்களில் ஒலிக்க வில்லையே,'' என்று குறைப் பட்டுக் கொண்டார். அப்பொழுது அற நிலையத்துறை ஆணையராய் இருந்த திரு டி.எம். நாராயணசாமி பிள்ளை யிடம் ஒரு விண்ணப்பம் கொடுத்தார். மதுரை ஆதீனத்திற்குச் சென்ற நாராயண சாமிப் பிள்ளையவர்கள் குருமகா சந்நிதானம் அவர்களிடம் இந்த விவகாரத்தைக் கூறி இரண்டு ஓதுவார்

களை அனுப்பக் கோரினார். குருமகா சந்நிதானமவர்களும் இரண்டு ஓதுவார் களை அனுப்பினார். ஆனால் சம்பளம் மிகக்குறைவு (மாதம் 7 ரூபாய்). இந்த விவரங்களை பழநியப் பனார், திரு.வி.க அவர்களிடம் கூற, அவர் ஆணையரிடம் முறையிட்டு மதுரை மட்டுமல்லாது தமிழகத்தின் பல கோயில்களிலும் தேவாரம் பாட ஏற்பாடு செய்து ஊதியத்தையும் ரூ.50 ஆக உயர்த்த வழி வகை செய்தார்.

அறுபடை வீடுகளில் ஒன்றான பழமுதிர்சோலையில் முருகன் ஆலயம் ஒன்று இல்லையே என்ற ஏக்கம் பழநியப்பனாரிடம் வெகு நாட்களாக இருந்து வந்தது. இரண்டு மலைகளுக் கிடையே அடர்ந்த காட்டில் பாழடைந்த மண்டபம் இருந்ததாகவும், அது திடீரென்று கோயிலாக மாறியதாகவும் தான் கனவு கண்டதாகக் கூறினார். அதைப் பற்றியே பல நாட்கள் சிந்தனை செய்து வந்தார். அழகர் கோயிலுக்குச் செல்லத் திட்டமிட்டார், அந்தக் காலத்தில் மலைமீது செல்ல நல்ல வண்டிப் பாதை கிடையாது. கல்லிலும் காட்டிலும் ஏறி இறங்கித்தான் செல்ல வேண்டும். இரண்டு, மூன்று முறை சென்று வந்தார்.

மூன்றாம் முறை சென்ற பொழுது காட்டெருமை குறுக்கே சென்றது. அது சென்ற இடத்தைப் போய்ப் பார்த்தார். அங்கே ஒரு பாழடைந்த மண்டபம் இருந்தது. இன்னும் சற்று சுற்று முற்றும் பார்த்தார். புதையுண்ட கல் ஒன்று தென்பட்டது. அக்கல்லைப் புரட்டிப் பார்த்த பொழுது அதில் வேல் ஒன்று பொறிக்கப்பட்டிருந்தது. அந்தக்கல்லைப் பத்திரப்படுத்திவிட்டுப் பழநியப்பனார் மதுரை திரும்பினார். 12-7-1959 அதிகாலைப்பொழுதில் மீண்டும் அழகர் மலை சென்று வேல்பொறித்த கல்லை நீராட்டி இடிந்த மண்டபத்திற்கு முன் நிறுத்திப் பாலபிஷேகம் செய்தார். ஆராதனை முடிந்ததும் நண்பர்களுடன் ஊர் திரும்பினார். உடனடியாகத் திருப்பணி முயற்சியும் எடுத்து பணியை நிறைவேற்றினார். அழகர் கோயில் பெருமானுக்கு எதிராக முருகன் கோயில் எழுப்பப்படுகின்றது என நீதி மன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. குடமுழுக்கு நடைபெறாமலிருக்கத் தடையுத்தரவு பிறப்பிக்க நீதி மன்றத்தின் மூலம் முயற்சி எடுப்பது அறிந்த பழநியப்பனார் இரவுக்கிரவே குடமுழுக் கிற்கான பொருள்களைச் சேகரித்து திருப்பரங்குன்றத்திலிருந்து பட்டர்கள், மேளம் மற்றும் பொருள்கள் எடுத்துக் கொண்டு 100 நபர்களுடன் இரவோடு இரவாக மலைக்குச் சென்று மறுநாட் காலை பொழுது புலரும் நேரத்தில் குடமுழுக்கினைச் செய்து முடித்தார்.

திருப்பணி முடிந்த நிலையில் பழநியப்பனார் ''வேல் உலா'' என்ற நூலை 612 வரிகளில் எழுதி முடித் தார்கள்.

எந்நேரமும் அருள் நூல்கள் படிப்பது, பாராயணம் செய்வது, வருபவர்களிடம் அவற்றைக் குறித்து உரையாடுவது என்பதே இவரது அன்றாடப் பணி யாகும்.

மதுரைத் திருவள்ளுவர் கழகத்தைத் தோற்றுவித்து நடத்தி வந்தது, மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் செயலராக இருந்து பொன்விழா கொண்டாடியது, மீனாட்சி யம்மை கோயிலில் மங்கையர்க் கரசிக்குக் கோயில் வகுத்தது, திருக்குறள் பரப்பத் தேர்வு முறை கண்டது - இவர்தம் செயற்கரும் செயல்களில் சிலவாகும்.

ஓவியம் தீட்டுவது, செய்யுள் இயற்றுவது, சமயநூல்கள் பயில்வது, உரைநடை, செய்யுள்நடை நூல்கள் இயற்றுவது, சிறுவர் சிறுமியர்க்கேற்ற தெய்வத்தமிழ் நாடகங்கள் படைப்பது, நடிக்கப் பயிற்றுவது, அரியனவற்றை எளியனவாக்கி அச்சிட்டு விலையின்றி வழங்குவது இவரது பொழுது போக்குகளாம்.

அறநெறி அண்ணலார்; பண்பாளர், செயல் வீரர்; முத்தமிழ் வித்தகர். இவை இவரது பட்டங்கள் அல்ல. இவற்றின் படி வாழ்ந்து காட்டிய பாடங்கள்.

தந்தையார் : கிருஷ்ணபிள்ளை.

குறளுக்குக் கழகம் எடுத்தவர்க்குக் குறள்வெண்பாவிலே பாட்டிசைக்கிறார் பி.டி.ஆர் கமலத்தியாகராசன்.

1. பொய்யா மொழிக்கோர் கழக
மமைத்தனை
மெய்யாமற் காப்பாய்நா ளும்.

2. நலிவுற்ற நற்றமிழ்ச் சங்கந்தான்
மீண்டும்
பொலிவுறவே நின்றாய் துணை.

3. குடமுழுக்காம் நற்பணியி லோவாதே
யெந்தை
யுடனிருந் தாற்றியவா வாழி.

4. ஆலமுண்ட கண்டனமர் கோயி
னகருக்கோர்
நூ லமைத்த நுண்புலவா வாழி.

5. பழமுதிர் சோலைப் படைவீடு கண்ட
பழநியப் பாவாழ்க வே.

6. பூவியக்கு ம்குறட் பாவழி
நின்றோர்தம்
ஓவியந் தீட்டியவா வாழி.

7. குறணெறி காத்தே யரணெறி யோம்பும்
அறனெறி யண்ணல்வாழ் க.

(எந்தை - கமலத் தியாகராசானரின் தந்தையார் பி.டி. இராசன்; ஓவியம் தீட்டியவர் - பழநியப்பனார். தமிழ் ஆன்றோர்களின் ஓவியங்களைத் தானே தீட்டியவர்)

தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே!


என்.எஸ். சீனிவாச பிள்ளை

இன்று மதுரையில் சைவ அன்பர்கள் திருமுறைகளைப் பண்ணோடு ஓதுகின் றார்கள் என்றால் திரு.என்.எஸ். சீனிவாச பிள்ளையவர்களே அதற்குக் காரணம் ஆவார். மதுரையில் பன்னிரு திருமுறை



மன்றத்தை நிறுவியவர்களில் இவரும் ஒருவராவார். மன்றத்தின் முதல் செயலரும் ஆவார். மன்றத்தில் பல சிறுவர்களுக்கு இசை கற்பித்து திருமுறை ஈடுபாட்டை வளர்த்தவர். சிறுவர்கள் மட்டுமல்லாது எண்ணற்ற அன்பர் களுக்குத் திருமுறைகளைப் பற்றி விளக்கிப் பயிலுகின்ற பயிற்சியை அளித்தார்.

நீ.சீ. சுந்தரராமன்




இவர்களை அடியொற்றி இவரது திருமகனார் திரு.நீ.சீ. சுந்தரராமனும் இப்பணியினைத் தொடர்கின்றார். 54 ஆண்டுகளாக சைவப்பணி செய்து வருகின்றார். 1951-இல் அருள் நெறித் திருக்கூட்டத்திலும், 1953-இல் பன்னிரு திருமுறை மன்றத்திலும் சேர்ந்து

பணியாற்றிவருகின்றார். தந்தையாரைப் போலவே பலரைப் பாட வைத்திருக்கிறார். ஒரு பண்ணை எடுத்துக் கொண்டு அதை விளக்கிப் பாடச் செய்கிறார். இன்னிசை சொற்பொழிவுகளும் நடத்தி வருகிறார். பன்னிரு திருமுறை மன்றத்தின் செயலராக இருந்து மார்கழி மாதத்தில் திருவெம்பாவை ஓதி வலம் வருதல், வாரந்தோறும் இருமுறை திருமுறை களை ஓதி வலம் வருதல், திருவாதவூர், திருப்பரங்குன்றம் பாத யாத்திரை செல்லுதல், திருத்தலப்பயணம் செல்லுதல், உழவாரப் பணி என அனைத்துப் பணிகளையும் தாமே முன்னின்று நடத்துகின்றார். மன்றத்தின் வெள்ளி விழா, பொன்விழா, உழவாரம் திருமுறை மாநாடு அனைத்தையும் சிறப்புற நடத்திய பெருமகனார் ஆவார். ஆரம்ப காலத்தில் ''திருநெறிய தமிழ்'' என்ற இதழ் நடத்தினார். தற்போது ''உழவாரம்'' இதழை நடத்தி வருகின்றார். இன்று மதுரையில் திருமுறைப் பணிகள் என்றால் நெடிதுயர்ந்து நிற்பவர் சுந்தரராமன் அவர்களே!

(தோற்றம் : 12-12-1934; ஊர் - மதுரை; பெற்றோர் : என்.எஸ். சீனிவாசன், சேது அம்மாள்)

தி.சு. கோவிந்தசாமி

மதுரையில் சைவத்தில் பழுத்த தொண்டர் யார் என்று கேட்டால் திரு. தி.சு. கோவிந்தசாமி தான் நினைவுக்கு வருவார். சமயச் சொற்பொழிவுகள் செய்தல், துண்டுப் பிரசுரங்கள் வெளியிடுதல், கட்டுரைகள் எழுதுதல் இவர்தம் பணிகளாகும். பன்னிரு திருமுறை மன்றத்திற்குப் பிள்ளையார் சுழிபோட்டவரே இத்திருச் சுழியல் காரர்தான். இரு நூற்றுக்கும் மேற்பட்ட திருப்புகழ் பாடல்கள், திரு முறைகளில் 100 பதிகங்கள் இசையோடு பாடுவார். சித்தாந்த சாத்திரங்களை ஆராய்ந்து தெளிந்தவர். ஈசான சிவா சாரியார் அவர்களிடம் தீக்ஷை பெற்றவர். சிவக்கவிமணி சி.கே.எஸ், தணிகைமணி



செங்கல்வராயபிள்ளை போன்ற சைவப் பெரியார்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர்.

(தோற்றம் : 14-12-1923; ஊர் - திருச்சுழியல்; பெற்றோர் : க. சுந்தர லிங்கம் பிள்ளை, சொக்கம்மாள்)

எஸ். ரமணி

அவனருள் எஸ். ரமணி ஓர் வியப்பூட்டும் மனிதர். 22-6-1988-இல் 1008 சிவாலயங்களைப்பற்றித் தொடங்கிய ஆய்வு இன்று ஓர் இலட்சம் கோயில்களைப் பற்றி அறியும் நிலைக்குக் கொண்டு செலுத்தியிருக்கின்றது. தான் சேகரித்த குறிப்புகளைச் சிறுசிறு வெளி யீடுகளாக அடக்க விலைக்கு – (அவரது மொழியில் கூறுவதானால் அறப் பிரசுர விலை) – வெளியிட்டு வருகின்றார். இறைவனைப் பற்றி கேட்ட, படித்த, சேகரித்த, தொகுத்த, குறிப்பெடுத்த செய்திகளின் பதிவிப்பே அவனருள் வெளியீடுகள் ஆகும். தமிழில் அர்ச்சனைத் துதிகள், கோயில் களஞ்சியங்கள், திருத்தல வழிகாட்டிகள், ஆலய வரலாறுகள், வழிபாட்டு முறை விளக்கிகள், திருப்பெயர் தொகுப்புகள் என இதுவரை (ஆகஸ்டு 2002) 101 வெளியீடுகள் வெளியாகியுள்ளன. அவனருள் வெளியீட்டின் முக்கிய

நோக்கங்கள் மூன்று (1) இறைவனை விரிவான பூஜைகளால் வழிபடும் அளவுக்கு அவகாசமோ, வசதியோ இல்லாதவர்களும் மனநிறைவுடன் எளிமையாகவும் குறுகிய காலத்துள்ளும் வழிபாடு செய்யும் வகையில் பூஜை முறை அமைத்தல் (2) தத்துவ இலக் கியங்கள் கையாளும் தனிச் சொற்களை அறியாத, அறிய வாய்ப்பில்லாத பெரும் பான்மை மக்களும் இறை வழிபாட்டின் உட்கருத்தை எளிதில் உணரச்செய்தல். (3) அளவில் பெரிய, நகரிலுள்ள அதிகமாக வருமானம் உடைய, சுற்றுலாவினரை, அன்னியரைக் கவரும் வாய்ப்பு இருப் பதாக நினைக்கப்படக்கூடிய கோயில் களை மட்டுமே, பல்லோரும், பிரபலப் படுத்த முயலும் போக்குக்கு மாறாக, பெரும்பாலோரும் என்றாவது மட்டுமே தரிசனம் செய்யும் மேல்வகைக் கோயில்கள் சில நூற்றினை மட்டுமின்றி அன்றாடம் அவ்வப்பகுதி மக்கள் கும்பிட்டுப் பயன் பெறும் வகையில் ஊர் தோறும், தெருதோறும் எழும்பி யுள்ள, அளவில் சிறியதாயினும் அருட்தன்மை மிகுந்த, காட்சிக்கூடமாக இன்றி, கவலையைக் களையுமிடமாக நாடப்படும் லட்சக்கணக்கான கோயில் களைப் பற்றிய செய்திகளைப் பரவச் செய்தல்.

எத்தனை விழுமிய நோக்கம்! வைப்புத் தலங்களைப் பற்றி இவரே முதன் முதலாகப் பட்டியலிடுகின்றார். ஆலயம் எழுப்புதலுக்கு வழிகாட்டியாக அமைகின்றார். கடவுளும் கோயிலும் என்ற நூலில் ''கடவுள் என்ற சக்தியை ஏற்பதா?'' போன்ற அடிப்படையான கேள்விகளை எழுப்பிப் பதில்களும் தருகின்றார். ''இந்திய நோக்கில் மனிதனும், படைப்பும்'' என்ற சிறு நூலில் பெரும் அறிவியல் விளக்கங்கள் தருகின்றார். டார்வின் கோட்பாட்டை இந்தியத் தத்துவத்தினின்றும் வேறு படுத்திக் காட்டுகிறார். ஓர் எடுத்துக் காட்டு;

பிறப்பு, மறைவு - சிறு விளக்கம்

ஒரு நிலையில் ஒரு வடிவோடு காணப் படும் பொருள் வேறுநிலைக்கு மாறி, வேறு வடிவம் அடையும்போது பழைய உருவில் பெற்றிருந்த இயக்கத்தை இழப்பதுதான் இறப்பு. புது உருவுக்கான இயக்கத்தைப் பெறுவது தான் பிறப்பு.

பிறப்பும் இறப்பும் வடிவ, குண, இயக்க நிலை மாற்றமே. 'பாட்டரி' யானது ஒரு குறிப்பிட்ட அளவு பயன் பாட்டுக்குப்பின், நாம் விரும்பும் குறிப் பிட்ட பயனை (வெப்பம் - ஒளி போன்றவற்றை) அளித்திட இயலாத தாகி விடுகிறது. அப்பயனைத் தராத தால், பாட்டரி அழிந்து விட்டதாகக் கருதிட முடியாது. அதன் உருவாக்கத்தில் இணைந்த பொருள்கள் நிலைமாறி விட்டன என்று மட்டுமே கூறலாம். அது போலவே தான், மனித வாழ்விலும் அவன் செய்யக் கூடியதை முற்றும் செய்ய முடியாமல் போவதை இறப்பு என்கிறோம்.

இவ்விறப்பினால் உடலும் அழிவ தில்லை,

அதனை இயக்குவித்ததும் அழிவ தில்லை,

உருமட்டுமே மாறியிருக்கின்றன.

இரமணியின் பணி தொடர்கிறது *(பிறப்பு : 24-1-1952; பிறந்த இடம் - பம்பாய்; பெற்றோர் : சப்தரிஷி, அன்னபூரணி)*

யாழ் பாலசுந்தரம்

யாழ்பாலசுந்தரம் சொற்பொழிவுகள் நிகழ்த்துதல், கட்டுரைகள் எழுதுதல், தீக்கை கொடுத்தல், திருமுறை வழியில் குடமுழுக்கு செய்தல் எனப் பணிபுரிகின்றார். இசையோடு பாடுவார். ஓதுவார் மரபைச் சேர்ந்தவர், ''தமிழிசை யும், திருமுறையும்'' நூலினை எழுதி யுள்ளார்.

(26-1-1930; தேவகோட்டை, எம்.ஆர். யாழ் கீத சுந்தரம் - விநாயக சுந்தரம்)

திருத்தொண்டர்


கருணை இல்லம் குருசாமி

வண்டியூர் தெப்பக்குளம் அருகில் முக்தீசுவரர் திருக்கோயில்... அங்கு மாலை வேளைகளில் அவனருள் ரமணி வருவார் என்பதனால் அங்கு சென்றிருந் தோம். முக்தீசுவரரை வழிபட்டு வலம் வருகையில் ''நமச்சிவாய வாழ்க'' என்று கூட்டுக்குரலாக ஒலித்தது. ஆர்வம் மீதூரப் பார்த்தால் 30 மாணவர்கள் முறையாகச் சிவபுராணம் ஓதியவாறு வலம் வந்து கொண்டிருந்தார்கள். எங்களுக்கு ஒரே வியப்பு. ''யார் கற்றுக் கொடுத்தார்கள்?'' என்று கேட்டோம். அருகில் உள்ள கருணை இல்லத்துக் குழந்தைகள் என்றும், அதில் பணி யாற்றும் எழுத்தர் குருசாமி அவர்கள் பயிற்சி கொடுக்கிறார் என்றும் அறிந் தோம். வெளியில் தெரியாத வேர்கள்!

நித்தமும் மாலை தந்த நாகநாதன்

மதுரை மீனாட்சியம்மன் கோயிலில் சுவாமிக்கும், அம்மனுக்கும் தினமும் ஆறுகாலபூசைக்கும் நல்ல சந்தனமும், பெரிய மாலைகளும் பத்து ஆண்டுக் காலமாக நாகநாதன் என்பவர் வாங்கித் தந்திருந்தார். மீனாட்சியம்மைக்கு என்ன அவசரமோ? நேரிடையாகச் சாத்த விரைந்து அழைத்துக் கொண்டாள். *(1957-2004)*.

ஆனந்த ராசன்



மதுரையில் சைவசித்தாந்தம் என்றால் ஆனந்தராசன் அவர்களை விட்டால் வேறு கதியில்லை. ஏன்? தமிழ்நாட்டி லேயே விரல் விட்டு எண்ணக்கூடிய அளவில்தான் சைவசித்தாந்த அறிஞர்கள் உளர். அதுவும் சிவஞான மாபாடியம் படித்தவர்கள் இரண்டொருவர்தான் உளர். பாடியம் படிப்பவர்களும், சொல்லிக் கொடுப்பவர்களும் அருகி விட்ட நிலையில், ஆசிரியர் இல்லாமல் கற்க முடியாத நிலையில், ஆனந்தராசன் அவர் ஒரு பேருபகாரம் செய்திருக் கின்றார். பாடிய உரை விளக்கத்தை எளிய தமிழில் மிக விரிவாக வழங்கி யிருக்கிறார். சிறப்புப் பாயிரத்திற்கு மட்டும் 240 பக்கங்களில் விளக்கம் தந்துள்ளார். இன்னும் எத்தனை தொகுதிகள் வர உள்ளனவோ? வந்து விட்டால் பெருங் கருவூலம்தான்.

ஆனந்தராசன் அவர்கள் ''சிவஞான பாடிய நுண்பொருள் விளக்கம்'' தவிர சிவஞானபோதம், திருவருட்பயன், உண்மை விளக்கம், தசகாரியம் ஆகிய நூல்களுக்கும் உரை வழங்கியுள்ளார், பல்கலைக்கழகத்தில் தத்துவத்துறை பேராசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ள ஆனந்தராசன் மதுரையிலும், விக்கிரமசிங்கபுரம் கோடை வகுப்பு களிலும் சைவ சித்தாந்தப் பாடம் நடத்துகிறார்.

(பிறந்த ஆண்டு - 1939; ஊர் - புதூர், விளாத்திக் குளம் வட்டம், தூத்துக்குடி மாவட்டம்)

சொ. சொ. மீ. சுந்தரம்

பதினாறு வயது இளைஞர்; அந்த வயதிலே எத்தனையோ வண்ணக் கனவுகள் இருக்கும். அவற்றையெல்லாம் புறந்தள்ளிவிட்டு தனது ஊருக்கு வருகை தந்திருந்த ஈசான சிவாசாரியார் அவர் களிடம் சென்று வணங்கி தனக்கு தீக்கை தருமாறு வேண்டிக்கேட்கிறார். அவரும் மனமுவந்து அந்த இளைஞர்க்குத் தீக்ஷை தந்து கையில் மஞ்சள்கயிறு கட்டினார்.

இல்லம் திரும்பிய இளைஞரின் கையில் மஞ்சள் கயிற்றைப் பார்த்த தந்தையார் அவரைத் திட்டித் தீர்த்தார். தந்தையார் இளைஞரைத் தரதரவென்று சுவாமிகளிடம் இழுத்துச் சென்று, ''பையன் சிறுவன்; திருமணம் கூட ஆகவில்லை, இவனுக்குத் தீக்ஷை தந்து விட்டீர்களே'' என்று கேட்டார்; அதற்கு சுவாமிகள் ''நீ இந்த உடலுக்குத் தான் தந்தை. பரமேசுவரன்தான் ஆன்மா விற்குத் தந்தை. பையன் செய்ததே சரி'' என்றார். அதுவரை அந்த இளைஞருக்குத் தமிழ் இலக்கியமும் தெரியாது; சைவமும் புரியாது. அந்த இளைஞரே பொற்கிழிக் கவிஞர் சொ. சொ.மீ சுந்தரம் ஆவார்.

அதற்குப் பிறகாவது தமிழ் படித்தாரா? என்றால் அதுதான் இல்லை. கல்லூரியில் வணிகவியல் பட்டப்படிப்பு (பி. காம்) எடுத்துக் கொண்டார். அப்பொழுது ஒரு காரியம் செய்தார். 1961-இல் முனைவர் வ.சுப. மாணிக்கம் அவர்களிடம் திருவாசகப் பாடல்கள் நானூற்றினை மனப்பாடமாக ஒப்பு வித்தார். அதிலிருந்து திருவாசகத்தில் ஈடுபாடு கொண்டார்.

1968-இல் மதுரை பன்னிருதிருமுறை மன்றத்திலே செவ்வாய் தோறும் திருமந்திரம் சொல்ல ஆரம்பித்தார். இருபத்தைந்து ஆண்டுகளாக இத்தொடர் மதுரையில் நடைபெற்று வருகின்றது. இப்பொழுது எட்டாம் தந்திரம் வரை முடித்திருக்கிறார். அதன் பிறகு பல இடங்களில் திரு மந்திரச் சொற்பொழிவு கள், திருவாசகத்தொடர், பெரியபுராணத் தொடர் என்று நிகழ்த்தி வருகிறார் இந்த வணிகவியல் பேராசிரியர்.

(பிறப்பு : 7-8-1943; பிறந்த ஊர் - தேவகோட்டை; பெற்றோர்; சொக்க லிங்கம் செட்டியார், மீனாட்சி அம்மாள்)

★ ★ ★

சொற்பொழிவாளர்கள்

1) சிதம்பரவடிவு : பிறப்பு - 7-10-1933; வாரத்தில் ஒருநாள் கோயிலிலும் ஒருநாள் வீட்டிலும் தேவார வகுப்புகள் நடத்துகிறார். பள்ளியில் வாரத்தில் இரு நாட்கள் சிறுவர்களுக்கு நடத்துகிறார்.

2) புலவர் முத்தையா பிள்ளை; 15-6-1932; ஊர் - சம்பகுளம், கழுகு மலை; 30 ஆண்டுக்காலம் சொற் பொழிவு; திருவள்ளுவர் கழகத்தில் 10 ஆண்டுகள் பெரியபுராணம், காலனி பிள்ளையார் கோயிலில் 7 ஆண்டுகள் திருவிளையாடற் புராணம் சொற் பொழிவுகள் நிகழ்த்தியுள்ளார். தற் பொழுது வாரம் ஒருமுறை திருவள்ளுவர் கழகத்தில் திருவருட்பயன் நடத்துகிறார்.

3) சண்முகம் : 10-4-1935; சம்பகுளம், கழுகுமலை; முப்பது ஆண்டுக்காலம் சொற்பொழிவு; சங்கரன்கோயிலில் மூன்றரை ஆண்டுகளும், தற்சமயம் மதுரை ரயில்வே காலனியிலும் பெரிய புராண உரை; திருமதி ராதா தியாகராஜன் தலைமையில் கந்தபுராணம், திருவருட் பயன் உரை; ''பெரியபுராணச் சிந்தனை கள்'' தொடர் கட்டுரை எழுதி வருதல்.

4) சிவானந்த விஜயலட்சுமி; 18-6-1936; புகளூர், ஈரோடு (சொந்த ஊர் - வத்திரா யிருப்பு); 52 ஆண்டுகளாகச் சொற் பொழிவுகள்; நெல்லை சங்கீத சபா, தேனாம்பேட்டை ஆகிய இடங்களில் 2,3 முறை பெரியபுராணத்தொடர் சொற் பொழிவு நடத்துதல்; பெரியபுராண நாமாவளி தயாரித்துள்ளார்.

5) நா. மெய்யப்பன் : 1939; காரைக் குடி; பெரியபுராணச் சொற்பொழிவுகள் நிகழ்த்துதல்.

6) ஞானப்பூங்கோதை; 15-10-1962; தூத்துக்குடி; ''சைவசித்தாந்தத்திற்குக் குரு ஞானசம்பந்தரின் கொடை'' முனைவர் பட்ட ஆய்வு; 15 வயதிலிருந்து தேவாரம் பாடுதல்; திருவாவடுதுறை ஆதீன சைவசித்தாந்த பயிற்சி வகுப்பு மூன்று மையங்களில் பாடம் எடுத்தல், தியாகராஜா கல்லூரியில் சைவ சித்தாந்த சொற்பொழிவுகள் நிகழ்த்துதல்,

விக்கிரம சிங்கபுரம் 15 நாள் பயிற்சி வகுப்பில் பாடம் நடத்துதல், நாக மலையில் பெண் களுக்குச் சைவ சித்தாந்த வகுப்புகள் நடத்தல், இசையில் முழுப்பயிற்சி. இவரது தாத்தா திரு.சி. விநாயகம் அவர் (1909 - 1989 - கணிதப் பேராசிரியர்) அமெரிக்காவில் ஆங்கிலத் தில் சைவசித்தாந்த சொற்பொழிவுகள் நிகழ்த்தியுள்ளார். ''சைவ சித்தாந்தத்தில் ஞான நெறி'' என்ற நூலினை எழுதி யுள்ளார்.

இவரது பாட்டியார் திருமதி ஈசுவர வடிவு அம்மையார் சித்தாந்த வித்தகி ஆவார். (1912-2004). 1951இலிருந்து சொற்பொழிவுகள் செய்துள்ளார். இலங்கைக்கு இருமுறை சென்றிருக் கிறார். நிறைய பேருக்கு திருவாசகம் சொல்லித் தந்துள்ளார்.

55. திருப்பூவணம்

''மாலைநேரப் பள்ளி நடத்துதல்'' திருப்பூவணச் சைவமாகும்.

நல்ல மாலைப்பொழுது; திருப் பூவணம் கோயிலுக்குள் நுழைந்தோம். கணிதம், அறிவியல் என்று விதவிதமான சொற்கள் காதில் விழுந்தன. கோயிலுக் குள் தான் வந்தோமா? இல்லை. ஏதேனும் ஒரு பள்ளிக்கூடமா? என்று ஐயம். வடவண்டை பக்கம் சென்றோம். அங்குள்ள மண்டபத்தில் நான்கு, நான்கு தூண்களுக்கு நடுவே 7,8, பகுதிகளாக 20,30 பிள்ளைகள் உட்கார்ந்திருந்தனர். ஒவ்வொரு பகுதியிலும் ஓர் இளைஞர் நின்று கொண்டு பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார். முதல் வகுப்பிலிருந்து 12-ஆம் வகுப்பு வரை மாணவர்கள் மொத்தம் 200 பேர் இருப்பார்கள். 25 இளைஞர்கள் மாறி, மாறிச் சொல்லித் தருகின்றார்கள். இதில் ஒரு வியப்பு என்னவென்றால் இந்த இளைஞர்கள் பல துறைகளில் பணியாற்றுபவர்கள். இதே கோயிலில் இதற்கு முன்பு பயிற்சி பெற்றவர்கள். இந்தப்பணி 20 ஆண்டுகளாக நடை பெற்று வருகின்றது.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் திருப்பூவணம் கோயிலுக்கு வந்த பொழுது திரு. காளிதாஸ் (தற்போது வயது 45 வயது) மனோகரன் (வயது 40) பாலச்சந்திரன் (வயது 38) முதலான இளைஞர்களிடம் இந்தத் திட்டத்தைக் கூறினாராம். அடிகளார் முன்னிலை யிலேயே ''அருள்நெறி தெய்வீகப் பேரவை'' தொடங்கி மாலை நேரப் பள்ளியும் அந்த இளைஞர்களே நடத்த ஆரம்பித்தனர். அந்த பள்ளியில் பயனடைந்த மாணவர்கள் இப்பணி யினைத் தொடர்கின்றனர். இதற்குக் கட்டணம் ஏதும் கிடையாது.

வெள்ளிதோறும், வாரவழிபாடு, சிவ புராணம், தேவாரம் பாடுதல், உடல்நலம் குன்றியவர்களுக்காகப் பிரார்த்தனை செய்தல், உழவாரப்பணி. இத்தனையும் அந்த 200 மாணவர்கள் செய்கின்றனர்.

பூவணம் புகழ்வண்ணமே!

சீர்பாடுதல் நாவண்ணமே!

56. சின்னமனூர்

சின்னமனூர் அ/மி பூலானந்தீசுவரர் சிவகாமியம்மன் திருவீதி உலா... ...

பெரியவர் அண்ணாமலைப்பிள்ளை அடியார்களுடன் திருமுறைகளை ஓதிக் கொண்டு வருகிறார். சுவாமி பிராமணர் குடியிருப்புப் பகுதியில் எழுந்தருளுங் காலத்து அங்கு வசித்து வந்த பிராமணர்கள், ''வேதம் ஓதும் தெருவில் திராவிட வேதம் ஓதக்கூடாது'' என்று கூறித் தடுத்தனர். திருமுறைப் பாடல் களின் தெய்விகத் தன்மையையும் அவை விளைத்த அற்புதங்களையும் விளக்க மாக எடுத்துக்கூறியும் திரு முறைப் பாடல்களைப் பாடவிடாமல் தடுத்து நிறுத்திவிட்டனர். அண்ணா மலையார் மிகவும் வருத்தமுற்றார். திருமுறைகளை ஓதுவதற்கென்றே ஒரு திருக்கோயிலை உருவாக்கக் கருதினார்.

மாணிக்கவாசகர் கோயில்



சின்னமனூர் பழங்காலத்தில் அரிகேச நல்லூர் என்றே அழைக்கப்பட்டது. மாணிக்கவாசகர் ''கலையார் அரி கேசரி யாய் போற்றி'' என்று இத் தலத்தைச் சிறப்பித்துப் போற்றித் திருவகவலில் பாடியுள்ளார். அதனால் மாணிக்கவாசகப் பெருந்தகைக்கே திருக்கோயிலை எழுப்பினார்.

மாணிக்கவாசகர் – மூத்த மகனார்

அண்ணாமலையாருக்கு இரண்டு ஆண்மக்கள் இருந்தனர். மாணிக்க வாசகப் பெருந்தகையைத் தனது மூத்த பிள்ளையாகப் பாவித்துத் தனது மனைவி மூலம் வந்த சொத்தை மூன்றாகப் பிரித்து அதில் பெரிய நிலப்பகுதியை மாணிக்கவாசகர் கோயிலுக்கு (4 ஏக்கர் 12 செண்ட்) உரிமையாக்கினார். நிலத்தின் இன்றைய மதிப்பு இருபது இலட்ச ரூபாய் ஆகும். நூறு ஆண்டுகளுக்கு முன்னர் மாணிக்க வாசகரை மூலவராகக் கொண்டு கட்டப் பட்ட இத்திருக்கோயிலில் காசி விசுவ நாதர் விசாலாட்சி ஆகியோருக்குத் தனிச் சந்நிதிகள் உண்டு. அண்ணா மலையாரின் பெயரர் திரு சேது. சிவஞானம் அவர்கள் இக்கோயிலை நிர்வகித்து வருகிறார்.

சில திருப்பணிகள்

தேனி மாவட்டத்தில் உள்ள சின்ன மனூர் சிவன் கோயிலின் உள், வெளிப் பிராகாரங்களைத் திருத்தம் செய்து திருக் கோயிலின் சுற்றுமதில்கள், யாக சாலை, மடைப்பள்ளி, பதினாறுகால் மண்டபம் முதலியனவற்றைச் சீர்செய்து புதுப்பித் தல்; திருக்குளத்தின் நாற்புறங்களிலும் கற்சுவர்கள் எழுப்பிப் படித்துறைகள் அமைத்தல்; கோயிலின் மூன்றாம் பிராகாரத்தில் கல்மண்டபம் அமைத்து 63 நாயன்மாரின் திருவுருவங்களையும் பிரதிஷ்டை செய்தல்; தலவிருட்சமான பூலாமரத்திற்குப் பீடம் அமைத்தல்; திருக்கல்யாண மண்டபம் அமைத்தல்; பிடாரி அம்மனுக்குத் தனிக்கோயில் எழுப்புதல்; திருப்பணிகள் அனைத்தை யும் செய்து முடித்துக் குடநீராட்டு விழாவும் அறங்காவலர் என்ற முறையில் செய்து முடித்தார் அண்ணாமலையார்.

அண்ணாமலையார் ஆறுகால வழி பாட்டினை நடைமுறைப்படுத்தினார். திருமுறைகள் ஓத ஓதுவார் ஒருவரை ஏற்பாடு செய்தார். சுவாமி வீதி உலாவின் போது அடியார்களுடன் சேர்ந்து அண்ணாமலைப்பிள்ளையவர்கள் திருமுறைகளைப் பாடிக்கொண்டே வலம் வருவார். ஊர்ப் பெண்களை மார்கழி மாதத்தில் திருவெம்பாவை பாடச் செய்தார். தேர்த்திருவிழாவின் போது ஆடுபலி நடக்கும் வழக்கம் இருந்து வந்தது. அதனைத் தடுத்து நிறுத்தினார்.

சுற்றுப்புற ஊர்களில் நால்வர் நெறி பரப்புதல்

போடிநாயக்கனூரில் சைவ சித்தாந்த சபையை நிறுவி சித்தாந்தத்தில் துறை போகிய அறிஞர்களைப் பேசச் செய்து சித்தாந்தக் கருத்துகள் பரவச் செய்தார். சின்னமனூருக்கு அருகில் உள்ள தேவார மாநகருக்குச் சென்று திருமுறைகளைப் பாடியும் சைவப் புராணங்களை விரித் துரைத்தும் சைவத்தின் மேல் பற்றுக் கொள்ளச் செய்தார். அவ்வூரில் எழுந் தருளியுள்ள அ/மி அவிநாசியப்பர் மீது பதிகம் பாடினார். சின்னமனூருக்கும் தேனிக்கும் இடையில் உள்ள உப்பார் பட்டி என்ற ஊரில் உள்ள அன்பர் களிடத்தில் அடியார் பெருமக்களின்

அளவிடற்கரிய பெருமைகள் எடுத்துக் கூறி திருஞானசம்பந்தப் பெருமான் குருபூசை நிகழ்த்தும்படி ஆற்றுப் படுத்தினார். அவ்வூரில் இன்றுவரை திருஞானசம்பந்தர் குருபூசை தடையின்றி நடைபெற்றுக் கொண்டு வருகிறது. பழைய வத்தலக் குண்டு என்ற ஊருக்குச் சென்று நாயன்மாரின் சிறப்புகளைத் தமது சொற்பொழிவுகளின் வாயிலாக அங்குள்ள மக்கள் உள்ளங்கொள்ளும் வகையில் விரித்துரைத்து அவர்களை ஆண்டுதோறும் திருநாவுக்கரசர் குரு பூசை நிகழ்த்தச் செய்தார்.

முனையடுவார்க்கு ஆலயம்

தேவதானப்பட்டிக்கு அருகில் உள்ள சில்வார்பட்டிக்குச் சென்று சைவ சமயத்தின் பெருமைகளை எடுத்துக்கூறி எப்பொழுதும் சிவ வேடத்துடன் திகழும் அடியார்கள் திருக்கூட்டத்தை உருவாக்கி னார். மேலும் முனையடுவார் நாய னாருக்குத் தனி ஆலயம் எழுப்பி குட நீராட்டும் செய்வித்தார். நால்வர் பெரு மக்களுக்கு மட்டுமின்றிக் கண்ணப்பர், எறிபத்தர் ஆகியோரின் குருபூசைகளும் அங்கு நிகழுமாறு செய்துள்ளார்.

இன்றைக்கும் அக்கோயில் வலு வுடனும், பொலிவுடனும் திகழ்ந்து வருகிறது. குருபூசை நாட்களில் இப் பகுதியில் அடியார் பெருமக்கள் அனை வரும் இங்கு 'உவப்பத் தலைகூடும்' நிகழ்ச்சியை இன்றும் காணலாம். சைவ சமயம் சார்ந்த வாழ்க்கை வாழ்ந்துவரும் ஊற்றமிக்க அடியார்களை இன்றும் கண்டு மகிழலாம். இது உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை.

சேக்கிழார் மன்றம்

சின்னமனூரில் சேக்கிழார் மன்றத் தைத் தொடங்கித் திருமுறைகள், சாத் திரங்கள், புராணங்கள் ஆகியன குறித்து விளக்கவுரைகள் நிகழ்த்தி வந்தார். தேவார திருவாசகப் பாடல்களைப் பண்ணோடு பாடுவதற்குப் பயிற்சி கொடுத்தார். பெருஞ்சொல் விளக்கனார். அ.மு. சரவண முதலியார், ச. சோமசுந்தர பாரதியார், நாகர்கோயில் ஆறுமுக நாவலர், பாண்டித்துரைத்தேவர், பசும் பொன் முத்துராமலிங்கத் தேவர் போன்ற ஆன்மிகச் சீலர்களையும், தமிழ்ச் சான்றோர்களையும் அழைத்து வந்து அவர்களது சீரிய கருத்துகளை மக்கள் கேட்டுப் பயன்பெறச் செய்தார்.

அண்ணாமலையார் சமய தீட்சை, விசேட தீட்சை, நிர்வாண தீட்சை பெற் றவர். மதுரைச் சாமி என்ற சுப்பிரமணிய பிள்ளையிடமும், யாழ்ப்பாணம் சுவாமி நாத பண்டிதரிடமும் சைவ சித்தாந்த சாத்திரங்களைக் கற்றுத் தெளிந்தார். திருமுறைகள் பன்னிரண்டையும் ஓதித் தேர்ச்சி பெற்றார். திருவாசகம் முழு வதையும் மனனம் செய்தார். இவரது இல்லம் சிவனடியார்களின் புகலிடமாக விளங்கியது.

அடியார்களுக்கு உற்றுழி உதவியும், அன்னம்பாலிப்பு செய்தும் வந்தார். மாணிக்கவாசகர் குருபூசை முறையாக வழிபாடு செய்து மகேசுவரபூசை நிகழ்த்தி வந்தார். இவரது துணைவியார் சிவகாமி அம்மையார் ஆவார்.

மரபுக் கவிஞர்

அண்ணாமலையார் அவர்கள் படைப் பாற்றல் மிக்க நல்ல மரபுக் கவிஞரும் ஆவார். 36 நூல்களுக்கு மேல் இயற்றி யுள்ளார். இவற்றில் ஒன்றிரண்டு நூல்கள் தவிர ஏனைய நூல்கள் அச்சேறவில்லை. கும்மிப்பாட்டு, தாலாட்டுப் பாட்டு முதலியன பாடியுள்ளார். கடிதங் களையும் கவிதையிலே எழுதி வந்தார்.

மாணிக்கவாசகரின் வரலாற்றைக் கவிதை வடிவில் ''மாணிக்கவாசகர் வெண்பா புராணம்'' என்றும் பெயரில் சுமார் 2000 வெண்பாக்களில் பாடி உள்ளார்.

1871-இல் (பிரசோற்பத்தி ஆண்டு கார்த்திகைத் திங்கள் 16-ஆம் நாள்) தேனி மாவட்டம் போடி நாயக்கனூரில் குப்பா பிள்ளைக்கும் தாயம்மைக்கும் பிறந்த



அண்ணாமலையார் 8-2-1956 அன்று தமது 85-ஆம் வயதில் இறைவனடி சேர்ந்தார்.

சின்னமனூரில் மணிவாசகருக்கு ஆலயம்... ... ...

மணிவாசகரை மூத்தமகனாகக் கொண்டு நிலத்தில் ஒரு பகுதியை ஆலயத்திற்கு வழங்கல்... ...

சின்னமனூர்ச் சிவன் கோயில் திருப்பணி... ...

போடிநாயக்கனூரில் சைவசித்தாந்த சபை நிறுவி சைவ சித்தாந்தம் பரப்புதல்... ...

தேவார மாநகரில் திருமுறைகளைப் பாடியும், சைவப் புராணங்களை விரிந் துரைத்தும் சைவநெறி பரப்புதல்... ...

உப்பார் பட்டியில் திருஞானசம்பந்தர் குருபூசை... ...

பழைய வத்தலக்குண்டில் திருநாவுக் கரசர் குருபூசை... ...

சில்வார் பட்டியில் முனையடுவார் ஆலயம்... ...

மாணிக்கவாசகர் வெண்பா புராணம் கவிதை நூல்... ...

அண்ணாமலையாருக்கு கற்கோவில்
எழுப்பவேண்டா!
அவர் உருவாக்கிய சொற்கோவில் எழுப்ப
வேண்டாமா?
அண்ணாமலையாருக்கு அரோகரா!

உதவி : பெ. பாண்டி, சின்னமனூர் கொடுத்த குறிப்புகள்

57. சில்வார்பட்டி

முனையடுவார் ஆலயம்

பெரிய குருபூசை என்றால் சில்வார் பட்டியில் முனையடுவார் குருபூசையைத் தான் குறிக்கும். வியப்பாக இருக்கிறதா? அங்குதானே அறுபான்மும்மை நாயன் மாரில் ஒருவரான முனையடுவார்க்குத் தனி ஆலயமே உள்ளது.

தேனி மாவட்டம் பெரியகுளம் வட்டம் தேவதானப்பட்டியிலிருந்து வைகை அணை செல்லும் சாலையில் 3 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள ஊரே சில்வார்பட்டி ஆகும். இவ்வூரில் சின்ன மனூர் சைவப் பெரியார் அண்ணா மலைப்பிள்ளை வழிகாட்டலின்படி சில்வார்பட்டி திரு. சுப்பபிள்ளை அவர்கள் வழங்கிய இடத்தில் 1906-இல் முனையடுவார் நாயனாருக்குத் திருக் கோயில் உருவாகியது. கிணறு, நந்தவனம் ஆகியன அமைத்து வழிபாடு சிறப்பாக நடந்து வந்தது.

1930-ஆம் ஆண்டு சுப்பபிள்ளை அவர்களின் குமாரர் அருணாசலம் பிள்ளை காசியிலிருந்து சிவலிங்கம் ஒன்று கொண்டுவந்து ''காசி விசுவ நாதர்'' என்னும் பெயரில் பிரதிட்டை செய்தார். பின்னர் அவரது குமாரர் அ. கணபதியா பிள்ளை காசி விசாலாட்சி, நந்தீஸ்வரர், முருகன், சண்டிகேசுவரர்

சிலைகளைப் பிரதிட்டை செய்து, கற்கோயில் கட்டி, கோபுரம் எழுப்பி 1981-இல் திருக்குடநீராட்டும் செய்தார்.

சிவனடியார் திருக்கூட்டம்

புலால் மறுத்தலைத் தீவிரமாக மக்களுக்குச் சொல்லவும், தேவார திருவாசகம் உள்ளிட்ட பன்னிரு திரு முறைகளைப் பரப்பவும், 1981-இல் சில்வார்பட்டியில் ''சிவனடியார் திருக் கூட்டம்'' தோற்றுவிக்கப் பெற்றது. சில்வார்பட்டி அடியார்கள் சிவதீக்கை, விசேட தீக்கைபெற்று திருநீறு, உருத்தி ராக்கம் அணிந்து காட்சியளிக்கின்றனர். வாரந்தோறும் கூட்டுவழிபாடு, மாதந் தோறும் திருவாசக முற்றோதல், நால்வர் குருபூசை, மார்கழியில் திருவெம்பாவை பாராயணம் ஆகியன தவறாமல் நடை பெற்று வருகின்றன.

அண்ணாமலைப் பிள்ளையவர்கள்
போட்டவிதை
ஆல்போல் பெருகிப் பரவிய காட்சியே காட்சி!

58. பெரியகுளம்

சிவக்கொழுந்து தேசிகர்

தேனி பகுதியில் சைவம் வளர்த்தவர்கள் மண்ணின் மைந்தரான பெரியவர் அண்ணாமலைபிள்ளையவர் களும், உக்கடம் புலவர் வி. சிவக் கொழுந்து தேசிகரும் ஆகிய இருபெரு மக்களுமே ஆவர். சிவக்கொழுந்து தேசிகரின் வரலாறு உறையூரில் எடுத் துரைக்கப்பட்டுள்ளது. உக்கடத்தில் பிறந்த சிவக்கொழுந்து தேசிகர் பெரிய குளத்தில் 28 ஆண்டுகள் தமிழாசிரிய ராகப் பணியாற்றினார். பாடம் நடத்தும் காலத்தில் இனிய இசையுடன் பாடி மாணவர் உள்ளங்களைக் கொள்ளை கொண்டார். படிப்போடு பக்தியையும் ஊட்டியவர். ஆசிரியப் பணியோடு நின்றுவிடாமல் பட்டி தொட்டி எல்லாம் சென்று பக்திப் பயிர் தழைக்கச் செய்தார். பெரியபுராண அடியவர் வரலாறு களை இவர் வாயால் கேளாத ஊர் இந்தப் பகுதியில் இல்லை எனலாம்.

பெரியகுளம் பகுதியில் பல இடங்களில் அறுபத்துமூவர் விழா நடத்த ஏற்பாடு செய்திருக்கின்றார். அது மட்டுமா? பெரியகுளம், சின்னமனூர், உறையூர் பகுதிகளில் பெரியபுராணம் (12 முறை) திருவிளையாடற்புராணம் (9 முறை) கந்த புராணம் (4 முறை) திருவாசகம் ஆகியவற்றின் அருமை பெருமைகளை இப்பகுதி அன்பர்களின் மனம் குளிரச் சொன்னார். பெரிய குளத்தில் வாரந்தோறும் பன்னிரு திருமுறை முழுமையும் நடத்தியிருக் கின்றார்.

தவத்திரு அடிகளார் தொடங்கிய அருள்நெறித் திருக்கூட்டம், அடிகளார் தலைவராகக் கொண்ட தெய்விகப் பேரவை ஆகியவற்றின் முதன்மைப் பொழிவாளராய்ப் பணியாற்றிய காலம் தேனி மாவட்ட சைவ வளர்ச்சியின் பொற்காலம் ஆகும். கிராமம் கிராம மாகச் சென்று 500 கிளைச் சங்கங்களைத் துவக்கியிருக்கிறார். ஊர்தோறும் கிளைகள், கிளைகள் தோறும் வார வழிபாடுகள்.

ஆன்மிக நாட்டம் உடைய பலருக்கு தீக்கை கொடுத்தார். 1978-ஆம் ஆண்டில் சின்னமனூரில் அருள்மிகு மாணிக்க வாசகர் திருக்கோயில் அறங்காவலர் திரு. சேதுசுப்பிரமணியபிள்ளை உதவியுடன் சைவசித்தாந்தப் பெருமன்ற 72-ஆம் மாநிலமாநாட்டை மாநிலம் போற்ற மூன்று நாட்கள் நடத்தினார்.

மங்கையர்க்கரசி மாதர் சங்கம்

பெரியகுளத்தில் முப்பது ஆண்டு களுக்கு முன்னால் மங்கையர்க்கரசி மாதர் சங்கம் திரு. வி. சிவக்கொழுந்து தேசிகரால் தோற்றுவிக்கப் பெற்று அன்னை காமாட்சி அம்மாவால் வளர்க்கப் பெற்றது. திங்கள் தோறும் வார வழிபாடு, சனிக்கிழமை தோறும் மாணவர்களுக்குத் தேவார திருவாசகம் கற்பித்தல் ஆகிய பணிகள் ஆற்றி வருகின்றனர். வி. சிவக்கொழுந்து தேசிகர் ஐந்து ஆண்டுகளும், மு. இராச

ரத்தினம் இருபது ஆண்டுகளும் ப. பாண்டியராசு இரண்டு ஆண்டுகளும் பெரியபுராணம், திரு விளையாடற் புராணம், கந்த புராணம், திருவாசகம், திருமந்திரம், தாயுமானவர் பாடல்கள், பட்டினத்தார் பாடல்கள் என தொடர் விரிவுரைகள் நிகழ்த்தினர். இச்சங்கம் நடத்தும் திருவாசக முற்றோதலில் சுற்றுப்புற ஊர்களில் உள்ள மன்ற உறுப்பினர்களும் நூற்றுக் கணக்கில் கலந்து கொண்டு காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கப் பாடிப் பரவசம் அடைந்து வருகின்றனர்.

பி.டி. சிதம்பர சூரியநாராயணன்


பி.டி.சி. என்று அன்போடு அழைக்கப் பட்ட பி.டி. சிதம்பர சூரிய நாராயணன் மங்கையர்க்கரசி மாதர் சங்கத்தின் புரவலர்; அ/மி பாலசுப்பிரமணியர் திருக்கோயிலின் திருப்பணிக் குழுத் தலைவராக இருந்து குடநீராட்டு செய்த பெருமகனார்; பங்குனி உத்தரப் பெருவிழா நடத்தித் திருத்தேரை வலம்வரச் செய்தவர்; 1978-இல் சின்ன மனூரில் நடைபெற்ற சைவசித்தாந்தப் பெருமன்றத்தின் 72-ஆவது மாநில மாநாடு நடத்தப் பேருதவி புரிந்தவர்.

(உதவி - பெரியகுளம் புலவர் மு. இராஜரத்தினம் அனுப்பிய குறிப்புகள்)

59. கோயில்பட்டி

திருச்சிற்றம்பல மன்றம்

''உழவாரத் தொண்டில் ஒரு புதுமை'' - கோயில்பட்டி சைவத்தின் பண்பாக அமைந்துள்ளது. கோயிலுக்குச் சென் றோமா; புல், பூண்டுகளை அகற்றி னோமா; செடி, கொடிகளைப் பிடுங் கினோமா; வீட்டிற்கு நடையைக் கட்டினோமா என்பதோடு கோயில்பட்டி திருச்சிற்றம்பல மன்றத்தின் உழவாரப் பணி நின்று விடவில்லை. புல்பூண்டு, செடி கொடிகளை அகற்றிவிட்டுப் பின் முழுமையும் தூய்மை செய்துவிட்டு. பணி ஏற்கப்பட்ட திருக்கோயிலில் வெள்ளையும் அடித்துவிடுவார்கள்.



கோயில் சுற்றுச்சுவர்களின் வெண்மை, காவி பட்டை அடித்தபிறகுதான் பணி நிறைவு செய்வார்கள். மாதம் ஒரு கோயில் என்று இதுவரை (2004 ஆகஸ்டு வரை) தமிழ்நாடு முழுமையும் 230 கோயில்களில் உழவாரப்பணி செய்து உள்ளனர். 1989-இல் தொடங்கப் பட்ட இம்மன்றத்தில் 120 தொண்டர்கள் உள்ளனர். இவர்களை எல்லாம் இயக்கு பவர் பாரத் ஸ்டேட் வங்கியில் பணி யாற்றும் பாலசுப்பிரமணியன் ஆவார். உழவாரப்பணி முடிந்தவுடன் பால சுப்பிரமணியனே சைவம் பற்றிய உரையும் நிகழ்த்துவது வழக்கம்.

மாணிக்கவாசகர் சபை

பாரத ஸ்டேட் வங்கியில் பணிபுரியும் மற்றுறோர் அலுவலரான சங்கரன் என்பார் மாணிக்கவாசகர் சபை என்ற அமைப்பினை நிறுவி உழவாரப்பணி செய்து வருகின்றார். இவ்விரண்டு அமைப்புகள் அல்லாமல் மூன்றாவது அமைப்பாக அப்பர் உழவாரப்பணி மன்றம் 1985-இல் தொடங்கப்பட்டு மாதம் ஒரு சிவன் கோயில் என எடுத்துக் கொண்டு அதன் உறுப்பினர்கள் 120

கோயில்களில் உழவாரப்பணி செய்துள்ளனர். இந்த மூன்று மன்றங்களும் சேர்ந்து 117 மாதங்களில் 350க்கும் மேலான திருக்கோயில்களில் உழவாரப் பணி செய்து இருக்கின்றனர் என்றால் மலைப்பாக இருக்கின்றதா?

இந்து நல்வழி மன்றம்

உழவாரப்பணியோடு கோயில்பட்டிச் சைவம் நின்றுவிடவில்லை. நெல்லைச் சைவத்திற்கே உரிய ''திருவாசக முற்றோதலும்'' கோயில்பட்டியில் செம்மையாக நடந்து வருகின்றது. 1971-இல் தொடங்கப்பட்ட இந்து நல்வழிமன்றம் இது வரை 172 முற்றோதல்களை நிகழ்த்தியுள்ளது. தங்கள் முற்றோதல் பணியினை அச்சிட்டும் கொடுத்துவிட்டார்கள். இம் மன்றத்தின் 144-ஆம் முற்றோதலுக்கு ஒரு நூலை அச்சிட்டு யார் யார் வீட்டில் முற்றோதல் நிகழ்ந்தது என வெளியிட்டுள்ளனர். திருவாசக முற்றோதலுக்கு அப்படி ஒரு முக்கியத்துவம்; தேவாரப் பாடசாலை நடத்துதல், மார்கழியில் திருவெம்பாவை, தலயாத்திரை என மன்றப் பணி விரிகிறது. மன்றத்தைத் தொடங்கியவர் சங்கர ஐயர், ராமசாமி ஐயர் ஆவார்.

திருமுறைமன்றம்

கோயில்பட்டி திருமுறை மன்றமும் தன் பங்கிற்கு மாதந்தோறும் திருமுறை ஓதுதல், தேவார வகுப்பு நடத்துதல், வாரந்தோறும் பெரிய புராணச் சொற்பொழிவு நடத்துதல் (திருபட்டமுத்து - 5 ஆண்டுகள்), வாரந்தோறும் சாத்திர வகுப்பு நடத்துதல் (பதிநான்கு சாத்திரங்களும் நடத்தியவர் திரு. இரத்னவேலர்) எனப் பணியாற்றுகிறது. (தோற்றம் 1982; முதல் தலைவர் - நடராஜ முதலியார்; செயலர் - அழகுராஜா; இரண்டாம் தலைவர் - டாக்டர் சிற்றம்பலம்.)

கே. கண்ணுசாமி

இத்துணையும் நடக்கின்ற ஊரிலே பிரதோஷ வழிபாடு நடக்காமலா இருக்கும்? ஆரம்ப காலங்களில் மற்ற கோயில்களைப் போல பிரதோஷ வழிபாட்டுக்கு 5, 6 பேர்தான் வந்தார்களாம், அப்பர் அடித்தோன்றல் திரு. கே. கண்ணுசாமி (வயது 75, ஊர் - கடம்பூர், மணியாச்சி) 1982-இல் கோயில்பட்டிக்கு வந்தபிறகு பிரதோஷ வழிபாட்டை ஓர் இயக்கமாகவே மாற்றி விட்டார். ஆரம்ப காலங்களில் கண்ணுச்சாமி ஒவ்வொரு வீடாகச் சென்று ஒவ்வொருவராகக் கூப்பிட்டு வந்தார். பிரதோஷ வழிபாடு போன்ற சிறு சிறு நூல்களாக 20 நூல் வெளியிட்டு ஒவ்வொருவருக்கும் கொடுத்து வந்தார். இப்படி மெல்ல வளர்ந்து இப்பொழுது பிரதோஷ வழிபாடு என்றால் 5000 பேருக்கு மேல் வருகின்றார். இப்பொழுதெல்லாம் கோயில்பட்டியில் பிரதோஷத்தன்று 3.00 மணிக்கு எந்தப் பள்ளியிலும் ஆசிரியர்கள் இருப்பதில்லை. அனைவரையும் பூவண நாதர் கோயிலில் பார்க்கலாம். அப்படி ஒரு வளர்ச்சி!

உழவாரப்பணி, திருவாசக முற்றோதல் என இயக்கமாக இயங்க ஓர் உந்துசக்தி வேண்டும் அல்லவா? அந்த உந்து சக்தியாகக் கோயில் பட்டியில் பலர் இருக்கின்றனர். முன்பகுதியில் சிலர் குறிப்பிடப்பட்டிருக்கின்றனர்.

நயினார் இராமசாமிபிள்ளை

திருவாச முற்றோதலுக்கு உந்து சக்தி தேவாரமுரசு நயினார் இராமசாமி பிள்ளை ஆவார். இந்து நல்வழி மன்றத்தின் சார்பில் நடந்த 172 முற்றோதல்களுக்கும் துணை நின்றிருக்கிறார். 1986இலிருந்து மாணவர்க்குத் தேவாரம் சொல்லிக் கொடுத்திருக்கிறார். பனிரெண்டு வயதிலேயே சுந்தரமூர்த்தி ஓதுவாரிடம் பாடம் கேட்டிருக்கிறார். இவரது குரல்வளத்தில் ஈடுபட்டு சென்னை நாடக சபை ஒன்றில் சேர்த்துக் கொண்டனர். திரைப்படத்தில் வேறு நடித்திருக்கின்றார். இவரது இல்லத்திற்குச் சென்றோம். ''கருவாய்ப் பிறந்து''

என்ற தேவாரப் பாடலைக் கணீரென்ற குரலில் பாடினார். வயது 82 என்பதின் அடையாளமே தெரியவில்லை. அப்படி ஒரு குரல்வளம்! ''தேவாரமுரசு'' என்ற பட்டம் பொருத்தம்தானே. (ச. நயினார் இராமசாமி பிள்ளை; பிறந்த ஆண்டு - 11-7-1922, பிறந்த ஊர் - சாத்தூர்; பெற்றோர்; நயினார்பிள்ளை, பேச்சியம்மாள்)

சண்முகசுந்தரம் பிள்ளை

இராமசாமி பிள்ளையருக்கு முன்பே சண்முகசுந்தரம்பிள்ளை என் பவர் குழந்தைகளுக்கு வாரம் ஒருமுறை தேவாரம் சொல்லிக் கொடுத்திருக்கிறார். (மறைவு : 1976 வயது 70)

பாலசுப்பிரமணியன்

உழவாரப்பணியின் உந்துசக்திகளை முன்னர் பார்த்தோம். அவற்றில் ஒரு முக்கிய அங்கமாக இருக்கும் திரு. பாலசுப்பிரமணியன் சமூக நலப்பணி களும் செய்கிறார். ஆண்டுதோறும் ஆனி உத்திரத்தன்று வீதி உலா வந்து, முப்பதாயிரம் ரூபாய் பொருட் செலவில் மாணவர்களுக்குக் கல்வி உதவித் தொகை, பெண்களுக்குப் புடவை என்று மக்கள் நலப்பணியும் செய்து வருகிறார். படமாடும் கோயில், நடமாடும் கோயில் - இரண்டுமே பாலசுப்பிரமணியத்திற்கு வழிபாட்டுத் தலங்கள் ஆகும். (பிறந்த ஆண்டு - 10-1-1950, ஊர் - மதுரை; பெற்றோர் : குருசாமி-ராமலட்சுமி).


இராமசாமி செட்டியார்

இத்தனை தொண்டுச் செல்வம் குவிந் திருந்தாலும் யாரேனும் ஒரு புரவலர் இல்லையென்றால் பணி சிறக்காதே? ஆம். அப்படி ஒருவர் இருக்கின்றார், தேசிய பொறியியல் கல்லூரி ஆட்சிக் குழுத்தலைவராக இருக்கும்இராமசாமி ரெட்டியார் (வயது 63) துரைச்சாமியா புரம்) கோயில்பட்டி பூவணநாதர் செண்பகவல்லி கோபுரம் கட்டுதல் (ரூபாய் ஒன்றரை இலட்சம் - ஆண்டு 1989), திருப்புடைமருதூர் திருப்பணி (ரூபாய் நாற்பது இலட்சம் - ஆண்டு 1989) சங்கரன் கோயில் கோபுரம், குடநீராட்டுவிழாச் செலவு 1990-91 என வாரி வழங்கியிருக்கிறார்.

கோயில்பட்டியில் ஏரி நிறைந்தனைய தொண்டுச் செல்வம் மண்டிக் கிடக்கிறது.

60. திருநெல்வேலி

திருவாசக முற்றோதல்



சுப்பிரமணிய பிள்ளை

திருவாசக முற்றோதல் நெல்லைச் சைவத்தின் தனிப்பண்பாகத் திகழ்கிறது. திருவாசகம் குழுவாக அல்லது அமைப்பு ரீதியாக முற்றோதல் என்ற திட்டத் தையே தமிழகத்தில் முதன் முதலாக அறிமுகப்படுத்தியது நெல்லை எனலாம். தனி அடியார் காலகாலமாக முற்றோதல் செய்து வருவது தனி வரலாறு.

1979-இல் நெல்லையில் மு.சு. சங்கர் தருமபுரம் சுவாமிநாதனை அழைத்து திருவாசக முற்றோதுதல் செய்வித்தார். இதுபெரும் உற்சாகத்தை ஏற்படுத்தியது. வந்திருந்த பலருக்கும் இதனைத் தொடரவேண்டும் என எண்ணம் வந்தது. அவர்களில் முதன்மை யானவர் ஓய்வுபெற்ற மின்சாரவாரிய முதன்மைப் பொறியாளர் திரு.கே.சுப்பிரமணியம் ஆவார்.

1980-இல் திரு.கே. சுப்பிரமணியம் திருப்புகழ்சபையின் தலைவர் ஆனார்.

இம்மன்றம் 1940இல் தொடங்கப் பட்டது. 1968 முதல் 1979 வரை சபையின் தலைவராக இருந்த அமரர் திரு. வே. நல்லசிவம் செட்டியாரும், திரு.மு. சுப்பையா இணைந்து நடத்தினர். அப்பொழுது இவர்கள் வெளியிட்ட ''சபையின் வரலாறு'' புத்தகம் கிடைக்கவில்லை.

திரு.கே.சுப்பிரமணியன் தலைவரான பின் 3-8-1980-இல் திருவாசக முற்றோது தலைத் தொடங்கினார். சபையின் பெயரும் திருவுருமாமலை திருப்புகழ் சபை திருவாசக முற்றோதுதல் வழி பாட்டுக்குழு என்று மாற்றியமைக்கப் பட்டது. அருள்மிகு நெல்லை யப்பர் கோயிலில் ஆங்கில மாதத்தின் கடைசி ஞாயிற்றுக்கிழமை தோறும் நின்றும் நடந்தும் உட்காந்தும் திரு வாசகம் முற்றோதல் செய்கின்றனர். 10-4-2005 அன்று 600-ஆம் திருவாசக முற்றோதல் நிறைவுபெற்றது.

மாதம் தோறும் விசாக நன்னாளில் மாலையில் நித்யக் கூட்டுவழிபாடு நடை பெறுகிறது. நிறைவாக நெல்லையப்பர் சந்நிதி முன்பு பன்னிரு திருமுறைப் பாடல்களைத் தொடர் முற்றோதலாக (சித்திரை 1-ஆம் தேதி முதல் திருமுறை ஆரம்பித்து பங்குனி கடைசி நாளில் நிறைவு செய்தல்) செய்யப்பட்டு வருகின்றது.

இல்லங்கள் தோறும் முற்றோதல் என்ற அமைப்பில் வைகாசி மூலத்தன்று திருஞானசம்பந்தர் குருபூசைக்கு முன்னர் மூன்று திருமுறைகள் ஓதிமுடிக்கும் வகையில் நிறைவேற்றப்படுகின்றது. குரு பூசைநாளில் நெல்லையப்பர் கோயிலில் அந்தத் திருமுறைப் பாடல் கள் ஓதப்பெறுகின்றன. இது போல பனிரெண்டு திருமுறைகளும் நிறைவு செய்யப்படுகின்றன. இவ்வாறு பன்னிரு திருமுறைப் பாராயணத்தில் பயிற்சி பெற்றவர்கள் 30 பேர் உள்ளனர்.

1995இலிருந்து தருமைக் குருபூசையின் பொழுதும், பத்து ஆண்டுகளாக ஆடி அமாவாசையின் போது திருவை யாற்றிலும் பத்துநாட்கள் தங்கி இருந்து பன்னிருதிருமுறை 18347 பாடல்களும் ஓதிவருகின்றனர். தருமையாதீன அரு ளாட்சியின் கீழ் உள்ள எட்டுத்திருக் கோயில்கள், இந்து அறநிலையத் துறையின் கீழ்வரும் பத்து திருக்கோயில் கள் குடநீராட்டு விழாவின் போது பத்துநாட்கள் தங்கியிருந்து பன்னிருதிரு முறை முற்றோதல் செய்திருக்கின்றனர்.

இரவும் பகலும் தூங்காது தொடர்ச்சி யாக ஐந்து நாட்களில் நெல்லை வண்ணார்பேட்டை ஆசிரியர் இல்லத் திலும், திருச்சி மண்டல பொறியியல் கல்லூரி குடியிருப்பு இல்லத்திலும் (நான்கு ஆண்டுகளாக) பன்னிரு திரு முறை முழுவதும் பாராயணம் செய் துள்ளனர்.

நெல்லையப்பர் கோயிலில் மாதம் ஒரு வியாழக்கிழமையிலும், அடியார்கள் இல்லங்களில் விரும்பும் போதும் அகத்தியர் தேவாரத் திரட்டு ஒரே நாளில் முற்றோதல் செய்யப்படுகின்றது.

ஐப்பசி மாதம் கந்த சஷ்டி விழாவில் தூத்துக்குடியிலும், திருச்செந்தூரிலும் (2 ஆண்டுகள்) ஆறுநாட்கள் திருப்புகழ் முற்றோதல் செய்யப்பட்டு வருகின்றது.

கடந்த மூன்று ஆண்டுகளாக (டிசம்பர் 2004-க்குள்) திருவிளையாடற்புராணம் முற்றோதல் ஆவணி மாதம் ஆரம்பித்து ஆவணி மூல நாளில் நிறைவு செய்கின்ற னர். திருவிளையாடற்புராண நிறைவு பகுதியினை ஆவணி மூலநாளில் மதுரையில் நிறைவு செய்கின்றனர்.

ஆண்டுதோறும் விடுதலைப் பெரு நாளில் நெல்லையப்பர் கோயிலில் திரு வாசக முற்றோதல், ஆண்டு விழாவும் நடைபெறுகின்றன.

ஆண்டுவிழாவில் Pre KG மாணவர்கள் முதல் +2 மாணவர்களுக்கு திருவாசகம் கட்டுரைப் போட்டியும் வைத்துப் பரிசுகள் வழங்குகின்றனர்.

ஆண்டிற்கு ஒருமுறை தலயாத்திரையும் மேற்கொள்கின்றனர். பெரியவர், ''சுப்பிரமணியனார் தம் திருவாசக முற்றோதல்'' என்று M. Phil ஆய்வு செய்யலாம் என்று தோன்றுகிறது.

இப்பேரியக்கம் நெல்லை முழுவதும் ஆட்கொள்ளப்பட்டு இருபதுக்கு மேற்பட்ட இடங்களில் திருவாசக முற்றோதல் மாதம் தோறும் நடைபெறுகிறது. கோபிசாமி என்கிற கோபிநாத் (வயது 60) செய்கின்ற முற்றோதல் வண்ண மலர்க்குவியலிடையே வனப் புடன் நடைபெறுகின்றது. இவர் நடத்தும் முற்றோதலுக்கு இருபதாயிரம் ரூபாய் வரை செலவாகிறது. 4, 5 ஆண்டுகளாக்ச் செய்துவருகிறார். பிற முற்றோதல்கள் அவ்வம் மன்றங்களின் செயல்பாடுகளில் இடம்பெறும்.

சுப்பிரமணிய பிள்ளை

திருவாசக முற்றோதலின் தந்தை திரு. சுப்பிரமணியபிள்ளை தமது பத்துவயதிலேயே சிவபுராணம் முழுமையும் பாடுவார். திருமண நாள் முதலிரவின் போது மனைவியுடன் சேர்ந்து பஞ்சபுராணம் பாடி வாழ்க் கையைத் துவங்கினார். 1980இலிருந்து திருமுறைகளைப் படிக்க ஆரம்பித்தார். இவர்களுக்கும் இவர்கள் குழுவைச் சேர்ந்த மற்றும் பதினைந்து பேருக்கும் திருவாசகம் முழுமையும் மனப்பாடம். கணவனும் மனைவியுமாக சமயதீக்கை விசேஷ தீக்கை எடுத்துள்ளனர். 10-4-2005 அன்று இவர்கள் திருமணப் பொன்விழா பன்னிரு திருமுறை முற்றோதுதல் வெள்ளி விழாவாக 600-ஆம் திருவாசக முற்றோதலாகக் கொண்டாடப்பட்டது. (பிறந்த ஆண்டு : 20-4-1933; பிறந்த ஊர் - ஸ்ரீவைகுண்டம்; பெற்றோர் - ஏ.எஸ். குழந்தை வேலு பிள்ளை சொர்ணவடிவு அம்மாள்)

1978-இல் தோற்றுவிக்கப்பட்ட மணிவாசகர் நற்பணிமன்றம் மாதந்தோறும் திருவாசக முற்றோதல் செய்து வருகிறது. தலைவர் - ஜோதி முத்தையா, செயலர் - எஸ்.எஸ். சொக்கலிங்கம்.

சிவநெறி மணிவாசகர் மன்றம் என்ற அமைப்பு 1999 ஜூனில் தொடங்கி 2004 ஜூலை வரை 233 முற்றோதல்களைச் செய்து முடித்துள்ளது. இம்மன்றம் நடத்தும் முற்றோதலில் திருவாசகத்திலிருந்து கேள்விகள் கேட்கப்பட்டு அடியவர்களிடமிருந்து பதில்களும் பெறுகிறார்கள். சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லும் திருக்கூட்டம். மன்றத்தின் அடியார்கள் ஒவ்வொரு மாதமும் ஒரு பதிகத்தைத் தலைவர் முத்தையாபிள்ளை இல்லத்திற்கு வந்து மனனம் செய்து ஒப்புவிக்கிறார்கள். தலைவர் மாதம் ஒன்றுக்கு நெல்லையில் 7 கோயில்களில் முற்றோதல் செய்து வருகிறார். அடியார்கள் இல்லத் திற்கும் சென்று வருகிறார். இதுவல் லாமல் 1999 முதல் 2003 வரை 543 அடியார்களுக்குக் கூனம்பட்டி ஆதீனம் மூலம் தீக்கை பெற ஏற்பாடு செய்து இருக்கிறார். மாதம் தோறும் பௌர்ணமியன்று பொன்னுக்குடி கோயில் சென்று திருமுறை பாடி கிரிவலம் செய்து வருகின்றனர்.

இனி முறையாக நெல்லைச் சைவ வரலாற்றைச் சிந்திப்போம்.

சைவசபை

இக்கழகம் பாளையங்கோட்டையில் 1886-ஆம் ஆண்டு உண்டாக்கப்பட்டு அவ்வூர் கண்டோன்மெண்டு வார்டு, கோபாலசுவாமி கோயில் தெற்குவீதியில் சபையார் கட்டிய ''திருநாவுக்கரசு நாயனார் திருமடம்'' என்னும் கட்டடத்தில் ஜய வருடம் மே மாதம் 26-ஆம் தேதி (1895-ஆம் வருடம் பிப்ரவரி மாதம் 7-ஆம் தேதி)யில் நிலையிடப்பட்டது.''

இது சைவ சபையால் 1912-இல் அச்சிடப்பட்ட சபையின் சட்டங்களுக்கு அன்றிருந்த பெருமக்கள் எழுதிய முகவுரையின் தொடக்கமாகும். அச்சட்ட திட்டங்களில் பல ஆங்கிலச் சொற்

களுக்கு அருமையான விழுமிய தமிழ் சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. Secret Ballot - மறைக்குடவோலை, கிழமைக் குடவோலை (Casting Vote); Civil and Criminal Cases உரிமை, தண்ட வழக்குகள்; Secretary - அமைச்சர்.

அக்காலத்திலேயே கூர்த்த நுண்ணறிவோடும் தமிழ்ப்பற்றோடும் இம்மொழி பெயர்ப்புகள் ஆக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு தோன்றி வளர்ந்த சைவ சபையில் கூட்டங்கள் நடத்திச் சைவ நெறியையும் சித்தாந்தச் செழும் பொருளையும் பரப்பி வந்தனர். சைவ சபையில் தம்மை இணைத்துக் கொண்டு சபை நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டு வந்த பல்லோருள்ளும் விருதை சிவ ஞானயோகி, உயர்திரு. ஜெ.எம். நல்லசாமிப் பிள்ளை, மறைமலை யடிகள், உயர்திரு ரா.பி.சேதுப்பிள்ளை, திரு.வி.க, உயர்திரு கா. சுப்பிரமணிய பிள்ளை ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள்.

அதனோடு அமையாமல் ''வாகீச புத்தகசாலை'' என்று ஒரு நூல்நிலை யமும் இயங்கி வந்தது. சைவ மகளிருக் கும் நூல்கள் அளித்து வந்தமை அறியப் படுகிறது.

காலச்சூழ்நிலைக்கேற்ப சிறுசிறு வெளியீடுகள் தொகுப்பு நூல்கள் முதலியவற்றை வெளியிடுவதற்காகச் கானாடு காத்தான் உயர்திரு. S.R.M.M.C.T பெத்தாச்சி செட்டியார் வழங்கிய நன்கொடையினால் பெத்தாச்சி அச்சகம் என்ற பெயரில் ஓர் அச்சகம் நிறுவப் பெற்றது. அந்தக்கால கட்டம் கிறிஸ்துவ மிஷினரிகள் தீவிரமாகச் சைவ தூஷணப் பிரசாரம் செய்து வந்தனர். அதனை மறுக்கத் துண்டுப் பிரசுரங்கள் வெளியிட நேர்ந்தது. மாதம் ஒரு துண்டுப் பிரசுரம் வெளியிட முயற்சித்தனர். கிறிஸ்துவத் தாக்குதலை இம்முயற்சி தடுத்து நிறுத்தியது எனலாம். அண்மைக் காலம் வரை *(1986)* பல வெளியீடுகள் வெளிவந்தன.

தொடக்க காலத்தில் எட்டையபுரம் திவான் திரு. S.T. சண்முகம்பிள்ளை தலைவராக இருந்து பணியாற்றினார். அதன்பின்னர் சிறிது காலம் திரு. S. குமாரசாமி ரெட்டியார் பி.ஏ.பி.எல். தலைவராக இருந்து வந்தார். சபையின் அமைச்சராக வள்ளல் என்று பலரால் அருமையாக அழைக்கப்பெற்ற உயர்திரு. சிவஞான தேசிகர் பணியாற்றி னார். *1983* தொடங்கி திரு. ச. சைலப்பன் தலைவராகவும் உயர்திரு. ம. சுப்பிர மணியம் செயலராகவும் பொறுப்பேற்று *1986*-இல் நூற்றாண்டு விழாவை மலர் வெளியிட்டு விழாக் கொண்டாடினர். தற்போதைய தலைவர் - நெல்லை வழக்கறிஞர் வள்ளிநாயகம் ஆவார்.

சைவசபை தன் முதல் *45* ஆண்டுக்ள் சிறப்பான முறையில் பணியாற்றியது. அதன் பின்னர் தொய்வு ஏற்பட்டு மீண்டும் நூற்றாண்டு விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

திருவுருமாமலை பன்னிருதிருமுறை வழிபாட்டுக்குழு

மூக்கூடல் கிராமத்தில் பீடி சுற்றும் பணியில் இருப்பவர்கள் பீடி சுற்றும் பொழுது எப்பொழுதும் பாடிக்கொண் டிருக்கும் திரைப்படப்பாடல்களை விட்டு விட்டு இப்பொழுது திருமுறைப் பாடல்களைப் பாடிக்கொண்டே பீடி சுற்றுகிறார்கள்.

பாப்பான் குளம் கிராமத்தில் சிறுபிள்ளைகள் திருமுறைப் பயிற்சியில் உருவாகி வருகின்றனர். அது ஓர் அதிசயம்!

இதுபோல 26 கிராமங்களில் திரு முறை விழிப்புணர்ச்சி பரவியுள்ளது. 500க்குப் மேற்பட்டோர் இதுவரை உருவாகியுள்ளனர். கிறிஸ்துவர் ஒருவர் மதம் மாறியுள்ளார். மனநிலை குன்றி யவர்கள் தெளிந்திருக்கின்றனர். உடல் நிலை சரியில்லையென்றால் அவர்கள் இல்லம் சென்று திருமுறை பாடி திருநீறு தருகின்றார்கள். கிராமங்களில் திரு



கிராமங்களில் திருமுறை பயிற்றுவிப்போர்

நிற்பவர் (இடமிருந்து வலம்) 1) திருமதி அ. சங்கர வடிவு, 2. திருமதி மு. உலகம்மாள், 3) திருமதி ஆ. பெரியநாயகி, 4. திருமதி இரா. ஆவுடையம்மாள், 5. சிவ இலலிதா, 6. சிவ சாரதா, 7. திருமதி கல்யாணி

அமர்ந்திருப்பவர் (இடமிருந்து வலம்)

1) திரு. க. சங்கரலிங்கம் (பொறுப்புச் செயலர்), 2. திரு. இ. அகத்தீசுவரன் (கிராமப்புறச் செயலர்), 3. திரு. மா. ச. மயிலப்பன் (செயலர்), 4. திரு. சொ. சுந்தரம் (தலைவர்), 5. இரா. வள்ளி நாயகம் (திருமுறை ஆசிரியர்), 6. திரு. செ. கனகசபாபதி (அமைப்புச் செயலர்), 7. திரு. சு. காளியப்பன் (துணைத் தலைவர்).

முறைத் திருமணம் நடக்க ஆரம்பித்து உள்ளது. இதுவரை (2004) ஏழு திருமணங்கள் நடைபெற்றுள்ளன.

கிராமத்தில் சிவன் கோயில்கள் பற்றி எதுவுமே தெரியாது இருந்த மக்கள் பிரதோஷ வழிபாடு, திருவாதிரை என்று பின்பற்ற ஆரம்பித்துள்ளனர். கிராம மக்கள் திருமுறைகளைப் பண்ணோடு பாடுகின்றார்கள். மார்கழியில் திருவெம்பாவை ஓதுதல் அனைத்துக் கிராமங்களுக்கும் வந்துவிட்டது.

இது ஒரு பெரும் புரட்சி! இருபதாம் நூற்றாண்டில் நடைபெற்று வரும் சமயப்புரட்சி! இது எப்படி நடந்தது?

இப்புரட்சியைச் செய்பவர்கள் திருவுருமாமலை பன்னிரு திருமுறை வழிபாட்டுக் குழவினர் ஆவர். நெல்லைப் பகுதியில் 26 கிராமங்களைத் தேர்ந்தெடுத்துக் கொண்டார்கள். 8 குழுக்களாகப் பிரிந்து ஒவ்வொரு குழுவும் முதல் வெள்ளி, இரண்டாம் வெள்ளி என்று முறை போட்டுச் செய்கிறார்கள். ஒரு குழுவில் 2 அல்லது 3 பேர் இருக்கின்றனர். குறிப்பிட்ட நாளில் மாதம் தோறும் சென்று திருமுறைகள் சொல்லித் தருகிறார்கள். 10 பேரிலிருந்து 200 பேர் வரை வருகின்றார்கள். இதனை அவர்கள் தொடர்ந்து செய்கின்றனர். குழுவினர் ஒவ்வொருவரும் தங்கள் செலவிலேயே செல்கின்றனர்.

திருமுறை பயில்விக்கும் இடங்கள்

சிவபூசைச் செல்வர் - புலவர் இ. அகத்தீசுவரன், குழுவின் கிராமப்புறச் செயலர்

எண்	நாள் (தமிழ்மாதம்) மாலை 6 மணி	ஊர்
1.	முதல் வெள்ளி	சுத்தமல்லி
2.	2-ஆம் வெள்ளி	மேலச் செல்வம்
3.	3-ஆம் வெள்ளி	தேச மாணிக்கம்
4.	4-ஆம் வெள்ளி	ராஜா குடியிருப்பு
5.	முதல் சனி	கோமதி நகர்
6.	2-ஆம் சனி	கொத்தன் குளம்
7.	3-ஆம் சனி	பாப்பாக் குடி
8.	முதல் ஞாயிறு	கோபால சமுத்திரம்
9.	2-ஆம் ஞாயிறு	நவநகர்
10.	3-ஆம் சனி	கொண்டா நகரம்
11.	2-ஆம் திங்கள்	திருப்பணி கரிசல் குளம்
12.	3-ஆம் திங்கள்	கூனியூர்
13.	4-ஆம் திங்கள்	குருநகர்
14.	துயர் களை சதுர்த்தி	பாரதியார் நகர்
15.	கார்த்திகை	ஆர்.எம். எஸ். போஸ் நகர்

அருள்மிகு நெல்லையப்பர் திருக் கோயிலில் பெரிய சபாபதி முன்னர் செவ்வாய்க்கிழமை தோறும் திருமுறைப் பயிற்சி வகுப்புகள், திருமுறைக்கலாநிதி சிவ இரா. வள்ளிநாயகம் அவர்களால் மாலை 7 மணிக்கு நடத்தப்படுகின்றன.

எண்	நாள் (தமிழ்மாதம்) மாலை 6 மணி	ஊர்
16.	திங்கள் தோறும், வியாழக்கிழமை தோறும்	சாந்தி நகர்
17.	1,2,3 வெள்ளி	சிந்து பூந்துறை
18.	சனி, ஞாயிறு	காந்தி நகர்
19.	தமிழ் மாதப்பிறப்பு 4-ஆம் வியாழன்	வீரபாகுநகர்
சிவ செ. கனகசபாபதி (குழுவின் அமைப்புச் செயலர்)		
20.	முதல் சனிக்கிழமை	பாப்பாங் குளம்
21.	2-ஆம் சனிக்கிழமை	கீழ்ப்பாவூர்
சிவ. ஆ. பெரியநாயகி - சிவ சு. லலிதா		
22.	முதல் வெள்ளி	பிரமதேசம்
சிவ. சாரதா - சிவ. ஆனந்த கல்யாணி		
23.	இரண்டாம் சனி	மாறாந்தை
சிவபூசைச் செல்வர் சிவ.க.சங்கர லிங்கம் குழுவின் பொறுப்புச் செயலர்		
24.	முதல் ஞாயிறு	சி.என். கிராமம்
சிவ இரா. ஆவுடையம்மாள்		
25.	திங்கள் (1,3)	தச்சநல்லூர்
சிவ மா.ச. மயிலப்பன் (குழுவின் செயலர்)		
26.	முதல் வெள்ளி	கல்லிடைக் குறிச்சி

நெல்லையப்பர் திருக்கோயிலிலும் முன்பெல்லாம் கூட்டம் இல்லாமல் இருந்து வந்தது. வழிபாட்டுக்குழு அமைந்த பிறகு நல்ல கூட்டம் வருகிறது.

நல்ல அபிஷேகம் நடக்கிறது. சிவராத்திரி யன்று 1000 பேர் வருகின்றனர்.

திருமுறை வழியில் திருமணம் செய்து வைக்கின்றனர். ஆண்டுக்கு ஒரு முறை மூன்று நாட்கள் திருமுறைக் சொற் பொழிவுகள் பாராயணம் என்று எழில் ஞானபூசை நடத்துகின்றார்கள். இவை யல்லாமல் திங்கள் தோறும் திருமுறை விண்ணப்பம் (தமிழ் மாதம் முதல்நாள்) திருமுறை வழிபாடு (ஒவ்வொரு திருவாதிரை, சிவராத்திரி, விசாகம், செவ்வாய்) கூட்டுவழிபாடு (தமிழ்த் திங்கள் கடைசி வெள்ளி) சிவராத்திரி விழா, ஆறுமுறை பெரிய சபாபதிக்கு திருமஞ்சனம், திருமுறை முற்றோதல் (புதன்கிழமை), திருவாசக முற்றோதல் (முதல் ஞாயிறு) என வழிபாட்டுக் குழுவின் பணி விரிகின்றது. 2-7-2004 அன்று குலசேகரன் பட்டினம் ஊர் வட முகப்பில் காரைக்காலம்மையாருக்கு 35000 ரூபாய் செலவில் ஒரு நினைவிடம் எழுப்பியுள்ளதைப் பெருமையாகக் கூறிக் கொள்கிறார்கள்.

திருவுருமாமலை பன்னிருதிருமுறை வழிபாட்டுக்குழு தமிழ்நாட்டில் ஓர் எடுத்துக்காட்டான அமைப்பாகப் பணி யாற்றிவருகின்றது. தமிழ்நாட்டில் உள்ள சைவ அமைப்புகள் இவர்கள் வழிமுறை களைப் பின்பற்றுதல் இன்றைய கால கட்டத்திற்கு அவசர அவசியத் தேவை யாகும்.

திருவுருமாமலை பன்னிருதிருமுறை வழிபாட்டுக் குழுவினை இயக்கி கொண் டிருப்பவர் திருமுறை ஆசிரியர் புலவர் இரா. வள்ளிநாயகம் ஆவார். 1986-இல் வள்ளி நாயகம் இவ்வமைப்பைத் தோற்று வித்தார். செவ்வாய்க்கிழமை தோறும் நெல்லையப்பர் கோயிலிலும், வியாழக்கிழமைதோறும் சிந்து பூந்துறை யிலும், சனிக் கிழமை தோறும் வீரபாகு நகரிலும் அடியார் பெருமக்களுக்கு முறையாகத் திருமுறைப் பயிற்சி கொடுத்து வருகிறார். அடியார் இல்லங் களில் தன்னுடைய குழுவினரை அழைத்துக் கொண்டு திருவிளக்கு வழிபாடு, திரு முறை விண்ணப்பம், மலர்வழிபாடு மற்றும் மாத சிவராத்திரி, திருவாதிரை வழிபாடுகளையும் நிகழ்த்தி வருகிறார். இதுவரை 1151 வழிபாடுகள் நடத்தி உள்ளார். 1995-இல் திருவுருமா மலை பன்னிருதிருமுறை அறக்கட்டளை நிறுவி அவ்வருமானத்தைக் கொண்டு வெளியூர் அடியார்களுக்கு உணவு படைக்கிறார். இவ்வழிபாட்டுக் குழு விற்குப் பத்து ஆண்டுகளாக அமைப் பாளராக இருந்த பின்னர் திரு.சொ. சுந்தரம் பிள்ளையவர் களைத் தலைவ ராக ஏற்றார். திரு மயிலப்பன் செயலர். (பிறந்த ஆண்டு 20-11-1936; பிறந்த ஊர் - நெல்லை; பெற்றோர் - இராமையச் செட்டியார், வேலம்மாள்) சுந்தரம் பிள்ளை - தலைவர் (பிறந்த ஆண்டு - 17-12-1925; பிறந்த ஊர் - ராசவல்லிபுரம்; பெற்றோர் - சொக்கலிங்கம் பிள்ளை விஜயலட்சுமி)

அகத்தீசுவரன் : புதன் கிழமைதோறும் பன்னிருதிருமுறைகளுக்கும் (பிறப்பு - 25-4-1947) ஐந்தாண்டுக்காலமாக விளக்கம் சொல்லி வருகிறார். பட்டிய லில் உள்ள 15 கிராமங்களுக்கும் மாதம் ஒரு முறை நேரில் சென்று திருமுறை பாடம் சொல்லி வருகிறார். இவரது துணைவியார் சங்கர வடிவும் (30-5-1956) அவர்களும் கிராமங்களுக்குச் சென்று திருமுறை வகுப்புகள் நடத்தி வருகிறார். இவர் நாடறிந்த கழக உரையாசிரியர் ப. இராமநாதம் பிள்ளையின் மகள் வயிற்றுப் பேத்தி ஆவார்.

சிவநெறிக்கழகம்

சித்தாந்த சாத்திரங்கள் கற்பிப்பதற் கென்றே தோற்றுவிக்கப்பட்ட அமைப்பு சிவநெறிக் கழகம் ஆகும். தொடக்கத்தில் ஈசுரமூர்த்தியா பிள்ளையவர்களைக் கொண்டு பதிநான்கு சாத்திரங்களும் இருமுறை சுழற்சியில் நடைபெற்றது. இவர்களின் மறைவுக்குப் பிறகு ச. ரத்தினவேலனைக் கொண்டு இருபது

ஆண்டுகளுக்கு மேலாக வகுப்புகள் நடைபெற்றன. அவருக்குப் பிறகு தற்பொழுது சிவஸ்ரீவித்தியாசங்கர சிவாசாரியாரைக் கொண்டு சிவ ஞான மாபாடியம் பாடம் நடந்து வருகிறது. ஆண்டுக்கு ஒருமுறை சிவ ஞான சுவாமிகள் குருபூஜை நடக்கிறது. தலை சிறந்த சைவசித்தாந்த அறிஞர்கள் பங்கு பெற்றுள்ளார்கள். 1957-இல் தொடங்கப் பட்ட இவ்வமைப்பு முதலில் வைதீக சைவ சம்மேளனம் என்ற பெயர் பெற்றிருந்தது. 1976-இல் சிவநெறிக் கழகம் என்று பெயர் மாற்றப் பட்டுள்ளது.

சிவநெறிக்கழகத்தின் தற்போதைய தலைவர் வித்யாசங்கர சிவாசாரியார் சமஸ்கிருதம், ஆகமம், சித்தார்ந்த சாத்திரம் ஆகியன கற்றுத்தேர்ந்தார். வேதம், ஆகமங்களை ஒற்றுமைப் படுத்தி சாத்திரத்துடன் இணைத்துப் பேசிவருகிறார். (பிறந்த ஆண்டு - 7-5-1940; நெல்லை; பெற்றோர் - வாமதேவசிவாசாரியார், பார்வத வர்த்தினி)

காந்திமதி கைங்கர்ய கமிட்டி

1985-இல் தொடங்கப்பட்ட இவ் வமைப்பு பௌர்ணமி அபிஷேகம், அம்பாளுக்கு நித்யப்படி நைவேத்யம், அமாவசை பௌர்ணமியன்று அன்ன தானம் எனப் பணியாற்றுகின்றது.

ஸ்ரீ காந்திமதி அம்பாள் சமேத ஸ்ரீநெல்லையப்பர் அருட்பணி மன்றம்

1998-இல் தொடங்கப்பட்ட இம்மன்ற உறுப்பினர்கள் நெல்லைப் பகுதியில் உள்ள சிவால யங்கள், வைணவ, சக்தி ஆலயங்களில் துப்புரவு, பராமரிப்பு செய்து வருகின்றனர். 10 கோயில்களில் 100 முறை பணியாற்றியிருக்கின்றனர். ஆங்கில மாதம் இரண்டாவது ஞாயிற்றுக் கிழமை தோறும் நெல்லையப்பர் திருக் கோயியில் பெரிய அளவில் அன்பர்கள் கூடி உழவாரப்பணி, துப்புரவு, நந்த வனம் பேணுதல் என்று செய்கின்றனர். மாதாந்தர, வருடாந்தர பூஜைகளும் செய்கின்றனர். இதன் அமைப்பாளர் திரு.ஏ.எஸ். முத்தையா திருமுறை பாடிப் பரவும் நல்லன்பர்.

பாளையங்கோட்டை திருச்சிற்றம்பலம் வழிபாட்டு அறக்கட்டளை

1998-இல் தொடங்கப்பட்ட சிவனடி யார் திருக்கூட்டம் என்ற அமைப்பு அறுபத்துமூவர் வீதியுலா, திருவாசக முற்றோதல், உழவாரப்பணி எனப் பணியாற்றி வந்தது. பாளையங் கோட்டை சிவன் கோயிலில் படம் ஒன்றுக்கு 300 ரூபாய் வீதம் அறுபத்து மூன்று நாயன்மார் படங்களையும் இரண்டரை லட்சம் ரூபாய் செலவில் வரைந்து கோயில் சுற்றுச்சுவரில் அழகுற மாட்டியுள்ளனர். இதன் செயலாளர் - பொன். சீதாராமன் (10-1-1941) இத்திருக் கூட்டம் தற்பொழுது திருச்சிற்றம்பலம் வழிபாட்டு அறக் கட்டளையுடன் இணைந்து செயல்படுகிறது.

திருச்சிற்றம்பலம் வழிபாட்டு அறக் கட்டளையானது பாளையங்கோட்டை அருள்மிகு கோமதி அம்பாள் சமேத சிவன் கோயில் பணிக்காகவே துவங்கப் பட்டது. 1998-ஆம் ஆண்டில் உழவாரப் பணிக்கு என்ற அமைப்பை ஏற்படுத்து வித்து 29-3-1998 அன்று உழவாரப் பணியைக் கோயில்பட்டி திரு. குரு. பாலசுப்பிரமணியம் தலைமையில் ஒரே நாளில் முடித்தது. 12-2-1999-ஆம் ஆண்டு பாளையங்கோட்டை திருச்சிற்றம்பலம் வழிபாட்டு அறக்கட்டளை துவங்கப் பட்டது. அறுபத்துமூவர் திருவீதியுலா போன்ற சிவப்பணிகளை நடத்திவந்தது. 2004-2005-இல் செய்த பணிகள் : (i) 150 அடி ஆழ்குழாய் கிணறு ஏற்படுத்தப் பட்டு அதில் மோட்டார் இணைக்கப் பட்டு திருக்கோயிலில் தண்ணீர் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டது. (ii) மடப் பள்ளிக்கு தண்ணீர் கிடைக்க மோட்டார் ஏற்படுத்தப்பட்டது. (iii) கோயில்

வளாகத்தில் பல்வேறு இடங்களில் குழாய் அமைத்தும் நந்தவனத்தில் ஊற்றுக்குழாய் அமைத்தும் தண்ணீர் கிடைக்க வழிசெய்யப்படுதல்; (iv) மின் கட்டணம் (v) மின்சார வாத்தியம் (vi) ஓம் நமசிவாயா மின்விளக்கு ஒளியில் ஏற்படுத்தப்படுதல் (vii) அறுபத்துமூவர் பகுதிகளில் மொசைக் டைல்ஸ் பதித்தல், (viii) சலவைக்கல் பதித்தல்; தண்ணீர் தொட்டி கட்டுதல் (ix) சிறுசிறு திருப்பணிகள்.

இவை யாவும் கோயில் பராமரிப்புக்கு மேற்கொள்ளப்பட்டபணிகள் ஆகும். இவையல்லாமல் வழிபாடு நிலையில் செய்யப்பட்டுவரும் பணிகள்

1. ஒவ்வொரு மாதமும் முதல் ஞாயிறன்று உழவாரப்பணி, *2.* நாயன் மார் குருபூசை, *3.* திருவாசக முற்றோதல், *4.* பிரதோஷ வழிபாடு பிறவழிபாடுகள், *5.* அறுபத்துமூவர் வீதியுலா.

திரிபுராந்தீஸ்வரர் திருக்கோயிலைப் போய் பார்க்க வேண்டும். அத்துணை அழகுற நடத்தி வருகிறார்கள். தலைவர் அரு. தியாகராசன், செயலர் கி. சேகரன்பிள்ளை.

இனி தொண்டர்களையும் அறிஞர் களையும் பற்றி சிந்திப்போம்.

சிதம்பர ராமலிங்கபிள்ளை

சிதம்பர ராமலிங்கபிள்ளை என்றால் ஒரு காலத்தில் திருநெல்வேலி அறிஞர் களுக்கெல்லாம் சிம்ம சொப்பனம். ஆழ மான படிப்பு. ஆழமான சிந்தனை, வடமொழியிலும் தமிழிலும் வியக்கத்தக் புலமை. இசை தெரியும். இனிமையான குரல்; கலைகளில் எல்லாம் நல்ல ஞானம்; பேசினாலும் எழுதினாலும் அபாரமான தெளிவு. ஐயந்திரிபுக்கு இடமில்லாமல் கூர்மையான வாதத் திறமையோடு எதையும் உறுதியாக எடுத்துச் சொல்லும் அழகு. சைவ சித்தாந்தத்தில் அசைக்க முடியாத புலமை. திருநெல்வேலி ஹிந்து கல்லூரியில் தமிழ் ஆசிரியர். ஆங்கிலப் பயிற்சியும் உண்டு. தாழ்வு மனப் பான்மை என்பதே இல்லாத ஒரு தமிழ் ஆசிரியர். தேவாரம் ஓதுவது போலவே வேதத்தையும் மரபு வழுவாமல் அவர் ஓதுகிற முறையைக் கேட்டுவிட்டுப் பல அறிஞர்பெருமக்கள் வியப்பில் ஆழ்ந்ததுண்டு.

ரேடியோவில் தேவார விளக்கமும், திருமந்திர விளக்கமும், இன்னும் பல இலக்கியப் பேருரைகளும் பற்பலவாக ஒலிப்பரப்பினார். சமஸ்கிருதம் கற்ற புலவர்களும், தமிழ் அறிஞர்களும், இருசாராரும் ஒருமித்து அதிசயிக்கும்படி இருந்தன அவருடைய சொற்பொழிவு.

இத்தனை ஆண்டுகளுக்குப்பிறகு அவருடைய படிப்பையும் சிந்தனை ஆற்றலையும் தெளிவையும், எண்ணிப் பார்க்கும்போது அவருக்கு ஈடாக இன்னொரு புலவரைச் சொல்லமுடிய வில்லை. காகிதப் பட்டங்களைக் கொண்டு திறமைகளைக் கோருகிற உலகத்தில், எந்தப் பல்கலைக்கழப் படிப்பும் இல்லாமல் மெய்யான கல்வி யினால் மெய்யான மதிப்போடு வாழ்ந்து முடிந்த அந்தப் பண்டித மகா வித்துவான் இலக்கண இலக்கியங்களைக் கற்பிக்கும் முறையே தனி. எந்த முட்டாளுக்கும் தொல்காப்பியத்தைப் புரியப் பண்ணி விடுவார். சிவஞான போதத்தை விளக்கி விடுவார். அதுமட்டுமா வேடிக்கையான பல நிகழ்ச்சிகளைச் சுவையோடு எடுத்துக் கூறுவார்.

மீ. ப. சோமு கல்கியில் *27-1-1980* இதழில் இவ்வாறு எழுது கிறார்.

சிதம்பர ராமலிங்க பிள்ளை பிறந்த ஊர் விக்கிரமசிங்கபுரம். மாதவச் சிவஞான யோகிகளிடம் பக்திமிக்கவர். திருநெல்வேலி இந்துக் கல்லூரியில் 1937-ஆம் ஆண்டு வரை வேலை பார்த்து ஓய்வுபெற்று அதன் பின் ஆதீன வித்துவானாக விளங்கிய காலத்தில் சில நூல்களுக்கு உரை எழுதியும் சில

வற்றிற்குக் குறிப்புரை எழுதியும் நூல்களைப் பரிசோதித்தும் ஆதீன வெளியீடுகளைப் பதிப்பித்தார். அறுபத்து நான்கு ஆண்டுகள் வாழ்ந்த இவர் 1948-ஆம் ஆண்டில் சிவபதம் அடைந்தார்.

வை. ஆறுமுகம்பிள்ளை



திருவாசகத்தை மேலைநாட்டவரும், மேலைநாட்டில் உள்ள இந்தியர்களும் (அடுத்த தலைமுறை இளைஞர்களுக்குத் தமிழ் தொடர்பு குறைந்து வருகிற நிலையில் பேசமட்டும் தெரிந்து தமிழ் படிக்கத் தெரியாத நிலையில் உள்ளவர்கள்) புரிந்துகொள்ள நெல்லைப் பெரியவர் திரு. வை. ஆறுமுகம்பிள்ளை ஒரு தந்திரம் செய்தார். திருவாசகத்தை மொழிபெயர்ப்பும் செய்தார். மொழி மாற்றமும் செய்தார். (Translation and Transiteration) சில நல்ல மொழிபெயர்ப்புகளை ஏற்றுக் கொண்டார். மொழி மாற்றத்திலும் நெல்லையறிஞர்கள் உதவியிருக்கின்றனர். இப்போது தங்க நிற வண்ணத்தோடு இருதொகுதிகளாகக் (950+300 பக்கங்கள் A4 வடிவம்) வெளிவந்துள்ளது. ஆனால் விலைக்குக் கிடைக்காது. தக்க பாத்திரத்திற்குதான் வழங்குகிறார்கள் இப்பெரும்பணிக்குப் பத்து இலட்ச ரூபாய் செலவாகியுள்ளது. அவர் பங்கு 25% இந்திய நண்பர்கள் பங்கு 25% அமெரிக்க நண்பர்கள் பங்கு 50%. இப்பணியினைச் செய்து முடிக்க 1999 முதல் 2004 வரை ஐந்தாண்டுகள் பிடித்தன. 30-7-2004 அன்று சிதம்பரத்தில் வெளியிடப்பட்டது.

பெரியவர் ஆறுமுகனார் பணி சொற்பொழிவோடு நிற்கவில்லை. தமது இல்லத்திலே சாத்திர வகுப்பு நடத்துகிறார். இரண்டரை ஆண்டுகளாகப் பெரியபுராணம் நடத்தினார். சைவ சித்தாந்த நேர்முகப்பயிற்சிமையத்தை இவர் தனது இல்லத்தில் நடத்துகிறார். அவ்வகுப்பின் மாணாக்கர், அமைப்பாளர், ஆசிரியர் நம் ஆறுமுகனாரே இவையெல்லாம் செய்து முடிக்க சமூகசமய சங்கம் என்ற அமைப்பினை நடத்துகிறார்.

பெரியவர் தம் பெரும்பான்மை நாட்களை அமெரிக்காவில் கழிக்கிறார். அமெரிக்காவிலும் பெரியவர்கள், இளைஞர்கள், குழந்தைகள் என சைவ வகுப்புகள் நடத்துகிறார். கொப்பட்ராயர் என்ற கனடா நாட்டு நங்கையின் சைவ சித்தாந்த முனைவர் பட்ட ஆய்விற்கும், பார்பரா என்ற அமெரிக்க மாதரசியின் இந்து சமய முனைவர் பட்ட ஆய்விற்கும் உதவியிருக்கிறார். எண்பத்தேழு வயதிலும் சைவத்திற்காகப் பேசவும் எழுதவும், நூல் வெளியிடவும், வகுப்பு, நடத்தவும் என இந்த இளைஞர் சுறுசுறுப்பாகப் பணியாற்றி வருகிறார்.

பணிக்கு வயது ஏது?

(பிறந்த ஆண்டு - 1-6-1918; பிறந்த ஊர் - நெல்லை; பெற்றோர் - வைத்திய லிங்கம், காந்திமதி)

ம. சிவசம்பு




சிவசம்பு அவர்கள் பாளையங் கோட்டை சைவசபையிலும் ஸ்ரீவை குண்டம் கலைக்கோயிலிலும் தருமபுர ஆதீனம் சைவசித்தாந்த மாலை நேரக் கல்லூரியை நடத்தினார். சைவ இதழ் களில் கட்டுரைகள் எழுதி வருகிறார். சமய இலக்கிய ஏடான ''ஞானவேல்'' என்ற இதழினைப் பல ஆண்டுகள் வெளியிட்டு வந்தார். பெரியபுராணம், கந்தபுராணம், திருவிளையாடற்புராணம் தொடர் சொற்பொழிவுகள் நிகழ்த்தி யிருக்கிறார். இவர் எழுதியுள்ள நூல்கள் வருமாறு

(i) சிவஞானபோதம் தெளிவுரை (ii) சைவசித்தாந்த சாத்திரங்கள் அறிமுகம் (iii) சைவசமயக்குரவர்களின் வாழ்வியல் சிந்தனைகள் (iv) திருவெம்பாவை திருப்பள்ளியெழுச்சி தெளிவுரை (v) நால்வர் நான்மணிமாலை தெளிவுரை (vi) நமசிவாயப்பதிகம் தெளிவுரை (vii) திருவைந்தெழுத்து (viii) பிரணவத்தின் அருமையும் பெருமையும் (ix) அம்பல வாணர் அருட்கூத்து விளக்கம்.

1988 முதல் ஸ்ரீ குமரகுருபரர் ஆய்வு மையத்தின் சார்பில் சமய இலக்கியச் சொற்பொழிவுகள் நடத்தி வருகின்றார். (பிறந்த ஆண்டு - 1929; பிறந்த ஊர் - கொக்கிரகுளம். நெல்லை; பெற்றோர் - கொ.பி. மகாலிங்கம் பிள்ளை - சண்முகவடிவு அம்மாள்)

தி.சு. ஆறுமுகனார்



''உளனென இலனென உரைத்திட
நிறைந்தனை
அளவருந் திருமறை அறிந்திட அரியைநீ
எவரெவர் தமதுளம் இசைவுறத் தொழுதிட
அவரவர் உளப்படி அருளுவை யுருவுடன்
நிலமெனப் புனலென நெருப்பெனச்
செறிந்தஅ
நிலமென விசும்பென நிறைந்தருள்
புரிந்தனை
அனலளி கதிரவன் அமுதளி மதியவன்
அளவில வுடுக்கண மனைத்தினும்
நிறைந்தனை''

என்ன ஓர் அற்புதமான பாடல்! என்ன ஓர் அருமையான சந்தம்! சந்தக் கவிஞர் அருளாளர் அருணகிரியார் அல்லவா! இருபதாம் நூற்றாண்டில் இப்படி ஒரு சந்தக் கவிதையா?

இப்பாடல் ஈரடி அராகம்

அடுத்து வருவது ஈரடித்தாழிசை

தொடர்வது நாற்சீர் ஈரடி அம்போத ரங்கம். இப்படி நூறு பாடல்கள்.

இதில் சித்திரகவிகள் வேறு!

சட்டநாதபந்தம், இரதபந்தம், கோமூத் திரிபந்தம், முரசபந்தம், எட்டாரைச் சக்கரம், சுழிகுளம், சதுர்நாகபந்தம், இப்படி ஏழு பாடல்கள்.

இருபதாம் நூற்றாண்டில் நினைத்துப் பார்க்க முடியாத கவிதை வெள்ளம். இவையெல்லாம் இடம் பெற்ற நூல் குறுக்குத்துறைகலம்பகம் ஆகும். இதனை இயற்றியவர் திரு. தி.சு. ஆறுமுகனார். இவர் இயற்றிய பிற நூல்கள் குறுக்குத்துறை குமரன் திருப்பள்ளியெழுச்சி, பிள்ளைத்தமிழ், குறவஞ்சி, கொச்சகக் கலிப்பா, சிலேடை வெண்பா, வாரப் பதிகம், கலித்துறை அந்தாதி, பொன்னூசல், பொற்கரும்பு, திருவெம்பாவை (அனைத்தும் குறுக்குத் துறை குமரன் மேல் பாடியவை) திருமுருகாற்றுப்படைக்குப் பொரு ளுரை, திருவுரு மாமலை, அந்தாதிப் பதிகம், வெண்பா இருபது, பதிற்றுப்

பத்தந்தாதி வேய்நாதர் சதகம், கழை முத்தர் கலி வெண்பா, காந்தி மதியம்மை இரட்டை மணிமாலை.

தி.சு. ஆறுமுகனார் நாற்பது நூல்களை இயற்றியுள்ளார். அத்துணையும் ஒரு சேரத்திரட்டி ''ஆறுமுகனார் கவிதைத் களஞ்சியம்'' என்றே ஒரு தொகுப்பு வரவேண்டும்.

(பிறந்த ஆண்டு : 15-6-1921; பிறந்த ஊர் - நெல்லை; பெற்றோர் - மு. சுடலைமுத்து, வாலியம்மாள்)

மு. சுப்பிரமணிய செட்டியார்

இருபதாம் நூற்றாண்டில் நாற்பதுகள் - நெல்லையில் திருமுறை நிகழ்ச்சி - பேராசிரியர் கா.சு. பிள்ளை, சுந்தர மூர்த்தி ஓதுவார், சைவப் பஞ்சாங்கம் வெளியிட்ட இ.மு. சுப்பிரமணியப் பிள்ளை, மு. சுப்பிரமணியன் செட்டியார் ஆகியோர் இணைந்து செல்கின்றனர். நெல்லையில் நடந்த எந்த விழாக்கள், வழிபாட்டு நிகழ்ச்சிகளாயினும் இவர்கள் இணைந்தே செல்வர். என்ன ஓர் அற்புதமான சங்கமம்! இற்றை நாளில் அண்ணாமலை நகரில் துணை வேந்தர் அகத்தியலிங்கனார், சங்க இலக்கியச் செல்வர் இரா. சாரங்கபாணி, தமிழ்ப் பேராசிரியர் செ.வை. சண்முகம் நாளும் இணைந்து மேற்கொள்ளும் மாலைநேர நடைப்பயிற்சியை நிகர்த்தது. இது இலக்கிய சங்கமம். அது சமயச் சங்கமம். இப்படிப்பட்ட சங்கமத்திற்குக் கொடுத்து வைத்திருக்க வேண்டும்.

இந்தச் சங்கமத்தில் சுப்பிரமணியன் செட்டியார் யாரென்று திகைப்பு மேலிடலாம். நல்ல சைவ அன்பர். தனது இல்லத்திலேயே விநாயகருக்குத் திருக் கோயில் போல பூசை அறையினைக் கட்டி விநாயகர், நால்வர் படிமங்களை நிறுவி பிள்ளைகளுக்குத் திருமுறைகள் கற்க ஏற்பாடு செய்தார். கா.சு. பிள்ளையவர்களின் திருவாசக உரை வெளியிடத் தேவையான நிதிவழங்கினார். நெல்லைக் கோயில் கும்பாபிஷேகம், 1941-இல் நடைபெற்ற மெய்கண்ட சாத்திர மாநாடு ஆகியவை சிறப்பாக நடக்கத் துணை நின்றார்.

(பிறப்பு - 28-1-1895; மறைவு - 26-5-1955; ஊர் - நெல்லை; பெற்றோர் - முருகப்பன் செட்டியார், கயிலாசத் தம்மாள்)

மு.சு. சங்கர்



பயிருக்கு நீர்பாய்ச்சி எருவிடுதல் ஒருபுறம்; அதே சமயம் களை யெடுத்தலும் மிகவும் இன்றியமையாத ஒன்றாகும். சமுதாய வாழ்விலே களையெடுப்பது இயலாத ஒன்று. பல எதிர்ப்புகளைச் சந்திக்க வேண்டிவரும். இற்றைநாளில் நீர்வழிப்படூஉம் புணை போல செய்ய வேண்டியநிலை. எதிர்நீச்சல் போடுவார் யாருமிலர்.

அப்படி எதிர்நீச்சல் போட்டவர் திரு. மு.சு. சங்கர்.

1981-இல் தமிழகச் சட்டமன்றத்தில் அறநிலைய சட்டத்திருத்த மசோதா தாக்கல் செய்யப்பட்டது. திருமடத்துத் தலை வரை நீக்கும் அதிகாரம் அற நிலைய ஆணையருக்கு அளிக்கும் வகை செய்யப்பட்டிருந்தது.

மு.சு. சங்கர் அவர்கள் கொதித் தெழுந்தார். சைவத் திருமடங்கள் ஒருங்கிணைந்து இம்முயற்சியைத் தடுக்க வேண்டும் என அனைத்துத் திருமடங்களின் குரு மகாசந்நிதானங் களுக்கும் விண்ணப்பிக்கிறார். தமிழ்

நாட்டில் உள்ள சைவ அமைப்பு களையும் இவ்வாறு எழுதக் கேட்டுக் கொள்கிறார்.

11-3-1984 ''தாய்'' இதழில் ''மதுரை சாமியார் மர்மங்கள்'' என்று வெளிவந்த கட்டுரையைக் கண்டித்து ''தாய்'' இதழுக்கு எழுதுகிறார். மன்றங்கள் இதனைக் கண்டிக்கவில்லையே என்று மன்றங்களுக்கும் தனது வருத்தத்தைப் புலப்படுத்துகிறார்.

1986-இல் ''விவிலியம் - திருக்குறள் - சைவசித்தாந்தம் ஒப்பாய்வு'' என்ற நூலில் சைவசமய அருளாளர்களைப் பற்றியும் சைவ சமயத்தைப் பற்றியும் தூற்றி எழுதப்பட்டிருந்தது. இதனை பத்துக்கும் மேற்பட்ட எடுத்துக்காட்டு களைக் காட்டி வன்மையாகக் கண்டித்து மு.சு. சங்கர் அனைத்துச் சைவ நிறுவனங் களுக்கும் அச்சிட்ட பிரசுரம் அனுப்பி இந்நூலைத் தடைசெய்யக் கேட்டுக் கொள்கிறார். இதே கருத்தினை ஆங்கிலத்தில் அச்சிட்டு குடியரசுத் தலைவர், பிரதம அமைச்சர், ஆளுநர் ஆகியோருக்கு அனுப்புகிறார். இப்பணி யினைத் தொடர்ந்து 23 முறை செய்கிறார்.

1987-இல் நெல்லையப்பர் திருக் கோயிலில் சிருங்கேரி மடாதிபதி தங்க ஏற்பாடுகள் நடந்தபோது சுமார்த்தர்கள் இறைவன் திருமேனியைத் தீண்ட லாகாது என முறையிட்டார்.

தமிழ்நாடு இந்து ஆலய நிர்வாக மேம்பாட்டு ஆலோசனைக் குழுவிற்குச் சங்கர் வழங்கியிருக்கும் கருத்துரை அரிய ஆவணம் ஆகும். இந்து ஆலய அற நிலையங்களிலிருந்து அரசு எவ்வாறு விலகியிருக்க வேண்டும்? அதற்கான வழிமுறைகள் என்ன? அறங்காவலர் களை எப்படி நியமிப்பது? என்றெல் லாம் விரிவாக ஆய்ந்து சங்கர் திட்டம் தீட்டியுள்ளார்.

இதேபோல கருவூர்ச் சிவாலயத்தில் இராமாயண விரிவுரை; நெல்லையப்பர் திருக்கோயில் திருப்பணியைக் காஞ்சி பீடாதிபதி துவக்கி வைத்தல்; ஆதி சங்கரராக சிவபெருமானே அவதரித்தார் என்று வெளியான நூல் – இவ்வாறு ஒவ்வொரு மரபுக்கு முரணான செயல் நடக்கும் பொழுதும், மு.சு. சங்கர் உரியவர்களுக்குத் தன் கண்டனத்தை மன உறுதியோடு தெரிவிக்கிறார். சில நேரங்களில் எதிர்பார்த்த விளைவு கிடைக்கிறது. பல நேரங்களில் இல்லா மலும் போகிறது.

கண்டனம், எதிர்ப்பு என்பது மட்டு மல்ல. அது ஒருபுறம். களையெடுத்த லோடு சங்கர் நிறுத்திக் கொள்ள வில்லை. எருவிட்டு நீரும் பாய்ச்சியிருக் கிறார்.

கா.சு. பிள்ளையவர்களின் நூல்களை அரசுடைமையாக்குதல்; நெல்லை மேம்பாலத்திற்கு கா.சு. பிள்ளை பெயர் வைத்தல் - என செய்தித் தாள்களுக்கும் தமிழக அரசுக்கும் கடிதப்படை யெடுப்பே செய்துள்ளார்.


1973-இல் நெல்லை மாவட்டத் தெய்விகப் பேரவை 'தலைவராகப் பணியாற்றுதல், *1973*-இல் திருச்சி *1975*-இல் நாகர்கோவில் என இருமாநில மாநாடுகள் நடத்துதல், *1974*-இல் மாவட்ட மாநாடு நடத்துதல், *1970-73* களில் அருள்மிகு கயிலாசநாதர் கோயில் அறங்காவலர் தலைவராகவும் பொறுப் பேற்று மாணிக்கவாசகர், காரைக்காலம் மையார் திருவுருவச் சிலைகளை எழுந் தருளப்பண்ணுதல், அ/மி நெல்லை யப்பர் கோயில் குட நீராட்டு விழா, *1974-1977* அருள்நெறித் திருக்கூட்டத் தலைவராகப் பணி யாற்றுதல், சைவ சபை, சைவ சித்தாந்த சபை, சிவபூசைச் செல்வர் திருக் கூட்டத்தில் பணி யாற்றுதல்.

*1976-1987*களில் நெல்லை சுந்தர மூர்த்தி ஓதுவார் மன்றம் தொடங்கிச் செயலராகப் பணிபுரிந்தமை;

1984 முதல் *87* வரை மெய்கண்ட சாத்திரம் பாடம் - நடத்துதல்;

*1979-1980*களில் நெல்லையில் திருவாவடுதுறை ஆதீனம் சார்பில் உலக சைவத் தமிழ் மாநாட்டுக்குச் செயலராக இருந்து பணியாற்றுதல், ஓதுவாமூர்த்திகளை ஏற்றுப் போற்றுதல், தன் ஆசிரியர் தி.சு. ஆறுமுகனாரின் நூல்களை வெளியிட்டும் பாராட்டியும் ஊக்குவித்தல் என நெல்லையில் சைவம் என்றால் சங்கர் என்று போற்றும் அளவிற்குப் பணியாற்றியுள்ளார். *(பிறந்த ஆண்டு - 2-12-1939; ஊர் - நெல்லை; பெற்றோர் - மு. சுப்பிரமணியன் செட்டியார், சிவகாம சுந்தரி அம்மாள்)*

தளவாய் ராமசாமி



டி.கே.சி. திருநெல்வேலியில் இருந்த காலம் **1915** முதல் **1927** முடிய என்பார்கள். தமிழ் நாட்டில் ஆங்கில மோகம் தலைவிரித்து ஆடியது. தமிழில் என்ன இருக்கிறது? என்று கேவலமாகத் தூற்றப்பட்ட வேளையில் டி.கே.சி. ''தமிழில் எல்லாம் இருக்கிறது. எதையும் தமிழில் சொல்ல முடியும். தமிழில்தான் எளிமையாகவும் தெளிவாகவும் சொல்லமுடியும். பல காலமாக பல உண்மைகளை இன்று வரை சொல்லி வந்திருக்கிறது'' என்று அழுத்தம் திருத்தமாக விளக்கி வந்தார்.

தமிழ், தமிழர் பண்பாடு இவற்றின் உன்னத நிலையைத் தமிழுலகு முழுவதும் தெரிந்து அனுபவிக்க *1924*-ஆம் வருடம் தம்முடைய இல்லத்தில் இலக்கியச் சங்கம் நிறுவினார். இதைத்தான் இலக்கிய வட்டத் தொட்டி என்று சொல்வார்கள்.

இது வாரம் - ஒருமுறை கூடும். உயர்திருவாளர்கள் எஸ். வையாபுரிப் பிள்ளை, ரா.பி. சேதுப்பிள்ளை, ஜே. சக்கரபாணி நம்பியார், எஸ். சுப்பையா முதலியார் போன்ற அங்கத்தினர்களும் பல தமிழ் அறிஞர்களும், அன்பர்களும் கூடுவார்கள், டி.கே.சி. தமிழ்க் கவிகளை அமிர்த மழையாகப் பொழிவார். இதுவும் தவிர தங்கள் இல்லத்திற்கு வருகிறவர்களை அருமை யாக வரவேற்று உபசரித்து விருந்து உபசாரம் செய்து வைப்பது டி.கே.சிக்கு உரிய அரிய பண்பாடு. பிறவிக் குணம் என்றும் சொல்லலாம். ''டி.கே.சி. வீட்டு உபசாரம்'' என்று பலரும் கூறுவார்கள்.

தெரிந்தவர்களாயினும், தெரியாதவர்களாயினும், படித்தவர்களாயினும், படிக்காதவர்களாயினும், பணக்காரர்களானாலும், ஏழைகளானாலும் டி.கே.சி. இல்லத்தில் சமமான விருந்தும் வரவேற்பும் உண்டு. தமிழையும் அமிழ்தினும் இனிய உணவையும் ஒருங்கே ஊட்டுவது டி.கே.சி. இல்லம்.

இதுவே மலரும் நினைவுகள். அதுவே வளரும் நனவாகியது.

வளரும் நனவு என்றவுடன் நம் கண்முன் தோன்றியது பொருநை இலக்கிய வட்டம்தான்.

பொருநை இலக்கிய வட்டம்

1984-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் *4*-ஆம் தேதி பொருநை இலக்கிய வட்டம் தோன்றியது. இதனை வட்டத் தொட்டி வழிவந்த ''இலக்கிய வட்டம் எனலாம்''.

திருநெல்வேலியில் புகழ்பெற்ற தளவாய் முதலியாரின் இனத்தவருள் ஒருவரான தீத்தாரப்ப முதலியார் என்பவர் திருநெல்வேலி ஜில்லாவைக் குத்தகைக்கு எடுக்க ஏற்பாடு செய்தவர்.

கணக்கு நேர் செய்யப் படாமையால் குத்தகை தொகையை உடனே நிர்ணயிக்க முடியவில்லை.

அதன்பிறகு சென்னைப் பட்டணத்தில் உள்ள கும்பினித்துரையிடம் சென்று முதலியார் காட்டிய கணக்குகளையும், பரிசோதித்தவர், திருநெல்வேலியை மட்டும் வருஷம் ஒன்றுக்கு சகல செலவும் போக 12 இலட்சம் ரூபாய்க்கு குத்தகைக்கு விட்டு உத்தரவையும் பிறப்பித்தார். இது 1757-ஆம் வருடம் நடந்தது.

இந்த பொருநை இலக்கிய வட்டத்தை உருவாக்க வித்திட்டவர்களையும் நினைவு கூரவேண்டியுள்ளது. சேரன்மா தேவிச் செல்வர் எஸ்.ஏ. சுப்பிரமணிய பிள்ளை உள்ளத்தில் மலர்ந்த நறுமலர் தான் வளர்ந்து நனவாகிறது. திருவாளர்கள் ஏ.உ. சுவாமிநாதன், மு. இராமையா, செ.மு. கமால், இல. பார்த்தசாரதி ஆகிய நன்மக்கள் நால்வர் துணை கொண்டு தளவாய் குடும்பத்தைச் சேர்ந்த இலக்கிய ஞானி திருவாளர் தி. இராமசாமி தோற்றுவிக்கப்பட்டது. 1757-இல் திருநெல்வேலி ஜில்லாவையே 12 இலட்சம் ரூபாய்க்கு குத்தகைக்கு எடுத்த அவ்வளவு பெரிய குடும்பத்தைச் சார்ந்தவர்தான் திருவாளர் தி. இராமசாமி. 1757-இல் பன்னிரண்டு லட்சம் ரூபாய் என்றால் தற்சமயம் நாணய மதிப்பை கணக்கிட்டு பார்க்க நம் தலையே சுற்றுகிறது. இந்த ராஜபரம் பரையின் வழித் தோன்றல் தான் நம் புரவலர் தி. இராமசாமி.

திருநெல்வேலி டவுன் மேலரத வீதியில் மற்ற வீடுகளிலிருந்து மாறு பட்டு பிரமாண்டமாய் - வித்தியாசமாய் - ஒரு மாளிகை; சில படிகள் ஏறினால் ஒரு விசாலமான கிராதிக்கதவு. அதன் வலப்பக்கம் உயரமான விதானத்துடன் கூடிய ஒரு மாடத்துடன் கூடிய மேடை!

நானூறு வருடங்களுக்கு முன்னால். அந்த மேடையில் ஒரு கம்பீர புருஷர் வந்து தரிசனம் தருவார். அறுபத்தினாலு பாளையங்களின் பிரதிநிதிகளும் கப்பத் துடன் வந்து காத்திருப்பார்கள். இராஜ புதனத்து விசேஷ குதிரைப்படை வரிசை யாக ஆயுதம் ஏந்தி இரவும் பகலும் காவல் நிற்கும்.

இது அரண்மனை வீடு - மேலத் தெருவில் இருப்பதால் மேல அரண் மனை - மதுரை நாயக்க மன்னர்களின் பிரதிநிதியாகத் தென்னாட்டை ஆண்ட தளவாய் அரங்கநாத முதலியார் வீற்றிருந்து தர்ம ஆட்சி செய்த அரண்மனை.

இன்று வாசலில் குதிரைக் காவல் களோ, கப்பத்துடன் பாளையப் பிரதிநிதிகளோ இல்லை. மேடையும் காலியாக இருக்கிறது. ஆனால் பாளைய பிரநிதிகளுக்குப் பதிலாக தூரதூர இடங்களிலிருந்தெல்லாம் தமிழறிஞர் களும் புலவர்களும் ஞாயிறுதோறும் சாரிசாரியாக வருகிறார்கள்.

இடப்பக்கம் ஒரு சந்து இருக்கிறது. சித்தர் தெரு என்று பெயர். அதிலே நடந்து அரண்மனையின் கடைப் பகுதிக்குப் போகிறார்கள். முடிவில் ஒரு வாசல் இருக்கிறது. ''தமிழகம்'' என்ற பெயர் காணப்படுகிறது. பக்கத்தில் ஒரு கரும்பலகை தொங்குகிறது.

அடுத்து வரும் ஞாயிற்றுக் கிழமையைத் தேதியோடு குறிப்பிட்டு பொருநை இலக்கிய வட்டம் இத்தனா வது கூட்டம் என்ற வாசகம் காணப்படு கிறது. அந்த ஞாயிற்றுக்கிழமையில் நிகழ்ச்சி நிரல் - சிறப்பு விருந்தினராக வருபவர் யார்? என்ற விவரம் கீழே தரப்பட்டிருக்கிறது. இந்த அரண்மனை யில் பாஸ்கர சேதுபதியும் அவர் துணைவியாரும் வசித்து வருகிறார்கள். உள்ளே ஒரு பெரிய கூடம் கட்டி அதில் அரியணை அமைத்து தமிழ்த்தாயை அமர்த்தி அவருக்கு மகத்தான சேவை செய்து வருகிறார்கள்.

ஞாயிறுதோறும் தமிழ்த்தாயின் சபை நிறைந்து வழிகிறது. சித்தர் தெரு வழியாக வரும் தமிழறிஞர்களும் புலவர்களும் இராஜசபையில் அமர்ந்திருப்பது போல கம்பீரமாக அமர்ந்து பழந்தமிழ் இலக்கியங்களை எல்லாம் எடுத்து வைத்துக் கொண்டு அக்கு அக்காக அலசி ஆராய்கிறார்கள். வெண்பாக்களும் பிள்ளைத்தமிழும் சங்கத் தமிழும் சதிராடுகின்றன. சிலேடைகள் சிதறி கலீர் சிரிப்பைப் பரப்புகின்றன.

ஞாயிறுதோறும் கூடும் அந்தத் தமிழ் தர்பாரின் புரவலரும் ஒரு தளவாய் தான். தளவாய் அரங்கநாத முதலியார் வம்சத்தில் வந்தவர்தான். ஆமாம் அதோ! முதலிலிருந்து கடைசிவரை அரை நிமிஷமும் எங்கும் உட்காராமல் ஓடியாடி புலவர் பெருமக்களுக்குத் தொண்டு செய்து கொண்டிருக்கிறாரே - உயரமான ஒரு கம்பீர புருஷர், அடர் மீசைக்காரர் - அவர் தான். தளவாய் இராமசாமி. தென்னாட்டுக் கோயில் சந்நிதிகளில் தூண்களில் உள்ள தென்பாண்டி அரசர்களைப் போல இருக்கிறார் அல்லவா? இவருக்கு ஒரு கூடுதல் பிளஸ் பாயிண்ட் - இவர் குற்றாலத்து ரசிகமணி டி.கே.சி.யின் பேரன். தாத்தா வட்டத் தொட்டி கட்டித் தமிழ் வளர்த்தார். பேரன் பொருநை இலக்கிய வட்டம் அமைத்து தமிழ் வளர்த்து வருகிறார்.

ஞாயிறுதோறும் இங்கே இந்த மகத்தான தமிழ்ப்பணி நடைபெற்று வருகிறது. பதினேழு ஆண்டுகளாக நடக்கிறது. ஒரு ஞாயிறு கூடத் தவறிய தில்லை. 1984-ஆம் ஆண்டு நவம்பர் 4-ஆம் தேதி. முதல் கூட்டம் நடந்தது. வருகிற டிசம்பர் 23-ஆம் தேதி 900-ஆவது கூட்டம். இன்னும் நூறு கூட்டம் நடந்தால் ஆயிரம். இவ்வமைப்பு 2003 நவம்பரில் தனது 19-ஆம் ஆண்டு நிறைவு விழாவையும் 1000-ஆம் வார நிறைவு விழாவையும் கொண்டாடி உள்ளது.

நடுவில் ஒருமுறை ஞாயிறு அன்று காலை வெளியூருக்குச் சென்றிருந்த குடும்பத்துப் பெரியவர் ஒருவர் காலமாகி விட்டார். வீடே சோகமயமாகி விட்டது. பத்து மணிக்கு தமிழ் அன்பர்கள் வரிசையாக வரத் தொடங்கியதும்தான் தளவாய்ஜிக்கு கூட்டம் இருப்பது நினைவு வந்தது. வந்தவர்களும் நிலைமையைப் புரிந்து கொண்டு அடுத்த வாரத்திற்கு ஒத்தி வைத்துவிடலாம் என்றார்கள்.

கூடவே கூடாது என்று தலையசைத்து விட்டது இந்த இரண்டாம் பாஸ்கரின் தமிழ் உள்ளம். பதினைந்தே நிமிஷத்தில் பக்கத்து வீட்டில் பாய் விரித்து ஆசிரிய பீடம் அமைத்து விட்டார்.

வாசலிலே, ஓர் அன்பரை நிறுத்தி வருகிறவர்களை அங்கே அழைத்துக் கொண்டு போய் அமர்த்தச் சொன்னார் பெரும்பாலனவர்களுக்கு ஏன் இட மாற்றம்? என்றே தெரியவில்லை. பத்து நிமிஷம் கழித்து சரியாக பதினொரு மணி அடித்ததும் அந்த தற்காலிக அரண்மனையில் இருந்து ''நமபார்வதி'' பதயே என ஆசிரியர்பிரான் முதற்குரல் கொடுப்பதும் தொடர்ந்து மற்றவர்கள் ''ஹரஹர மகாதேவா'' என்று எதிர்க்குரல் கொடுப்பதும் கேட்டது. கூட்டம் தொடங்கி விட்டது.

சிவ விருந்து வந்த வேளையில் உயிர் இழந்த மகனை மறைத்துவிட்டு சிவ கைங்கர்யமே பெரிதென அதில் ஈடுபட்ட சிவ்நேசச் செல்வரைப்பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறோம். இப்படி ஒரு தமிழ்நேசச் செல்வரைப் பார்த்திருக் கிறோமா?

★ ★ ★

கூட்டத்திற்கு வருகிறவர்கள் எல்லாருமே தமிழ் ஞானமுடையவர்கள். இன்ன நூலில் உள்ள சப்பாணி கொட்டும் பருவப்பாடலைச் சொல்லுங்கள் என்று கேட்டால் டக்கென்று சொல்லக் கூடிய வர்கள். வெண்பாக்களும் விருத்தங்

களும் இயற்றும் திறன் படைத்தவர்கள். பிள்ளைத் தமிழ் நூல்களை எல்லாம் கரைத்துக் குடித்தவர்கள். வீடுதோறும் ஞாயிறன்று சோறு தண்ணீர் மறந்து மகாபாரதத்தில் மூழ்கியிருந்த காலத்தி லும் அதைவிட தமிழே மேல் என்று வந்து குழுமி தமிழ் ஆய்ந்தவர்கள்.

எல்லாத் தமிழ் நூல்களுடனும் பரிச்சயமுடையவர்களாக இருந்தாலும் ஒவ்வொரு தமிழ் இலக்கியமாக எடுத்துக் கொண்டு ஆசிரியர் பெருமான் பாடல் பாடலாகப் படித்து விவரிக்கையில் மாணவர்களே அமர்ந்து கேட்டும், ஐயம் எழுப்பியும், புது அர்த்தம் சொல்லியும் இப்படிப் பொருள் கொள்ளலாமா? என்று கேட்டும் தமிழ் ஆராய்ச்சி செய்து வருகிறார்கள். சபையிலே புதியவர் யாராவது அப்போது இருந்தால் அவர் களுக்கு எங்கோ சைவமடத்தில் டாக்டர் உ.வே. சாமிநாதய்யருடன் அமர்ந்து மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களிடம் தமிழ்ப்பாடம் கேட்கிறோமா? என்று தோன்றும். அது மட்டுமன்று, இதுவல்லவோ தமிழ் வளர்க்கும் சரியான முறை என்று சொல்லத் தோன்றும்.

இப்படி இதுவரை ஏராளமான நூல்களை ஆய்வு செய்திருக்கிறார்கள். சில வருஷக் கணக்காகக் கூடப் பாடம் சொல்லப்பட்டிருக்கின்றன. *1984* நவம்பர் 4-ஆம்தேதி புலவர் இராமையா, பார்த்தசாரதி, சுவாமிநாதன், கமால் என்கிற நான்கு நண்பர்களுடன் தளவாய்ஜி தொடங்கிய முதல் கூட்டத்தில் இறைவணக்கமாகவும் ஆய்வு நூலாகவும் எடுத்துக் கொள்ளப் பட்ட நூல் பாரதியின் விநாயகர் நான்மணிமாலை.

அதைத் தொடர்ந்து சிவப்பிரகாச சுவாமிகளின் நால்வர் நான்மணிமாலை; தி.சு. ஆறுமுகனாரின் குறுக்குத்துறை குறவஞ்சி, வேய்நாதர் சதகம், திருவுரு மாமலைச் சிலேடை வெண்பா, பகழிக் கூத்தரின் திருச்செந்தூர் முருகன் பிள்ளைத் தமிழ், சேரமான் பெருமாளின் திருக்கயிலாய ஞான உலா, சென்னி குளம் செட்டியாரின் காவடிச் சிந்து, முத்தொள்ளாயிரம், கவிராஜ நெல்லை யப்ப பிள்ளையின் சக்தி விநாயகர் இரட்டைமணிமாலை, கடவுள் மாமுனி வரின் திருப்பாதநல்லூர் புராணம், பாரதியின் திருத்தொண்டர் மாலை, பா. துரைராஜின் காந்திமதி அம்மன் பதிகம், திருவருணைக் கலம்பகம், குற்றாலக் குறவஞ்சி, திரிகடுகம் என்று பட்டியல் நீண்டு கொண்டே போகிறது.

முன்பு தி.சு. ஆறுமுகனார், ராமையா, சிவசம்பு போன்றோர் நூல் விளக்கம் தர, இப்போது திருவிளையாடல் புராணத்தை வடிவேல் பிள்ளையும் திருக்குறளை அ.மு. சுந்தரவிநாயகமும் சேக்கிழார் பிள்ளைத் தமிழை ஏ. சாமிநாதனும், திருமுருகாற்றுப்படையை, அ. அரங்க சாமியும், குறுந்தொகையைப் புலவர் கண்ணபிரானும், திருஅருட்பாவை பி.ஜானகிநாதனும், திரிகடுகத்தை சிவ. காந்தியும், திருமந்திரத்தை மா. சண்முகமும் சொற்பொழிவு வாயிலாக நூல் விளக்கம் தந்து கொண்டிருக் கிறார்கள்.

எப்படி இவர்கள் தமிழை ஆய்கிறார்கள் என்பது சுவாரசியமான கதை. நேரிலே பார்த்தால் தான் அதன் சிறப்பும் மதிப்பும் தெரியும். இல்லாள், மனைவி, என்றெல்லாம் வைத்தவர்கள் ஏன் கணவனை மனைவன் என்று வைக்கவில்லை? என்று ஒரு சுவையான ஆய்வே நடக்கிறது. தடாதகைப் பிராட்டியைச் சிவகணங்கள் முன் அம்போ என்று விட்டு விட்டு தமிழுக்குள் வந்து விடுகிறது. சபை சொல், பொருள், இலக்கணம், சூத்திரம் என்று எல்லாத்தளங்களிலும் சஞ்சரிக் கிறது. இது விகுதி, இது கிளவி, இன்ன எழுத்து சாரியை கெட்டு நிற்கிறது - என்று ஆசிரியர்பிரான் தமிழ் இலக்கணம் என்கிற மாபெரும் யந்திரத்திலே அநாயசமாகச் செலுத்திப் பிழிந்

தெடுக்கிறார்! அடேயப்பா! இப்பேர்ப் பட்ட வளமிக்க அதிசய மொழியா தமிழ் என்று ஆச்சர்யமும் பெருமிதமும் நம்மைப்போல வரும் விசேஷ விருந்தினர்களுக்கு ஏற்படுகிறது.

''இதே சொல். இதே கருத்து'' இதற்கான சம்பவம். இதே தர்மம், வேறு இலக்கியங்களிலே அப்படிச் சொல்லப் பட்டிருக்கிறது'' என்றும் ஆசிரியர் கோடி காட்டுகிறார். இதோ, வால்மீகி இராமாயணத்திற்குப் போய் விட்டார், ''போர்க் களத்திற்கு வந்து விட்டான் இராவணன். இராம - இராவண யுத்தத்திலே அல்ல. அதற்கு முன் ஏதோ ஒரு சண்டையில், பெரிய நீண்ட தந்தங்களையுடைய யானைப் படைகள் அவன்மீது ஏக காலத்தில் பாய்கின்றன வாம். பாய்ந்த வேகத்தில் யானையின் தந்தங்கள், இராவணனின் மார்பெங்கும் குத்தி, முதுகுப்புறமாகவும் வந்து விட்டனவாம்.''

''இராவணன் ஹூம் என்று ஒரு ஹூங்காரம் செய்து ஓர் உலுப்பு உலுப்பினானாம். அத்தனை யானை களும் செருகின தந்தங்கள் ஒடிந்து நெல்லிக் காய்கள் போல் விழுந்து விட்டனவாம். பின்னர் பார்த்தால் எஞ்சிய தந்தங்கள் இராவணனின் மார்பு முழுவதும் முன்னும் பின்னும் நீட்டிக் கொண்டிருந்தனவாம். என்ன செய்வது? பிடுங்கி எறிந்தால் மார்பு முழுவதும் சல்லடைக் கண்ணாகி விடுமே! வேண்டாம். இருபுறமும் உடலை ஒட்டி அறுத்து விடுங்கள் உடம்பின் அங்கமாக அவை இருந்துவிட்டுப் போகட்டும்'' என்று சொல்லி விட்டானாம். இராவணன் அவற்றில் ரத்தினங்களைப் பதித்து தந்த ஆபரணமாகவே வைத்துக் கொண்டானாம்.

அப்பேர்ப்பட்ட இராவணன் என்று தொடங்குகிறார் ஆசிரியர்பிரான். இராம இராவண யுத்தத்திலே, இராமபாணம் பட்டதும் இராவணன் உடம்பிலே இருந்த அத்தனை தந்த எச்சங்களும் வெளிவந்து விட்டன. சல்லடைக் கண்ணாகத் துளைத்த மார்புடன் இராவணன் மாண்டு விழுந்துவிட்டான். குப்புறக் கிடக்கிறான். அதைப் பார்த்துவிட்டு, ஐயோ புறமுதுகிட்டு ஓடியவனையா கொன்றேன்? என ராமன் வருந்துகிறான். இல்லை, வீரனைத்தான் கொன்றாய் என்று சொல்லி மேலே சொன்ன குட்டிக் கதையைச் சொல்கிறார் கவி.

''அப்பேர்ப்பட்ட இராவணனையே அடக்கிய எங்கள் சிவபெருமானை எதிர்த்தா இந்தப் பெண்பிள்ளை வருகிறாள்?'' என்று சிவகணங்கள் ஆத்திரப்பட்டன என்று சொல்லி மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழுக்கு வந்து சேர்ந்து கொள்கிறார் ஆசிரியர் பிரான். மூன்று மணிநேரம் ஆனந்தமாகக் கேட்டுக் கொண்டும் காரசாரமாக விவாதித்தும், கருத்து மாறுபட்டும் பொறுப்போடும், பொருளோடும் தமிழை ஆய்கிறது இந்தத் தமிழ்க் கூட்டம்.

ஒருமுறை திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழ் பாடம் சொல்லப்பட்டு ஆய்வு நடந்து வந்ததாம். சப்பாணிப் பருவம் - முதல் செய்யுள் - எல்லா ஆசிரியர்களும், ''அங்கங்கள் அசைவுற சப்பாணி கொட்டுக என்று பாடியிருக்கும் போது பகழிக் கூத்தர் மட்டும் உறுப்புகள் குலுங்காமல் சப்பாணி கொட்டுக என்று பாடியிருக்கிறாரே ஏன்?'' என்று ஆய்வு செய்தார்களாம்.

சோமசுந்தரப் பெருமான் பிட்டுக்கு மண் சுமந்தபோது பட்ட பிரம்படி, அண்ட சராசரங்கள் மீதெல்லாம் பட்டது, அவர் பிள்ளை முருகன் குலுங்கினால் உலகமே குலுங்குமே அதனால் தான் என்று முடிவு செய்தார்களாம்.

ஆனால் வட்டத்துத் தமிழ் அன்பர் ஒருவருக்கு வேறு ஏதோ பொருள் இருக்க வேண்டும் என்று தோன்றியதாம். அதே சிந்தனையாக வீடு திரும்பினார். பகலெல்லாம் மனது இதையே ஆய்வு

செய்து கொண்டே இருந்தது. சட்டென்று இப்படித் தோன்றியது அவருக்கு. பகழிக்கூத்தர் தாய் நிலையிலிருந்து பார்த்திருக்கிறார். அழகுத் திருமகனான முருகன் சப்பாணி கொட்டுகிறான். குலுங்கி ஆடினால் அத்தனை அலங்கார மும் சிதைந்து விழுந்துவிடுமே. தனயன் உடல் தளர்ந்தாலோ, அழகு சிதைந் தாலோ, தாய் உள்ளம் பொறுக்குமா? கால் வலிக்கப்போகிறது ஓடாமல் விளையாடு என்றுதானே இன்றும் தாய்மார்கள் சொல்கிறார்கள். பிள்ளை யின் கை நோகும் என்றுதானே பொற்றா ளம் ஈந்தார் சிவபெருமான். அதனால் தான் திருநீறு வியர்வையால் அழியாமல், மலர் போன்ற கை கால்கள், விலகாமல், சப்பாணி கொட்டு என்கிறார். அற்புத மான கருத்து அவருக்குத் தோன்றியது.

அடுத்த கூட்டத்தில் அவர் அதைச் சொன்னதும் அத்தனைபேரும் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. இப்படித் தான் தமிழ் வளர்கிறது இந்த ஐந்தாம் தமிழ்ச்சங்கத்திலே - தமிழ்ப்பண்ணை யிலே! சாமான்யர்கள், சைவப் பெரு மக்கள் முறையாகத் தமிழ் படித்தவர்கள், வியாபாரிகள், அலுவலர்கள் என்று அறுபதுக்கு மேற்பட்டவர்கள் பதினேழு ஆண்டுகாலமாக ஒரு ஞாயிறுகூட விடாமல் கூடி வளர்க்கிறார்கள்.

கூட்டம் முடியும் முன் திரு. சுந்தர விநாயகம் ஏதேனும் சித்த மருந்துப் பொருள் ஒன்றைப் பற்றிச் சில நிமிட நேரம் எடுத்துச் சொல்கிறார். எளிய மருத்துவ முறை ஒன்றைச் சபை அறிந்து கொள்கிறது. ஆண்டுக்கொருமுறை குற்றாலம், நாங்குனேரி, பாபநாசம் போன்ற இயற்கை வளம் சூழும் ஊர்களுக்கு, முழுவட்டமும், உலா கிளம்பிச் சென்று அங்கே மரத்தடிகளில் இதே மாதிரி தமிழ் ஆய்வு செய்கிறது. ஆண்டு விழாவின்போது ஒரு சிறு தமிழ்நூலை வெளியிட்டும், அறிஞர் களைக் கௌரவித்தும், பொன்னாடை போர்த்தியும், தமிழையும் தமிழ் அறிஞர்களையும் போற்றி மகிழ் கிறார்கள். புரவலர் தளவாய் இராமசாமி யும், அவர்களும் பொருளாளர் அருணா சல காந்தி, வந்தவர்களை எல்லாம் ஏதோ சம்பந்திகள் போல வரவேற்று, தலை வாழையிலை போட்டு வடை, பாயசத் துடன் விருந்தளித்து அனுப்புகிறார்கள். ஆயிரம் பேருக்குக் குறையாமல் செவிக்குணவும், வயிற்றுக் குணவும் பெற்றுத் திரும்புகிறார்கள். ஒரு பெரிய திருமண விழாவைப் போலவே இருக்கிறது.

அத்தனையும் தளவாய்ஜியின் கைக் காசுதான். உறுப்பினர் கட்டணம், வசூல் ஏதுமேயில்லை. ''பெருங்காயம் வைத்த சொப்புதான் - ஆனால் இன்னும் மணக் கிறது. தமிழ் என்ற ஒப்பற்ற தீபத்தைக் கையில் ஏந்தி நிற்கிறது. தமிழ்நாடு முழுவதற்கும் எப்படித் தமிழ் வளர்க்க வேண்டும்?'' என்பதற்கு உதாரணமாக நிற்கிறது.

பட்டணக்கரைகளில் வீடுதோறும் தமிழ் எழுதப் படிக்கத் தெரியாத குழந்தைகள் தோன்றி பல்கிப் பெருகி, அடுத்த தலைமுறையில் தமிழ் இருக்கு மா? என்கிற அச்சமூட்டும் காலத்திலும் நம்பிக்கை நட்சத்திரமாக தெற்கே வருணிக்கரையில் ஒளிர்ந்து கொண்டிருக் கிறது இந்தப் பொருநை இலக்கிய வட்டம்.

அநபாய சோழன் இருந்தால் இந்த வட்டத்துப் பெருமக்களை நூறு தந்தப் பல்லக்குகளில் ஏற்றி ஊர்வலம் விட்டு, இன்னொரு பெரும் தமிழ் விழாவே நடத்தி மகிழ்வான்.

அதுமட்டுமன்று; இந்தத் தமிழ் தேசத்திலே இதுவரை பிறந்த அத்தனை தமிழ் வளர்த்த பெரியார்களும் அன்று வானிலே கூடி தமிழ் வளர்க்கும் சபை களிலே ''ஆயிரத்தில் ஒருத்தி அம்மா நீ'' - என்று பொருநை இலக்கிய வட்டத்தை வாழ்த்தி மகிழ்வார்கள் சந்தேகமில்லை.

அரங்கசாமி என்பது அவரது திரு நாமம். அரங்கங்களில் எல்லாம் உலா வந்தவர்.

பொருநை இலக்கிய வட்டக் குடும்பத்தில் ஒருவராய்த் திகழ்ந்தவர். அறிஞர்களோடு நட்பும் பாராட்டி அனைவர்களாலும் நேசிக்கப்பட்டவர். வாரந்தோறும் நடைபெறும் பொருநை இலக்கியக் கூட்டத்திற்கு வருகை புரிதலை தன் வாழ்க்கையின் அன்றாடக் கடமைகளில் ஒன்றாகக் கருதியவர்.

ஒரு முறை அவரது உறவினர் வீட்டுத் திருமணம். ஞாயிற்றுக்கிழமை காலை முகூர்த்தம். இவரோ திருமணத்திற்கு சென்று அதில் கலந்து சிறப்பிக்க வேண்டும். குழப்பமான சோதனையில் இலக்கிய வட்டமே நம் உயிர்மூச்சு என எண்ணி உறவினர்களை அழைத்துப் பேசி முகூர்த்த நேரத்தை மாற்றி அமைக்கச் செய்து முக்கியத்துவத்தை பொருநை இலக்கிய வட்டத்திற்கு வழங்கினார்கள். இதை எண்ணும்போது மனம் இறும்பூதெய்துகிறது.

சுவாமிநாதன் என்ற பொருநை வட்ட அன்பருக்கு வலது தோளில் ஒரு வலி இருந்தது. இலக்கிய வட்டம் இன்பம் நுகர நுகர மருந்தாக அது வேலை செய்து வலி போன இடம் தெரியவில்லை. இது உண்மை.

திருவாசகம் எட்டாம் திருமுறையில் அடங்கும் ''சிகா மந்திரம்'' எனக் குறிப்பிடுவார்கள். அதில் திருவாசகம் எடுத்துச் சிந்தித்து பொருநை இலக்கிய வட்டத்தின் விளைவுகளை ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

தமிழகத்துக்கு வந்து பொருநை இலக்கிய வட்டம் நடைபெறும் இடத்தில் (புரவலர். நற்குண நம்பி. தளவாய், டி. ராமசாமி அவர்களது இல்லம்) கூடும் சான்றோரிடைக் கலந்து அவர்தம் சொற்களைக் கேட்கக் கேட்க பெரியோரிடைப் பழகப்பழக திரிகரண சுத்தி நோக்கிச் செல்கிறோம். அதாவது மனதில் ஒன்று நினைத்து வாக்கினால் வேறொன்று கூறி வேறுபட்டுச் செயல்படமாட்டோம். இதுதான் பொருநை இலக்கிய வட்டம்! இவர்தான் தளவாய் ராமசாமி! இதுதான் தமிழ்!

(பிறந்த ஆண்டு - *18-6-1943*; ஊர் - நெல்லை; பெற்றோர் - தளவாய் தீத்தாரப்ப முதலியார், அழகம்மாள்)

சிதம்பரநாத கல்யாணி



சைவசித்தாந்த சாத்திரங்களை எளிமைப் படுத்தித் தரவேண்டும் என்று ஓர் அன்பருக்கு ஆசைவந்துவிட்டது. அதுமட்டுமல்ல. சிவஞான மாபாடியத்தையும் எளிமைப்படுத்தித் தரவேண்டுமாம். சாத்திரங்கள் என்றாலே எட்டிக்காயாய்க் கசக்கும். அதுவும் சிவஞான மாபாடியம் இரும்புக்கடலை என்று கூறி சைவப்பெருமக்களே அஞ்சி அகலும் நிலை. ஏதோ ஒரு சுந்தரமூர்த்தி ஐயா, ஒரு முனைவர் ஆனந்த ராசன் அவர்கள் விளக்கினால் கேட்க லாம். கேட்டு முடிந்த பிறகு என்ன சொன்னார்கள் என்பது மறந்துபோகும். ஏதோ தொலைக்காட்சி சீரியலைப் பார்த் தோம் அழுதுதீர்த்தோம் என்று போகா மல் அவருக்கு இப்படி ஓர் ஆசை.

இதைத்தான் சி.சு. மணியவர்களும் சொன்னார் ''இது வேண்டாமப்பா, சிரமமான பணி, மரபுப்பிழை வேறு வரும்'' என்றார். அன்பர் விட வில்லை. பிடிவாதம் பிடித்து அவரை இசைய வைத்துவிட்டார். இசைய மட்டுமல்ல; எழுதவும் வைத்துவிட்டார். பதிநான்கு சாத்திரங்கள், சிவஞான மாபாடியம்

உட்பட 32 நூல்கள் வெளியிட்டு விட்டார். சி.சு.மணி, முனைவர் கு. சுந்தரமூர்த்தி, முனைவர் ஆ. ஆனந்த ராசன் ஆகியோர் நூலாசிரியர்கள் ஆவர்.

தசகாரியம் என்பது சைவசித்தாந் தத்தில் கடினமான பகுதியாகும். யாருக்கும் புரியாது. ஆனந்தராசன் எப்படி விளக்குகிறார் பாருங்கள்:

''பாசத்தை விடுதல், அரன்கழலை அடைதல் என்பவற்றின் கருத்தை விளங்கிக் கொள்ளவேண்டும். உடம்பு சிறியதொரு இடத்தைத் தனக்கு இடமாகக் கொண்டு நிற்கக்கூடிய ஏகதேசப் பொருளாகும். அதனால் ஓர் இடத்தை விட்டுப் பெயர்தலும் மற்றோர் இடத்தை அடைதலும் கூடும். ஆனால் உயிரோ எங்கும் நிறைந்து நிற்கின்ற வியாபகப்பொருள். அதனால் அஃது ஒன்றைவிட்டு நீங்குதலும் மற்றொன் றைச் சென்றடைதலும் இல்லை.

உயிர் ஒன்றை நீங்குதல் என்பது அதனைத் தன்னின்வேறு என உணர்த லாகிய அவ்வளவேயாகும். உயிர் ஒன்றை அடைதல் என்பது அப் பொருளைத் தான் என உணர்ந்து அதில் அழுந்துதலேயாகும்.

எனவே நிலைபேறு இல்லாத, சடமாகிய பாசப்பொருள்களைத் தனக்கு வேறானவை எனத் தெளியவுணர்த லாகிய அதுவே பாசநீக்கமாகும். தன் அறிவுக்குள் அறிவாய் நிற்கும் சிவ பரம்பொருளைத் தன் அறிவின் கண் நேர்பெறக் கண்டு அதன் வயப்பட்டுத் தான் அதுவேயாய் அழுந்தி நிற்றலே சிவப்பேறாகும்.

என்ன அரிய உரை! என்ன எளிய வடிவம்!

அடுத்து சிவஞானமாபாடிய உரை! சி.சு. மணியின் உரையைப் படித்தால் சைவமே தெரியாதவர் கூட புரிந்து கொள்ளலாம். அத்துணை எளிமை யானது. இந்த உரை விளக்கத்தில் மட்டும் தான் சிவஞானமுனிவரின் உரையிலிருந்து பத்து அல்லது பதினைந்து வரிகள் எடுத்துக் கொள்ளப் பட்டு அவற்றின் விளக்கமும் அதன் கீழ் கொடுக்கப்பட்டுள்ளது. இவரது உரை படிப்பவருக்கு எளிதில் புரிகிறது. அருணையாரின் உரையில் விளக்கம் தனியாக இருக்கிறது. முனிவரின் உரையைத் தனிநூலில் படித்துவிட்டுப் பிறகுதான் விளக்கம் தேடிப் படிக்க வேண்டும். 1132 பக்கங்களைக் கொண்ட இந்நூலுக்காவே சி.சு. மணியைப் போற்ற வேண்டும்.

நம்முடைய அன்பர் இத்தோடு விட்டாரில்லை. சிவஞானமாபாடி யத்தை மீண்டும் எடுத்துக் கொண்டார். பகுதி பகுதியாக, வெளியிட ஆரம்பித்து விட்டார். முதல் தொகுதி பாயிரத்திற்கு மட்டுமே 240 பக்கங்கள் பிடித்துள்ளன. இன்னும் எத்தனை தொகுதிகளோ? ''சிவஞான மாபாடிய நுண்பொருள் விளக்கம்'' என்ற பெயரில் ஆனந்தராசன் விளக்கம் தருகிறார். இத்தகைய மாபெரும் படைப்பு உருவாக்குவதன் நோக்கத்தை ஆனந்தராசன் விளக்கு கிறார்.

''சைவவுலகில் சிறிது காலத்திற்கு முன்வரையில் சிவஞானபாடியக் கல்வி பெருகியிருந்தது. சைவசித்தாந்த அறிஞர் களின் தொகையும் பெருகியிருந்தது. சைவ அரங்குகளிலும், அவைகளிலும், மாநாடுகளிலும் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவுகளும், சிக்கல்களை முன் வைத்துச் செய்த ஆய்வுரைகளும், விவாதங்களும் சிந்தனைக்கு விருந்தாய் அமைந்தன. அவர்கள் சிவஞான பாடிய நூலை எழுத்து எண்ணிக் கற்றிருந்தனர். இன்று அத்தகைய அறிஞர்களின் தொகையும் குறைந்துவிட்டது. தக்க ஆசிரியரைச் சார்ந்து தாட்பால் வணங்கிக் கேட்டுத் தெளிவுபெற வேண்டிய சிவஞான பாடிய நூற்பொருள்களைத் தற்கால நிலையில் ஒருவர் தாமாகத்தான் முயன்று தெரிந்துகொள்ள வேண்டி யிருக்கிறது.''

''ஆயின், அம்முயற்சி அத்துணை எளிதா என்ன? செறிவும் திட்பமும் உடைய சிவஞானமாபாடியத்தின் செந்தமிழ் நடை முறையாகத் தமிழ் பயின்றோருக்கு அன்றி மற்றையோர்க்கு எளிதில் விளங்கக்கூடியதாய் இல்லை. ஒருவாக்கியமே ஒரு பத்தியளவிற்கு நீண்டுள்ள இடங்கள் பல. மேலும், ஆங்காங்கே வரும் தத்துவக் கலைச் சொற்கள், தருக்க நூற்குறியீடுகள், இலக்கணக்கூறுகள் முதலியவற்றை முறையாகப் புரிந்துகொண்டாலே பாடியத்தின் பொருள் நிலையை நன்கு உணர்ந்துக்கொள்ள இயலும். அவ்வாறு உணர்ந்து கொள்வதற்கு இவ்வுரை விளக்கம் ஒரு கைவிளக்குபோல் உறுதுணைசெய்வதாகும்.''

கைவிளக்கு அல்ல; இது கலங்கரை விளக்கம்.

ஆனந்தராசனாரே! சிதம்பரநாத கல்யாணி அவர்களே! தலைவணங்கு கிறோம்.

ஆம், நம் அன்பர் **சிதம்பர நாத கல்யாணி!**

அவர் பதிப்பகம் அருள்நந்தி சிவம் புத்தகநிலையம்!

சிதம்பரநாத கல்யாணி காசி, ஜோதிர் லிங்கதலங்கள், கயிலைவரை தல யாத்திரை செய்துள்ளார். நிருவாண தீக்கை எடுத்துள்ளார். வீட்டிலே சப்பரம் கட்டி இரண்டடி உயரத்தில் நடராஜர் எழுந்தருளப் பண்ணி வழிபடுகிறார். கையில் தங்கச்சங்கிலி, அடுக்கடுக்காய் சிவலிங்கங்கள்.

சி.சு. மணியவர்களின் பாடியம் அச்சிடும் பொழுது கையில் பொருள் ஏதும் இல்லை. கடன் வாங்கி அச்சிட்டார். தினம் சி.சு.மணி இல்லம் சென்று அவர் சொல்லச் சொல்ல இவர் எழுதுவார். ஒரு பதிப்பாளர் சுருக்கெழுத் தாளரானார். சைவத்தை எப்படியெல் லாம் வளர்க்கிறார்கள்.

வாழி சிதம்பரநாத கல்யாணி!

(பிறந்த ஆண்டு - 29-11-1954; பிறந்த ஊர் - நெல்லை; பெற்றோர் - சுப்பிர மணியபிள்ளை, ஈசுவரவடிவு)

பிற தொண்டர்கள்

புலவர் ம. சாமிநாதன்

(4-12-1932, வீரவநல்லூர், நெல்லை) பதின்மூன்று ஆண்டுகளாகத் திருமந்திர பாடம் நடத்தி வருகிறார், (2004 நேர்காணல்) நமச்சிவாய அருட்பணி மன்றத்தலைவராகப் பொறுப்பேற்று வீரவநல்லூரில் திருவாசக முற்றோதல் மாதம் இருமுறையும், திருமுறை முற்றோதல் மாதம் ஒருமுறையும் நடத்திவருகிறார்.

கா.சு. மணி

(வயது 70) இருபது, முப்பது ஆண்டுகளாக மாதம் ஒரு முறை நெல்லையப்பர்கோயிலில் உழவாரப் பணி செய்து வருகிறார்.

அருணாசலம்பிள்ளை

(1934) மாணிக்கவாசகம்பிள்ளையைக் கொண்டு ஓராண்டு சிவஞானபோதம் நடத்தினார்.

திருஞானசம்பந்தம்

(9-2-1955) பல சைவ அமைப்புகளில் பல்வேறு பணிகளில் பொறுப் பேற்றுள்ளார். சனிக்கிழமைதோறும் சிவஞானபோத வகுப்பு நடத்துகிறார். பக்தர்கள் பேரவை என்ற அமைப்பு ஏற்படுத்தி மாதம் ஒருநாள் உழவாரப்பணி, வாரவழிபாடு செய்து வருகிறார்.

சாத்தூர் முத்தையா பிள்ளை

(காலத்தால் முற்பட்டவர்) தனது மில் தொழிலாளர்களுக்குள் நூறுபேருக்கு உணவு படைத்து வாரம் தோறும் சைவ சித்தாந்த வகுப்பு நடத்தி வந்தார்.

க.சா. முருகேச பண்டிதர்
(Rev. K.S. Murugesan)

சிவஞானசித்தியார் சுபக்க வசனம் வெளியிட்டார். புன்னைவனநாத முதலியார் (1900) சைவசித்தாந்த அறிஞர்; சிறந்த சமயப்பணி ஆற்றினார். சு.க. நவநீதகிருஷ்ணன் (1929) சைவசபையில் 4, 5 ஆண்டுகள் சமயவகுப்பு நடத்தியுள்ளார். S. சண்முகவேல் (வயது 52) சிவசண்முகம் (வயது 45) சைவசித்தாந்த வகுப்பு நடத்துகிறார்கள். மறைத்திரு ஜோசப் ஜஸ்வந்த்ராஜ் "Grace in Saivasiddhanta and Epistles of St.paul" வெளியிட்டுள்ளார்.

நவநீதகிருஷ்ணன்

இந்துக் கல்லூரியில் எழுத்தராகப் பணியாற்றினார். பதினைந்து ஆண்டுகள் தோய்ந்து திருமுறைக் கருத்தரங்குகள் நடத்தினார். அதுபோலத் தோய்ந்து யாரும் நடத்தியதில்லை. 25 நிமிடம் தான் பேச வேண்டும். 22ஆம் நிமிடம் சிவப்பு விளக்கு எரியும். உட்கார வேண்டியது தான். ஈசான சிவாசாரியார், அருணை வடிவேல் முதலியார், வச்சிரவேல் முதலியார் போன்றோர் உரையாற்றி யிருக்கின்றனர்.

(துணைநூல்கள் :- நெல்லை குட முழுக்கு விழாமலர், பொருநை இலக்கிய வட்டம் 1000 ஆம் வார நிறைவுவிழாமலர், தி.சு. ஆறுமுகனாரின் கவிதை நூல்கள், வாழ்க்கைச் சுருக்கம், நெல்லை மன்றங்களின் வெளியீடுகள், சிவசம்பு பவளவிழா மலர், மு.சு. சங்கரின் கனமான கடிதப் போக்கு வரத்துகள். நேர்காணல் : வள்ளிநாயகம் (திருமுறை ஆசிரியர்), ஆறுமுகம் பிள்ளை, சிவசம்பு, மு.சு. சங்கர், தளவாய் ராமசாமி, வித்யாசங்கர தீக்ஷிதர் மற்றும் பல நெல்லை அன்பர்கள்)

61. தூத்துக்குடி

சைவ சித்தாந்த சபை

தூத்துக்குடி பகுதியில் சைவ வளர்ச்சியில் நீண்ட நெடிய வரலாற்றுப் பின்னணி உள்ளது. தமிழகத்திலேயே தொன்மையான - முதன்மையான - சைவ மன்றமாகிய தூத்துக்குடி சைவ சித்தாந்த சபையும், சிவஞானசபையும் சிறிதும் இடையீடுபடாமல் சைவப்பணி ஆற்றி வருகின்றன. ஞானியார் சுவாமிகள், சோமசுந்தரநாயகர், செந்திநாதையர், சி.வை. தாமோதரம்பிள்ளை, கா.சு. பிள்ளை, மறைமலையடிகள், திரு.வி.க., பண்டிதமணி கதிரேசன் செட்டியார் போன்றோர் முழங்கியிருக்கின்றனர் என்றால் சைவசித்தாந்த சபையின் தொன் மைக்குக் கேட்கவா வேண்டும்? சித்தாந்த நாவலர் பொ. முத்தையா பிள்ளை சாத்திர வகுப்பு நடத்தியிருக் கிறார். சித்தாந்த ஆசிரியர் ந. சிவகுரு நாத பிள்ளை ஆசிரியராக இருந்து 41 ஆண்டுகள் பாடம் சொல்லிக் கொடுத் திருக்கிறார். அண்மைக்காலத்தில் க. வச்சிர வேல்முதலியார், கு. சுந்தர மூர்த்தி, சி.சு. மணி, பழனிகிருஷ்ணன் ஆகியோர் வாரந்தோறும் வகுப்புகள் நடத்தியிருக்கின்றனர். சிறு சிறு நூல்களும் வெளியிட்டு வருகின்றனர். 300 பேரைக்கொண்டு கூட்டம் நடத்தும் அளவுக்குத் தனிக் கட்டடமே உள்ளது. 1,50,000 ரூபாய் வைப்புநிதியில் வைத்து சைவ அருளாளர்களின் விழாக்களை நடத்துகிறார்கள்.

(தோற்றம் - 25-8-1883; தொடக்க காலத் தலைவர் - குமாரசாமி பிள்ளை; தொடக்க கால அமைச்சர் - ஒ. ப. உலகநாத பிள்ளை; தற்போதைய தலைவர் - எம்.எஸ். இராமையா பிள்ளை; அமைச்சர் - இ. பரமசிவன். பணிகள் - சாத்திர வகுப்புகள், தீக்கை வழங்குதல், சைவ அருளாளர்கள் விழாக்கள், ஆண்டுவிழா நடத்துதல்)

சிவஞானப்பிரகாச சபை

1981-இல் தொடங்கப்பட்ட சிவ ஞானப் பிரகாச சபைக்கும் தனிக் கட்டடம் உள்ளது. சொற்பொழிவுகள் நடத்துதல், நூல்கள் வெளியிடுதல்,

நாயன்மார் குருபூஜை நடத்துதல், கந்த சஷ்டி சொற்பொழிவுகள், மார்கழி திருவெம்பாவை பாடி வீதிவலம் வருதல் எனப் பணி விரிகின்றது.

தற்போதைய தலைவர் : தெய்வ முருகன் : செயலர்.க. அழகப்பன்.

பாகம்பிரியாள் மாதர் கழகம்

தூத்துக்குடி பகுதி சைவ சமய வளர்ச்சியில் மகளிர் பங்களிப்பும், பங்கேற்பும் கணிசமானது. சைவ சித்தாந்த சபையின் ஓர் அங்கமாக பாகம் பிரியாள் மாதர்கழகம் 1928 முதல் இயங்கி வருகிறது. கழகம் பெண் களுக்குத் திருமுறை இசை பயிற்று வித்தல், சாத்திர தோத்திர வகுப்புகள் நடத்துதல் எனப் பணியாற்றுகின்றது.

தற்போதைய தலைவர் - அ. திருவெண்காட்டு நங்கை; செயலர் - ச. குழந்தையம்மாள்; தொடக்க காலத் தலைவர் - சி.வ.தர்மவர்த்தினி அம்மாள்; செயலர் - சிவகாமி அம்மாள்.

1948-இல் தொடங்கிய திலகவதியார் மாதர்கழகம் சிறுவர் சிறுமிகளைத் திரு முறைப்பாடல்களை இசையோடு பாடச் செய்தல், நாயன்மார் வரலாற்றை நாடக மாக நடத்தல், திருவாசக முற்றோதல், திருவெம்பாவை விழா நடத்துதல் எனப் பணியாற்றுகிறது. தற்போதைய தலைவர் -பார்வதி கதிரேசன்; செயலர் : - உமாலட்சுமி கணபதி.

சிவகாமி அம்மாள்

பாகம்பிரியாள் மாதர் கழகத்தின் ஆணிவேராக இருந்தவர் சிவகாமி அம்மாள். சிவகாமி அம்மாள் அக் கழகத்தை நிறுவியும், செயலாளராக இருந்து ஐம்பது ஆண்டுகள் நடத்தியும் அருந் தொண்டு ஆற்றியுள்ளார். அம்மை யாரே வகுப்புகள் நடத்தியும், நால்வர் நான்மணிமாலை, அற்புதத் திருவந்தாதி ஆகிய நூல்களுக்கு உரை எழுதியும், பல சைவ மாணவியரை உருவாக்கியும்,



கழகம் வெளியிட்ட மலர்களில் பெண் களையே எழுதச் செய்தும் தூத்துக்குடி மகளிர் உலகத்தில் ஒரு ஞானத்தாயாக விளங்கியிருந்தார்கள்.

குழந்தையம்மாள்



சிவகாமி அம்மையாரை அடியொற்றி குழந்தையம்மாள் இருந்த இடத்தில் இருந்தபடி சைவப்பணி ஆற்றுகின்றார். ஆம். உடற்பிணி காரணமாக படுக்கையில் இருந்தவாறே சைவ அரசாட்சி செய் கிறார். படுக்கையில் இருந்தவாறே பெண்களைப் பேசவும், திருமுறைகள் பாடவும் பயிற்றுவிக்கிறார். 40 ஆண்டு களாகக் கூட்டு வழிபாடு, திருமுறை இசை வகுப்பு, சமய இலக்கிய விரிவுரை, சைவ சித்தாந்த சாத்திர

வகுப்புகள் இடையறாது நடத்தி வருகிறார். இவர் முயற்சியால் மகளிர் கொண்ட திருமுறை இசைக் குழுவினர் உருவாகி, தென் பாண்டி நாட்டில் திருமுறை இசை பாடி வருகின்றனர். குழந்தையம்மாள் நல்ல சொற்பொழிவாளர். (பிறந்த ஆண்டு - *15-8-1929;* ஊர் - கோயில்பட்டி; தற்பொழுது வசிப்பது - தூத்துக்குடி; தந்தை - த.சி. சரவண பெருமாள் நாடார்)

டி.சி.எஸ். இராமச்சங்கு பாண்டியன்



இராமச்சங்கு பாண்டியன் - (வயது 70 தாண்டி) சைவசித்தாந்த சாத்திரம் முழுதும் கற்றுணர்ந்தவர். இந்த வயதிலும் சிவஞான மாபாடியம் கற்பித்து வருகிறார். சைவ சமயக் கொள்கைகளுக்கு முரணாகப் பேசினாலோ, எழுதினாலோ உடனே மறுப்பு தெரிவித்து விடுவார். வாழும் பரபக்கம்!

இ. பரமசிவம்பிள்ளை

(15-9-1929; தந்தை - பி. ஈஸ்வர மூர்த்தியா பிள்ளை;) 40 ஆண்டுகளாகத் தூத்துக்குடி சைவச் சித்தாந்த சபையில் பொறுப்புகள் பல வகித்து தற்பொழுது அதன் அமைச்சராக உள்ளார்.

தெய்வமுருகன்

(15-11-1943; தூத்துக்குடி; எம். சி. தெய்வநாயகம்.) சமயச் சொற்பொழிவு செய்தல், நூல்கள் எழுதுதல், சிவஞானப் பிரகாச சபையின் தலைவர்.

ஜி.என். பிரபாகரன்

(28-2-1954; தூத்துக்குடி; ஜி. நந்த கோபால் நாடார்;) 20 ஆண்டுகளாகச் சிவாலயப்பணி, உழவாரப்பணி செய்தல், பாபநாசத்தில் சைவ நற்சிந்தனைக்கென ஓர் இல்லம் கட்டியுள்ளார்.

62. ஸ்ரீவைகுண்டம்

நெல்லை மாவட்டத்திலே திருமால் தலங்களாகிய நவதிருப்பதி என்ற ஒன்பது திவ்யதேசங்கள் புகழ்பெற்றவை ஆகும். அதேபோல் சிவபெருமானுக்கும் நவ கயிலாயங்கள் இருப்பது பெரும் சிறப்பு ஆகும். ஸ்ரீவைகுண்டம் என்ற ஊரின் வடபுறத்தில் கயிலாயம் என்றொரு பகுதி இருக்கின்றது. அங்கே ஒரு சிவன் கோயிலும் உள்ளது.

ஸ்ரீவைகுண்டத்தில் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்தின் குரு முதல்வரும், பதினான்கு அரிய தமிழ்நூல்கள் உலகிற்கு வழங்கியவருமான குமரகுருபரர் சுவாமிகள் அவதரித்தார். ஸ்ரீவைகுண்டத்தில் அவரது திருவுருவச்சிலை நிறுவி ஸ்ரீகாசிமடம் சுவாமிகள் ஒரு மண்டபமும் கட்டியிருக்கிறார்கள்.

இரத்னதங்கம்

ஸ்ரீவைகுண்டத்தில் திருவாசக முற்றோதல் குழு 1985இலிருந்து செயல்பட்டு வருகின்றது. மாதம் ஒரு முறை முற்றோதல் நிகழ்த்தப் படுகிறது. இதனை நடத்துபவர் இரத்ன தங்கம் என்பவர். இரத்னதங்கம் திருவாசகம் 10,000 பிரதிகளை அச்சிட்டு வழங்கி உள்ளார். அங்குள்ள சிவன் கோயில் திருப்பணிக்கு ஐந்து லட்ச ரூபாய் பொருளுதவி கொடுத்துள்ளார். இரத்ன தங்கம் 25-1-1946-இல் குமரி மாவட்டம் பேயோடு என்ற ஊரில் பிறந்தவர் ஆவார்.

பொ. முத்தரசு

இரத்ன தங்கத்திற்கு முன்பே ஸ்ரீவைகுண்டத்தில் திருவாசக முற்றோதல் குழு



நிறுவி தொடர்ந்து நடத்தியவர், ஸ்ரீவைகுண்டம் கலைக் கல்லூரியின் முன்னை முதல்வரும் தமிழ்ப் பேராசிரியரும் ஆன பொ.முத்தரசு ஆவார். தருமையாதீனச் சைவச் சித்தாந்த மாலைநேரக் கல்லூரி நிறுவி சைவ சித்தாந்தமும் சொல்லித் தந்தார்கள். சைவசித்தாந்தக் கருத்துகளை அனைவருக்கும் புரியக்கூடிய வகையில் சொல்லிக் கொடுக்கும் ஆற்றல் பெற்றவர். தேவாரம், பெரிய புராணம், திருவாசகம் போன்ற எண்ணற்ற சமய இலக்கியங்களுக்கு விரிவுரை ஆற்றும் பாணியே அலாதியானது. குமரகுருபரரிடம் அவர் கொண்டிருந்த பக்தி வரம்பில்லாதது. நாடிநரம் பெல்லாம் முறுக்கேறிய வைராக்கிய பக்தி என்றும் சொல்லலாம்.

பொ. முத்தரசு எப்படியிருப்பார்கள்? விரிந்த மாநிறமான நெற்றி; அதில் ஆழ்ந்த சிந்தனை செய்பவர் என்பதைக் காட்டும் சுருக்கங்கள்; அருளொளி ததும்ப குளிர்ந்த பார்வை மிக்க விழிகள். சாந்தம் தவழும் முகத்தோற்றம்; சற்றுக்குறை வான உயரம்; பற்றினைத்துறந்த முனிவரோ என எண்ணத்தோன்றும் தன்னடக்கமான எளிமையான வடிவம்; இதழ்விரித்த ரோஜா போன்று எப்பொழுதும் இதமான புன்னகை தவழும் இதழ்கள். இந்த வடிவமே பண்பாட்டின் சிகரமாய் வாழ்ந்து காட்டிய முத்தரசின் வடிவம்.

''குள்ள உருவந்தான்; குன்றிலிட்ட விளக்கு ஆவார்! அள்ளக் குறையா அன்பின் சுரங்கம் எங்கள் ஐயா''

இது அவரின் மாணவர்கள் அளித்த நன்றி புலப்படுத்தும் நற்பட்டயம்! 25-6-1926-இல் பிறந்த பொ. முத்தரசு 10-12-2001-இல் மறைந்தார்.

(துணைக்குறிப்புகள் : 1. பொ. முத்தரசு நினைவுமலர் (2002); 2. இரத்ன தங்கம் நேர்காணல்)

63. நாகர்கோயில்

நாகர்கோயிலில் இருப்பது நாகராஜா கோயில் ஆகும். இங்கு நம் சைவ ஆய்விற்கு இடமில்லை என்று குறிப்புப் புத்தகம் எதுவும் எடுத்துச் செல்லாமல் கோயிலுக்குள் நுழைந்தேன். கோவிலுக்குள் சென்றால் கருவறையில் சிவலிங்க வடிவில் எம்பெருமானார் வீற்றிருந்தார். தென்பக்கம் பத்மநாப சுவாமியும், வடபக்கம் நாகராஜா சுவாமியும் எழுந்தருளியிருக்கின்றனர்.

''ஆகம அடிப்படையில் கோயில் கருவறை நடுவில் அமைக்கப்பட்டு இருக்கும். இங்கே நடுவில் அமைக்கப் பட்டிருப்பது சிவலிங்கத் திருமேனி. எனவே இது நாகராசா கோயில் அல்ல; சிவன் கோயிலே'' என்று ஆய்வாளர் செம்மொழி எழுதுகிறார். இக்கோயில் சிவன் கோயிலே என்பதற்கு அவர் முன் வைக்கும் பிறகாரணங்கள் வருமாறு;

1) கோயில் கருவறையில் அமைந்திட்ட கடவுளை அக்கோயிலின் நுழைவாயிலில் காவல் தெய்வமாக நிறுத்தி விடக்கூடாது. இக்கோயிலின் உள்பக்க நுழைவு வாயிலில் நாகராசரின் உருவத்தினை இரு பாம்புச்சிலைகளாக வாயிலில் காவல் காத்திடும்படி அமைத்துள்ளனர்.

2) இக்கோயில் பண்டு சிவன்கோயிலாகத் துவங்கிய நாளில் அச்சிவன் கோயிலின் தலமரம், புன்னை மரம் ஆகும்.

3) கோயிலுக்கு நுழையும் முகப்பின் முன் பக்கம் அமைந்த நீர் நிலைக்கு ''உமைபங்கன் ஏரி'' என்பது பெயர்.

4) இக்கோயிலில் முனைவர் சி. பத்மநாபன் கண்டுபிடித்த கல்வெட்டில் ''கொன்றை மாலை சதா சேவை'' என்று காணப்படுகிறது.

5) சிவன் கோயிலுக்கே உரித்தான தேரோட்டமும் (இன்றும் நடைபெறு கின்றது), தெப்பத்திருவிழாவும் (முன்பு நடந்ததாகப் பெரியவர்கள் கூறு கின்றனர்) இங்கு நடைபெற்றிருக் கின்றன.

கோயில் வழிபாடு முடிந்தவுடன் வலம்வரும்பொழுது ஓர் அடியார் துதிப் பாடல்களை முணுமுணுத்துக் கொண்டு வலம்வந்து கொண்டிருந்தார். அடியாராக இருந்ததனால் மெல்லப் பேச்சுக் கொடுத்தேன். அடியவருக்கு வயது 61 இருக்கும். விற்பனைவரித் துறையில் பணியாற்றியவராம். கோபால கிருஷ்ணன் என்று பெயர். கோயிலைச் சுற்றிக் காடாக இருந்ததாம். அதனைத் திருத்தி நந்தவனம் அமைத்துக் காத்து வருவதாகச் சொன்னார். ஐம்பது வயதுடைய கிருஷ்ணா என்பவர் அவருக்கு உதவுகிறாராம். கோயிலுக்குப் பூக்களே இல்லாமல் இருந்ததாம். செடி வைத்து மலர்கள் கொடுக்கும் தொண்டு செய்து வருகிறார். ராமசுப்பு (வயது 75) என்பவர் கோயிலில் நெஞ்சுருகித் தேவாரம் பாடுவாராம். இப்படி ஒரு தொண்டர் குழாம் பட்டியலையே அடுக்கிவிட்டார்.

மாலையில் சுசீந்தரம் செல்வதற்காக நாங்களும் நாவலாசிரியர் ஜெயமோகன் அவர்களும் வரலாற்றுப் பேராசிரியர் அ.கா. பெருமாள் இல்லத்திற்குச் சென்றோம். வழியில் ஒரு வீட்டின் வாயிலில் ''சிவ சிவ'' என்று துணியில் எழுதப்பட்டிருந்தது, புதையலைக் கண்டது போல ஊர்தி ஓட்டுநரை ''நிறுத்து நிறுத்து'' என்றேன். உடனே அ. கா. பெருமாள் ''இப்பொழுது இறங்கினால் அங்கே பேச்சு, கூட்டம் என்று நீண்டு விடும். சுசீந்தரம் போய்ப் பார்த்துவிட்டு வரும் பொழுது பார்க்கலாம்,'' என்றார். 'சுசீந்தரம் போய் வருவதற்குள் அத்திருக் கூட்டம் கலையாமல் இருக்க வேண்டுமே'' என்று எனக்கு உள்ளூர உதைப்பு.

சுசீந்தரம் சென்றால் வெளியிலிருந்து கோபுரத்தையே பார்த்துக் கொண்டு இருக்கலாம் போல இருந்தது. அப்படி ஓர் அழகு! அதற்குள் பெருமாள் அவர்கள் நிர்வாக அதிகாரியிடம் சென்று பேசிவிட்டு கோபுரத்துக்கு மேலே ஒவ்வொரு தளமாகச் சென்று பார்க்க அனுமதி வாங்கி வந்தார். ஒவ்வொரு தளத்திலும் அருமையான ஓவியங்கள். அவற்றின் அருமை தெரியாது கை யெழுத்து விரும்பிகளின் கைவண்ணம் அவ்வோவியங்களைச் சிதைத்து இருந்தது. கோயிலுக்குள்ளும் அற்புத மான சிற்பக்கலைக்கூடமாகத் திகழ்ந் தது. பெருமாள் ஒவ்வொரு சிற்பத் தையும், ஒவ்வொரு சந்நிதியையும் ஆரஅமர வரலாற்றுப் பின்னணியோடு விளக்கி வந்தார்.

சுசீந்தர வழிபாடு முடிந்தவுடன் நாகர்கோயிலில் பெருமாள் அவர்களை வீட்டில் இறக்கி விட்டுத் திரும்புகையில் ''சிவ சிவ'' அடையாளம் காட்டிக் கொண்டு இருந்த வீட்டில் நுழைந்தேன். கூட்டம் முடியும் நேரம், நாகர்கோயிலில் எந்த ஒரு சைவ மன்றமும் இருப்பது தெரியாத நிலையில் எனக்கு ஒரு விருந்தே காத்திருந்தது எனலாம். பெருமாள் இல்லத்திற்குச் செல்லாது இருந்தால் இந்த வாய்ப்பே கிடைத்திருக் காது. எல்லாம் இறைவன் திருவருள்!

நன்னெறி மன்றம்

வீட்டின் வாயிலில் அமர்ந்து இருந்த பொறுப்பாளர்கள் நன்னெறி மன்ற பொன்விழா மலரினை வழங்கினார்கள். இம்மன்றம் 1954-இல் வள்ளிநாயகம்




C. வள்ளிநாயகம்பிள்ளை, நிறுவனர்

பிள்ளை தோற்றுவிக்கப் பட்டது. மன்றத்தினரால் பன்னிரு திருமுறைகள் ஓதுதல், சாத்திர தோத்திரங்கள் அருளுரை வழங்குதல் ஆகியன நிகழ்த்தப்பட்டு வருகின்றன. பல ஆண்டுகள்



C. சிவன்பிள்ளை, தலைவர்

வாரந்தோறும் சிவஞான போதபாடம் சேந்தன்புதூர் வித்துவான் திரு பகவதிபெருமாள் நடத்தி வந்தார். வயிநாகரம் பாலகவி வே. இராமநாதன் செட்டியார் 41 நாட்கள் சிவஞான போதம், சித்தியார் பாடம் நடத்தியிருக் கிறார். சிவஸ்ரீ ஈசான சிவாச் சாரிய சுவாமிகள் சைவ அன்பர்கள் பலருக்குத் தீக்ஷை கொடுத்திருக்கிறார். நாகர் கோயில் பகுதியில் ஆண்டுதோறும் ஒவ்வொரு மாதமாக பனிரெண்டு இடங்களில் திருவாசக முற்றோதல் நடத்தப்படுகின்றது. பெண்



ஆனந்தராஜ்

உறுப்பினர்கள் பங்கு இதில் அதிகம், அறுபத்து மூவர் குருபூஜை நடத்தி 2004 ஜனவரியில் 600-ஆம் குரு பூஜையை மன்றத்தின் பொன்விழாவாக மன்றத் தினர் நடத்தி மகிழ்ந்தனர். தற்போதைய தலைவர் - சிவன் பிள்ளை; செயலர் - ஆனந்தராஜ். நன்னெறி மன்றத்தார் வழங்கிய பிற செய்திகள் :

(1) திருமுறைப்பயிற்சி மையம் - தோற்றம் 2003; திருமுறைப் பயிற்சி தரப்படுகின்றது.

(2) சதாசிவம் (இருளப்பபுரம் வயது 60) 15 வருடங்களாகத் திருமுறைகளைப் பாடுதல், இலவச வெளியீடுகள் வழங்குதல்.

(3) சண்முகசுந்தரம், (இருளப்பபுரம் வயது 60) திருமுறைகளைப் பாடுதல்,

(4) ஈத்தாம்புளி கோம்பை சுவாமி மடம் டி. கிருஷ்ணப்பா, (வயது 60) திருமுறைகளை அச்சிட்டு வெளியிடு தல், குருபூஜை நடத்துதல்.

(5) சுகதேவன், (வயது 65 - மௌன குரு சுவாமிகள் மடம், தோட்டியூர்) திரு முறைகளைப் பாடுதல்.

(6) கந்தசாமி பிள்ளை, (வயது 65, சுசீந்தரம்) - சமயப்பேச்சாளர்.

(7) குமரேசப் பிள்ளை, சைவசித்தாந்த வகுப்பு ஆசிரியர்) இனிய குரலில் பாடுவார்; 84-ஆம் வயதிலும் நூல்கள்

அச்சிட்டு வெளியிட்டவர்; 2005-இல் மறைவு.

(8) அருள்மிகு தாணுமாலய பக்தர்கள் சங்கம், சுசீந்தரம் தலைவர் டி. முத்துகிருஷ்ணன்; பிரதோஷ வழிபாடு, சமயச் சொற்பொழிவுகள் நடத்துதல்.

(9) அருள்மிகு தாணுமாலய அறக்கட்டளை; மு. செல்லப்பன், சுசீந்தரம்; பிரதோஷ வழிபாடு.


(10) மெய்கண்டார் சைவசித்தாந்தப் பேரவை; சுசீந்தரம்; தோற்றம் 2000; தலைவர் - சி. குமரேசபிள்ளை; திருப் பதிகங்கள் முற்றோதுதல், சொற்பொழி வுகள் நடத்துதல்.

(11) ஆன்மிக சித்தாந்தப் பேரவை; (2000) வழிபாடு, திருமுறை பாராயணம்; திருவாவடுதுறை ஆதீன (2001 முதல் 2003) சித்தாந்தப் பயிற்சி வகுப்பு.

(12) சி. கோபாலகிருஷ்ணபிள்ளை; சைவசித்தாந்தம் படித்தவர்; சிவனடியார் ஓம்புதல்.

(13) செ. வரதராசன்; குளச்சல்; திருஎழுகூற்றிருக்கை, விடம் தீர்க்கும் பதிகம், சிவபுராணம், திருமுருகாற்றுப் படை, கந்தரந்தாதி, திருவகுப்பு ஆகியவற்றிற்கு உரை எழுதியுள்ளார்.

ப. அருணாசலம்



முனைவர். ப. அருணாசலத்தின் ''பக்தி இலக்கியம்'' முதன் முதலாகச் சைவத்தில் வந்த முழுமையான ஆய்வு நூல் ஆகும். நால்வர் பெருமக்களையும் அவர்கள் அருளிய தெய்வப் பனுவல் களையும் சாறாகப் பிழிந்து தந்துள்ளார். அவர் இயற்றிய பிற சைவ நூல்கள் ''திருமந்திரக் கோட்பாடு'', ''சைவ சமயம்'', ''சுந்தரர் தரிசனம்'' ஆகும். 1923 நவம்பரில் கன்னியாகுமரி மாவட்டம் இரணியலில் பிறந்த ப. அருணாசலம் மலேசியா பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றினார். 1979-இல் ஓய்வு பெற்றபின் நாகர் கோயிலில் வசித்து வருகிறார்.

ஜெயமோகன் திருவண் பரிசாரம் என்ற திவ்யதேசத்திற்கும், ஔவையார் கோயிலுக்கும் அழைத்துச் சென்றார். அவரை நாகர் கோயிலில் விட்டுவிட்டு திருக்குறுங்குடி, வானமாமலை தரிசித்து விட்டு நெல்லை விரைந்தோம்.

65. விக்கிரமசிங்கபுரம்

சைவநெறிக்கழகம்

சிவஞானமாபாடியம் எழுதிய சிவஞான முனிவர் அவதரித்த தலம் விக்கிரமசிங்கபுரம் ஆகும். அங்கு எழுப்பப்பட்டுள்ள சிவஞானமுனிவர் ஆலயத்தில் 1980-இல் தொடங்கி 36 வாரங்கள் தொடர்ந்து சி.சு. மணியவர்கள் சிவஞானபோதம் வகுப்பு நடத்தினார். பிறகு இரத்னவேலு கு. வைத்யநாதன், சிவப்பிரகாசம் ஆகியோர் நடத்தினர். அமைப்பிற்கு ''சைவ நெறிக் கழகம்'' எனப்பெயரிட்டனர்.

1987இலிருந்து ஆண்டுதோறும் மே 7 முதல் மே 21 வரை 15 நாட்கள் சைவ சித்தாந்த வகுப்பு நடத்தி வருகின்றனர். இலவச தங்குமிடம், இலவச உணவு ஏற்பாடு செய்கின்றனர். ஆண்டுதோறும் 50 பேருக்கு மேல் தங்கிப் பயன் பெறுகின்றனர். பயிற்சிக் கட்டணம் கிடையாது. வை. இரத்தினசபாபதி, டி.பி. சித்தலிங்கையா, ஆனந்தராசன், கங்காதரன், கோமதி சூரியமூர்த்தி ஆகியோர் வகுப்புகள் (சிவஞான

போதம், திருவருட்பயன், உண்மை விளக்கம்) நடத்தினர். சி.சு. மணி இருக்கும்வரை நெறிப்படுத் தினார். 1985-இல் சிவஞான முனிவரின் 200-ஆம் ஆண்டுவிழா வினைச் சிறப்பாக நடத்தினார்கள். தலைவர் - பா. அம்மையப்பன், செயலாளர் - ச. கந்தசுவாமி.

சிவஞானசுவாமிகள் பேரவை

விக்கிரமசிங்கபுரம் அப்படி ஒன்றும் பெரிய ஊர் அல்ல. ஆனால் இங்கு தோன்றியுள்ள இரண்டு அமைப்புகளும் கடுமையான பணிகளைச் செய்து வருகின்றன. ஒருநாள் சொற்பொழிவு ஏற்பாடு செய்வதே சிரமமான பணி. அப்படியிருக்க 18 ஆண்டுகள் தொடர்ந்து 15 நாட்கள் வகுப்புகள் என்று 4,5 அறிஞர்களை அழைத்துத் தங்கவைத்து 50 பேருக்கு மேல் தங்குமிடம், உணவு ஏற்பாடு செய்வது என்பது அருஞ்செயல் ஆகும். அதனைச் சைவ நெறிக் கழகத்தினர் செய்து வருகின்றனர்.

இது ஒருவகை ஞானதானம்; மற்றொரு ஞானதானம் நூல்கள் வெளி யிடுதல். அதுவும் நம் முன்னோர்கள் விட்டுச் சென்ற கிடைத்தற்கரிய தலைசிறந்த நூல்களை மீட்டுருவாக்கம் செய்கின்றனர் சிவஞான சுவாமிகள் பேரவையினர். பேரவையினரின் முதல் வெளியீடு ''சிவஞானசித்தியார் - சுபக்கம்மூலம் மற்றும் இரு உரை களுடன்'' ஆகும். சிவஞான முனிவரின் பொழிப்புரையுடன் கூடியது ஆகும். திருக்குறளுக்குப் பரிமேலழகர் உரை எத்துணை சிறந்ததோ அத்துணை சிறந்தது சிவஞான சித்தியாருக்கு ஸ்ரீமத் சிவஞான சுவாமிகள் உரை. திருவா வடுதுறை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ பதினாறாம் குரு மகா சந்நிதானம் ஸ்ரீமத் சிவஞான சுவாமிகளின் பொழிப் புரைக்கு ஓர் அரிய பதவுரை செய்து அருளினார். இத்தகு பெருமை வாய்ந்த பொழிப் புரையும், பதவுரையும் இணைந்த ''சிவஞான சித்தியார் - சுபக்கம் இருவர் உரை'' சைவ உலகிற்கோர் பெருங்கொடை ஆகும்.

2001, 2002களில் மகாவித்துவான் ச. தண்டபாணி தேசிகர் ''திரு வாசகம் - உரை'' இரண்டு தொகுதி களாகப் பேரவையினர் வெளியிட்டனர் தேசிகர் உரை ஆழ்ந்த நுட்பம் உடையது.

''கூவின பூங்குயில்! கூவின கோழி!
குருகுகள் இயம்பின! இயம்பின சங்கம்!''

''பிடித்து வளர்க்கப்படாதது குயில்; வீட்டுப்பறவை கோழி; பல பறவை களின் ஒலியாகக் குருகுகள்'' என உரை எழுதப்படுவதுண்டு. நம் தேசிகரோ, ''கரிய குயில்; கருமையும் செம்மையும் கலந்த கோழி; அழுக்கு நிறம் கலந்த வெண்மையான குருகு; மிக்க வெண்மையான சங்கு. இவை ஒலித்தன. ஆணவமலச்சேற்றுள் அழுந்திய ஆன்மா படிப்படியாகச் சுத்தான்மாவாய் ஆவதையே இது குறிக்கின்றது'' என்று விளக்குகின்றார். அடடா! இதுவொன்றே அவர் பெற்றிருக்கும் குருவருளுக்கும், திருவருளுக்கும் சாட்சி.

திருவாசகத்தில் உள்ள ''திருப்படை யாட்சி'' என்ற பகுதிக்கு விளக்கவுரை எழுதுவது என்பது எளிதான காரியம் அல்ல. சிலர் தத்துவார்த்தமான விளக் கங்களை எழுதியுள்ளனர். ''நாதன் அணி திருநீற்றை அணிவது கூட சீவ உபாதி'' என்பது அவர்களின் உரை. ஆயின் தேசிகரோ பக்தி ரசத்துக்கே முக்கியத் துவம் அளித்துப் பதமான உரையை வழங்கி நெஞ்சத்தைக் குளிர்விக்கிறார்.

''தொண்டாகக் கொண்டருளும் கோகழி
எம்மான்''

என்பதற்கு உரைஎழுதிய சில உரை யாசிரியர்கள் ''திருப்பெருந்துறையில் தூல பஞ்சாக்கரத்தை மாணிக்கவாச கருக்கு உபதேசித்த சிவபெருமான் கோகழியில் (திருவாவடுதுறை) சூக்கும

பஞ்சாக் கரத்தை உபதேசித்தார்'' என விளக்கியுள்ளார். இப்படிக் குறிப்பிடுவதால் கோகழிக்கு மற்றுமோர் சிறப்பு ஏற்படும்தான். ஆயினும் துறைசை ஆதீனத்தின் அருளாணையால் உரை எழுதியும், ''கோகழி ஆண்ட குருமணி'' என்று மாணிக்கவாசகரே சிவபுராணத்தில் பாடியிருந்தும் இந்த சூக்கும பஞ்சாக்கர விஷயத்தைப் புறந்தள்ளிவிடுகிறார் தண்டபாணி தேசிகர். இதுவொன்றே அவர் நேர்மைக்கு சாட்சி. சடையப்ப வள்ளலைத் தனது காவியத்தில் ஆங்காங்கே புகழ்ந்த கம்பனின் நன்றியுணர்வை விட தேசிகரின் நேர்மையுணர்வு பெரிதாகத் தெரிகின்றது.

தேசிகரின் உரை நயத்தை விளக்கியே ஒரு தனிப்புத்தகம் எழுதிவிடலாம். அந்த அளவுக்கு 'அனைத்து எலும்பும் உள்நெக ஆனந்தத் தேன்' சொரிந்துள்ளார் அப்பெரு மகனார்.

2003-இல் சிவஞான முனிவரின் ''சோமேசர் முதுமொழி வெண்பா'' வினை மகாவித்துவான் த.ச. மீனாட்சி சுந்தரம் பிள்ளை சிறப்புரையுடனும், சு. குஞ்சிதபாதம் பொழிப்புரையுடனும் பேரவை வெளியிட்டுள்ளது.

பேரவை ஆண்டுதோறும் நூல் வெளியிடுவதோடு மாதம் தோறும் திருவாசக வகுப்பினையும், ஆயில்ய நன்னாளன்று சாத்திர வகுப்பையும் நடத்தி வருகின்றது.

ஸ்ரீதிருநாவுக்கரசு சுவாமிகள் உழவாரக்குழு

இக்குழுவினர் உழவாரம் மட்டும் செய்யவில்லை. சிறுசிறு நூல்களாக 2003வரை 21 நூல்கள் வெளியிட்டு உள்ளனர். ஞானம் விளைந்த ஊர் அல்லவா? தலைவர் - ந. செல்லையா.

64. தென்காசி

''அருவி புடைசூழக் கூதல் மாரி
சிறுநுண்துளி தூங்கும் குற்றாலம்''

-திருஞானசம்பந்தர்


அருவி ஒருபுறம்; நுண்துளியாகச் சாரல் ஒரு புறம்; பச்சைப்பசேல் என்று எங்கும் ரம்யமான காட்சி. திருக்குற்றாலத்தில் சித்ரசபை ஓர் அழகுக் கருவூலம்! எத்தனை வகையான வண்ண வண்ண ஓவியங்கள்! எத்தனை வகை கணபதி ஓவியங்கள்! எத்தனை வகை முருகன் ஓவியங்கள்! அறுபத்துமூன்று நாயன்மார் ஓவியங்கள்! திருவிளையாடல் காட்சிகள்! இவற்றிற்கெல்லாம் நடுநாயகமாக ஆடல் வல்லானும், சிவகாமியும் காட்சி தருகின்றார்கள். காணக் கண்கோடி வேண்டும்.

குற்றாலத்தில் சைவ அமைப்புகள் ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை. தொன்மையான திருவள்ளுவர் கழகம் மட்டுமே உள்ளது. திருக்குற்றாலநாதர் திருக்கோயிலிலே ஓதுவார்களை மட்டும் நேர்காணல் செய்து விட்டு தென்காசிக்கு நடையைக் கட்டினேன்.

தென்காசி திருக்கோயிலில் அரிய சிற்பங்கள் உள்ளன. ஊர்த்துவ தாண்டவக்காட்சியும், மன்மதன் சிலையும் கண்ணைக் கவருவன. ''இத்திருக் கோயிலில் ஏதேனும் ஒரு பழுது ஏற்பட்டால் அதனைச் சரி செய்பவர்கள் திருவடிகளில் இப்பொழுதே வணங்குகிறேன்'' என்ற பாண்டியனின் கல் வெட்டு அங்குதான் உள்ளது. இப்போதைக்கு அப்போதே சொல்லி வைத்தான் பாண்டிய மன்னன். அந்தப் பெருமையைத் தட்டிக்கொண்டு சென்றவர் சிவந்தி ஆதித்தன் ஆவார். திருப்பணிக் குழுத்தலைவராக இருந்து 1 கோடி 17 இலட்ச ரூபாய் செலவில் திருப்பணி செய்து முடித்திருக்கிறார். சேதமுற்றிருந்த இராஜகோபுரத்தைச் செம்மைப் படுத்தியது இமாலய முயற்சி. பாண்டிய மன்னன் இன்று இருந்தால் நூறு முறை விழுந்து கும்பிட்டு இருப்பான்.

குற்றாலத்திலும் செய்திகள் சேகரிக்க முடியவில்லை. தென்காசியிலும் சேகரிக்கமுடியாதோ என்று கவலையுற்று

பெருமானை வணங்கிக் கொண்டு இருந்தேன். அருகிலே சன்னமான குரலில் ''ஆடுகின்றிலை கூத்துடையான் கழற்கு அன்பிலை'' என்று ஒருவர் நெஞ்சுருகப் பாடிக் கொண்டிருந்தார். அவர் பாடி முடியும்வரை காத்திருந்தேன். சிவ பூஜையில் கரடி விடக்கூடா தல்லவா? மூடிய கண்களைத் திறந்த வரிடம் என்னை அறிமுகம் செய்து கொண்டு ''நெஞ்சுருகப் பாடினீர்களே; இங்கு ஏதேனும் சைவ மன்றங்கள் உளவா?'' என்று கேட்டேன். தன்பெயர் திருநாவுக் கரசு என்றும் ஓய்வு பெற்ற வருமான வரி அதிகாரி என்றும் அறிமுகப்படுத்திக் கொண்டு ''இங்கு ஒரு சிவநெறிக் கூட்டம் உள்ளது. அதன் தலைவரைப் போய்ப் பார்ப்போம்'' என்று அழைத்துச் சென்றார். என் மனைவியைக் கோயிலிலேயே விட்டு விட்டு நடந்தே சென்றோம்.



''கூதல்மாரி சிறுநுண்துளி'' தூறிக் கொண்டிருந்தது. சிவநெறித்திருக்கூட்டத் தலைவர், ஓய்வு பெற்ற வணிகவரி அதிகாரியான திருஞானசம்பந்தத்தைச் சந்தித்தோம். ஆசிரியருடைய உதவி யில்லாமலேயே பதினான்கு சாத் திரங்களும் பன்னிருதிருமுறைகளும் படித்திருக்கிறார். 1997-இல் தொடங்கிய சிவநெறித் திருக்கூட்டத்தில் இதுவரை 313 திருவாசக முற்றோதல்கள் நிகழ்ந்து உள்ளன. ''முற்றோதலுக்கு முழுதும் பயிலுதல்; தவறு இல்லாமல் படித்தல்; தவறு இருந்தால் அதனைத் திருத்தித் தவறு நீங்கும்வரை திருப்பித் திருப்பிப் படித்தல்'' என்று விளக்கம் வேறு அளித்தார்.

(எஸ். திருஞானசம்பந்தம்; 5-7-1930; நெல்லை சண்முகசுந்தரம் - கோமதி யம்மாள்)

தென்காசித் திருக்கோயிலில் உழவாரப் பணியும் நடைபெறுகிறது. குமார் என்பவர் (வயது 35, ஜெராக்ஸ் கம்பெனி) 25 அன்பர்களைச் சேர்த்துக் கொண்டு மாதம் ஒரு நாள் உழவாரப் பணி செய்கிறார். ஆறு ஆண்டு காலமாக இப்பணி நடக்கிறது. திருக்கோயிலில் தினமும் சாம்பிராணிப்புகை போடு கிறார்! தென்காசியில் ஒரு குங்குலியக் கலயர்!

66. சங்கரன் கோயில்

''குரு-சீட பரம்பரையாக வழிவழி ஞான உபதேசம்'' சங்கரன்கோயில் சைவத்தின் பண்பாக அமைகிறது.

சிதம்பர ராமலிங்கம் பிள்ளை
|
ஈசுரமூர்த்திப்பிள்ளை
|
பட்டமுத்து — இரத்னவேலர்
|
ஆவுடையப்பன் (இரத்னவேலர்)

என்று சங்கரன் கோயிலில் ஒரு ஞான பரம்பரையே உருவாகியுள்ளது.

சீட பரம்பரையை உருவாக்கிய ஞானகுரு

இந்த ஞான பரம்பரையில் முன் இருப்பவர் ஈசுரமூர்த்திப்பிள்ளையாவார். சங்கரன் கோயிலில் சைவசமயம் செம்மாந்த நிலையில் இருக்கின்றது என்றால் ஈசுரமூர்த்திப்பிள்ளையே முதற்காரணமும் முழுமையான காரண



மும் ஆவார். ஈசுரமூர்த்திப் பிள்ளையின் பணிகள் பலதிறப் பட்டவை ஆகும். சங்கரன் கோயிலில் - ஏன் நெல்லை மாவட்டம் முழுவதும் - வாரந் தோறும் தொடர்ந்து சைவ வகுப்புகள் நடத்தி வந்தார். அமைப்புகள் பல நிறுவி அப்பணியினை நெறிப் படுத்தினார். பல நூல்கள் எழுதி வெளியிட்டார். இவற்றை யெல்லாம் விட முக்கியமானது அவர் ஒரு சீட பரம்பரையை உருவாக்கியதே. பிள்ளை தனியொருவராக இருந்து ஒரு நிறுவனமாக - ஓர் இயக்க மாகச் - செயல்பட்டது சங்கரன் கோயில் வரலாற்றில் பொன் எழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

ஈசுரமூர்த்திப்பிள்ளை சிதம் பர ராமலிங்கம்பிள்ளையிடம் சாத்திரப் பாடம் கேட்டார். கடையம் என்ற ஊரில் ஆசிரியராகப் பணியேற்றதும் அங்குள்ளோருக்குச் சிவஞான சித்தியார் பாடம் சொல்லி வந்தார்.

1926-இல் செங்கல்பட்டு மாவட் டத்தில் பல இடங்களில் பணியாற்றிய போது பிள்ளை செய்த சைவப் பணிகள் அளப்பரியன; தமிழகமெங்கும் சென்று சொற்பொழிவுகள் நிகழ்த்தினார். சைவ இதழ்களுக்குக் கட்டுரைகள் எழுதித் தந்தார். பத்து நூல்கள் எழுதினார்.

1948-இல் சங்கரன் கோயிலுக்கு மாற்றப் பட்டார்.

8-3-1950...

சங்கரன் கோயில் சைவ வரலாற்றில் முக்கியமான நாள் ஆகும். அன்று தொடங்கிப் பிள்ளை மூன்று மாதகாலம் சிவஞானசித்தியார் பாடம் நடத்தினார். சித்தியார் பாடங்கேட்ட அன்பர்கள் அப்பணி தொடர்ந்து நடை பெற பிள்ளையின் ஆணைப்படி *1952*-இல் சைவ சித்தாந்த சபை தொடங்கினர். பிள்ளை தம்மை முழுமையாகச் சபைப் பணிகளில் ஈடுபடுத்திக் கொண்டார். பதினான்கு சாத்திரங்களையும் பாடம் சொன்னார்கள். சபையின் சார்பில் ஒன்பது சைவ நூல்களை வெளியிட்டார். இக்கால கட்டத்தில்தான் ச. இரத்ன வேலன், மா. பட்டமுத்து, ஆவுடையப்பன் முதலியோர் பிள்ளையிடம் பாடம் கேட்டுப் பிற்றைநாளில் அவர்களே பாடம் சொல்லும் ஆற்றல் பெற்றனர்.

1957-ஆம் ஆண்டில் பிள்ளையின் பணி நெல்லையில் தொடங் கியது. அங்குச் சித்தாந்த சைவச் செந் நெறிக்கழகம் நிறுவி பிள்ளை சித்தாந்த பாடம் சொல்லிவந்தார். நெல்லையில் பிள்ளை பதினான்கு சாத்திரங்களும் முறையாகப் பாடம் சொன்னார். நெல்லை அன்பர்கள் மூலம் *11* நூல்கள் எழுதி வெளியிட்டார்.

1963 முதல் *12* ஆண்டுகள் ''சமய சாதனம்'' என்ற மாத இதழினைப் பிள்ளை நடத்திவந்தார்.

பிள்ளை இயற்றிய நூல்கள் வருமாறு : *1)* திருவருட்பயன், கொடிக் கவி (பதவுரை கருத்துரை - *1926. 2)* போற்றிப்பஃறொடை, வினாவெண்பா (பதவுரை, கருத்துரை) *1928. 3)* சமணர் கழுவேற்றல். *1929. 4)* இருபாஇருபஃது (பதவுரை, கருத்துரைகள் - *1934) 5)* சுலோக பஞ்சக விஷயங்கள் *1938, 6)* உண்மை நெறிவிளக்கம் (புத்துரை) *1939, 7)* பொதுமொழி *(1939), 8)* சிவபரத்துவ நிச்சயம் (செய்யுள் - பிரமாண சகிதம்) *1940*கள், *9)* சுயமரியாதை இயக்கச் சூறாவளி - *1946, 10)* பேரூர் முருகன்

பதிற்றுப்பத்தந்தாதி (செய்யுள்) - 1948, 11) சைவாலயங்களில் சமஸ்கிருத மந்திரங்களே வேண்டும், 12) அம்பலவாணரின் ஆனந்த நடனம், 13) சைவ வைணவப்பாவைகள் (ஆராய்ச்சி), 14) சங்கரநயினார் கோயில், 15) அந்தம் ஆதி, 16) கற்பு எனும் திண்மை, 17) சிவ சிவ, 18) நாடும் நவீனமும், 19) சைவ சமயிகளுக்கு ஒரு நல்லுரை, 20) குரு பூஜை, 21) நான், 22) கொடிக்கவி - விளக்கவுரையுடன், 23) திருக்குறள் பொது நூல், 24) சிவராத்திரி, நவராத்திரி, ஏகாதசி விரதங்கள், 25) உண்மை விளக்கம் - புத்துரை, 26) நம; பார்வதி பதயே, 27) உண்மைநெறிவிளக்கம் - விளக்க உரையுடன், 28) திருக் கல்யாணம்.

''சுயமரியாதை இயக்கச் சூறாவளி'' என்ற நூல் சாக்ரடீஸ் பாணியில் கேள்வி - பதில் வடிவத்தில் அமைந்தது. ''சிவ சிவ'' சிவஞானபோதம் இரண்டாம் சூத்திர விளக்கம் ஆகும். ''நான்'' மூன்றாம் சூத்திர விளக்கம் ஆகும். ''அத்வைதம்'' சங்கரரை மறுத்து சைவ சித்தாந்தமே உண்மையான அத்துவிதம் என்று நிறுவும் நூல் ஆகும். ''கருங்குழிப் பிள்ளை பாடல் ஆராய்ச்சி'', 'சைவர் களே உஷார்'' - ஆகிய இரு நூல்களும் வள்ளலாரை மறுக்கும் நூல்கள் ஆகும்.

''சைவாலயங்களில் சமஸ்கிருத மந்திரங்களே வேண்டும்'' என்ற நூலின் தலைப்பே அதன் உட்பொருளை விளக்கி நிற்கின்றது. இந்த நூலின் பதிப்புரையே ஒரு வரலாற்று ஆய்வாக மிளிர்கிறது. 1971-இல் தமிழக அரசு தமிழ் அருச்சனையை ஆலயங்களில் நிகழ்த்த ஆணை நிறைவேற்றியதிலிருந்து படிப் படியாக நடந்த நிகழ்ச்சிகளைப் பதிப்புரை பதிவு செய்கிறது. தமிழ் அர்ச்சனையை ஆதரித்து ஆய்வறிஞர் மு. அருணாசலம் ''சித்தாந்தம்'' இதழில் முன்வைத்த ஏழு கருத்துகளையும் பதிப்புரை ஒவ்வொன்றாக மறுக்கிறது. நூலிலும் பிள்ளை சமஸ்கிருத மந்திரங்களை ஆதரித்துத் தருக்க ரீதியாகச் சான்றுகளுடன் நிறுவுகிறார்.

இவையல்லாமல் ''தமிழ்ச்சிவஞான போதம் மொழிபெயர்ப்புநூலே; முதல் நூலன்று'' என்ற நூலையும் பிள்ளை வெளியிட்டிருக்கின்றார் இவ்விரண்டு கருத்துகளும் இன்றளவும் சங்கரன் கோயில் சைவப்பெரு மக்களிடம் ஆழப்பதிந்து விட்டன.

பிள்ளை பற்றி அவர்களோடு நெருங்கிய தொடர்பு கொண்ட வரும் சீடருமான தி. சங்கர பாண்டிய முதலியார் பின்வருமாறு கூறுகிறார். ''தமிழ்ச் சைவ உலகம் அவரால் பெற்றது கணிசமான நூற்களஞ்சியம். நன்றியுள்ள சைவ மாணவன் ஒருவனுக்கு ஆக்கிய சாஸ்திர உரைகள் ஒப்புயவர்வற்ற வரப் பிரசாதமாம். பிற உரை நடைநூல் ஐயமறுத்துத் தெளிவூட்டும் அமிர்தம் அன்னவை. அவர் பணக்கவலையோ, மனக்கவலையோ இல்லாத ஒரு பிரபு வீட்டில் தோன்ற வில்லை. சாதாரணப் புலவர் தான் அவருடைய தந்தையார். ஆயினும் நடுத்தரக் குடும்பங்களில் காணப்படும் கவலைகள், துன்பங்கள் யாவும் முழுக்கவுடையதே அவர்கள் குடும்பமும். ஆயினும் அவற்றிற் கிடையே அவர் ஆற்றிய சமயசேவை அளப்பரிது. பலர் குடும்ப நிலையைச் சொல்லிச் சமய சேவையில் வழுவி, நழுவி விடுவதைப் பார்க்கிறோம். ஆனால் ஆசிரியர் நழுவவோ, வழுவவோ செய்யாது தம் கடமையை மிகச் செவ்வனே செய்ததை நினைத்துப் பார்க்கும்பொழுது எம்மனோரால் அதிசயிக்காமல் இருக்க முடியவில்லை''.

19-10-1971-ஆம் ஆண்டு தென்காசியில் தம்மகள் இல்லத்தில் ஈசுரமூர்த்திப் பிள்ளை உயிர் நீத்தார்கள்.

(தோற்றம் - 12-3-1897; மறைவு - 19-10-1971; பெற்றோர் - த. ஆறுமுக நயினார்பிள்ளை, ஈசுரவடிவு அம்மையார்; பிறந்த ஊர் - பேட்டை

என்னும் திருமங்கை நகர், திருநெல் வேலி)

சாத்திரக்கல்வியை வாழ்வில் நடத்திக் காட்டியவர்



ஈசுரமூர்த்திப்பிள்ளையின் தலைமைச் சீடர் இரத்னவேலன் ஆவார். 1952-ஆம் ஆண்டு ஈசுரமூர்த்திப்பிள்ளை சைவ சித்தாந்த சபைதோற்றுவித்த காலம் முதல் அவரின் கீழ் முதல் மாணவனாகச் சைவம் பயின்றார். ஈசுரமூர்த்திப்பிள்ளை யிடம் குருகுலக் கல்வியாகவே இரத்ன வேலன் கற்றார்.

1966-ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து சங்கரன்கோயில், திருநெல்வேலி, கோயில்பட்டி, விக்கிரமசிங்கபுரம், கழுகுமலை ஆகிய இடங்களில் சாத்திரங் களையும் புராணங்களையும் இரத்ன வேலன் தொடர்ந்து பயிற்றுவித்து வந்தார். குறிப்பாகத் திருநெல் வேலியில் 14 சாத்திரங்களையும் முறை யாகப் பாடம் நடத்தி முடித்துள்ளார். இருபதுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியும் பதிப்பித்தும் வெளியிட்டு உள்ளார்.

''எத்தகைய துன்பம் வரினும் புன்னகையுடன் ஏற்றுக்கொண்டு சாதாரணமாகக் காட்சியளிக்க எப்படி முடிகின்றது?'' என்று அவரைக் கேட்டால் ''பிராரத்த கன்மவினை'' பற்றி ஒரு சொற்பொழிவே செய்துவிடுவார். படித்த சாத்திரக் கல்வியைத் தன் வாழ்வில் நடத்திக் காட்டியவர்.

''தமிழ்ச் சிவஞான போதம் மொழி பெயர்ப்பே'' என்ற நூலைத் தொகுத்து இரத்னவேலன் வெளியிட்டார். அந் நூலின் பதிப்புரையே ஒரு வரலாற்று ஆய்வாக அமைந்துள்ளது. ''சிவஞான போதம் முதல் நூலே'' என்ற கருத்தை முதலில் வைத்தவர் மனோன்மணீயம் ப. சுந்தரம் பிள்ளையாவார். இதனைப் பரப்பியவர்கள் கா. சுப்பிரமணிய பிள்ளையும், மறைமலையடிகளும் ஆவர். இவர்களைப் பின்பற்றி 1949-இல் சைவ சித்தாந்த மகாசமாஜத் தலைவர் மா. பாலசுப்பிரமணிய முதலியாரால் 'சிவ ஞானபோதம் தமிழ் முதல் நூலே மொழி பெயர்ப்பல்ல - 120 காரணங்கள்' என்ற நூலை வெளி யிட்டார்.''

''சிவஞானபோதம் மொழி பெயர்ப்பே'' என்று 29-8-1941 தரும புரத்தில் நடைபெற்ற ஸ்ரீ மெய்கண்டார் சித்தாந்த மாநாட்டில் ஈசான சிவாசாரிய சுவாமிகள் தலைமையுரை நிகழ்த்தியும் நூலாக வெளியிட்டும், அச்சுவேலி குமாரசாமிக்குருக்கள், ஜெ.எம். நல்ல சாமிப்பிள்ளை, சபாரத்தின முதலியார் ஆகியோரால் எழுதப்பட்டும் நிறுவப் பட்டது. ஈசுரமூர்த்திப் பிள்ளை மா.பா. நூலுக்கு மறுப்பாக ''தமிழ்ச் சிவஞானபோதம் மொழிபெயர்ப்பே; முதல் நூலன்று'' என்று ''சமயசாதனம்'' இதழில் எழுதி வந்தார். இவை தவிர 1915 முதல் 1965 வரை மா. சாம்பசிவம் பிள்ளை, பொ. முத்தையாபிள்ளை, வி. சிதம்பர ராமலிங்கபிள்ளை, சுவாமிநாத பண்டிதர், சபாபதி நாவலர் இதே கருத்தை வலியுறுத்தினர்.

இவ்வாறு அப்பதிப்புரை செல் கின்றது. இவ்வாறு பல்லாற்றானும் பணியாற்றிய இரத்னவேலனார் சிவபதம் அடைவதற்கு முதல்நாள்,

''தாடலைபோற் கூடியவை தான்நிகழா வேற்றின்பக்
கூடலை நீ ஏகம் எனக் கொள்''

என்ற திருவருட்பயன் பாடலை நடத்தினார். இப்பாடல் உயிர் இறைவனிடம் அத்துவிதமாகக் கலந்து இன்புறும் நிலையைக் கூறுகிறது. அதேபோல் மறுநாள் இரத்னவேலனார் இறைவன் திருவடியில் அத்துவிதமாகக் கலந்து விட்டார்.

(தோற்றம் - 13-6-1935; மறைவு - 26-10-2001. பெற்றோர் - சண்முகம் செட்டியார், முத்துராக்கம்மாள், பிறந்த ஊர் - சங்கரன் கோயில்)

சைவத்தைப் பரப்பும் கணித ஆசிரியர்

சங்கரன்கோயிலில் வடக்குரத வீதியில் 276-ஆம் எண்ணுள்ள இல்லம், ''நிலை பெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீவா'' என்று மெலிதான பெண்குரல் கேட்டது. நெஞ்சுருகி நானும், எனது மனைவியும் உள்ளே சென்றோம். பாடியவள் எட்டே வயது நிரம்பிய பெண்குழந்தை. யோகஸ்ரீ என்ற பெயரினள். அவளது தாத்தா பட்டமுத்து அவர்களுடன் பேசிக் கொண்டிருந்த இரண்டு மணிநேரமும் அந்தப் பாடலை அந்தக் குழந்தை நடுவில் நடுவில் இசைத்துக் கொண்டு இருந்தாள். குழந்தைகள் எல்லாம் திரைப் படப்பாடல்களைப் பாடிக் கொண்டு இருக்கும் இந்நாளில் இப்படியோர் அற்புதக் குழந்தையா? இன்னும் 40 பாடல்களைப் பாடு வாளாம். இப்படி அந்தக் குழந்தையைப் பயிற்றுவித்தவர் அக்குழந்தையின் தாத்தா பட்டமுத்து ஆவார்.

பேத்தியையே இவ்வாறு பயிற்றுவித்தவர் தான் வாழும் ஊர் மக்களுக்குப் போதிக்காமல் இருப்பாரா? கோமதி மாதர் சங்கம், திருமந்திர வழிபாட்டு மன்றம், திருநாவுக்கரசு சுவாமிகள் உழவாரக்குழு ஆகிய அமைப்புகளில் வாரந்தோறும் புராணங்களும், சாத்திரங்களும் முறையாகப் பாடல், பாடலாக பாடம் சொல்லி வருகின்றார். எந்த மங்கல நிகழ்ச்சியானாலும் ஒரு சைவ நூலை வெளியிட்டு விடுகின்றார். 40க்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டுள்ளார். தன்னுடைய ஆசிரியர் ஈசுரமூர்த்திப் பிள்ளையின் அனைத்து நூல்களையும் சி.டி.யில் ஏற்றி நிரந்தர வைப்பாகச் செய்து விட்டதாகப் பெருமை பொங்கக் கூறினார். என்ன ஒரு குருபக்தி! தமிழிலும், சைவத்திலும் இப்படி உழைத்திருக்கிறாரே! இவர் தமிழ் ஆசிரியரா என்றால் அதுதான் இல்லை. இவர் ஒரு கணித ஆசிரியர்! *(தோற்றம் - 15-9-1939; பிறந்த ஊர் - சங்கரன்கோயில்; பெற்றோர் - மாணிக்க வாசகஞ்செட்டியார், குருவம்மாள்)*

வாழையடி வாழையென வந்த சைவக் கன்று



அதே வடக்கு வீதி; சற்று மேற்கே 10, 15 வீடுகள் தள்ளிச் சென்றால் ஒரு வீட்டின் வாசலில் ''பூம்பாவை'' என்று பெயரிட்டிருந்தது. மகிழ்ச்சி பொங்க உள்ளே சென்றால் இரண்டு துவார பாலகர்கள் எங்களை வரவேற்றனர். நின்ற வண்ணத்தில் அல்ல. நுழை வாயிலில் இரண்டு சுவர்களுக்கும் மேல் உள்ள இரண்டு பரண்களில் ஒரு பரணில் ஏணி; மற்றொரு பரணில் மண்வெட்டி, சட்டி முதலான உழவாரத்திற்குத் தேவைப்படும் பொருள்கள்.

வீட்டின் உரிமையாளர் ஆவுடையப்பன் அவர்களிடம் ''இவையெல்லாம்

என்ன?'' என்று கேட்டால் தங்கள் சபை நடத்தும் அப்பர் சுவாமிகள் உழவாரப் பணிமன்றம் பற்றிக் கூற ஆரம்பித்து விட்டார். உள்ளேயிருந்து ஒரு பதி வேட்டை முன்னே கொண்டு வந்து போட்டார். 147 புரவலர்களின் முகவரி கள் அதில் இருந்தன. ஒவ்வொருவர் பெயருக்குமுன்னால் மாத நன்கொடை ரூ. 100, ரூ. 200 என்று இருந்தது. ரூ. 25,000/- என்று ஒரு அமெரிக்க அன்பரின் பெயரில் வரவு வைக்கப்பட்டிருந்தது. எங்களுக்கு மலைப்பு தீரவில்லை.

அப்பர் சுவாமிகள் உழவாரப்பணி மன்றம் நலிந்த கோயில்களுக்குச் சென்று மாதம் தோறும் 200 முதல் 250 உறுப்பினர்களை அழைத்துக் கொண்டு உழவாரப்பணி செய்கிறது ஒவ்வொரு மாதமும் ரூ. 7000/- வரை செலவாகிறது.

ஆவுடையப்பன் பணி அத்தோடு நிற்கவில்லை. இரத்னவேலனார் மறைந்த பிறகு (2001க்குப்பிறகு) சைவ சித்தாந்த சபையில் இவர் பெரிய புராணம், சிவஞான சித்தியார் வகுப்பு நடத்தி வருகிறார். ஆத்தியடி விநாயகர் வழிபாட்டு மன்றத்திலும் இவர் சைவ சொற்பொழிவுகள் நிகழ்த்தி வருகின்றார்.

சங்கரன் கோயில் சைவ சித்தாந்த சபையின் செயலராகத் தற்பொழுது பணியாற்றி வருகின்றார். ஈசுரமூர்த்திப் பிள்ளை - இரத்னவேலர் - பட்டமுத்து; ஆவுடையப்பன் என்று வாழையடி வாழையாகக் குரு சீட பரம்பரை தொடர்கிறது. (தோற்றம் - 21-12-1952, பிறந்த ஊர் - சங்கரன் கோயில் பெற்றோர்கள் - ச. ராமலிங்க முதலியார்).

திருத்தொண்டர்

1) சங்கரேஸ்வரி மெஸ் வைத்து இருக்கும் கண்ணன் (1978) திருக்கோயில் துணிகள் அனைத்தையும் ஊதியம் பெறாமல் துவைத்துக் கொடுத்து வருகின்றார். 2) தனுர் மாத பஜனைக் குழுத்தலைவர் தருமலிங்கம் ஆன்மார்த்த மாகத் தேவாரம் பாடக்கூடிய 10 மாணவர்களை உருவாக்கி மார்கழி மாதம் 30 நாளும் பாடிவருகின்றார்.

சைவ சித்தாந்த சபை

1948-இல் ஆ. ஈசுரமூர்த்திப்பிள்ளை யவர்கள் உருத்திரமேரூரிலிருந்து சங்கரன் கோயிலுக்கு மாறுதல் பெற்று ஆசிரியராகப் பணியாற்ற வந்தார். அன்று தொடங்கி இந்நாள்வரை சைவச் சிந்தனை சங்கரன் கோயிலில் இடையறவு படாது தொடர்ந்து நிகழ்ந்து கொண்டிருக்கின்றது. 8-3-1950 முதல் சங்கரன் கோயில் சைவப்பெருமக்கள் மூன்றுமாத காலம் நாள்தோறும் சிவஞான சித்தியாரை இவ்வாசிரியரிடம் பாடம் கேட்டனர். 4-8-1952 அன்று சைவப்பெருமக்கள் ஒருங்கு திரண்டு சைவசித்தாந்த சபையை நிறுவினர். சி.ப.ப. முத்துசாமி செட்டியார் தலைவராகப் பொறுப்பேற்றார்.

1971-இல் திரு.என்.கே.எஸ். இராஜ கோபால் தலைவர் பொறுப் பேற்றார். இவர் காலத்தில்தான் சபையின் வெள்ளிவிழா 1977-ஆம் ஆண்டு அக்டோபர் 28,29,30,31 நாட்களில் நடை பெற்றது. இராஜகோபால் சித்தாந்தப் பாடம் கேட்டவர். ஆயிரத் துக்கும் மேற்பட்ட சைவ நூல்களைப் பேணி வந்தவர். சபை வெளியிட்ட நூல்களுக்குப் பொருளுதவி தந்தவர். 18-7-1927-இல் பிறந்த இராஜ கோபால் அவர்கள் 25-12-1983 அன்று இறைவனடி சேர்ந்தார். அவருக்குப் பின் அவரது மகனார் எஸ்.ஆர். பசுபதி அவர் தலைவர் ஆனார். தற்போதைய தலைவர் எம்.ஏ.பி. திருமலைவேலு.

ஞாயிறுதோறும் வாராந்தரக்கூட்டங் கள் நடத்துதல் சபையின் முக்கியப் பணியாகும். 1971-ஆம் ஆண்டு வரை ஆ. ஈசுரமூர்த்திப்பிள்ளை பாடம் நடத்தி வந்தார். அவருக்குப்பின் ச. இரத்ன வேலன் 2001 வரை பாடம் நடத்தி வந்தார். அவர் மறைவிற்கு பின் இரா.



N.K.S. இராஜகோபால் முதலியார், தலைவர்

ஆவுடையப்பன் பாடம் நடத்தி வருகிறார். சபையில் விநாயகர் புராணம், பெரியபுராணம், திருவிளை யாடற் புராணம், கோயிற்புராணம், கந்த புராணம், திருக்குற்றாலத் தலபுராணம், திருத்தணிகைப்புராணம், பிரமோத்திர காண்டம் போன்ற நூல்கள் ஒரு செய்யுள் விடுதலின்றிப் பாடம் சொல்லப் பட்டுள்ளது. தற்பொழுது சிவஞான சித்தியார் பாடம் சொல்லப்பட்டு வருகின்றது.

ஆண்டுதோறும் விழா எடுத்துத் தமிழகத்தில் உள்ள சைவ நல்லறிஞர் களை அழைத்துப் பேச வைத்து உள்ளார். 1977-இல் வெள்ளி விழாவும், 2003-இல் பொன்விழாவும் மிகச் சிறப்பாக நடைபெற்றன. 2003, பிப்ரவரி 24,25,26 நாட்களில் நடைபெற்ற பொன் விழாவில் வேத சிவாகம திருமுறைக் கருத்தரங்கம் நடைபெற்றது.

சைவ உண்மைகளை விளக்கும் துண்டுப்பிரசுரங்கள், நூல்கள் என 53 வெளியீடுகள் வெளியிட்டுள்ளனர். இவற்றுள் சாத்திர நூல்களும் இடம் பெற்றுள்ளன.

மாணவர்களுக்குத் தேவாரப்பாடம் கற்பிக்கப்பட்டு வருகின்றது.

கோமதி அம்பிகை மாதர் சங்கம்

இம்மன்றம் 28 ஆண்டுகளுக்கு முன் தோற்றுவிக்கப்பெற்றது. சிவ தீக்கை ஏற்பாடு செய்தல், சொற்பொழிவு, திருமுறை வகுப்பு நடத்துதல், உழவாரத் திருப்பணி செய்தல் (75 கோயில்கள்) ஆகியன இவ்வமைப்பின் பணிகள் ஆகும். திங்கள் தோறும் பட்டமுத்து பெரியபுராணம், திருவிளையாடற் புராணம், கந்தபுராணம், திருக்களிற்றுப் படியார், திருக்குற்றாலத் தலபுராணம், விநாயக புராணம், காஞ்சிப் புராணம் ஆகிய இலக்கியங் களுக்கு விளக்கம் கூறி வருகின்றார்கள். சிறுசிறு வெளியீடு களாக 39 நூல்கள் வெளியிட்டுள்ளனர். தலைவர் - பாலம்மாள் சங்கர நாராயணன்; செயலர் - வசந்தா பட்டமுத்து.

திருமந்திர வழிபாட்டு மன்றம்

பனிரெண்டு ஆண்டுகளாக நடை பெற்று வருகின்றது. வாரந்தோறும் ஒரு திரு மந்திரமாகத் தற்சமயம் 348-ஆம் பாடல் நடத்தப்பெற்றுள்ளது (ஆகஸ்டு 2004) சனிக்கிழமை தோறும் சாத்திர வகுப்பு நடத்தப்படுகின்றது. இதுவரை கொடிக் கவி, உண்மை விளக்கம், திருவருட் பயன், உண்மைநெறிவிளக்கம் நடத்தப் பெற்றுள்ளன. தற்சமயம் போற்றிப் பஃறொடை நடத்தப்படு கின்றது. உரை நிகழ்த்துபவர் - பட்ட முத்து அவர்கள். சிறுசிறு வெளியீடு களாக 39 நூல்களை மன்றத்தார் வெளியிட்டுள்ளனர். தலைவர் - ஜகந்நாத ராஜா.

திருநாவுக்கரசு சுவாமிகள் உழவாரக்குழு - விக்கிரமசிங்கபுரம்.

இவ்வமைப்பின் ஆதரவில் பட்ட முத்து வாரந்தோறும் சைவ இலக்கியச் சிந்தனை நிகழ்த்தி வருகின்றார். பெரிய புராணம், திரு விளையாடற்புராணம் நிறைவு செய்து தற்பொழுது விநாயக புராணம் பற்றி ஆசிரியர் சொற்பொழிவு ஆற்றி வருகிறார். சிறு நூல்களாக இவ்வமைப் பினர் வெளியிட்டு வருகின்றனர். தலைவர் - என். செல்லையா.

விநாயக புராணம்

மேலே குறிப்பிடப்பட்டுள்ள மூன்று அமைப்புகளும் இணைந்து 22-1-2000 -இல் ''விநாயகபுராணம் இரண்டு தொகுதிகளாக வெளியிட்டுள்ளன.

1) விநாயக புராணம் (உபாசனா காண்டம்); பக்கங்கள் 368 விலை ரூ. 50.

2) விநாயகபுராணம் (லீலா காண்டம்) பக்கங்கள் - 368.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் அடியார் குழாம், கரிவலம் வந்த நல்லூர்

இவ்வமைப்பு 1997-இல் தொடங்கப் பெற்றது. இந்நான்கு அமைப்பு களுடனும் அமைப்பாளர் என்ற முறை யில் தொடர்பு உடையவர் பட்டமுத்து ஆவார். இவ்வமைப்பின் பணிகள்; உழவாரப் பணி, நூல்கள் வெளியிடுதல். தலைவர் - பாலமுருகன் சிவாச்சாரியார்.

ஆத்தியடி விநாயகர் வார வழிபாட்டுக்குழு, சங்கரன் கோயில்

1980-இல் மு. பழனிவேல் முதலியா ரால் தோற்றுவிக்கப்பெற்ற இவ்வமைப் பில் வார வழிபாட்டுடன் 1997 முதல் பெரியபுராணம் (3 ஆண்டுகள்) திரு விளையாடற்புராணம் (2 ஆண்டுகள்) தலபுராணங்கள் நடத்தப் பெறுகின்றன. 500க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொள்கிறார்கள்.

[துணைக்குறிப்புகள் : பட்டமுத்து நேர்காணல்; ஆவுடையப்பன் நேர் காணல்; சைவ சித்தாந்த சபை பொன் விழா மலர், நெஞ்சு விடுதூது, சைவ ஆலயங்களில் சமஸ் கிருத மந்திரங்களே வேண்டும். தமிழ்ச் சிவஞானபோதம் மொழி பெயர்ப்பே, விநாயக புராணம் (இரண்டு தொகுதிகள்) மற்றும் பட்டமுத்து, ஆவுடையப்பன் வழங்கிய 16 நூல்கள்]

67. கழுகுமலை

கழுகு மலைச்சிற்பங்கள் அதி அற்புத மானவை. பாதியிலே நின்று போனவை. முழுமை அடைந்திருந்தால் தென்னாட்டு எல்லோராவாகப் புகழ் பெற்றிருக்கும். நல்ல வெயில்; குன்றின் மேல் ஏறி போக வேண்டும். நல்ல வேளை! ஒரு சிறுவன் வந்து உதவி செய்தான். சிற்பங்கள் உள்ள பகுதியைப் பூட்டியிருந்தார்கள். பின் புறம் ஒரு கம்பி வேலி இருந்தது. அதனை வளைத்துக் குனிந்து சிரமப் பட்டு உள்ளே சென்றோம். நன்றாக மூச்சு வாங்கியது. இருந்தாலும் பார்க்க வேண்டிய இடம்.

குற்றாலநாதர் வீற்றிருக்கும் திருக் குற்றாலத்திலேயே சைவ அமைப்புகள் பற்றிய செய்திகள் கிடைக்காத நிலையில் சமணர்கள் சிற்பங்கள் செதுக்கிய கழுகு மலையில் என்ன கிடைக்கப் போகிறது என்று சற்று கவனக்குறைவாகத்தான் கழுகாசலமூர்த்தி திருக்கோயிலுக்குள் நுழைந்தேன். கோயிலுக்குள் அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசைக்குழு என்ற பெரிய பலகை தொங்கிக் கொண் டிருந்தது. கோயிலில் உள்ளவர்களிடம் அக்குழுபற்றி விசாரித்து, அக்குழுவின் செயலர் கணபதி குடியிருக்கும் சந்தினை நோக்கி விரைந்தேன். எங்கே எது கிடைக்கும் என்பது நம் கையில் இல்லை.

கணபதி *(8-11-1941; சுப்பிரமணியப் பிள்ளை - கோமதி அம்மாள் ஓய்வு பெற்ற ஆசிரியர்; கழுகுமலை.)* அன்போடு வரவேற்றார். கணபதி 20 ஆண்டு காலமாகப் பெரிய புராணச் சொற்பொழிவு நிகழ்த்தி வருகிறார். ஒவ்வொரு மாதமும் இல்லங்களில் திருமுறை முற்றோதல் நடத்துகிறார். 1984-இல் தொடங்கப்பட்ட அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசைக் குழுவின் செயலராக இருக்கிறார். இக்குழு நாயன்மார் குருபூசையும், ஆண்டு விழாவும் நடத்தி வருகின்றது. (தலைவர் - திரு.எஸ்.திருவாசகம்)

கழுகுமலையில் அப்பரடிகள் உழவாரப்பணிக்குழு பத்து ஆண்டுகளாக மாதந்தோறும் உழவாரப்பணி செய்து வருகிறது. தலைவர்-ச. முத்துசாமி; செயலர் - க. முருகன்.

கழுகுமலையில் ஒரு முருக நாயனார் இருக்கின்றார். குருசாமிசிவா என்று பெயர்; வயது 40. அறுபத்துமூன்று நாயன்மார் குருபூஜை நடக்கும் பொழுதெல்லாம் குருபூஜைக்குத் தேவையான மலர்கள் கொடுத்து உதவுகிறார்.


திருமுறை முற்றோதல், அறுபத்து மூவர் குருபூஜை, உழவாரப்பணி, பூக் கைங்கர்யம் - எனக் கழுகுமலையிலும் நெல்லைச் சிவமணம் கமழ்கிறது.

68. சிவகாசி

திருமுறைகள் பண்முறையில் பதிப்பிக்கப்பெற்றுள்ளன; தலமுறையில் பதிப்பிக்கப்பெற்றுள்ளன. ஆனால் வரலாற்று முறையில் ஏழு திருமுறைகளும் ஒருசேரப் பதிப்பிக்கப்படவில்லை. அப்பர் தேவாரத்தை வரலாற்று முறையில் பதிப்பித்துப் பூம்புகார் கலைக்கல்லூரி (மேலையூர் 609107) வெளியிட்டது. ஏழாம் திருமுறையை வரலாற்று முறையில் சைவசித்தாந்தப் பெருமன்றம் பதிப்பித்துள்ளது. ஏழு திருமுறைகளையும் சிவகாசி சிவனடியார் அறநெறிக் கழகம் ஒரு சேர வரலாற்று முறையில் பதிப்பித்து வெளியிட்டுள்ளது. திருஞானசம்பந்தர் தேவாரம் (பக்கங்கள் 936; விலை ரூ. 200) 2001-ஆம் ஆண்டிலும், திருநாவுக்கரசர் தேவாரம் (பக்கங்கள் 697; விலை ரூ. 200) 2003-ஆம் ஆண்டிலும், சுந்தரர் தேவாரம் (பக்கங்கள் - 310; விலை ரூ. 130) 2004-ஆம் ஆண்டிலும் வெளிவந்தன. இவற்றின் பதிப்பாசிரியர் முனைவர் கு. சுந்தரமூர்த்தி ஆவார்.

இம்மூன்று நூல்களும் வெளிவரப் பெரிதும் உதவியவர் சிவனடியார் அறநெறிக்கழக அமைப்பாளர் டாக்டர் ஜெயராஜ், அவர்களது துணைவியார் ஜெ. கௌரிதேவி ஆவர். திருஞான சம்பந்தர் தேவாரம் வெளியிட திரு.ஏ.எம்.எஸ். அரசன் கணேசனும், திருநாவுக்கரசர் தேவாரம் வெளியிட திரு. டி.டி.ராஜேந்திரனும், சுந்தரர் தேவாரம் வெளியிட திரு. டி.டி. ராஜேந்திரனும் பெரும் தொகை கொடுத்து உதவியிருக்கின்றார்கள்.

கால காலத்திற்கும் பெயர் சொல்லக் கூடிய தேவார வரலாற்றுப் பதிப்பை வெளியிட்ட சிவனடியார் அறநெறிக் கழகம் 1998-இல் டாக்டர் ஜெயராஜ் அவர்களால் தொடங்கப்பெற்றது. ஒவ்வொரு மாதமும் பன்னிருதிருமுறை முற்றோதல், சித்தாந்த வகுப்பு, திருக்குறள் வகுப்பு, குமரகுருபரர் பிரபந்தங்கள் முற்றோதல் என முனைவர் கு. சுந்தர மூர்த்தியைக் கொண்டு செம்மையாக நடத்தி வருகின்றார்கள். ஒவ்வொரு தமிழ் மாதப்பிறப்பின் பொழுதும் நால்வர் வழிபாடு, திருக்கோயில் நடராஜப் பெருமானுக்கு ஆறு அபிஷேகம் நிகழ்த்துகின்றனர். சிவகாசி சிவன் கோயிலுக்குக் காரைக்காலம்மையார் திருமேனியும், நால்வர் திருவுருவச்சிலைகளும் ஒப்படைத்து உள்ளனர். தலயாத்திரை, சிறுநூல்கள் வெளியீடு ஆகியவை இக்கழகத்தின் பிற பணிகள் ஆகும்.



இக்கழகத்தின் அமைப்பாளர் டாக்டர் ஜெயராஜ் 6-5-1952-ஆம் ஆண்டில் எஸ். கிருஷ்ணசாமி, ராமுத்தாய் அம்மாள் ஆகியோருக்குப் பிறந்தார். நூல் வெளியிட பெரும் தொகை கொடுத்த திரு.டி.டி. ராஜேந்திரன் 1944-ஆம்



ஆண்டில் கே.பி.ஏ.டி. தர்மராஜ் நாடார் - ரோஜாப்பூத்தாயம்மாள் ஆகியோருக்கு மகவாய்ப் பிறந்தார். திரு. ராஜேந்திரன் திருமுறை முற்றோதல் நிகழ்ச்சியை ஏற்றுப் போற்றுதல், திருக்கோயிலுக்குச் சிவகாமியம்மை உடனாய அழகிய திருச்சிற்றம் பலமுடையார் ஐம்பொன் திருமேனிகளை உபயமாக வழங்குதல், அப் பெருமான் திருமேனிகளுக்குத் திரு வாதிரைத் திருநாளில் திருமுழுக்கு வழிபாட்டினைச் செய்தல், விசாலாட்சி அம்மனுக்குத் தங்க அங்கியும், வைரத்தில் அபயகரமும் தருதல் - ஆகிய சிவப்பணிகளைச் செய்து வருகிறார்.

69. ஸ்ரீ வில்லிபுத்தூர்

பன்னிரு திருமுறை வழிபாட்டு மன்றம்

இம்மன்றம் பன்னிரு திருமுறை வழி பாட்டு மன்றம் சிவனடியார் திருக்கூட் டம் என்ற பெயரில் பதினோரு ஆண்டு களாகச் (2006) செயல்பட்டு வருகின்றது. தமிழ்வழி வழிபாடு என்பதில் முனைப் பாக உள்ளது. தலைவர் - வி.பி.எம். சங்கர்; செயலாளர் - எஸ்.எம். இராம கிருட்டிணன்; மாவட்ட ஒருங்கிணைப் பாளர் - வெ. மோகனசுந்தரம்.

■■■

சைவ மன்றங்களின் முகவரிகள்

1. சிதம்பரம்

1. முனைவர். அ.சொ. சுப்பையா
23/51,2-ஆம் தளம்,
திருப்பட்டன் தெரு,
சிதம்பரம்.
608001.

2. இராம. ஆதிமூலம்
தலைவர், தமிழ்ப்பேரவை
எண். 23, மேலவீதி
சிதம்பரம்- 608001
(04144) 222362

3. தில்லை திருமுறைக்கழகம்
16எ. திருவள்ளுவர் தெரு,
சிதம்பரம்.
608001.
தலைவர் - ச. சுந்தரேசம்பிள்ளை
(தொ.பேசி) 232543.

4. எம். ராமலிங்கம் செட்டியார்
ஸ்ரீமுருகன் ஜுவல்லரி,
30/50, காசுக்கடைத்தெரு,
சிதம்பரம் 608001.
கடை : 222237; வீடு - 222037

5. கரந்தை ஜெயகாந்தம் துரைக்கண்ணு,
சேக்கிழார் விழா அறக்கட்டளை,
16, ஞானப்பிரகாசர் வடக்குத்தெரு,
கனகசபை நகர்,
சிதம்பரம் - 608001.

6. எஸ். திருநாவுக்கரசு பிள்ளை
கனகசபைநகர்
சிதம்பரம்

7. சுவாமிநாதன்
தெற்கு வீதி
சிதம்பரம்

■■■

2. குறிஞ்சிப்பாடி

1. பி.எம். முத்துக்குமரசாமி முதலியார்
தெய்வத்தமிழ்மன்றம்
குறிஞ்சிப்பாடி - 607302.

2. வி.டி. பிரதாபன்
சிவனடியார் திருக்கூட்டம்,
7/30, ரெட்டித்தெரு,
குறிஞ்சிப்பாடி.
போன் : 258517.

3. சி. முருகவேல்
தவத்திரு கோலசாமிகள்
திருக்கோயில்
குறிஞ்சிப்பாடி.
போன் : 395231.

■■■

3. பண்ணுருட்டி

1. வை. ஆறுமுகம்,
திருவதிகை திருநாவுக்கரசு
திருத்தொண்டர்கள்
இறைபணிமன்றம்,
12/1, பொன்னுசாமி முதலியார் தெரு,
பண்ணுருட்டி - 607106.
தொ. பேசி : 04142-244442.

■■■

4. நெய்வேலி

1. பன்னிரு திருமுறை வளர்ச்சிக்கழகம்
சிவபுர வளாகம்
நகர்க்கூறு - 16
நெய்வேலி - 607801.

2. சிவனடியார் திருக்கூட்டம்
பி.15ஏ/1, வெள்ளையன் குப்பம் வீதி,
நகர்க்கூறு-27.
நெய்வேலி - 3.

3. சிவசிதம்பர கந்தசாமி
சிவாச்சாரியார்
04142/269199.
94438-76423.

■■■

5. விருத்தாசலம்

1. மா. திருச்சிற்றம்பலம்,
செயலாளர், உழவாரத்
திருத்தொண்டர் திருக்கூட்டம்
616110, விருத்தாசலம் வட்டம்
கடலூர் மாவட்டம்.
04143...243487.

2. முனைவர் சு. தங்கத்துரை
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை
திருக்கொளஞ்சியப்பர் அரசு
கலைக்கல்லூரி
விருத்தாசலம் - 606001.
04143-239279.

■■■

6. பெண்ணாகடம்

1. கடந்தை சிவனடியார்
திருக்கூட்டம்
12, வடக்கு வேளாளர்தெரு,
பெண்ணாகடம்.
606105.

தலைவர்-நா. திருஞானசம்பந்தம்
தொ.பேசி - 04143-222066.

2. உழவாரத்தொண்டர் திருக்கூட்டம்
வடக்கு வேளாளர் தெரு
பெண்ணாகடம்.
606105.

3. கடந்தை பன்னிரு திருமுறை
நற்பணிமன்றம்,
பெண்ணாகடம்.
606105.

4. மெய்கண்டார் நற்பணி மன்றம்
பெண்ணாகடம்.

■■■

7. கடலூர்

1. வ. ஞானப்பிரகாசம், தலைவர்
திருப்பாதிரிப்புலியூர்ச்சித்தாந்தச்
சைவ நெறி மன்றம்,
43, சிங்காரவேல் நகர்,
கடலூர்.
போன் (223214)

■■■

8. புதுச்சேரி

1. ஸ்ரீ சக்திவேல் பரமானந்தர்
திருக்கோயில்
புவன்கரே வீதி,
உழந்தைக் கீரப்பாளையம்
முதலியார் பேட்டை
புதுச்சேரி - 4
கே. ஜெயமூர்த்தி.

2. சைவசித்தாந்தப் பெருமன்றம்,
13, சிதம்பரனார் வீதி,
செங்கழுநீரம்மன் நகர்
உருளையன்பேட்டை
புதுச்சேரி - 605005.
கோ. ஆறுமுகம் - 0413-2250793
ஏ. முனுசாமி - 2204944.

3. புதுச்சேரி பன்னிரு திருமுறை
வழிபாட்டு மன்றம்
26, 4-ஆம் குறுக்கு (விரிவு)
தந்தை பெரியார் நகர்
புதுச்சேரி - 605005.
தலைவர் - நடேச சுப்பிரமணியன்
0413-2204512
செயலர் - வெங்கடசுப்பாரெட்டியார்.
2200453

4. தெய்வச் சேக்கிழார் மன்றம்
47, நேரு நகர்

புதுச்சேரி - 605011.
0413-2333669.
தலைவர் - வயி. நாராயணசாமி
5,2-ஆவது குறுக்குத்தெரு
வெங்கட்டாநகர்
புதுச்சேரி - 605011.

5. சித்தாந்த சைவத் திருத்தொண்டு மன்றம்,
11, ஒற்றைவாடை வீதி,
உருளையன்பேட்டை
புதுச்சேரி - 605005
தலைவர் - நடேச. சுப்பிரமணியன் - 2204512.
செயலர் - சிவ. மாதவன் 2253537.

6. வெ. கோபால்சாமி
(நாயன்மார் கவிதை நூலாசிரியர்)
43, இராஜாஜிவீதி,
சுதானா நகர்.
நைவார் மண்டபம்,
புதுச்சேரி - 605004
0413-2359795.

■■■

9. சீர்காழி

1. குருஞானசம்பந்தர் நற்பணி மன்றம்,
வடக்குவீதி
சீர்காழி
தலைவர் - எஸ். பாலசுப்பிரமணிய முதலியார்

■■■

10. திருவெண்காடு

1. உழவாரம்
வடக்குமடவிளாகம்
திருவெண்காடு.
தலைவர்; நா. பாலசுப்பிரமணியன்,
செயலர்; அ. பாபு.

■■■

11. பூம்புகார்

1. இரா. இராஜசேகரன்
இணைப்பாளர்,
'உழவாரம்',
தாசில்பண்ணை
மேலையூர் - பூம்புகார்
தொ.பேசி : 04364 :
(வீடு) 256118 (256118)
(அலுவலகம்) 260766

2. மணிவாசக மன்றம்,
அ/மி. சுவர்ணபுரீசுர சுவாமி திருக்கோயில், செம்பொன்னார் கோயில், 609309.
தொ.பேசி : 04364 : 283712,282790

3. சிறப்புலி நாயனார் இறைபணி மன்றம், ஆக்கூர்.

■■■

12. பொறையாறு

1. அம்பலவாணர் அருள்நெறிக்கழகம்,
கந்தர் சஷ்டி மடாலயம்,
15-பி.சிவன்சந்நிதிதெரு,
பொறையாறு - 609307.
04364-288104.

2. தா.ம. வெள்ளைவாரணம்,
தலைவர்
12 ஏ. சிவன் தெற்குவீதி
பொறையாறு.
04364-289148

3. கு. காசிநாதன், செயலர்
7/13, சிவன் கீழவீதி. 288347.

4. தெய்வத்திருநெறிவாரவழிபாட்டு மன்றம்,
11/7, சிவன் சந்நிதி,
தலைவர் : நடராஜ தேசிக ஓதுவார்.

■■■

13. காரைக்கால்

1. சேக்கிழார் பன்னிருதிருமுறை மன்றம்,
100, பாரதியார்வீதி
காரைக்கால் - 609602.
தொ.பேசி. 220771.
தலைவர் : தண்டாயுதபாணி (222532)
செயலர் : சண்முகசுந்தரம் (220771)

2. திலகவதியார் திருமுறை வழிபாட்டு மன்றம்
திருவேட்டக்குடி
காரைக்கால் (வழி).
609609.
தலைவர் - வி. ஆறுமுகசாமி
செயலர் - ராஜேந்திரன்
04368-265117.

■■■

14. நாகை

1. வெளிப்பாளையம்
சைவ சித்தாந்த சபை,
10, சிவன் கீழவீதி,
வெளிப்பாளையம்
நாகப்பட்டினம்
611001
தலைவர் - எஸ். பிச்சைமணி
(04365-247273).
செயலர் - க. குணசீலன்.
(04365-248949).

2. பஞ்சாயத்தார்கள்
நம்பியார் நகர்
ஆரியநாட்டுத்தெரு
சாமந்தான் பேட்டை
நாகப்பட்டினம்.

3. சேக்கிழார் மன்றம், நாகை
14, வடக்குத்தெரு
சிக்கல் - 611108.
தொ.பேசி : 245623.

■■■

15. கீழ்வேளூர்

1. அஞ்சுவட்டத்தம்மன் வார வழிபாட்டு மன்றம்,
28/ஏ, தெற்குவீதி, கீழ்வேளூர்
தெ. ஜெயராமன் (அமைப்பாளர்)
954366, 275679.

■■■

16. தேவூர்

1. இந்து சமய வழிபாட்டுப்பேரவை
3/2, தெற்கு தெரு,
தேவூர் - 611109.
க. கோவிந்தராஜுலு
275372.

■■■

17. வலிவலம்

1. திருநாவுக்கரசு வழிபாட்டு மன்றம்
வலிவலம் - 610207
திருக்குவளை வட்டம்.
செயலர் - இரா. பாலசுப்ரமணியன்.
954366 : 247140.

■■■

18. திருக்குவளை

1. ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் வழிபாட்டு மன்றம்,
2.48, முத்தம்மாள் மெடிக்கல்ஸ்
வடக்குவீதி, திருக்குவளை.
தொ.பேசி - 04366-245472.

■■■

19. திருவாரூர்

1. பன்னிரு திருமுறை மன்றம்,
கேப்டன் எம். இராமசாமி முதலியார் மடப்புரம், திருவாரூர்
04366 - 220805

2. எம்பிராட்டி பரவையார் உடனுறை எம் பெருமான் சுந்தர மூர்த்தி சுவாமிகள் சீர் போற்றும் அடியார் திருக்கூட்டம்.
G. ஜெயராமன் D.M.E
140,ராமநாதன் நகர்,
ஆவணி தெரு, திருவாரூர்
அசோக்குமார், 24-1 - காகிதகாரத் தெரு - திருவாரூர்

3. கேசவன், நன்னெறி கழகம்,
காகிதக்காரத் தெரு, திருவாரூர்

4. ஸ்ரீ தியாகேசன் உழவாரப் பணிக்குழு,
V. கந்தசாமிபிள்ளை,
6, வடக்கு வீதி,
திருவாரூர் - தொலைபேசி : 241280

5. டி. பவானந்தம்,
79 - 116 - புதுத் தெரு,
திருவாரூர் - தொலைபேசி : 240 718.

■■■

20. நன்னிலம்

1. ஸ்ரீமதுவனேஸ்வரர் சுவாமி வார வழிபாட்டுக் கழகம்
85/34, கடைத்தெரு
நன்னிலம்
தலைவர் - ச. வெங்கடேசன்.
செயலர் - வி. முத்துசாமி ஐயர்.

2. சேக்கிழார் வழிபாட்டு மன்றம்
சுந்தரராஜன்
வடக்குவீதி
அச்சுதமங்கலம் - 610105
நன்னிலம் தாலுகா.

■■■

21. மயிலாடுதுறை

1. தனியூர் சிவனடியார் திருக்கூட்டம்
கூறைநாடு
மயிலாடுதுறை.

2. என்.எஸ். இராமலிங்கம் செட்டியார்,
எண். 1, பஞ்சுக்காரச் செட்டித் தெரு,
கூறை நாடு, மயிலாடுதுறை.
609002.

3. அம்பிகாபதி
அர்த்தஜாம வழிபாட்டுக்குழு,
அ/மி மாயூரநாத சுவாமி கோயில்
மயிலாடுதுறை

4. ஸ்ரீகௌரிமாயூரநாதர் சிவனடியார் திருக்கூட்டம்.
அ/மி, மாயூரநாதசுவாமி கோயில்
மயிலாடுதுறை

5. கோ. முருகானந்தன்,
பிளாட் நெம்பர் 52, பாண்டியன் தோப்பு,
மயிலாடுதுறை.

6. காசிவிசுவநாதர் வழிபாட்டுமன்றம்,
அ/மி, காசிவிசுவநாதர் திருக்கோயில்
பெரியகடைத்தெரு
மயிலாடுதுறை.

7. எஸ். தட்சிணாமூர்த்தி
புனுகீஸ்வரர் சிவனடியார் திருக்கூட்டம்,
55, வடக்கு வீதி,
அறுபத்துமூவர் பேட்டை,
கூறைநாடு
மயிலாடுதுறை.

8. வழிபாட்டு மன்றம்
வலம்புரிநகர்
பூம்புகார் சாலை
வள்ளலாகரம்,
மயிலாடுதுறை.

9. க. ஞானசேகரன்
செயலாளர், உழவாரம்
401, செட்டித்தெரு,
சேந்தங்குடி, மயிலாடுதுறை.
தொலைபேசி : 251787.

■■■

22. கும்பகோணம்

1. கோப்பு கோ. நடராஜ செட்டியார்
தலைவர், திருக்குடந்தைச் சிவனடியார் திருக்கூட்டம்,
14, வட்டிக்குருக்கள் தெரு,
கும்பகோணம் - 612001
2432929.

2. டி. மாரிமுத்து
திருக்குடந்தை திருநாவுக்கரசர் உழவார சிவனடியார் திருக்கூட்டம்
64, நாகேசுவரன் தெற்குவீதி
கும்பகோணம்.
2432766.

3. சபா. பரமசிவம்
செயலர், திருமுறை மன்றம்
19, சந்நிதிதெரு,
திருவிடைமருதூர் - 612104.
0435-2460744.

4. எம்.சி.எஸ்.ஆர். சம்பந்தம்
தலைவர், திருமுறைமன்றம்
1, பெரிய அப்பாவூத்தெரு,

மாதளம்பேட்டை
கும்பகோணம் - 612001
(0435) 2420187.

■■■

23. கும்பகோணம் – சுற்றுப்புற ஊர்கள்

1. திருவருள் தவநெறி மன்றம்
கஞ்சனூர்.

2. நா. சிவபாலன்,
மாணிக்கவாசகர் நூல்நிலையம்,
மேலமருத்துவக்குடி,
ஆடுதுறை
612101.

3. வி. வைத்தியலிங்கம்
7, கீழச்செட்டித்தெரு,
ஆடுதுறை.

4. அ/மி கோணேசர் வார
வழிபாட்டுக் கழகம்,
14, செங்குந்தர் தெரு,
குடவாசல் - 612601
தொ.பேசி. 04366-262758
தலைவர் - ந. விநாயக மூர்த்தி
32, செங்குந்தர் தெரு.

5. அ/மி. வீழிநாதர் வழிபாட்டு மன்றம்,
2/90, அக்ரகாரம்
திருவீழிமிழலை
எரவாஞ்சேரி
திருவாரூர் மாவட்டம்
609505.
தொ.பேசி 04366. 273706.
தலைவர் - பி.ஆர். ஜெயராமன்
செயலர் - கே. மாரியப்பன்
கீழவீதி.
04366 - 274435.

6. சிவ. திருச்சிற்றம்பலம்,
8/4ஏ, மேலைச்சாலைத்தெரு,
சுந்தரப்பெருமாள் கோயில்,
614208.
0435-2447323.
9443488409.

7. சேக்கிழார் மன்றம்,
40, நடுப்புதுத்தெரு
திருநாகேஸ்வரம்
612204.
செயலர் - ப. இராசமாணிக்கம்.

8. ப. தம்புலிங்கம்
திருவாசக சபை,
ஏனாதிகரம்பை
ஆவணம் (வழி)
பேராவூரணி வட்டம்.

■■■

24. தஞ்சாவூர்

1. இராஜராஜ சமய சங்கம்
அய்யன்குளம் கீழ்கரை
சகா நாயக்கன் தெரு,
தஞ்சாவூர்.
613008.
(செயலர். டி.ஆர். கிருஷ்ணமூர்த்தி)

2. ஸ்ரீகற்பக விநாயகர் அறக்கட்டளை
20, கூட்டுறவு காலனி,
தஞ்சாவூர்
613007
(தலைவர் : ந. சாரங்கன்).

3. தஞ்சாவூர் பெரியகோயில் குரு வார
வழிபாட்டுக்குழு
2/19, சீனிவாச நகர் இரண்டாம் தெரு,
கூட்டுறவு குடியிருப்பு சாலை
தஞ்சாவூர் - 613007.
செயலர் : சோம. ஆறுமுகம்.
தொ.பேசி : 04362-239087.

4. அருட்பணி மன்றம்,
அருள்மிகு சுப்பிரமணியர் சுவாமி
திருக்கோயில்,
பூக்காரத்தெரு
தஞ்சாவூர்.
தலைவர் - சிவ. பாலசுப்பிரமணியன்
தொ.பேசி - 270917

5. டாக்டர் ச. திருநாவுக்கரசு.
34, காமராஜர் சாலை
ஸ்ரீநிவாசபுரம்
தஞ்சாவூர் - 613009.
தொ.பேசி; 04362 - 223632.

6. பன்னிரு திருமுறை மையம்
30, மகாலக்ஷ்மி நகர்

தஞ்சாவூர்
613005.

7. இராச. கயிலாசம்
அறுபத்து மூவர் மன்றம்
36, மணிவாசகர் குடில்
கூட்டுறவு காலனி
தஞ்சாவூர்
613007.

8. அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருமடம்,
811, தத்தோஜியப்பா சந்து,
தஞ்சாவூர்
613001.

9. புலவர் க. அப்பாராசன்
181, திருமுறை இல்லம்
9-ஆம் குறுக்குத் தெரு,
சுந்தரம் நகர்,
ம.க. சாலை,
தஞ்சை - 4
241451.

10. டாக்டர். எஸ்.என். கந்தசாமி
61, 5-ஆம் தெரு,
நடராஜபுரம் தெற்கு,
தஞ்சை - 7
241027.

11. முனைவர். வீ. ஜெயபால்
958, வெங்கோபராவ் சந்து,
வெங்கடேச பெருமாள் கோயில் தெரு,
தஞ்சாவூர் 613009.
04362-254803.

12. அப்பர் தமிழ்மன்றம்
14/ஏ/902, பில்லுக்காரத்தெரு,
தஞ்சாவூர்
613001.

13. திருவருள் அறநெறிச் சபை
28, அ/மி. கற்பகவிநாயகர் ஆலயம்
வாணக்காரத்தெரு,
மகாநோம்புச்சாவடி, தஞ்சாவூர்.
தலைவர் - டி.கே. சுவாமிநாதன்.
செயலர் - ஏ. தாயுமானவர்.

14. அகத்தியர் சன்மார்க்க சங்கம்
1286, தெற்குவீதி.
தஞ்சாவூர் - 613009.
தொ.பேசி. 274808.
தலைவர் - ஜி. சகாதேவன்.
செயலர் - சிவ. அமிர்தலிங்கம்.

15. சிவ. அமிர்தலிங்கம்,
2355, கிருஷ்ணராயர் சந்து,
எல்லையம்மன் கோயில் தெரு,
தஞ்சாவூர் - 613009.

16. பன்னிரு திருமுறை மன்றம்
29, ராஜாஜிநகர்,
மருத்துவக்கல்லூரி சாலை,
தஞ்சாவூர் - 4
தலைவர் : இல. குணசேகரன்
போன் - 244017.

17. துறவி கணேசனார்
அப்பர் மடம்
83, விக்னேஷ் இல்லம்
எல்.ஜ்.சி. காலனி மேற்கு
மருத்துவக் கல்லூரி சாலை
தஞ்சாவூர் - 7
போன் : 237171

■■■

25. திருவையாறு

1. ஐயாறப்பன் மெய்த்தொண்டர் இயக்கம்,
திருமஞ்சனவீதி,
திருவையாறு. 613204.
(இராமதாஸ், கோ. சுப்பிரமணியன்)
04362 - 261728.

■■■

26. திருப்பூந்துருத்தி

■■■

27. களிமேடு

27. அப்பர் அவை
களிமேடு
தஞ்சாவூர் - 2.

■■■

28. திருச்சி

1. அருள்மிகு திருநெடுங்களநாதர்
திருவாசக சபை,
திருநெடுங்களம்,
திருச்சி - 15.

2. (திருஎறும்பியூர்) சேக்கிழார்
தெய்வத்தமிழ் மன்றம்,
140, நால்வர் இல்லம்,
6-ஆம் தெரு,
வ.உ.சி. நகர்,
துவாக்குடி மலை,
திருச்சி - 22
(2555492)

3. பி. நமச்சிவாயம்,
டி 4/9, கயிலாசபுரம்,
திருச்சி - 620014.
தொ.பேசி. 2572019

4. திருஎறும்பீசுவரர் நற்பணிமன்றம்,
திருவெறும்பூர்.

5. இளைஞர் நற்பணிமன்றம்,
திருவெறும்பூர்.

6. அருள்தரும் நறுங்குழல் உடனமர்
அருள்மிகு எறும்பீசுவரர் பன்னிரு
திருமுறை வார வழிபாட்டு மன்றம்.

7. நாகலிங்கம்,
540/3, 3-ஆம் தெரு,
ஆர்.ஈ.சி.டி. நகர், குங்குமபுரம்,
துவாக்குடி - 2500143.

8. மா. சொக்கலிங்கம்,
சேக்கிழார் மன்றம்,
24/16, உழவாரம்,
சோழன்சாலை,
ஐயப்பன் நகர்,
திருச்சி 21.

9. தாயுமானவர் உழவாரப்பணிமன்றம்,
66, வடக்குவீதி, மலைக்கோட்டை,
திருச்சி.

10. திருஞானசம்பந்தர் பன்னிரு
திருமுறை மன்றம்
சௌந்தர பாண்டியன் பிள்ளை தெரு,
திருச்சி - 620008.

11. கயிலாசநாதர் பண்ணிசைமன்றம்,
388, பெரிய கடைவீதி,
திருச்சி. 6.

12. அருள்மிகு ஐவண்ண நாதப்
பெருமாள் திருக்கோயில்
வாரவழிபாட்டு மன்றம்,
உறையூர்,
திருச்சி.

13. வாரவழிபாட்டு மன்றம்,
உய்யக் கொண்டான் திருமலை,
திருச்சி - 102
(தட்சிணாமூர்த்தி - நீதி மன்ற
இளநிலை உதவியாளர்).

14. திரு ஆனைக்கா பன்னிரு திருமுறை
வழிபாட்டு மன்றம்,
தலைவர் - மருதவாணன்.
62 ஏ, வெள்ளாளர் தெரு,
திரு ஆனைக்கா.
தொலைபேசி : 223179.

15. பூலோக நாத சுவாமி,
வார வழிபாட்டு மன்றம்,
கீழ் அரண்சாலை,
திருச்சி - 8.

16. வீ. ராகவன்,
41/67, சிவம் நகர்,
திருவானைக்கா
திருச்சிராப்பள்ளி-620005.
தொ.பேசி. 2231050.

17. ப. மூக்கப்பிள்ளை,
61, நடுத்தெரு,
வரகனேரி,
திருச்சி 2
(2200461; 2709367)

18. புலவர் மு. வைத்திய நாதன்,
34/10, தாயுமானவர் இல்லம்,

கிழக்கு விரிவு,
சஞ்சீவி நகர்
திருச்சி - 2
(2730367)

19. ஆர். சுந்தரவடிவேல் ஓதுவார்,
(வெக்காளியம்மன்)
நெ. 64, சக்தி நகர்,
உறையூர், திருச்சி - 3
(2750400)

20. எஸ். மோகன்
நெ. 31, காவல்கார தெரு,
உறையூர்,
திருச்சி - 3
(2762922)

21. மேஜர் க. சீனிவாசன், தாளாளர்,
ஸ்ரீஅங்காளம்மன் பொறியியல்
கல்லூரி
திருச்சி - 621105

22. எஸ். அம்பலவாணன், ஆய்வாளர்,
அறநிலையத்துறை,
2, நவாப் தோட்டம் காலனி,
உறையூர்,
திருச்சி - 3.
0431 : 2767644
94431 : 30656 (செல்)

23. மு. கணபதி, சேக்கிழார் இல்லம்,
முத்தரசநல்லூர்
திருச்சி. 620101.
(0431-2685236).

24. சோ. சத்தியசீலன்,
55, சேதுராமபிள்ள காலனி,
திருச்சி - 620020
(2415707)

25. முனைவர். அ. அறிவொளி,
14 ஜி. ஹனிபா காலனி,
திருச்சி-620021.
(2415633).

26. வாகீச பக்த ஜனசபை சமரச
சுத்த சன்மார்க்க சங்கம்,
36, பஞ்சவர்ணசுவாமி கோயில்
சந்நிதித்தெரு,
உறையூர்,
திருச்சி - 3.
பொருளர் – கர்ணன் இராமசாமி

27. சைவ. சு. இராமலிங்க சுவாமிகள்
கணித சோதிடர்,
கே. சீகம்பட்டி,
கே. புதுப்பட்டி (அஞ்சல்)
குளித்தலை (தாலுக்கா)
கரூர் மாவட்டம்
639105.

(அலு) எல்.ஐ.சி. அருகில்,
வைகநல்லூர்,
குளித்தலை - 639104.

28. பி. ஆறுமுகம்,
திருநாவுக்கரசர் இல்லம்,
தேவதனம்,
குளித்தலை - 639104
(954323 : 225326)

29. நித்ய சுந்தரேசுவரர் வழிபாட்டு
மன்றம்,
நெடுங்களம்,
திருச்சி - 620015.

30. சிவ. ஸ்ரீதரன்,
கீழ உத்திரவீதி,
(யானை வளர்கூடம்),
ஸ்ரீரங்கம்,
திருச்சி-6

■■■

29. திருச்சி – சுற்றுப்புற ஊர்கள்

1. அறநெறிக்கழகம்,
8, வடக்கு வீதி,
லால்குடி.

தலைவர் - ஜி. கனகசபை

2. ப. சுந்தரேசனார் பணிமன்றம்,
2, நண்பர்கள் நகர்,
லால்குடி
621601
95431-2542016
தலைவர் ச. இராமையா.

3. சைவ சித்தாந்த சபை,
பூவாளூர்.

4. அப்பர் அருள்நெறிமன்றம்
திருமழபாடி
621851
பெரம்பலூர் மாவட்டம்,
தலைவர். எஸ். ஆர். கிருஷ்ணமூர்த்தி பிள்ளை
04329-243208.

■■■

30. காரைக்குடி

1. காசி ஸ்ரீ அரு. சோமசுந்தரம்
123, முத்துப்பட்டினம் 3-ஆம் வீதி,
காரைக்குடி - 630001.
04565 : 438196.

■■■

31. மதுரை

1. பன்னிரு திருமுறை மன்றம்
அ/மி மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில்
தெற்காடி வீதி,
மதுரை.
625001.

2. தி.சு. கோவிந்தசாமி
செயலர், திருஆலவாய் சைவ சித்தாந்த சபை
302, மேலமாசி வீதி,
மதுரை - 1

3. செயலர்
திருவள்ளுவர் கழகம்
வடக்காடி வீதி
மதுரை - 1

■■■

32. தேனி

1. பெ. பாண்டி, எம்.ஏ.எம்ஃபில்
24/11,ஏ. வ.உ.சி. நகர்,
முதல் தெரு,
சின்னமனூர் - 625515.
தேனி மாவட்டம்.
04554-249033.

2. மு. இராசரத்தினம்
தாமரைக்குளம்
பெரிய குளம்
தேனி மாவட்டம்
625801.
04546 : 232586.

■■■

33. கோயில்பட்டி

1. கே.டி. சூரிய பிரகாஷ்,
7, சந்தைப்பேட்டைத்தெரு,
கோயில்பட்டி.
04632-220030.

2. திருஞானசம்பந்தம், டைரக்டர்,
திருமலைமில்ஸ்,
49, ஏ.டி.ஜெ. நகர்,
நெல்லை - 11.
வீடு : 95462 : 580819.
செல் : 98421-54819.

■■■

34. நெல்லை

1. பி. முத்தையா பிள்ளை,
சிவநெறி மணிவாசகர் அருட்பணி மன்றம்,
1, என்.எச். காலனி,
பெருமாள்புரம்,
திருநெல்வேலி - 7.
530640; 530739; 534175.

2. திருஞானசம்பந்தம்,
சி.85, 2-ஆம் குறுக்குத்தெரு,
மகாராஜா நகர்,
நெல்லை - 11.
2580819.

3. வள்ளிநாயகம், வழக்கறிஞர்,
சுபம் காம்ப்ளக்ஸ்,
2-ஆம் தளம்,
இலயோலா கான்வென்ட்
நெல்லை.
2561442.

4. ம. சிவசம்பு
13, சாலைத்தெரு,
கொக்கிரகுளம்

திருநெல்வேலி - 627009
2501197.

5. மயிலப்பன்,
திருவுருமாமலை பன்னிரு திருமுறை வழிபாட்டுக்குழு,
188, வ.உ.சிதம்பரனார் தெரு,
திருநெல்வேலி,
2336336, 2322041.

6. வள்ளிநாயகம், (திருமுறை ஆசிரியர்)
155, வ.உ.சி. தெரு, நெல்லை.

7. சுந்தரம் பிள்ளை,
52, வடக்குரத வீதி,
நெல்லை -6.

8. அகத்தீசுவரன், தமிழாசிரியர்,
பாரதி நகர்,
சுத்தமல்லி,
நெல்லை.

9. வித்யாசங்கர் சிவாசாரியார்,
சிவநெறிக்கழகம்
2322247.

10. சிதம்பரநாத கல்யாணி
78, செல்வி நகர்,
சிந்து பூந்துறை,
திருநெல்வேலி - 1.
627001.

11. வி. ஆறுமுகம்பிள்ளை,
அப்பர் இல்லம்,
21, 5-ஆம் குறுக்குத் தெரு,
மகாராஜா நகர்,
நெல்லை - 627011.
95462 : 2574468.

12. மு.சு. சங்கர்,
241, வ.உ.சி. தெரு,
திருநெல்வேலி - 627006.
233736.

13. கே. சுப்பிரமணிய பிள்ளை,
பிளாட் 66, ஸ்வர்ணபவனம்,
ஸ்டேட் பாங்க் அலுவலர்கள் காலனி,
மகாராஜா நகர்,
திருநெல்வேலி - 627011.
(திருவாசக முற்றோதல்)

14. ஸ்ரீகாந்திமதி சமேத ஸ்ரீ நெல்லையப்பர் அருட்பணி மன்றம்,
222, புட்டராத்தி அம்மன் கோயில் தெரு,
திருநெல்வேலி - 627006.
தலைவர் : ஏ.எஸ். முத்தையா.
0462-2331141.

■■■

35. தூத்துக்குடி

1. பி. காந்தி, சைவநெறி,
218/14, ஹார்விபுரம்,
தூத்துக்குடி - 628001.
வீடு : 0461-362757
அலு. 0461-323624.

2. சி. பரமசிவன், செயலர்
சைவசித்தாந்த சபை,
2, பெருமாள் கோயில் தெரு,
தூத்துக்குடி, 628002.
போன் - 2322663.
செல் - 94431-15036.

3. எம்.டி.எம். அழகுராஜா,
1ஏ-15, 3-ஆம் செக்கடி தெரு,
கோவில்பட்டி - 1
(தொலைபேசி : 222258)

4. தூத்துக்குடி சைவசித்தாந்த சபை,
41. வடக்குரதவீதி
தூத்துக்குடி
628002.

5. ஈ. பரமசிவன், எம்.ஏ;எம்.எட்,
செயலர், சை.சி.சபை.
2. பெருமாள் கோயில்தெரு,
தூத்துக்குடி, 628002.
(2322663 : செல் 94431-15036).

6. சிவஞானப்பிரகாச சபை,
திருநாவுக்கரசு சுவாமிகள் மடாலயம்,
நாராயணன் செட்டித்தெரு, கீழுர்,
தூத்துக்குடி - 628001.

■■■

36. விக்கிரமசிங்கபுரம்

1. சைவநெறிக்கழகம்,
   சிவகலை
   25/15, சந்நிதி வீதி,
   விக்கிரமசிங்கபுரம் - 627425
   நெல்லை மாவட்டம்.
   தலைவர் - பா. அம்மையப்பன்
   04364; 220036
   செயலர் - ச. கந்தசுவாமி : 220875.

2. சிவஞானசுவாமிகள் பேரவை
   505 ஈ, பிரதான சாலை,
   விக்கிரமசிங்கபுரம் - 627425.

3. ஸ்ரீ திருநாவுக்கரசு சுவாமிகள்
   உழவாரக்குழு :
   விக்கிரமசிங்கபுரம் - 627425
   தலைவர் - என். செல்லையா.

■■■

37. சிவகாசி


1. சிவகாசி சிவனடியார்
   அறநெறிக் கழகம்
   42/7J, P.K.S. A-ரோடு
   சிவகாசி – 626189
   டாக்டர் K. ஜெயராஜன்
   275208

38. ஸ்ரீ வில்லிபுத்தூர்

1. வெ. மோகனசுந்தரம்
   மாவட்ட ஒருங்கிணைப்பாளர்
   பன்னிரு திருமுறை வழிபாட்டு
   மன்றம் சிவனடியார் திருக்கூட்டம்
   16/10A, சூடிக் கொடுத்த விநாயகர்
   கோயில் தெரு,
   திருவில்லிபுத்தூர் - 626123
   தொலைபேசி : (04563) 266006.
   செல் : 92451 - 74949.

■■■

குறிப்புகள்


இரா. இராஜசேகரன்
நர்மதா